# இலக்கியத்தில் நிறம்

பதிப்பாசிரியர்:

ச.வே.சுப்பிரமணியன்

ந.கடிகாசலம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

அமுதோன்

# இலக்கியத்தில் நிறம்

ச. வே. சுப்பிரமணியன்
ந. கடிகாசலம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி. டி. டி. ஐ., தரமணி,
சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Tittle of the Book | : | ILLAKKIYATTIL NIRAM |
| Editors | : | S. V. Subramanian, M.A. Ph. D.<br>Director and Chief Professor<br><br>N. Ghadigachalam, M. A. Ph. D.<br>Senior Research Fellow<br><br>I.I.T.S., T.T.T.I., Taramani,<br>Madras - 600 113. |
| Publishers & Copy Right holder | : | International Institute of Tamil Stndies, T.T.T.I., Taramani, Madras - 600 113. |
| Fublication Number | : | 71 |
| Language | : | Tamil & English |
| Edition | : | First |
| Date of publication | : | June, 1983 |
| Papper used | : | 16kg. D/Demy white printing |
| Size of the Book | : | 21 X 18 cms. |
| Printing types used | : | 10 point |
| Number of pages | : | 484+iii |
| Number of Copies | : | 1200 |
| Price | : | Rs 23/-(Rupees Twenty three only) |
| Printer | : | S. M. K. Printers,<br>23-A, 6th Main Road,<br>Nanganallore, Madras - 61. |
| Artist | : | Amudhon |
| Subject | : | A Compilation of Articles on Colour in Tamil Literature. |

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்,
இயக்குநர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

தரமணி, டி. டி. டி. ஐ. அஞ்சல், சென்னை-600 113.

# முன்னுரை

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் இலக்கியக்கொள்கைத் தொடர்பாகப் பல எண்ணங்களைக் கொண்டுள்ளது. இலக்கியக் கொள்கைக் கருத்தரங்குகளைக் கடந்த 8 ஆண்டுகளாக நடத்தி வருகின்றது. இதுவரை 7 இலக்கியக்கொள்கைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. 8-ஆவது தொகுதியும் வெளிவர இருக்கின்றது.

இலக்கியக்கொள்கை நிலையில் "இலக்கியத்தில் நிறம்" பெறுகின்ற இடம், அதனால் கற்போனுக்குக் கிடைக்கின்ற மகிழ்வு, அல்லது இன்பம்,' வண்ணத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு வண்ணத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு இவைகளைப் பற்றியெல்லாம் சிந்திக்கலாம் என்ற முறையில் "இலக்கியத்தில் நிறம்" பற்றி நிறுவனத்தில் நடைபெற்ற வெள்ளிக்கிழமைக் கருத்தரங்குகளில் 32 கட்டுரைகள் படிக்கப்பட்டன. சங்க காலம் தொடங்கி பாரதிதாசன் காலம்வரை நிறம் அல்லது வண்ணத்தைப் புலவர் எவ்வாறு பயன்படுத்தியுள்ளனர்? அதனால் நாம் அடைகின்ற பயன் என்ன என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்ததன் விளைவே "இலக்கியத்தில் நிறம்" என்ற இந்த நூல். இதில் 32 கட்டுரைகள் அடங்கி உள்ளன. பல கோணங்களில் பல நிலைகளில் நிறம் பார்க்கப்பட்டுள்ளது. நிறத்தை வைத்தே நாம் பல செய்திகளைக் குறிப்பிடுகின்றோம். சிவப்பு நிறம் ஆபத்திற்குரியது. வெள்ளை நிறம் சமாதானத்திற்கு உரியது பச்சை நிறம் நன்மைக்குரியது என்றெல்லாம் பார்க்கிறோம். உலக மக்கள் வாழ்விலும் இலக்கியங்களிலும் நிறம் பெறுகின்ற

பங்கைப்பற்றி சிந்திப்பதற்கு இந்த நூல் துணைபுரியும் என்று நம்புகிறோம்.

நிறுவன ஆய்வாளர்களாலேயே இந்தக் கட்டுரைகள் எல்லாம் எழுதப்பட்டுள்ளன. அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்திருக்கின்றார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன். உரிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத் தந்த எஸ். எம். கே. அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்ற, மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக

அன்புள்ள,

சென்னை-113

ச. வே. சுப்பிரமணியன்

29—6—83

# இலக்கியத்தில் நிறம்

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | முன்னுரை | | ii |
| | பொருளடக்கம் | | |
| 1. | வண்ணம் | —எஸ். ஆர். சாந்தகுமார் | 1 |
| 2. | நிறங்களும் இலக்கிய மரபும் | —ம. ரா. போ. குருசாமி | |
| 3. | தொல்காப்பியம் | —ஆ. சிவலிங்கனார் | 34 |
| 4. | யாப்புப் - பாட்டியல் | —அன்னிதாமசு | 44 |
| 5. | சங்க இலக்கியம் | —இரா. தமிழரசி | 55 |
| 6. | கபிலர் பாடல்கள் | —ம. ரா. போ. குருசாமி | 81 |
| 7. | கீழ்க்கணக்கு | —அன்னிதாமசு | 96 |
| 8. | சிலப்பதிகாரம் | —தா. வே. வீராசாமி | 124 |
| 9. | சீவகசிந்தாமணி-I | —வே. சீதாலட்சுமி | 141 |
| 10. | சீவகசிந்தாமணி-II | —பூ. சுப்பிரமணியம் | 152 |
| 11. | கம்பராமாயண | —ச. வே. சுப்பிரமணியன் | 158 |
| 12. | திருவாசகம் | —ஆ. சிவலிங்கனார் | 221 |
| 13. | பெரியபுராணம் | —கே. பகவதி | 235 |
| 14. | திருவிளையாடற் புராணம் | —ப. கோபாலன் | 246 |
| 15. | திருவாய்மொழி | —ஆர். [illegible] வந்தார் | 265 |
| 16. | கோதை தமிழ் | —ஆர். ஆளவந்தார் | 279 |
| 17. | திருமங்கையாழ்வார் பாசுரங்கள் | —ந. கடிகாசலம் | 292 |

18. அஷ்ட பிரபந்தம் —ந. கடிகாசலம் 304
19. சமண ஆசீவக மதங்கள் —ர. விஜயலட்சுமி 316
20. தூது இலக்கியங்கள் —பூ. சுப்பிரமணியம் 324
21. நந்திக் கலம்பகம் —த. அழகப்பராசு 337
22. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் —க. காந்தி 346
23. முக்கூடற்பள்ளு —ஏ. என். பெருமாள் 35[illegible]
24. மனோன்மணீயம் —ஏ. என். பெருமாள் 36[illegible]
26. Treatment of Colour Images in Bharati's Poems —G. John Samuel 372
26. கவிமணியின் பாடல்கள் —க. காந்தி 391
27. பாரதிதாசன் கவிதைகள் —சே. நமசிவாயம் 396
28. வானம்பாடிக் கவிஞர்கள் —வீ. அரசு 408
29. நாட்டுப்புறப் பாடல்கள் —ஜே. நிர்மலாபாய் 419
30. விடுகதைகள் —ச. சிவகாமி 436
31. பழமொழி —இரா. பாலசுப்பிரமணியன் 451
32. மருந்துவச் சுவடிகள் —த அழகப்பராசு 466
சொல்லகராதி 481

# 1. வண்ணம்

எஸ். ஆர். சாந்தகுமார்

உலகத்தின் பல்வேறு செய்திகளை நமக்கு உணர்த்துவது வண்ணம். நாம் எதைப் பார்க்கின்றோமோ, முக்கியமாக எதைப் பார்க்கின்றதாக எண்ணுகின்றோமோ அதனை (அதனால் உணர்த்தப்படும் நிறத்தை) வண்ணம்[1] எனக் கூறலாம் இவ் 'வண்ணம்' என்னும் சொல் எவ்வண்ணம் தோன்றியது? தமிழ் மொழியில் அது பிறந்த வண்ணத்தையும் வாழ்ந்த வண்ணத்தையும், வளரும் வண்ணத்தையும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

இச்சொல் தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே பயின்று வருகின்றது. தொல்காப்பியத்தில் இச் சொல் பெரும் பான்மையாக. இசை. இசைத்தொடர்பான குறிப்பு போன்ற வற்றை வெளிப்படுத்தினாலும், நிறம் பற்றிய குறிப்பினையும் வெளிப்படுத்தாமல் இல்லை.

> வண்ணச்சினைச் சொல்'' (தொ. 26-2)
>
> 'வண்ணத்தின் வடிவின் அளவினை் சுவையின், என்று
> அன்ன பிறவும் அதன் குணம் நுதல்'' (தொ. 410-1
>
> 'வண்ணம் வடிவே அளவே சுவையே
> தன்மை வெம்மை அச்சம் என்றா........'' (தொ. 75-1)
>
> ''வண்ணம் பசந்து புலம்புறு காலை
> உணர்ந்த போது உறுப்பினைக் கிழவி
> புணர்ந்த வகையைப் புணர்க்கவும் பெறுமே!''
> (தொ. 199-1)

என்னும் நூற்பாக்கள் அனைத்தும், நிறம் என்னும் பொருளைக் குறிப்பதாக அமைந்து உள்ளது. ஆகவே தொல்காப்பியர்

---

1. "Colour is what we see or more important what we think we see-" The Encyclopedia Americana-Vol VII, Americana Corporation, 1969, P. 309.

காலந்தொட்டே வண்ணம் என்னும் இச் சொல் நிறத்தினைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டமையினை அறியலாம்.

வண்ணம் என்னும் இச்சொல், இசைத்தொடர்பான குறிப்புடன் தொல்காப்பியத்தில் 37 இடங்களில் காணப்படுகிறது.[2] மேலும் இசையின் ஒரு பகுதியாக வண்ணத்தினையும் கொண்டுள்ளனர். இவ்விரு குறிப்புகளாலும் வண்ணம் என்னும் சொல் எவ்வாறு முதலில் தோன்றிருக்கக்கூடும், அது எவ்வாறு நிறத்துடன் இணைக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதை அறியலாம். மனிதன் மகிழ்ச்சியினை—இன்பத்தினைப் பெரிதும் விரும்புவன் என்பதை யாவரும் அறிவர். தொட்டில் குழந்தை முதல் முதியவர்கள் வரை இன்பத்தினையும், மகிழ்ச்சியினையும் இசை வழியே பெற்றுவந்தனர் என்பது மறுக்க இயலாத உண்மை. ஆகவே அவ்வாறு மகிழ்ச்சி தரும் ஒன்றினை—அதாவது மகிழ்ச்சி தரும் இசையினை — "வண்ணம்" என்னும் சொல்லால் குறித்து இருக்கக்கூடும். இதன் அடிப்படையில் மனிதன் தன் கண்ணைக் கவரும் அக்கவர்ச்சியினால் தன் மனத்திற்கு மகிழ்ச்சியினைத் தரும் நிறத்திற்கும் 'வண்ணம்" என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் இத்தன்மையிலேயே இன்றும் நாட்டுப்புற மக்களிடையே, வியப்பினையும் மகிழ்ச்சியினையும் வெளிக்கொணரும் வண்ணம், "எவ்வண்ணம் பெருத்து விட்டான் பார்?" என்று கூறுவதைக் காணலாம். ஆகவே "வண்ணம்" என்பது மகிழ்ச்சியின் அடிப்படையில்—இன்பத்தின் அடிப்படையில்—வியப்பின் அடிப்படையில் பிறந்த ஒரு சொல்லாக இருக்கலாம்.

"சொற்சீர் வண்ணம்," 'தூங்கிசை வண்ணம்' என்று இசைக் குறிப்பினை உணர்த்திய இச்சொல் மெல்ல, அழகு, தன்மை என்னும் பொருள்பட சொல்லாட்சி பெறத் தொடங்கியது., "எவ்வண்ணம்" என்னும் அவ்வண்ணம் என்ற நிலையில் இருந்து 'செவ்வண்ணம்' என்ற நிலைக்கு மாறி, செம்மை என்பது 'சிவப்பு' என்றும், வண்ணம் என்பது நிறம் என்ற பொருளிலும் இலக்கியங்களில் இடம்பெறத் தொடங்கியது எனக் கூறலாம்.

---

2. தொல் II-26-2, 79-1, 416-1, III-199-1, 310-9, 513-1' 514-2 (2), 3(2), 4(2), 5(2), 6(2), 7(2), 8(2), 9(2) 10(2), 11(2) 515-2, 516-1, 517-1, 518-1, 519-1, 520-1, 521-1, 522-1, 523-1, 524-1, 525-1, 526-1, 527-1, 528-1, 529-1 530-1, 531-1, 532-1, 533-1, 534-1, 535-1.

'வண்ணம்' என்னும் சொல்லிற்கு, 'வள்' என்னும் சொல்லை அடிச் சொல்லாக கொள்வோமேயானால், அது வளம் என்னும் பொருளுடன் வளமையான நிறத்தினைக் குறிப்பதற்குப் பயன் படுத்தப்பட்டு இருக்கலாம். 'வள்' என்பது 'வண்' என்று மாறு வதற்கு ஒப்பிடலாம்.

"The initial, medieval and final labial especially of loan words changes into 'V' என்று டாக்டர் சேதுப்பிள்ளை எடுத்துக் கூறுவார். [3]

(எ-டு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| bā | பாணம் | pānam | → | Vānam | வாணம் |
| bāiya | பாலியம் | pāliyam | → | Vālipam | வாலிபம் |
| bilva | bilva | (Skt) | → | Vilvam | வில்வம் |

வண்ணம் என்பது கடன் வாங்கப்பட்ட ஒரு சொல்லாக இருப் பின், அதனுடைய வடமொழிச்சொல் "பண்ணம்" என்றுதான் இருக்கவேண்டும். இதனை மொழியியல் வல்லுநர்கள் ஆய்வு செய்தால், ஒரு முடிவினை எட்ட இயலும்.

வண்ணம் என்னும் சொல் வடமொழியில் 'வர்ண' (varṇa) என்று மாறுகின்றது. ஆனால் கண்ணன் என்னும் சொல் வடமொழியில் 'கிருஷ்ண' (Kṛṣṇa) என்று வழங்கி வருகின்றது. வண்ணம் என்னும் சொல் போல் கண்ணன் என்னும் சொல் ஏன் மாற்றம் பெறவில்லை என சிந்திக்கத் தூண்டுகிறது.

பிற நெருங்கிய திராவிட மொழிகளில் வழங்கும் நிறச் சொற்கள், 'தமிழ்' நிறச்சொற்களுடன்தொடர்புடையனவாகத் தென்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கன்னடம் | ——— | Baṇṇa, Raṅgu, Cāy, Neṛa |
| மலையாளம் | ——— | Varṇam, Niṛam |
| தெலுங்கு | ——— | Varṇamu, Raṅgu |

3. Sethupillai, R. P. Words And Their Significanc Tamil - Literary and Colloquial, University of Madras, 1977. p. 15

இதில் கன்னடத்தில் வழங்கப்படும் Banna என்னும் சொல் தமிழ் வண்ணத்துடன் நெருங்கிய தொடர்புடனும் மற்றவை தமிழ் வண்ணத்தினைச் சார்ந்து Varṇam, Varṇamu என்றும் இருப்பதைக் காணலாம்.

கன்னடச் சொல், தமிழ்ச் சொல்லுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதைக் கீழ்க்காணும் சான்றுகளுடன் ஒப்புநோக்கலாம்.

(வா) Vā→bā
(வண்டு) Vaṇḍu→baṇḍu
(வெண்டைக்காய்) Veṇdakāi→beṇdakāyi

இவ்வாறு தமிழ் 'வ' கன்னடத்தில் 'ப' என்று மாறியிருப்பதைக் காணலாம். ஆகவே வண்ணம் என்பது 'baṇṇa' என்று மாறியிருக்கக்கூடும். மொழியியலார் இதனைக் குறித்து ஆய்வு மேற்கொண்டால் நல்முடிவினை எதிர்பார்க்கலாம்.

தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் வண்ணம்→ வர்ணம் என்று மாறி ஒலித்தலுக்கு வண்ணம் என்னும் சொல் ஒலிப்பதில் உள்ள கடினமும், வடமொழி மீது கொண்டுள்ள விருப்பமும் ஒரு காரணமாக இருக்கலாம்.

வடமொழியில் உள்ள "வர்ண" என்னும் சொல் தமிழ்—மொழியில் வண்ணம் என்று மாறியிருக்கக்கூடும் என்னும் ஒரு கருத்து நிலவுகின்றது. மேலும் ட, ண, ள போன்ற ஒலிகள் (cacuminals) தமிழுக்குப் புதியவைஎன்னும் வடநூலார் கருத்தை குறிப்பிடுவர்.[4]

வைத்தியநாதன் என்பார் கீழ்வருமாறு வண்ணத்தினையும் வர்ணத்தினையும் ஒப்பு நோக்குகின்றார்.

OTA. Vaṇṇam (PNP 203) Varṇam
(Cam 14; 90) Color

4. அரங்கசாமி இரா. தமிழ்மொழி வரலாறும் ஒப்பிலக்கணமும், கும்பகோணம், 1973, பக். 213

5. Vaidyanathan, S., Indo Aryan Loanwords in Old Tamil Rajan Publishers, Madras. 1971, p.29.

M. A. Vaṇna

Skt. varṇa color (since the RV)[5]

ஆனால், அந்நூலில் அதற்கான சரியான அடிச்சொல் விளக்கத்தினை அவர் கூறவில்லை.

''சமஸ்கிருதத்தில் 2/5 பங்கு தமிழ்ச் சொற்களும் தமிழ் வேர்ச் சொற்களினின்று திரிந்த சொற்களுமாயிருக்கின்றன. வேதத்திலேயே, அகவு, தா, சாயம், (சாயுங்காலம்) முத்தம் முதலிய நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் உள்ளன. சமஸ்கிருதம் தேவ மொழியென்னும் தவறான கருத்து பண்டைத் தமிழர் உள்ளத்திற் பதிந்து விட்டதனால், ஆங்கிலேய ஆட்சி வாயிலாய் ஆங்கிலக் கல்வி ஏற்படும் வரை, பல தென் சொற்களையும், வட சொற்களென்று தமிழர் மயங்கியிருந்தனர். இன்று அம்மயக்கந் தெளிந்து வருகின்றது. ஆயினும் நீண்ட காலமாக அடிமைத்தனத்திற்கிடந்து ஊறிப்போனதினால், இன்றும் சில தமிழரும் தமிழ்ப் பேராசிரியரும் தன்னலங்கருதித் தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிடுகின்றனர். எனினும் உண்மை அண்மையில் வெளியாகும்''.[6] எனும்பாவாணரின் கருத்தும், "Sanskrit scholars suffer from a form of superiority complex and believe that Sanskrit the language of the gods, being a perfect language could not steep so low as to borrow words from the language of men. Hence they are fond of inventing ingenious and plausible but absured from historical point of view[7] என்னும் பி. டி. எசு. அய்யங்கார் கருத்தும் சரியாக இருக்குமோ என்று எண்ணத் தூண்டுகிறது.

Varṇa என்பதின் அடிச்சொல்லை நோக்கினால் varṇ என்பதை அறியலாம். அதற்குப் பொருள் கொடுக்கும்போது, action, description, quality, prox, inducing என்று "A higher Sanskrit Grammar" என்னும் நூல் கூறுகிறது.[8] Siddhantha Kaumudi என்னும் நூலோ shines, beauty என்று மட்டும் கூறு

6. இராமச்சந்திரன் & கோ., பிற மொழியில் தமிழ்ச்சொல் ஆட்சி. வளவன் வெளியீடு, சென்னை-30, 1966 பக். 33.

7. மேற்படி - பக். 34.

8. Kale, A Higher Sanskrit Grammar, Motilal Banarsidass, Delhi, 1967, p. 121.

கின்றது.[9] இவ்விரண்டு அடிச் சொற்கள் பொருளிலும் நேரிடையாக நிறத்தினைச் சுட்டவில்லை. Sabdakalpadruma 'மட்டும் Varn என்னும் சொல்லிற்கு பொருள் கொடுக்கும் போது, caste, difference; colour, letters, paste என்று பொருள் கொடுக்கின்றது.[10] எனவே Varṇ என்னும் வடமொழி அடிச் சொல் நேரிடையாக நிறம் என்னும் பொருளைக் கொள்ளாத போது, அம்மொழிக்கு உரிய சொல்லாக அதனை எவ்வாறு ஏற்றுக் கொள்வது என்பது சிந்திக்க வேண்டியதாக உள்ளது.

ஒரு சொல் வடமொழியில் மட்டும் காணப்பட்டு வடமொழிக் கினமான கிரீக், இலத்தீன், செருமன், முதலிய மொழிகளில் காணப்படாமல் பண்பட்ட, பண்படாத திராவிட மொழிகளில் அச்சொல் வழங்குமானால், அது திராவிடச் சொல் என்று கூறலாம்.

(எ - டு) பூசெய் — பூசா

அவ்வாறே வண்ணம் என்னும் சொல்லும் சிந்தனைக் குரியது. செருமன் மொழியில் வண்ணத்தினை 'Farb—e என்னும் சொல்லால் குறிக்கின்றது.[11] ஆகவே வடமொழிக்கினமான செருமன் மொழியில் Varṇa என்னும் சொல் குறிக்கப்படவில்லை. அவ்வாறே கிரீக், இலத்தீன் போன்ற மொழிகளிலும் வண்ணத் திற்கு வேறு சொல்லைப் பயன்படுத்தி இருந்தால் Varṇa என்னும் சொல், வடமொழியினைச் சேர்ந்தது அல்ல என்னும் முடிவிற்கு வந்துவிடலாம். இக்கருத்து நிறுவப்படுமானால், "சாதி வேறு பாட்டைக் குறிக்க வடமொழியிலே "வர்ணம்" என்றொரு சொல் உண்டு. ஆரியர் வருமுன் இந்தப் பாரதநாட்டில் இருந்த ஆதிமக்கள் கருநிறம் உடையவர். அக்கரு நிறத்தார்க்கும் தமக்கும் நிறவேறுபாடு சுட்டிய ஆரியர்; நாளடைவில் பிறப்பு வழி ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட பிரிவுகளை ஏற்படுத்தி "சாதிமுறை" படைத்தனர். இந்த சாதிப் பாகுப்பாட்டின் ஆதித் தொடக்கம் நிறத்தையே அடிப்படையாகக் கொண்டது.

---

9. Bhattojidikshita, Siddhantha Kaumudi. Chankama Edition - 1949, p. 289.
10. Sabdhaklpadruma Part IV, Delhi, 1961 pp. 277 - 284
11. Barke and Homeyer, The Pocket Oxford, German Dictionary, Oxford–London, 1975, p. 120.

நிறத்தை குறிக்கும் "வர்ணம்" என்ற சொல் 'சாதி'யையும் குறிக்க நேர்ந்தச் சொல் வரலாற்றை வடமொழி இலக்கிய வரலாறு எழுதிய மாக்டோனல் விளக்கியுள்ளார் என்னும் கருத்தும்,[12] "வர்ணம் என்ற வடமொழி சொல்லே தமிழில் 'வர்ணம்' என ஆயிற்று எனக் கொண்டால் நச்சினார்க்கினியர் குறித்த சாதிப் பொருள், ஒரு வகையில் தமிழ் நாட்டு வரலாற்றையும் விளங்கிக் கொள்ள உதவுகிறது எனல் வேண்டும். நச்சினார்க்கினியர் கருத்தினை ஏற்பதாயின் குறிஞ்சிப்பாட்டு எழுந்த சங்காலத்தில் சாதி வேறுபாடு தமிழகத்தில் நிலவியது என்பதற்கு மேலும் ஒரு சான்று கிடைத்திருப்பதாகக் கொள்ள லாம்"[13] என்னும் கருத்தும் மீண்டும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பே, "சாதிமுறை"க்கு வழிவகுத்தது[14] என்னும் கருத்தினை மனதில் வைத்துக்கொண்டு நோக்கினால் நிறத்தை - அதாவது வண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆரியர்கள் சாதியினைப் பகுத்தார்கள் என்பதையும் அவர்களின் ஒலி அமைப்பிற்குத்தக - ஒலிப்பதற்கு எளிமையாக "வண்ணம்" என்னும் சொல்லை "வர்ண" என்று மாற்றி அமைத்துக் கொண்டார்கள் என்றும் எண்ண வாய்ப்பு உள்ளது.

"வண்ணம் என்ற சொல் சிலம்பில் குறிப்பிடப் பெற்றுள்ள தைக் காணும்போது அச்சொல் வர்ணம், வருணம் என்று ஆயது என்று கொள்ளுதற்கு இடமுண்டு"[15] என்னும் கருத்தும் இதற்குத் துணையாக அமைகின்றது

## நிறம்

வண்ணத்தை குறிக்கும் பல சொற்களில் நிறம் என்பது முக்கியமான ஒன்றாகும். இந்நிறம் என்னும் சொல் தொல்

12. குருசாமி, ம. ரா. போ. 'கபிலர் பாடல்களில் நிறம், உ.த.நி. வெள்ளிக்கிழமை கருத்தரங்கு, 3-7-81 பக். 2-3
13. Encyclopedia Americana Vol V. Op. cit, P. 775.
14. வீராசாமி தா. வே. "சிலம்பில் நிறம்," உ. த. நி. வெள்ளிக்கிழமை கருத்தரங்கு, 13-2-81 பக்-1
15. சொக்கலிங்கம், வி-[பதி]. ஆசிரிய நிகண்டு தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு 216, தஞ்சை, 1975, பக். 216.

காப்பிய காலத்தில் மிக அருகியும், குறிப்பாகக் கூறுமிடத்து, அக் காலத்தில் 'நிறன்' என்ற வடிவிலும், அதற்குப் பிறகு சங்க காலத்தில் 'நிறம்' என்னும் சொல் சிறிது அதிகமாக வழங்கப் பட்டு வந்துள்ளதை நாம் காணலாம். இடைக்காலத்திலும், தற் காலத்திலும் பெரும்பான்மையான இடங்களில் பயன்பட் டுள்ளமை இலக்கியத்தின் வாயிலாக நாம் உணரும் செய்தி யாகும். நிறம் பொதுவாக எல்லாவற்றின் நிறத்தையும் சுட்டி வருகின்றது. நிறம் என்னும் சொல் நிறப்பொருளோடு இயல்பு, சிறப்பு, ஒளி, உயிர்நிலை, பாட்டின் கூறுபாடு என்னும் பிற பொருள்களையும் அது உணர்த்துவதைக் காணலாம். வண்ணத்தைக் குறிக்கும் பிற சொற்கள் மிக அருகியே காணப்படுகின்றன. வண்ணம், நிறம் என்னும் இரு சொற் களும் ஒத்த பொருள் உணர்த்தும் சொற்களாக வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், வண்ணம் என்னும் சொல்லாட்சியே தொன்மை நிலையில், தொல்காப்பியம் தொடங்கி, இன்றுவரை வழங்கப்பட்டு வரும் சிறப்பை உணரமுடிகின்றது.

வண்ணம் - பொருள்

''சந்தம் வண்ணம் ஆமே'' — ஆசிரிய நிகண்டு

''சந்தம் வண்ணம்'' — சேந்தன் திவாகரம்

''வண்ணம் சந்தம்'' — சூடாமணி

''வண்ணம் சந்தம்'' — கயாதரம்.

என்றும்[16], அரும் பொருள் விளக்க நிகண்டு, 'அழகு' என்பதையும் சேர்த்து, ''வண்ணமே யழகு சந்தம்''[17], என்றும்

---

16. அருமருந்தைய தேசிகர், அரும் பொருள் விளக்க நிகண்டு. செந்தமிழ்ப் பிரசுரம் - மதுரை, 1931, பக். 35.
17. Winslow's A Comprehensive Tamil and English Dictionary, Asian Educational Services, New Delhi 1979, p. 915.

    Tamil Lexicon, Vol VI, University of Madras, 1934, p. 3483.

    Kittels, Kannada-Engiish Dictionary Vol IV Univesity of Madras, 1971, pp. 1457-1458.

    Sabdakalpadruma, part IV, Loc. cit, pp. 277-284.

கூறும். வண்ணம் என்பதற்குப் பல்வேறான பொருளை அகராதி கூறுகிறது.[18]

வண்ணம் என்னும் சொல் தரும் பொருளை இரு பிரிவாகப் பிரிக்கலாம். 1. நிறத்தை குறிப்பன 2. நிறம் அல்லாத பிற பொருளைக் குறிப்பன.

"இலக்கியத்தில் வண்ணம் இரு வகையில் இடம் பெறுகின்றது பொருள்களின் தோற்றத்தை விளக்கும் வகையில்

---

18. குருசாமி, ம. ரா. போ. 'நிறங்களும் இலக்கிய மரபும்' உ. த. நி. வெள்ளிக்கிழமை கருத்தரங்கு 2-1-1981, பக். 2-3

Winslow Dictionary (1) Musical mode, melody, இராகம், (2) way or manner, property குணம் (3) Harmony சந்தம் (4) All kinds of ointment, சாந்த பொது (5) colour நிறம் (6) Beauty அழகு (7) A good happiness (8) Variation of meter (9) Form Gigure வடிவு (10) Co - efficient. 'Tamil Lexicon'

(1) Colour நிறம் (2) Paint (3) Unguent pigment (4) Beauty அழகு (5) Unadorned, natural beauty (6) Adorning, decoration (7) Nature, character, quality (8) Good (9) Merit, virture (10) Thickness (11) Form figure வடிவு, (12) Caste, சாதி (13) Species, class இனம் (14) Way, manner, method (15) Pros verse, rhythm (16) Pros Rhythmic verse with regular beats (17) A part of Kali verse (18) Melody (19) Song இசைப்பாட்டு (20) Garland மாலை (21) Action - செயல் (22) Co-efficient.

வண்ணக் கோலங்களாகத் தெளிவாக உள்ள நிலை ஒன்று, குறியீடாக நின்று பாத்திரம் அல்லது பண்பினைக் குறிப்பாகப் புலப்படுத்திய நிலை மற்றொன்று"[19].

வண்ணம் என்ற சொல், முதல் வகையில் பொருள் தரும் போது, அது நிறத்தினை மட்டும் தனியாகச் சுட்டுகின்றது. ஆனால் இரண்டாம் வகையோ, அச் சொல்லைப் பயன்படுத்தும் மக்களுக்கு - இனத்திற்கு - இடத்திற்கு - பண்பாட்டிற்குத் தகுந்தாற்போல், குறியீடு என்னும் நிலையில் விளங்கி, பல்வேறு வகையான பொருளைத் தருவதை நாம் காணலாம்—காட்டலாம். ஒவ்வொரு வண்ணமும் பல்வேறு வகையில் குறியீடாக அமைகின்றது என்பதை நாம் காணலாம்.[20]

---

19. Ad de Uries, Dictionary of Symbols and Images North-Holland Publishing Company, Amsterdam, London, 1962, p. 51.

20. The Correspondence of the colours to the respective functions varies with different cultures and groups and even among individuals, as general rule, however.........blue the colour of the rarefier atmosphere, of the clear sky stands for thinking, yellow the colour of the far seeing sun, which appears bringing light out of an inscrutable darkness only to disappear again into the darknees, for intuition, the function which groups in a flash of ,llumination the original and tendencies of happenings, red, the colour of the pulsing blood and of fire, for the surging and tearing emotions while green the colour of earthly, tangible, immediately percedtible growing things, represents the function of sensation. The most important of the symbols derived from the forging principles are these. Red is associated with blood, wounds, death-throes and sablimation, orange with fire and blames, yellow with light of the sun; illumination, dissemination and comprehensive generalization, green with vegetation, but also with death and livigness (green is therefore the connecting link between black-mineral life and red-blood and animal life-as well as between animal life and discomposition and death). light blue with the sky and the night and with the stormy sea; brown ochre with the earth; and black with the fertilized land. Gold corresponds to the mystic aspect of the sun. Silver to that of the moon. Index dis mots, 1970.

## சங்க காலம்

தொல்காப்பியத்தில் நிறத்தைக் குறிப்பதற்கு, உரு, குரு, கெழு, பண்பு, பசப்பு, வண்ணம் என்னும் சொற்கள் பயன்படுத் தப்பட்டுள்ளன. இவற்றில் வண்ணம் என்னும் சொல் 37 இடங் களில் வந்திருந்தாலும்

"வண்ணச் சினைச் சொல்" (தொ. கிளவி. 26)

"வண்ணத்தின் வடிவின்" (தொ. எச்ச. 20)

"வண்ணம் வடிவே" (தொ. வேற்று. 17)

"வண்ணம் பசந்து புலம்புறு காலை" (தொ. பொ. 8)

ஆகிய நான்கு இடங்கள் மட்டும் நிறத்தைக் குறிப்பதாக உள்ளன. மற்ற இடங்களில், இசையினையும், பாவினத்தையும் குறிப்பதாக அமைகின்றன.

நான்கு இடத்தில் வண்ணம் என்ற சொல்லைப் புறநானூறு குறிப்பிடுகின்றது.[21] அதில் இரண்டு நிறக்குறிப்பினைத் தரு கின்றன.

"காமம்
வண்ண மார்பின் தாரும் கொன்றை" —(புறம் 1-2)

"வண்ணம் நீவிய வணங்கு இறைப் பணைத் தோள்"
—(புறம் 32-3)

மற்ற இரண்டு பாடல்கள் அழகு என்றும் பொருள்பட வருகின்றன. எட்டு இடங்களில் வண்ணம் என்னும் சொல்லை அகநானூறு குறிப்பிட்டு உள்ளது.[22] இருப்பினும்,

"பொன் நேர் வண்ணம் கொண்டன்று அன்னோ".
(அகம் 192-2)

"வண்ண முதாய் தன் நிலம் வரிப்ப" (அகம் 283-15)

---

21. புறநானூறு 1:2, 1:9, 32:3, 152:13
22. அகநானூறு 30:15, 57:13, 69:3, 119:2, 192:2, 197:1, 283:15, 290:16

"பொன் நேர் வண்ணம் கொண்ட என் கண்ணே?"
(அகம் 290-16)

"நுதலும் தோளும் திதலை அல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும்பாட" (அகம் 119-2)

"வீ ஏர் வண்ணம் கொண்டன்னு
கொல்லோ" (அகம் 57-13)

"நும்
வண்ணம் எவனோ" (அகம் 30-15)

ஆகிய இடங்களில் நிறத்தைக் குறிப்பிடுகின்றது.

அகநானூற்றில் சுட்டப்படும் பிற இரண்டு இடங்களிலும் அழகு என்னும் பொருள்பட அமைந்து உள்ளது.

"வண்ணம் மிகுந்த அண்ணல்யானை" (நற் 273-6)
"வண்ணம் நோக்கியும், மென் மொழி கூறியும்"
(நற் 148-1)
"வண்ணம் துய்ம்மலர் உதிர —" (குறுந் 110-6)
"வண்ணம் நீவி, வகை வனப்பற்ற" (பதிற்று 50-1)
உருபு கிளர் வண்ணம் கொண்ட" (பதிற்று 52-30)
"வண்ணக்கருவிய வளம் கெழு கமஞ்சூல்" (பதிற்று 81-2)
"புழைக்கால் ஆம்பல்
தாது ஏர் வண்ணம் கொண்டன" (ஐங் 34-3)
"வண்ண ஒண் தழை நுடங்க வால் இழை" (ஐங் 73-1)
"வண்ண வண்டு நிமிர்ந்து,
ஆனா வையை வார் உயர் எக்கர்" (கலி 35-9)
"மயில் எருத்து வண்ணத்து மாயோய்" (கலி 108-38)
"ஒண்தொடியார்
வண்ணம் தெளிர" (பரி-10-95)

என்று சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்புத் தருகின்றன.

"வண்ண வண்ணத்த மலராய்ப்பு விரை இய"

(குறிஞ் 114-124)

என்னும் குறிஞ்சிப்பாட்டுத் தொடர் பல்வேறு வகையான வண்ண மலர்களைக் குறிக்கின்றது. இதற்கு நச்சினார்க்கினியர் தரும் பதவுரையும், விளக்கமும், சிந்திக்க வைப்பினும் அது

பல்வேறு வகையான வண்ண மலர்களைக் குறித்து இருக்கும் எனக் கொள்வது சிறப்பாக இருக்கும்.

"ஒளியார் முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான் சுதை வண்ணம் கொளல்" (குறள் 714)

"இது காண், என் வண்ணம் இனி" (தி மா 74—4)

"இந்தின் கரு வண்ணம் கொண்டன்று" கார் 4)-3)

"வெண்மரல் போலநிறம் திரிந்து வேறாய
வண்ணம் உடையேம் மற்றுயாம்" (ஐந் ஐம்.27-4)

"முலையொடு சோர்கின்ற பொன்வண்ணம் அன்னோ!"
(தி மொ 19-3)

எனப் பிற இலக்கியங்களில் "வண்ணம்" என்னும் சொல் குறிப்பிடப்படுகின்றது சிலம்பில் பன்னிரண்டு இடங்களிலும் மணிமேகலையில் இருபது இடங்களிலும் வண்ணம் எனும் சொல் குறிப்பிடப்படுகின்றது. மணிமேகலையில் நான்கு இடங்களில் அச்சொல் நிறத்தினைச் சுட்டுகின்றது.

வண்ணம் என்னும் சொல் சங்க காலத்தில், நிறம் என்று பொதுவாகப் பயின்று வந்துள்ளது. வண்ணம் நிறச் சார்புடன் வரும்போது, பெரும்பாலும் உடலின் வண்ணம் என்னும் அடிப்படையில் வருகின்றது.[23] வண்ணம் என்னும் சொல் நிறம் என்ற பொதுப் பொருளோடு தனிப்பட்ட நிறத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.[24] புறப்பாடல்களை விட அகப் பாடல்களில் வண்ணம் என்னும்சொல் அதிகமாக பயிலக் காணலாம்.

## இடைக்காலம்

இடைக்காலங்களிலும் 'வண்ணம்' என்னும்சொல் இலக்கியங்களில் இடம் பெற்று இருக்கின்றது.

"முன்னை வண்ணம் பாலின் வண்ணம்
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்"
(பெரிய. திரு 4. 3;8)

23. தமிழரசி இரா. 'சங்க இலக்கியத்தில் நிறங்கள்' உ. த. நி. வெள்ளிக்கிழமை கருத்தரங்கு, பக். 1

24. சித்தாலட்சுமி, 'சீவகசிந்தாமணியில் நிறம்' உ. த. நி. வெள்ளிக்கிழமை கருத்தரங்கு 10-4-81, பக். 1

"மைவண்ணம் கருமுகில்போல
திகழ் வண்ண மரகதத்தின்
அவ்வண்ணன்" (பெரிய. திரு 5. 6: 9)

"கார் வண்ணம் திருமேனி" (திருநெடுந் தாண்டகம் 18)

இறைவனால் ஆக்கப்பெற்ற வண்ணங்கள்
ஐந்துக்குமேல் இல்லை. (தமிழ்விடு தூது 114)

மைவண்ணக் கருஞ்குஞ்சி வனவேடர் பெருமானார்
(பெரியபுராணம் 16. 14)

என நேரிடையாக நிறத்தை குறிக்கும், "வண்ணம்" என்னும் சொல் பயின்று வந்தாலும் பெரும்பாண்மையாக இறைவ்னைக் குறிப்பதறகாகவே பயன்பட்டன என்று கூறலாம்.

| | |
|---|---|
| நறும்பூத் திகழ்வண்ணன் | (பெரிய திருமடல் 56) |
| கருநீல வண்ணன் | (திருநெடுந்தாடகம்-3) |
| கருவரை வண்ணன் | (பெரிய திருமொழி 5. 9 : 3) |
| காயாமலர் வண்ணன் | (பெரிய திருமொழி 1.5.6) |
| முகில் வண்ணன் | (பெரிய திருமொழி 11.3:9) |
| நீர் வண்ணன் | (திருநெடுந்தாண்டகம் 18) |
| கருநீல நன்மேனி வண்ணன் | (திருவாய் மொழி 1-9-2:2) |
| கார் முகில் வண்ணன் | ( ,, 2-8-10:4) |
| கருங் கடல் வண்ணன் | ( ,, 6-5-4:3) |
| மேக வண்ண மால் | (விறலிவிடு தூது 34) |

என இறைவனை வண்ணன் என்ற சொல்லால் சுட்டும் தன்மையினைக் காணலாம். இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பெரும்பாலும் சமய இலக்கியங்களாக இருப்பதால், இத்தகைய மாற்றம் ஏற்பட்டு இருக்கலாம்.

சீவசிந்தாமணியில் "வண்ணம் பெரும்பாலும் அஃறிணைப் பொருளில் நிறத்தையே சுட்டி நிற்கின்றது"[25] என்னும் கருத்து கூறப்பட்டு உள்ளது ஆனால் அக்கருத்திற்கு எவ்வித எடுத்துக் காட்டும் கூறப்பெறவில்லை.

25. மேற்படி., பக். 1.

வண்ணம் என்னும் சொல் இடைக்காலத்தில் நிறம் என்னும் பொருளில் மட்டுமின்றி பிற பொருளிலும் பயின்று வந்துள்ளது.

'இவ்வுலகின் வண்ணன்' (திருக்குறுந் தாண்டகம் 16)
'இந்த வண்ணம் என்று' (பெரிய திருமொழி 4.9:9)
'வண்ணக் கொடி' (வண்டு விடு தூது) 110)
'வண்ணம் புனைந்த வனநகிலார்' (பணம் விடு தூது 287)

இடைக்காலத்து இலக்கியங்கள் பெரும்பாலும் சமயத்தைச் சார்ந்து தோன்றிய காரணத்தினால் இறைவனை குறிப்பதற்காகவும், வருணிப்பதற்காவும், வண்ணம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## தற்காலம்

வண்ணம் என்ற சொல் நேரிடையாக நிறம் என்னும் பொருளை மட்டும், குறிக்காமல், உருவமாகவும், குறியீடாகவும் மாறிய நிலையினைத் தற்காலத்தில் காணலாம்.

" எங்கெங்கு காணினும் சதிபடா ! தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா "

என்று பாரதிதாசன் சக்தியை ஏழுகடல் வண்ணமாக குறிப்பதைக் காணலாம். பாரதியோ, காளி ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு வண்ணங் காட்டுவதாக குறிப்பிடுகின்றார்.

"கணந் தோறும் ஒரு புதிய வண்ணங்காட்டிக்
காளி பராசக்தி அவள் களிக்குங் கோலம்'
(பாஞ்சாலி சபதம், அழைப்புச் சருக்கம் 49, 5-6)

அப்துல் ரகுமான் தன்னுடைய கவிதையில், வண்ணம், வர்ணம் என்னும் இரண்டையும் குறிப்பிடுகின்றார்.

'சிறைகளும் அங்குண்டு,
செல்லும் புழுக்களை
வண்ணத்துப் பூச்சியாய்
மாற்றி அனுப்புதற்கு (நேயர் விருப்பம் பக். 105)

'காலத்தின் குறும்பால்
''கார்ட்டூன்' ஆகிவிட்ட
வர்ண ஓவியம்' (நேயர் விருப்பம் பக் 67)

வானத்துச் சூரியன்
வர்ணங்களின் தலைவன் (நேயர் விருப்பம் பக் 50)

குறியீடாகக் கூறுவதில் வண்ணம்,' 'வர்ணம்' என்னும் சொல்லை விட நிறப்பெயர்களே பெரிதும் உதவுகின்றன என்பதைத் தற்கால கவிதைகளின் வாயிலாக அறியலாம்.

''வாஷிங்டனில் சிரிக்கும்
வெள்ளை மாளிகையே
உன்மீது களங்கத்தை பூசிக்
கறுப்பு மாளிகையாக்கினர்
இனி நீ துக்கத்தின் சின்னம்''
(அக்கினிப்புத்திரன் வானம்பாடி இதழ் 5)

''எங்களின் வெளுத்த கரங்கள்
விண்ணை நோக்கி உயர்வது
யாரையும் யாசிக்க அல்ல
சூரிய ராஜாவின்
காலரை உலுக்கி
நியாயம் கேட்க'' (பட்டமரங்கள் பக். 4)

'என்ன இது அநியாயம்
இந்த
வெள்ளைக் காரியைச்
செவ்விந்தியன்
பலரறியப்புணர்ந்து
சீச்சி' ...... (பட்டமரம் பக். 11)

'பசியிருட்டை விரட்டுகின்ற
பச்சைக் கிரணங்கள்
செங்குத்தாய் வளர்கின்ற
செல்வ இரேகைகள், இரேகைகள்''
(நேயர் விருப்பம் பக். 35)

## நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புற இலக்கியங்களிலும் 'வண்ணம்' என்னும் சொல் பயின்று வருவதைக் காணலாம். எட்டு இலக்கியத்தைப்

போல் 'வண்ணம்' நிறத்தைக் குறித்தும், பிற பொருளைக் குறித்தும் பயன் படுத்தப்பட்டுள்ளன

"வண்ண வண்ணப் பூப் பூக்கும்"[26]

"வண்ணத்துக்குக் கிண்ணம் போடுகிறான்"

என்பன நிறத்தைக் குறித்தும்,

"வண்ண வண்ணப் பேச்சு"

"நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக"

என்பன கவர்ச்சி, சிறப்பு என்னும் பொருளிலும் பயின்று வந்துள்ளதைக் காணலாம்.

நாட்டுப்புற இலக்கியத்தில் வர்ணம் என்னும் சொல்லும் குறிப்பிடப்படுகின்றது.

"வர்ண மணித் தொட்டியே"[28]
"கையாலாகாத சிறுக்கி வர்ணப்புடவைக்கு
ஆசைப்பட்டாளாம்."[29]

## முடிவுரை

1. வண்ணம் என்னும் சொல் வியப்பு, மகிழ்ச்சி, அழகு போன்றவற்றின் அடிப்படையில் தோன்றியிருக்கக் கூடும்.
2. 'வண்' என்னும் அடிச்சொல்லாகக் கொண்டு வண்ணம் தோன்றியிருக்கலாம்.
3. சாதி நிறத்தின் அடிப்படையில் ஏற்பட்ட காரணத்தால் வர்ணம் என சாதிக்கும் பெயரிட்டு இருக்கலாம்.
4. சங்க காலத்தில் நேரிடையாக நிறப்பொருளைக் குறிப்பதற்கு வண்ணம் என்னும் சொல்லைப் பயன்படுத்தியதாகக் கொள்ளலாம்.

---

26. பாலசுப்பிரமணியம், இரா. 'பழமொழியில் நிறம்' உ.த.நி. வெள்ளிக்கிழமை கருத்தரங்கு 24-4-81, ப-ம். 1
27. நிர்மலா பாய், ஆய்வாளர், உ.த.நி. கள ஆய்வில் சேகரித்தவை,
28. பாலசுப்பிரமணியம், இரா. 'பழமொழியில் நிறம்' உ.த.நி. வெள்ளிக்கிழமை கருத்தரங்கு. 24-4-81, பக். 1

5. இடைக்காலத்தில் பெரும்பாலும் 'வண்ணம்' என்னும் சொல் பண்ணைக் குறித்தது.

6. தற்காலத்தில் வண்ணம் பெரும்பாலும் குறியீட்டுப் பொருளில் பயன்படுகின்றது. ஆகவே வண்ணம் என்னும் சொல்லைவிட நிறப்பெயர்கள் குறியீடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

7. வண்ணம், வர்ணம் என்னும் இருசொற்களும் ஏட்டு இலக்கியங்களில் மட்டுமின்றி அது நாட்டுப்புறங் களிலும் இருந்தது என்பதை நாட்டுப்புற இலக்கியத்தின் வாயிலாக அறியலாம்.


பயன்பட்ட பிற நூல்கள்

தமிழ்

1. அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், அகரம், சிவகங்கை, 1980.
2. தேவநேயன், ஞா. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1971
3. ஷாஜகான், பட்டமரங்கள், அணு, இளையாங்குடி, 1980.

English

1. Burrow, J & Emeneau, M. B, A Dravidian Etymological Dictionary, Oxford Clarendon Press, 1966
2. Pillai N. C., A Concise English – English Malayalam. Dictionary.
3. Sitaramayya - Sabdaratnakaramu, The Madras School Book and Literature Society, Madras–3, 1969.
4. Index dis mots, de la literature tumoule ancienne Institute, Francise Iindologie, Pondicherry, 1970.

கட்டுரைகள்

உ.த.நி. வாரக் கருத்தரங்குக் கட்டுரைகள் 2-1-1981 முதல் ?-12-1981 வரை.

# 2. நிறங்களும் இலக்கிய மரபும்

ம. ரா. போ. குருசாமி

**வண்ணக் கவர்ச்சி யாண்டும்**

பல்வேறு நிறங்கள் தரும் கவர்ச்சி, மழலைப் பருவத்துக்கு முன்பே மனித மனத்தில் இடம் பெறுகிறது. தவழவும் இயலாத தொட்டிற் குழந்தை பல்வேறு வண்ணங்கள் கொண்ட பொம்மை ராட்டினம் சுழல்வதிலே நாட்டம் செலுத்தி அமைவதைக் காண முடிகிறது. அறிவாற்றல்களில் சராசரி நிலையினனாகிய மனிதனும் வண்ணக் கலவைகளின் விந்தைகளிலே மனம் பறி கொடுக்கிறான். அகமனக் காட்சி யுணர்வால் அறிவின் எல்லையைச் சுருக்கி, அவ்வெல்லையின் அப்பால் நின்று உணர்வு நரம்பை நெருடிக் கவிதை இசை எழுப்பும் புலவனும் வண்ணத்தின் ஓலக்கத்தில் கற்பனை அரியணையில் வீற்றிருந்து, அவ்வோலக்கத்துக்குத் தனிப் பெருமையும் கவர்ச்சியும் ஊட்டு கிறான்.

அழுகை வெடித்துவிடுமோ என்ற நிலையில் வண்ணக் கவர்ச்சியால் மருண்டு அமையும் குழந்தை, இன்ன தன்மையது என்று தெளிவு காணமுடியாவிடினும் வியப்பு விரித்த வலையிலே தானே விரும்பிப் புகுந்து அங்காந்து நிற்கும் சராசரி மனிதன் யாவதும் கற்றோர் அறியா அறிவினராய் உணர்வின் நாதத்தால் விருந்து பரிமாறும் நிலையில்,

பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடீ இந்த வண்ணத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! — செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! — வெம்மைதோன் றாமே
எரிந்திடும் தங்கத் தீவுகள்! — பாரடீ
நீலப் பொய்கைகள்! அடடா, நீல
வண்ண மொன்றில் எத்தனை வகையடீ!
எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை! — கரிய பெரும்பெரும் பூதம்!

நீலப் பொய்கையில் மிதந்திடும் தங்கத்
தோணிகள் — சுடரொளிப் பொற்கரை இட்ட
கருஞ்சிகரங்கள்! — காணடி ஆங்குத்
தங்கத் திமிங்கலம் தாம் பல மிதக்கும்
இருட்கடல்! ஆகா எங்குநோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வண்ணக் களஞ்சியம்![1]

என வண்ணத்தில் எவரையும் மலைக்கும் கவிஞன் — இம்மூவருள் எவருமே நிறமாலையில் நினைவு தோய்கின்றவர்களாகவே உள்ளனர்; மனிதரிலே கண் பெற்றோர் எவரும் விலக்கு அல்லர். வாழ்வின் எல்லா நிலையினரையும் கவர்வதால், நிறம் அல்லது வண்ணம் வாழ்க்கை முழுமைக்கும் உரியதாகிறது; எனவே வாழ்க்கையின் மறுபதிப்பாய் — எதிரொலியாய் — எதிரொளியாய் இலங்கும் இலக்கியத்திலும் போதிக்கப் பெறுகின்றது.

### வண்ணம் இரு வகை

இலக்கியத்தில் வண்ணம் இருவகையில் இடம் பெறுகின்றது. பொருள்களின் தோற்றத்தை விளக்கும் வகையில் வண்ணக் கோலங்களாகத் தெளிவாக உள்ள நிலை ஒன்று; குறியீடாக நின்று பாத்திரம் அல்லது பண்பினைக் குறிப்பாகப் புலப்படுத்தும் நிலை மற்றொன்று.

இவ் விருவகையிலும் இலக்கியத்தில் நிறம் பெற்றுள்ள பாங்கினைச் சிற்சில எடுத்துக் காட்டுகளால் புலப்படுத்தும் முயற்சியே இக்கட்டுரையின்கண் மேற்கொள்ளப்படுகிறது.

நிறங்கள் எத்தனை? அடிப்படை வண்ணங்கள் என மஞ்சள், சிவப்பு, நீலம் மூன்றைக் குறிப்பர். வானவில்லின் தோற்றங் கொண்டு நிறங்கள் ஏழு என்பர். இயற்கை யன்னையின் வண்ணக் கொலுவினை நோக்குவார்க்கு வண்ணங்கள் இத்துணைய என வரையறுத்தல் இயலாதென்பது புலப்படும். பல வண்ணங்களையும் கொண்ட தட்டினை விரைவுறச் சுழற்றும் நிலையில் வெண்மை விளைவதை விஞ்ஞான வகுப்புகளிலே கண்டிருக்கிறோம். இவ்வாறு கணிப்பின் எல்லை யிலே சிக்காமல் — பெயரிடும் திறத்தையும் மீறி நிற்கும் வண்ணங் களில் சில நிறங்களைப் பற்றி மட்டுமே இக்கட்டுரை சுட்டிச் செல்லும்.

---

1. பாஞ்சாலி சபதம் 152.

## வண்ணம் அழகு

வண்ணங்கள் வழங்கும் செய்திகளைக் காணப் புகுமுன் 'வண்ணம்' என்ற சொல் 'அழகு' என்ற பொருள் உடையது என்ற கருத்தினை மனங்கொள்ளவேண்டும். அழகின் பெயர் இவையெனக் குறிக்கப் புகுந்த சூடாமணி நிகண்டு 42 பெயர் களைத் தருகின்றது. அவற்றுள்ளே 'வண்ணம்' என்பது ஒரு பெயர். அவ்வாறே வண்ணத்தின் பெயர் குறிக்கும்போது 'சந்தம்' என்றொரு சொல்லை அந்நிகண்டு தருகின்றது. 'சந்தம்' என்ற வடமொழிச் சொல்லின் பொருள் 'அழகு' என்பதே. எனவே, வண்ணம் என்றாலே 'அழகு' எனச் கருதிய வழக்கினை நாம் உணர முடிகின்றது.[2] அழகு விளைவிப்பதாகிய வண்ணத்தை அவ்வாறு குறித்தது பொருத்தமே எனலாம்.

## நிறம்-மார்பு

வண்ணம் என்றால் அழகு எனத் தருபொருள் (Divided-meaning) பெற்றதுபோலவே, நிறம் என்ற வண்ணச் சொல்லும் 'மார்பு' எனத் தருபொருள் பெறுகின்றது. பதிற்றுப்பத்தின் 79-ஆம் பாடல் 'நிறம் படு குருதி' என்றே பெயர்கொண்டுள்ளது. கொற்றவைக்குப் பலி தூவுதற்குப் பயன்படுத்தும் குருதி மார்பைப் பிளந்து பெற்றதெல்லும் ஆண்மைச் சிவப்பைக் குறிக்கிறது இத் தொடர். பாடலுக்கு இப்பெயர் அமைந்தமைக்குரிய காரணத் தைச் சுட்டுமிடத்து "அல்லாத இடங்களிற் குருதி கொள்ளாமை யின் நிறங்களைத் திறக்க ஆண்டு உண்டான குருதி என்பதாயிற்று இச்சிறப்பானே இதற்கு 'நிறம்படு குருதி, என்று பெயராயிற்று" என்று பழைய உரைக் கூறும்.[3] பரிபாடல், பெருங்கதை ஆகிய நூற் பதிப்புகளில் 'நிறம்' என்ற சொல்லுக்கு மார்பை மனங் கொண்டு முறையே 'மருமத்தானம்' என்றும், 'உயிர்நிலை' என்னும் ஐயரவர்கள் பொருள் குறித்திருக்கிறார்கள்.[4] பெரு மிதப் பொலிவால் நிமிர்வதாய்க் கவரும் பான்மையுடையது மார்பு; எனவே, வண்ணப் பொலிவுக்கும் உரியது எனலாம். இவ்வகையால் தருபொருளாக நிறம் மார்பினைக் குறித்தது போலும்.

---

2. சூடாமணி நிகண்டு: எட்டாவது, பண்புபற்றிய பெயர்த்தொகுதி, பா. 24, 25.
3. பதிற்றுப்பத்து: 79 (எட்டாம்பத்து).
4. பரிபாடல்: ஐயரவர்கள் (முதற்) பதிப்பு, பக். 208. பெருங்கதை: முதற் பதிப்பு, பக். 867.

வண்ணம் : வருணனையில் வெளிப்படை

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளி[5]
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழல்[6]
செங்காய் உதிர்ந்த பைங்குலை ஈந்து[7]

போன்ற இடங்களில் பொருள் வருணனைகளாக நிறங்கள் நேர் பொருள் குறித்து வருகின்றன.

ஆசில் அங்கை அரக்குத்தோய்த் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை[8]
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பு[9]

போன்ற இடங்களில் உவமையொடு பொருந்தி நிறங்கள் பொருள்களை விளக்குவதைக் காணுகின்றோம்.

வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகழ்முக வேழம்[10]

என்பன போன்ற காட்சிகள் தனிவகையான நிறக் காட்சி களாகும். வேங்கை பூத்திருப்பதைப் புலியெனக் கருதிய யானையின் மருட்கையினை வண்ணக் கலவை கொண்ட காட்சி யாக — கதைபோல இங்கே தருகிறார் கபிலர். நிறங்களைப் பொருள் விளக்கும் கருவியாக மட்டுமல்லாமல் — நிறக் காட்சியால் பொருளை விளக்கும் உவமையாக மட்டுமல்லாமல், செயல்நிலை ஓவியமாக உவமையோடு அமைந்திருப்பது இவ் வரிகள் வழங்கும் நிறமாலை.

பொருள்களின் தோற்றத்தை வெளிப்படை வருணனையாக விளங்கும் வகையில் நிறக் காட்சிகளை மூன்று வகையாகப் புலவர்கள் வழங்குவதை மேலே கண்டோம். இலக்கியங்களை

---

5. திருமுருகாற்றுப்படை 21-22.
6. பெரும்பாணாற்றுப்படை, 179.
7. அகநானூறு 21.
8. சிறுபாணாற்றுப்படை, 74-75.
9. பெரும்பாணாற்றுப்படை, 15.
10. அகநானூறு, 12.

நுணுகி நோக்கி ஆராய்ந்தால் இன்னும் பல வகைகளில் நிறங்கள் கவிஞர்க்கு உதவியிருப்பதைக் காணும் வாய்ப்பு இருக்கக் கூடும்.

## வண்ணம்—குறிப்பு வகை: குறியீடு

இனி, வெளிப்படையாக அன்றி குறிப்பு வகையால் நிறங்கள் இலக்கியங்களில் இடம்பெறுவதைப் புலப்படுத்தும் சில சான்றுகளைக் காணலாம்.

உலக வழக்கிலே 'பச்சைப் பிள்ளை' என்றும் 'பச்சை பச்சையாகப் பேசுகிறான்' என்றும், 'பசுமைப் புரட்சி' என்றும் பலரும் பேசக் கேட்கிறோம். களங்கம் சாராத நிலையில் தூய்மை சான்ற இளமை நிலையைப் 'பச்சை' குறிக்கிறது; அதே சொல்லை அடுக்கிப் 'பச்சை பச்சையாக' என்றால்—பொருளே மாறிவிடுகிறது. பசுமைப் புரட்சி என்ற தொடரில் 'பசுமை' உள்ளத்தைக் குறிக்கும் பச்சை நிறத்தைக் குறியீடாக்குகிறது. 'பைங்கூழ்' 'பைந்தமிழ்' போன்ற இலக்கிய ஆட்சிகளும் இதே வளப்பொருள் சுட்டுவன. 'பச்சைப் பசே'ரென்று பொலிவுற்றிருக்கும் கழனிகள் நாட்டுச் செழிப்பை அனுபவிக்கும் உள்ளத்திற்கு உவப்பூட்டுகின்றன.

'வெள்ளை மனம்' என்ற பேச்சு வழக்கு, மனத்தின் தூய்மையை மட்டும் குறித்து ஓயாமல், அறியாமையைக் குறிப்பதும் உண்டு.

நூல் வழக்கிலும் நிறங்களின் பெயர்களும் தோற்றமும் குறியீடுகளாக வருவதைக் காணுகின்றோம்.

குறியீடுகளாக (Symbols) கையாளப்படும் பலவகைகளில், இடம் காலம் சூழல் இவற்றான் யாண்டும் கையாளப்படும் சிறப்பு வண்ணக் குறியீடுகளுக்கு உரியது என்பர் அறிஞர்.

குறியீடுகள், உருக்காட்சிகள் பற்றிய ஓர் அகராதி [10a] பல்வேறு நிறங்களின் குறிப்புகளை விளக்கமாகத் தருகின்றது. அதன்கண் காணப்படும் சிற்சில குறிப்புகள் மட்டும் இங்கே தரப்பெறுகின்றன.

---

10a. Dictionary of Symbols and Imagery, London, 1974.

வெள்ளை : தூய்மை, கற்பு, பொறுமை. கன்னிமை, தெய்வீகம், அமைதி, அருள் முதலியன.

கறுப்பு : நரகம், சாவு, துக்கம், இரவு, அறியாமை, பாவம், சாத்தான், மூடநம்பிக்கை முதலியன.

சிவப்பு : செயல்வேகம், ஆண்மை, குருதி, போர், தியாகம், எழுச்சி, சில சமயங்களில் தங்கம், தமிழில் செம்பொன்.

பச்சை : நிலைபேறு, நினைவு, 'தமிழில் பசுமையான நினைவு', புதுமை, வளம், வாழ்வு.

மேலே தந்துள்ள மேற்கு நாட்டு விளக்கம் போலவே நம் நூல் வழக்கும் உண்டு. பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ள நிகண்டு களின் ஆட்சிகளை நோக்கினால் இவ்வுண்மை தெளிவாகும்.

பண்புக் குறியீடாக நிறங்கள் பயன்படுத்தப் பெறுதற்கு இலக்கியத்திலிருந்து ஓரிரு சான்றுகள் இனி வருவன :

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்

எனக் கலைமகளைக் குறிப்பிடும்போது வாலறிவு வழங்கும் அப்பெருமாட்டியின் தூய்மையை உணர்கிறோம். அறிவும் கலையும் மாசுபடாத் தூய்மையுடையனவாகப் பேணப்படுதல் வேண்டுமென்ற உட்கருத்தினையே கலைமகட்கு வெண்மைச் சூழலமைத்து ஆன்றோர் விளக்கினர்.

மிதிலைக் காட்சி வழங்கும் கம்பர், மிதிலை நகரத்து மக்கள் கூற்றாக ஒரு பாடல் எழுதியுள்ளார். 'இராமனைக் கண்ணாரக் கண்ட சனகன் மறு நினைப்பில்லாமல் சானகியை அவன் கையில் ஒப்படைத்துவிட வேண்டியதானே! வில்லை இழுத்துக் கொண்டு வந்து இப்படியா இந்தப் பிள்ளைமுன் வைப்பான்! அட அறியாமை இருந்தவாறு இதுவோ'' என்ற கருத்தில் தங்கள் மன்னனைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள் :

வள்ளல் மணத்தை மகிழ்ந்தன னென்றால்
கொள்ளெனமுன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ளை மனத்தவன் வில்லை எடுத்துஇப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை என்பார்[11]

---

11. கம்பராமாயணம், பாலகாண்டம், கார்முகப்படலம் 30.

இங்கே 'வெள்ளை மனத்தவள், என்று சனகனைக் குறிப்பிட்டது 'களங்கமில்லாதவள்' என்று சொல்வது போல 'அறியாதவன்' என்ற கருத்தையே வலியுறுத்துகின்றது.

பிங்கல நிகண்டு (பா. 872) கீழ்மக்களை வெளிறர் எனக் குறிப்பிடுகின்றது.

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு[12]

எனும் குறளில் வெளிறு என்ற வெண்மையை அறியாமைக் குறியீடாக்குகிறார் வள்ளுவர்.

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்[13]

என்ற இடத்திலும் 'வெளியார்' என்ற வெண்ணிறச் சார்பு அறியாமைக் குறியீடாகவே வருகின்றது.

தொல்காப்பியத்துள் வரும் 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள'[14] என்ற உரியியல் நூற்பா நிறக் குறியீடுகளின் பழமையைச் சுட்ட வல்லது.

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்[15]

என்னும் குறளில் கறுத்தல், சினத்தல் என்ற குறியீட்டுப் பொருளில் வருகின்றது.

'நீ சிவந்திறுத்த நீரழி பாக்கம்' என்னும் ஆட்சியில் சிவத்தல் சினத்தற் குறியீடாக வருகின்றது. மேற்குறித்த நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கம் நம் கருத்திற்கு உரியது. ''கருமை செம்மை யென்னாது 'கறுப்பு சிவப்பு' எனத் தொழிற்படுத்தினார், அவை வெகுளியை உணர்த்தின மையின்''. கருமை செம்மை என்ற சொல் வடிவங்கள் நேரே நிறம் குறிப்பன, அந்நிறச் சார்பு விடாமல் 'கறுப்பு, 'சிவப்பு;

---

12. திருக்குறள், 503.
13. மேற்படி, 714.
14. தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், 74.
15. திருக்குறள், 312.

என்று வடிவு கொண்டது குறியீடுகளாய் நின்று சினத்தலைச் சுட்டின என்றும் கருத்து நச்சினார்க்கினியர் சிந்தனை வழிக்குப் பொருந்துவதாக உளது என்பதை இதனால் உணரமுடிகின்றது.

மேற்குறித்த நூற்பாவிற்கு அடுத்த நூற்பாவான 'நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப'[16] என்பதற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் இதனை எய்தியதன்மேற் சிறப்பு விதி, என்று குறிப்பிவிட்டு, ''இலை தொழிற்பட்டுழியும் பண்புணர்த்துமென வெளிப்படு சொல்லையும் கூறினார், ஐயமகற்றுதற்கு'' என விளக்கம் தந்துள்ளார். குறியீடாகப் பயன்படும் நிலையிலும் நிறங் குறிக்கும் பாங்கும் அச் சொற்களுக்கு உண்டென்பது நாச்சினார்க்கினியர் கருத்தாகும்.

சினத்தைக் குறிப்பனவாகிய கருமையும் செம்மையும் போலவே பசுமையும் சினங் குறித்து வருவதைப் பரிமேலழகர் பரிபாடல் உரையிலே சுட்டுகின்றார்.

> மாத்திரம் அழலவெய்து அமரர் வேள்விப்
> பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்[17]

என்ற வரிகளுக்கு உரை எழுதுமிடத்து ''கோபத்தாற் பசிய கண்ணையுடைய ஈசன்'' என்று பரிமேலழகர் வரைந்துள்ளார்.

போர் மறவர்க்கு உரிய உடை செந்நிறத்ததாக நற்றிணை குறிக்கின்றது.[18]

செவ்வணி என்பது அகப்பொருள் மரபிலே ஒரு வழக்காற்றினைக் குறிக்கின்றது.

> பூப்பின் புறப்பாடு ஈரறு நாளும்
> நீத்தகன் துறையார் என்மனார் புலவர்
> பரத்தையிற் பிரிந்த காலை யான[19]

என்பது விதி. பரத்தையிற் பிரிந்துள்ள தலைவனுக்குத் தலைவி பூப்பெய்திய செய்தியை நயத்தக்க நாகரிக நெறியினதாக ஓராற்

---

16. தொல். சொல். உரி. 75.
17. பரிபாடல், 5.
18. நற்றினை, 33.
19. தொல்பொருள். கற்புறல், 46

றான் அறிவுறுத்தல் இத்துறையாகும். தோழிக்குச் செவ்வணி புனைந்து தலைவன் இருக்குமிடத்திற்குத் தலைவி அனுப்புவாளாம்; குறிப்பிற் குறிப்புணரவல்ல அக்குண நலக் குன்று வீடு திரும்புவானாம்![20]. இச்செயலில் உள்ள நாகரிக நயம் அல்லது நாகரிக நயக்கேடு ஒருபாலிருக்க, இலக்கிய மரபிலே நிறம் பயன்பட்ட ஒரு வழக்காற்றினை இச் செவ்வணி புலப்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறே மன்னவன் பிறந்த நாட் பெருமங்கலத்தினை 'வெள்ளணி' புலப்படுத்துவதும் நிறக் குறிப்பினதேயாம்.

மன்னவன் தான் வெள்ளாடை யுடுத்தி வெள்ளிய மலரைச் சூடிப் பின் தன்னைப் பாடிச் சிறப்பித்த புலவர்க்குச் சிறப்புச் செய்யவேண்டுமென்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகின்றது [21] பரிசு வழங்கும் நிலையில் மன்னவன் வெள்ளாடை உடுத்து வெண் மலர் சூடிக்கொள்ளுதல் வேண்டும் என்பது கலைமகளே சிறப்பிப்பதாகக் கொள்ளற்குரியது எனக் கருதலாம் போலும். பரிசில் பெறுதற்குரியானுக்குப் பரிசில் வழங்குவான் நிலை ஈது. ஒருகால் மன்னன் பரிசில் வழங்காதொழிவனேல் பாடிய பாவலன் செய்யக்கூடிய செயல் யாதென்பதையும் அப்பிங்கலந்தை நிகண்டு பாடுகின்றது.

பரிசி லீயாப் பாவிதன் பனுவலைத்
தெரிதர எழுதிச் செம்பூச் சூடித்
தன்மனைப் புறத்தினும் சாமுண்டி முன்றிலும்
பன்னகம் வாழும் பழம்பதி தன்னினும்
மயானத் திடத்தினும் மறுந்தன்னினும்
தியானித் திருந்து செந்தீக் கொளுத்த
ஈரறு திங்களின் இறுதியாம் என்பது
ஆதில் புலவன் அறைந்த மொழியே[22]

---

20. தோள்பதி துண்ட பரத்தைஇல் சிவப்புற நாளணிந்துவக்கும் சுணங்கறை யதுமே
கேளனங் குறமனைக் கிளற்துள சுணங்கறை (பரி. 9)
"புதிதாகத் தோள் நுகரம்பட்ட பரத்தை இல்லின் ஒருத்தியை நாட்காலையே செவ்வணி அணிந்து விட்டுப் பூப்பறிவிப்ப"-மேற்படி. பரிமேலழகர் உரை.

21. பிங்கல நிகண்டு, 1370.

22. மேற்படி, 1372.

ஆதிப் புல்வராம் அகத்தியரே இதனைச் சொல்லியிருக்கிறாராம். பரிசில் தாராவிடின், அப்பாடலைத் தெளிவாகத் தனியே எழுதிச் சிவப்புச் சூடிக் குறிப்பிட்ட இடங்களில் செந்தீயில் கொளுத்தி விட்டால் — தியானம் செய்து கொளுத்திவிட்டால் — பன்னிரு திங்களில் பார்மன்னன் பாழாவான். இஃது அகத்தியர் சொல். இதனைக் கேட்டபிறகும் நாடான்வோர் புலவரைச் சிறப்பிக் காமல் இருப்பரோ! சிவப்பு — ஆம் அபாய அறிவிப்பு.

## இசையின் நிறம்

'பஞ்சமரபு' என்ற பழந்தமிழ் இசைநூல் பண்களுக்கு நிறங்கள் இவையென வகுத்துக் கூறுகிறது. எனினும், அந்த நிறங்கள் பற்றிய தெளிவும் விளக்கமும் தெளியுமாறில்லை.

## எட்டாத யோகத்திலும் எண்ண அரங்கிலும் வண்ணம்

யோகப்பயிற்சி செய்வார் அவ்வவர் வளர்ச்சி நிலைக்கேற்பப் பல்வேறு நிற ஒளிக் காட்சிகளைப் பெறுவர் என்று திரு. வி. க. போன்ற சான்றோர் கூறக் கேட்டதுண்டு; யோக நூல்களிலே பேசப்பெறும் இந்த நிற விளக்கம் அனுபவிகளுக்கே எட்டுவன. எண்ணங்களுக்கும் நிறங்களுக்கும் தொடர்பு உண்டு என்ற வழக்காறும் உண்டு.

## பாக்களுக்கு நிறம்

நால்வகைப் பாக்களுக்கும் ஒவ்வொரு நிறத்தை உரிமையாக்கிப் பேசுகிறது பன்னிருபாட்டியல்.[23] அந்நூலின்படி — வெண்பாவிற்கு வெண்மதி நிறம், அகவற்குச் செந்நிறம், கலிப்பாவிற்குப் பொன்னிறம்; வஞ்சிப்பாவிற்கு நீலநிறம் என வகுக்கப்படுகிறது. நால்வகைப் பாக்களின் பாவினங்களுக்கு அதே நிரல்—எனபட்ட நிறங்கள் உரியன எனவும் பன்னிரு பாட்டியல் பேசுகின்றது[24]. பாக்களுக்கு நால்வருணச் சாதிப்பாகு பாட்டையே வகுத்துக்கொடுக்கும் பாட்டியல் மரபியல், நிறங்கள் புகுக்கப்பட்டமை வியப்பன்று. பா, பாவினங்களுக்கு உரியனவாக நிறம் பகுத்தமைக்கான அடிப்படையோ விளக்கமோ தெரியவில்லை.

---

23. பன்னிரு பாட்டியல், 162-165.

24. மேற்படி, 166.

## தொகுப்பு

இதுகாறும் கண்டவற்றிலிருந்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு வருமாறு :

1. கண்பெற்ற யாவர்க்கும் வண்ணக் கவர்ச்சி உண்டு.
2. வாழ்வின் எல்லா அரங்கிலும் வண்ணத்துக்கு இடமுண்டு ஆதலின், இலக்கியத்திலும் பேரிடம் உண்டு.
3. வண்ணம் என்றாலே அழகு குறிப்பது.
4. வண்ணங்கள் வருணனைக் கூறுகளில் வெளிப்படை விளக்கம் உடையனவாக வரும். இதில் மூன்று வகை உண்டு.
    [1] விளக்கத் தெளிவுக்கு வண்ணம் நேராக வருதல்.
    [2] உவமையோடு வருதல்.
    [3] நிகழ்ச்சிபோல வண்ணக் கூட்டம் வருதல்.
5. வண்ணங்கள் சில வகைகளில் குறியீடுகளாக குறிப்பு நயம் உடையதாக வரும்.
6. இசை நூல்கள் நிறப்பாகுபாடு கூறினும், விளக்கம் தெரியவில்லை.

# பின்னிணைப்பு : 1

| கடவுளர் பெயர் | சூடாமணி நிகண்டு | பிங்கல நிகண்டு |
| --- | --- | --- |
| அருகன் | செய்யோன் | —— |
| சிவன் | நீலகண்டன், அந்திவண்ணன் | கறைமிடறறோன், நீலகண்டன் அந்திவண்ணன். |
| பலதேவன் | வெள்ளை, நீலாம்பரன் | நீலாம்பரன், வெள்ளை, கருந்துகிலுடையான். |
| அரி | கொண்டல் வண்ணன், கரியவன் | கொண்டல்வண்ணன், |
| வீரபத்திரன் | செக்கர்வானிறைத்தோன் | கடல்வண்ணன். |
| கந்தன் | செவ்வேள் | செவ்வேள் |
| வைரவன் | செந்தொடைக்குரிய கோமான், கருங்குதிரையாளி. | காரி |
| ஐய(ப்ப)ன் | காரி, கடல்வண்ணன் | காரி |
| தருமதேவதை | மரகதவல்லி | —— |
| திருமகள் | செய்யாள் | செய்யாள் |
| நாமகள் | வெள்ளை மெய்யாள், வெண்சலமுற்றாள் | வெள்ளைநிறத்தினள், வெண்டாமரையாள். |

| கடவுளர் பெயர் | சூடாமணி நிகண்டு | பிங்கல நிகண்டு |
| --- | --- | --- |
| துர்க்கை | நீலி | நீலி |
| சூரியன் | அருணன் | செஞ்சுடர் |
| செவ்வாய் | செந்திவண்ணன் | செந்திவண்ணன் |
| புதன் | பச்சை | அருணன்(?), பச்சை |
| ** சனி | காரி, கரியவன், நீலன் | நீலன், காரி. |
| இராகு | கறுப்பு | தமம், கரும்பாம்பு |
| கேது | கெம்மை | செம்பாம்பு |
| உமை | — | நீலி |
| காடுகாள் | — | காரிநாய் |
| வியாழன் | — | பொன் |

** — சனியை, மந்தன் என்ற பெயரால் இரு நிகண்டுகளும் குறிக்கின்றன. பிங்கல நிகண்டு முதுமகன் முடவன் என்ற பெயர் பற்றியும் தருகின்றது. இக்கால வானியலார் சனிக்கோளை Dead Planet எனக் குறிப்பிடும் வழக்கினை ஒப்பிட்டு நோக்கலாம்.

## பின்னிணைப்பு 2

சூடாமணி நிகண்டு (8ஆவது பண்பு பற்றிய பெயர்த்தொகுதி)

வெண்மையின் பெயர்: குருகு, பால், தவளம், வெள், வால், சுவேதம், பாண்டு, நரை, சுக்கிலம் (20).

சிவப்பின் பெயர் : குருதி, கிஞ்சுகம், இராகம், சேது, பூவல், அருணம், சேய், சோணம், செக்கர், அரத்தம், சேப்பு (20).

பச்சையின் பெயர் : பாசு, பை, அரிதம், சாமம், பசுமை, சாமளம் (21).

பொன்மையின் பெயர் : பிங்கலம்: பசப்பு, பீதகம், பீதம் (21).

** கறுப்பின் பெயர் : இருள், மணி, நீலம், நல்லம், காழகம், காளம், கருள், களமகாரி, கார், மால், கறை, மாயம் (22).

** கறுப்பினைக் குறிக்கின்ற இருள் என்ற சொல் நிரயம் ஆகிய நரகலோகத்தைக் குறிக்குமென்றும் இலக்கிய மரபு நினைவு கூரத்தக்கது. அவ்வாறே பொன்னுலகம் எனச் சுவர்க்கத்தைக் குறிக்கும் இலக்கிய மரபு நினையற்பாலது. இவ்விருவகை வழக்கும் மேலைநாட்டார் இலக்கிய மரபிலும் இடம் பெறுகின்றமையினை Dictionary of Symbols and Imagery. குறிப்பிடுகிறது. நரகத்தின் பெயர் இருள் எனப் பிங்கல நிகண்டு (பெயர்ப் பிரிவு 455) குறித்துள்ளது.

## துணை நூல்கள்

ஆறுமுக நாவலர் (பதி.) சூடாமணி நிகண்டு, சென்னை துந்துபி).

மேற்படி தொல்காப்பியம் சொல்லதிகாரம், சென்னை (1934),

இராசகோபால ஐயங்கார் - அகநானூறு, சென்னை (ஆண்டு தெரியவில்லை).

கம்பர் - கம்பராமாயணம் - கம்பன் கழகம், சென்னை (1976).

சாமிநாத ஐயர்,
டாக்டர் உ.வே.(பதி.) — பதிற்றுப்பத்து (2-ஆம் பதி.) 1920

மேற்படி — பரிபாடல் (முதற் பதிப்பு) சென்னை, (1920) (1918).

சுப்பிரமணிய பாரதியார் — பாரதியார் கவிதைகள்—வானவில் பிரசுரம் (1980).

சைவ சித்தாந்த கழகம் (வெளி.) — திருக்குறள் (சொற்பொருள் அகர வரிசை), சென்னை (1961).

மேற்படி — தொல்காப்பியம்; பொருளதிகாரம், சென்னை, (1961).

மேற்படி — பத்துப்பாட்டு (முதற் பகுதி) சென்னை (1956).

பிங்கல முனிவர் — பிங்கல நிகண்டு – தி. சிவன் பிள்ளை (பதி), சென்னை (1890).

மர்ரே கம்பெனி — நற்றிணை - சென்னை (1980).

Cirloi, J.E. - A Dictionary of Symbols (Tr. Jack Sage) - Philosophical Library, New York (1962).

Vrier, Adde - Dictionary of Symbols and Imagery - North Holland Publishing Company, London (1974).

# 3. தொல்காப்பியம்

ஆ. சிவலிங்கனார்

## நிறம் - பெயர்க்காரணம்

நிறம் என்பது 'நிறு' என்பதன் அடியாகத் தோன்றிய தாகலாம். காண்பார் கண்ணைத் தன்னிடமாக நிறுத்துதலின் வண்ணம் நிறம் எனப்பட்டது. அறுத்தது அறம், மறுத்தது மறம் எனப்பட்டமை ஒப்பு நோக்கத் தக்கதாம்.

மார்பைக் குறிக்க நிறம் என்ற சொல் உண்டு. எதிரியின் படையைத் தன்கண் நிறுத்திக் கொள்ளுதலின், அதாவது படை ஊடுருவிச் செல்லாவாறு தன் வலிமையால் தடைப்படுத்திக் கொள்ளுதலின் மார்பு நிறன் எனப்பட்டது.

குறித்த அளவுக்கு அப்பாற் செல்லக் கூடாது என்பதற் காகவே நிறுத்தல் அளவை தோன்றியதும் இங்கு நினைவு கூரலாம்.

## நிறம் தரும் சொற்கள்

நிறம் என்ற பொருளை யுணர்த்தும் சொற்கள் குரு, கெழு, குணம், கொழுமை, அரி, சாயல், வருணம், பய(ச)ப்பு, கறை, கரு, என்பனவாகப் பிங்கல நிகண்டு கூறும். இவற்றுடன் வரி, புகர், இராகம், மேனி, உரு, வண்ணம், சந்தம், மாமை, செழுமல் பிறங்கல், கேழ், கெழு என்பவற்றையும் சேர்த்து ஆசிரிய நிகண்டு கூறும்.

இவற்றுள் உரு, குரு, கெழு, பண்பு, பசப்பு, வண்ணம் என்னும் ஆறு சொற்களைத் தொல்காப்பியம் ஆண்டுள்ளது.

### 1. உரு

உரு என்பது வடிவம் என்னும் பொருளுடையது; எனினும் கட்புலன் ஆவதோர் நிறத்தையும் குறிக்கும். நிறத்துரு என்பது தொல்காப்பியம் (உரியியல் 75). இதுவே உரிச்சொல்லாகி உட்கு (அச்சம்) என்னும் பொருளிலும் வரும். உரு உட்காகும் (உரி. 4) என்பது காணலாம். நிறம் என்ற பொருளில்,

வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம் (உவமை. 1)

என்னும் நூற்பாவிலும்,

போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியர்ப்ப நளிய நந்தஎன்று
ஒத்துவரு கிளவி உருவின் உவமம் (உவமை. 16)

என்னும் நூற்பாவிலும் வந்துள்ளது.

## 2. குரு

குருவும் கெழுவும் நிறனா கும்மே (உரி. 5)
என ஓரிடத்தில் மட்டும் குரு ஆளப்பட்டுள்ளது.

## 3. கெழு

இச்சொல் மேல்காட்டிய நூற்பாவில் நிறப் பொருளுடைய தாகக் கூறப்பட்டது. கெழுதகைப் பொதுச் சொல் (பொருளியல். 26) என்னுமிடத்தில் 'அன்பு' என்ற பொருளிலும், பயங்கெழு கிளவி (பொருளியல். 5) என்னுமிடங்களில் 'பொருந்திய' என்னும் பொருளிலும் ஆளப்பட்டது. இதுவே "கெடுழீஇய நான்கு" (மெய்ப்பாட்டியல். 4) எனப்பெய ரெச்சமாகவும், "தோழியொடு கெழீஇ" (களவியல். 24) "சொல்லா மரபினவற்றொடு கெழீஇ" (பொருளியல். 2) என வினையெச்சமாகவும் திரித்து ஆளப்பட்டுள்ளது. "உம்மும் கெழுவும் உளப்பட" (குற்றியலுகரப் புணரியல். 76) என்னுமிடத்தில் சாரியையாகக் குறிக்கப்பட்டது.

இச்சொல் நிறத்தைக் குறிக்க வரும்போது கெழுமை எனவும் கேழ் எனவும் திரியும் எனத் தெரிகிறது. கெழுமை என்ற சொல்லாட்சி கிடைக்கப் பெறவில்லை. "செங்கேழ் மென்கோடி" (அகம் 80) எனக் கேழ் வந்தது காணலாம். கெழு என்பதை நிறப்பொருளில் யாண்டும் தொல்காப்பியம் ஆளவில்லை. அதனால், நிறப்பொருளதாகும் கெழு என்பதே உரிச் சொல் என்றும் 'பொருந்திய' என்னும் பொருளில் வரும் கெழு என்பது உரியடியாக வந்த வினைச் சொல் என்றும் கொள்ள வேண்டியுளது.

4. பண்பு

நிறத்தைக் குறிக்கும் பண்பு என்னும் சொல் தொல்காப்பியத்தில் மிகுதியும் காணப்படுகிறது.

''குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி''
(குற்றியலுகரப் புணரியல். 77)

''இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை''
(கிளவியாக்கம் 18)

''பண்புகொள வருதல்'' (வேற்றுமையியல். 51).
''பண்புகொள் பெயர்'' (வேற். மயங்கியல். 31, விளிமரபு 17, 23, பெயரியல். 11, 14)

''பண்புகொள் கிளவி... பண்பினாகிய கிளவி''
(வினையியல். 23)

''பண்பு தொக வரூஉம் கிளவி'' (எச்சவியல். 22)

''பண்பினானும்... குறிப்பொடு தோன்றும்'' (வினை. 16)

''வினையினும் பண்பினும் நிறையத் தோன்றும்''
(விளி. 29)

''உரிச் சொற் கிளவி... பண்பினும் தோன்றி'' (உரி. 1)

இவ்விடங்களிலெல்லாம் பண்பு என்பது நிறத்தையே குறிக்கும்.

5. பசப்பு

''பசப்பு நிறனாகும்'' (உரி. 10) எனவரினும் இச்சொல் ஒரு குறிப்பிட்ட நிறத்துக்கே யுரியதாகும். இது பசலை எனப் படும். 'பசலை பாய்தல்' (மெய்ப்பாட்டியல. 22) என இது ஆளப்பட்டுள்ளது.

6. வண்ணம்

''வண்ணச் சினைச் சொல்'' (கிளவி. 26)

''வண்ணத்தின் வடிவின்'' (எச்ச. 20)

''வண்ணம் வடிவே'' (வேற்றுமை. 17)

''வண்ணம் பசந்து புலம்புறு காலை'' (பொருளியல், 8)

இவ்விடங்களில் வண்ணம் நிறத்தை யுணர்த்துவது காணலாம்.

## தொல்காப்பியத்தில் நிறப்பெயர்கள்

பெயர் குறித்த நிறங்களாகக் கறுப்பு சிவப்புமே தொல் காப்பியத்தில் ஆளப்பட்டுள்ளன. ''கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள'' (உரி. 74) என முன்னர்க் குறித்துப் பின்னர்,

''நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப'' (உரி. 75)

எனக் குறிப்பிட்டது தொல்காப்பியம்.

### கறுப்பு

இச்சொல் 'கறு என்னும் முதனிலையடியாகப் பிறந்தது எனலாம். 'கறு' என்பதற்கு 'வெகுளி கொள்க' என்பது பொருள். 'கறுவு கொள் நெஞ்சம்' (திருமுருகாற்றுப்படை. 100) என்பதில் 'சினம் கொண்ட நெஞ்சம்' எனப் பொருள் உண்மை காணலாம். கறுத்தல் என்னும் சொல் முற்றுதல்—முதிர்தல் என்னும் பொருளுடையது. ''கவ்வை கறுப்ப'' (மதுரைக் காஞ்சி 271) என்பதற்கு 'வெள்ளிளங்காய் முற்ற' என்னும் பொருள் உரைப்பர் நச்சினார்க்கினியர். பொழியும் நிலையில் கருமை கொண்ட மேகம் 'கறுத்தமேகம்' எனப்படும். ''வானம் ........கறுப்ப'' (குறிஞ்சிப்பாட்டு. 227) என்பதில் அப்பொருள் காணலாம். எனவே கறுப்பு என்பது முற்றிய சினம் என்ற பொருளுடையது எனக் கருதலாம். ''நிற்கறுப்பதோர் அருங் கடி முனையள்'' (உரி. 74. சேனாவரையர் மேற்கோள்) என்னு மிடத்தில் அப்பொருள் காணலாம்.

'கருமை' என்னும் சொல் கருமை மிகுதியைக் குறிக்க வரும் போது 'கறுப்பு' என்றாகும் என்னலாம். 'கன்னங்கறேர்' என்ற சொல் வழக்கு அதைப் புலப்படுத்தும். மிக்க வெகுளி யுடையான் முகம் கறுப்பதுண்டு. அதனால் கருமை நிற அடிப் படையில் கறுப்பு என்பது வெகுளியின் முதிர்வைக் குறித்தது போலும். கருமை நிறத்தை 'மை' என்ற சொல்லானும் தொல் காப்பியம் குறிக்கும். 'மைவரையுலகம்' (அகத்திணையியல். 5) என்னுமிடத்தில் அதனைக் காண்க.

### சிவப்பு

கறுப்பு போலவே சிவப்பு என்பது, ''நீ சிவந்திறுத்த நீரழி பாக்கம்'' (பதிற்றுப்பத்து. 13) என்றவிடத்து வெகுளிப் பொருளை உணர்த்தியது.

வெகுளியின் முதிர்வைக் கண் சிவந்து காட்டும்; முகம் குப்பெனச் சிவந்து காட்டும். எனவே சிவப்பு நிறத்தினால் கண்ணும் முகமும் வெகுளியைக் காட்டுதலின் 'சிவப்பு' என்ற சொல்லுக்கே வெகுளி என்ற பொருளாயிற்று.

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள் தருவதை முன்னர்க் கூறிப் பின்னர் நிறப் பொருளைத் தருவதைத் தொல்காப்பியம் கூறியதற்கு அமைதி என்ன? உரிச்சொற்கள் உலக வழக்கில் அருகியும் செய்யுள் வழக்கில் உரிமையொடு பெருகியும் வழங்கி வருவனவாம். அந்நிலையில் கறுப்பும் சிவப்பும் இலக்கியங்களில் வெகுளிப் பொருளிலேயே மிகுதியும் ஆளப்பட்டன. நிறப் பொருளில் கருமை, செம்மை என்னும் சொற்களே யாளப்பட்டன. அதனால் வெகுளிப் பொருளுக்கு முதன்மையும் நிறப் பொருளுக்குப் பின்மையும் தொல்காப்பியம் தந்தது எனலாம்.

## சிவப்பு-செம்மை

சிவப்பு என்பது செம்மை என்னும் சொல்லடியாக வந்தது. செம்மை என்ற சொல்லை ஈறு கெடுத்தும் கெடாஅதும் தொல்காப்பியம் ஆண்டுள்ளது. செம்மை என்பது செந்நிறம் என்ற பொருளில் ''செவ்வாய்க் கிளி'' (மரபியல். 19) என்று ஓரிடத்தில்தான் ஆளப்பட்டுள்ளது.

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான (பொருளியல். 15)

என்னும் நூற்பாவில் மட்டும் செம்மை என்பது ஈறு கெடாஅது ஆளப்பட்டுள்ளது. அது நேர்மை என்னும் பொருளது. 'செங்கோல்' (மரபியல். 72) என்பதும் அப்பொருளது. இனி ஈறு கெடுத்து ஆண்ட இடங்கள் வருமாறு :

செஞ்சொல் (இடையியல். 36) — உம்மையிடைச் சொல் சேராத தனிச் சொல்.

செந்தமிழ் (எச்சவியல். 3, 4.) — தனித்தியங்கும் ஆற்றலமைந்த தனிமொழி.

செந்துறை (புறத்திணையியல். 27) — செந்துறைப் பாட்டு. இயற்கை வகையான் மக்களைப் பாடும் பாட்டு. "செந்துறை யாவது விகார வகையான் அமரர் ஆக்கிச் செய்யும் அறு முறை வாழ்த்தினைப் போலாது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல்" என்பர் நாச்சினார்க் கினியர்.

செந்தூக்கு (செய்யுளியல் 70, 116) — ஆசிரியப்பா. தூக்கு என்பது செய்யுள். ஈரசையியல்பில் சீரும் தளையும் அமைந்த இயல்பில் (செம்மையில்) வருவது ஆசிரியம் ஆதலின் ஆசிரியப் பாட்டு 'செந்தூக்கு' எனப்பட்டது.

வெண்பா தனக்குரிய சீரன்றி ஆசிரியச் சீரும் கலத்த லினாலும், கலிப்பா தனக்கெனச் சீரின்மையானும், வஞ்சிப்பா ஒன்றியதும் ஒன்றாததுமான தளைகள் உடைமையானும் அவை இயல்புக்கு மாறுபட்டன. ஆசிரியச்சீர் இயற்சீர் என்றும் வழங்கப்படுதலும் காண்க.

செந்தொடை (செய்யுளியல். 89, 99) — தொடை விகற் பங்களுள் யாதும் இன்றி அமைவது செந்தொடை.

செம்பொருள் (செய்யுளியல் 123, 124) — மறையாது வெளிப்படையாகக் கூறும் பொருள்.

செம்பால் (செய்யுளியல். 150) — நேர் (சரி) பாதி

இக்காட்டிய யாவும் செம்மை என்பது நிறப்பொருளில் ஆளப்படாமல், நேர்மை, தனி, இயல்பு என்னும் பொருள்களில் ஆளப்பட்டவாறு உணர்த்தும். செம்மை நிறத்துக்கும் இப் பொருள்களுக்கும் என்ன இயைபு என்பது ஆய்வுக்குரியதாகும்.

**சேயோன்**

"சேயோன் மேய மைவரை யுலகம்" (அகத். 5) எனக் குறிஞ்சி நிலத்தெய்வமாக சேயோன் கூறப்பட்டான். சேயோன் என்பதற்குச் செம்மை நிறம் உடையவன் என்பது பொருள். செம்மையன்-செய்யன்-செய்யோன்-சேயோன் என வந்ததாம். முருகனைச் 'செய்யன்' என்னும் திருமுருகாற்றுப் படை (206).

சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மான் (திருமுறை 4 : 113 : 9) எனச் சிவபிரான் போற்றப்படுதலின் சேயோன் என்பது சிவனைக் குறிக்கும் என்பாரும் உளர்[1].

**கபிலை**

''கபிலை கண்ணிய வேள்விநிலை'' (புறத்திணை. 35) என்பதன் மூலம் கபிலை என்பது செந்நிறத்தை யுணர்த்தும் என்று அறிவிக்கிறது தொல்காப்பியம். (கபிலை — செந் நிறப்பசு).

**மா–நீலநிறம்**

தொல்காப்பியத்தில் நீலநிறத்தை யுணர்த்த 'மா' என்ற ஓரெழுத்துமொழி காணப்படுகின்றது. மாயோன் (அகத். 5, புறத். 5) என நீல நிறத்தான் என்ற பொருளில் திருமால் குறிக் கப்படுகின்றான். பூவைப்பூ என்பது நீலநிறமுடையது. அதன் நிறம் திருமாலின் நிறத்தை யொத்தது. பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை யொத்தது எனப்புகழ்தல் 'பூவை நிலை' என்னும் துறையாகும். பூவைநிலை என்னுந்துறை பற்றிக் கூறும்போது, மாயோன் நீலநிறத்தையுடையான் என்னும் பொருள் விளக்கம் தருமாறு,

மாயோன் மேய மன்பெரும் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலை (புறத். 5)

என்றது தொல்காப்பியம்.

''மாயிருந் தூவி மயில்'' (மரபியல். 48) என்பதிலும் மா என்பது நீல நிறத்தை யுணர்த்தும்.

'மா' என்பதற்கு கருநிறம் என்றே பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர் (மதுரைக் காஞ்சி. 334). அதனால் மாயோன் கருநிறமுடையவன் என்றும் கூறுவர்.

மயிலின் நிறம் பச்சை என்பதும் உண்டு. ''பச்சை மயில் வாகனமும்'' (கந்தர் கலிவெண்பா. 114) என்பது குமரகுருபரர்

1. டாக்டர் வை. இரத்தினசபாபதி, தொல்காப்பியர் உணர்த்தும் சேயோன், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு ஆய்வுக் கோவை.

வாக்கு. 'நீலச் சிகண்டி' (கந்தரலங்காரம். 26) என்பது அருண கிரியார் வாக்கு. மயிலை நேர்நின்று பார்க்கும்போது நீலநிறமும் பச்சை நிறமும் கலந்திருப்பதைக் காணலாம். எனவே 'மா' என்பதற்குப் பச்சை நிறம் என்றோ நீலநிறம் என்றோ உறுதிப் படுத்த இயலாது. ஒருகால் பச்சையாகவும் ஒருகால் நீலமாகவும் தோன்றும் ஒருவகை நிறம் என்று கூறுவது சாலப் பொருந்தும். அதற்கேற்ப மாயோன் என்பதற்கு ஒருகால் பச்சைமா மலை போல் மேனி யுடையான் என்றும், ஒருகால் நீலவண்ண மேனி யான் என்றும் இடந்துக் கேற்றவாறும் அவரவர் கருத்துக்கேற்ற வாறும் பொருள் காணலாம். பூவை நிலைக்கு மாயோனைத் தொடர்பு படுத்தியதால் நீலநிறத்தான் என்ற பொருளிலேயே மாயோன் எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டதாகக் கொள் வதில் தவறில்லை.

மா என்பதுவே மாமை எனவரும் என்பது நச்சினார்க் கினியர் கருத்து. அதனால் அவர் 'மாயோன்' (மதுரைக் காஞ்சி. 591) என்பதற்கு மாமை நிறத்தான் எனப் பொருள் கூறினார்.

கருமை நிறத்தைக் குறித்த மாமை, பொதுவின் அழகைக் குறித்தற்கு வந்து, அதிலும் தலைவியின் இளமையுடன் உள்ளத் துணர்ச்சி வயப்பட்ட இன்ப ஊற்றின் காரணமாக வரும் பொலிவும் உடன் இயைந்த அழகுக்குரியதாயிற்று என்றும் கூறுவர்.

## பசப்பு

பசப்பு நிறனாகும் (உரி. 10) எனத் தொல்காப்பியம் கூறி னும் அச்சொல் பொதுவில் நிறத்தைக் குறிக்காமல் 'ஒருவகை நிறன்' என்பதைக் குறிக்கும். அந்நிறத்துக்குப் பெயர் பசலை என்பதாம். அது 'பசலை பாய்தல்' (மெய்ப்பாட்டியல். 22) எனவும் ஆளப்பட்டது. பசலை பாய்தல் என்பது பசலை நிறம் பரவுதல் என்பதாம். தலைவியின் உடம்பில் பசலை நிறம் பரவுதல் என்றால் முன்னர் இருந்த நிறத்தின் வேறுபட்ட நிறம் பரவுதல் என்பது கருத்தாம். ''வண்ணம் பசந்து புலம்புறு காலை'' (பொருளியல். 8) என்றவிடத்து பசந்து என்பதற்குத் திரிந்து அல்லது வேறுபட்டு எனப் பொருள் இருத்தலைக் காண லாம். (வண்ணம் பசந்து என்பதற்குப் பதில் வண்ணம் திரிந்து என்ற பாடம் காணப்படுவதும் இங்கு நினைவு கூரத் தகும்).

இப்பசப்பு பெரும்பாலும் களவொழுக்கத்தில் தலைவியிடமே நிகழ்வது. இதற்கென ஒரு தனி நிறம் இல்லை. தலைவியின் இயற்கை நிறத்தில் காணப்படும் மாற்றமே பசப்பு நிறமாகும். களவொழுக்கத்தில் தலைவன் பிரிவுக்கு ஆற்றாத தலைவி அவன் வரையாது விடுவானோ என்னும் அச்ச மிகுதியும், அலர் அச்சமும் அவள் உடல் வேறுபாடு அல்லது நிற வேறுபாட்டிற்குக் காரணம் எனக் கூறலாம்.

அச்சத்தால் தோன்றும் வருத்தம் பசலை எனவும் கூறப்படும். 'பசலைக் கன்று' (முல்லைப்பாட்டு. 12) என்பதற்கு 'வருத்தத்தை யுடைத்தாகிய கன்று' என நச்சினார்க்கினியர் கூறியதும் காணத்தக்கது.

அச்சத்தை யுணர்த்தும் வேறொரு சொல் 'பயம்' என்பதாம். 'பயந்து அழுதனள் நிற்ப' என்பது பெருங்கதை (வத்தவ காண்டம் 13 : 47). அப்பயத்தால் உண்டாவது உடல் வேறுபாடு. அதனால் பயத்தல் என்பதற்குப் பயப்படுதல் என்பதன் வளர்ச்சியாக வேறுபடுதல் என்ற பொருள் வந்ததாகலாம். "மாமை யொளி பயவாமை" (திவ்வியப்பிரபந்தம். திருவிருத்தம். 50) என்பதில் 'பயவாமை' என்பது 'வேறுபடாமை' என்ற பொருளில் வந்தது காண்க. எனவே பயம் என்பதன் அடியாகப் பயத்தல் பசத்தல் பசலை என வந்திருக்கலாம் என நினைக்கவும் இடம் உண்டு. பச்சை நிறத்துக்கும் பசலைக்கும் தொடர்பில்லாததும் இதற்குச் சான்று. பசலை என்ற ஒருவகைக் கீரையிலும் முழுப்பச்சை நிறம் இல்லை.

எப்படியாயினும் பசலை என்பது இயல்பான நிறத்தின் மாற்று நிறத்தைக் குறிப்பது என்பதில் ஐயமில்லை.

## பொன்

பொன் என்ற சொல் தொல்காப்பியத்தில் நிறங்குறித்து ஆளப்படவில்லை. அச்சொல் செய்யுளில் வருங்கால் பொலம் எனத் திரியும் என்பதற்காகவே ஆளப்பட்டது. (புள்ளிமயங்கியல். 61)

## வெண்மை

வெண்மை நிறம் பற்றியும் தொல்காப்பியம் கூறவில்லை. வெண்மை என்பதன் அடியாக (நிறத்தைக்குறிக்காமல்)வெள்ளை

(செய். 54) என வெண்பாவையும், வெண்பா உரிச்சீர், வெண்டளை, வெள்ளடி என்பனவாக வெண்பாவுக்குரிய உறுப்பு களையும் கூறும். தொல்காப்பியத்தின் மூலம் இப் பெயர்க் காரணங்களை யறிதற்கில்லை.

வெண்மை நிறப் பொருளில் வேற்றுநிறப் பொருளைக் கலந்தால் அவ்வெண்மை நிறம் கெட்டுச் சார்ந்த நிறமாகிவிடும். அதுபோல வெண்பாவில் பிறபாக்களின் தளைகளோ ஓசைகளோ கலந்தால் வெண்பாத் தன்மை குன்றிப்போகும். அவ்வொப்புமை கருதி வெண்பாவுக்கு வெண்மையடை கொடுக்கப்பட்டிருக்க லாம்.

## முடிப்புரை

இதுகாறும் கூறியவற்றிலிருந்து தொல்காப்பியத்தில் நிறங்கள் கறுப்பும் சிவப்புமே (நிறம் என்ற பொருளில்) விதந்து கூறப்பட்டன என்பதும், இன்ன நிறம் என்று உறுதி செய்யப் படாத பசலை என்ற சொல்லும், கருமை நீலம் ஆகிய நிறங் களைக் குறிக்கும் 'மா' என்ற சொல்லும், நிறம் குறியாது பொருளளவில் பொன் என்ற சொல்லும் கூறப்பட்டுள்ளன என்பதும், வெண்ணிறப் பண்பு ஒப்புமை கருதி வெண்பா என்ற பெயர் வந்திருக்கலாம் என்பதும் பெறப்படும்.

# 4. யாப்பு—பாட்டியல்

அன்னிதாமசு

தமிழ் இலக்கியங்கள் மட்டுமன்றி, இலக்கண நூல்கள் சிலவும் நிறம்பற்றிய — நிறத்தோடு தொடர்புடைய—சில கருத்துகளை வழங்குகின்றன. பிற சில இலக்கண வகைப் பகுதிகள் போலவே செய்யுள் இலக்கணமும் நிறக்கோட் பாட்டுத் தொடர்புடை எண்ணங்கள் சில எழுவதற்குக் களனாக அமைகின்றது.

தொல்காப்பியச் செய்யுளியல் தொடங்கி, யாப்பு—பாட் டியல் நூல்கள் சீர், தளை, அடி, தொடை, பாக்களின் பெயரில் நிறச்சொல் இணைவு காட்டுகின்றன. தொல்காப்பியத்தில் வெள்ளை எனும் நிறம் இந் நிலையில் ஆட்சி மிகுதி காட்டுவது வெளிப்படை.

வெண்சீர் — தொல்.III 328. 2, 337.1, 338.2, 366.1

வெண்தளை — தொல் III 369.1

வெண்பா — தொல் III 373.1, 382.1, 387.1, 410.1, 412.2, 413.3, 423.3, 424.1

வெண்பா உரிச்சீர்—தொல் III 327.2, 331.1

வெண்பாட்டு — தொல் III 378.1 423.1(2), 435.1, 456. 2, 460.1, 2, 462.1

வெள்ளடி — தொல்III 368.1, 465.1

வெள்ளை — தொல் III 364.1

கலிவெண்பாட்டு—தொல் III 435.1

இதற்கு அடுத்த நிலையில் செம்மை வருகின்றது.

செந்தூக்கு — தொல் III 377.1, 422.2

செந்தொடை — தொல் III 395.1 405.2

செம்பொருள் — தொல் II 429.21, 430.1

பெயரளவில் பாவும் நிறமும் தொடர்பு காட்டிய இப் பண்டை நிலையின் விரிவினைப் பிற்காலப் பாட்டியல்கள் தருகின்றன. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், யாப்பருங்கல விருத்தியுரை வெண்பாவின் 'வெள்ளை'யை மட்டும் விளக்கிச் செல்கின்றது. இங்கு வண்ணச் சொல் இணைவுப் பெயர், காரணக் குறியாகக் காட்டப்படுகின்றது.

"வேற்று வண்ணம் விரவாது தூய்மை பெற்ற வெள்ளை
வண்ணம் எல்லா வண்ணத்துள்ளும் சிறப்புடைத்து
அவ்வாறே, வேற்றுத் தளையும் அடியும் விரவாது
தூய்மை பெற்று எல்லாப் பாவினுள்ளும் சிறப்புடைத்து
ஆகலின் வெள்ளை என்பது காரணக்குறி." (பக். 218)

தொல்காப்பியத்தை நோக்கச் செந்தூக்கு என்பதால் ஆசிரியப்பாச் சார்பு சுட்டப்பட்டமை ஓரளவு தெளிவாம். ஆயினும் அந்நிற இணைவோடு ஆசிரியத்தை விளக்குதல் பாட்டியற் காலம்வரை அமைந்திலது. யாப்பருங்கல விருத்தி பாவினம் கூறுமிடத்தும், இசை நாடகம் சார்புடைய செந் துறை வெண்துறைப் பாடல்களைப் பற்றி மொழியுமிடத்தும் பெயரிணைவு கொண்டு அமைகின்றது என்பது புலப்படு கின்றது.

வெண் செந்துறை (63) (குறட்பா இனம்)
வெண்டாழிசை (66)
வெண்டுறை (67)
வெளிவிருத்தம் (68)

என இங்கும் வெண்மையின் பயிற்சிவகைப் பெருக்குக் காட்டு கின்றது. யாப்பருங்கலம் 96-ஆம் நூற்பாவின், 'செந்துறை மார்க்கமும் வெண்டுறை மார்க்கமும்' எனும் அடியின் விளக்கம், இரண்டிற்கும் முறையே மூவகை விரி அளித்துப் பெருக்கம் காட்டுகின்றது. (பக். 579—582).

10—12-ஆம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டதாகக் கருதப் படும் பன்னிரு பாட்டியல், முதன்முதல் நாற்பாவும் நிறமும் இணைந்து நினைக்கப்பட்டதைத் தருகின்றது.

அந்தணர் சாதி ஆகிய வெள்ளைக்கு...
வெண்மதி நிறனே வண்ணம். (ப.பா—இ 7)

காவலர் சாதி ஆகிய அகவற்கு...
செந்நிறம் நிறனே. (ப.பா—இ 8)

நெடுநிலைக் கலியே வணிகர் சாதி...
பொன்னிறம் நிறனே. (பா.ப—இ 9)

எஞ்சிய வேளாண் சாதி வஞ்சி...
நீலம் நிறனே. (பா.ப—இ 10)

நூற்பாவில், முதலான இரண்டன் புணர்ச்சியாகிய மருட்பாவுக்கு நிறம் சுட்டப்படவில்லை (சாதி முதலிய பிற ஏற்றி மொழிதல்களும் மருட்பாவுக்கு இல்லை). அவ்வப் பாவிற்குரிய இனங்களும் பாப்பெறும் நிறத்தையே தமக்குரியவையாகக் கொள்கின்றன.ப) பா—இ. 11).

ஆயின் பாட்டியலுக்கு முந்தினதாகக் கருதப்படும் யாப்பருங்கலவிருத்தி, உவமை மூலம் கருமையும் வெண்மையும் அல்லது கருமையும் செம்மையும் கலந்த நிலையை மருட்பாவுக்குக் காட்டுவதாகக் கொள்ள முடிகின்றது.

'கங்கை யமுனைகளது சங்கமம் போலவும் சங்கர நாராயணரது
சட்டகக் கலவியே போலவும் வெண்பாவும் ஆசிரியமுமாய்
விராய்ப் புறநிலை வாழ்த்து முதலாகிய பொருள்கண் மேல் யாப்புற்று
மருட்சி யுடைத்தாகப் பாவி நடத்தலின் மருட்பா என்று
வழங்கப்படும் என்பாரும் உளர்' (பக். 216)

வெண்பாவின் வெண்மையும், ஆசிரியத்தின் செம்மையுமன்றி, கலவையில் சிறிது நிறவேறுபாடு அமைதல், பாவினையும் நிறத்தையும் முழுமையாக இணைத்து நோக்கும் கோட்பாட்டிற்கு முந்திய நிலையினதாக இதனைக் கொள்ளச் செய்கின்றது.

வெண்பாப் பாட்டியல் முதலிய பல பாட்டியல்களும் இப் பா—நிற இணைவைக் கருத்து மாறுபாடின்றித் தருகின்றன.

...நிறம் வான்மையே செய்மை
கருதரிய பொன்மையே கார் (வெ.பா.பொ. 1)

திகழும் வெண்மையும் செம்மையும் பொன்மையும்
கருமையும் ஆகக் கருதும் நானிறமும் (பிர. ம. 24)

வெண்மை செம்மை கருமை பொன்மை
உண்மை நிறம் பா ஒரு நான்கினுக்கே (இ. வி. 879)

வெண்பா முதற்குலம் முல்லை வெண்மை (தொ. வி. 95)

அகவற்கு...குருதி (தொ. வி. 296)

கலிக்கே...பொன்மை (தொ. வி. 297)

வஞ்சிக்கு...அஞ்சனம் ( ,, 298)

நிறம் வால் குருதி பொன் கார் (பிர. தி. 416)

வெண்பா வெண்ணிறம் (மு.வீ.யா. ஒ 51)

அகவல் செந்நிறம் ( ,, ,, 52)

கலி பொன் நிறம் ( ,, ,, 53)

வஞ்சி நிறம் கறுப்பு ( ,, ,, 54)

சாதி முதலிய பலவனவற்றைக் கூறும் போது நிறமும் கூறப்படுவதால் இதன் வைப்பு முறை பல நூல்களில் பல்வேறு இடங்களில் அமைகின்றது. முத்துவீரியம் மட்டும் நிறுத்திற்கு முதலிடம் அளித்துவிட்டுப் பின்பே குலம்பற்றிக் கூறித் தொடர்கின்றது. இலக்கண விளக்கமும், தொன்னூல் விளக்கமும், பிரபந்த மரபியலும் மூன்றாமிடம் அளிக்கின்றன (சாதி, நிலம், நிறம்). வெண்பாப் பாட்டியல் ஓரளவு பின் இடத்தையே நிறத்திற்கு அளித்த போதும், வேறு பிற ஏற்றுதல்களுக்கு நிறமே அடிப்படையாக அமைதலைத் தருகின்றது.

பூ விரையோடு ஆடை
பகர் நிறத்தால் கொள்க அணி பாட்டு (வெ பா—பொ—3)

பிரபந்தத் திரட்டிலும் இக் கருத்து அமைதல் இயைபு பற்றி இங்கே சுட்டத்தக்கது.

அணி விரை பூ ஆடை நிறத்தால் பகர்வாரன்றே (பிர.தி 417).

மேற்கண்ட நூல்களின் கருத்துக்களை நோக்க, அடிப்படையாகக் குறிக்கப்படும் நிறங்கள் நான்கு என்பதும்; அவற்றுள் வெண்மை வால் எனவும் குறிக்கப்படலும், செம்மை

குருதி எனவும் கூறப்படலும், பொன்மை பிறசொற்களால் குறிக்கப்படாமையும், கருமை, கார், அஞ்சனம், கறுப்பு நீலம் எனச் சுட்டப்பட்டமையும் புலப்படுகின்றது.

இவ்வாறு நூற்பாவுக்கும் நிறம் கூறுவதற்கு ஏதேனும் அடிப்படை இருந்திருக்க வேண்டும். பாவுக்குச் சாதிப் பண்பு ஏற்றி மொழிதலின் அடிப்படை புலப்பட்டால்தான் நிற இணைவுக் காரணம் வெளிப்படும் போலும். ஏனெனில், மக்களின் நால்வகைப் பகுப்புக்கு ஏற்ப நூற்பாவும் இணைக்கப் படலால், அவற்றோடு வெளிப்படை நிலையிலோ அன்றிக் குறியீட்டு நிலையிலோ தொடர்புறும் நிறங்களே அவ்வப் பாவுக்கு அளிக்கப்படுகின்றன. சிலம்பு, நால் வருணப்பூதருக்குக் கூறுவன (22. 16—108) இங்கமையும் நிற ஒப்புமை காட்டு கின்றன.

வெண்பா — அந்தணன் — வெண்மை
ஆசிரியம் — அரசர் — செம்மை
கலிப்பா — வணிகன் — பொன்மை
வஞ்சிப்பா — வேளாண்—நீலம்

வெண்பா, செந்தூக்கு என்பதிலுள்ள நிறச்சொல் இணைவுபற்றி அனைத்துப் பாவுக்குப் போலச் செய்தல் அடிப்படையில் நிறம் ஏற்றினர் எனக் கூறுதல் முழு உண்மையாகாது.

வெண்பாவுக்குத் தூய்மை காரணமாக நிறச்சொல் இணைவு வந்தது என்பர் விருத்தி ஆசிரியர். அந்தணரின் உடல் வெண்மையும் ஒருவேளை உகந்ததாகக் கருதப்படலாம். பன்னிரு பாட்டியல், நிறம் கூறும்போது, ‘வெண்மதி நிறனே வண்ணம்’ என்பதால், அறிவு, அதனைக் குறியீடாக்கும் வெண்ணிற ஒளிப்பிழப்பு என்பன கடினமான இப்பாவுக்கு இணைவாகத் தரப்பட்டதாகக் கருதலாம். மூளையின் வெண்மை நிறமே அறிவு (அறிவின்மை) க்குக் குறியீடாய், அறிவுச் செவ்வியுடன் உருவாக்கப்படும் இப்பாவுக்கு இப்பெயரை - வண்ணத்தைத் - தந்தது போலும்.

வீரத்திற்குக் குறியீடாக அமையும் குருதி வண்ணம் அரசர் பாவுக்கு ஆகிவந்ததும் இணைவு காட்டுகின்றது. பகை கண்டு சினக்கும் அரசனின் ‘செங்கண்’ அதன் காரணமாக ஏற்படும் செங்களம், பின்பு நின்று நிலவும் செங்கோல் - என்பன

தொடர்பு பற்றி இங்கு நினைக்கப்படலாம். உடல் வன்மையின் அடிப்படை, குருதிச் செந்நிறத்தை இங்கு இணைக்கின்றது. அறம் அறிவு சார்ந்து வெண்பாவில் பாடப்படலும், அகம் - புறம் உணர்வு சார்ந்து குருதி நிறமுடை அகவலில் பாடப்படலும், எனப் பகுத்தும் நோக்க இடமிருக்கலாம்.

எவ்வித நிறக் கலவைக்கும் இடனளிக்காது, தனித்துத் தூய தாய் நிற்கும் வெண்மைக்கு எதிர்நிலை காட்டுகின்றது செம்மை. அகவற்பா, நாற்பாவிற்கும் உரிய அடியும் சீரும் கலக்க இடன் அளிக்கின்றது. இச் செந்நிறம் போன்று, அடிமயங்கு ஆசிரியம் வெண்பா — வஞ்சி — கலியடிகள் கலக்கப்பெற்று அமைவது இங்குக் கருதத்தக்கது. நாற்பா எனக்கூறினும், அடிப்படையில் வெள்ளையும் அகவலும் என, பா இரண்டாதலின், நிறமற்ற நிலை - அல்லது உலகில் மிக்கு அமைந்த ஒளி நிறம் வெண்பாவிற்கும், அதற்கு வேறான ஆயின் இன்றியமையா பூதநிறம் நெருப்பின் நிறம் ஆசிரியத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கலாம். இது ஒரு கருதுகோள் மட்டுமே. பிற்கால ஆய்வில், இதனை நிறுவ வாய்ப்பு ஏற்படலாம்.

வணிகச் சாதி எனக் குறிக்கப்படும் கலிப்பாவுக்குப் பொன்மை நிறமாகக் குறிக்கப்படுகிறது. மஞ்சள் குறிக்கப்படாது பொன் குறிக்கப்படல், பண்டமாற்றுக்காலம் முடிந்து பொற்காசுகளை விலைப்பொருளுக்குக் கொடுக்கும் காலச் சார்பும் கொள்வதாகத் தெரிகின்றது. ஒலிக்குறிப்புச் சொற்கள் பற்றிப் பேசுமிடத்துக் கலைச் சொல்லகராதி ஒன்று, 'மஞ்சள் என்பதனைவிடப் பொன்மை என்பதன் பயிற்சி இலக்கியத்தில் மிக்கு அமைவதற்கு அதன் ஒலியினிமையும் காரணம்' என இயைபு பற்றி இங்கு நினைக்கத்தக்கது.[1] கலி என்ற சொல்லுக்குப் பொன் என்ற பொருண்மை இருப்பதாகத் தெரியவில்லை. இத்தகு பொருண்மை வழக்குக் கிடைப்பின் அவ் இயைபுபற்றி இப்பாவுக்கு இந்நிறம் சுட்டப்பட்டதாகக் கருதலாம். ஆயின் கலிபணம் என்பது 1/10 பொன் எனப் பேரகராதியில் குறிக்கப் படலும் 2. பக் 783), கலியாணம் என்ற சொல்லுக்குப் பொன் எனும் பொருள் தரப்படலும் (தமிழ்மொழி அகராதி-ந. கதிரை

1. The frequency of the word 'golden' as opposed to "yellow" e.g., may have auditory as well as monetary cause - (Onomatopoeia) Dictionary of World Literary Terms, Joseph Shiply, George Allen & Unwinn, 1970, p. 225 .

வேற் பிள்ளை (1922) பாகம் 1. பக். 401) இயைபு பற்றி இங்கு நினைக்கத்தக்கது. கலிப்பாவின் ஓசையையும் பொன்காசுகளின் ஓசையையும் ஒருவேளை இணைத்து நினைக்கலாமோ எனவும் கருதவேண்டியுள்ளது.

வஞ்சிப்பாவுக்குக் கருமை நிறமாகப் பிற்கால நூல்களில் சுட்டப்பட்டபோதும், பன்னிரு பாட்டியல் நீலம் எனக் கூறுதல் கருதத்தக்கது. முன் இலக்கியங்கள் பலவற்றில் நீலமும் கருமையும் ஒன்றனிடத்திற் பிறிது ஆளப்பட்டமையும் சொல் மயக்கமும் நிற மயக்கமும் கொள்வதும் இங்கு மீண்டும் நினைக்கத் தக்கது. கருமையும் நீலமும் மட்டுமின்றிப் பசுமையும் இவ்வாறு மயக்கம் காட்டுவது உண்டு.

மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ

(கம்ப. 1926)

எனவே, கருமை என்பதில் நீலமும் பசுமையும் அடங்கியதாகக் கருதலாம். வஞ்சிக்கொடியின் பசுமை, பசுமை நிறைந்த வஞ்சி நாடு, நீல நிறமுடைய மீன்வகை வஞ்சிரம் எனக் குறிக்கப் படல் (பேரகராதி VI. பக். 3466), காரிப்புள் வஞ்சுளம் எனவும் வஞ்சுளன் எனவும் குறிக்கப்படல் (மேற்படி. மஞ்சுள) என்பன, சொல்லும்—நிறமும் இணையும் வாய்ப்பைப் புலப்படுத்து கின்றன.

வெண்பாவும் கலிப்பாவும் தம்முள் தொடர்புடையன. வெண்பாவின் சீர்நிலை கலிப்பாவில் அமையினும் நிரை யொன்றித் தளை வேறுபாடு அமைகின்றது. தூயவெண் மையும், உயர்புடைப் பொன்னுமாக இவை காட்டப்படலின் இணைவு கருதத்தக்கது. இரண்டிலும் தூய்மையும், உயர்வும், ஒளியும் இணைதலும் சேர்ந்து நினைக்கத் தக்கது. வெண்மையின் நிறமின்மையும் செம்மை மஞ்சள் நீலம் என்பன அடிப்படை நிறம் எனலும் இணைத்து நாற்பாவுக்கும் ஆக்கப் பட்டனவோ எனவும் எண்ணலாம். உணர்வுகளின் தூய்மையும், அடிப்படையான உணர்வுகளும் நிறத் தொடர்புடன் குறியீட்டு நிலையில் தரப்படல் இங்குச் சுட்டத்தக்கது.[2]

---

2. It must also be borne in mind that the purity of a colour will always have its counterpart in the purity of its Symbolic meaning. Similarly the primary colours will correspond to the primary emotions, A Dictionary of Symbols, J. E. Cirlot, Philosophical Library, New York, 1962, p. 52.

நாற்பாவும் நிறமும் இணையும் இந்நிலை ஒருபாலாக, செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாக அமையும் வண்ணம், என்பதும் நிறத் தொடர்பு காட்டுவதாக எண்ணத்தக்கது. தொல்காப்பியச் செய்யுளியல் முதலே வண்ணம் பற்றிய எண்ணம் அமைகின்றது. பிற்காலத்தில் இது விரிந்து ஓசைச் செவ்வியுடைய வண்ணச் செய்யுளையும் (சந்தம்) தோற்றுவித்து விரிவு காட்டுகின்றது.

இவ்வண்ணம், ஒலியபடிப்படையினதாகவே முழுமையாக அமைந்தபோதும், அவ்வாறே பல ஆய்வாளராலும் கொள்ளப் பட்டு விளக்கப்பட்ட போதும், நிறச்சார்பும் கருத வாய்ப்பிருப்ப தாகத் தோன்றுகின்றது. வண்ணம் என்ற சொல்லுக்கு முதற் பொருளாக நிறம் என்பதைப் பேரகராதி குறிப்பது இங்கு நினைக்கத் தக்கது (பக் 3843). வர்ண என்ற வடசொல் (வருணம்) பிராகிருதம் வழி வண்ண என ஆகித் தமிழில் வந்தது என்பது ஏற்புடையதாயின், இவ் அடிப்படைப் பொருண்நிலை மறுப்புக்கு அப்பாற்பட்டது ஆகும்.

Varṇ - to paint, colour, dye

Varṇa - ... colour, colour of the face, good colour or complexion ;
colour, tint, dye, pigment ;
race, species, kind...[3]

Vaṇṇa - (Vedic varṇa) 1, colour...[4]

வண்ணம் எனும்–நிறமும், வண்ணம் எனும் ஒலியும் தொடர் புறுமாறு எங்ஙனம் என்பது ஆய்வுக்கு உரியது. ஒளி அலைகளும், ஒலி அலைகளும் பற்றிய எண்ணம் இவ் ஆய்வுக்கு உதவுகின்றது. மொழி ஒலிகளால் ஆகியது, அவ்வொலி நிலை பல்வகையாகப் பெருகிப் பல எழுத்துகளாக அமைகின்றது. இவ்வொலி நிலை, செவிப்புலனுக்கே அறியும் அடிப்படையினதாக அமையினும், அதனையும் ஒளியலையாக்கிக் கட்புலன்பாற் படுத்துவது இயலும் என்பதைக் காட்டும் வண்ணம், மொழியியலார் சில கருவிகளைக்

3. A Sanskrit English Dictionary—Monier Williams. Oxford. 1974, p. 924.

4. Pali English Dictionary—Rhys Davis & Stede, Orient Books Reprint Corporation, New Delhi, 1975. p. 596,

கண்டுள்ளனர். ஒலியை ஆயும் முறைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப் படும்[5] வண்ணப்பட்டைப் பதிவு நிழற்படக் கருவி (Spectrograph) முறை, இங்குக் கருதப்படுகின்றது. ஒலி அலைகளை வரைபடமாக்கிக் காட்டுவதோடு மென்மை-ஆழ்ந்த நிற நிலைகளும் இதில் காட்டப்படுவதாக உணர முடிகின்றது.[6] இந்த மெல்-ஆழ் நிலை வண்மை—கருமை என அமையுமா அன்றிப் பல நிலங்களும் காண அமையுமா என்பது அக் கருவியை நேரடியாகப் பாராததால் இன்னும் தெளிவு குன்றியே அமைகின்றது.

ஒலியையும் நிறத்தையும் தொடர்பு படுத்தும் இம் மொழியியலார் கருத்து ஒருபாலாக, திறனாய்வு நிலையிலும் இவற்றை இணைத்துக் காண்டல் அமைந்ததாகத் தெரிகின்றது.[7] சொற்களின் ஒலி நிலையும், அது குறிக்கும் பொருண்மையும் இணைந்து வரும் அடிப்படையில் இது கருதப்படுகின்றது எனலாம்[8]. ஒலி நிலை வண்ண நிழற்படத்தையும் இதனோடு இணைத்துக்

---

5. Vol 23 - Encyclopaedia Britannica: Voice, Methods of investigation p. 100.

6. Sound Spectograph-A Common type of sound spectograph affords a three dimensional display in which the passage of time is represented on the horizontal axis, the frequency range covered by the analysis of the vertical axis, and variation in energy one shown by gradations from light to dark in the pattern: a dark trace indicates high energy in the filter covering the corresponding section of the frequency range-Ibid.

7. tone, tone—color. Dictionary of World Literary Terms, p. 335.

8. It (tone) is said to prevade and "color" the whole like a mood in a human being, and in various ways to contribute to the aesthetic excellence of the work—Princeton Encyclopedia of Poetry and Poetics—Alex Preminger, Macmillan, 1974, p. 856.

காண்கின்றனர்[9]. இதன் அடிப்படையில் தொல்காப்பியரின் வண்ணக் கோட்பாட்டை ஆய்ந்தால், இரண்டிற்கும் தொடர்பு வெளிப்படல் தெளிவு. வண்ணங்கள் இருபது எனும் தொல் காப்பிய எண்ணம், பின்பு பல்வகை ஒலிக்கலவையால் (நிறம்) நூறு வண்ணம் ஆதலும் இங்குச் சுட்டத்தக்கது. ஒவ்வொரு வகை எழுத்துப் பயிற்சியால் ஆன வண்ணங்கள் பெரும்பாலும் அவ்வவ் எழுத்து நிலையால் பெயர் பெறலும், ஈரெழுத்துக் கலவையால் ஆகும் ஒலிநிலை, சித்திர வண்ணம் எனப்படலும் இங்குச் சிந்திக்கத் தக்கது.

சித்திர வண்ணம்
நெடியவும் குறியவும் நேர்ந்து உடன் வரூஉம் (தொல் செய்.222)

சித்திரம்—ஓவியம்—புனையா ஓவியமாக அன்றி அமையும் போது ஒன்றுக்கு மேற்பட்ட நிறக் கலவை காட்டலால், அத்தகு வண்ண ஒலியும் சித்திரம் எனப்பட்டதோ என எண்ணலாம்.

(மற்றொன்று விரித்தலாக அமையினும் 'வருணனை' என்பதனையும் இங்கு நினைக்கலாம். விரிவாகக் கூறுதல் அல்லது விவரித்தல் என்பதனை (description) வருணனை எனக் குறிப்பிடினும், நிற அழகுபட விவரித்தலையே வருணனை எனக் குறித்தனரோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. வர்ணன (னா) என்ற வடசொற்கு, நிறம் தீட்டுதல், நிறம் செய்தல் என்பன அடிப்படைப் பொருண்மையாகவும், அதற்கு மேல், விவரித்தல், விளக்குதல் என்பன பொருண்மையாகவும் தரப்படல்[10] இவ் எண்ணத்தை வலியுறுத்துகின்றது)

---

9. Tone – color. Characteristic auditory quality of a speech sound or musical instrument. The Key to Poetic tone-color is phonology. The reader who has for instance, digested sound spectrograms in their linguistic significance, has a far clear understanding of the bases of timbre—Ibid

10. A Sanskrit English Dictionary p.925:
Varnana (nā) — the act of painting, colouring, delineation, description, explanation.

ஒலியும் வண்ணமும், தொடர்புறும் இந்நிலையைப் பாவொலியும் (செப்பல், அகவல், துள்ளல், தூங்கல்) அதன் நிறமும் தொடர்புறும் பாங்குடனும் இணைத்துக் கருதலாம் எனத் தோன்றுகின்றது. இவ் அடிப்படை எண்ணம் கருதுகோள் நிலையிலிருந்து நிறுவப்படும் நிலைக்கு வரின் இதில் தனிக்கோட்பாடு புலப்படும்.

பயன்பெற்ற பிற நூல்கள்

1. இலக்கணத் தொகை யாப்பு — பாட்டியல் டாக்டர், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.

2. பழந்தமிழ் நூற் சொல்லடைவு — French Institute of Indology, Pondicherry,1967.

# 5. சங்க இலக்கியம்

இரா. தமிழரசி

இலக்கியச் சுவைக்கும், பண்பு விளக்கத்திற்கும், பொருள் வெளிப்பாட்டிற்கும் இலக்கியத்தில் நிறங்கள் கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்தில் நிறங்கள் பற்றிய ஆட்சியைக் கண்டறிதல் இக்கட்டுரையின் நோக்கம்.

நிறத்தைக் குறிப்பதாக, 'நிறம்' என்ற சொல்லோடு 'வண்ணம்', 'உரு', 'கெழு' எனும் சொற்கள் சங்க இலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளன.

'நிறம்' என்ற சொல் வண்ணம் எனும் பொருளோடு 'மார்பு' என்ற பொருளிலும் பல இடங்களில் கையாளப்பட்டுள்ளது. 'நிறம்' என்பதற்கு 'உயிர்நிலை' எனவும் பொருள் கூறுவர்[1]. வீரர் பற்றிய செய்திகளில் மட்டும் மார்பைக் குறிக்க இச்சொல் கையாளப்பட்டுள்ளது. பகைவரின் இலக்கு வீரர்களின் மார்பே யாதலாலும், அம்மார்பு செந்நிற இரத்தத்தையுடைய இதயத்தின் இருப்பிடமாதலாலும் இப்பெயர் பெற்றது எனலாம். 'நிறப்படை'[2] என்ற ஒன்றும் புறநானூற்றில் குறிக்கப் பட்டுள்ளது. இதற்குக் குத்துக்கோல் எனப் பொருள் கூறப் பட்டுள்ளது. மார்பை நோக்கிக் குத்துவதால் இப்பெயர் பெற்றிருக்கக் கூடும்.

வண்ணம் எனும் சொல் நிறம் என்ற பொதுப்பொருளோடு இயல்பு[3] தன்மை[4] என்ற பொருளிலும் கையாளப்பட்டுள்ளது. இச்சொல் தனிப்பட்ட நிறத்தைக் குறித்ததாகவும் உரையாசிரியர் கருதுவர்.

---

1. பதிற்றுப்பத்து, இரண்டாம்பத்து — 11 ஆம் பாடல் உ. வே. சா. உரை.
2. புறம் 293.
3. பதிற்றுப்பத்து 7; 2—8.
4. குறிஞ்சிப்பாட்டு 33.

'வண்ணநீர் கரந்த வட்டுவிட்டெறிவோரும்'[5]

'பூவெழில் வண்ணநீர் பூரித்த வட்டெறிய'[6]

எனும் தொடர்களில் 'வண்ணம்' என்பதற்கு 'அரக்கு' எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. நீர் விளையாட்டிற்கு அரக்கு நிறம் மிகுதியாகப் பயன்படுதலால் இவ்வாறு கருதினர் போலும்.

உரு, கெழு எனும் சொற்கள் சிற்சில இடங்களில் பயின்று நிறத்தை உணர்த்தின. 'உருவப் பல்பூத்தூஉய்'[7] எனும் திருமுருகாற்றுப்படைத் தொடரில் 'உரு' எனும் சொல்லுக்கு, முருகனைப்பற்றிய இயைபு கருதி 'சிவந்த நிறம்' எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. இங்கு, 'பல நிறப் பூக்கள்' என்று பொருள் கொள்ளவும் இடமுண்டு- 'உருகெழு தோற்றம் உரைக்குங்கால்'[8] எனும் பரிபாடல் தொடரும் பல வண்ணக் காட்சி என்ற பொருளில் வருவதைக் காணலாம்.

ஒளிபொருந்திய எனப்பொருள்படும் 'வாணுதல்' என்பன போன்ற சொற்களும் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன. இவை கண்ணுக்குத் தெரியும் நிறத்தைக் குறிக்காது உள்ள நிலைக் கேற்ப முகத்தில் தோன்றும் மாறுபாட்டைக் குறித்து நின்றது.

வெண்மை, செம்மை, பசுமை, கருமை, நீலம், மஞ்சள் எனும் நிறங்கள் சங்க இலக்கியத்துள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் வெண்மை, செம்மை, கருமை, பசுமை என்பன மிகுந்த அளவில் குறிக்கப்பட்டுள்ளன.

பல வண்ணங்களின் தொகுதியாய் அமைந்த வெண்மை, அந் நிறமுடைய பொருள்கள் அனைத்திலும் ஒரே தன்மையதாகக் காணப்படுவதில்லை. பொருள்களுக்கேற்ப மாறுபட்ட நிறப் படிவங்களாயுள்ளன. இவ்வேறுபாட்டைக் குறிக்கும் வகையில் 'வால', 'வான', 'நரை', 'விளர்' என்ற பெயர்கள் இந்நிறத்தைக் குறிக்க சங்க இலக்கியத்தில் வழங்கப்பட்டுள்ளன. பொதுவாக வெண்மை நிறமுடையனவற்றைக் குறிக்க 'வெண்மை' எனும் சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது. 'வெண்', 'வெள்' என்ற இரு

5. பரிபாடல் 12—55.
6. பரிபாடல் 12—68.
7. திருமுருகு 241.
8. பரிபாடல் 11—59.

வடிவங்களில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. 'வெண்மை' என்பதன் வினைவடிவமாக 'வெளிய'[9] எனும் சொல்லாட்சி அமைந்துள்ளது. 'முகம் வெளிறியது' எனக் கூறும் வழக்கும் இங்குக் கருதத்தக்கது. ஒளி பொருந்திய பொருள்களையும், மிகுந்த வெண்மையுடையவற்றையும் குறிப்பதற்கு 'வால்' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'வான்' என்பது அதன் மாற்று வடிவமாக ஆளப்பட்டுள்ளது. 'வால்' என்பது பெயராக மட்டுமின்றி 'வாலிய'[10] எனும் வினைவடிவமாகவும் அமைந்துள்ளது. பலராமனை 'வாலியோன்' என குறிப்பதும் இந்நிற அடிப்படையில் அமைந்த காரணப் பெயராகும். வெண்மையை 'வால்' எனக் குறிப்பது போல் வெண்மையற்ற தன்மையை 'வாலரை' எனும் சொல் குறித்தது.

'நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ[11] எனும் தொடரில், 'வாலரை என்பது வெண்மையின்மையைக் குறித்தது' எனப் பொருள் கூறுவர்.

ஒளியுடைமையைக் குறிக்கப் பயன்படும் 'வாள்' எனும் சொல்லும் வெண்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லின் பயன்பாட்டை நோக்கும் பொழுது எதிரொளிக்கும் தன்மையதான வெண்மையுடைய பொருள்களைக் குறிப்பதாய் இச்சொல் விளங்குகிறது. முதுமையினால் ஏற்படும் வெண்மையையும், அந்நிறமுடைய பிறவற்றையும் குறிக்க 'நரை' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் முதலில் முதிர்வு காரணமாக ஏற்படும் வெண்மைத் தன்மையைக் குறிக்க வந்து பின் அத்தன்மையுடைய வெண்ணிறப் பொருள்களையும் சுட்ட வழங்கியது எனலாம். 'நாரை' என்பதும் இச்சொல்லின் அடியாக எழுந்த பெயராகக் கொள்ளலாம். வெண்மை முடி நிறைந்த குரங்கினத்தைக் குறிக்க, 'நரை முக ஊகம்'[12] எனக் கூறியிருப்பதும் இங்குக் குறிக்கத்தக்கது. இச்சொல் பின்னர் இவ்வெண்மைத் தன்மையை ஏற்படுத்தக்கூடிய முதுமையைக் குறித்தற்கும் வழங்கியது எனலாம். வெண்மையுடன் பிற நிறங்கள் சிறிதளவு கலந்த நிறம் 'விளர்' எனப்பட்டது.

---

9. நற் 345.
10. ஐங்-437
11. பதி-பத்-2-2
12. குறுந்-249

'விளரூன் நின்ற வெம்புலான் மெய்யர்'[13]

எனும் தொடரில் செம்மை கலந்த வெண்மையைக் குறிக்க இச் சொல் பயன்படுத்தப்பட்டது.

'பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்

வளையில் வறுங்கை யோச்சி'[14]

எனும் தொடரில் பசுமை கலந்த வெண்மையைக் குறிக்க இச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வழக்கிலும், 'வெளிர் நீலம்' என வழங்கப்படும் ஆட்சி இங்குக் குறிக்கத்தக்கது. 'விளங்காய்' என்பதும் இவ் 'விளர்' என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியதாய் இருத்தல் கூடும். இதன் நிறமும் பசுமை கலந்த வெண்மையாய் இருத்தல் குறிக்கத்தக்கது. இவ்வாறு சிறுசிறு வேறுபாடுகளையும் உணர்த்தும் வகையில் பலபெயர்கள் இட்டு வழங்கியிருப்பது நிறத்திலும், அந்நிறப் பண்பிலும் கொண்ட ஈடுபாட்டை உணர்த்துகிறது.

செம்மை நிறத்தை உணர்த்த சிவப்பு, துவர், செக்கர், சிவலை, கபிலை, அரக்கு எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'செ' என்பது 'செம்மை' எனும் சொல்லின் வேர்ச்சொல். செம், செவ், செய்ய என்பன இதன் மாற்று வடிவங்கள். இவ்வடிவங்களே சங்க இலக்கியத்தில் மிகுதியும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'செ' எனும் வேர்ச் சொல் 'சே' என நீண்டு சிவந்த நிறத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'சேயுற்ற கார்நீர் வரவு'[15]

'சேயிலை வெள்வேல் விடலையொடு'[16]

எனும் தொடர்களில் 'சே' என்பது சிவந்த நிறத்தைக் குறிக்க வந்தது. 'சேவடி' எனும் சொல்லும் இவ்வடியில் பிறந்ததாகும். இவ்வாறே

'வளையுபு மலிந்த கோடணி சேயும்'[17]

---

13. புறம் 359
14. புறம் 253
15. பரிபாடல் 11—114
16. குறுந் 15
17. கலித் 103

என்பதில் 'சே' என்பது சிவந்த நிறமுள்ள பசுவைக் குறித்தற்குரிய ஆகுபெயராய் நின்றது. சிவந்த நிறமுடைய பசுவை 'சேதா'[18] என வழங்கும் தன்மையையும் சங்க இலக்கியத்தில் காணலாம். பிறந்த குழந்தைகளைச் 'சேய்' என வழங்குவதும் இந்நிற அடிப்படையில் எழுந்த பெயராகக் கருத இடமுண்டு. இவ்வாறே 'சேவல்' என்பதும் பறவைகளில் சிவந்த கொண்டையை உடைய ஆண்பறவையைக் குறிக்க வழங்கிப் பின் பொதுவகையில் பறவைகளின் ஆணினத்தைக் குறிக்க வழங்கியது எனலாம். அடைச் சொல்லாக மட்டுமின்றி 'சேப்ப'[19] எனும் வினைவடிவமாகவும் அமைந்திருந்தலைச் சங்க இலக்கியத்தில் காணலாம். 'சிவல்' எனும் சொல்லும் சிவந்த நிறத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'நெற்றிச் சிவலை நிறையழித்தான் நீண்மார்பிற்'[20]

என்பதில் சிவலை என்பது நெற்றியில் சிவந்த நிறத்தையுடைய பசுவைக் குறிக்க வந்தது. 'செ' என்பதன் அடியாகப் பிறந்த 'செவல்' எனும் சொல் 'செவலை' எனவந்து 'சிவலை' எனத் திரிந்தது. 'சேவேலென' எனக் கூறப்படும் வழக்கும் இங்கும் குறிக்கத்தக்கது.

இவ்வாறே 'செய்ய' என்பதன் அடியாகப் பிறந்த 'செய்யன்' 'செய்யோள்' என்பன சிவந்த நிறமுடையோரைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளன. 'சிவப்பு' எனும் சொல் பெயரெச்ச, வினையெச்ச வடிவங்களில் ஆங்காங்கே பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆடையின் செம்மையையும் வாயின் செம்மையையும் உணர்த்தத் 'துவர்' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, செம்மண் நிறத்தை இது உணர்த்துகிறது. இந்நிறப்பண்பு காரணமாக துவர் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த பெயராகத் 'துவரை' எனும் சொல் விளங்குகிறது எனலாம்.

அந்திவானத்தின் சிவந்த நிறத்தைக் குறிக்கச் 'செக்கர்' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிவப்பு என்பது 'சேத்த', 'சேக்க' என வந்து 'செக்கர்' எனத் திரிந்தது. 'செக்கச் செவேலென' என வழங்கும் வழக்கும் இதனை உணர்த்தும்,

---

18. நற் 359
19. குறுந் 234
20. கலித் 104

செம்மை நிறத்தைக் குறிக்க, 'காவி' எனும் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. செங்குவளை மலரைக் குறித்தற்குரிய ஆகுபெயராகவும் இச்சொல் வழங்கப்பட்டுள்ளது. 'கபில நிறம்' என்ற ஒன்றும் செம்மை குறித்து வழங்கப்படுகிறது. வெண்சுதையில் புகைபடிவதலால் உண்டாகும் நிறத்தை இது உணர்த்துகிறது.

'அகிலார் நறும்புகை யைதுசென் றடங்கிய
கபில நெடுநகர்க் கமழு நாற்றமொடு'[21]

எனும் புறப்பாடலால் இதனை அறியலாம். இவ்வாறே கருஞ்சிவப்பு நிறத்தைக் குறிக்க 'அரக்கு' எனும் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிலத்தைச் செந்நிறமாகக் கூறுவது முல்லை நில வருணனையில் மிகுதியாகக் காணப்படுகிறது. புவியமைப்பை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு கூறப்பட்டது எனலாம்.

பசுமை நிறத்தைக் குறிக்க 'பச்சை' என்ற சொல் வழக்கில் இருப்பினும் சங்க இலக்கியத்தில் எவ்விடத்திலும் இந்நிறத்தைக் குறிக்க இச்சொல் வழங்கப்படவில்லை. பச, பசுமை, பை, பைது, பைம்மை, பாசி எனும் வடிவங்களே வழங்கப்பட்டுள்ளன. பசுங்காய், பசுங்கிளி, பாசடை, பைங்காய், பைந்தாது, பச்சூன் என இவை அடைச்சொற்களாய் அமைந்தன. இவ்வாறே பசிய கற்பாறையைக் குறிக்க 'பாசறை' எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது.

'வேங்கைக் கண்ணியர் எடுத்தெறி களமர்
நிலங்கண்டு அன்ன அகன்கண் பாசறை'[22]
'பழன யாமைப் பாசறைப் புறத்து'[23]
'பாசறை மீமிசைக் கணங்கொள்பு ஞாயிற்று'[24]

என வரும் தொடர்களால் இதனை அறியலாம்.

இவ்வடிப்படையிலேயே பாடிவீடு அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரந்த பசிய இடம் 'பாசறை' எனப்பட்டது போலும்.

---

21. புறம் 337
22. நற் 125
23. ஷை 280

நீல நிறத்தைக் குறிக்க 'நீல்,' 'நீலம்' எனும் வடிவங்கள் கையாளப்பட்டுள்ளன. நீலம் எனப்படுவது இந்நூல்களில் பெரும்பாலும் கருநீல நிறத்தைக் குறிப்பதாக உள்ளது. கருமையான பொருட்களைக் குறிப்பதற்கும் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளதன் வழி இதனை அறியலாம். கருமை, கரும்பச்சை நிறமுடையனவற்றைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பது பரவலாகக் காணப்படுகிறது.

'நீல்நிறப் புன்னைத் தமியொள் கைதை'[25]

என்பது இதற்குச் சான்று. இங்கு, புன்னை இலையின் கரும்பச்சை நிறத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீல நிறமுடைய நெய்தல் மலரைக் குறிக்க, 'கருங்குவளை' எனக் கூறியிருப்பதும் இவ்வாறே. இம்மலரை நீலம் என வேறு பெயரால் வழங்குவதும் குறிப்பிடத் தக்கது.

'நீலத்தைக் குறிக்க 'ஓரி' என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

'... ... ... தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென ...'[26]

எனும் தொடர் இதை உணர்த்தும். 'தேன் முதிர்ந்தால் பிறக்கும் நீலநிறம் ஓரி எனக் கூறப்படுகிறது என இதற்கு உரை விளக்கம் கூறப்பட்டுள்ளது. இதனைப் பற்றித் தெளிவாக அறியக் கூடவில்லை.

சங்க இலக்கியத்தில் மஞ்சள்நிறம் எவ்விடத்திலும் நேரடியாகச் சுட்டப்பெறவில்லை. பொன்னை உவமைப்படுத்தும் வழியும், 'ஒள்' எனும் சொல்லைப் பயன்படுத்தும் வழியும் இந்நிறம் உணர்த்தப்பட்டுள்ளது.

கருமையைக் குறிக்க கரு, கரும், கார், மை, மா, இரும் எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் கருமை, மா, இரும் எனும் சொற்கள் மிகுதியான அளவில்

---

24 நற் 396

25. ஷை 163

26. மலைபடு 523, 524; புறம் 109

பயிலப்பட்டுள்ளன. கார், இரும், மை எனும் சொற்கள் முறையே மேகம், இருள், மை என்பனவற்றின் நிறத்தை ஒத்தன எனும் ஒப்புமை அடிப்படையில் தோன்றியன எனலாம். 'கார்' எனும் சொல் பெயர்ச்சொல் ஆக்கப்பகுதியாகவும் செயல்பட்டு கரிய நிறமுடைய பொருளைக் குறிக்கும் பெயராகவும் வழங்கிற்று. கரிய நிறப் பசுவை 'காரி'[27] என வழங்கியிருப்பது இதற்குச் சான்றாகும்.

புகர்நிறம் என்ற ஒன்றும் குறிக்கப்பட்டுள்ளது. 'புகர் நிறங் கொண்ட களிறட் டானான்'[28] என்பதில் 'புகர்' என்பதற்குப் புள்ளி என்பது பொருளாயினும் 'புகர்நிறம்' என்பது எதைக் குறித்தது என்று அறியப்படவில்லை.

இங்குக் கூறப்பட்ட நிறங்கள் அனைத்தும் காட்சி விளக்கம் கருதி இலக்கியத்தில் கையாளப்பட்டவை. இரண்டு நிறங்களின் சேர்க்கையைக் குறிக்க 'கருந்துவர்'[29] 'செங்காரி'[30] எனும் சொற்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவை செம்மையில் கருமை கலந்த தன்மையை உணர்த்துகின்றன. எப்படிப்பட்ட வண்ணங்களையும் உணர்த்தும் சொல்வளத்தைக் குறிக்கின்றன இச்சொற்கள்.

சிவப்பு, மஞ்சள், நீலம் என்பன வண்ணங்களின் அடிப்படை நிறமாயினும், கருமை, வெண்மை, செம்மை, மஞ்சள் என்பனவே சங்க இலக்கியக் காட்சியின் வண்ணக் குழைப்புக்கு அடிப்படை நிறங்களாகியுள்ளன.

சங்க இலக்கியத்தில் நிறங்களைப்பற்றிக் காணும் பொழுது, அதன் அகப்பொருள் பாடல்களில் பெரிதும் பயிலப்படுவதும், தனிநிறங்களாகக் கருதப்படுவதுமான, 'மாமை', 'பசலை' என்பனவும் கருதத்தக்கன. சங்க இலக்கியத்தைப் பொறுத்த வரை இச்சொற்கள் முழுதும் தலைவியைத் தொடர்புபடுத்திக் குறிக்கப்பட்டுள்ளது.

'மா' என்பதனடியாகப் பிறந்தது 'மாமை' எனும் சொல். 'மா' எனும் அடிச்சொல் 'கருமை', 'அழகு' என்ற பொருள்களில்

---

27 கலித் 101
28. புறம் 310
29. கலித் 198
30. ஷை 105

வழங்கப் பெறுகிறது. இவ்வடிப்படையில் பிறந்த பண்புச் சொல்லாக 'மாமை' என்பது வழங்கப்படுகிறது.

'நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிளர் உருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்'[31]

என மலைபடுகடாத்தில் 'மாமை' என்பது கரிய நிறத்தைக் குறிக்க வந்தது. இவ் ஓர் இடத்தைத் தவிர பிற இடங்கள் அனைத்திலும் தலைவி தொடர்பாகவே இச்சொல் ஆளப்பட்டுள்ளது. இவ்விடங்களில் உரையாசிரியர் அனைவரும் கருமை எனப் பொருள் கூறியிருப்பினும், தலைவியைச் சுட்டிவரும் 'மாமை' என்ற சொல்லாட்சி அனைத்தையும் காணுமிடத்து இச்சொல் நிறத்தைக் குறிக்காது 'அழகு' எனும் பொருளடிப்படையில் பிறந்ததாகத் தோற்றுகிறது.

தலைவியைக் குறித்து வரும் 'மாமை' சங்க இலக்கியங்களில் தளிர்,[32] மாந்தளிர்,[33] ஆம்பலின் நாருரித்த மெல்லிய தண்டு,[34] ஈங்கையெனும் கொடியின் தளிர்,[35] மயிலெருத்து,[36] நீலமணி[37] ஆகியவற்றின் தன்மைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மிகுந்த பளபளப்பும், பொலிவுடன் விளங்கும் தோற்றமும் இப்பொருள்களின் சிறப்புப் பண்புகளாக உள்ளன. இவற்றுள் பெரும்பாலும் தளிரின் தன்மைக்கே இம்மாமை ஒப்பிடப்பட்டுள்ளது. இவற்றிலும்,

'ஆள்வினைக் கதறி யாயின் இன்றொடு
போயின்று கொல்லோ தானே படப்பைக்

31. மலைபடு 35-37
32. அகம் 42 ; கலித் 108-52, 53
33. பரி 8-38 ; மதுரைக் 706, 707
34. நற் 6-1, 2 ; ஐங் 35-2,4.
35. அகம் 75-17, 18 ; 206-7, 8 ; நற் 205-7, 11
36. கலித் 108-3, 8
37. பரி 3-3

'கொடுமுள் ஈங்கை நெடுமா அந்தளிர்
நீர்மலி கதழ்பெயல் தலைஇய
ஆய்நிறம் புரையுமிவள் மாமைக் கவினே'[38]

'பொழிபெயல் வண்மையான் அசோகந்தன் காவினுள்
கழிகவி னிளமாவின் தளிரன்னாய்'[39]

'... ... ... மழைக்கட்
முளிதலைத் தலைஇய தளிரன் னோளே'[40]

'காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதல்'[41]

'மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன
அம்மா மேனி'[42]

என மழைபெய்தபின் தளிர்களில் உண்டாகும் அழகிய தன்மை உவமிக்கப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு இளந்தளிரின் வனப்பு, பொலிவு என்பனவற்றை ஒப்புமைப் படுத்தியிருத்தல் கொண்டு 'மாமை' என்பது தலைவி யின் இளமை வளத்தையும் அழகையும் குறித்தது எனலாம். 'மாமை' என்பது தலைவனைப் பிரிந்து துன்புறும் நிலையிலிருந்து, வேறுபட்டு விளங்கிய பழைய நலனை, அழகைச் சுட்டுவதாகவே மிகுதியான இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் இக் கருத்திற்கு மேலும் அரண்செய்வதாகும்.

சங்க இலக்கிய உரைகள் அனைத்தையும் காணும் பொழுது தலைவி தொடர்பாகக் குறிக்கப்படும் 'மாமை' என்பதற்குக் கருமை எனப் பொருள் கொண்டு, 'மாயோள்' என்பதற்கும் கரிய நிறமுடையவள் என விளக்கம் தரப்பட்டு, 'மா' எனும் சொல் பயிலும் இடங்களனைத்திலும் (அம்மாமேனி—அழகிய கரியமேனி) அப்பொருளே கூறப்பட்டு 'மாமை' என்பது கரிய நிறத்தை மட்டுமே குறிப்பது போலும் எனும் எண்ணத்தைத் தோற்று விப்பதாய் உள்ளது. மாமைக்குரிய உவமைகளைப் பற்றிய உரை விளக்கத்தில் நேர்ந்த சிறுமாறுபாடு இவ்வெண்ணத் தோற்றத் துக்கு அடிப்படையாய் அமைந்தது எனலாம்.

---

38. நற் 205
39. கலித் 57
40. குறுந் 222
41. கலித் 58
42. அகம் 75, 206

ஆமை ஓட்டின் நிறத்திற்கும் மரக்காலின் நிறத்திற்கும் ஒப்புமை கூறும் பாடல் ஒன்றிற்கு[43] அதன் வடிவம் கருதி ஒப்புமை அமைந்ததாக உரைவிளக்கம் கூறியிருப்பது போன்று, இங்கும் தளிர், நீலமணி, மயிலெருத்து ஆகியவற்றின் வனப்பிற்கும், பொலிவிற்கும் கொள்ளப்பட்ட உவமை, அதன் நிறத்தைக் குறித்ததாகக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தன்மையே 'மாமை' எனத் தலைவியைக் குறிப்பது அவளது கரிய நிறத்தை மட்டுமே குறிப்பதாகப் பொருள்கொள்ள ஏதுவாயிற்று எனலாம்.

இவ்வாறே தலைவி பசலை எய்தினாள் என்பதைக் குறிக்க 'மணிநிற இரும்புதல் நரைநிறம் படுத்தது'[44] எனும் உவமை கையாளப்பட்டுள்ளது. இங்கு, தலைவி 'நிறமாற்றம் எய்தினாள்' எனும் வினைக்கு மட்டும் உவமை அமைந்திருப்பினும் மணிநிறம் தலைவியின் நிறத்தைக் குறித்ததாகவும் அதில் பசலை பாய்ந்ததாகவும் கொள்ளப்பட்டுள்ளது.

'மாமைக் கவினே' என 'மாமை', 'கவின்' எனும் இருசொற்களும் இணைந்த ஆட்சி மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'மாமை' என்பது அழகைக் குறிப்பதாயின் 'கவின்' எனும் சொல் ஏன் பயன்படுத்தப்பட வேண்டும் எனும் வினா எழுகிறது. ஒரு பொருளைக் குறிக்க அவ்வொரு பொருளையே குறிக்கும் இரு சொற்கள் சேர்ந்து வழங்குதல் உண்டு. 'நிறம்' என்ற சொல்லையும் நிறம் எனும் பொருளையுணர்த்தும் 'உரு' என்ற சொல்லையும் இணைந்து வழங்கும், 'நிறத்துரு உணர்த்தற்கும் உரிய வென்ப[45] எனும் தொல்காப்பிய நூற்பாவை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். 'மீமிசை' என்ற சொல்லும் இத்தன்மைத்தே. இவ்வடிப் படையில் இங்கும் அழகு மிகுதியைக் குறிக்க 'அழகு' எனும் பொருள்படும் 'மாமை' எனும் சொல்லும் 'கவின்' என்றசொல் லும் இணைந்து வழங்கியது எனலாம்.

திருமாலைக் குறித்து வழங்கும் மாயோன் எனும் சொல் 'கரியவன்' எனும் பொருள்படுதலால் தலைவியைக் குறித்து வழங்கும் 'மா' எனும் அடியிற் பிறந்த சொற்களும் ஏன் கருமையைக் குறித்தல் ஆகாது எனும். எண்ணம் எழுதல் கூடும்

43. ஐங் 43
44. நற் 302
45. தொல். சொல். 373

திருமாலின் நிறம் கருமை என்பது கண்டறிய இயலாத ஒரு பொருளைப்பற்றி தத்துவ அடிப்படையில் கொள்ளப்பட்ட பொருளாகும். அகப்பொருள் பாடல்களில் இந்நோக்கு இல்லை. எனவே பொருள் கொள்ளுதலின் அடிப்படை நோக்கம் வேறு படுதலால் இக்கருத்து பொருந்துமாறில்லை. எனவே சங்க இலக்கிய அகப்பொருள் பாடல்களில் ஆளப்பட்டுள்ள 'மாயோள்' எனும் சொல் 'அழகுடையவள்' என்ற பொருளில் வந்ததாகக் கொள்ளுதல் தகும்.

'மா' எனும் சொல்லுக்குக் கருமை எனப் பொருள் கொண்டு அக்காலத்தினர் கருநிறமேனியராய் இருந்தமையையே இச்சொல் குறிக்கிறது எனப் பொருள் கொள்ளுதலும் கூடும். மேனியின் நிறத்தைக் குறிப்பது நோக்காயின் புலவர் தலைவன், தலைவி என்ற வேறுபாடின்றி இருவரையும் சுட்டியிருக்கலாம். ஆயின் சங்க இலக்கியத்தில் இச்சொல் தலைவியை மட்டுமே சுட்டி அகப்பொருளோடு இயைந்ததாக மட்டும் பயின்று வந்துள்ளது. தோழியும் இச்சொல்லால் குறிக்கப்படவில்லை. மேலும்,

'பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய அரனே' [46]

'பொன்போல் விறற் கவின்' [47]

'பன்னாள் பிரிந்த வறனி லாளன்
வந்தன னோமற் றிரவிற்
பொன்போல் விறற்கவின் கொள்ளுநின் நுதலே' [48]

'பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்' [49]

'பொன்போல் மேனித் தன்மகள் நயந்தோள்' [50]

'பொன்னும் மணிவும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்' [51]

---

46. ஐங் 288
47. ஷை 229, 230
48. ஷை 229
49. குறுந் 319
50. நற் 324
51. ஷை 166

என வரும் பாடலடிகள் மேனி பொன்னிறத்தினராய் இருந்தமையையும் சுட்டுகிறது. எனவே பொது வகையில் மாமை என்பது கரியநிறத்தைக் குறிப்பதாயினும் சங்க இலக்கிய அகத்துறையைப் பொறுத்தவரையில் இச்சொல் தலைவி கருமையாயிருப்பினும், செம்மையாயிருப்பினும் அவளது அழகைக் குறித்தது. கருமை, செம்மை என்ற நிறவேறு பாடின்றி அழகு எனும் பொருளில் தலைவியின் இளமை வனப்பையும், வளமையையும் உணர்த்தி நின்றது. இயல்பாக அமைந்த உடல் வளமையோடு, உள்ளத்தின் இன்ப உணர்வால், மகிழ்ச்சியால் ஏற்படும் உடல் வனப்பையும் குறித்து நின்றது.

அடுத்து 'பசலை' என்பதைக் காணும்பொழுது 'பசுமை' என்ற சொல்லின் அடிச்சொல்லாக விளங்கும் 'பச' என்பதே இச்சொல்லிற்கும் அடிச்சொல்லாக நிற்கிறது. இச்சொல் உணர்த்தும் நிறம் பசுமையன்றாயினும். பசுமை என்பதனடியாகப் பிறந்த சொல்லாய் அமைந்தற்குரிய காரணம் விளங்கவில்லை.

சங்க இலக்கியத்தில் பசலை பீர்க்கம் பூவிற்கும், பொன்னிற்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. 'பசலை' என்பது மஞ்சள்நிறத் தோற்றத்தை அளிப்பதாகக் கருத இதுஇடமளிக்கிறது. சங்க இலக்கியத்தில் எவ்விடத்திலும் மஞ்சள் நிறம் தனிப்பட்ட பெயரால் சுட்டப்படவில்லை. மஞ்சள் சிறிது பசுமை கலந்து தோன்றுவது கண்கூடு. எனவே பசுமைக்குரிய அடிச் சொல்லினாலேயே பசப்பு, பசலை என அமைந்துக் கொண்டனர் எனவும் கருதலாம்.

சங்க இலக்கியத்தில் இச்சொல் நிறவேறுபாடு, துன்பம் என்ற பொருள்களில் ஆளப்பட்டுள்ளது. இயல்பான நிறத்திலிருந்து மாறுபடுவது 'பசலை' எனக் குறிக்கப்படுகிறது. 'பசக்கும்,' 'பசந்த,' 'பசத்தல்', 'பசப்ப', 'பசந்தன', 'பசந்தனை,' பசந்தனள்' என மிகுதியான வினைவடிவங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது 'நிறமாற்றம்' எனும் வினைப் பண்புக்குச் சான்றாக உள்ளது. முன்பு மாந்தளிர் போன்ற ஒளியுடனும் பொலிவுடனும் விளங்கிய தலைவி அப்பொலிவை இழந்து வருந்தும் நிலையைச் சுட்டுகிறது பசலை.

'சொரிந்ததூஉஞ் சொற்றதூஉம் பற்றா ணிறந்திரிந் தாள்
நெஞ்சத்தை நீத்தா ணெறி செல்வான் பின்'[52]

---

52. பரிபாடல் 12-52, 53

'ஊரலர் தூற்றலின் ஒளியோடி நறுநுதல்
பீரல ரணிகொண்டு பிறைவனப் பிழவாக்கால்'[53]

'நிறனோடிப் பசப்பூர்த லுண்டெனெ'[54]

எனவரும் தொடர்கள் நிறந்திரிதல் எனும் தன்மையை விளக்குகின்றன.

சங்க இலக்கியத்தில் தலைவியின் நிறந்திரிதல் பொன்னிற்கும், பூந்தாதுவிற்கும், பீர்க்கம்பூவிற்கும், கொன்றைப் பூவிற்கும் ஞாழற் பூவிற்கும் உவமைப் படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் பொன்னின் நிறமும் பீர்க்கம் பூவின் நிறமும் மிகுதியாக உவமிக்கப் பட்டுள்ளன. இவ்வாறு பல பொருட்களை ஒப்புமையாகக் கூறியிருப்பினும் 'பசலை' என்பது ஊணும் உறக்கமு மின்றி உடல் பொலிவிழப்பதால் ஏற்பட்ட நிறமாறுபாட்டையே உணர்த்தி நிற்பதைக் காணலாம். பெரும்பாலும் களவொழுக்கத்தின்கண் நிகழ்வதாக இந்நிறமாறுபாடு சுட்டப்பெற்றுள்ளது. இதனை நோக்குமிடத்து தலைவன் வரையாது விடுவானோ எனும் அச்ச மிகுதியும், அலரின் அச்சமும் அவளது உடல்வேறுபாடு அல்லது நிறவேறுபாட்டிற்குக் காரணம் எனக் கூறலாம்.

'உள்ளுதோ றுள்ளுதோ றுருகிப்
பைஇப் பையப் பசந்தனை பசப்பே'[55]

எனும் நற்றிணைப் பாடலும் இதனைத் தெளிவாக விளக்குகிறது. இங்கு நினைந்து, நினைந்து சிறிது சிறிதாக ஏற்படும் மாற்றம் என்பதும் 'பைஇப் பையப் பசந்தனை' என்ற தொடர் வழி அறியப்படுகிறது.

'நீணிழற் றளிர்போல் நிறனூழ்த்த வேனுந்
நானிழல் விட்டியான் றவிர்தலைச் சூழ்வளோ'[56]

'பாயின பசலையாற் பகற்கொண்ட சுடர்போன்றாள்
மாவின தளிர்போலும் மாணலம் இழந்ததை'[57]

53. கலித் 52
54. ஷை 16
55. நற் 96
56. கலித் 20
57. ஷை 132

எனும் தொடர்கள் நிறம் வெளுத்தல் என்ற தன்மையை நன்கு விளக்குகின்றன. எனவே உடல் தன் இயற்கைப் பொலிவிழந்து காணப்படும் நிலையே பசலை எனப்படுகிறது என்பதை இவற்றால் நன்கு உணரலாம். இவ்வாறே 'சங்கின் நிறத்தைக் காட்டிலும் வெளிறிய நிறம் பெற்றாள்'[58] எனவரும் ஐங்குறுநூற்றுப் பாடலும் இதன் தன்மையை உணர்த்துகிறது.

அகப்பொருள் நிலையில் மட்டுமின்றி புறப்பொருள் நிலையிலும் ஓரிரு இடங்களில் இச்சொல் கையாளப்பட்டுள்ளது.

'நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்தே மேனியொடு படரட வருந்தி'[59]

என்ற புறநானூற்றுப் பாடலில் வலுவின்றி வளமிழந்த உடல் நிலையைக் குறித்தற்கு இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே துன்பமுறும் கன்று 'பசலைக் கன்று'[60] எனக் குறிக்கப்பட்டுள்ளது. பனிபடர்ந்து ஒளி மங்கிய விடியற்காலத்து நிலவொளியை, 'பசலை நிலவு'[61] எனக் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவையனைத்திலும் மனத்துன்பத்தால் உடல்வாடி ஒளி மங்கிய நிலை என்ற அடிப்படைப் பொருள் நிலைபெறக் காணலாம்.

இந்நிறமாற்றம் பொது வகையில் உடல் முழுதையும் உட்படுத்தியதாயினும், 'பசப்பு ஊர்ந்தது' எனக் குறிக்கும் பொழுது பெரும்பான்மையும் நுதலும் கண்களும் மிகுதியாகச் சுட்டப் பெற்றுள்ளது. உள்ளத்தின் நிலையை மறைக்காது காட்டுவது கண்களேயாதலால் இவ்வாறு சுட்டப்பட்டது போலும்.

இலக்கியப் புலவர்கள் பீர்க்கம்பூ, பொன் ஆகியவற்றின் நிறத்தை, பசலைக்கு உவமையாகக் கூறியிருப்பினும் அவை பசலை என்ற சொல்லால் குறிக்கப்படுவதன் இயல்பான தன்மையை விளக்காது, அதனை உணர்த்துதற்குரிய ஒப்புமை நிற

---

58. ஐங் 106
59. புறம் 159
60. முல்லை 12
61. புறம் 392

மாகச் சுட்டப்பெற்றுள்ளது. உடல் பொலிவு குறைந்து சற்று வெளுத்த நிலையைக் காட்டுவதற்குப் பொருந்திவரும் ஒப்புமையான நிறம் மஞ்சள் எனக் கருதி இவ்வாறு கூறியதாகக் கொள்ளலாம். இவ்வுவமைகள் பசலையைக் குறித்தற்குரிய குறியீடுகளாய்ச் செயல்பட்டுள்ளன. இவ்வுவமைகளைப் பயன்படுத்திய நோக்கமும் அவ்வாறே இருந்திருக்கக் கூடும்.

‘முற்றெழில் நீல மலரென உற்ற
இரும்பீர் வடியன்ன உண்கட்கும் எல்லாம்
படும் பொன்னுண் டென்பா யினி’[62]

‘இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே’[63]

என்ற பாடல்கள் இதற்குச் சான்றாகும். தலைவி பசலை எய்தினாள் என்பதைத் தலைவனுக்கு உணர்த்த, ‘பொன்னுண்டு எனக் கூறவேண்டும், பீர்க்க மலரைக் கொண்டு காட்ட வேண்டும்’ எனத் தலைவி உரைக்கிறாள். இவ்வாறு சங்க இலக்கியம் முழுதும் குறியீடாய்ப் பயன்படுத்தப்பட்ட இத்தன்மை பின்வந்த இலக்கியங்களிலும் மரபாயிற்று.

நிறங்களைக் குறிக்கும் சொற்கள் பண்புகளை விளக்கும் குறியீடுகளாகவும் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அமைதி, செங்கோன்மை முதலியவற்றைக் குறிப்பதாக வெண்மை நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மடமை, இளமைத் தன்மை என்ற பொருள்களை உணர்த்தற்கும் இச்சொல் கையாளப்பட்டுள்ளது. ஒன்றுமில்லாத வெற்றிடத்தைத் தோற்றுவிப்பது போன்ற வெறுமையுணர்வைத் தோற்றுவிப்பதனால் வெண்மை இப்பொருளில் வழங்கியது போலும்.

---

62. கலித் 64
63. குறுந் 98

'வினைக்கெட்டு வாயல்ல வெண்மை யுரையாது'[64]

'புள்ளூன் றின்ற புலவுநாறு கய்வாய்
வெள்வாய் வேட்டுவர் ...'[65]

என்ற தொடர்களில் 'வெள்' என்பது பொருளற்ற பேதைமைச் சொற்களை உணர்த்தியது.

'தூம்புடைத் தூய்த்தலைக் கூம்பித் திரங்கிய
வேனில் வெளிற்றுப்பனை போலக் கையடுத்து'[66]

என்பதில் இளமையைக் குறித்தது.

பசுமைநிறம், இளமை, புதுமைப்பொலிவு, தூய்மை, தன்மை, சிறிய அளவு மெய்ப்பாடுகள் என்பனவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தூயபொன்னின் நிறத்தை உணர்த்தற்கும், குளிர்ச்சி, இளமை, சிறிய அளவு, புதுமைப்பொலிவு, அடப்படாத பசிய பொருட்கள் இவற்றைக் குறிப்பதற்கு இச் சொல் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பசுமை நிறைந்த காட்சி உடலோடு உள்ளத்திற்கும் குளிர்ச்சியளிக்கிறது; புதுமைப் பொலிவையுணர்த்துகிறது; வளமையைக் காட்டுகிறது. இப் பண்பு காரணமாக, அச்சூழலை உணர்த்தும் பொருள்களைக் காணும்பொழுது அப்பண்புக்குரிய நிறம் மனக்கண்ணில் எழுகிறது. நிறத்தினால் ஏற்பட்ட உணர்வு காரணமாக, அத் தன்மையுடைய பொருள்களையும் அந்நிறப் பெயரால் சுட்டத் தோன்றுகிறது. இத்தூண்டுதல் பண்பு குறித்து நிறப்பெயர் வழங்குவதற்குரிய காரணமாகிறது.

'வந்துபுறத் திறுக்கும் பசும்பிசி ரொள்ளழல்'[67]

எனும் தொடரில் அழலின் சிறுசிறு பிசிர்களை உணர்த்த இச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே 'பசுமுத்து'[68] என்பது தூய்மை செய்யாத முத்தினைக் குறிக்க வந்தது.

---

64. கலித் 88
65. புறம் 324
66. அகம் 333
67. பதிற் பத் 732 5
68. நற் 68

'படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென'[69]

என்பதில் உறங்காது சிவந்த கண்ணை உணர்த்திற்று.

'சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கில்'[70]

எனும் தொடரில் கோப மிகுதியையும் அதனால் சிவந்த கண்ணையும் உணர்த்தியது.

ஈரம் புலராத, காயம் ஆறாத புண்ணைக் குறிக்கவும்[71] இச்சொல்லாட்சி அமைந்துள்ளது.

நாம் நிறத்துக்குரியதாக வழங்கும் 'பச்சை' எனும் சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் 'தோல்' என்ற பொருளைக் குறிக்க மட்டும் ஆளப்பட்டுள்ளது. எவ்விடத்திலும் இச்சொல் நிறம் கருதிப் பயன்படுத்தப்படவில்லை.

மெய்ப்பாடுகளைக் குறிக்கவும். உயர்ந்த உள்ள நிலையைக் குறிக்கவும் 'செம்மை' எனும் சொல் மிகுதியாகக் கையாளப் பட்டுள்ளது.

'எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாளன்று'[72]

என்பதில் சினம் எனும் பொருளை உணர்த்த வந்தது. இவ்வாறே துன்பநிலையை[73] உணர்த்தற்கும் இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

செங்கோல், செந்நா, செம்மை என்பன முறையே சிறந்த ஆட்சி பொய்மையிலாத நா, உயர்ந்த பண்பு என்ற பண்புகளைச் சுட்டியுள்ளது. இவ்வாறே உயர்ந்த பண்புடையோரைக் குறிக்கச் 'செம்மல்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பூவின் வாடலைக் குறிக்கவும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது.[74] எனவே அறிவிலும், வயதிலும், பண்பிலும் முதிர்ந்தோரைச் 'செம்மல்' எனக் கூறும் வழக்கம் தோன்றியது எனலாம். இவ்வாறு பண்பு அடிப்படையில் நேரான, திருத்தமான என்ற

---

69. அகம் 102
70. திருமுரு 48
71. புறம் 100
72. நற் 120
73. கலித் 57
74. குறுந் 50

பொருளில் வழங்கிய இச்சொல் பருப்பொருள் நிலையிலும் இப்பண்புகளைக் குறிக்க வழங்கலாயிற்று. செங்குணக்கு, செவ் வரை எனும் சொற்கள் நேர்க்கிழக்கையும் செங்குத்தான பாறை யையும் உணர்த்தியமை இதற்குச் சான்று.

சிவந்த நிறம் என்றவுடன் மனதில் தோன்றுவது குருதியின் தோற்றம். இந்நிறம் அச்ச உணர்வைத் தோற்றி மனதை மருளச் செய்கிறது. 'கண்களைச் சிதறி விழுமாறு செய்வது போன்ற தன்மையது இந்நிறம்'[75] என மதுரைக் காஞ்சியும் இந் நிறத்தைப் பற்றிக் கூறுகிறது. அச்ச உணர்வைத் தோற்று விக்கும் இயற்கைப் பொருள்களும் விளைவுகளும் வழிபாட்டு குரிய உயர்ந்த தன்மை எய்துவது போன்று இந்நிறமும் உயர்ந்த, திருந்திய பண்புகளைக் குறிக்க வழங்கிப் பின் பலபொருள்களி லும் விரிந்தது எனலாம். இறைவனது திருவுருவங்களுக்கு அணிவிக்கும் ஆடையும் பெரும்பான்மையும் சிவந்த நிறமாக இருப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

வலிமை, பகைவர் என்ற பொருள்களைக் குறித்தற்கு கருமை எனும் மிகுதியாகப் பயின்று வந்துள்ளது.

'கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி'[76]
'அரும்பொருள் வேட்டம் எண்ணிக் கறுத்தோர்'[77]

எனும் தொடர்களும் முறையே இப்பொருள் விளக்கத்திற்குரிய சான்றுகளாகும். இருளின் செறிவு, இருளிடத்துள்ள வெறுப் புணர்வு என்பன இப்பொருள் விளைவுக்குத் தூண்டுதலாய் அமைந்திருக்கக் கூடும்.

இவ்வாறு நிறங்கள் ஏற்படுத்தும் மனவுணர்வுகளே அந்நிறத் துக்குரிய சொற்கள் வேறு பொருளிலும் வழங்கக் காரணமாயின எனலாம். சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை நீலமும், மஞ்சளும் வேறு பொருள்களை உணர்த்த வழங்கப் பெறாமை சிந்தனைக்குரியது.

நிறம் பற்றிய ஆட்சியைக் காணுமிடத்து, பொதுவகையில் நிறத்தைச் சுட்டுவதாக அமைவதோடு, இலக்கியச் சுவை கருதி

75. மதுரைக் 431, 434
76. புறம் 3
77. அகம் 389

யும், பொருள் வெளிப்பாடு கருதியும் நிறங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவை நேரடியாகவும், உவமை வழியாகவும் விளக்கப்பட்டுள்ளன. குறிக்கப்பட்ட நிறங்கள் அனைத்தும் பெரும்பான்மையும் அடைச் சொற்களாகவே பயன்படுத்தப் பட்டுள்ளன.

சங்க இலக்கிய நிற ஆட்சியில் பெரும்பகுதி இலக்கியச் சுவை கருதி பயன்படுத்தப்பட்டுள்ளது. அளவு கடந்த புனைவுக்கு இடந்தராது இயற்கையையே பின்புலமாகக் கொண்டு பாடல் களை யாத்த இலக்கிய மரபு இத்தன்மைக்குக் காரணமாய் அமைந்தது. இயற்கை வருணனையிலும், காட்சி வருணனை யிலும் சுவைகருதி முரண்பாட்டு அமைப்பில் நிறங்களைக் கையாளுவதை ஒரு மரபாகக் கொண்டிருந்தமையையும் சங்க இலக்கியத்தில் காணலாம். கருமைXவெண்மை, கருமைXசெம்மை கருமைXபொன்மை, கருமைXபசுமை, பசுமைXசெம்மை, பசுமைXவெண்மை, செம்மைXவெண்மை என்ற நிறமுரண் பாடுகள் காணப்படுகின்றன.

'கருங்கால் வெண்குருகு'[78]

'செங்கண் இருங்குயில்'[79]

'செவ்வாய்ப் பைங்கிளி'[80]

'இனச்சித ருகுத்த விலவத் தாங்கட்
சினைப்பூங் கோங்கி னுண்டாது பகர்நர்
பவளச் செப்பிற் பொன்சொரிந் தன்ன'[81]

என்பன போன்று நேரடியாகவும் உவமையாகவும் நிறமுரண் பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை கூறவிரும்பும் பொருளை எளிதில் கற்போர் மனதில் காட்சிப் படுத்துவதோடு இலக்கிய ஆர்வத்தையும் அளிக்கவல்லதாய் உள்ளது.

அகநானூற்றின் ஒருபகுதிக்குரிய பெயராக விளங்கும் 'மணியிடை பவளம்' என்ற பெயரும் இங்குக் குறிப்பிடத்தக்கது. நித்திலக் கோவையில் இப்பெயருக்குரிய விளக்க உவமை அமைந் திருக்கக் காணலாம்.

78. நற் 4
79. ஐங் 346
80. நற் 147
81. அகம் 25

'மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப'[82]

என்பது அவ்வுவமை. இங்கு நிறக்கலப்பின் தோற்றச் சிறப்பு கருதி அதுவே பெயராகக் கொள்ளப்பட்டுள்ளது. 'மணியிடை பவளம்' என்ற தொடருக்குரிய விளக்கமாக அமையும் இவ்வுவமை, அப்பெயரைக் கொண்டுள்ள பகுதியில் அமையாது 'நித்திலக்கோவை' என்ற பகுதியில் விளக்கப்பட்டிருப்பதன் காரணம் விளங்கவில்லை.

இலக்கியச்சுவை மட்டுமின்றி பொருள் வெளிப்பாட்டிற்குரிய கருவியாகவும் நிறங்கள் கையாளப்பட்டுள்ளன. இத்தன்மை மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது.

பொருளைக் குறிப்பாக உணர்த்தும் பிறிதுமொழிதலுக்கு நிறம் சிறந்த வாய்ப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது.

'பைங்காய் நல்லிடம் ஒரீஇய செங்காய்க்
கருங்களி ஈந்தின் வெண்புறக் களரி'[83]

எனும் பாடலில் மேலோட்டமாக நிறமாற்றத்தைக் குறிப்பது போன்றிருப்பினும், நிறமாற்றத்திற்குக் காரணமாக இருக்கும் வளர்சிதை மாற்றமும் இங்கு உணர்த்தப் பெறுகிறது. பொருள் வயிற் செல்ல எண்ணும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்த இப்பாடலடிகளில், 'யாக்கையின் இளமை போய் முதிர்ந்து பின் தளர்ந்து வீழும்' எனும் பொருள் குறிப்பாக உணர்த்தப் பெற்றுள்ளது. பசுமை, செம்மை, கருமை என்பன முறையே இளமை, முதிர்வு, தளர்வு என்பதற்குக் குறியீடுகளாய் அமைந்துள்ளன.

உள்ளுறை, இறைச்சி போன்றவற்றை விளக்குதற்கும் நிறம் கருவியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

'வருமழைக் கெதிரிய மணிநிற இரும்புதல்
நரைநிறம் படுத்த நல்லிணர்த் தெறுழ்வீ'[84]

---

82. அகம் 304, 174
83. நற் 126
84. ஷை, 302

எனும், தலைவனைப் பிரிந்த தலைமகள் கூற்றாக அமைந்த பாடலில் தலைவனைப் பிரிந்தமையால் தலைவியின் அழகும் நிறமும் வேறுபட்டது எனும் இறைச்சிப் பொருளை விளக்குதற்கு மணிநிற இரும்புதல் நரைநிறமாக மாறியமை சுட்டப்பட்டுள்ளது இதற்குச் சான்றாகும்.

நிறத்தைக் கருவியாகக் கொண்டு அமைந்த உத்திகள் சில வற்றுள்ளும் பெரும்பகுதி இறைச்சி, உள்ளுறையாக அமைந் துள்ளன. இவை அனைத்தும் தலைவிக்கு ஏற்படும் நிற மாற்றத்தைக் குறிப்பாக உணர்த்தற்கே பயன்படுத்தப் பட்டுள்ளது.

> 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
> ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி'[85]

எனத் தொடங்கும் திருமுருகாற்றுப்படையில் பாட்டுடைத் தலைவனை நேரடியாகச் சுட்டாது, ஞாயிற்றையும், கடலை யும் முருகனது நிறத்திற்கும், மயிலின் நிறத்திற்கும் ஒப்புமை யாக்கும் உவமை வழி சுட்டியுள்ளார். பாட்டுடைத் தலைவனை அறிமுகப்படுத்தற்கும், பாடலைத் தொடங்குதற்குமுரிய உத்தியாக உள்ளது இத்தன்மை.

ஓரிரு இடங்களில் நிறம் குறியீடாகவும் வந்துள்ளது. வள்ளலிடத்து ஒரு பாணனை ஆற்றுப்படுத்தும் மற்றொரு பாணன்,

> 'கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்
> சென்றுவாய் சிவந்துமேல் வருக'[86]

எனக் கூறுகிறான். இங்கு 'விருந்துண்டு அடைக்காய் இட்டு வருக' என்பதைக் குறிப்பாக உணர்த்தற்கு இந்நிறம் குறியீடாய் அமைந்துள்ளது.

பாத்திரங்களின் உளநிலைக்கேற்ப வருணனையை அமைக்கும் புலவனது திறத்தையும் இந்நிற ஆட்சி உணர்த்து வதாயுள்ளது.

---

85. திருமுரு 1 3
86. புறம் 316

போருக்குச் சென்று மீளும் தலைவனது கூற்றாக அமைந்த அகநானூற்றுப் பாடலில், 'இருப்பை மரத்தின் செப்புத்தகடு போன்ற சிவந்த தளிரின் உள்ளிடத்துள்ள தேன் வண்டுகளினால் சிதறி பவளம் போன்ற இடத்திலெல்லாம் தங்கி குருதியின் மேல் கிடக்கும் நிணங்கள் போன்று காட்சியளித்தன'[87] எனப் போர்க்களக் காட்சியைக் கருத்தில் கொண்டு வருணனையை அமைத்திருப்பது இதனை உணர்த்தும்.

ஒவ்வொரு திணைக்குரிய மலர்களாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற மலர்கள் குறிப்பிடப்பட்டிருப் பினும் இவை எந்த அடிப்படையில் அவ்வத்திணைக்குரியன வாகக் கொள்ளப்பட்டன என்பது சிந்தனைக்குரியது. புவியியல் மாறுபாட்டு அடிப்படையிலேயே திணைப்பாகுபாடுகளும் அமைந்துள்ளமையால் அவ்வந்நிலத்தில் மலர்ந்த மலர்களுள் மனதிற்கு உகந்ததை அவ்வத்திணைக்குரியதாகக் கொண்டனர் எனக் கருதலாம். ஆயின் முல்லை மலரைப் பொறுத்த வரையில் திணைப்பாகுபாடின்றி மகளிரின் கற்புநிலையைச் சுட்டுதற்குரிய குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'முல்லையைச் சூடுதற்குரிய கற்புடைய மெல்லியர்'[88] எனவும், 'அரும்புகள் நெருங்கின முல்லை, மகளிரின் கற்புநிலையைக் காட்டின'[89] எனவும் கூறியிருத்தல் வழி இதனை உணரலாம். முல்லை மலரின் தூய்மையான வெண்மை நிறம் காரணமாக இது கற்பு நிலையைச் சுட்டுதற்குரிய குறியீடாகக் கொள்ளப் பட்டது எனலாம்.

நிறங்களைப் பயன்படுத்தியுள்ள தன்மையைக் காணும் பொழுது புலவர்களின் அறிவியல் உணர்வோடு, பண்பாட்டுச் செய்திகள் சிலவும் விளங்கக் காணலாம்.

நிறங்களைப் பொருள்களோடு தொடர்பு படுத்திக் கூறி யிருக்கும் முறையில் சில அறிவியல் செய்திகளும் பொதிந் துள்ளமை புலனாகிறது.

நீல நிறத்துக்கு நிறமிகள் இல்லை. இருப்பினும் சில பறவைகள் நீலநிறமாகக் காட்சியளிக்கின்றன. இதற்கு

87. அகம் 9
88. சிறுபா 30
89. பரி 15

அவற்றின் இறகுகளில் அமைந்துள்ள காற்று நிறைந்த சிறுசிறு இடங்களில் ஏற்படும் ஒளிச் சிதறல் காரணம் எனக் கூறப்படுகிறது. இவ்வுண்மையை,

'நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை'[90]

எனும் தொடர் 'நீலமென்சிறை' என்ற அடைச்சொல் வழி நன்கு விளக்கக் காணலாம்.

அடுத்து, பற்களின் நிறத்தை உவமிக்கையில் எல்லா இடங்களிலும் முத்தின் நிறத்திற்கும், முல்லை மலரைக் குறிக்காது முல்லை முகையின் நிறத்திற்கும் மட்டுமே உவமித்திருப்பது கருதத் தக்கது. அளவு மிகுந்த வெண்மை, வளமையான பற்களைக் குறிப்பதாகாது என்ற உண்மையைக் கருத்தில் கொண்டதாக இவ்வுவமை அமைக்கப்பட்டுள்ளது.

'கடிசுனைத் தெளிந்த மணிமருள் தீநீர்'[91]

எனச் சுனையின் தன்மையை உணர்த்துகிறது அகநானூற்றுப் பாடல் ஒன்று. தெளிந்த நீரில் சீரான முறையில் ஒளிச்சிதறல் ஏற்படுதலினால் குறைவான அலைநீளம் உடைய செந்நீல, நீல நிறக் கதிர்கள் மிகுதியாகச் சிதறி நீர் ஆழ்ந்த நீலநிறத்தில் தோற்றமளிக்கும் என்ற உண்மையைப் பொதிந்து வைத்ததாக இத்தொடர் விளங்கக் காணலாம்.

அறிவியல் உணர்வை விளக்குதற்குரிய ஒருசில சான்றுகளாகும் இவை. இலக்கியச் சுவைக்காக மட்டும் அமைப்பின் போதும் எனக் கருதாது அறிவியல் நுட்ப உணர்வோடும் நிறங்களைப் பயன்படுத்தியுள்ள தன்மை இலக்கியப் புனைவிலும் இயற்கை நுட்பம் அமையவேண்டுவதன் இன்றியமையாமையை உணர்த்துகிறது.

எவ்வெப் பொருள்களில் எவ்வெவ் நிறங்களை மிகுதியாகக் கையாண்டனர் என்பதும் இந்நிற ஆட்சிவழி விளங்குகிறது.

---

90. குறுந் 201
91. அகம் 368

பெண்களின் ஆடைகளில் பெரும்பான்மையும் நீலவண்ணம் இருந்தமை தெரிகிறது.[92] இந்தியாவில் முதன்முதலில் பயன் படுத்தப்பட்டது அவுரிச்சாயமெனவும், இதுநீல வண்ண முடையது எனவும் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக நம்மிடையே இந்தச் சாயம் பழக்கத்தில் இருந்தது எனவும் கூறும் கருத்தும்[93] இங்கு ஒப்புநோக்கத்தக்கது. போர்வீரர் அணிதற்கும் இறை வழிபாட்டிற்கும் செந்நிற ஆடை பயன்பட்டுள்ளது.[94] போர் வீரரைக் குறிக்கும் பொழுதெல்லாம் செந்நிற ஆடையே சுட்டப் பெற்றுள்ளது. அச்ச உணர்வைத் தோற்றுதற்காக இந்நிறத்தை அணிந்தனர் எனலாம்.

வீடுகளுக்கு வெண்ணிறமும், மதிற் சுவர், கோட்டைச்சுவர் போன்றவற்றிற்கு செந்நிறமும் அளித்துள்ளமை சுட்டப் பெற்றுள்ளது[95]

மரச்சட்டங்களுக்கும், நீர்விளையாட்டிற்கும், ஓவியர் தமது புனைவுக்குரிய பின்புலத்தை அமைத்தற்கும் அரக்கு நிறத்தைப் பயன்படுத்தியதாகத் தெரிசிறது.[96]

இவ்வாறு இயற்கை நுட்பத்தோடும் இலக்கிய உணர்வோடும் நிறங்களைக்கையாண்ட சங்கப் புலவர்களின் பெயர்கள் சிலவும் நிறத்தின் அடிப்படையில் அமைந்திருப்பது கருதத்தக்கது. ஆயின் நிறப்பெயர் காரணமாக அவர்களது பாடல்களில் சிறப்புத்தன்மை ஏதும் காணக் கூடவில்லை.

பொதுவகையில் சங்க இலக்கியத்தில் நிறம் பற்றிய ஆட்சி—

---

92. புறம் 274; கலித் 115; கலித் 111; மதுரை 638, 639

93. கலைக்கதிர் மே, 1963, பக் 38

94. திருமுருகு 15; மதுரை 431, 434

95. புறம் 337; பட்டினப்பாலை 49, 50, 263; நெடுநல் 108, 114; அகம் 346

96. சிறுபா 254, 256; நற் 341; நெடுநல் 80, 81

இலக்கியச் சுவையை மையநோக்காகக் கொண்டுள்ளது.

சிறிதளவு உத்திகளாகச் செயல்பட்டுள்ளது.

நேரடியாகச் சுட்டுதலையும் உவமையாகச் சுட்டுதலையும் இணையான அளவில் கையாண்டுள்ளது.

இலக்கியக் காட்சியின்பத்திற்கு நிற முரண்பாட்டு அமைப்பை மேற்கொண்டுள்ளது.

வெண்மை, செம்மை, பசுமை, கருமை ஆகிய நிறங்களை மிகுதியாகச் சுட்டியுள்ளது.

நிறத்தை மட்டுமன்றி அதிலிருந்து விரிந்த வேறு பொருள்களையும் சுட்டி நின்றது.

புறப்பொருள் பாடல்களைக் காட்டிலும் அகப்பொருள் பாடல்களில் மிகுதியாக, நிறங்களைக் குறியீடாகப் பயன்படுத்தும் இலக்கிய மரபைக் கொண்டுள்ளது.

# 6. கபிலர் பாடல்கள்

ம. ரா. போ. குருசாமி

## பொருளிலக்கணமும் நிறமும்

மானிட உணர்ச்சிகளை எதிரொலி செய்வனவாகவும், மானிட உணர்வின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பின்னணி அமைப்பனவாகவும் இயற்கைக் காட்சிகளைச் சங்க காலத்துச் சான்றோர் கையாண்டுள்ளனர். நிறமும் பொழுதுமாகிய முதற் பொருள், தெய்வம், உணா முதலாக விரியும் கருப்பொருள், அகமும் புறமுமான வாழ்வரங்கத்தின் உரிப்பொருள் என்ற முப் பொருள்களையும் தம் வருணனைத் திறத்தால் அழியாச் சொல் லோவியங்களாகச் சங்க காலப் புலவர்கள் சிறப்புறுத்திப் பாடி யுள்ளனர்.

நிலமும் பொழுதும் ஒரு வகையில் இயற்கையரங்கத்தை அமைகின்றன. அவற்றுக்கு உயிர், உணர்வு என்ற தன்மைகள் இல்லை. கருப்பொருள்களின் நிலை வேறு; உயிர், உணர்வுகள் ஊடாடும் இயல்புடையவை கருப்பொருள்கள். இவ்வாறு பகுக் கப்பெறுதற்குரிய முதற்பொருள், கருப்பொருள் வருணனை களிலே நிறங்களுக்கு இடன் உண்டு. நிலம், பொழுது, கருப் பொருள் இவற்றைக் கொண்டு எண்ணற்ற வண்ணக் கோலங்கள் சமைப்பது புலமையின் இயல்பு.

முதல், கரு ஆகியவற்றில் வண்ணக் காட்சிகள் கண்டுணர்த் தியதைவிட, 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' போன்ற விதிகளாலும், 'அறம் புரி செங்கோல்', 'செவ்வியை ஆகுமதி' போன்ற சொல்லோவியங்களாலும் இயல் செயல்களைக் கொண்ட உரிப்பொருளுக்கும் நிறத் தொடர்பு ஏற்படுத்தியது பொருளிலக்கணம் கண்ட தமிழின் தனித்தன்மை என்று சொல்ல லாம்.

ஆக, பொருளிலக்கணத்தின் முப்பகுதியிலும் வண்ணங் களைத் தொடர்புபடுத்திச் சங்க இலக்கியப் பரப்பு முழுவதையும் ஆராய்வது பயன்மிக்க பணியாகும். ஆயினும் விரிவஞ்சி, ஏதே

னும் ஒரு வரையறைக்குள் நின்று கபிலர்தம் பாடல்களைக் காண்டல் ஈண்டு அமைவுடைத்து.

## நிறம் என்ற சொல்

மலைக் காட்சியை வருணிக்கும் இரண்டு இடங்களில் நீல மணி போன்ற நிறங் கொண்டிருப்பதாகக் கபிலர் குறிப்பிடு கிறார்.

மணிநிற மால்வரை (ஐங். 208)
மணிநிறங் கொண்ட மாமலைவெற்பு (ஐங். 224)

அதே நீலமணியினை உவமையாக்கித் தும்பி வருணிக்கப்படு மிடத்திலும் நிறம் என்ற சொல் இரண்டு இடங்களில் கையாளப் படுகின்றது. (ஐங் 215, கலித். 46). மேலும், மின்னல் (அக. 218), பகையைக் கொன்று தீர்த்த யானை மருப்பு, (கலித். 52), தேன் மிகச் செறிந்த தேனடை (புற. 109), தளிரின் இனிய பாங்கினை இழந்த தலைவியின் மேனி (நற். 309), நீர் (அக. 18, 332) ஆகிய வற்றைச் சுட்டு மிடங்களில் நிறம் என்ற சொல் வரக் காண் கிறோம்.

## வண்ணம்

கபிலர் பாடல்களுள் குறிஞ்சிப் பாட்டில் மட்டுமே வண்ணம் என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது. 'வண்ணமும் துணை யும் பொரீஇ' (31) என்ற இடத்தில் குணம் என்ற பொருளில் வரக் காணுகிறோம்.

'வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய' (114) என்ற இடத்தில் பல்வேறு மலர்களின் குவியலைக் காணுகிறோம். பற் பல நிறங்கள் கொண்ட பன்மையைச் சுட்ட இருமுறை வண்ணம் என்ற சொல் கையாளப்பட்டதாகக் கொள்ளத் தோன்றும். எனினும், 'பல நிறங்களையும் பல சாதிகளையும் உடைய மலர் கள் என்று நச்சினார்க்கினியர் பதவுரை தந்ததோடு, ''என, ஒன்று நிறமும் ஒன்று சாதி வேறுபாடும் கூறினார்'' என்று விளக்கமும் வரைந்துள்ளார். எனவே, வண்ண வண்ணத்த என்ற அடுக்கிலே ஒன்றே நிறம் குறித்ததெனலாம்.

''வண்ணம்—சாதி'' என்ற நச்சினார்க்கினியரின் விளக் கத்திலே சொல் வரலாறு பற்றிய ஒரு குறிப்பும் காண இட

மிருக்கிறது. சாதி வேறுபாட்டைக் குறிக்க வடமொழியிலே வர்ணம் என்றொரு சொல் உண்டு. ஆரியர், வருமுன் இந்தப் பாரத நாட்டில் இருந்த ஆதிமக்கள் கருநிறம் உடையர், அக் கருநிறத்தார்க்கும் தமக்கும் நிற வேறுபாடு சுட்டிய ஆரியர், நாளடைவில் பிறப்பு-வழி ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட பிரிவுகளை ஏற்படுத்திச் சாதிமுறை படைத்தனர். இந்தச் சாதிப் பாகுபாட்டின் ஆதித் தொடக்கம் நிறத்தையே அடிப் படையாகக் கொண்டது. நிறத்தைக் குறிக்கும் வர்ணம் என்ற சொல், சாதியையும் குறிக்க நேர்ந்த இந்தச் சொல் வரலாற்றை வடமொழி இலக்கிய வரலாறு எழுதிய மாக்டோனல் விளக்கியுள்ளார்.[1]

வர்ணம் என்ற வடமொழிச் சொல்லே தமிழில் வணணம் என ஆயிற்று எனக் கொண்டால் நச்சினார்க்கினியர் குறித்த சாதிப் பொருள், ஒருவகையில் தமிழ் நாட்டு வரலாற்றையும் விளங்கிக்கொள்ள உதவுகிறது எனல் வேண்டும். நச்கினார்க் கினியர் கருத்தினை ஏற்பதாயின் குறிஞ்சிப்பாட்டு எழுந்த சங்க காலத்தில் சாதி வேறுபாடு தமிழகத்தில் நிலவியது என்பதற்கு மேலும் ஒரு சான்று கிடைத்திருப்பதாகக் கொள்ளலாம்.

குறிஞ்சிப் பாட்டிலேயே 'வண்ண வரிவில் ஏந்தி' என மற்றொரு விளக்கமும் (124) வரக் காணுகிறோம். இங்கே 'வண்ணம்' என்ற சொல் நிறத்தைத் குறிக்கிறதா, அல்லது (நல்) இயல்பு குறிக்கிறதா—தெளிவில்லை. உரை வழங்கிய நச்சினார்க் கினியர் 'வண்ணத்தை உடைய' என உருபு விரிப்பது மட்டுமே செய்து விடுக்கிறார்.

## உரு

வடிவத்தைக் குறிப்பதோடு நிறத்தையும் குறிக்கின்ற உரு என்ற சொல்லும் கபிலர் பாடல்களிலே குறிஞ்சிப் பாட்டில் மட்டுமே இரண்டு—இடங்களில் வரக் காண்கிறோம். 'பல்வேறுரு வின் வனப்பமை கோதை' (103) என்ற இடத்தில் நிறப் பன்மை யும், 'எரியவர் உருவின் அங்குழைச் செயலை' (105) என்ற இடத்தில் நெருப்பினைப் போல் விளங்கும் அசோகின் சிவந்த நிறத்தையும் 'உரு' என்ற சொல்லால் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

1. Macdonell, Arthur A; A History of Sanskrit Literature p. 7 & p. 129

## குரு—கேழ்

'குருமயிர்ப் புருவை' (ஐங். 238), 'குருமயிர்க் கடுவன்' (ஐங். 275) என உயிரினங்களின் உரோம நிறம் குறித்தும், 'ஒண்கேழ் வயப் புலி' (ஐங். 274), இருங்கேழ் வயப்புலி (நற். 217) எனப் புலியின் நிறம் குரு, கேழ் என்ற சொற்கள் ஆளப்படுகின்றன. என்ன நிறம் என்ற விளக்கம் இல்லை.

## கபிலர் பாடல்களில் வருணனை

"இயற்கையைப் பாடலில் வடித்துக் கொடுக்கும் பாவலனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் இலக்கணங்கள் மூன்று. இயற்கையை எடுத்துரைக்கும் பாவலன் அதனை வெற்றுக்கண் கொண்டு காணும் காட்சி பெறுவோனாய் இருத்தல் பயனற்றது, இயற்கையைத் தன் உள்ளத்தே பதிக்கும் திறன் பெறும் அளவுக்கு அப்பாவாணன் காட்சிப்பேறு பெற்றிருக்க வேண்டும். மேலும், காணும் காட்சிக்குப் பொருள் தெளியும் திறனைத் தருகின்ற உணர்வுச் செல்வம் வேண்டும். கட்புலன் கண்டதை நெஞ்சுணர்வால் உணர்த்தல் மட்டும் போதுமோ? போதாது. தெளிவும் தென்பும் கொண்ட முறையில் ஆற்றல் மிக்க சொற்களிலே காட்சியின் சூழலையும், அதனூடு பின்னிக் கிடக்கும் கருத்தையும் வடித்தளிக்கும் வல்லமை பெற்றவனாகவும் இருத்தல் வேண்டும். இயற்கையைக் காணும் கண், அதனை ஊன்றி உணரும் நெஞ்சம், அதனைத் தெளிவோடு தென்பு சேர்த்துத் தீட்டும் சொல்வளம்—ஆகிய இம்மூன்று திறங்களும் கபிலருக்கு வாய்த்தன. இம் முத்திற ஆற்றலால் அவர்பால் உதித்த பாடல்கள், பயில்வோரின் நெஞ்சத் திரையிலே வடிவும் வண்ணமும் பெற்ற இயற்கைக் காட்சிகளை எழுப்புகின்றன..."[2].

கபிலரின் வருணனைத் திறத்தினை மேலே காட்டியவாறு டாக்டர் மு. வ. தெளிவுறுத்துகிறார். புலவரின் திறம் சொல் லோவியத்தை வழங்குகிறது; பயில்வோரின் திறம் காட்சியை மறுபடைப்புச் செய்கிறது. இரண்டிடத்தும் காட்சியில் நெஞ்சம் தோய்தல் வேண்டும். நெஞ்சத்தில் தோயவேண்டுமாவின், காட்சியில் உள்ள வண்ணங்களும் பதிய வேண்டும். புலவனுக்கும் பயில்வோனுக்கும் நிற உணர்வு இன்றியமையாதது.

---

2. வரதராசன், டாக்டர் மு., பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக். 134

இயற்கை வருணனைத் திறத்தால் கபிலர் எவரையும் கவர வல்லவர். கடும்புலியை எதிர்த்து வென்ற யானையின் சொல்லோவியங்கள் (கலித். 42, 46, 52), மலர்ந்த வேங்கை மரத்தைத் துயில் மயக்கத்தில் கண்டு அஞ்சிய நிலையில் யானைகள் தாக்கிச் சிதைக்கும் காட்சிகள் (கலித். 38, 49), மந்தி நல்லவை மருண்டு நோக்கக் கழைமீது நடந்து வரும் மயில் நடனம் (அக். 82) போன்ற காட்சிகள் மிகப் பலவாகும்.

காட்சிகளை வருணிக்கும்போது யானை முதுகில் கிடக்கும் கயிறுபோல் இரவில் மலையிடையே நீளும் வழி (அக. 126), மின்னலைப் போல் ஒளிரும் வேல் (கலித். 39) போன்ற உவமை விளக்கங்களும் மிகப்பலவாகக் கையாள்வது கபிலர் இயல்பாகும்.

ஒண்பூ வேங்கை (அக. 218), உறுபுலி (கலி. 38), நாறிணர்க் கொன்றை (பதிற், 67) எனச் சில அடைகள் கொடுத்து விளக்கும் இடங்கள் கபிலர் பாடல்களில் மிகப் பலவாகும். ஒரே வரியில் 'தன் கமழ் புது மலர் நாறும் நறு நுதல்' (அக. 238) எனவும், ஆய் நுதல் அணிகூந்தல் அம்பணைத் தடமென் தோள் (கலித். 40) எனவும் பல அடைகள் புணர்ந்து விளக்குக் இடங்களையும் கபிலர் பாடல்களில் காணலாம்.

வேங்கை சிதைக்கும் களிறு, இயற்கை அரங்கம் அமைத்துக் கொடுக்க விறலிபோல் நடனமாடும் மயில்,

பணைமருள் எருத்தின் பல்வரி இரும்போத்து
மடக்கண் ஆமான் மாதிரத்து அலறத்
தடக்கோட்டு ஆமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்ப ஈர்க்கும் (அக. 238)

எனக் காட்சிப்படும் புலி......இவை போன்ற வருணனைகளும் மிகப் பலவாகக் கபிலர் பாடல்களில் காணக்கிடக்கின்றன.

தொண்ணூற்றாறு மலர்களைப் பட்டியலிட்டுக் காட்டும் நெருக்கடி ஒரு புலவனுக்கு நேரிடுமானால், அந்தச் சோதனையில் கவிதைத் திறம் காட்டும் சதுரப்பாடு பெரும்பாலும் புலவனைக் கைவிட்டுவிடும். ஆனால், கபிலர் அத்தகைய சோதனையில் வெல்வதைக் குறிஞ்சிப் பாட்டில் காணுகிறோம்,

ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை

என நிறச் சிறப்பும் பிறவகை அடைச்சிறப்பும் கொண்டு. இடையிடையே மலர்ப் பெயர் மட்டும் தந்து பல அடிகளில் 96 மலர்களை அடுக்கித் தருகிறார்.

காட்சி விவரம், உவமை விளக்கம், அடைபுணர்க்கும் திறம், பட்டியல் இடுவதிலும் அலுப்புத் தட்டாத சதுரப்பாடு என்ற பல நற்றிறங்களும் கபிலர்தம் இயற்கை வருணனைகளில் சிறப்புற அமைந்துள்ளன.

## ஒரு கணிப்பு

இயற்கை வருணனைகளை யெல்லாம் ஒரு சேரத் தொகுத்து, நிதானமாகக் கணிக்கும்போது ஓர் உண்மை புலப்படுகிறது.

அத்தச் செயலைத் துப்புறழ் ஒண்தளிர் (ஐங். 273)

எரி மருள் வேங்கை இருந்த தோகை (ஐங், 294)

பொன்போல் விறற்கவின் கொள்ளுநின் நுதலே (ஐங் 229)

பூங்கண் வேங்கைப் பொன்னினர் (அக. 182)

மின்னொளிர் நெடுவேல் (அக. 203)

எரிமருள் தோன்றி (அக. 218)

உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கை (கலி. 38)

அணிமுகம் மதிஏய்ப்ப அம்மதியை நனிஏய்க்கும்
அணிமுகம் (கலி. 64)

பின்னுவிடுகதுப்பின் மின்னிழை மகளிர் (குறு. 246)

பொன்னி னன்ன பூ (பதிற். 61)

இவ்வாறு மி..ப் பல இடங்களில் நிறம் இன்னதுதான் என நாம் தான் உய்த்துரை வேண்டியுள்ளது.

கறங்கு வெள் அருவி (அக. 118)

இருங்கல் வியலறை சிவப்பு (அக. 238)

அருவி பாய்ந்த கருவாற் மந்தி (அக 382)

வெண்தலை மாமழை (ஐங், 209)

பாசடை நிவந்த பனிமலர்க் குவளை (ஐங். 225)

இருளுறழ் இருங்கூந்நல் (கலி. 48)

செறாஅச் செங்கண் (கலி 54)

தேமொழித் துவர்ச் செவ்வாய் (கலி. 55)

தினைத்தா ளன்ன சிறுபசுங்கால (குறுந். 25)

பைந்தாட் செந்தினை (குறுந். 198)

பகழி யன்ன சேயரி மழைக்கண் (நற். 13)

கருங்கால் வேங்கை (நற். 217)

மாயிரும் பல்தோல் (பதிற், 62)

வெண்போழ்க் கண்ணி (பதிற். 67, குறிஞ் 115)

இவ்வாறு நிறத்தை வெளிப்படையாகச் சுட்டப்படும் இடங்கள் நம் கண்ணிலும் கருத்திலும் பதிகின்றன என்பது உண்மைதான்.

ஆனால், கபிலரின் வருணனைச் சொல்லோவியங்கள் அனைத்தையும் நெஞ்சத்திரையில் நிறுத்தி வைத்துக் கணித்துப் பார்க்குமிடத்துச் செயல் விளக்க வருணனைக்குக் கொடுத்த அளவுக்கு நிற விளக்க வருணனைக்குக் கபிலர் கொடுந்த அளவு குறைவாகவே காணப்படுகிறது. எண்ணிக்கை என்று தொகை யளவில் பார்த்தால் இந்தக் கணிப்பு அத்துணைப் பொருத்த மெனத் தோன்றாது. எண்ணிக்கை யளவினும் இக்கருத்து ஏற்புடையதே; எனினும், சொல்லோவியங்களைத் தீட்டு மிடத்துக் கபிலரின் புலமைத் திறம் எங்கே மிகுதியாகத் தொழிற்பட்டிருக்கிறது என்ற அணுகல் முறை கொண்டு கணித்ததே இம்முடிபு.

## முடிவுரை

நிறம் குறித்த சொற்கள் கபிலரின் பாடல்களிலே பெற்ற ஆட்சி நிலையை இக்கட்டுரை முதலில் விளக்கியது. பின்னர்க் கபிலரின் வருணனைப் பாங்கு இன்னதென விளக்கிற்று. அடுத்து, கபிலரின் வருணனைகளில் நிறம் வெளிப் படையாகவும் குறிப்பாகவும் விளக்கப்படுகிறதெனினும், செயல் விளக்க நாட்டத்தை நோக்குமிடத்து நிறப் பதிவு முதன்மை பெறவில்லை என்ற கணிப்புத் தந்து கட்டுரை முடிகிறது.

## பின்னிணைப்பு

## கபிலர் பாடல்களில் நிறங்களை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் புலப்படுத்தும் பகுதிகள்

நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே — அக. 2:17

நீர்நிறங் கரப்ப ஊழுறுபு உதிர்ந்து
பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்று — ,, 18:1—2

(ஒப்பு: கொடியவும் கோட்டவும் நீரின்றி
நிறம்பெற) — ,, 54;1

மலிபெயற் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயலரு நிலைஇய பெயலேர் மனமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
தளிரேர் மேனி மாஅ யோயே — ,, 42:1—4

கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅன் ,, 118:1

இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய் — ,, 118:7

மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை இமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள் — ,, 158:3—4

இறும்புபட் டிருளிய இட்டருஞ் சிலம்பின்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி — ,, 128:9—12

பூங்கண் வேங்கைப் பொன்னினர் மிலைந்து — ,, 182:1

மின்னொளிர் நெடுவேல் இளையோன் — ,, 203:10

வாணிற உருவின் ஒளிறுபு மின்னி — ., 218:3

வண்டிறை கொண்ட எரிமருள் தோன்றியொடு
ஒண்பு வேங்கை கமழும் — ,, 218:20—21

இருள்முகைச் சிலம்பின் — ,, 238:4

பணைமரு ளெருத்தின் பல்வரி இரும்போத்து
மடக்கண் ஆமான் மாதிரத் தலறத்
தடக்கோட் டாமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்ப ஈர்க்கும் — ,, 238;5—9

| | | |
|---|---|---|
| நளிமுகை யுடைந்த நறுங்கா ரடுக்கத்து | அக | 238 : 15 |
| வாளிலங் கருவி தாஅய் | ,, | 278 : 7 |
| பனிபொரு மழைக்கண் சிவப்பு | ,, | 11 |
| மணிமருள் மேனி ஆய்நலம் தொலைய | ,, | 13 |
| நீர்நசை மருங்கின் நிறம் பார்த் தொடுங்கிய<br>பொருமுரண் உழுவை தொலைச்சிக்<br>கூர் நுனைக் குருதிச் செங்கோட்டு<br>அழிதுளி கழாஅ | ,, | 332 : 3—5 |
| அருவி பாய்ந்த கருவிரல் மந்தி | ,, | 382 : 9 |
| பொன்வீ மணியரும் பினவே | ஐங் | 201 : 3 |
| ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன் | ,, | 205 : 3 |
| மழைதலை வைத்தவர் மணிநெடுங்குன்றே | ,, | 207 : 4 |
| பொன்மலி புதுவீத் தாஅம் அலரிநாட்டு<br>மணிநிற மால்வரை | ,, | 208 : 3—4 |
| வெண்டலை மாமழை சூடித்<br>தோன்றலா னாதவர் மணிநெடுங் குன்றே | ,, | 209 : 4—6 |
| மணிபுரை வயங்கிழை நிலைபெற | ,, | 210 : 4 |
| கட்டளை யன்ன மணிநிறத் தும்பி | ,, | 215 : 1 |
| கருங்கால் வேங்கை மாத்தகட் டொள்வீ<br>இருங்கால் வியலறை வரிப்பத் தாஅய் | ,, | 219 : 1—2 |
| நன்மா மேனி பசப்ப | ,, | 22 : 13 |
| மணிநிறங் கொண்ட மாமலை வெற்பின் | ,, | 224 : 2 |
| அம்ம வாழி தோழி பைஞ்சுவைப்<br>பாசடை நிவந்த பணிமலர்க் குவளை | ,, | 225 : 1—3 |
| பொன்போல் விறற்கவின் கொள்ளுநின்<br>நுதலே | ,, | 229 : 4 |
| பொன்போல் விறற்கவின் தொலைத்த | ,, | 230 : 4 |
| திதலை மாமை தேயப்<br>பசலை பாயப் பிரிவு தெய்யோ | ,, | 232 : 3—4 |
| மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய் | ,, | 234 : 1 |
| குரூஉமயிர்ப் புருவை ஆசையின் அல்கும்<br>மாஅல் அருவித் தண்பெருஞ் சிலம்ப | ,, | 238 : 2—3 |

| | | |
|---|---|---|
| செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே | ஐங். | 255 : 4 |
| பைம்புறப் படுகிளி | ,, | 260 : 3 |
| இளம்பிறை யன்ன கோட்ட கேழல்<br>களங்கனி யண்ண பெண்பாற் புணரும் | ,, | 264 : 1—2 |
| புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை<br>வளைவெண் மருப்பிற் கேழல் புரக்கும் | ,, | 265 : 1—2 |
| கருவிரல் மந்திக் கல்லா வன்பறழ் | ,, | 272 : 1 |

(ஒப்பு : கல்லாக் கடுவன் கணமலி சுற்றத்து
மெல்விரல் மந்தி குறைகூறும்
செம்மற்றே, கலி. 40 : 15—16)

| | | |
|---|---|---|
| அத்தச் செயலைத் துப்புறழ் ஒண்தளிர் | ஐங். | 273 : 1 |
| ஒண்கேழ் வயப்புலி | ,, | 274 : 2 |
| குரங்கின் தலைவன் குருமயிர்க் கடுவன் | ,, | 275 : 1 |
| கருவிரல் மந்திக் கல்லா வன்பார்ப்பு | ,, | 280 : 1 |
| இரும்பல் கூந்தற் கொடிச்சி | ,, | 281 : 3 |
| பைம்புறச் சிறுகிளி கடியும் நாட | ,, | 283—3 |
| அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி<br>குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால் | ,, | 284 : 1—2 |
| கவரும் தோழியென் மாமைக் கவினே | ,, | 286 : 5 |
| பைங்குரல் ஏனற் படர்தரும் கிளி | ,, | 289 : 2 |
| அறம்புரி செங்கோல் மன்னனிற் | ,, | 290 : 1 |
| எரிமருள் வேங்கை இருந்த தோகை | ,, | 294 : 1 |
| பைஞ்சுனைப் பருவாய்க் குவளை | ,, | 299 : 2 |
| கயமல ருண்கண்ணாய் | கலி. | 37 : 1 |
| உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கை | ,, | 38 : 6 |
| ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்<br>வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்<br>தேனி னிறாலென ஏணி இழைத்திருக்கும்<br>கானக நாடன் மகன் | ,, | 39 : 7—10 |

புனவேங்கைத் தாதுறைக்கும்
பொன்னறை முன்றில் கலி. 39 : 33

மைதவழ் வெற்பன் ,, 41

மணிபோலத் தோன்றும் மணிபோலத்
தோன்றும்

மண்ணா மணிபோலத்
தோன்றுமென் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை ,, 41 : 32—34

வரைமிசை மேற்றொடுத்த நெய்க்கண்
இறாஅல்

மழைநுழை திங்கள்போல் தோன்றும்
,, 42 : 22—23

மைபடு சென்னிப் பயமலை ,, 43 : 6

தகையவர் கைச் செறித்த தாள்போலக்
காந்தள் முகையின்மேல் தும்பி இருக்கும் ,, 8—9

விடர்வரை எரிவேங்கை இணரேய்க்கும ,, 45 : 17

மாஅ லஞ்சிறை மணிநிறந் தும்பி ,, 46 : 2

கனைபெயல் நீலம்போல் கண்பனி
கலுழ்பவால் ,, 48 : 15

பொன்னுறை மணியன்ன மாமைக்கட்
பழியுண்டோ ,, 17

போதெழில் மலருண்கண் ,, 49 : 10

இருளுறழ் இருங்கூந்தல் ,, 18

நறுநுதல், பீரலர் அணிகொண்டு
பிறைவனப் பிழவாக்கால் ,, 53 : 15

நாந்தநா றிருங்கூந்தல் ,, 54 : 5

செறாஅச் செங்கண் புதைய வைத்து ,, 10

மின்னொளிர் அவிரறல் இடையோழும்
பெயலேபோல்

பொன்னகை தகைவகிர் வகைநெறி வயங்கிடப்
போழிடை யிட்ட கமழ்நறும் பூங்கோதை
இன்னகை இலங்

கெயிற்றுத் தேமொழித் துவர்ச் செவ்வாய் ,, 55 : 1—4

கொடியென மின்னென அணங்கென ,, 57 : 4

பேரெழில் மலருண்கண் ,, 58 ; 2

காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு
சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற்
கொடிபுரை நுசுப்பினாய் கலி. 3—4

தழைநெகிழ் பிணிநிவந்த பாசடைத்
தாமரை ,, 59 : 1

சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட
நறுநுதல்
மணங்கமழ் நறுங்கோதை மாரிவீழ்
இருங்கூந்தல்
நுணங்கெழில்
ஒண்தித்தி நுழைநொசி மடமருங்குல்
வணங்கிறை வரிமுன்கை வரியார்ந்த
அல்குலாய் ,, 60 : 1—4

பேரமர் உண்கன் ,, 16

மையின் மதியின் விளங்கும் முகத்தாரை ,, 62 ; 14

அணிமுகம் மதியேய்ப்ப அம்மதியை
நனியேய்க்கும்
அணிமுகம் மாமழைநின் பின்னொப்பப்
பின்னின்கன்
விரிநுண்ணூல் சுற்றிய ஈரிதழ் அலரி
அரவுக்கண் அணியுறழ் ஆரல்மீன்
தகையொப்ப ,, 64 : 1—4

முற்றெழில் நீல மலரென உற்ற
கருப்பீர் வடியன்ன உண்கட்கும் ,, 20—21

மன்பதை யெல்லாம் மடிந்த இருங்கங்குல் ,, 65 : 3

தினைத்தா ளன்ன சிறுபசுங் கால் குறுந். 25 : 3

நன்றுமன் வாழி தோழி உண்கண் ,, 38 : 4

மால்வரை இழிதரும் தூவெள் ளருவி ,, 95 : 1

புல்வீழ் இற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி அருவியிற் றோன்று நாடன் ,, 106 : 1—2

செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி ,, 187 : 1

கரும்புமருள் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்னபால் வார்வு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிக்கோட்
பைங்குரல் ,, 198 ; 2—4

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கி குறுந். 246 : 1—2

பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர் ,, 6

நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப ,, 249 : 2

குண்டுநீர்ப் பைஞ்சுனை பூத்த குவளை ,, 291 : 6

முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன் ,, 312 : 2

சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇ ,, 385 : 2

பகழி யன்ன சேயரி மழைக்கண் நற். 13 : 4

பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே ,, 13 : 9

மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி ,, 32 : 1—2

ஒளிறுவெள் ளருவி ஒண்துறை மடுத்து ,, 65 : 4

இருங்கேழ் வயப்புலி வெரீஇ அயலது
கருங்கால் வேங்கை ஊறுபட மறலி ,, 217 : 3—4

கருங்கால் வேங்கைச் செவ்வீ வாங்குசினை ,, 222 : 1

பசுங்காழ் அல்குல் ,, 5

நொச்சி மாஅரும் பன்ன கண்ண—
(ஞெண்டு...) ,, 267 : 1

நெகிழ்ந்த தோளும் வாடிய வரியும்
தளிர்வனப் பிழந்தஎன் நிறனும் நோக்கி ,, 308 : 2

சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா ,, 359 : 1

கருங்கால் வேங்கை ஊசல் தூங்கி ,, 368 : 2

ஐவன வெண்ணெற் குறாஉம் நாடன் ,, 373—4

காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கைப்
பாவமை இதணம் ஏறிப் பாசினம்
வணர்குரற் சிறுதினை ,, 6—8

இறைஞ்சில குரல பைந்தாட் செந்தினை
வரையோன் வண்மை போலப் பலவுடன்
கிளையோ டுண்ணும் வளைவாய்ப் பானம் ,, 376 : 2—4

பொன்னி னன்ன பூவிற் சிறியிலை பதிற். 61 : 5

நிலவி னன்ன வெள்வேல் பாடினி
முழவிற் போக்கிய வெண்கை ,, 16—17

மழையென மருளும் மாயிரும் பல்தோல் பதிற். 62 : 2
வந்துபுறத் திறுக்கும் பசும்பிசிர் ஒள்ளழல் ,, 5
பொலம்பூண் வேந்தர் பலர்தில் லம்ம ,, 64 : 2
இருஞ்சே றாடிய மணல்மலி முற்றந்து ,, 6
மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல் ,, 16
நாறிணர்க் கொன்றை வெண்போழ்க்
கண்ணியர் ,, 67 : 13
பாய லின்மையின் பாசிழை ஞெகிழ ,, 68 : 15
வண்ணமும் துணையும் பொரீஇ குறிஞ். 31
அவிர்துகில் புரையும் அவ்வெள் ளருவி ,, 55
பொன்னெறி மணியிற் சிறுபுறம் தாழ்ந்தஎம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
உள்ளகம் சிவந்த கண்ணேம் வள்ளிதழ்
ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
உரிதுநா றவிழ்தொத்துந்தூழ் கூவிளம்
எரிபுரை யெதுழம் சுள்ளி கூவிரம்...
சேடல் செம்மல் சிறுசெங் குரலி...
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்...
பாரம் பீரம் பைங்குருக் கத்தி...
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும் ,, 59—95
பல்வே றுருவின் வனப்பமை கோதை ,, 103
எரியவிர் உருவின் அங்குழைச் செயலை ,, 105
வண்ண ஏண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல வெண்போழ்க்
கண்ணி ,, 114—115
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத்
தடக்கையின் வண்ண வரிவில் ஏந்தி ,, 123—124
இரும்பிணர்த் தடக்கை இருநிலம் சேர்த்தி ,, 163
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில் ,, 204
வான மாமலை வாய்சூழ்பு கறுப்ப ,, 227
பொன்னியற் புனைதோட்டியால் புற. 14 ; 3

சேயிழை பெருகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலிந்த மாயிதழ்க் குவளை புற 105 : 1—2

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர் ,, 107 : 2

(ஒப்பு: சாரல் நாட செவ்வியை ஆகுமதி—குறு 18

கோஒல் செம்மையின் சான்றோர்
பல்கி—புற) : 117

நான்கேழ் அணிநிற ஓரி பாய்தலின் ,, 109 : 7

நீலத் திணைமலர் புரைவும் உண்கண் ,, 111 : 3

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி ஓடினும் ,, 117 : 1—2

கருந்தாள் போகி ஒருங்குபீள் விரிந்து
கீழும் மேலும் எஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப ,, 120 : 7—11

இரும்பல் கூந்தல் மடந்தையர் தந்தை ,, 17

பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை யறியா மால்வரை அடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை
நெடுவேல் ,, 200 1—5

இருங்கட லுடுத்த வையகத்து ,, 201 : 17

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுதல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும் ,, 202 : 18—20

நாவிடைப் பஃறேர் கோலச் சிவந்த (ஈங்கு)
ஒளிறொள் வா(ள)டக் குழைந்தபைந் தும்பை ,, 347 : 2—3

# 7. கீழ்க்கணக்கு

அன்னி தாமசு

அகமும் புறமும் அறமும் பற்றிய திருக்குறள் முதலான பதினெட்டு நூல்கள் கீழ்க்கணக்கு எனப்பட்டன.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பனவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

ஏறத்தாழ யாப்பருங்கலக் காரிகை உரைக்காலமான பத்தாம் நூற்றாண்டை யொட்டி இப்பெயர்நிலை வழங்கியதாகத் தெரிகின்றது.[1] இன்றைய (கழகப்) பதிப்பில், இன்னிலையும் கைந்நிலையும் இருவேறு நூல்களாகக் கொள்ளப்பட்டுள்ளமை யால் இக்கட்டுரைக்குப் பத்தொன்பது நூல்கள் அடிப்படையாய் அமைகின்றன.

அறம் பொருளாக இயன்ற நூல்களை விட, அகம் தொடர் பாக அமைந்த நூல்களும் நிறம் பற்றிய எண்ணங்கட்கு மிகுதி யான இடம் அளிக்கின்றன. புறச்செய்தி கூறும் களவழி நாற்பது ஓரளவு இடைப்பட்ட பயிற்சியைத் தருகின்றது. அற நூலில் நிறப்பெயர் பயிலுமிடமும் பெரும்பாலும் வேறு தன்மை குறிக்கும் பொருள்நிலை கொள்வது சிந்தனைக்குரியது.

## சொற்கள்

நிறம் என்பதைக் குறிக்க வரும் பொதுச் சொற்கள் பல. கீழ்க்கணக்கு நூல்கள் சங்கநூல் போன்று நிறம் எனும் சொற் பயிற்சியைத் தருகின்றன.

பூவைப் புதுமலர் ஒக்கும் நிறம் (நான்மணி 1)

---

1. யாப்பருங்கலக்காரிகை, உ. வே. சா. பதிப்பு, (1968), பக் 150

(2) வண்ணம் எனும் சொல்லின் பயிற்சி அடுத்த நிலையில் அமைகின்றது.

இந்தின் கருவண்ணம் கொண்டன்று எழில்வானம்
(கார் 40)

(3) உரு(வு) என்பது, இன்னும் சிறிது அருகிப் பயில் கின்றது.

ஆறுவேறுருவின ஆயினும் ஆ பயந்த
பால் வேறுருவின அல்லவாம் (நாலடி 118)

தொல்காப்பியம் உவமையியலில் (1) 'உரு' என நிறம் குறிக்கப்பட்டு, இதன் மரபுப் பழமையைக் காட்டுகின்றது. தொல்காப்பியம் 'நிறத்துரு' எனக் கூறுவதும் (சொல். 373) நினைக்கத்தக்கது.

(4) 'கேழ்' ஈரிடங்களில் நிறம் சுட்டி வருவதைக் கீழ்க் கணக்கு காட்டுகின்றது.

மாக்கேழ் மட நல்லாய் (நாலடி 41)

'குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே' (சொல், 303) என்ற தொல் காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதும்போது நச்சினார்க் கினியர், 'கெழு, கேழ் என நீடலும் ஈறுகெடுதலும் கொள்க. கெழு—என்று வரும் இடம் உளதாயின் கொள்க'[2] எனக் கூறுவ தால், இச் சொல்லும் பண்டை மரபுத் தொடர்ச்சியுடன் அமைந்தது எனக் கொள்ளல் சாலும்.

இயல்பு : 1. திரிதல்

நிறம், நீங்காது தங்கும் இயல்பினதாகச் சிலவற்றில் காணப்பட்டாலும், மாறும் தன்மையினதாகவும் அமைகின்றது. 'நிறந் திரிந்து வேறாய' (ஐந். ஐம். 27), 'நின்றுழி நின்றே நிறம் வேறாம்' (நாலடி 183) எனும் குறிப்புகள் இங்குச் சுட்டத் தக்கன.

---

2. தொல். சொல். நச்சினார்க்கினியம், கழகம், (1962), பக். 192,

தொல்காப்பியம் 'பசப்பு நிறன் ஆகும்' (சொல். 308) எனக் கூறிய போதும், அதனை நிறமாகவன்றி நிறம் திரிந்ததாகக் கொள்ளும் கருத்தின் ஏற்புடைமை இங்குச் சுட்டத் தக்கது. கீழ்க்கணக்கிலும் பசலை-பசப்பு பற்றிய குறிப்புகள், இயல்பான உடல் வண்ணம் மாறிய சூழலிலேயே ஆளப்பட்டமை இவ் எண்ண முடிவை அளிக்கின்றது. பசப்பு, இயல்பாகவோ நிலையாகவோ அமையாது, தோன்றுதலும் கெடுதலுமாக அமைவதைத் திருக்குறளின் பசப்புறு பருவரல் பகுதியும் (1181—91) பிறவும் உணர்த்துகின்றன.

உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது (1185)

காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்றோள் பசப்பு (1265)

திணைமொழி ஐம்பது, 'மணி எழின் மேனி மலர் பசப்புரத் … …துறந்தான்' (47) என்பதில் இத் 'திரிதலை' விளக்கிற்று.

2. தோன்றல்

ஒரு நிறப் பொருள் இன்னொரு நிறப் பொருளுடன் கலக்கும் போது அல்லது ஒரு நிறம் வேறொரு நிறத்துடன் இணையும்போது, பிறிதொரு நிறம் தோன்றுதல் உண்டு. இத்தகு கலப்புநிலை காரணமாக ஏற்பட்ட நிறக் கோட்பாட்டு எண்ணம் கீழ்க்கணக்கில் அமையவில்லை. ஆயின், இயல்பாக இல்லாத ஒரு நிறம் இருப்பதாகத் தோற்றம் தரல், இன்று வாழ்வில் கண்கூடாக அமைவது போல, அன்றும் அமைந்ததாகக் கொள்ள முடிகின்றது.

மணிநிற மாமலை (ஐந். ஐம். 2)
பெரிய உலவா இருங்கழி (நாலடி 168)
கருங் கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி (கார் 37)
கருங் கொண்மூ வாய்திறந்து மின்னுப் போல் (நாலடி 8)

உயரமும், அகற்சியும், ஆழமும் பற்றி நீல, கருமை நிறங்கள் தென்படும் இப்பாங்கு சுட்டந் தக்கது.

3. கெடுதல்

நிறங்கள் திரிவதும், தோன்றுவதும் போன்று கெடுதலும் உண்டு. மென்மையான நிறம் வன்மையான நிறத்தில் தன்னை முற்றிலும் இழந்து விடுதலை நிறக் கலவை ஆய்வு காட்டுகின்றது. மென்மையான நிறப்பொருள் அளவில் மிக்கு இருப்பினும் ஆற்றல் குன்றியிருத்தல் பற்றி, கெடுதலோடு திரிதல் ஏற்படுத்தினும் தனித்தல் இல்லை. நிறம் அற்ற தன்மையினதான ஒரு பொருள் வேறு நிறம் பெறலால் தன் இயல்பு கெடுதலையும் இங்குச் சுட்டலாம். அறிவியல் அடிப்படையில், நிறம் அற்றதாக அமையும் நீர், பாலுடன் கலத்தலால் தன் நிலை தோன்றாது வெண்மையாதலைச் சுட்டும் கீழ்க்கணக்குப் பகுதி இங்கு நினைக்கத் தக்கது.

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் (நாலடி. 177)

நிறங்களுள், நீலம், வன்மையான நிறமாக அமைகின்றது. நீலப் பொருளின் நிறம் கெடுவதோ திரிவதோ அருமை. நிறத் தன்மை அருகி அது கருமையாதல் ஒருவேளை வாய்ப்பாகலாம். 'நீல நிறத்தை உண்ட பொருள் வேறொரு நிறத்தைக் காட்டுதல் முடியாது' எனும் கீழ்க்கணக்குச் செய்தி இதனைப் பண்டைத் தமிழன் உணர்ந்ததைக் காட்டுகின்றது.

ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத
மூர்க்கர்க்கு யாதும் மொழியற்க—மூர்க்கன் தான்
கொண்டதே கொண்டு விடானாம் ஆகாதே
உண்டது நீலம் பிறிது (பழ. 94)

கருமையும் நீலமும் மயங்குவதால், இங்கு நீலம், கருநிறத்தையும் சுட்டியிருக்கலாம்.

கரிய பொருள், நிறம் கெடாத வண்மையுடன் அமைந்ததை,

பாலாற் கழீஇப் பல நாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக்கு இருந்தன்று (258)

என நாலடியார் கூறுவதும் இங்குச் சுட்டத்தக்கது.

## நிறங்கள்

கீழ்க்கணக்கு நூல்கள், பெயர் சுட்டிக் குறிப்பிடும் நிறங்கள் சிலவே.

(1) செம்மை

ஒண் செங் குருதி உமிழும் (கள 14)

(2) கருமை

கரு மணியிற் பாவாய் (குறள் 1123)

(3) பசுமை

எஞ்ஞான்றும் பச்சோலைக் கில்லை யொலி
(நாலடி 255)

(4) வெண்மை

வெண்மணற் கானல் (திணை. நூற். 51)

(5) பொன்மை : மஞ்சள்

பொன்நிறச் செந்நெல் (நாலடி 269)
மஞ்சள் அழகும் அழகல்ல (நாலடி 131)

(6) நீன்மை :

மானீல மால்வரை நாட கேள் (திணை. நூற் 6)

அடிப்படை நிறங்கள் செம்மை, மஞ்சள், பசுமை, என மூன்று எனவும், எல்லா நிறங்களும் இணைந்தமையும் வெண்மை தனிநிறம் அல்ல எனவும், எந்நிறமும் அற்ற நிலையே கருமை எனவும் அறிவியலடிப்படையில் அமையும் கருத்து[3] நிலை

---

3. Primary Colors,—red, yellow and blue. In a way black is not a color. It is the absence of all light. In other words if you have no light, you have no color; and when you have no color you have black. White, in nature, is the presence of all light. Therefore white is a combination of all colors The New Book of Knowledge, Vol 4. Grolier, New York. 1973, p. 139.

இங்குக் காணப்படவில்லை. வெண்ணிற ஒளியின், காட்சியில் படுகின்ற ஏழுவகை நிறக்கதிர்கள் பற்றிய எண்ண முழுமை இங்கு அமையவில்லை.

சங்க இலக்கியத்தில் திருவில் (அகம். 175) எனும் குறிப்பு அமையினும் வான வில்லின் பன்னிற எழில் பற்றிய குறிப்புக் காணப்படவில்லை. ஆயின் சிலம்பில்

ஆங்கொன்று காணாய் அணியிழாய் ஈங்கிதுகாண்
அஞ்சனப்பூழி அரிதாரத்தின் னிடியல்
சிந்துரச் சுண்ணஞ் செறியத்தூயத் தேங்கமழ்ந்து
இந்திரவில்லின் எழில்கொண் டிழுமென்று
வந்தீங் கிழியும் மலையருவி ஆடுதுமே (24. 2)

எனும், பகுதியில், அஞ்சனப்பூழி (கருமை/நீலம்), அரிதாரம் (மஞ்சள்), சிந்துரச் சுண்ணம் (செம்மை) என முந்நிற நிலை அமைவதைக் கொள்ள முடிகின்றது. வானவில்லின் எழுநிறங் களைக் கட்புலனால் வேறுபடுத்திக் காண்டல் எப்போதும் எளி தன்று எனும் அறிஞர் பொது எண்ணமும், வானவில்லின் சில புகைப்படங்களில் நீன்மை—மஞ்சள்—செம்மை எனும் முந்நிறமே வெளிப்படத் தோன்றுவதும் இங்கு நினைக்கத் தக்கன.

கீழ்க்கணக்கு, வானவில்லை ஐந்து நிறத்தினதாகக் காட்டு கின்றது.

ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை
யிந்துருவின் மாந்தி யிருங்கொண்மூ—முந்துருவி
வொன்றாய் உருமுடைத்தாய்ப் பெய்வான்
போற்பூக்கென்று
கொன்றாய் கொன்றாயெற் குழைத்து
(திணை. நூற். 104)

ஏழு நிறங்களில், Violet, Indigo போன்ற, நீலத்தில் மயங்கித் தெளிவாக வெளிப்படாத நிறங்களை விட்டு, ஐவண்ணம் அமைந்ததாகச் சுட்டினர் எனலாம்.

## 1. செம்மை

இந்நிறப்பொருண்மை குறித்து,
செம்—செவ்வேல்—(நான்மணி 20)
சே—புகழ்ச் சேவடி—(ஏலாதி)
சிவப்பு—தாம் சிவப்புற்றன கண்—(ஐந். எழு 7)

எனும் சொல் நிலைகளே ஆளப்படுகின்றன.

திருமகளைக் குறிக்கும் செய்யவள் (குறள் 167) என்பதும், அந்திச் செவ்வானைச் சுட்டும் செக்கர் (ஐந். ஐம். 7) என்பதும் இந்நிறப்பண்பை அடியாகக் கொள்கின்றன எனலாம்.

செந்நிறம், மேற்குறிப்பிட்ட சொற்களால் சுட்டப்படாது செந்நிறமுடைய பிறபொருட்களாலும் சுட்டப்படல் புலப்படுகின்றது.

அரக்கு—அரக்காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற் கன்னோ
பாற்கானம் ஆற்றின் கொல்லோ—அரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையென
அஞ்சிப் பின்வாங்கும் அடி (நாலடி 396)

அரத்தம்—அரத்தம் உடீஇ அணிபழுப்பப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூடி (திணை. நூற். 144)

அத்து (துவர்)—அத்திட்ட கூறை (நாலடி 281)

சூழல் காரணமாகவும், 'நிறம்' என்ற சொல்லிணைவு காரணமாகவும் இந்நிறம் புலப்படுத்தப்படுகின்றது.

(செக்கர்) — நிறம் கூறும் மாலை வரும் (திணை. ஐம். 48)
அணிநிற மாலைப் பொழுது (திணை. ஐம். 9)

(செம்) — எரி நிற நீள்பிண்டி (திணை. நூற். 63)

செந்நிறமுடைய உவமைப் பொருளின் அடிப்படையால், கற்போர், நிறத்தைத் தெரிந்தும் புரிந்தும் கொள்வதற்கும் கவிஞர் வாய்ப்பமைக்கின்றனர்.

உதிரந் துவரிய வேங்கை உகிர்போல்
எதிர் முருக்கரும்ப (ஐந். ஐம். 31)

எரி சிதற விட்டனின் ஈர் முருக்கு (திணை. நூற். 64)

பவழம் சிவறியவை போலக் கோபம்
தவழும் தகைய புறவு (கார் 5)

இவற்றை நோக்க, இவையனைத்தும் ஒரே செந்நிறத்தையன்றிச் சிறிது நிறம் மங்கியும் மிகுந்தும் வேறுபட்டும் அமைந்த நிலைகளையும் சுட்டினவோ என் எண்ண வேண்டியுள்ளது. தனிச் சொல் இன்றியும், இப் பெயர்—பொருள் நிலைகளால் சிறு நிறவேறுபாடுகள் சுட்டப்பட்டன எனலாம்.

செம்மை எனும் பண்புச் சொல், சிவப்பு எனத் தொழிற் படுத்தப்பட்டு (நச்சினார்க்கினியர் உரை) வெகுளிப் பொருளை உணர்த்துவதாகத் தொல்காப்பியத்தில் கொள்ளப்பட்டபோதும் (கருப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள—தொல். சொல் 372), தொடர்ந்து வரும் நூற்பாவிற்கு ஏற்ப (நிறத்துரு உணர்த் தற்கும் உரிய என்ப—மேற்படி 373) அது நிறத்தைத் குறிப் பதைக் கீழ்க்கணக்குக் காட்டுகின்றது.

உண்கண் சிவப்ப அழுதேன் (ஐந். ஐம். 44)

பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச்
சேந்தனவாம் சேயரிக்கண் தாம் (ஐந். ஐம். 15)

## 2. கருமை

இந் நிறம் சுட்டியும் பல சொல் ஆட்சி அமைகின்ற தைக் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டுகின்றன.

கரு—இந்தின் கருவண்ணம் கொண்டன்று
எழில்வானம் (கார். 40)

பார்—கருவியல் கார்மழை கால்கலந் தேந்த
(திணை. ஐம். 25)

கரி—புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து (குறள். 277)

கறை—கறைக் குன்றம் (நாலடி 231)

இரு—முல்லை நறுமலர் இருந்தும்பி (ஐந். ஐம். 6)

மா—மடியுளாள் மா முகடி என்ப (குறள் 617)

மை—இறக்குமை யாட்டை
உடம்படுத்து வெளவுண்டார் இல் (பழ. 174)

இங்கும், நிறப்பெயரின்றியும் நிறம் உணர்த்தப்படும் நிலை காணப்படுகின்றது. இருள், ஈந்தின் பழம் என்பன ஒப்புமை நிலையால் கருமையை உணர்த்துகின்றன.

இருள் நடந்தன்ன இருங்கோட்டெருமை
(திணை. நூற். 148)

இந்துருவின் மாந்தி, இருங்கொண்மூ (திணை. நூற். 104)

(இருள்—இருண்மை—இரு என நின்று கருமைக்கு
ஆகியது போலும்)

மல்லர்க் கடந்தான் நிறம் போன்று
இருண்டெழுந்து (ஐந். ஐம். 1)

கீழ்க்கணக்கின் ஒருசில பகுதிகள், கருமையும் நீன்மையும் வேறுபடுத்தாத மயங்கிய நிலையைக் காட்டுகின்றன. கருநீல நிறம் கருமையாகவே கருதப்பட்டதாகத் தெரிகின்றது. கரிய நிறத்தினுக்கு நீனிறப் பொருளை உவமை ஆக்கலும் (மணிக்கார்-திணை. நூற். 107), மறித்து,

அஞ்சனக் காயா மலர (திணை. ஐம். 21)
கண்ணியல் அஞ்சனம் தோய்ந்தபோல் காயாவும்
நுண்ணரும்பு ஊழ்த்த புறவு (கார் 8),

என நீலநிறத்தினுக்குக் கரிய பொருளை ஒப்புக் காட்டலும் இவ் எண்ணத்தை எழுப்புகின்றன.

'கருமை' என்பதால் பசுமை எனும் நிறநிலையும் கீழ்க் கணக்கில் சுட்டப்படுகின்றது. மாயோனாகிய திருமாலை (தொல்காப்பியம்), கரியவனாகவும் (சிலம்பு), பூவைப்பூ வண்ண னாகவும் (திரிகடு. காப்பு), பச்சைமாமலைபோல் (மேனியனாக வும் (திவ்வியப் பிரபந்தம்) காணும் பாங்கு, இயைபு பற்றி இங்கு நினைக்கத்தக்கது.

கருங்கொடி முல்லை கவின (திணை. ஐம். 26)
கழுநீருட் காரடகேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம் (நாலடி 217)

கருப்பச்சை நிறம் கருமையாகவே கருதப்பட்ட இந்நிலை, நிறம் (dark shade of colours) பற்றிய கோட்பாட்டு வெளிப் பாடாகக் கருதத் தக்கது. கருநீலம், கரும்பச்சை எனாது கருமை எனவே சுட்டியமைகின்றனர் எனலாம்.

## 3. பசுமை

இந்நிறமும் கீழ்க்கணக்கில் ஓரளவு பயின்றமைகின்றது.

பசிய—நீருட் பிறந்து நிறம்பசிய தாயினும் (நாலடி. 360)

பசும்—விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலை காண்பு அரிது (குறள். 16)

பை—பைங்கொடி முல்லை (ஐந். ஐம். 9)

பாச—கருங்கான் மராம் பொழில்
பாசடைத் துஞ்சும் (ஐந். எழு 12)

பண்புப் பெயர் இயல்பு கூறும்போது இலக்கணம் சுட்டு கின்ற 'ஆதிநீடல் வடிவம்'

பாசி—பாசிப் பசுஞ்சுனை (கைந் 3)

என்பதால், பசிய பொருளுக்குப் பெயர் ஆன அடிப்படை நிலையும் காணப்படுகின்றது.

சொல்நிலை நோக்கப் பசலை என்பது பசுமை எனும் நிறத் தொடர்பு கொள்ளுவதாகத் தோன்றிலும், நேரடித் தொடர் பின்றி, ஒப்புமை மட்டும் கொண்டமைகின்றது எனக் கருதலாம் என்பது எண்ணம். பசுமை நிறக் கொடிகளையுடைய பசலை, மென்மை பற்றி, வெயில் மிகுதியால் செழிப்புக்குன்றி, வாடி, பொலிவிழந்த பின்நிலை, தலைவியின் ஒத்த வாட்டத்திற்குக் குறிப்பு ஆயிற்று போலும்.

'கருமை' என்பதால் பசுமை நிறம் குறிக்கப்பட்டதை மேலே கண்டது போன்று, 'பசுமை' என்பது கருமையைக் குறித்து நின்றதும் கீழ்க்கணக்கில் அமைகின்றது.

பைந்தலை பாரிற் புரள்பவை (கள. 24)

எனும் களவழி நாற்பது பகுதி, 'பைந்தலை, கரியதலைகள்... பசுமை, கருமைமேல் நின்றது'[4] எனும் விளக்கம் பெறுவது இதற்குச் சான்றாம்.

கருமையாகவும் நீலமாகவும் தென்படும் நீர்நிலைகள் பசுமை நிறமாகவும் தோன்றலாம் எனும் எண்ணம் பசுஞ்சுனை (கைந் 3), பைஞ்சுனை (திணை. நூற். 78) போன்ற தொடர் களை நோக்க ஏற்படுகின்றது. அடுத்து நிற்கும் பசிய தாவரங் கள் காரணமாக இச் சொல்லாட்சி ஏற்பட்டது எனலும் உண்டு. வேறு நிலையிலும் இது விளக்கம் பெறலாம்.

---

4, களவழி நாற்பது, கழகம் (1970) பக். 22.

4. வெண்மை

இருள்—இருண்மை என்ற அடிப்படையில் 'இரு' கருமை யைச் சுட்டி வந்தது போன்று, ஒளியின் அடிப்படையிலும், வான் வெளியின் அடிப்படையிலும் இந்நிறம் குறிக்கும் சொன்னிலை ஏற்பட்டதோ எனும் எண்ணம் எழுகின்றது.

வெள்—காக்கை வெள்ளென்னும் எனின் (ஆசார 69)

ஒள்—தொல் சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் (நாலடி 139)

வால்—வால் அருவி நாட (நாலடி 232)

வாள்—ஒண்கதிர் வாண்மதியம் (நாலடி 176)

பொன்மையும், மஞ்சளும் நிறநிலையால் தொடர்பு காட்டு வது போன்று, வெண்மையுடன் வெள்ளி சொல்—நிறப்பண்பு நிலைகளில் தொடர்பு கொள்வதாகத் தோன்றுகின்றது.

வெள்ளி—வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞாலம்
உழுவன போல் (கள 40)

புதனாகம்,
பொன் பயந்த வெள்ளி புறமாக (திணை. நூற். 117)

எனும் பகுதிகளும் இவ் எண்ணத்தை எழுப்புகின்றன. இவ்வாறு சொல் நிலைத் தொடர்பு காட்டாத விடத்தும் வெண்மைநிறச் சார்பு அமைவதனை 'நரை' காட்டுகின்றது.

நரை—மாயா
நரையான் புறத்திட்ட சூடு (பழ. 79)

வெண்மையான மாட்டினைப் போன்று வெண்மயிரும் இவ்வாறு குறிக்கப்படுகின்றது. நரை முதுமக்கள் உவப்ப—நரைமுடித்த பழ. 6) நரைக் கூந்தலின் வெண்நிற நிலை,

நுண்ணறல் போல் நுணங்கிய ஐங்கூந்தல்
வெண் மரல் போல நிறந்திரிந்து வேறாய
வண்ண முடையேம் மற்றுயாம் (ஐந். ஐம். 27)

வெண்மை நிறம் காரணமாகப் பலராமன் 'வெள்ளை' எனவே குறிக்கப்பட்டதனையும் கீழ்க்கணக்குக் காட்டுகின்றது.
பொற்பனை வெள்ளையை உள்ளாத்தொழுகின்னா
(இன்னா 1.)

வெண்மை நிறம், அந்நிறப்பெயரால் அன்றி, அந்நிறம் முழுமையாக அமையும் பொருட்களால் உணர்த்தப்படும் இடங்கள் இங்குப் பலவுள.

மால்மாலை தம்முன் நிறம்போல் மதிமுளைப்ப (திணை நூற் 97)

நாஞ்சில் வலவன் நிறம்போலப் பூஞ்சினை
செங்கண் மராஅம் தகைந்தன (கார் 19)

பலராமனின் நிறம் என்ற குறிப்பால் இங்கு வெண்மை உணர்த்தப்படுகின்றது. இவ்வாறே, பால்மேனியன் (பழ 137), பல்நிற முல்லை (திணை.ஐம்22), பொரி சிதறவிட்டன்ன புன்கு (திணை. நூற். 64) என உவமை நிலைகள் அமைகின்றன.

வெண்மை அடையாக அமைவதனால், சில சொற்கள் தம் பொருண்மையில் மாறுபட்டு தொடர்புடைய அல்லது முற்றிலும் வேறுபட்ட (வெண்மை நிறமுடைய) பொருளைக் குறிப்ப தனையும் கீழ்கணக்குக் காட்டுகின்றது.

வெண்ணெய் (பழ 210)

சாம்பல்— வெண்பலி (ஆசார 32)

தலையோடு— வெண்டலை (நாலடி 50)

கானல்நீர்— வெண்தேர் (ஐந்—ஐம் 36)

## 5. நீன்மை

இந்நிறம், மேற்கண்ட நிறச்சொற்களை நோக்கப் பயிற்சி குன்றி அமைகின்றது.

நீல்— நீல் இருள் இழையார் (இன்னிலை 2)

நீல— மாநில மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி
மானில மால்வரை நாட கேள் (திணை. நூற் 6)

நீலம்— ஆகாதே
உண்டது நீலம் பிறிது (பழ 94)

நீல நிறம் காரணமாகக் குவளை மலர், நீலம் எனப் பெயர் பெறலும், அச் சொல்லாட்சி மிக்கு அமைதலும் கீழ்க் கணக்கிலும் காணப்படுகின்றது.

தாமரை தாள் முகமாத் தண்ணடையீர் மாநிலங்
காமர் கண்ணாகக் கழி துயிற்றும் (திணை—நூற் 34)

கோலச் சிறுகுருகின் குத்தஞ்சி யீர்வாளை
நீலத்துப் புக்கொளிக்கும் (ஐந். ஐம் 24)

நீலமெனும் நிறப்பெயர் இன்றியும், நீல நிறம் காட்டும் பொருட்களைச் சுட்டி நிறமுணர்த்தப்படல் இங்குக் காணப் படுகின்றது.

கடல்— பொருகடல் வண்ணன் (கார் 1)

பூவைப்பூ— பூவைப்பூ வண்ணன் அடி (திரிகடு—காப்பு)

பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம் (நான்மணி 1)

மணி— மணிநிற நெய்தல் (ஐந். எழு.58; கைந் 51)
மணிநிற மாமலை மேல் (ஐந். ஐம் 2)

இங்கனைத்தும் நீலம், கருநீலத்தையே குறித்தது போலும் எனும் ஐயம் எழுகின்றது. மேலே கண்ட நீல் இருள் (இன்னிலை 2) என்பதில் இது ஒரளவு வெளிப்படுகின்றது.

## 6 பொன்மை

பொன்மை என்பதனை நிறமாகக் கொள்ளக் கீழ்க்கணக்குப் பகுதிகள் சில துணைநிற்கின்றன.

பொற்கேழ் புனல் ஒழுகப்
புள்ளிரியும் பூங்குன்ற நாட (நாலடி 212)

பொன்நிறச் செந்நெல் பொதியொடு பீள்வாட (நாலடி 269)

முலையொடு சோர்கின்ற பொன்வண்ணம் அன்னோ
வளையொடு சோரு மென் தோள் (திணை. ஐம் 19)

பொன்னேர் நிறத்தாய்
அரிதவர் வாரா விடல் (கைந் 26)

மஞ்சள் எனும் சொற்குறிப்பு, முன்கண்ட வண்ணம் நாலடியாரில் மட்டும் அமைகின்றது.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல (நாலடி 131)

இதன் உரை, 'மஞ்சள், சிறப்பாக மகளிர் பூசிக்கொள்ளும் மஞ்சள் நிறமான மணப்பூச்சு' என்று அமைவதால் நிறம் குறிப்பாக உணர்த்தப் படுவதாகக் கொள்ள முடிகிறது.

இயற்கை மனிதனுச்கு நிறங்களைத் தந்தது எனக் கூறுவதற்கு வாய்ப்பாகக் கடுக்கை (திணை. நூற் 120), கொன்றை (திணை. நூற் 109), வேங்கை (கைந் 10. ஐந் ஐம். 11), கோங்கு (நாலடி. 400; சிறுபஞ்ச 45; திணை. நூற் 70) எனப் பல மலர்கள் பொன்னிறத்தனவாகக் காட்டப்படுகின்றன. உடலினுக்கும் (பொன்போலும் மேனியை—நான்மணி 23), சுணங்கணிந்த மார்புக்கும் (திணை—நூற் 70—பழமொழி 44, சிறுபஞ்ச 48), பசலைக்கும் (பொன்னம் பசலையும் தீர்ந்தது—கைந்—60) பொன்நிறம் சுட்டப்படுகின்றது.

உவமை நிலையாய், மஞ்சள் நிறப் புல்லிதழாகிய அடிப்பாகம் பொருந்திய செம்முருக்க மலர் பொன்னுறு பவளமாகக் காட்டப்படுகின்றது.

''வயங்கி முருக்கெல்லாம்
செல்வர் சிறார்க்குப் பொன்கொல்லர் போல் நல்ல
பவளக் கொழுந்தின்மேல் பொன்தாலி பாஅய்த்
திகழக் கான்றிட்டன தேர்ந்து (திணை. நூற் 66)

பொன்னுறு பவளம் போன்ற புணர் முருக்கம் (ஷெ 67)

மஞ்சள் நிறம், ஒளிபொருந்தியமையும் போது பொன்மையாகப் படைக்கப்படுவதை இங்குக் காண்கின்றோம். அந்நிறமே ஒளிமழுங்கி அமையும் போது பீர்நிறமாகக் காட்டப்படுகின்றதோ எனும் எண்ணம்,

கார் தோன்றிப் பூவுற்ற காந்தண் முகை விளக்குப்
பீர் தோன்றித் தூண்டுவான் மெல்விரல் போல்
(திணை. நூற் 118)

(—விளக்கு மழுங்கிப் பீர்நிறம் கோடலான்...)

எனும் பகுதியை நோக்க ஏற்படுகின்றது.

இணை நிறங்கள்

எந்நிறமும் எந்நிறத்துடனும் இணையலாம் எனும் எண்ணத்தை 'ஐந்நிற' வானவில் உணர்த்துவதாகத் தோன்றுகின்றது. கருமை ஒழியப் பிற நான்கு நிறம், வெண்மையுடன் இங்குக் கருதப்பட்டிருக்கலாம். அல்லது, ஐந்து 'பல' எனும் கருத்தில் ஆளப்பட்டதாகக் கொள்ளலாம்.

நிறப் பெயர்களோ, நிறப் பெயர்ச் சொற்களோ அடுத்தடுத்து ஆளப்படலைப் பண்டை இலக்கியம் போல் கீழ்க்கணக்கும் காட்டுகின்றது. நான்கு 'நிறம்' வரை இவ்வாறு அமைக்கப்படல் இலக்கிய நயம் கருதிப்போலும்

கருவிரல் செம்முக வெண்பற் சூன்மந்தி
பருவிரலாற் பைஞ்சுனை நீர் தூஉய்ப்—பெருவரைமேற்
றேன்றேவர்க் கோக்கு மலைநாட. (திணை. நூற் 10)

இயற்கையின் பலவண்ண இணைவைப் படைக்கும் விருப்பில் கட்புலனின் அழகுணர்வைப் புலப்படுத்தும் பாங்கில் இவை அமைக்கப்பட்டிருக்கலாம்.

மூன்று நிறங்கள் இவ்வாறு அமைதல் ஓரளவு பயிற்சி காட்டுகின்றது. நிறப்பெயரும், நிறம் எனும் சொல்லுமாக வெளிப்பட்டும், ஒத்த பொருளின் வருணனையாக வெளிப்படாதும் இது அமைகின்றது.

1. நாஞ்சில் வலவன் நிறம் போலப் பூஞ்சினைச்
செங்கான் மராஅந் தகைந்தன—பைங்கோல் (கார் 19)

2. முகம் தாமரை, முறுவல் ஆம்பல், கண் நீலம்
இகந்தார் விரல் காந்தள் (திணை. நூற். 72)

இங்குப் பயிலும் முந்நிற நிலைகள் :

வெண்மை—செம்மை—பசுமை (கார் 19)

வெண்மை—செம்மை—நீலம் (நான்மணி 1)

வெண்மை—செம்மை—பொன்மை (நாலடி 269)

செம்மை—பசுமை—கருமை (ஐந். எழு 15)

செம்மை—பொன்மை—கருமை (திணை. நூற். 118)

செம்மை—நீலம்—கருமை (திணை. நூற். 73)

செம்மை—நீலம்—பொன்மை (திணை. ஐம். 32)

கருமை—நீலம்—பொன்மை (ஐந். ஐம். 2)

இருநிறங்கள் இவ்வாறு பயில்வது மிகப்பல எனக் கூறத்தகும் வண்ணம் நிறக்குறிப்புகள் கீழ்க்கணக்கில் கிடைக்கின்றன. இங்கும், முன்கண்ட வண்ணமே வெளிப்படலும், வெளிப்படாமையும் உண்டு. அத்துடன் ஒரே இணை ஒரு பாடலில் இருமுறை பயின்றன எனக் கூறும்படியும் அருகிய குறிப்புகள் உள்ளன.

பெருங்கடல் வெண்சங்கு காரணமாப் பேணாது
இருங்கடன் மூழ்குவார் தங்கை—இருங்கடலுண்
முத்தன்ன வெண்முறுவல் கண்டுருகி நைவார்க்கே
யொத்தனம் யாமே யுளம் (திணை. நூற். 33)

முதற் கூறிய முறை, பின்பு மறித்துக் கூறப்படல் சுட்டத் தக்கது. ஈரிணை நிறங்கள் பலவற்றிலும் இவ் வைப்புமுறை மாற்றம் காணப்படுவதுண்டு.

கீழ்க்கணக்கில் பயிலும் இருநிற இணைகள் :

வெண்மை—கருமை (திணை. நூற். 58)

வெண்மை—பசுமை (நாலடி 217)

வெண்மை—செம்மை (களா 39)

வெண்மை—பொன்மை (இன்னா 1)

கருமை—செம்மை (திணை. நூற். 137)

கருமை—பொன்மை (திணை. நூற். 109)

கருமை—நீன்மை (திணை. ஐம். 39)

கருமை—பசுமை (கார் 39)

செம்மை—பசுமை (திணை. நூற். 128)

செம்மை—பொன்மை (திணை. நூற். 67)

செம்மை—நீண்மை (திணை. நூற். 2)

ஒரே நிறம் ஒன்றிற்கு மேற்பட்டமுறை ஒரு பாடலில் பயின்று நிறமிகுதி காட்டும் பாங்கு, முருகியல் இன்ப மிகுதி நோக்கித் தரப்பட்டது போலும் எனும் எண்ணத்தை எழுப்புகின்றது. குறியீடாக, செவ்வணி சூடிச் செல்லும் சேடியை இவ்வாறு படைக்கின்றனர்.

அரத்தம் உடீஇ அணிபழுப்பப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூடி (திணை. நூற். 144)

செம்புனலாடிச் சிவந்த கண்களும் (ஐந். எழு 7, ஐந். ஐம். 15), குருதிப்புனலான போர்க்கள நிலையும் (கள. 26) பிறவும் இவ்வாறு புனையப்படுகின்றன.

கருமையின் மிகுதி, கார்கால எழிலைக் கூறுமிடத்தும் (கார் 12) பிறவிடத்தும், வெண்மைச் செறிவு மதியின் ஒளியைப் படைக்கும் போதும் (நாலடி 176), நீல நிற மயக்கம்,

மானீல மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி
மானீல மால்வரை நாட கேண்—மாநீலங்
காயும் வேற்கண்ணாள் கனையிருளி னீவர
வாயுமோ மன்றநீ யாய் (திணை. நூற். 6)

எனக் குறிஞ்சியைப் புனையுமிடத்தும் அமைவது நினைக்கத் தக்கது.

பிறபொருண்மை

நிறம் தொடர்பான பொதுச் சொற்களும், சிறப்புச் சொற்களும் வேறுபிற பொருண்மைகளிலும் கையாளப்படுகின்றன. நிறம் பற்றிய ஏதேனுமொரு நிலைத் தொடர்புடனும், தொடர்பின்றியும் இவை அமைகின்றன. பல்லிடங்களிலும் தெற்றெனப் புலப்படா இதன் காரணம் ஆய்வுக்குரியது.

நிறம் எனும் சொல், அழகு மார்பு எனும் பொருண்மைகளில் கீழ்க்கணக்கில் கையாளப்படுகின்றது.

வரிநிற நீள்வண்டர் பாட—புரிநிற நீள்
பொன்னணிந்த கோங்கம் (திணை. நூற் 63)

வேல் நிறத் திங்க (கள.41)

வண்ணம், நிறச்சார்புடன் வரும்போது, பெரும்பாலும் உடலின் வண்ணம் எனும் அடிப்படையில் வருகின்றது.

அகன்ற வழிநோக்கிப் பொன் போர்த்து
இதுகாண் என் வண்ணம் இனி (திணை. நூற் 74)

உடலழகு எனும் ஆட்சி பொருட்தொடர்பு காட்டுவதுடன் ஓரளவு பயிற்சி மிக்கும் அமைகின்றது.

தண்ணந் துறைவற் குரையாய் மடமொழி
வண்ணம் தாஎன்று தொடுத்து (ஐந். எழு 62)

(நிறமும் அழகும் ஒரே சொல்லால் குறிக்கப்படல் வண்ணம் என்பதில் மட்டுமின்றி மா, மாமை; உரு போன்றவற்றிலும் அமைதல் சிந்திக்கத்தக்கது) வண்ணம், இன்னும் பிறபல தொடர்பில்லாப் பொருளிலும் கையாளப்படுகின்றது.

இயல்பு—நீந்த நீரூரன் நிலைமையும் வண்ணமும் (கைந்.42)

நேர்த்தி—சொல்லும் அவர்வண்ணஞ் சோர்வு
(திணை—ஐம் 38)

வகை— தக்காங்கு நாடி தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து (குறள் 561)

அவ்வாறு—அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்
(குறள் 664)

இயல்பு, தன்மை எனப் பொருள்பட்ட வண்ணம், 'வருண'ப் பகுப்புக்குச் சென்றதையும் கீழ்க்கணக்குக் காட்டுகின்றது.

யாரும்,
குலக்குல வண்ணத்தர் ஆகுப ஆங்கே
புலப்புல வண்ணத்த புள் (பழ. 146)

தோணி யியக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார் (நாலடி. 136)

உரு, மாமையாகிய அழகைக் குறிக்கவும் பயன்படுகின்றது.

என்தோழி, உருஅழி உண்நோய்கெட (திணை. ஐம். 46)

செம்மை, நிறம் உணர்த்திய சிறப்பு அல்லது உயர்வு எனும் அடிப் படையில், பல பண்புகட்கும் இயல்புக்கும் குறியீட்டு அடையாக அமைந்ததோ எனும் எண்ணம் அதன் பிற பொருளாட்சியால் ஏற்படுகின்றது.

நடுவுநிலைமை—செம்மை யொன்றின்றி (நாலடி. 85)

நேர்மை அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் (குறள் 169)

செப்பாகம் (குறள் 1092), செந்நடை (பழ 36), செந்நெறி (நாலடி. 378), செங்கோல் (பழ 256), செம்பொருள் (குறள் 358), செந்நீரார் பழ 162), செந்தண்மை (குறள் 30) செவ்வழி யாழ் (திணை. நூற் 124), செந்தமிழ் (சிறு. பஞ் 12) என இவ் அடைநிலை பரந்து அமைகின்றது. செம்புனல் (நாலடி. 222), ‘செம்மை புதுமைமேற்று’ என உரைவிளக்கம் பெறுகின்றது.

கருமை நிறம் பற்றி அமைந்த சொற்களிலும், பிற பொருண்மை சுட்டும் பாங்கு காணப்படுகின்றது. தொல் காப்பியம் வெகுளியைக் குறிப்பதாக அமைத்த கறுப்பு, கீழ்க் கணக்கில் வெகுளிப் பொருளை மட்டுமே குறிப்பிடுகின்றது. பன்முறை பயிலும் நிலையும் இச்சொற்கு அமைகின்றது.

கறுப்பன செய்தொழுகி (பழ 280)

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள் (குறள் 312)

கருமை, பசுமையைக் குறித்ததன் அடிப்படையில் போலும், நிறப்பண்பு அல்லாத பசுமையையும் (இளமை...) குறிக்க வருகின்றது.

கனியும் கருக்காயும் அற்று (குறள் 1306)
(முற்றாத இளம்காய்)

மீப்போர்த்த
கருந்தோலால் கண்விளக்கப்பட்டு (நாலடி 47)
(உடம்பின் மேல் போர்த்த பசும் தோலினால்...)

கரிய பொருளாகவும், கடினத் தொழிலுக்குரியதாகவும் அமையும் இரும்பு,

வாடாக் கருங் கொல் வேல் மன்னர் (திணை. நூற். 4)
(இரும்புக் கொல்லுத் தொழிலையுடைய...)

எனக் குறிக்கப்படுகின்றது.

கொடிய செயல்கட்கும் தீச் செய்கைகட்கும் இருளும் கருமையும் பயன்படுவதனால் போலும், அவையும் கருமையால் உணர்த்தப்படுகின்றன.

கருந்தொழிலராய கடையர் (பழ 97)
கருங்குணத்தர் (சிறுபஞ்ச 26)

இதனடிப்படையில் போலும் கீழ் மக்களும் (சிறு பஞ்ச 27), வஞ்சரும் (ஏலாதி 47) கரியர் எனப்பட்டனர். கார், மை எனும் கருமை குறிக்கும் சொற்களும் இவ் இழிபொருள் கொண்டன.

களவென்னும் காரறிவாண்மை (குறள் 287)
மையறு தொல் சீர் (நாலடி 333)

இவ்வாறு இழிபொருளில் பயன்பட்ட கருமை, சிறப்பு எனும் பொருளில் பயன்படும் புதுமை அருகி அமைகின்றது.

...பெரியோர்கள் தீமை
கருநரைமேல் சூடேபோல் தோன்றும்—கருநரையைக்
கொன்றன்ன இன்னா செயினும் சிறியார்மேல்
ஒன்றானும் தோன்றாக் கெடும் (நாலடி 186)

(—கரு வென்னும் அடைமொழி, முதன்மைப் பொருட்டாய்ச் சிறந்த வென்னும் கருத்தில் நின்றது).

கருமை நிறம், எளிதில் நீங்காமையும் நெகிழாமையும் அழியாமையும் பற்றி 'சான்று' எனும் பொருண்மை சுட்டியதோ

எனும் எண்ணம் 'கரி' என்ற சொல்லை நோக்க ஏற்படுகின்றது. சான்று—அல்லது சாட்சி எக்காலத்திலும் அழியாததாக நிலைத்ததாக இருக்கும் பான்மை இங்குக் கருத ந்தக் ்து.

ஐந்தவித்தான் ஆற்றல் இருவிசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி (குறள் 25)

பாலில் கழுவினாலும் கரி வெண்ணிறம் பெறாது எனும் நாலடியார் கருத்து ஒப்புமை பற்றி இங்கு நினைக்கத் தக்கது (258).

பசுமையும், நிறத் தொடர்புடைய பொருட்களின் பிற பண்பு காரணமாக, அவற்றிற்கும் ஆகி, அவற்றையும் சுட்டி வருவதாகத் தெரிகின்றது. உரையாசிரியர்கள் 'பசிய' எனவே பொருள் கூறினும்,

இளமை— அவரை பொருந்திய பைங்குரல் ஏனல் (ஐந்.எழு1)
மென்மை—பைங்கரும்பு
மென்றிருந்து பாகுசெயல் (பழ. 359)

சுடப்படாதது (raw)—பசுமட் கலத்துள்
நீர்பெய் திரீஇ யற்று (குறள் 660)

தூய்மை—மைதீர் பசும்பொன்மேல் மாண்ட. மணியழுத்தி
(நாலடி 347)

அழகு—பலவின் பழம்பெற்ற பைங்கட் கடுவன்
(திணை. ஐம். 10)

குளிர்ச்சி—பாசிப் பசுஞ்சுனை (கைந்.3)

வெண்மையும், நிறத்தை மட்டுமன்றிப் பிறபொருண்மையும் சுட்டி யமைகின்றது. புல்லறிவு, அறியாமை—அறிவின்மை குறிக்கத் திருக்குறளில் மிகுந்து பயன்படுகின்றது.

வெண்மை—வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு (குறள் 844)

வெள்— ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல் (" 714)

வெளிறு— அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு (" 503)

வெண்மை குறிக்கும் வால் தூய்மையைச் சுட்டுவதையும் திருக்குறள் அளிக்கின்றது. வாலறிவன் (குறள் 2), வாலெயிறு (குறள் 21) அறம், புகழ் போன்றன 'வெண்மை' யால் குறிக்கப் படல் பொதுமையாயினும் (பழ 97, உரை) இங்குக் காணப்பட வில்லை. தூய்மை எனும் சிறப்புப் பற்றிப் போலும், நாற்பாக்களின் முதல்வகை, வெண்பா எனவும் (சிறுபஞ்ச—க. வா.; பழ—த. பா) கடைக்குறையாக வெண் எனவும் (பழ 125) குறிக்கப் படுகின்றது

நீலம், மஞ்சள் போன்ற நிறங்கள் இவ்வாறு பிற பொருண்மையைக் குறிப்பதாகத் தெரியவில்லை.

நிறப்பெயர்கள் முற்றிலும் தம் நிறங்குறிக்கும் பான்மையை இழந்து விடுதலைக் காவி (பழ. 30), மையாடு (பழ. 174) போன்றன காட்டுகின்றன. செந்நிறம் சுட்டி வரும் 'காவி' இங்கு நில மலர் என உரைபெறலும், மையாடு, பதவுரையில் 'காராடு' எனவும், விளக்கவுரையில் 'காராடு—வெள்ளாடு' எனச் சுட்டப்படுவதும் இவ் எண்ணத்தை எழுப்புகின்றன.

## நிற ஆட்சி

கீழ்க்கணக்கில் நிறத் தொடர்பான ஆட்சிகள் அகப்பாடலிலும் புறப்பாடலிலும் பெரும்பாலும் இயல்பு வருணனையாக அமைகின்றன. நிறங்கள் நிறைந்த இயற்கையின் அடிப்படையிலமைந்த ஐந்திணைப் பாகுபாடும், சினச் சிவப்பும் குருதிச் செம்மையும் இணைந்த புறக்களக் காட்சியும் மறையாது இடம் பெற்ற வாழ்வுப் பாங்கின் நுண் வெளிப்பாடாக இவற்றைக் கொள்ளலாம்.

இயற்கையின் நிற வருணனை நிலத்திற்கு ஏற்ப அமைகின்றது. இன்ப வாழ்வான முந்தைய நிலை, இரங்கல் வாழ்வான பிந்தைய நிலையில் மயங்கும் நெய்தல் உணர்வு, வெண்மணற் கரையில் வந்து மோதி மயங்கும் கடல் காட்சியில் புலப்படுகின்றதோ எனும் எண்ணம் நெய்தல் திணைப்பாடலின் இத்தகு வருணனையை நோக்க ஏற்படுகின்றது.

மாக்கடல் சேர் வெண்மணற் றண்கானல் (திணை—நூற்38)

மாயவனுந் தம்முனும் போலே மறிகடலும்
கானலுஞ்சேர் வெண்மணலும் காணாயோ (" 58)

இரவும் துஞ்சாது தனித்து இரங்கும் தலைவியைப் போல் 'வருந்தும், கடல்நிற அடிப்படையில், இரங்கற் குறியீடாக 'மணிநிற நெய்தலைக் கொண்டனர் போலும்.

கற்புக்கு இணையாகக் காட்டும் முல்லை வெண்மலரும், பிரிவுத் துன்பத்தைப் பெருக்கும் காரின்—கார் காலத்தின் கருமையும்—இவ்வாறே ஒன்றில் ஒன்று இணைந்தமைந்த பாங்கினை முல்லைத்திணை காட்டுவதும் இங்கு நினைக்கத் தக்கது. இருளும் ஒளியும் நிறைந்த—பிரிவும் இணைவும் உடைய முல்லை வாழ்வினைத் திணைமாலை, மருண் மயங்கும் இருள்மாலை வெண்ணிலாக் காலும் ஒளிநிலைக்குச் செல்வது வழி உணர்த்துகின்றது போலும்.

பகல்பருகிப் பல்கதிர் ஞாயிறு கல்சேர
விகல்கருதித் திங்கள் இருளை—பகல்வர
வெண்ணிலாக் காலும் மருண்மாலை (திணை. நூற் 94)

இருள்பரந் தாழியான் றன்னிறம்போற் றம்மு
னருள்பரந்த வாய்நிறம் போன்று—மருள்பரந்த
பால்போலும் வெண்ணிலவும் ("96)

மால்மாலை தம்முன் நிறம்போல் மதிமுளைப்ப ("97)

கார் நாற்பதும், இத்தகு எண்ணம் 'முல்லை' யில் கொள்ள இடம் அளிக்கின்றது. கருவானத்திற்கு வேறாகத் திருவில் தோன்றிய பாங்கு, பிரிவின் கருமைக்கு மாறான நிறை வாழ்வுக்கு. வண்மையான வண்ண வாழ்வுக்கு, ஒளிநிறைந்த வாழ்வுக்கு அழகு கெழுமிய உருவுடை வாழ்வுக்குக் கட்டியமாக—நிமித்தமாகக்—குறியீடாக அமைகின்றது போலும்.

பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ (கார் 1)

முல்லைப் பாடல்கள் காட்டும் கார்கால மலர்களான, நாஞ்சில் வலவன் நிறம்போன்ற மராஅம் (கார் 19), எரிவனப்புற்ற தோன்றி (கார் 9), பொன்பயந்த வெள்ளி புறமாகப் பூத்த புதல் நாகம் (திணை. நூற் 117), பன்னிற முல்லை (திணை. ஐம் 22) எனப் பலநிற நிலை அமைதலும் இதனுடன் இணைத்து நோக்கற்பாலது.

கார் காலத்தின் கவின்கொள் மஞ்சள் நிற மலரும் வருங் கால வாழ்வின் ஒளிநிறைவை—மங்கலத்தை—உணர்த்த அடையாளம் ஆயிற்று போலும்.

காடுங்கடுக்கை கவின்பெற (கார் 4)

...இருங்கடன் மாந்திய கார்
பொன்போ றார்கொன்றை புரிந்தன—பொன்போற்
றுணைபிரிந்து வாழ்கின்றார் தோன்றுவர் தோன்றா
ரிணைபிரிந்து வாழ்வ ரினி (திணை நூற்—109)

செம்மலர்களையுடைய மருதம், மருதத்திற்கும் குறியீடாக அமைவதிலும் நிறப்பொருத்தம் தென்படுகின்றது. பசுமையும் செம்மையும் இணை நிறங்களாக அமைவன. வாழ்வின் பசுமை யில் நின்று தோன்றிய வெம்மையாக அமையும் மருத உரியின் வாழ்வியல் நிலை செந்நிறத்தில் எதிரொளிக்கின்றது. உணர்வு களுக்கும் உயிருக்கும் அடிப்படையாக அமையும் குருதியின் செந் நிறம் அகவாழ்வில் மருதத்திலும் புறவாழ்வில் களவேள்வியிலும் வெளிப்படுவதாகக் கொள்ளலாம் (களவழி நாற்பதில் செந்நிறம் மிகுதியாகப் பயின்றது).

மருதச் செவ்வணி இருக்க (திணை. நூற். 144), செந் தாமரைப் பூவும் (திணை. நூற். 129, திணை. ஐம். 36 ஐந். ஐம் 25, ஐந். எழு 48) (பெரும்பாலும் இவை வயலில் இருப்பதாக வரும்) செந்நெல்லும் (திணை நூற். 123) செங்கண் எருமையும் (திணை. நூற் 137) பயின்று வருதல் கண்கூடு.

செங்கட் கருங்கோட் டெருமை சிறுகனையா
லங்கட் கழனிப் பழனம் பாய்ந்—தங்கட்
குவளையம் பூவொடு செங்கயன்மீன் சூடித்
தவளையு மேற்கொண்டு வரும் (திணை நூற் 147)

குறிஞ்சியின் குறியீடான நீலநிறக்குறிஞ்சிமலர், நிலத்தினும் பெரிய, நீரினும் ஆழமான, வானினும் அதினின்று புறத் தோன்றும் கற்பின் நிறைவுக்கும் நீர்மைக்கும் உயர்ந்த அன்புக்கும் குறியீடாக அமைந்திருக்க வாய்ப்பு இருப்பதனை இவற்றின் நீலநிறப்பொதுமை உணர்த்துகின்றது. நீல மலையும் அதன் வெண்ணிற அருவியும் களவின் உறுதிக்கும் மறை நிலைக்கும் கூடக் குறியீடாகலாம் (பார்க்க திணை—நூற் 6).

ஆயின் குறிஞ்சி வருணனை தரும் பாடல்கள் பிறவண்ணங்களையும் தருகின்றன. களவிலிருந்து கற்பிற்குச் செல்லும்படி நிலையான வரைவைக் கணிகூறும் பொன்னிற மலர்கள் (ஐந். ஐம் 11, ஐந். எழு. 8, திணை—நூற் 20) வாழ்வின் எழில்நிலை சுட்டுகின்றன போலும். புறத்தில், செந்தீயன்ன சினத்தையும், செயலாற்றலையும் சுட்டிய செந்நிறம் அகத்தில் இணையையும் விழைவையும் புலப்படுத்தியமையைக் குறிஞ்சியிலும் காண்கின்றோம்.

ஓங்கிய செந்நீ ரிழிதருங் கான்யாற்றுட்
டேங் கலந்து வந்த வருவி குடைந்தாடத்
தாஞ் சிவப்புற்றன கண் (ஐந். எழு 7)

(பகற் குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்துமொழி கிளவியாற் றோழி வரைவு கடாயது

பாலைத் திணைக்கு வெண்ணிற மலர்களைபுடைய பாலை ஏற்புடைக் குறியீடாயுள்ளது. தலைவனின் பிரிவு நிலையில் பன்னிறம் புலப்படா வெண்மை இணைவு காட்டுகின்றது. வெண்தேரும், முருங்கையின் வெண்மலரும் திணை. நூற் 91), நெற்பொரிபோன்ற புன்கும் (திணை. நூற் 64) இதனை வெளிப்படுத்திய போதும், உடன் போக்கு அமையும் பாடல் ஒளியும் நிறமுடையதாக அமைகின்றது.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் பொன்னும் பவளமும் கொணர்வான் எனும் குறிப்புடன் செம்முருக்கும் பொன்னிறக் கோங்கும் பொலிவதைக் காட்டும் பாடல்கள் செவ்வியுடையன (திணை.நூற் 66, 67). செம்மையும் (ஐந்.ஐம் 31 திணை, நூற் 63), பொன்மையும் (திணை. நூற் 70) பொருளியல் வாழ்வின் செவ்விய தன்மையையும் செழிப்பையும் சுட்டின போலும்.

அகப் பாடல்களில், நில உரிக்கேற்ப நிறங்களைப் பொருந்திக் காண வாய்ப்பமைந்த போதும், ஒரு நிறம் ஒன்றிற்கு மேற்பட்ட திணையில் வரும்போது மயக்கம் ஏற்படுகின்றது. நெய்தல் மணலிலும். முல்லையிலும், குறிஞ்சி வெள்ளருவியிலும், பாலையிலும் காணப்பட்ட வெண்மை, ஒரு வேளை அவற்றை 'வெண்மை' பயிலா மருதத்திலிருந்து தூய இல்லற நிலைபற்றி வேறுபடுத்தலாம் சிந்தனைக்குரியதாக அமையும் இந் நிறக்குறியீட்டு நிலைகள் ஆழ்ந்த ஆய்வுக் குரியன.

பின்னிணைப்பு

## கீழ்க்கணக்கில் நிறக் குறிப்பு

1. நிறம்

நாலடி 139, 164, 177, 183, 223 ; நான்மணி1; கார் 3, 19; கள 41; ஐந். ஐம். 1, 2; ஐந். எழு 58; திணை. ஐம். 6, 9, 22, 22, 48; திணை. நூற் 63, 96, 97; கைந் 51.

2. வண்ணம்

நாலடி 50; கார் 40; ஐந். ஐம். 27; ஐந். எழு 61, 62, 64; திணை. ஐம். 38; திணை. நூற் 74, 140; குறள் 561, 664, 714; ஆசாரக் 82; பழ 146, 146; கைந் 42.

வண்ணன் : கார் 1, திரிகடு—காப்பு

வருணம் : நாலடி 136

3. உரு

நாலடி 118, 118, 118; திணை. ஐம் 46; திணை. நூற் 104, 104, 104; பழ. 271.

4. கேழ்

நாலடி 41, 212.

5. செம்மை

(1) (பிறபொருள்)

(1) நாலடி 85, 367, 378; நான்மணி 20; ஐந். ஐம். பாயிரம்; திணை. நூற் 124, 129, குறள் 30, 91, 169, 358, 390, 540, 550, 556, 1092; சிறுபஞ்ச 12, 41, 96; பழ 36, 162, 248, 250, 259, 331; இன்னிலை 35; ஏலாதி 10.

(2) நாலடி. 90, 222, 283, 259, 281, 372, 372, 373, 377, 396, 397; நான் 67:

கார் 5; கள 2, 4, 5, 10, 11, 12, 13, 14, 15, 21, 26, 26, 27, 29, 30, 35;

ஐந். ஐம். 7, 15, 15, 31, 44; ஐந். எழு 7, 7, 18, 44, 66; திணை. ஐம். 14, 36.

திணை. நூற். 24, 34, 144, 144, 144, 149, 151; குறள் 84, 167; திரி 98; சிறு பஞ் 27; பழ 300; ஏலாதி-க-வா; கைந், 19, 47, 47.

6. கருமை

நாலடி 8, 41, 47, 63, 103, 142, 168, 231, 315, 333; கார் 8, 15, 25, 37, 40; ஐந். ஐம் 1; ஐந். எழு 9; திணை. ஐம் 16, 16, 21. 25; திணை. நூற் 4, 26, 91, 104, 107, 121, 148; குறள் 277, 287, 312, 617, 1107, 1123, 1306; திரி 66; ஆசார 45, 55; சிறுபஞ்ச 21, 26; பழ 16, 45, 59, 96, 97, 147, 220, 280, 306; ஏலாதி 47; கைந் 8, 56.

7. பசுமை

நாலடி 191, 256, 347, 360; கள 24; ஐந். ஐம் 9, 33; ஐந், எழு 1; திணை. ஐம் 10; திணை. நூற் 78; குறள் 16, 550, 660, 1234; ஆகார 32; பழ 136, 223, 359; இன்னிலை 37; கைந் 3.

பசலை : நாலடி. 391; கார் 4, 27; ஐந். எழு 65; திணை. ஐம் 4, 24, 47; திணை. நூற் 116; குறள் 1181-1190, 1232, 1238, 1239, 1240, 1265, 1278; கைந் 1, 27.

8. வெண்மை

நாலடி 11, 50, 139, 176, 176, 186, 232; ஐந். ஐம். 27. 36; திணை. நூற். 18, 22, 45, 51, 90; குறள் 2, 503, 714, 844, 1121; ஆசார 32, 69; சிறுபஞ்ச—க.வா; பழ—த.பா. 6, 38, 79, 111, 125, 137, 210, 297.

9. நீன்மை

நாலடி 374; கார் 1; ஐந். ஐம் 24, 40; திணை. நூற். 6, 6, 6; திரிகடு--காப்பு : பழ 94; இன்னிலை 2; கைந் 51.

10. பொன்மை

நாலடி 131, 212, 400; நான் 23; ஐந். ஐம் 11; திணை. ஐம் 19; திணை. நூற் 70, 120; சிறுபஞ்ச 45, 48; பழ 44; ஐகந் 10, 60.

## இணைநிறங்கள்

நான்கு : திணை. நூற் 10.

மூன்று : நாலடி 269; நான் 1; கார் 19; ஐந். ஐம் 2; ஐந், எழு 15, திணை. ஐம் 32; திணை. நூற் 72, 78, 118.

இரண்டு : நாலடி 217, 258, 387; இன்னா 1; கார் 9, 12, 16, 39; கள 7, 23, 32, 34, 39, 40; ஐந். ஐம் 6; ஐந். எழு 12, 58; திணை. ஐம். 22, 26, 39 ; திணை. நூற் 2, 8, 33, 33, 34, 35, 38, 58, 63, 64, 66, 67, 93, 94, 96, 97, 99, 109, 117, 128, 139, 147; பழ 247, 351; ஏலாதி 57; கைந் 26.

# 8. சிலப்பதிகாரம்

தா. வே. வீராசாமி

சிலப்பதிகார ஆசிரியர் நிறம் பற்றிய பல செய்திகளைத் தம் காப்பியத்தின் அகத்தே கூறியுள்ளார். இன்றைய நிலையில் கூறப் பெறும் நிறங்கள் அத்தனையும் அவர் காலத்தில் வழங்கப் பெறவில்லை. சான்றாக, மஞ்சள் என்பது இன்று ஒரு நிறத்தைக் குறிக்கும் சொல்லாக நிறப் பெயர்களுள் கற்பித்து வருகிறோம். ஆயின் இக்காப்பியத்தில் மஞ்சள் என்பது கிழங்குள்ள செடியைக் குறிக்கும் சொல்லாகவே பயன்பட்டு வந்துள்ளது (10.74, 11.82).

வெயிலின் நிறம் கண்ணாற் பார்க்கப் பெறாத மெல்லிய இயல்புடையவர்களைப் பற்றிக் கூறும்போது வெயினிறம் என்ற கருத்து வெளிப்படுகிறது (10.66), எனினும் இன்று ஏழு நிறங்கள் வெயிலில் அமைந்துள்ளன என்பது போன்ற நிறமாலைக் கொள்கைகள் அன்று இருந்தது எனக் கொள்ள முடியவில்லை. நீர்க்கு நிறமின்று என்பது பழைய மரபு. செம்புலப் பெயனீரார் கருத்தும் 'நிலத்தின் இயல்பால் நீர்திரியும்' என்ற வள்ளுவர் கருத்தும் பழமரபு நெறி எனப் புலப்படினும் நீர்நிறக் காக்கை (10.116) என இளங்கோ அடிகள் கூறும்போது கடலின் கரிய நிறத்தை நீர்க்கு ஏற்றிக் கூறினாரோ எனக் கருதவேண்டியுள்ளது.

திருமுருகாற்றுப்படையில் வேறுபல் துகிலின் நுடங்கி அருவி ஒழுகுவதைக் காட்டும் நிறப்பாங்குணர்ச்சியுடன் நிறங் கிளர் அருவி எனக் கவிஞர் உரைப்பார் (24.13). இந்திரவில்லில் பல்வேறு நிறம் அழகுக்கு விருந்தாக இயற்கையில் கோலம் கொண்டிருந்ததைக் காட்டும் வகையில் (24.2) புனைந்துரைப்பார். பல்வேறு நிறங்கள் கொண்ட நவமணிகளால் (3.116. 6.95—105) இயற்றிய நகர் நாகரிக ஆக்கப் பொருள்கள் பற்றிய அறிவும் இங்கு வெளிப்படும்.

இவற்றில் அடிகள் தம் காப்பியத்தின் அகத்தே வெண்மை, நீலம், பசுமை, கருமை, செம்மை ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளார். இதில் கருமை, செம்மை நிறங்களே தலையாயவை எனலாம். கருமையின்கீழ்ப் பசுமை, நீலம் ஆகிய இரண்டும்

இணைய வாய்ப்புண்டு. பொன்நிறம் என்பது செம்மையின் ஒரு கூறாக அமைந்து பின்னர் மஞ்சள் எனப் பிரிவுற்றதாகக் கொள்ளலாம்.

நிறத்தைக் குறிக்கும் பல சொற்கள் சிலப்பதிகாரத்தில் காணப்பெறுகின்றன. கேழ் (6.96), நிறம் (2.53), வண்ணம் (3.63), வருணம் (14.90) போன்றவை நிறத்தை உணர்த்துவன. இவற்றில் நிறம் என்ற சொல்லே இப்பொருளில் பெரிதும் காணப்பெறுகின்றது. நிறத்தோடு தொடர்புடைய நுண்மைப் பொருளாம் அழகு (15.138) இயல்பு (27 147), ஒளி (4.37), ஆகியவை சுட்டப்பெறும், பருப்பொருளாக விளங்கும் வடிவும் (11.40) ஆக்கப் பொருளின் பெயரும் (5.13) குறிக்கப் பெறும்-

இவற்றின் அடிப்படையில் காணும்போது நிறம் அமைந்துள்ள வடிவம் என்ற காரண நிலை. பின்னர் அது வெளிப்படும் நெறி, வெளிப்பட்டு விளைவிக்கும் காரிய நிலை, நிறமாம் வண்ணம் என்ற பெயரே அதனைக் கொண்டுள்ள ஆக்கப் பொருளின் பெயர் (சாந்து)ஆகியவற்றைக் குறிக்கும் பாங்கினைச் சிலம்பு கொண்டு அறியலாம்.

வடமொழி எனக் கருதப்பெறும் வருணம் மிக அருகியே வழங்கப் பெற்றுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. வண்ணம் என்ற சொல் சிலம்பில் குறிப்பிடப்பெற்றுள்ளதைக் காணும் போது அச்சொல் வர்ணம், வருணம் என ஆகியது என்று கொள்ளுதற்கு இடமுண்டு.

இந்நிறங்களின் அடிப்படையில் வினைச் சொற்கள் சிலப்பதிகாரத்தில் காணப்பெறுகின்றன மிகப்பேரளவில் (1) செம்மையின் அடிப்படையிலும் சிவந்த (5.84), சிவந்தனள் (30.41), சிவந்து (4.70), சிவப்ப (12.1-2), (2) பசுமையின் அடிப்படையிலும், பசந்த (8.68), பசந்து (4.5), (3) மிகக் குறைவாகக் கருமையின் அடிப்படையிலும் (கறுத்த 12.1.57) காணப்பெறுவதால் செம்மைநிறம் உணர்வு வேறுபாட்டைச் சுட்டவும் தொழில் நிலையைக் காட்டவும், மாந்தர் மனநிலையை உணர்த்தவும் பயன்பட்டதை அறிகிறோம். மற்ற நிறங்கள் அவ்வாறு வினையாக்கம் பெறவில்லை. வெள்ளணி (14.95), செவ்வணி (27.29) போன்றவை முறையே அரசியல் இல்லறம் ஆகியவற்றில் திகழும் சிறப்புகளை வெளிப்படுத்தின.

வெண்மை நிறம் சிலம்பில் சிவப்புக்கு அடுத்த நிலையில் பேரளவில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

நெய்தல் நிலத்தில் காணும் பொருட்களாகிய உப்பு (5.25), வளை (26.72–3), முத்து (7, 28), உணங்கல் (7.13) என்பன வற்றை வெண்மை சுட்டியே உரைப்பார் ஆசிரியர்.

தாழை, பனை ஆகியவற்றின் வெண்டோடு (16.35) போன்ற வன்பொருள்களிலும் மல்லிகையின் இதழ் போன்ற மென்பொருள்களிலும் விளங்கும் கூதாளத்திலும் (13.156) (2.33) வெண்மை தனியிடம் பெறுகிறது. வெள்ளரிக்காய் என வழங்கும் காயின் பெயர் சிலம்பில் வால்வரி கொடுங்காய் எனப் பாட வேறுபாடாகக் காணப்பெறுகிறது (16.25 பா. வே.). சிறுபாம்பு, ஏறு ஆகியவற்றின் வெண்நிறச் சிறப்பு தனியிடம் பெறும் (12.22; 17.10).

கரிய யானையின் வெண்கோட்டால் கட்டில்கள் செய் தமைத்த நாகரிகம் வெளிப்பட யானைகள் நிறைந்துள்ள சேர நாட்டிலும் கீழைக் கடற்கரைச் சோழ நாட்டிலும் இருக்கும் கட்டில்களைக் குறிப்பிடும்போது அது விளங்கிய நிலை சுட்டப் பெறும் (6.170, 28.45). வாளிலும் வேலிலும் கூர்மையும் ஒண்மையும் புலப்பட வெள்வாள் (12.13, 16.213), வெள்வேல் (20.65) என வரும்.

வெண்மணற் குன்றை வாலுகம் (6.131) என நெய்தலில் காட்டி, பின் அதை ஒட்டி வெண்குன்றம் (24.8) என முருகன் விளங்கும் செய்குன்றினைக் காட்டும். நிலவின் பிறைவடிவிலும் (4.23), முழுவடிவிலும் (7.5), கதிரிலும் (13.17), வெண்மை பிரியா நிலைபெறுவதைக் காணலாம். வெண்மையைப் பாலுடன் பொருந்தக் காட்டுவது முல்லை நாகரிக விளைவாகும் (13.17, 13.27). கடலின் கருநிறத்தின் எதிரிடையாக விளங்கும் வெண்மை அதன் அலையின் தலையாக விளங்கும் முரணிலையை வெண்டலைப் புணரில் (26.81) காணலாம்.

அரசர்க்கும் வெண்மைக்கும் உள்ள சிறப்பு அரசர் தம் வெண்குடை வாயிலாக நூல் முழுதும் வெளிப்படுகிறது. மூவேந்தர்களின் வெண்குடை சோழர் பாண்டியர் குடிகளைச் சுட்டும்போது சென்னி வெண்குடை (1.46), வெண்குடைப் பாண்டியன் (17.5) எனப் புலப்படும் சேரனின் வெண்குடை அவன் தன் ஆற்றலுரிமை வெளிப்பட அமையுட (26.8). அரசர் தம்

வெண்குடைக்குப் பெரும் சிறப்பு அமைந்ததைக் காட்டும் வகையில் அரசனே வந்ததுபோல் வெண்குடையின் புறப்பாடு மதிக்கப் பெற்றது (1.46). திங்களை வாழ்த்துதற்குரிய காரணம் அரசனின் வெண்குடை போலிருத்தல் எனச் சிலம்பின் தொடக்கத்தில் காட்டும்போதே புலப்படும் (1.2). அரசர் பிறந்த நாளில் வெள்ளணி ஒப்பனையால் வெண்மை பெற்ற சிறப்பை (27.229) மேலும் காணலாகும். அரசர் மற்றொரு அரசனைத் தோற்கடித்தபோது தோற்ற மன்னனின் வெண் குடைக்காம்பே தலைக்கோலாக அமைக்கப் பெற்றதும் வெண்குடைக் களித்த மதிப்புடன் வெளிப்படும். (3.115).

வெள்ளை யானை என இந்திரனின் ஐராவதம் போற்றப் பெறுவதுடன் வெள்ளை என்ற சிறப்படை நீங்காமல் அமைகிறது (5.143, 9.9). கருநிறக் கண்ணனின் அண்ணன் பலதேவன் வெள்ளை எனவே சிறப்பிக்கப் பெறும் கடவுளாவான் (9.10, 13.9) அவனின் தூய வெள்ளை துலங்குமாறு வாலியோன் (5.171) எனக் குறிக்கப் பெறுவான்.

அந்தணர்க்குரிய நிறமாக வெண்மை கூறப்பெறுவதும் (14.13) அவர்தம் பல்லின் வெண்மையும் பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலம் எனக் கூறப் பெறுவதும் சிலம்பு எழுந்த காலத்தில் அந்தணர் நிறம் உயர்நிலை பெற்றதை எடுத்துக் காட்டும்.

ஆயின், வெள்ளை என்பது பயனற்றது என்ற வழக்கும் குறியீடாக இருந்ததை நூலின் இறுதியில் 'வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்' (30.198) எனக்கூறும்போது அறியப் பெறும். வெளியார், வான்சுதை வண்ணம் கொளல் என வள்ளுவர் குறிப்பிடும் நெறியாக இதனைக் கொள்ள முடிகிறது. எனினும் சமுதாயத்தில் அந்தணர் நிறமாக வெள்ளை அமைந்ததையும், அரசர் தம் குடையிலும், அரசர் தம் பிறந்த நாளில் கொண்ட கோலத்திலும் வெண்மையின் சிறப்பைக் காணமுடிகிறது.

வெண்மை என்பது தூய்மையின் குறியாக வால் (13.13) என்று காண்பதுடன் வெளிப்படையாகத் தூநிற வெள்ளை (17.10) எனவும் வெளிப்டும்.

நீலநிறம் கொண்டு சற்று விரிவான செய்திகளை அறியமுடிகிறது. நீலம் என்ற பண்பைக் குறிக்க மணி என்ற சொல் பெரிதும் பயன்படுகிறது. பல்வகைப் பட்ட மணிகளில் நீல

மணியை இது சுட்டுவதாக அமைகிறது. மணிவகைகளுள் ஒரு சாதியாக நீலம் அமைந்ததின் பயனாக இதனைக் கொள்ளலாம். மேலும் நீலவகையுள் ஒன்றாக இந்திரநீலம் (6.103) ஓரணியின் அழகைச் சுட்டுவதற்கு வெளிப்படுகிறது.

மலை, கடல், வானம், வானத்திலுள்ள மேகம், ஒருசில மாந்தரின் உடல், தலைமுடி ஆகியவற்றின் நிறத்தை அவ்வப் போது அவை தோற்றும் நிறத் தோற்றத்திற்கேற்ப நீல நிற மாகக் கவிஞர் கண்ணுக்குப் புலப்படுகிறது.
சான்றுகள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| நீலகிரி | — | 26.85 |
| கடல் (வண்ணன்) | — | 17.26 |
| மணிவிசும்பு | — | 24.9 |
| நீலமேகம் | — | 11.35 |
| திருமணிபுரையும் மேனியன் | — | 22.97 |
| மணிக்குழல் | — | 28.73 |

கருமை, நீலம் என்ற இருநிறங்களின் செறிநிலை இங்குக் கருத்தில் கொள்ளப்பட்டதா என ஐயத்திற்குரிய வண்ணம் நீலம் அமைந்துள்ளது.

குவளை (5.230) போன்ற இயற்கையில் பூத்த மலர்களும், நீலப் பறவை (24.15) எனச்சிறப்பாகச் சுட்டப்பெறும் மயில் போன்ற பறவைகளும், கடிப்பிணை (6.103), தோடு (8.112) ஆகிய நகைகளும், மேற்கட்டி போன்ற ஆடைகளும் (1.49) நீல நிறப் பொலிவுடன் விளங்கியதைச் சிறப்பாகக் கூறும்போது மற்ற நீலப் பறவைகளுக்கில்லாச் சிறப்பை மயிலுக்கு ஏற்றிக் கூறும் குறிஞ்சி மனமும் உணரத் தக்கது.

மாந்தர் தம் மேனி அழகை நீல நிறத்தில் கண்டதன் விளை வாக நீலன் (28.80), நீலி (23.159) எனப்பெயரிட்டு மகிழ்ந்த பழக்கத்தை அறிகிறோம். திருடர்கள் தங்கள் தொழில்புரிதற்கு உதவியாக உடலை மறைக்க நீல ஆடையே உடுத்திய பழக்கத்தை இளங்கோ வெளிப்படுத்துகிறார் (16.204). இது மதுரைக் காஞ்சியில் கண்ட மரபு நெறி என்பதை உணரும்போது (639-42) நீலம் எவ்வாறு பயன்பட்டது என அறிகிறோம்.

தமிழகப் பகுதியில் மிக உயரமான மலைப்பகுதிக்கு நீலகிரி எனப் பெயரிட்டுப் போற்றியதைக் (26.85) காணும்போது உயர் மதிப்பைத் தூண்டும் நிறமாகவும் இருப்பதை உணரமுடிகிறது.

இங்ஙனம் இயற்கைப் பொருள்கள் செயற்கைப் பொருள்கள் ஆகியவற்றில் நீலம் தனி இடம் பெற்றதைக் காட்டிலும் திணை நிலக் கடவுளரில் முல்லைநிலக் கடவுளாம் திருமாலை மணி வண்ணனாகவும் (10.10), பாலை நிலத் தெய்வமாம் கொற்றவையை நீலி (12.1.68) ஆகவும் பல இடங்களில் காண முடிகிறது.

மற்றப் பொருள்களில் காணும் நிறத்திற்கும் இத் தெய்வ வடிவங்களில் காணும் நிறத்திற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து அந்நிறத்தில் தூய்மை கலந்திருப்பதைச் சிலம்பு சுட்டும். (தூமணிவண்ணன் 16.50).

இங்கு, நீலம், கருமை என்ற இரண்டின் முழு வேறுபாட்டைப் பாகுபடுத்தியதாகக் காணமுடியவில்லை.

மணிவகையில் நீலமணியின் நிறம் பெற்ற மதிப்பு பெரு மதிப்பாகும். அக்கால நகர் வாழ்க்கையிலும் முடி ஆட்சியிலும் நீலமணிகள் பெற்ற சிறப்பு இதில் வெளிப்படும். மேலே கூறிய தின்படி நிலத்தில் உயர்ந்த பகுதிக்கும் மக்களில் உயர்ந்தவர்க்கும் ஆண்பெண் வேறுபாடின்றி இந்நிறத்தின் பெயரிட்டுப் போற்றினர்.

திருட்டுத் தொழில் புரிவோர் தம்மை மறைத்தற்கு நீல ஆடையை உடுத்திய செய்தி தொழில் தடையின்றி நடைபெறு தற்குரிய வகையில் ஆடையின் நிறத்தை ஆய்ந்தெடுந்த திறம் வெளிப்படும்.

முல்லை, பாலை ஆகிய திணை நிலைத் தெய்வங்களிலும் நீலநிறம் சிறப்பிடம் பெற்றுளது. தாய்த் தெய்வமும் ஆண் தெய்வமும் இருபாலரும் தனித்தனியே தலைமை பெற்றுள்ள சமுதாயத்தைக் காட்டிலும் சமுதாய மாற்றத்திலும் நீலம் என்ற நிறம் தலைமையினின்று பிரிந்து மாற்றப்பெறவில்லை என்ற உண்மையைக் கொண்டு இருதிறப்பட்ட சமுதாயத்திலும் நீலமணி மதிப்பிற்குரிய பொருளாக விளங்கியதும் கடல் மலை வானம் போன்ற இயற்கை நிறத் தோற்றத்தில் ஈடுபட்ட

அழகுணர்ச்சிக்குரிய பண்பாக நீலம் விளங்கியதையும் சிலம்பால் அறிய முடிகிறது.

பசுமை நிறம் பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்தில் மிகக் குறைவாகவே காணமுடிகிறது. பச்சை என்ற சொல் வெளிப்படையாகக் காணப் பெறாவிடினும் பசும், பாசு, பைம் போன்ற அடியாக இந்நிறம் புலப்படுத்தப்பெறுகிறது.

இயற்கையாக அமைந்துள்ள தளிர், இலை, காய் போன்ற செடி கொடியின் உறுப்புகளைச் சுட்டும் வகையில் அமைந்துள்ளது.

பைந்தளிர் (4.11)
பாசிலைப் போதி (10. 1)
பாசிலைக் குருகு (13. 52)
பாசிலை பொதுளிய மன்றம் (23. 76)
மாதுளம் பசுங்காய் (16.25)

வளமான பயிரினங்கள் பசுமை நலம் கனியத் தோன்றுவதைப் பைம்புனம் (24. 23) எனக் காணலாம்.

இவ்வியற்கையில் காணும் பசுமைநிறம் இலைவளர் நிலையில் முதிர்நிலை பெறுகிறது. இதனைச் சுட்டுவதாகப் பாசிலை என்ற தொடரைக் காண்பர் உரையாசிரியர். இளவேனிலில் செந்தளிராயது முதுவேனிற் காலத்தில் முற்றிப் பாசிலை ஆயிற்று எனக் காட்டும்போது முதிர் பசுமை பற்றிய குறிப்பு இங்கு வெளிப்படுகிறது. இதன் அடிப்படையில் பாசு என்பது மேலும் விளக்கம் தருதற்குத் துணைபுரியும்.

செயற்கையில் விளைத்த உலோகமாம் பொன்னின் நிறத்தைச் சுட்டும்போது பசும்பொன் என்பர். கலப்பற்ற பொன் என்ற பொருளில் இது பயன்படுகிறது. இப்பொன்னால் உருவாக்கிய பூரணகும்பம் (5 152) படாகை (5.154) போன்ற ஆக்கவினைப் பொருள்களின் அடையாகவுள்ளது. தொழில் நலம் வளர்ந்த காலத்தில் பொன்னிறத்தில் இளம்பச்சையை இங்ஙனம் குறிக்க இது ஆளப்பெற்றுளது எனலாம்.

கிளிச்சிறை என்ற தொடர் பொன் வகையைக் குறித்தல் கொண்டு இவ்வகைப் பாகுபாடு வருதற்கு முன்னர்ப் பொதுமை ஆட்சியில் பசும்பொன் வந்துளது எனக் கொள்ள இடமுளது. புதுமை என்ற பொருள் கொள்ளுமாறு பசுந்துணிப் பிடர்த்தலை (20. 245) போன்ற இடங்கள் வழி செய்யும்.

பசிய வளையல்கள் தலைமைத் தவம் பெற்ற பெண்டிர் அணியாகப் பல இடங்களில் காணப்பெறுகின்றன. மாதவி (8. 110) யைப் பற்றிக் கூறுமிடத்துப் பசுமைநிறத் தொடியைச் சுட்டுவதால் இல்லறத் தலைமை மட்டுமன்றிக் கலையுலகத் தலைமையையும் பைந்தொடியில் ஆசிரியர் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிகிறது.

மணிமேகலை துறந்த நிலையில் இப் பைந்தொடி என்ற தொடர் அவள் பெருமையைச் சுட்டுகின்றது (30. 35). பெரும் பாலும் காப்பியத் தலைவியாம் கண்ணகியைச் சுட்டவே இந் நிறம் கொண்ட தொடி பயன்படுத்தப் பெறுவதால் தலைமை நலம் இத்துடன் இணைந்திருப்பதை அறியமுடிகிறது (9 67, 23.24, 1̂52, 29.11).

மேலும், ஓரிடத்து கொற்றவை சிறப்பைக் கூறும்போது பைந்தொ்டிப்பாவை (12.1.70) எனப் பரவப்பெறுவாள். இத னால் இறைமை நலமும் இந்நலத்துடன் இணைகிறது.

பசுமை என்பது இயற்கை, செயற்கை என்ற பொருள் களின் பண்பைச் சுட்டும்போது பொது நிலையிலும் தலைமை மாந்தர் தெய்வம் ஆகியோர் பற்றிக் அணிநலம் குறிப்பிடும் போது வளையுடன் தொடர்பு பூண்டு பசுமை பொலிந்து தலைமை நலம் காட்டி நிற்பதை உணரமுடிகிறது.

கருமை நிறத்தைச் சுட்டக் கறை (26.198), கார் (29.11), காழகம் (22.91), மணி (6. வெ.), மா (25.1), மை (4.56, 6.108) போன்ற பல சொற்கள் சிலம்பில் பயன்பட்டுள்ளமை கொண்டு இந்நிற ஆட்சிச் சிறப்பு வெளிப்படும்.

சில மனிதரின் நிறத்தைக் கருமையாகக் காட்டுவதுடன் 12.15 அவர்தம் உறுப்புகளில் கருமை நிறம் கொண்டவற்றைச் சிறப்பாகக் காண முடிகிறது.

தலை (27.39)

ஆண் தலைமயிர் (19.35)

பெண்டிர் தலைமயிர் (கூந்தல்) (4.56),

ஓதி (6.108), புருவம் (2.45)

கண் (5.237)

பற்றி அறியும்போது கருங்கண்ணின் பெருமையே பலவிடங்களில் காணப்படுகிறது. ஆசிரியர் மற்றெல்லா உறுப்புகளிலும் கருங்கண் பற்றித் தனி ஆர்வம் காட்டுவது நன்கு வெளிப்படுகிறது.

கரிய நிறமுடைய யானையைக் கரிமா எனவும் (26.189), கருங்குரங்கினைக் கருவிரற் குரங்கு (15.159, 208) எனவும் அவற்றின் நிறநலம் கூற வெளிப்படும். கரிய நிறமுடைய கரிக்குருவியையும் (12.12.4), காளையையும் (17. கொளு. 1) காரி என்ற பெயரிடும்போது உயிரினங்களுக்கும் பெயரிட்ட நிலையும் வள்ளல்கள் போன்ற சங்ககாலப் பெரிய மனிதர்களுள் சிலர்க்கும் இப்பெயரிட்ட நிலையும் நினைத்தற்குரியது.

செய்யும் தொழிலால் மாந்தர் கருமை நிறம் பெற்றதையும் கடின உடலுழைப்பால் அத்துடன் வலிமை சேர்ந்திருப்பதையும் காட்டும் வகையில் சிலம்பு,

கருங் கைக் கொல்லர் (5.29)

கருங்கை வினைஞர் (பள்ளர், பறையர்) (10.125)

ஆகியோர் பெருமை சுட்டும். உடலால் தொழில் புரிவோர் நிலை தாழ்ந்ததற்கேற்ப இந்நிறத்தின் பெருமைப் பொருளும் நாளடைவில் தாழ்ந்தது. கருமை என்ற நிறத்துடன் மக்கள் அன்றாடம் பயன்படுத்திய கருவிகள்,

கரிபுறவட்டில் (16.32)

காரகல்... விளக்கும் (6.138)

காரகில் (4.36)

குழல் (3.26)

ஆகியவற்றிலும் போர்க் கருவிகளான

கருஞ்சிலை (28.18)
கறைத்தோல் (26.198)

ஆகியவற்றிலும் கருநிறம் வெளிப்படுமாறு காணலாம். குவளை மலரைக் கருங்குவளையாகவும் காட்டும்போது அதன் நெடுமையை மறவாது கூறுவதை அறியமுடிகிறது (5.150, 13.184).

கயல்மீனைக் கூறும் பல இடங்களிலும் கருமை இடம்பெற்றுக் காப்பிய மாந்தர் கருங்கண்ணுக்கு அணி செய்யும் காப்பிய நயம் இடைவிடாமல் பின்பற்றப் பெறுவது குறிப்பிடத் தக்கதாகும் (13.166, 7.25, 6.3, 6.174, 8.16, 118, 7.5, 16.94, 18.52).

கரியநிறம் நீலநிறத்துடன் வேறுபாடின்றி அஞ்சன வண்ணன், கரியவன் என்று திருமாலைச் சுட்டும் (6.47, 17.36). அதே சமயத்துச் சனியினைக் குறிக்கவும் கரியவன் (10.102) என்ற பெயர் பயன்படுகிறது. சனி மக்கட்குச் செய்யும் துன்பத்தை ஒலிக்க இது உதவும்; ஆனால் திருமாலுக்கு இப்பெயரும் பழைய நெறியில் ஓரளவே பயன்பட்டு வரும் வழக்கையும் உணர முடிகிறது.

இந்திர விழவூரெடுத்த காதையில் கண்ணகி கருங்கண்ணை மாதவி செங்கண்ணோடு இணைத்துக் காட்டும் காப்பியப் போக்கில் கருமையின் துன்பக் குறிப்பு வெளிப்படுகிறது. அதனால் 'கருங்கண் என்றது கண்ணகிக்கும் புணர்ச்சியில்லாமையால் நிறைகரந்து துன்பத்தால் கண்கள் நீருகுத்தன' என அடியார்க்கு நல்லார் (5.237) குறிப்புப் பொருள் காணமுடிகிறது. மேலும், கருங்கைக் கொல்லர் (5.29) என்பதற்குப் பெருமை எனக் கருமைக்குரிய தொடக்க காலப் பொற்கொல்லன் கோவலன் கண்ணகி வாழ்விற்குக் கூற்றுவனவாய் வந்த நிலையை உணர்ந்து அதற்கேற்ப கதையறி பொருளாகக் கருமைக்குப் பொருள் உருமாற்றம் பெறுகிறது.

கருந்தொழிற் கொல்லன் என்ற தொடர்க்குக் கொலைத் தொழில் புரிந்த கொல்லன் (16.165) எனவும், கொலைத் தொழிற்கு அஞ்சாத பொற்கொல்லன் (16.202) எனவும் முன்னரே கொலைத்தொழிலில் அவன் நிலைத்தன்மையும்

கோவலனைக் கொல்ல அஞ்சாத நிகழ்கால நிலையும் விளக்கும் வகையில் கதையறிபொருளைக் கருமை வாயிலாகக் காட்டு கிறது. உறுப்புநலம் காட்டிவந்த கருநிறம் சிற்றுயிரினங்களும் மக்களும் காரி எனத் தம் பெயர் கொள்ளும் அளவு பெருமை பெற்றிருந்ததுடன் திருமாலின் பெயரும் அதனடிப்படையில் விளங்கியது.

ஆயினும் நீல நிறத்தின் பெருமை மணிவகைப் பெருமை யாலும் கருநிற மக்கள் சமுதாய நிலையிலுற்ற சிறுமையாலும் கருமை என்பது துன்பக்குறிப்பைக் காட்டுவதுடன் கதை மாந்தர் உறுப்பின் நிற வாயிலாக அக்குறிப்பைப் புலப்படுத்து வதில் தனியிடம் பெற்று நிற்கிறது.

செம்மை நிறம் சிலம்பில் கையாளப்படாத காதையே இல்லை என்னும் அளவில் எல்லாக் கதைகளிலும் குறிப்பிடப் பெற்றுள்ளது. சிவந்தல் (5. 84), செம் (19.30), செய் 6.61), செவ் (1.37), செக்கர் (21.47), அரத்தம் (22.46), துவர் (6.26) போன்றவை செம்மையைச் சுட்டி வருவன. செடி கொடிகளில் செம்மை நிறத்தைக் காணும்போது நீரிலே தெளிவாகச் செம்மை நிறத்தை வெளிக்காட்டும் பவளக்கொடி (14.198), பல்வேறு நல் மலர்கள் (செந்தாமரை 8. வெ.), செங்கழுநீர் 4.64), செங்கூதாளம் (14 88), இலவம் (5 21 4), கார்காலத்தில் பூக்கும் செம் மலராம் வேங்கை (12 3), செங்கொடு வேலி (14 91) ஆகிய வற்றை நிற அழகுடன் உரைக்கிறார் இளங்கோ அடிகள். மேலும், முதிர்ந்துதிர்ந்த பழைய மலரைச் 'செம்மல்' (7.39) என்றே காண்கிறோம். பலாப் பழத்தின் சுவைகளில் சில செந் நிறத்துடன் இருப்பதையும் நிறச்சுவையுடன் அமையும் (10.75). வயலில் விளையும் நெற்களில் சிறந்த நெல்லைச் செந்நெல் (7.37) என்பர்.

பறவைகளில் வெண்மையான அன்னத்தின் கால் சிவப்பாக எதிர் எதிர் நிலையில் சிறந்து விளங்குவதைக் குறிப்பது போல செங்கால் அன்னம் (10.115) என்று கூறும் புலன்கள் சிவந்த கண்ணின் சிறப்பைப் பெருமித விளங்கிய சிறப்பினை மறைக் காமல் கூறும்போது ஆன் (10.121), அரிமா (12.10) ஆகியவற் றைக் கொண்டு காண முடிகிறது.

மாந்தரின் உறுப்புகளில் கை (7.29), கண் (7.21), வாய் (7 28), இதழ் (6.26), அடி (4.47), சடை (28.70) மேனி

(13.27) ஆகியவற்றின் செம்மை குலையாமல் கூறப்பெறும். சிறப்பாக மாந்தர் தம் உடம்பில் அமைந்த சாயலையும் (30.126) மேனியில் பார்ந்த சுணங்கையும் (7.45) செவ்வண்ணம் வெளிப் படுத்துகிறது. தீயின் வெம்மை தெரியச் செந்தீ எனக் கூறப் பெறுகிறது (22.148).

இயற்கை ஒளிக் கோலமாகிய கதிரவனைச் செஞ்சுடர் (22.17) செங்கதிர் ஞாயிறு (11.2) செங்கதிரோன் (19.32) எனப் பலவாறு போற்றப்படுவது கொண்டு கதிரவனோடு சிவப்பு கொண்ட உறவுநிலை நன்கு புலப்படும். வான்மதியுடன் வெண்மை இணைந்தது போன்று கதிரவனுடன் செம்மை இயல்பாக இணைந்துள்ளது. அந்திவானத்தின் செக்கர் நிறம் கவிஞர் உளத்தை நன்கு கவர்ந்துளது (27.145; 21.47) என்பது பல இடங்களில் வெளிப்படுகிறது.

அரசர் நிறம் சிவப்பு என்ற நம்பிக்கையைக் குறிப்பாக உணர்ந்தாலும் (14.183 'அரசன் சிவப்பு') அரசரின் ஆட்சி நல்ல ஆட்சி என்பதன் அறிகுறியாக அவர் பிடித்த கோல் செங் கோல் என்ற வழக்கு (7.3) மிகுதியாக மரபு வழியில் வருவதைச் சிலம்பு ஏற்கிறது. இதில் மூவேந்தர் என்ற வேறுபாடு இங்குக் காணப் பெறவில்லை (7.3, 13.9, 22.5, 27.89).

சம நிலையைச் சுட்டும் வகையில் செந்நிலை (17.17) என்றும் காப்புடைய நிலையைக் காட்டும் வகையில் செந்நெறி (11.58) என்றும் நேரிய நிலையை உணர்த்தச் செம்மொழி (30.32) செம்முறை (3.76), செம்பகை (8.29) ஆகியவை முறை யாக விளக்கம் பெறுகின்றன. நிறம் என்பது ஓரளவு மாறி நேர்மை, காப்பு, சமம் ஆகிய நற்பண்புகளை உடையது செம்மை என்ற பொருள் பெறுவதையும் இவற்றால் அறிய முடிகிறது.

அகத்திணை மரபில் செவ்வணி காட்டுதல் என்பது கூடலின்பம் குறித்து நிற்கும். அதனை உள்ளத்தும் கொண்ட கவிஞர்,

'வீழ்பூஞ் சேக்கை மேவினி திருந்தாங்
கரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇக்
குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்திச்

சிறுமலைச் சிலம்பிற் செங்கூ தாளமொடு
நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து
குங்கும வருணங் கொள்கையி னிழைத்துச்
செங்கோடு வேரிச் செழும்பூம் பிணையல்
சிந்துரச் சுண்ணஞ் சேர்ந்த மேனியில்
அந்துகிர்க் கோவை யணியொடு பூண்டு
மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தர்க்கு
கலிகெழு கூடற் செவ்வலை காட்ட

(14. 85—95)

எனக் கூறும்போது மருத நிலக் கடவுளாம் இந்திரனுக்கு மலர்கள் போன்ற பல இயற்கைப் பொருள்களில் துணை கொண்டு பூத்த செவ்வணி காட்டும் குறிப்புப் பொருளை உணரலாம். இத்தகைய செவ்வணி கண்ட காப்பியத் தலை மகனாம் கோவலன் பின்னர்க் கொலைக்களக் காதையில்,

'புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்துயர்

(16.214—15)

கூர்ந்த பிரிவுத் துன்பந்தை முன்னைய செவ்வணிக்கு முரண் பட்டுப் பிரிவுத் துன்பத்தில் காட்டப்பெறும் புதுச் செவ்வணி பூண்பதைச் சிலம்பால் அறிகிறோம். இவை காப்பியம் கூட்டும் நிறச் செவ்வியாகக் கொள்ள முடியும்.

கடவுள் பல்லோருடைய நிறம் சிவப்பாக இருப்பதைச் சுட்டு தற்கு இக்காப்பியம் தவறவில்லை.

செவ்வேள் — முருகன் (1.37)
செய்யோன் திருமகள் (6,61)
செங்கடவுள் — கதிரவன் (27.137)

எனக் காணும்போது சிறு தெய்வங்கட்கும் முதற்றெய்வங்களின் தலைவியோர்க்கும் சிவப்பால் பெறும் சிறப்பை அறியலாம்.

இயல்பாகக் கண்ணின் சிவந்த நிறத்தைச் சுட்டி அதனை உடைய திருமாலையும் (11.51), காமக் குறிப்புற்றது போல் காட்டி இந்திரனையும் (11.24) குறிப்பதுகொண்டு கடவுளரின்

நிலைக்கு ஏற்பச் செம்மைநிறம் குறிப்பை உணர்த்துமாறு உள்ளது. எனினும் செஞ்சடை வானவன் (26.98) என்ற இடத்தில் சிவனின் சடைக்குரிய செந்நிறத்தை இயல்புநிலையில் வெளிக் காட்டும்.

முருகனின் படைவீடுகளில் ஒன்றாக விளங்கும் செந்தில் என்பது செம்மை என்ற பண்புடன் இணைந்திருப்பதும் சிலம்பு வாயிலாக உணரமுடிகிறது (24.8).

செந்தன்மை நன்மையும், சில கடவுளர்க்குரிமை உடையதாகவும் காட்டிய கவிஞர் காப்பியத் தலைவியாம் கண்ணகியை,

சேயிழை கேள் (9.73)
சிலம்பின் வென்ற சேயிழை (22.135)
சிலம்பொடு சென்ற சேயிழை (25.72)
செயிருடன் வந்தஇச் சேயிழை (25.108)
சிலம்பின் வென்றனள் சேயிழை (27.73)

எனக் குறிப்பிடுகிறார். காவற்பெண்டும், அடித்தோழியும் கடவுட் சாத்தனுடனுறைந்த தேவந்தியுமுடன் கூடிச் சேயிழையைக் காண்டும் என்று (29.1) கூறும்போது சேயிழை என்ற பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை அவளையே உணர்த்தி வருவதால் சிலம்பு போன்ற பல பொன்னிழைகளைக் கண்ணகி இழந்தாலும் செம்மை என்பது கற்பு, சீறிய சினம், தெய்வம், நலம் ஆகிய பண்பின் அணியாகப் பொலிந்து விளங்குவதைச்சுட்டும்.

அத்துடன் இக்காப்பியம் 'கண்ணகி மகள்' என்று சிறப்பிக்கப்பெற்ற மணிமேகலை துறவுபூண்டு செம்மைநிலை பெற்றாள் என்பதை உணர்த்தும் வகையில் சேயிழை (30.32) எனக் கூறப் படுகிறாள்.

இதனால், செம்மை என்பது தலைவியர்க்குரிய பண்பாக அமைந்து காப்பியத் தலைவியையே பெரிதும் சுட்டி அவர்தம் கொடிவழியையும் சுட்டுவதாக அமையும் வகையில் இளங்கோ அடிகள் அமைத்துள்ளார் எனலாம்.

இந்தகைய நிறங்களின் தனி நிறம் மேலும் செறிவடைவதை உணர்த்தும் வகையில் தாமரைச் செங்கண் தழல் நிறம்கொள்ள (28 110) எனக் கூறுவார் ஆசிரியர். மேலும், ஒரு நிறம் காண்போர் உளத்தில் கிளர்ச்சியை உண்டாக்கும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் நிறங்கிளர் சீறடி நெய்தோய்தளிரின (30.20) என இளமகளின் உறுப்புநலன் காட்டுவதில் நிறக்கிளர்ச்சி புறப்படும்.

நிறங்கள் ஒன்றுடன் ஒன்று இணையாகக் காட்டும்போது காப்பிய அழகுணர்வு பன்மடங்கு பெருகுகின்றது. இளங்கோ அடிகள் நிறங்களை ஒன்று—ஒன்று என்ற நிலையில் கூறும்போது இயற்கை நிலை, செயல் நிலை, இல்லற நிலை, அரசியல் நிலை, செய்யுள் அணி நிலை என்ற பாங்கில் அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

வெண்மையைக் கருமை, சிவப்பு ஆகியவற்றுடனும் அதனை மற்றொரு வெண்மையுடனும் இணைக்கும்போது

வெண்மதி காரிருள் (10.2—4)

சங்குவளை பவளவளை (5 170—3)

வெண்குடை வெள்வளை (26.72—3)

இயற்கை நிலை தனியிடம் பெறுகிறது.

அருகிய நிலையில் பசுமையும் சிவப்பும் உருவக நிலையில் இணைகின்றன (7.10). நீலம் கருமையுடனும் (7.26), செம்மையுடனும் (21 47) இணைகின்றது. இங்கும் இயற்கை நிலையே விஞ்சி நிற்கிறது.

செம்மை மற்றத் தனித்தனி நிறங்களுடன் இணைவது இக்காப்பியத்தில் மிகுதியாக வெளிப்படுகிறது.

செம்மை கருமை — செய்ய கரியவன் (17.36)
செம்மை வெண்மை — அந்திவான் வெண்பிறை (4.23)
செம்மை பசுமை — செங்காலன்னம், பைங்கால் கொக்கு (10.115)

இந்நிலையில் இயற்கை நிலைக்கு அடுத்துச் செயல்நிலை இடம் பெறுகிறது.

இருநிறங்கள் போலவே மூன்று நிறங்களை இணைத்துக் காட்டும்போது உருவக நிலையே தனியிடம் பெறுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வெண்மை | செம்மை | செம்மை | (7.37) |
| வெண்மை | செம்மை | பசுமை | (7.38) |
| நீலம் | செம்மை | வெண்மை | (7.22) |
| கருமை | செம்மை | வெண்மை | (17.6—10) |

ஆகியன அமைந்துள்ள பாங்கு கானல்வரி அகப்பாடலில் பண்டை இயற்கைப் பின்னணியில் அணிநயம் உருவகமாகப் புலப்படுகிறது. இது காப்பிய வளத்திற்கு வலிலூட்டும் பாங்காக அமைகிறது.

மலர்கள், தெய்வங்கள் பற்றிய நிறங்கள் நான்கு வரிசையில் அமைவதைக் காட்டும்போது காப்பியத்தில் இயற்கையும் இயற்கை இறந்த பொருள்களும் நிற உணர்வுக்குப் பின்னணி யாக அமைந்து வேறுபட்ட நிறங்கள் ஒன்றுபட்ட நிலையில் அழகுணர்ச்சியைப் பெருக்கப் பயன்படுவதைக் காண்கிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| செம்மை | செம்மை | பசுமை | கருமை | (8.45—6) |
| செம்மை | வெண்மை | நீலம் | வெண்மை | (5.170—2) |

இந்நிலையில் நிறங்கள் பல்வேறுபட்ட பின்னணியில் அமையும்போது இயற்கை நிலை என்பது பேரளவில் பயன்படுத்தப் படுகிறது. உருவகம் என்பது காப்பிய அணி நயம் பெருகுதற்கு நிற அளவிலும் அதன் இணைப்பிலும் பயன்படுத்தப்பெறுகிறது.

கொற்றவை சிறப்புக் காணுமிடத்து வெண்மை தனிச்சிறப்பு உறுவதும், உணவாக்கம், காளைகள் வரிசை, நால்வருண நிலை ஆகியவற்றைக் குறிப்பிடும்போது சிலம்பில் நிறச் சிறப்பு வெளிப் படுகிறது. மற்றக் காண்டங்களைக் காட்டிலும் மதுரைக் காண்டத்தில் நிறம் பெரிதும் பயன்படுத்தப்பெறுகிறது. கதை நிகழ்ச்சி, உணர்ச்சிப் பெருக்கம் ஆகியவை அடிப்படையாகக் கொண்டு இந்நிலை அமைந்துள்ளது எனலாம்.

சுருங்கக் கூறின் சிலம்பில் நிறம்பற்றிய செய்திகள் காப்பிய வளத்திற்கும் காப்பியக் குறிப்புப் பொருள் அமைப்பிற்கும் தலை மக்கள் பெருமைக்கும் கையாளப் பெற்றுள்ளன.

## துணை நூல்கள்

1. சிலப்பதிகாரம், இளங்கோ அடிகள், உ. வே. சா. பதிப்பு, சென்னை, 1948.

2. Descriptive Grammar of Cilappatikaram, S. V. Subramanian, Jayakumari Store, Nagercoil, 1965.

### பின்னிணைப்பு

### சிலம்பில் நிறம் வெளிப்படல்

| சிலம்பில் காதை எண். | வெண்மை | நீலம் | பசுமை | கருமை | செம்மை |
|---|---|---|---|---|---|
| 1. | + | + | — | — | + |
| 2. | + | + | — | + | + |
| 3. | + | — | + | + | + |
| 4. | + | — | + | + | + |
| 5. | + | + | + | + | + |
| 6. | + | + | — | + | + |
| 7. | + | + | — | + | + |
| 8. | — | + | + | + | + |
| 9. | + | — | — | — | + |
| 10. | + | + | + | + | + |
| 11. | + | + | + | + | + |
| 12. | + | + | — | + | + |
| 13. | + | — | + | + | + |
| 14. | + | + | + | + | + |
| 15. | + | — | — | + | + |
| 16. | + | + | + | + | + |
| 17. | + | + | — | + | + |
| 18. | — | — | — | + | + |
| 19. | — | — | — | + | + |
| 20. | + | — | + | + | + |
| 21. | — | + | — | — | + |
| 22. | + | + | — | — | + |
| 23. | + | + | + | — | + |
| 24. | + | + | + | — | + |
| 25. | + | — | + | + | + |
| 26. | + | + | — | + | + |
| 27. | + | + | — | + | + |
| 28. | + | + | — | + | + |
| 29. | + | — | + | + | + |
| 30. | + | — | — | + | + |

# 9. சீவகசிந்தாமணி-I

வே. சீத்தாலட்சுமி

நிறம் என்ற சொல்லுக்கிணையாக வண்ணம், கேழ், குரு, சந்தம், கோலம், உருவம் என்ற சொற்களை நிறப் பொருளுணர்த்துவனவாகக் காட்டுவர் திருத்தக்கதேவர். இச்சொற்கள் தனியாகவும், நிறச்சொல்லோடிணைந்தும், நிறம் சுட்ட வந்த பொருளோடு இணைந்தும் காணப்படுகின்றன. இச்சொற்களில் வண்ணம், குரு, சந்தம் ஆகியவை நிறமுணர்த்த வந்த சொல்லுக்கு முன்னும்[1], நிறம், கேழ், கோலம், உருவம் ஆகியவை பின்னும்[2] அமைந்து காணப்படுகின்றன.

வண்ணம் பெரும்பாலும் அஃறிணைப் பொருளின் நிறத்தையே சுட்டி நிற்கின்றது. நிறம், கேழ் பொதுவாக எல்லாவற்றின் நிறத்தையும் சுட்டி வருகின்றன. பிற சொற்கள் மிகக் குறைந்த நிலையிலேயே இவ்விலக்கியத்தில் ஆளப்படுகின்றன.

நிறம் எனும் சொல் நிறப்பொருளோடு இயல்பு[3], சிறந்த[4], ஒளி[5], உயர்நிலை[6], பாட்டின் கூறுபாடு[7], எனும் பொருள்களைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

ஒண்ணிறம்[8], பெருநிறம்[9], அருநிறம்[10], தூநிறம்[11], மொய்ந்நிறம்[12], திருநிறம்[13], வாணிறம்[14], தகைநிறம்[15], மிகை

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சீவக. | 894; 843; 1160 | 9. | சீவக. | 2517 |
| 2. | ,, | 1860 | 10. | ,, | 2517 |
| 3. | ,, | 1351 | 11. | ,, | 2707 |
| 4. | ,, | 2995 | 12. | ,, | 2730 |
| 5. | ,, | 1860 | 13. | ,, | 2517 |
| 6. | ,, | 993 | 14. | ,, | 1010 |
| 7. | ,, | 696 | 15. | ,, | 1077 |
| 8. | ,, | 1433 | | | |

நிறம்[16], தெண்ணிறம்[17], நன்னிறம்[18], அணிநிறம்[19], ஒண் கேழ்[20] என்பன போன்று பலவிடங்களில் அடைச்சொற்களோடு அமைத்து நிறங்களின் சிறப்பைக் காட்டுகிறார்.

இக்காப்பியத்தில் சிவப்பு, வெண்மை, கருமை, பசுமை, நீலம், பொன்னிறம் போன்றவை குறிக்கப்படுகின்றன. மஞ்சள் நிறம் இவ்விலக்கியத்தில் குறிக்கப்படவில்லை. இந்நிறங்களைக் குறிக்க வேறு பெயர்களும், பிற பொருள்களின் நிறங்களும் சுட்டப்படுகின்றன.

சிவப்பு நிறத்தைக் குறிக்க அத்து[21], அரத்தம்[22], துவர்[23] போன்ற பெயர்களும், குருதி[24], தொண்டைக்கனி[25] எரிமலர்[26], அரக்கு[27], இலவம்பூ[28], தீ[29] ஆகியவற்றின் நிறங்களும் பயன் படுத்தப்படுகின்றன. கருமையைக் குறிக்கக் காழகம்[30], காளகம்[31], காளம்[32], மை[33], மா[34], இரும்[35], இருள்[36] போன்ற சொற்களும் கழுநீர், கருவிளம்[37], கருங்குவளை[38] ஆகிய மலர்களின் நிறங்களும் நீலமணியின் நிறமும்[39] கூறப்படுகின்றது. நீலமணி[40] நீலமலர்[41] மேகம்[42], ஆகியன நீலநிறஞ் சுட்டும் உவமைப் பொருள்களாய் அமைகின்றன. பொன்னிறம், செண்பகப்பூ[43], கோங்கம்[44], கற்பகம்[45] ஆகிய மலர்களால் நிறம் சுட்டப்படுகின்றது. பசுமை நிறம் குறிக்க வேறு பெயர்களோ,

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | சீவக. | 1077 | 31. | சீவக. | 320 |
| 17. | ,, | 624 | 32. | ,, | 2245 |
| 18. | ,, | 2257 | 33. | ,, | 488 |
| 19. | ,, | 1665 | 34. | ,, | 2476 |
| 20. | ,, | 2346 | 35, | ,, | 1171 |
| 21. | ,, | 1848 | 36. | ,, | 682 |
| 22. | ,, | 1385 | 37. | ,, | 319 |
| 23. | ,, | 1557 | 38. | ,, | 2429 |
| 24. | ,, | 2271 | 39. | ,, | 2940 |
| 25. | ,, | 107 | 40. | ,, | 2038 |
| 26. | ,, | 662 | 41. | ,, | 1675 |
| 27. | ,, | 1990 | 42. | ,, | 1116 |
| 28. | ,, | 1881 | 43. | ,, | 1487 |
| 29. | ,, | 2348 | 44. | ,, | 2253 |
| 30. | ,, | 3120 | 45. | ,, | 2219 |

நிறம்[16], தெண்ணிறம்[17], நன்னிறம்[18], அணிநிறம்[19], ஒண் கேழ்[20] என்பன போன்று பலவிடங்களில் அடைச்சொற்களோடு அமைத்து நிறங்களின் சிறப்பைக் காட்டுகிறார்.

இக்காப்பியத்தில் சிவப்பு, வெண்மை, கருமை, பசுமை, நீலம், பொன்னிறம் போன்றவை குறிக்கப்படுகின்றன. மஞ்சள் நிறம் இவ்விலக்கியத்தில் குறிக்கப்படவில்லை. இந்நிறங்களைக் குறிக்க வேறு பெயர்களும், பிற பொருள்களின் நிறங்களும் சுட்டப்படுகின்றன.

சிவப்பு நிறத்தைக் குறிக்க அத்து[21], அரந்தம்[22], துவர்[23] போன்ற பெயர்களும், குருதி[24], தொண்டைக்கனி[25] எரிமலர்[26], அரக்கு[27], இலவம்பூ[28], தீ[29] ஆகியவற்றின் நிறங்களும் பயன் படுத்தப்படுகின்றன. கருமையைக் குறிக்கக் காழகம்[30], காளகம்[31], காளம்[32], மை[33], மா[34], இரும்[35], இருள்[36] போன்ற சொற்களும் கழுநீர், கருவிளம்[37], கருங்குவளை[38] ஆகிய மலர்களின் நிறங்களும் நீலமணியின் நிறமும்[39] கூறப்படுகின்றது. நீலமணி[40] நீலமலர்[41] மேகம்[42], ஆகியன நீலநிறஞ் சுட்டும் உவமைப் பொருள்களாய் அமைகின்றன. பொன்னிறம், செண்பகப்பூ[43], கோங்கம்[44], கற்பகம்[45] ஆகிய மலர்களால் நிறம் சுட்டப்படுகின்றது. பசுமை நிறம் குறிக்க வேறு பெயர்களோ,

---

16. சீவக. 1077
17. ,, 624
18. ,, 2257
19. ,, 1665
20. ,, 2346
21. ,, 1848
22. ,, 1385
23. ,, 1557
24. ,, 2271
25. ,, 107
26. ,, 662
27. ,, 1990
28. ,, 1881
29. ,, 2348
30. ,, 3120
31. சீவக. 320
32. ,, 2245
33. ,, 488
34. ,, 2476
35. ,, 1171
36. ,, 682
37. ,, 319
38. ,, 2429
39. ,, 2940
40. ,, 2038
41. ,, 1675
42. ,, 1116
43. ,, 1487
44. ,, 2253
45. ,, 2219

உவமைகளோ அமையவில்லை. மணி என்பது நீல நிறமும்[46], வெண்ணிறமும்[47] சுட்டும் உவமைப் பொருளாக அமைகின்றது. வெண்மையை வால்[48], வான்[49], தூய்[50], தவளம்[51] ஆகிய பெயர்களாலும் பால்[52], வெள்ளி[53], நிலா[54], முத்து[55], போன்ற வற்றின் நிறங்களாலும் சுட்டுகின்றார்.

சிவப்பு, கறுப்பு, பச்சை, வெள்ளை ஆகிய நான்கும் நிறப் பொருளோடு, பிற பொருள்களையும் சுட்டி அமைகின்றன.

சிவப்பு நிறம் சிறந்த, தலைமை, நடுவு நிலை, புதுமை, நேர், என்னும் பொருள்களை உணர்த்துகின்றது[56]. பசுமை நிறம் வளமை, சிறப்பு, புதிய, மென்மை, உருகிய, இளமை தண்மை ஆகிய பொருள்களைத் தருகின்றது[57]. கருமை இழிவு, உறுதி, வலி கொடிய, வருத்தம், சினம் ஆகிய பொருள்களை யும்[58], வெண்மை தூய, சிறந்த, அறியாமை, அறிவின்மை, குற்றம் ஆகியவற்றையும்[59] சுட்டி நிற்கின்றன.

தனிப்பட்ட நிறங்களோடு பல வண்ணங்கள் பற்றிய குறிப் பையும் சீவகசிந்தாமணியில் காணலாம். பல வண்ணங்களைக் குழைத்துத் துகிலிகையால் ஓவியர் தீட்டியதாகக் கூறுவதும்[60], பல வண்ணங்களை உடைய 'கண்டத்திரை' பற்றிக் குறிப்பிடு வதும்[61] இதற்குச் சான்றாகும்.

வானவில்லின் பல நிறங்கள் பற்றிய குறிப்பையும் சீவக சிந்தாமணியில் காணலாம். இதில் குழை குண்டலம் ஆகிய வற்றின் ஒளிவீசும் தன்மைக்குத் திருவில்லை உவமிப்பார்[62]

---

46. சீவக 1784
47. ,, 2944
48. ,, 434
49. ,, 764
50. ,, 3048
51. ,, 1331
52. ,, 291
53. ,, 1771
54. ,, 454
55. ,, 895
56. சீவக 1212; 504; 32; 1776; 515
57. ,, 1562; 668; 3142
58. ,, 97; 349; 1112; 1226.
59. ,, 200, 1617, 354
60. ,, 1003
61. ,, 873
62. ,, 339; 674

குழையும், குண்டலமும் பொன்னாலும், பொன்னோடு மணிக விழைத்தும் ஆக்கப்படுவன. அவற்றின் சுழற்சியில் பல நிறங்கள் ஒளிர்வதைத் திருவில்லொளிர்வதாய்க் காட்டுவர் ஆசிரியர்.

பலநிறப் பூக்களாலாய மாலையைத் திருவில்லுக்கிணையாக ஒப்பிட்டுக் காட்டுவதும்[63] திருவில்லின் பல நிறங்கள் பற்றிய அறிவை அவர்கள் பெற்றிருந்தமையைக் காட்டுகிறது.

மேலும், சிந்துரப்பொடி, செம்பொற் சுண்ணம், சந்தனம், பனிநீரொடு கலந்து சிதறிய கலவை இந்திரவில்லாகத் தோற்ற மளித்தது எனவும்[64], விமலை பந்தாடும்போது அவள் மார்பில் வீழ்ந்த சுந்தரப்பொடி, செம்பொற் சுண்ணம், சாந்தம், குங்கு மம் இவை சேர்ந்த கலவையையும்[65], மற்றொரு பாடலில் காட்டுத் தீயின் பலநிற ஒளியினையும் திருவில்லாய்க் காட்டுவ தால்[66] வானவில்லின் காட்சி அவர்கள் மனதில் பதிந்த தன்மை புலனாகிறது.

நிறத்தால் பெயர்பெற்றவைகளுள் பசும்பொன், செம் பொன், வெண்பொன், கரும்பொன் என்ற நான்கும் உலோகத் தைக் குறிக்கும் பெயர்களாக அமைகின்றன. இவற்றுள் பசும் பொன் பொன்னையும், வெண்பொன் வெள்ளியையும், கரும் பொன் இரும்பையும் குறிக்கும். செம்பொன் என்பது பொன் னுக்குரிய ஆடகம், கிளிச்சிறை, சாம்பூநதம், சாதரூபம் இவற்றில் ஒன்றையே குறிக்கும் என்பர். ஆயின் செம்பொன் என்பது செம்பைக் குறித்ததாகக் கொள்ளலே ஏற்புடைத்தாகும் என்பர் அருணாசலம்.

'பொன் என்ற சொல்லால் நம்மவர் மூன்று உலோகங்களைக் குறிப்பிட்டனர். பசும்பொன்—இதுவே பொன் அல்லது தங்க மாகும். செம்பொன் செம்பு; கரும்பொன்—இரும்பு. வெள்ளிக் குத் தனியே சிறந்த மதிப்பிருந்தபடியால், பொன் என்ற பெயரை அதனோடு பொருத்தி வழங்கும் வழக்கம் இருந்த தில்லை; எனினும் பின்னால் அதை வெண்பொன் என்று கூறும் வழக்கம் வந்திருக்கிறது...' என்றும்[67],

---

63. சீவக. 2425. 65. சீவக. 1956.
64. ,, 86. 66. ,, 1753.
67. மு. அருணாசலம், உலோகங்களும் நாமும், சென்னை, சக்திகாரியாலயம், 1947, பக். 13.

'எல்லா வேலைகளுக்கும் அதிகமும் பயன்பட்ட காரணத்தால் செம்புக்கு அதன் செந்நிறத்தை நோக்கிச் செம்பொன் என்ற கௌரவப் பெயரும் எழுந்தது...'[68] என்றும் இந்நிறப் பெயர்களைப் பற்றி இவர் கூறும் கருத்து ஏற்புடைத்தாக அமையக் காணலாம்.

மேற்கூறிய நிறங்களோடு சிரற்றலை நிறமுள்ள மணிகள்[69], புகை நிறத்துகில்[70], கோட்புலிச் சுழல் கண்ணன்ன கருனை[71], தேறலினிறத்த குதிரை[72], நொச்சி மலர் நிறத்த குதிரை[73], என்று பல நிறங்களை நுட்பமாய்க் கூறுவதைக் காணலாம்.

இக்காப்பியத்தில் அக்கால மக்களின் நிறங்கள் பற்றிய தெளிவான முடிவைப் பெற இயலவில்லை. எனினும் சில பாடல்களில், சீவகன், அவன் தேவிமார், மற்றும் பிறர் நிறத்தைக் குறிப்பிடுகையில் அமைத்துச் செல்லும் நிற உவமைகள் அவர்கள் நிறத்தை யறிய உதவுகின்றன.

பெண்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவர்கள் ஓடிவரும் போது முதுகில் கூந்தல் புரள்வதைப் பொன்னிறத்தில் நீலமணியாய்த் தோற்றியதாக ஒரு பாடலில், கூறுகிறார்[74]. மற்றொரு பாடலில், 'காந்தள் அஞ்சச் சிவந்த மெல்விரல்' என்கிறார்[75], தேவிமார் நோற்பதைக் குறிப்பிடும்பொழுது பொன்னின் மேல் காழகந் தோல் போர்த்தாற் போன்று தங்கள் மேனியின் மேல் மாசுபடிய நோற்றனர் என்கிறார்[76]. மேலும், சில இடங்களில் பெண்களின் உடல் நிறத்துக்குப் பொன்னிறத்தை உவமையாக்குவதைக் காணலாம். சீவகன் மேனியைக் கதிரவன் ஒளி நிறமாகவும்[77]. நந்தட்டன் மேனியைப் பொன்னிறமாகவும்[78], காட்டுகிறார். ஆயின் பெண்களின் உடலில் அழகுண்டாக வரும் சுணங்கும், அழகழிய வரும் பசலையும் பொன் போன்றனவாகவே கூறப்படுகின்றன[79]. வேட்டுவன் நிறத்தைக் காழகம்

---

| | | | |
|---|---|---|---|
| 68. | மேற்படி, பக். 8. | 74. | சீவக. 2530 |
| 69. | சீவக. 2202. | 75. | ,, 351 |
| 70. | ,, 2694. | 76. | ,, 3120 |
| 71. | ,, 436. | 77. | ,, 1724 |
| 72. | ,, 2160 | 78. | ,, 1726 |
| 73. | ,, 2163 | 79. | ,, 1626; 2589. |

ஊட்டப்பட்ட கருநிறமாகக் கூறுகிறார்[80], இதனால் மக்களில் கருமை, வெண்மை இரண்டு நிறங்களும் காணப்பட்டிருக்கலாம்.

உறுப்பு வருணனையில் கண்ணுக்கும், கூந்தலுக்கும் ஏற்ற நிறமாகக் கருமையையும், வாய்க்குச் செந்நிறத்தையும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். 'மாணிறக் கருங்குழல்[81] என்னும் போது கருமை நிறத்தை மாண்புடையதாகக் கூறினும், அது கூந்தலைப் பற்றியதாக அமைவதால் கூந்தலைப் பொறுத்த அளவில் கருமை சிறந்த நிறமாக அமைவதைக் கூறுகிறார் எனலாம்.

உடலில் பலவிதமான நிலைகளில் நிற மாறுபாடு உண்டாவதையும், காப்பிய ஆசிரியர் குறித்துச் செல்வதைக் காணலாம். சீவகனைப் பிரிந்த தலைவியர் உடல் பொன் தெளித்தாற் போன்று அமைவதாயும்[82], முகத்தின் நிறைமதி போன்ற ஒளி வருத்தத்தால் கெட்டுக் கரிய ஒளி ஆயிற்றெனவும்[83], மாமை விளர்த்துக் காணப்பட்டதாகவும்[84] கூறுகிறார். மேலும், கருவுற்ற பெண்ணின் செவ்வாய் விளர்த்துக் காணப்படுவதையும்[85], இளமையின் கருங்கூந்தல் முதிர்வில் வெளுத்துப் போவதையும்[86] சுட்டுகிறார். இதனால் மிகுந்த உணர்வு வெளிப்பாட்டு நிலையிலும், உடல் தளர்ந்த நிலையிலும் உடல் நிறம் மாறுபடுவதைக் காணலாம்.

சினம், வருத்தம், இன்பம் போன்ற உணர்த்தி நிலைகளில் கண்கள் சிவப்பதையும் ஆசிரியர் காட்டுகிறார். சினத்தலால் உடலில் இருவித நிற மாறுபாடுகள் காணலாம். 1. பிறரை அழிக்க வேண்டும் என்ற சினத்தால் கண்கள் சிவப்பது. 2. தம்மை இழிவுபடுத்தியமைக்காகக் கொண்ட சினத்தால் உடல் கரிவது.

அக்கால மக்களிடையே நிறமூட்டும் வழக்கம் இருந்ததையும் ஆசிரியர் உணர்த்துகிறார். துகிலுக்கு அரக்கு ஊட்டுவதையும்,

---

80. சீவக. 1230
81. ,, 1010
82. ,, 371
83. ,, 1226
84. சீவக. 231
85. ,, 231
86. ,, 2619

காவிக் கல்லில் தோய்த்துக் காவி நிறமூட்டுவதையும் இக் காப்பியத்தில் காணலாம்.[87] கால் விரல்களுக்குச் செம்பஞ்சிக் குழம்பு ஊட்டப்படுவதையும், காழகம் ஊட்டப்படும் வழக்கமும் இருந்ததைக் காணலாம்[88].

நிறம் பற்றிய உத்திகளில் இருவகை காணலாம். 1. இலக்கிய அமைப்பில் நிறத்தைக் கூறுவதற்குக் கையாளும் உத்திகள், 2 இலக்கியப் பயன்பாட்டிற்கு நிறத்தையே உத்தியாகக் கையாளும் முறைகள்.

நிறத்தைக் கூறுவதற்குப் பலவகை உவமை அமைப்புகளை ஆசிரியர் மிகுதியாகக் கையாளுகின்றார். உவமவுருபோடும், உருபின்றியும் இவற்றைக் கையாளுகின்றார். உவமைகளை நிறப்பொருளுக்கு அடையாக அமைத்துச் செல்கிறார். ஒரு நிறங்குறிக்கப் பல உவமைகளைத் தொடர்ந்து கூறுகிறார்.

நிற உவமைகளை அமைக்குமிடத்து பெரும்பாலும் அவை பொருளின் நிறத்தை மட்டுமன்றி, அதன் வடிவம், இயல்பு போன்ற பிற ஒப்புமை உடையனவாக அமைவனவற்றையே கூறுகிறார்.

'இன்ன நிறம் போன்றது இது' என்ற அமைப்பில் மட்டு மல்லாது, ஒன்றன் நிறச் சிறப்பையோ, மிகுதியையோ காட்ட, உவமை கூறுமிடத்து பேசாதனவற்றைப் பேசுவனவாகவும், எழுதாதவற்றை எழுதுவதாகவும், அமைத்து உணர்த்தும் உத்தி முறையைக் காணலாம். இதற்குச் சான்றாகக் கருங்கண் தன்னோடு போருக்கு வருமாறு நீலக்குவளை மலருக்கு ஓலை விடுப்பதாக வருவதைக் கூறலாம்.[90]

தான் கூறவந்த பொருளை நேரடியாகக் கூறாது, நிற அடையுடன் கூடிய பெயரால் அதனைக் குறிக்கும் புதிர்போன்ற அமைப்பை இவர் கையாளுவதைக் காணலாம்.

சான்று: கருஞ்சிறைப் பறவை (மயில்.)[91]
நீணிறப் பறவை (மயில்.)[92]

---

87. சீவக. 358, 1881.
88. ,, 1230
89. ,, ,,
90. சீவக. 1613
91. ,, 1261
92. ,, ,,

பானிறைக் குருகு (அன்னம்)[93]
கரும்பிளை (காக்கை)[94]

நிறச்சொற்களை அடிப்படையாகக் கொண்ட மரபுத் தொடர்களை அமைப்பதையும் இவரிடத்துக் காணலாம்.

சான்று : 'அறங் கரிது சேய்த்தென்ப யாதுமறி யாரேல்...[95]

பொருளின் நிற அமைப்பைத் தெளிவாகச் சுட்டிக் காட்டு வதை, பலாக்கனியைப் பைம்புறப் பலவு எனவும், செவ் வாழையைச் செம்புறக் கனி எனவும், கிளியைச் செந்தார்ப் பசுங் கிளி எனவும் கூறுமிடங்களில் உணரலாம்.[96]

இவ்வாறு நிறச் சொற்களைக் கூறுவதற்குப் பலவித உத்தி களை இலக்கியத்தில் அமைத்துத் தருகிறார். இவற்றோடு இலக்கியப் பயன்பாட்டுக்கு நிறச் சொற்களைக் கருவியாகக் கொள்கிறார்.

படிப்போர்க்குச் சுவை பயக்குமாறு இலக்கியத்தை அமைத்தற்கு நிறத்தைப் பயன்படுத்துவதைக் காணலாம். 1. நிறத்தை அடிப்படையாகக் கொண்ட வருணனைக் காட்சி களை அமைத்தும்,[97] 2. முரண்பட்ட நிறங்களை அடுத் தடுத்துக் கூறியும்,[98] 3. ஒரே நிறத்தை தொடர்ந்து கூறியும்[99] 4. ஒரு பொருளின் பல்வேறுபட்ட நிறங்களைத் தொகுத்துச் சுட்டியும்[100] கூறுவதை இவ்வகையில் காணலாம்.

நிறங்களை குறியீட்டு மொழிகளாகக் கொண்டு அந்நிறங்க ளுள்ள பொருளையோ, அந்நிறச் சொல் தரும் வேறு பொருளையோ ஆசிரியர் உணர்த்துவார். இதில் இரு நிலைகளைக் காணலாம். 1 நிறப்பொருள் நின்று அதன் வழி வேறொரு பொருளைக் குறிப்பாலுணர்த்தல். சான்றாகக்

---

93. சீவக. 395
94. ,, 1252.
95. ,, 2622
96. ,, 869
97. சீவக. 932
98. ,, 1036
99. ,, 2371
100. ,, 1732

'கண்கள் செந்தீ விழித்து...'[101] என்பதைக் காணலாம். இதில் உள்ள செம்மை நிறத்தை உணர்த்தி அதன்வழி மிக்க சினத்தை உணர்த்துகின்றது. 2) நிறச்சொல் மட்டும் நின்று குறிப்புப் பொருளுணர்த்தல். சான்றாகச் செந்நெல் என்பதைக் கூறலாம்[102] இதிலுள்ள செம்மை நிறச்சொல் நிறத்தைக் குறிக்காது, சிறந்த என்ற பொருளைத் தருவதைக் காணலாம்.

ஒரு பொருளை உவமிக்குமிடத்து, அந்நிற உவமையை நிறம் மட்டுமின்றி குறிப்புப் பொருளுணர்த்துவதாகவும் அமைப்பதைக் காணலாம். 'அழனிறத் தேறல்'[103] என்று கூறுமிடத்து, அந்நிறங் குறிக்கும் பிற பொருள்களை உவமிக்காது, அழலைச் சுட்டியதன் மூலம், அழலைப் போன்றே இதுவும் மனிதனை எரித்துவிடும் தன்மையது என்ற குறிப்பினையும் உணர்த்துகின்றது.

நிறச் சொல்லடியில் தோன்றிய சொற்களைக் கொண்டு இருவேறு பொருளுணர்த்தும் சிலேடை அமைப்பினைக் கையாள்வதையும் காணலாம். சான்றாகக் கரி என்ற சொல் கருமை நிறத்தைக் குறிப்பதாகவும், சாட்சி என்ற பொருளிலும் அமைவதைக் கூறலாம்[104].

நிறச்சொற்களில் மை விகுதி சேர்த்த சொற்களைச் சில விடங்களில் மட்டுமே அமைத்தலைக் காணலாம். 'செம்மை மாதவர்'[105] என்பதில் மை விகுதி மூலம் தவத்தோரின் செவ்விய நிலையை உணர்த்துகிறார். 'வெள்ளைமை கலந்த நோக்கின்[106] என்பதில் அறிவின்மையினின்று அறியாமையை வேறுபடுத்திக் காட்டுகிறார். தவப்பயனைக் கூறுமிடத்து[107] 'நிறத்தைப் பெற்ற சீலத்தின் நிலை' என்பதைக் 'குருமை எய்திய குணநிலை' என்று மை விகுதியோடு அமைக்கிறார். 'மை' விகுதி சேர்ந்த சொற்கள் மற்றவற்றினின்று வேறுபட்ட சிறப்புப் பொருளை உணர்த்துவதைக் காணலாம்.

வெள்ளையன்னம் என்பதைக் 'காரன்ன முண்மையின் இனஞ் சுட்டின பண்பாக அமையும்' என்பர் உரையாசிரியர்.[108] இவ்

---

101. சீவக. 783
102. ,, 2699
103. ,, ,,
104. ,, 626
105. சீவக. 347
106. ,, 2529
107. ,, 2748
108. ,, 930—உரை

வாறு நிறத்தைப் பொருளின் இனஞ்சுட்டவும் பயன்படுத்தப்படு வதைக் காணலாம்.

இவற்றோடு ஒரே பொருளை வெவ்வேறு நிறமுள்ள சொற்களால் வழங்கும் உத்தியையும் ஆசிரியர் அமைக்கிறார். வெற்றிலையைக் குறிக்க வெள்ளிலை பாசிலை, பைந்திரை எனும் பெயர்கள் அமைக்கின்றன.[109] இவற்றில் வெள்ளிலை கொம்பில் வெளுந்த வெற்றிலையையும் பைந்திரை பச்சை நிறமுள்ள வெற்றிலையையும், பாசிலை என்பது இடக்கரடக்கர்ப் பொருளையும் குறித்து அமைவதைக் காணலாம் இவ்வாறே பைந்தலை அப்பொழுதுதான் துணிக்கப்பட்ட தலையையும், வெண்டலை மண்டையோட்டையும், கருத்தலை இளம் பருவத்தினையும் குறிக்கும்.[110]

நிறச் சொற்களிலிருந்து பெறப்பட்ட வினைச்சொற்கள் பல வற்றை ஆசிரியர் இக்காப்பியத்தில் கூறுகிறார். பொதுவான நிறம் பற்றிய சொற்களில் கேழ் என்பதினின்று தோன்றிய 'கெழு'[111] எனும் வினைச்சொல் காணப்படுகிறது. தனிப்பட்ட நிறச்சொற்களில் சிவப்பினின்று சிவந்து சிவந்த, சேந்து, சேப்ப, என்பனவும், கருமையினின்று கரிய, கரிந்த, வெண்மையினின்று விளர்த்த என்பனவும் அமைகின்றன.[112]

ஒரு பொருளின் நிற அமைவைச் சுட்டும் வினைச் சொற்களாகத் தோய், கெழு, தவழ், கிளர், போன்ற பல சொற்கள் காணப்படுகின்றன.

இக்காப்பியத்தில் நீலமும், கருமையும் விரவி வருமாறு ஆசிரியர் அமைத்துச் செல்கிறார். கறுப்பு நிறம் பொதுவாக இழிவு, தாழ்வு என்னும் பொருள்களையே சுட்டி நிற்கிறது. எனவே, கறுப்பு என்பது மங்கலமான சொல்லன்று என்று அதற்கியைபான நீல நிறத்தைக் கூறத் தொடங்கினர். இந்நிலையை முதலாவதாகக் கரியவனாகிய கடவுளை நீல நிறத்தோனாகச் சுட்டியதின் மூலம் வெளிப்படுத்தியிருக்கக் கூடும். இதனைப் பின்னர் மகளிர் கூந்தலுக்கும், கண்ணுக்கும் ஏற்றிக் கூறத் தொடங்கியிருக்கலாம். இதனால் நீலக்குவளை மலர் பெண்களின் கண்களுக்கு உவமையாயிற்று. அதன் வடிவத்துடன்

---

109. சீவக 132, 1987, 197.
110. ,, 2227, 303, 2619
111. சீவக 828
112. ,, 192; 459 1372; 622

நீல நிறத்தையும் கண்களுக்குக் கூறினர். கண்களுக்குக் குவளை மலரை உவமிக்கும் வழக்கு, நெருங்கிய, மாற்ற முடியாத மரபான நிலையில், குவளையின் நீலநிறத்தைக் கண்ணிற்குக் கூறியது போன்று, கண்ணின் கருநிறத்தைக் குவளை மலருக்கு ஏற்றிக் கூறத் தொடங்கியிருக்கக் கூடும். இதையொட்டிப் பிறபொருள்களிலும் இவ்வாறு கருமையும், நீலமும் மாறிக் கூறுவதாய நிலையும் அமைந்தது எனலாம். சங்க காலம் முதல் தொடர்ந்து வரும் இம்மரபை சீவக சிந்தாமணி ஆசிரியரும் பின்பற்றக் காணலாம்.

கடலின் பொருள் விளையும் பகுதியைக் கருங்கடல் என்று சுட்டுகிறார்.[114] பொருள் விளையும் பகுதியாக ஆழ்கடற்பகுதி அமைகிறது. ஆழ் கடற்பகுதி மேற்பரப்பு கருமை நிறமாகத் தோற்றுவது இயற்கை. எனவே ஆழ்கடற் பகுதியை உணர்த்தக் கருங்கடல் என்று நிறங்கூறும் நிலையைக் காணலாம்.

வெண்மையை மங்கல நிறமாக, சமண சமயத்திற்குரிய நிற மாக ஆசிரியர் காட்டுகிறார். தியானத்துக்குரிய துகிலாக வெண்ணிறத் துகில் கூறப்படுகிறது. அதனை 'மங்கலத் துகில்' என்று கூறுவர் ஆசிரியர்.[115] தியானத்தின் பொழுது அணியப் படும் சாந்தம் 'மங்கல வெள்ளை'[116] என்று கூறப்படுகிறது. அரசனுக்குரிய இருக்கையில் பால்நிறப் பட்டு விரிக்கப்பட்டிருந் ததும், வெற்றிபெற்ற நாளிலும், பிறந்த நாளிலும் அரசன் வெள்ளணி அணிவதும், மணநாளில் மண்ணுநீராடலுக்குக் குட மேற்றிய யானைக்கும் வெள்ளணி அணிவித்தலும் வெண்மையை மங்கல நிறமாகக் கொண்டிருந்ததைக் காட்டும்.[117] பாற்றுளி என்றும், பாலனைய சிந்தை என்றும், வாலருவி என்றும், சுக்கிலத் தியானத்தை வெண்மை நிறத்தால் சுட்டுவதன் மூலம் இந்நிறத்தைச் சமய நிலையில் போற்றும் நிறமாகக் காட்டு கிறார்.[118].

இவ்வாறு கூறியவற்றால் வெள்ளை மங்கல நிறமாகவும், செம்மை உணர்ச்சி வெளிப்பாட்டிற்குரிய நிறமாகவும், பசுமை வளத்தைக் குறிப்பதாகவும் கருமை துன்பத்தைக் குறிப்பதாக வும் ஆசிரியர் அமைத்துச் செல்வதைக் காணலாம். நிறம் பற்றிய உத்திகளில் உவமையும், குறியீட்டு மொழிகளும் மிகுந்து காணப் படுகின்றன.

---

113. சீவக. 2598, 529
114. ,, 1027
115. ,, 1146
116. சீவக. 1477
117. ,, 541.
118. ,, 2934, 3092, 291

# 10. சீவகசிந்தாமணி-II

பூ. சுப்பிரமணியம்

'வண்டார்ப் புரவி நிறத்தும் மறமன்னர் மேலும் கணை மாரி பொழிந்தனன் பதுமுகன்' (808) என்று கூறுமிடத்து நிறம் என்ற சொல்லை உயிர் நிலை என்னும் பொருளிலும் கையாளு கிறார் திருத்தக்கதேவர். ஆனால் 'கிடங்குசூழ்மதில் கேழ் கிளர் பூங்கொடி' (529) - மதிலின் கொடிகள் பல நிறத்தனவாய் விளங்கின என்னும் பொருள்படும் இவ்வடியில் கேழ் என்ற சொல்லும், 'குருமணி முடியில் தேய்த்த தரன் தமர்கொள்க என்றான்' (557) என்ற விடத்து, பல நிறமுடைய மணி என்பதைக் குருமணி என்று கூறுமிடத்து குரு என்ற சொல்லும் நிறம் என்னும் பொருளில் திருத்தக்கதேவரால் கையாளப்படுகின்றன.

மேலும், இவர்தம் காப்பியத்தில் வெண்மை, செம்மை ஆகிய நிறங்கள் மிகப் பலவாகவும் பசுமை, கருமை, நீலம் போன்ற நிறங்கள் ஓரளவிலும் எடுத்தாளப்படுவதைக் காண லாம். வெண்மை செம்மை நிறங்களும் செம்மை பசுமை நிறங் களும் பலவிடத்து இணைந்து கூறப்பெறும் திறனும் இன்புறத் தக்க நிலையைப் பெறுகின்றன.

நூலின் உரையிலும் நச்சினார்க்கினியரால் பலவிடத்து நிற முணர்த்தும் சொற்கள் விளக்கம் பெறுகின்றன.

வெண்மை

'சங்குடைந் தனைய வெண்தா மரைமலர்த் தடங்கள் போலும் நம்குடி' (547) என்னும் அடியுள் வெண்மலரும் சங்கும் போலும் நம்குடி என்றது ஸ்ரீதத்தன் குடியை. இங்கே வெண்மை நிறம் குடித் தூய்மைக்கு உவமையாகக் காட்டப்படுகிறது.

அவையடக்கத்துள் 'நகை வெண்மதி' (4) என்ற உவமையால் சான்றோர் அறிவுக்கலை எடுத்துக் காட்டப்படுகிறது.

'வெண்கோல் நிறைத்தனபோல் கொழுந்தாரைகள் சொரிந் தன' (33) என வெண்கோல் மழைத்தாரைக்கு உவமையாகிறது.

'வெண்மதியின் நுனி கீறத் தேன் அடைகிழித்து மலையிலிருந்து விழும் வெள்ளருவிகளாகத்' திகழ்கின்றன (34).

'முத்துடை வெண்மருப்பை அறுத்துத் தொழில் செய்வார் தெருக்கள்' நிறைந்துள்ளன. (83)

'நல்லார் அணிகலம் பால் நிலா சொரிந்து பகலைச் செய்கின்றன' (111).

'வெண்மதியை இனமென்று கருதிய அன்னங்கள் மாடங்களின் மேல் அம்மதியோடே தங்குகின்றன' (125).

'வெண்பொன்னால் (வெள்ளி) வேயப்பட்டது அண்ணலின் கோயில் (155)

'ஏக ஆணை வெண்குடை, (141) நித்திலம்சூழ் குளிர் வெண்குடை (159) உடையவன் சச்சந்தன்.

வேழவெண்திரள் கையினை வெருட்டிய குறங்கினையுடைய விசையுடன் இருந்த சச்சந்தன் காவலில் வழுவி (174) விண்ணகம் இருள வெண்மதி ரோகினி ஒளித்தது போலும் காணப்பட்டான் (198). இதனால் திங்கள் வெண்குடை யினார்க்குச் செல்வம் குறைந்தது.(199) விசயை பால் எனக் கண்ட கனா முத்தணி மாலையைச் சுட்டிக் குலத்தூய்மை கூறும் உவமைாகிறது. (222, 223). கட்டியங்காரன் வெண்நகை வெகுண்டு சிரித்துக் கூறுகிறான் (258)

வெண்தலை பயின்ற காட்டில் (303) தங்கிய விசயை, வெண்கதிர் மொழிவதே போல் (305) பால்சுரக்க, வால் அடகு (தூய இலை) தன் கை அருள நுகர்கிறாள்.

மறுவில் வெண்குடை மன்னவன் (357), பால் நிறக் குருன் ஆய்ந்து பண்ணவர் படிவம் கொண்டான் உலோகபாலன் (395), நிரைமீட்டுத் திரும்பும் சீவகன் நகைவெண்மதி செல்வது ஒத்துக் காணப்படுகின்றான் (454). மங்கலங்கள் எட்டுள் ஒன்று வெண்முரசம் (472). கடலில் தப்பிய ஸ்ரீதத்தன் வெண்மணல் திட்டைச் சேர்ந்தான் (514). காந்தருவ தத்தையின் பிறப்பு வெண்கோட்டு இளம்பிறை முளைத்ததேபோல் காணப்பட்டது (533). அவளைப் பால்பரந்தன்ன பட்டில் கிடத்தி வெண்மதிக் கதிர்ப் பெய்கற்றை போலும் கவரியால் வீசினர் (541). அவளுக்கு

நீராட்டப்பெற்ற நீர் வெண்ணிறப் பொடி மாற்றிய மணநீர் எனவும் ஒப்பனை வெள்ளணி எனவும் சேப்படுகின்றன (614, 616).

வேழ வெண்கோட்டு மென்கோல் தின்பதுபோலும் செயல்களையுடைய பேய்களின் தன்மைகூறப்பெறுவதும் (803), காலற்றவயிர மாலை வெண்குடை கவிழ்ந்த (797), வால்வளை திருத்தப் பெற்றேன் (681) என்பவையுமான பல தொடர்களில் வெண்மை விரிவாகப் பேசப்படுகின்றது.

## செம்மை

'செந்நீர்க் கடியின் விழவாட்டினுள்' (12) என்பதில் புது நீரினைச் செந்நீர் என்றும், செய்ய சந்தனம் காடு இழக்க நாடு நிறைந்தது (37) என்றும் 'உழுவார் செந்நெல் வான்முளை வித்துவார், (45), காடும் செந்நெலின் கழனி ஆக்கமும் (54), ஆய் செந்நெல் அகன்ற காடு அரி குற்றார்களே (55, சேடுறக் (பெருமை) கூப்பிய செந்நெற்குப்பைகள் (59) கரும்பின் சாறு அடுவுழிப் பிறந்த தீம்புகை பரந்து விண் புகுதலின் பருதி சேர்ந்ததே (60), பனைநிலை ஆய்செந்நெல் பகரும் பண்டியும், (61) என்றும் கூறப்பெறும் செந்நிறச் சொற்கள் நாட்டின் அழகையும் செல்வச் சிறப்பையும் உணர்த்துவனவாகும்.

மணிப்புறாக்கள் குன்றி போலும் செங்கண்களை உடையன (70); மாடம் அடு 'செந்தீ' பலபொறிகளில் ஒன்று (102), செம்பொனின் நீடிய உருவ ஒன்கொடிகள் (12), நீள்நிதி சேர்ந்த செம்பொன் மாடம் (153), செம்பொன் நீள்சுவர் (155) என்றும் தொடர்களில் நகரச்சிறப்பு கூற செந்நிறம் பேசப்படுகிறது,

துப்புறழ் தொண்டைச் செவ்வாய் (107, 550) பவழச்செவ்வாய் (110), சிறார்களைந்திட செம்பொற் கண்ணிகுப்பைகள் (128), அரக்கு ஆர் செம்பஞ்சு அனைய தோள் தொகுவிரல் செங்காந்தள் (170), அரக்கியல் செங்கழுநீர் அக இதழ்போல் உகிர் சூடி (178), பவழவாய் (191), பவழப்பாவை கடைசிவந்து அகன்ற கண்ணாள் (192), பவளத் துவர் வாயவள் விசயை (219), காவி கடந்த கண்ணீரொடு காரிகை (227), செங்கயற்கண்ணி விசயை (267), செம்மலர்த் திருவின் பாவாய் (315), காவியம் கண்ணினாய் (316) என்பனபோன்ற தொடர்களின் வழி செந்நிறம் மகளிர் சிறப்பும் பிறவும் இயம்புவதாக அமைகிறது.

ஆயிரம் செங்கணான் (212) என்று இந்திரனும் செய்யக் கோல் வெய்ய சொல்லான் (264) என்று வாயிலோனும் குறிப்பிடப் பெறுகின்றனர். சச்சந்தன் சிவந்து அழன்று காணப்படுகிறான் (274). ஆதனால் செங்களம் சிறந்து விளங்குகிறது (279). மூன்றரைகோடி செம்பொன் அணிகலன்கள் நல்கும் எனக்கூறி மகன் பிறந்த விடத்து விசயை வருந்துகிறாள்(307). கந்துக்கடன் இல்லத்தில் எரிமுக நித்திலம் சிவந்தன போல மங்கையர் பொன்னைச் சிந்தினர் (329). இரவலர்க்கு செம்பொன் குன்றென வழங்கப்படுகிறது (331) ஆயிரச் செங்கதிர் தோன்ற இருள் அகன்றது (343), விசயை செம்பொற் கோடிகள் நீத்து (352), கல்தோய் நுண்கலிங்கம் உடுத்தாள்(353), செம்பொன் நீள்நிதி (402), சீவகன் கூற்றெனச் சிவந்து தோன்றும் (392), செம்முக மிலேச்சனைச் செங்கண்தீ விழா நோக்கும் (431), செவ்வாய் (457), சிவந்த மணி விரல் (459), செல்வன் செம்மலர் அகலம் (466), அட்டசக்கனைய செவ்வாய் (468) செம்பொற்கட்டில் (471), செம்பொற் சீரடி 479), ஆடகச் செம்பொற்பாவை (479), சேதா (481), ஆடகச் செம்பொன் கிண்ணம் (510) போன்ற பல தொடர்களிலும் செந்நிறம் விளக்கம் பெறுகிறது.

## பசுமை

பாத்தரும் பசும்பொனின் மாடத்து உச்சிமேல் (87) என்னும் தொடரில் பசும்பொன் மாற்று அற்ற பொன்எனச் சுட்டப் பெறுகிறது. பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் மயங்கி (90) பரந்த பசும்பொற் கொடி (104), பட்டமும் பசும்பொற் பூணும் (112), பசும்பொனாலும் எழிற்பொலி மணியாலும்(115), மெய்யணி பசும்பொற் சுண்ணம் (117), சூழ்குலைப் பசுங்கமுகு சூலுபாளை (147), மொய்கதிர் பசும்பொனால் (150), பசும்பொன் செய்கின் கிணி (177), பைந்தொடி பாசிழைப் பரவை (186), பசுந்திரை கதிர்செய் மாமணி (197), பண்ணுக பசும்பொன் தேரும் (265), அடர்பொற் பைம்பூண் அரசு அழிய (313), பைம்பொன் கலத்திடை (354), பைந்தார்ச் சீவகக்குமரன் (375), கிழிவுதான் விளைக்கும் பைங்கூழ் (379), பாத்தரும் பசும்பொற்றாலம் பரப்பிய பைம்பொற்பூமி (398), பசம்புயல் தண்துளிப் பக்கம் நனைப்ப (512), பசும்பொன் மாலை (533, 630), பசும்கதிர்க் கடவுள் யோகம் (621), பைந்தார் மார்பன் பசும்பொன் யாழ்நோக்கி (717), பணி வரும் பைம்பொன் பத்தர் (722), என்பது போன்ற பல தொடர்களில் வரும் 'பசுமை' என்னும் பொருள் குறிக்கும் சொற்கள் நிறம், இளமை, தூய்மை போன்ற பல்வகைப் பொருள்களில் பயின்று வருவனவாகும்.

மேலும், 'விளங்குநுண் நுசுப்பின் நல்லார் பூம்புறப் பசலை மூழ்கிக் கனிந்து நின்றார்'' (371), 'தோள்முதல் பசலை தீரத் தோன்றலைப் பருகுவார்போல்'' பொறையார் வனநகிலும் பூம்பசலை மூழ்க (733), 'திருந்தேர் பிறைநுதலும் செம்பசலை மூழ்க' (734) போன்ற அடிகளில் பசுமை நிறத்தைக் குறிக்கும் பசலை என்னும் சொல் மகளிர் திறத்தில் கூறப்படுகிறது.

## கருமை

கருங்கடல் வளந்தர (63) என்னும் கூற்றால் 'ஓர்க்கோலை சங்கம் ஒளிர்பவளம் வெண்முத்தம் நீர்ப்படும் உப்பினோடு ஐந்து' என்னும் கடல்படு பொருள்கள் விளக்கம் பெறுகின்றன.

காவியன்ன கண்ணினார் (673, 316), காரிருங் கூந்தலார் (130), குழந்ற கருங் குழல்கள் (164), நுண்கருமை கொண்டு ஒசிந்துகொடும் புருவம் (166) போன்ற தொடர்களில் காவி, கார், கருமை போன்றவை கருமை நிறத்தைப் புகல்கின்றன.

ஒள்ளகிற் புகை திரண்டதொக்கும் மாமணிப்புறா (70) என்பதில் மா - கருமை, மணி - அழகு என்னும் பொருளைத் குறித்தது. கரும்பொன் இயல்பன்றி (104) என்பது இருப்பால் இயன்ற பன்றி என நின்றது.

கடை சிவந்து கருமணி அப்பாலகத்தூப் பதித்தன்ன (167) என்பது நஞ்சும் அமிர்தமும் ஆயின என்பது உணர்த்திற்று. மைம்முக மணிந்த மதயானை (282), கரியமுகம் செந்தீ கருந் துளைய தீங்குழல் யாழ் (292), என்பதில் செம்மை கருமைகள் முரண்தொடையாய் அமைந்தன. கரிமாலை நெஞ்சினன் (294), கரிந்த நெஞ்சினன், கருங்கைக் களிறு (308) காளக உடையினன் கந்துநாமனும் (320), காழகம் ஊட்டப்பட்ட காரிருள் துணியும் (1230), இவற்றில் காளம், காழகம் என்பன கருமை உணர்த்தின. முல்லை கார் எனப் பூப்ப (413) கார், இருமடி ஆகுபெயராய்க் கார் காலத்தை உணர்த்தியது. கார்க்கடல் போன்று சேனை ஆர்ப்ப (758), கார்க்கெதிர் மேகம் போல (801) இவற்றில் கார் கருமையையும் கார் காலத்தையும் முறையே உணர்த்தின.

## நீலம்

'தூத்திரன் மணிக்குடம் நிரைத்துத் தோன்றுவ' (87) என்னுமடியில் நீலமணிக்குடம் என்னும் பொருளில் - மணிக்குடம் என்ற சொல் வழங்குகின்றது.

'நீலயானை மன்னவன்' (148) என்பதில் யானை நிறம் நீலம் எனவும், மைம்மலர்க் கோதை பாகம் (208) என்பதில் நீலமலரால் செய்த கோதை எனவும் குறிக்கப் பெறுகின்றன. நீனிறவண்ணன் அன்று (209) மாயோனைக் குறிக்கிறது. 'நீனிறப் பெளவும் மேய்ந்து சூல்முற்றி நீலமேகம் விசும்பில் நின்ற' (789), 'மைம்மலர்த் தடங்கள் நங்கை' (739), நீலோற் பலமலர் என்று கூறுவர் உ. வே. சா.

செம்மை பசுமை பிற

செம்பொன்வரை மேல் பசும்பொன் எழுத்திட்டதே போல் (2)

பைம்பொன்விளை தீவில் செம்பொன் மழைபெய்தாற்
போன்று (106)

செம்மை பசுமைகள் முரண்தொடையாக வந்தன.

செம்பொன் மான்பிணை பைம்பொன் ஒருத்தல் (146)

என ஆண்மான் பெண்மான்கள் பள்ளிமாடத்து விளங்குவன கூறப்படுகின்றன.

செவ்வாய் விளர்த்துக் கண் பசலைபூத்த காமம் (231) என்பதில் மூன்று வண்ணங்கள் பேசப்படுகின்றன.

செங்கண்குறுநரி — பைங்கண் களிற்றின் மேல் (297)

பைம்பொன் செய்த தவிசின் உச்சியிருந்து பொன் ஓலையில்
செம்பொன் ஊசியால் எழுதிச் செல்வியைச்
சேர்த்தினார். (369

போல்வன பல நிறங்களை இணைத்துக் கூறும் தொடர்களாகும்

# 11. கம்பராமாயணம்

ச. வே. சுப்பிரமணியன்

கம்பன் இயற்றிய காவியமான இராமாவதாரம்[1], பொருட் பெருக்குக் கேற்பச் செய்யுள் எண்ணிக்கையில் மிகுதியாக மட்டும் அமைந்து விடாது, 'நிற' ஆட்சியிலும் பரப்புக் கொள்கின்றது. நிறம் தொடர்பான சொற்களும், பல்வகை நிறப்பெயர்களும், பயிற்சியும் புதுமையும் காட்டுகின்றன.

## நிறச் சொற்கள் – பொது

நிறச் சொற்கள் பயன்பாட்டில், மரபிற்கேற்ப 'நிறம்' எனும் சொல் மிக்குப் பயில்கின்றது[2], வண்ணம்' அடுத்த இடம் பெறு

---

1. பயன் கொண்ட பதிப்பு: கப்பராமாயணம் இராமாவதாரம், கம்பன் கழகம், சென்னை, மு. 1976.

2. 13 58 68 140 156 387 388 396 413
418 439 541 545 546 555 648 663 704
711 799 820 831 841 962 973 979 1072
1120 1129 1134 1221 1429 1472 1583
1795 1868 1878 1943 1944 1945 1954
1969 1984 2004 2012 2016 2041 2043
2050 2052 2072 2093 2306 2328 2397
2592 2599 2693 2738 2828 2916 2936
3053 3347 3428 3432 3476 3567 3697
3739 3761 3845 3888 4029 4092 4153
4174 4188 4190 4192 4222 4233 4254
4264 4279 4300 4489 4551 4629 4713
4774 4782 4786 4815 4838 4849 4931
4953 4959 4970 4993 5024 5105 5170
5148 5150 5152 5157 5295 5301 5401
5526 5545 5587 5622 5761 5796 5827
5865 5942 5950 5965 5969 6057 6115
6139 6172 6211 6380 6395 6436 6498

கின்றது[3]. இவையொழிய உரு[4], கேழ்[5], குரு[6], எனும் மரபுச் சொற்களும், கோலம்[7], மயம்[8], மேனி[9], வடிவு[10], எனும் பிற சொற்களும் நிறப்பொதுமை சுட்டி வருவதாகத் தோன்று கின்றது.

---

6517 6521 6522 6524 6611 6624 6643
6685 6692 6750 6763 6775 6845 6847
6850 6852 6881 6906 6907 6985 7038
7046 7119 7141 7265 7355 7495 7507
7543 7686 7696 8120 8186 8222 8231
8306 8311 8332 8355 8376 8415 8421
8576 8608 8615 8677 8790 8782 8829
8859 8979 9266 9305 9313 9421 9463
9580 9594 9602 9604 9642 9780 9870
10230 10292 10297 10299 மி 144 281
469 550 730 811 1147 1167 2223

3. 208 324 325 442 465 467 475 478
552 608 625 629 634 562 711 780
880 884 866 935 935 943 1076 1088
1120 1131 1146 1256 1348 1362 1401
1445 1475 1535 1579 1645 1655 1671
1918 1958 1972 2079 2316 2360 2487
2495 2553 2766 2793 3129 3145 3432
3457 3537 3635 3732 4128 4167 4350
4370 4379 4495 4496 4507 4583 4605
4757 4796 4913 4942 5017 5065 5145
5184 5220 5341 5490 5784 5973 6008
6046 6047 6212 6336 6432 6535 6589
6769 6672 6760 6770 6777 6781 6783
6853 6859 6920 6922 6940 7133 7147
7237 7240 7351 7383 7404 7436 7447
7614 7925 7946 8052 8136 8160 8218
8226 8430 8433 8454 8519 8552 8587
8853 8861 8863 8885 8981 8953 9163
9235 9301 9357 9369 9389 9719 9720

நிறம்

இச்சொல், நிறப்பண்பு உணர்த்துவதுடன், பல்வகையாகப் பயின்று, சொற் பின்வரலாகிப் பாடலுக்கு நயமும் சேர்க்கின்றது. சீதையின் நிறம் பற்றி இராமன் அனுமனிடம் கூறும் போது இவ்வாறு உரைக்கின்றான் :

எந்நிறம் உரைக்கேன் மாவின் இளநிறம் முதிரும், மற்றைப்
பொன்நிறம் கருகும், என்றால் மணிநிறம் உவமை போதா,
மின்நிறம் நாணி எங்கும் வெளிப்படா ஒளிக்கும், வேண்டின்
தன்நிறம் தானே ஒக்கும் மலர் நிறம் சமழ்க்கும் அன்றே
(4511)

---

9823 10008 10127 10245 10251 10257,
10273 10358 மி25, 52, 52 159 202 525
1160 1187 1220 1240.

4. 299 219 621 1845 2539 2750 2790
2792 2794 2814 2664 2915 3211 3212
3216 3708 3781 4208 5974 6112 7134
7242 7766 8674 8857 9157 9996 10060
10174 மி 279 283.

5. 693 842 1126 1253 1781 2190 2727
3163 3419 4182 4515 4566 4770 4947
4961 5014 5019 5139 5279 5393 5565
6334 7926 9169 9182 9855

6. 795 2062 2136 3162 5041 5489 6274
8638

7. 1580 7426 7442 7550 9844

8. 3153 3285

9. 3312

10. 1926 2737

நிறம் எனும் சொல், நிறப் பொதுமை காட்டித் தனித்து வருவதும் உண்டு, அன்றி அடையடுத்தும் வருகின்றது. இவ்வாறு அடையடுத்து அமையும்போது மூன்று நிலைகள் அமைகின்றன. நிறப்பெயரே அடையாக அமைதல் ஒன்று, மற்றொன்று நிற முடைப் பொருள் அடையாதல்; பிறிதும் ஒன்று (நிறப்) பண்பு அடையாதல், மேற்கண்ட பாடலின் பொன்நிறம் மணிநிறம் இளநிறம் ஆகியவற்றை முறையே இவற்றிற்குச் சான்றாக் கலாம்.

இவற்றுள் முதல்வகை, எந்நிறம் எனத் தெளிவாக அறிதற்கு உதவியாகவும் ஏற்புடையதாகவும் அமைகின்றது. அல்லது மிகத் தெளிந்து உறுதியாகக் கூறவியலும் நிறத்தை இவ்வாறு கூறு கின்றனர் எனலாம்.

இரண்டாம் வகையான நிறமுடைப் பொருள் அடையாகும் போது, பொருளைப் பற்றிய தெளிவும், சூழல் சார்பும் கொண்டே நிறத்தைக் கணிக்க வேண்டியுள்ளது. எனவே, நிறப்பெயர் தரும் குறிப்பிட்ட நிறத்திலிருந்து சிறிது வேறு பட்டு, ஆழ்ந்தும் மென்மையாயும் நிறங்கள் அமையும் நிலை களைக் காட்ட இப்பொருளடைகள் அமைவதாக — அமைக்கப் படுவதாகக் கருதலாம். முதன்மை நிறம் ஒன்றைச் சார்ந்து வைத்து இவை அணுகத் தக்கதாகித் தெளிவு பெற வாய்ப் பளிக்கின்றன.

மூன்றாம் வகையான நிறத்தின் இயல்பு அல்லது பண்பினை உணர்த்தி வரும் அடைகள், நிறத்தெளிவு தருவதில் இன்றும் பிற்பட்டே அமைகின்றன. அச்சொற்கள் வரும் சூழல், முன் பின் சொற்களுடன் இணைத்துக் கருதப்படும்போது அருகித் தெளிவு அமைகின்றது. ஆயினும் இங்கும், எந்நிறம் என்று உறுதியாகக் கூறுமளவிற்குச் நிறச்சொல் நிலை இல்லாதபோது, பொருட்பண்பும், தொடர்புடைப் பொருளும் முன்னோ பின்னோ வந்து ஓரளவு கருத்து உணர்த்துவதாகக் கொள்ள லாம். போர்க்களக் காட்சியை வருணிக்கும்போது,

கொன் நிறக் குருதிக் குடை புட்களின்
தொல்நிறச் சிறையில் துளி தூவலால்
பல்நிறத்த பதாகைப் பரப்பு எலாம்
செந் நிறத்தனவாய் நிறம் தீர்ந்தவே (7046)

என்பதில் கொன் நிறம் என்பதால் அச்சம் விளைவிக்கும் நிறம் கருதப்பட்டு, செந்நிறமாகக் கொள்ளப்பட்ட வாய்ப்பு அமைகின்றது.

நல்நிறக் காரின் வரவுகண்டு உவக்கும்
நாடக மயில் என நடப்ப (5157)

செஞ்செவ் வேலவர் செறிசிலைக் குரிசிலர் இருண்ட
குஞ்சி சேயொளி கதுவுறப் புதுநிறம் கொடுக்கும்...
(4192)

துன்றிய பெரும்புகைப் படலம் சுற்றலால்
கன்றிய நிறத்தன கதிரவன் பரி... (6624)

போன்ற சூழல் ஆட்சிகளும் இங்குச் சுட்டத் தக்கன.

இவ்வாறு அடைபெறுவதன்றியும், நிறம் என்ற சொல்லைத் தொடர்ந்து நிறப் பெயரும் பொருளும் பிறவும் வந்து இன்ன நிறம் என விளங்கிக் கொள்ள உதவுவதும் உண்டு. சடாயுவைக் கூறும்போது,

மால் நிற விசும்பு எழில் மறைய, தன் மணிக்
கால் நிறச் சேயொளி கதுவ கண் அகல்
நீல நிற வரையினில் பவள நீள் கொடி
போல் நிறம் பொலிந்தென பொலிகின்றான் தனை (2693)

என வருணிக்கின்றார்.

இங்கு நிறப் பெயர்வர, தொடர்ந்து வரும் சான்றில் பொருட் பெயர்ச் சூழல், நிறத்தை அறிய வாய்ப்பளிக்கின்றது (கருமை), இராவணனின் வருகையைக் கூறுகின்ற கம்பர்,

நீல நிறக் குன்றின் நெடிது உறத் தாழ்ந்த
நீத்த வெள் அருவியின் நிமிர்ந்த
பால் நிறப் பட்டின் மாலை உத்தரியம்
பண்புற பசும்பொன் ஆரத்தின்
மால் நிற மணிகள் இடை உறப் பிறழ்ந்து
வளர் கதிர் இள வெயில் பொருவ

சூல் நிறக் கொண்மூக் கிழிந்து இடை துடிக்கும்
மின் என மார்பில் நூல் இலங்க
(5150)

எனக் காட்டுகிறார்.

## வண்ணம்

இச்சொல்லும் 'நிறம்' என்ற சொல் போன்றே பல்வகை யான நிலைகளில் கையாளப்பட்டுப் பயின்று வருகின்றது. சொற் பின்வரலாகுதல் :

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த
உலகுக்கு எல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்று ஓர் துயர் வண்ணம்
உறுவது உண்டோ
மை வண்ணத்து அரக்கி போரில் மழை வண்ணத்து
அண்ணலே உன்
கை வண்ணம் அங்குக் கண்டேன் கால் வண்ணம் இங்குக்
கண்டேன் (475)

இவ் வண்ணம் எனும் சொல், நிறப் பொருள் குறித்து வரும் போது, பெரும்பாலும் தனித்து நிற்பதில்லை. குறிப்பிட்ட இந்த நிறம் என உணரும் வாய்ப்புடன், முன்பு அடை, விளக்கம் போன்றன பெற்றோ, தொடர்ந்து அத்தகு சொல் பெற்றோ வருவது பெரும்பான்மையாகக் காணப்படுகின்றது. நிறப்பெயர் முன்னோ பின்னோ வருவதும், நிறமுடைப் பொருள் அவ்வாறு வருவதும் இங்கும் காணப்படுகின்றது. முன் பாடலில் உள்ள மைவண்ணம், மழைவண்ணம் என்பன நிறப் பொருட் தொடர்பால், கருமை கட்டுகின்றன.

சிவண வண்ண வான் கருங்கடல் கொண்டு வந்து
செயலினும் செறி தாரை
சுவண வண்ண வெஞ் சிறையுடைக் கடுவிசை
முடுகிய தொழிலானும்...(7614)
உண்ண ஆம்பல் இன் அமிழ்தம் ஊறு வாய்
வண்ண வெண் நகைத் தரள வாய் முகப்...
(4605)

என்பன நிறப் பெயர் முன்னும் பின்னும் வரற்குச் சான்றா கின்றன.

இருளுடைச் சுடலை ஆடும் என்புயத்து அண்ணல் வண்ணச்
சுருளுடைச் சடையின் கற்றைச் சுற்று எனச் சுடர்வ
கண்டான் (8687)

என்பதில், சூழல் காரணமாகச் செவ்வண்ணம் கொள்ளப்படு கின்றது.

இங்கு, நிறத்தின் பண்பும், இயல்பும் உணர்த்தும் விதமாக அடை வருவது மிக அருகிக் காணப்படுகின்றது.

பெண் இவண் உற்றது என்னும் பெருமையால் அருமையான
வண்ணமும் இலைகளாலே காட்டாலால் வாட்டம்
தீர்ந்தேன் (711)

என்பதில் இராமனின் மரகத நிறம் சீதைக்கு அருமையானது பற்றி, இத்தகு அடையிணைவு வருகின்றது.

## வருணம்

வண்ணம் என்ற சொல்லின் அடிப்படையில் ஆகியதாகக் கருதத் தக்க வருணம் எனும் சொல்லும் நிறம் குறித்து வந்த அருகிய ஆட்சியைக் கம்பனில் காண்கிறோம்.

வருணற்கு ஈந்த வருண சரத்தையே (6708)

வட்ட வான் கணில் வதிந்தன வருண சாமரைகள் (7490)

(7470, உரை, கம்பன் கழகம்; வருணம் — நல்ல நிறம்).

## உரு

ஒரு பாடலில் பயின்று வரும் பாங்கு இச்சொல்லிலும் அருகி அமைகின்றது.

மின் உருக் கொண்ட வில்லோர் வியப்பற வேத நல்நூல்
பின் உருக் கொண்டது என்னும் பெருமை ஆம்
பொருளும் தாழ
பொன் உருக் கொண்ட மேரு புயத்திற்கும் உவமை
போதாத்

தன் உருக் கொண்டு நின்றான் தருமத்தின் தனிமை
தீர்ப்பான் (3781)

இங்கு, அமைகின்ற 'பொன்உரு' என்பதில் நிறப் பெயரைச் சார்ந்து (பொன்-மை) இப்பொதுச் சொல் அமைவதாகக் கொள்ளலாம். நிறமுடைய பொருளை அடையாகக் கொள்ளுதல்:

முத்து உருக் கொண்டு செம் முளரி அலர்ந்தால்
ஒத்திருக்கும் எழிலுடை இவ் ஒளியால்...(299)

என்பதில் வெண்ணிறமும்,

பரப்பும் இருட் குறும்பு எறிந்த பகல்
ஒளியும் கெடத் துரந்து பருவ மேகத்து
உருப் பயில் இந்திரநீலச் சோதி தளைத்து (279)

என்பதில் கரு நிறமும் சூழலாலும் உணர்த்தப்படல் வழி அறியலாம்.

கேழ்

இச்சொல் நிறம் என்ற பொதுப் பொருளில் ஓரளவு தனித்துப் பயில்கின்றது.

கேழ் இரு மணியும் பொன்னும் விசும்பு இருள்கிழித்து
நீங்க...(5565)

நிறப் பெயரை அடையாகப் பெற்று வருகின்றது எனினும், செம்மை என்ற ஒன்றனை மட்டுமே பெற்று வரலால் தனித்த பண்பினதாகக் கருதத்தக்கது.

வான் உற நிவந்த செங்கேழ் மணிமரம் துவன்றி வான
மீனொடு மலர்கள் தம்மின் வேற்றுமை தெரிதல்
தேற்றா...(3163

ஆயின், நிறப் பெயரை அன்றி, நிறப்பண்பையும் நிறமுடைப் பொருளையும் அடையாகப் பெறும்போது வேறு நிறமும் உணர்த்தப்படுவதாகக் கொள்ள முடிகிறது.

ஓவிய மரண்கள் தோறும் உரைத்து அற உரிஞ்சி ஒண்கேழ்
நாவிய செவ்வி நாறக் கலையொடு புலந்த நவ்வி (4182)
விடம் தரு விழியது முடுகி வேலையில்
கிடந்ததும் ஆர்த்தது மழையின் கேழது (9855)

## குரு

குருவும், கெழுவும் நிறச் சொற்களாகத் தொல்காப்பியத்தில் குறிக்கப்படினும், இது நிறம் உணர்த்தி வரல் கம்பனில் அருகியே காணப்படுகின்றது. நிறப்பெயர் அடையோ நிறப் பொருள் அடையோ பெற்று இது ஆளப்படல் காணப்படவில்லை. என்ற சொல்லுக்கு அடையாகியும், 'குருவிந்தம்' என்ற சொற்கூறாகியும் மட்டும் வருகின்றது. இவை செந்நிறமுடையனவாக அமைவதால், நிறப் பொதுச் சொல்லாக எண்ணுவதுடன், செந்நிறம் குறிக்கும் மாற்றுப் பெயராகவும் கருதக் கூடும் எனத் தோன்றுகின்றது.

குழவி ஞாயிறு குன்று இவர்ந்தனையன
குருமணி நெடுமோலி...(5041)

கொல் கொள் வேல்கணார் குழீஇ இனத்து எறி குருவிந்தக்
கற்கள் வானிடை மீன் என வீழ்வன காணாய் (2062)

(உரை, கம்பன் கழகம்: குருவிந்தக் கற்கள்—மாணிக்கக் கற்கள்)

## கோலம்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி, இச்சொல்லின் பல்பொருள்களுள் ஒன்றாக நிறம் என்பதையும் தருகின்றது. (II-1195)

கம்பனில், நிறப் பொருளில் இச்சொல் ஓரளவு அருகியே ஆளப்படுகின்றது.

நீர்க் கோல வாழ்வை நச்சி நெடிது நாள்
வளர்த்துப் பின்னைப்
போர்க் கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது
அங்குப் போகேன்
தார்க்கோல மேனி மைந்த என் துயர் தவிர்தி ஆகின்

கார்க் கோல மேனியாளைக் கூடுதி கடிதின் ஏகி (7426)

தன்மை, அழகு என்ற பொருண்மை கருதும் சூழல் நிலையும் இவற்றில் காணப்படுகின்றது.

நிறச்சொல் அடையும், நிறப்பொருள் அடையும், சூழலும் பற்றி, கருமை எனும் நிறமே இச்சொற்றொடர்பில் ஓரளவு மிக்கு வருகின்றது.

செங்கணும் கரியகோல மேனியும் தேரும் ஆகி
எங்கணும் தோன்றுகின்றான் எனைவரோ இராமன்
என்பார் (1580)

கொய்திறச் சடையின் கற்றைக் கொந்தளக் கோலக்
கொண்டல்...(7442)

கொண்டலின் பொலிதரு கோலத்தான் தன்னை...(7550)

அருகிப் பொன்நிறம் வருவதனை, கருடக் கணையைச் சுட்டும் இடம்,

சுவணக் கோலத் துண்டம் நகம் தொல்சிறை வெல் போர்
உவணப் புள்ளே ஆயின வானோர்க்கு உலகு எல்லாம்...
(9844)

எனத் தருகிறது.

மயம்

இச் சொல்லுக்கு அகராதி 'நிற'ப் பொருள் தரவில்லை. ஆயின், தன்மை — நிறைவு — பொருள் — மகிழ்ச்சி — அழகு — செருக்கு, எனத் தமிழ்ப்பேரகராதி குறிக்கு மிடத்து (VI-3665) வருகின்ற 'நிறைவு' என்பதைக் கொண்டு, நிறமும் அதனை யுடைய பொருளும் பிரித்துத் தர இயலாதபடி ஒன்றிலொன்று இணைந்தும், நிறைந்தும் இருப்பதால், அவ்வியல்பு அடிப்படை யில் நிறத்தைக்குறித்தல் பொருந்தும் எனக் கருதலாம். அத்துடன் கம்பனின் இச்சொல்ஆட்சி, நிறப்பெயரையும், நிற முடைப் பொருளையும் அடையாகப் பெறலால், ஏற்புடைய தாக இங்குக் கொள்ளப்படுகிறது.

பொன் மயம் ஆன நங்கை...(3153)

ஆணிப் பொனின் ஆவியது ஆய் கதிரால்

சேணில் சுடர்கின்ற திண் செவி கால்
மாணிக்க மயத்து ஒரு மான் உளதால்...(3285)

### வடிவு

வடிவு, வடிவம் ஆகிய ஒரடிப்படையினவான இரு சொற்களுக்கும் பல்பொருள் உரைக்கும் தமிழ்ப் பேரகராதி, முறையே இவற்றிற்கு நன்னிறம், நிறம் ஆகிய பொருண்மைகளையும் அளிக்கின்றது (VI-3468) கம்பனிலும் இச்சொற்கட்கு இப் பொருள் அமைதல் அருகிப் புலப்படுகின்றது.

மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு
உடையான் (1926)

எல்லி அம் குவளைக் கானத்து இடை இடை
மலர்ந்து நின்ற
அல்லி அம் கமலம் கண்டாள் அண்ணல் தன்
வடிவம் கண்டாள் (2737)

### மேனி

இச்சொல்லுக்கும் தமிழ்ப் பேரகராதி 'நிறம்' என்பதனை ஒரு பொருளாகச் சுட்டுகின்றது (VI-3365). கம்பனில் இதன் இப்பொருள் ஆட்சியும் அருமையே. வருமிடத்தும் நிறப்பொருள் அடையுடன் அமைகின்றது.

செக்கர் மேனிப் பகழி செலுத்தினான் (3312)

### நிறச்சொற்கள் - ஒருபொருள் இருசொல்

மேற்கண்ட சொற்கள், நிறம் குறிக்க வந்த பொதுச் சொற்களாகவும், 'தனிச் சொற்களாகவும் கருதத் தக்கன. இவை தவிரவும், மேற்கண்ட சொற்களில் சில ஈரிணையாகி நிறப்பொருள் தருகின்றன. 'ஒருதனி' போன்ற ஒருபொருள் இருசொல் அமைப்புடையனவாக இவை கருதத் தக்கன.

### நிறவண்ணம்[11]

இச்சொல், நிறப்பெயரை அடையாகக் கொள்ளாது, நிறமுடைப் பொருளையே அடையாகக் கொள்வதால் தனித்

11. 1302, 2689, 3495, 3528, மி 1132

தன்மையுடையதாக அமைகின்றது. இன்ன பொருளின் நிறம் ஆகிய வண்ணம் என்பதுபோல் பொருள் விரிவு கொள்கின்றது. பெரும்பாலும் கருமையோடு சார்ந்த நிறத்தைச் சுட்டுமிடத்து இது ஆளப்படலும் அங்கு இராமனின் உடல் நிறத்தைக் குறித்து வரலும் தனித் தன்மையாம். அருகிச் சிவபிரானின் செந்நிறம் குறிக்கின்றது.

மேக நிற வண்ணனும் வணங்கி விடை கொண்டான்...
(2689)

வள்ளியோன் திரு மேனியில்; தழல் நிற வண்ணம்
வெள்ளி ஓங்கலில் அஞ்சன மலை என, வீழ்ந்தான்
(3495)

## கேழ்நிறம்

இச்சொல் ஓராட்சியே கொள்கின்றது. கேழ் எனும் சொல் பற்றி ஏற்கனவே நினைக்கும்போது, அது நிறப் பெயருள் செம்மை என்ற ஓரடையே பெற்றுப் பயிலல் குறிக்கப்பட்டமை இங்கும் பொருத்தம் கொள்கின்றது.

கால் தோய் மேனிக் கண்டகர் கண்டப்படு காலை
ஆறோ என்ன விண் படர் செஞ் சோரியது ஆகி
வேறாய் நின்ற வெண்மதி செங்கேழ்நிறம் விம்மி
மாறு ஓர் வெய்யோன் மண்டிலம் ஒக்கின்றது காணீர்
(9601)

## குருநிறம்

இதுவும் அருகி ஓரிடத்துப் பயின்றது. முன் இரு சொற்களும் போன்று, நிறப் பொருளோ, நிறப் பெயரோ அடையாகப் பெறாது இது அமைவது தனியே கருதத்தக்கது. ஏற்கனவே குரு எனும் நிறப் பெயர் பற்றிக் கூறியபோது நினைந்தது போல, செம்மை நிறச் சார்பு இங்கும் அமைவதாகத் தோன்றுகிறது.

விரி மழைக் குலம் கிழிந்து ஒளிரும் மின் என
கரு நிறத்து அரக்கியர் குழுவில் கண்டனன்
குருநிறத்து ஒரு தனிக் கொண்டல் ஊழியான்
இரு நிறத்து உற்ற வேற்கு இயைந்த காந்தத்தை
(5131)

இராமனுக்குக் கையும் வாயும் கண்ணும் பிறவும் செந்நிறமாகி யமைந்த உடல்நிலை பற்றிச் செம்மை நிற இயைபு 'குரு நிறத்து' என்பதில் இங்கு நினைக்கப்படுகிறது,

## நிறச்சொற்கள் - பிற பொருள்

நிறத்தைக் குறிக்க மிக்குப் பயில்கின்ற நிறம், வண்ணம் ஆகிய இரு சொற்களும், இந்த நிறப் பொருண்மையில் மட்டு மன்றி, வேறு பல பொருளிலும் ஆளப்படுகின்றன. இவை, தம் நிறம் சுட்டும் அடிப்படைப் பொருண்மையுடன் இணைந்து செல்ல வாய்ப்புண்டெனினும், விலகி அமைவதும் கூடும் எனலாம். பிற சில நிறச்சொற்களும் இந்நிலையினவாம்.

## நிறம்

இச் சொல்லிற்கு, நிறப் பொருளன்றிப் பத்து வேறு பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி தருகின்றது.[12] கம்பராமாயண அகராதியும் பத்துப் (9+1) பொருள் சுட்டுகின்றது[13]. ஒன்றில் சுட்டிய பொருள் பிரிதொன்றில் விடப்பட்டுள்ளதால், எண் இன்னும் பெருகக் காணலாம். தமிழ் அகராதி சுட்டுவதில் சாயம், நடுவிடம், தோல் எனும் பொருண்மைகள் கம்பன் பயன் கொண்டதாகத் தரப்படவில்லை. குணம், முறைமை, முகப்பு என்பன இங்கு மிகுதியாக அமைகின்றன எனத்தெரிகிறது

(அ) குணம் — திறம்பினீர் மெய் சிதைத்தீர் உதவியை
நிறம் பொலீர் உங்கள் தீவினை
நேர்ந்ததால் (4300)

(ஆ) முறைமை — அறம் துறந்து அமரரை வென்ற
ஆண் தொழில்
திறம் தெரிந்திடின் அது தானும்
செய் தவம்
நிறம் திறம்பாவகை இயற்றும்
நீதியால் (6139)

(இ) முகப்பு — தூ நிறச் சுடு சரம் தூணி தூங்கிட
(4233)

---

12. தமிழ் லெக்சிகன், தொகுதி 4, பக் 2286
13. கம்பராமாயண அகராதி, தொகுதி 3, பக். 321

கம்பராமாயண அகராதி தரும் இச் சொற்களும் சான்றுகளும் தவிரப் பிற பொருண்மைகளும், அகராதிப் பொருண்மைகளும் இச்சொல்லுக்கு அமைவதைக் கம்பன் காவியம் காட்டுகின்றது. உரையாசிரியரும் புதுப்பொருள் காண உதவுகின்றனர்.

கம்பராமாயண அகராதிப் பொருள் :

(ஈ) தேகம் — கண்ணனை அப்புறம் கரந்து போகினும்
பெண்நிறம் உண்டு எனின் பிடிப்பில்
ஈண்டு எனா (5521)

(உ) ஒளி — நிறம் திறம்பினும் நியாயமே திறம்பினும் (1472)
(நிறப் பெரும்படைக்கலம் நிறத்தின்நேர்உற...
(1868) தமிழ்ப் பேரகராதி)

(ஊ) மார்பு — பெரும்படைக்கலம் நிறத்தின் நேர் உற..
(1868)

(எ) சிறப்பு ] திறம் கெட ஒழுக்கம் குன்ற தேவரும்
பேணத்தக்க
பெருமை ] நிறம் கெட இனைய சொன்னாய்...(7696)
மேன்மை ] அறம் உனக்கு அஞ்சி இன்று ஒளித்ததால்
அதன்
மேம்பாடு ] திறம் முனம் உழத்தலின் வலியும்
செல்வமும்
நிறம் உனக்கு அளித்தது...(7355)

(ஏ) தன்மை —வகைப் பிறை நிறத்து எயிறுடைப் பொறி
(6906)

(ஐ) உயிர் ] மறத்தைச் சீறும்கொல் என்கொலோ
நிலையான ] முடிவு என்று மறையின்
கருத்து ] நிறத்தைச் சீறும் கொல்...(3476)

(ஒ) இசை — இறங்குவ மகர யாழ் எடுத்த இன்இசை
நிறங்கிளர் பாடலான் நிமிர்வ...(140)

இவற்றுள் சில, ஓரளவே பொருண்மைப் பொருத்தம் காட்டுவது நினைக்கத் தக்கது. இன்னும் சில பொருள் அமைதலும் தென்படுகின்றது. (கம்பன் கழகம் உரை). இவற்றுள் சில முன் பொருளோடு சார்புடையன.

(ஓ) உருவம் — வெண் நிற நறை நிறை வெள்ளம்
என்னவும்

பன்நிறம் செறிந்து இடை பரந்தது
என்னவும் (962)

(ஔ) விளக்கம்— வங்கியம் வகுத்த கானம் வயங்கிய
மழலை வாயர்

சங்கை இல் பெரும் பான் உற்ற
நிறத்துறை நிரம்பித் தள்ள...(8829)

(எ-1) மாட்சிமை — திறம் நினைப்ப அருங் கார்
எனும் செவ்வியோன் சேர

நிற மனத்து உரு குளிப்பினின்...
(4190)

எ-உ1) புகழ்த் திறமாகிய ஒளி | தேவரும் பேணத் தக்க திறம்கெட
(7696)

(எ-2) புகழ் — நிறம் உனக்கு அளித்தது...(7355)

(ஏ-1) இயல்பு — உன் நிறம் பசப்பு அற உயிர் உயிர்ப்
புற இன் நிறத் தேன்இசை இனிய
நண்பினால் மின் நிற மருங்குலாய்
செவியின் மெல்லென பொன் நிறத்
தும்பி வந்து ஊதிப் போயதால்
(5105)

**வண்ணம்**

இச் சொல்லிற்கு, 22 வேறுபட்ட பொருளைத் தமிழ்ப் பேரகராதி, நிறம் உட்பட, தருகின்றது.[14] கம்பராமாயண

---

14. தமிழ் லெக்சிகன், தொகுதி 6, பக் 3483-84

அகராதி ஒன்பது பொருள் மட்டுமே வருதலைக் குறிக்கின்றது. அத்துடன், 'வண்ணம்' எனும் சொல் மிக்குப்பயின்ற பாடலிலேயே (475) நிறம் உட்பட ஆறு பொருள் அமைந்ததையும் காட்டிவிடுகின்றது[15] வகை அல்லது விதம், படி வன்மை அல்லது திறம், ஆறு அல்லது வழி நிறம் அல்லது குணம் என்பன அவை. இவையொழிய,

தன்மை — அஞ்சன வண்ணத்தான் தன் அடித்துகள் கதுவா முன்னம்
வடிவம்

வஞ்சிபோல் இடையாள் முன்னை
வண்ணத்தள் ஆகி நின்றாள் (478)

அழகு — வண்ண மாலைக் கை பரப்பி உலகை வளைந்த
இருள் எல்லாம்...(552)

வட்டம் — கண்ணன் தன் நிறம் தன் உள்ளக் கருத்தினை
நிறைத்து மீதிட்டு
உள் நின்றும் கொடிகள் ஓடி உலகெங்கும்
பரந்த தன்ன
வண்ணம் செய் கூந்தல் பாரவலயத்து மழையில்
தோன்றும்...(1120)

உபாயம் — தொடக்கும் என்னில் இவ் உலகு ஒரு
மூன்றையும் தோளால்

---

15. கம்பராயண அகராதி, தொகுதி 4, பக் 289

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வகை \| விதம் | — | இவ்வண்ணம் | (பா 559) |
| 2. | படி | — | நிகழ்ந்த வண்ணம் | (,,) |
| 3. | வன்மை | — | கைவண்ணம் | |
| | | | கால்வண்ணம் | (,,) |
| 4. | ஆறு \| வழி | — | உய்வண்ணம் | |
| | | | துயர்வண்ணம் | (,,) |
| 5. | நிறம் \| குணம் | — | மை வண்ணம் | |
| | | — | மழை வண்ணம் | (,,) |

அடக்கும் வண்ணமும் அழித்தலும் ஒருபொருள் அன்றால்

கிடக்கும் வண்ண வெங்கடலினைக் கிளர் பெருஞ் சேனை

கடக்கும் வண்ணமும் எண்ணுதி.. (6589)

என்பனவும் பொருளாகத் தரப்படுகின்றன.

இவ்வாறு, கம்பராமாயண அகராதி சுட்டிய பொருள் ஒழியவும், தமிழ் அகராதி சுட்டுகின்ற, பாவின் கண் நிகழும் ஓசை விகற்பமும் (15) என்ற பொருளாட்சி; மிகைப்படலில் அமைகின்றது.

கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்றாறே... மி25

வருணம்

சாதி எனும் பொருளில் இச்சொல் கம்பனில் வழங்குகிறது.

இமையோரொடும்

வருணங்கள் வகுத்திட்ட காலத்தே

வந்து உதித்தேன்...(2714)

நீர்க்கடவுளான வருணனும் (1307, 5617, 9613, 10226) நீர் பெறச் செய்யும் மந்திரம் வாருணம் (3633) எனக் குறிக்கப் படுவதும், நீரின் நிறமுடைத் தோற்றம் காரணமாக இச் சொல்லாக்குங்களைத் தந்ததோ எனக் கருதலாம்.

உரு

இச்சொல், வடிவம் (1845), அழகு (2792) உடல் (2794) போன்ற பலபிற பொருண்மைகளில் ஆளப்படும் இயல்பு புலப்படு கின்றது. இச்சொல்லின் சில ஆட்சிகளைப் பார்க்கும்போது, 'உருத்திரன்' என்ற செந்நிறமுடைச் சிவபிரான் பெயர் நிலை யும், 'உருத்து' என்ற கோபத்து எனும் பொருள்படும் சொல் நிலையும்; இவ் அடிப்படையில் தோன்றியதோ எனும் எண்ணம் எழுகின்றது.

ஊழியின் உருத்திர உருவு கொண்டு...(7134)

என இலக்குவன் நிறம் ஒப்புமையாக்கப்படல் முதற் போர்புரி படலத்தில் அமைகின்றது. செம்மை எனப் பொருள்படும் 'ருத்ர' எனும் வடமொழிச் சொல்லும்[16] தொடர்புடையதாக மொழியான ஆங்கிலத்தில் அமையும் 'ரெட்' என்ற சொல் லும் ஒப்புமை பற்றி இங்கு நினைக்கத் தக்கன. சிவப்பு வெகுளிப் பொருளாதல் தொல்காப்பியத்தும் உண்டு. எனவே வெகுண் டவன் நிறம் பற்றி 'உருத்திர மூர்த்தி' (8055) என்ற அமைப்பும் வெகுளுதல் தன்மை பற்றி 'உருத்து எழா' (9880) என்ற ஆட்சியும் நிறச் சார்புடன் ஏற்பட்டிருக்கலாம். குரு, கேழ் என்பன போன்று, நிறப் பொதுச் சொற்களாயினும் பெரும் பாலும் செம்மை சார்ந்து வரல் 'உருவிலும் அமையும் எனப் புலப்பட்டால், இக் கருத்து இன்னும் தெளியலாம்.

## கேழ்

இச்சொல், ஒளி (கேழ்கிளர் சுடுகணை — 5398). ஒப்பு (கேழ் இல் வெங் கொடியவன் — 4961), சுவைச் சிறப்பு (கிளையினும் நரம்பினும் நிரம்பும் கேழன — 1781) எனும் பொருள் பட ஆளப்படுதலில், மூன்றாவது அகராதியில் குறிக்கப் படாததாம்.

பிற சொற்கள், நிறப் பொருளில் அருகியும், பிற பொருளில் பெருகியும் ஆளப்படாமல் இங்கு அவை தரப்பட்டில,

## நிறத்தன்மை

கம்பனின் நிறச்சொல், நிறப்பெயர் பற்றிய பல்வேறு ஆட்சிகளிலிருந்து நிறத்தின் இயல்பு, தன்மை பற்றிய சில எண்ணங்களை, கோட்பாடுகளை அறிய முடிகின்றது.

நிறத்தின் தன்மைகளாக, இளமை (light) அருமை (rare) முதலியன அமைந்தது முன்பே சுட்டப்பட்டது. பின்னும், ஒண் நிறம் (4279), ஒளி நிறம் (6763) போன்றவற்றால், நிறத்தின் பளபளப்பு (shining) அல்லது திளங்குதல் கருதப்

16. Rudra...red, shining, glittering, p. 383A Sanskrit English Dictionary, Oxford, 1974,

படுவதாகக் கொள்ளலாம். தண் நிறப் பாற்கடல் (1221) என்பதால் காட்சிக்கு இனிமையான குளுமையான (soft, cool) நிறநிலை கொள்ள வாய்ப்பமைகின்றது.

தள்ளற்கு அரு நல் சிறை மாடு தழைப்பொரு ஓங்க
எள்ளற்கு அரு நல்நிறம் எல்லை இலாது பல்ல (4782)

போன்ற ஆட்சி, நிறத்தின் நல்லியல்பை—நன்மைச் சார்பினைக் காட்டுவது வெளிப்படை.

நிறப் பொருள்களில் காணப்படும் சில நிற இயல்புகளையும் கவிஞர் அங்கங்குச் சுட்டிச் செல்கின்றார். பல்வகை நிற ஒளியும் நிழலும் படலால், தம் நிறம் தோற்றாது — தெளிவாகப் புலப்படாது பொருட்கள் அமைவதும், எந்நிறத்தையும் சாராது அதன் தோற்ற நிலை அமைவதும் சுட்டப்படுகிறது.

பல் மணி மாடப் பத்தி நிழல் படப் படர்வ, பண்பால்
தம் நிறம் தெரிகிலாத, ஒரு நிறம் சார்கிலாத புரளி
எல்லாம் (6450)

இதிலிருந்து சிறிது மாறுபட்டு, வெண்ணிற — அல்லது நிறம் சாராப்பொருள் அருகிலுள்ள பிறிதொரு நிறமுடைப் பொருளால் அந்நிறத்தினதாகத் தோற்றம் தருவது அமைகின்றது. சூதாடுகின்ற மங்கையர், 'பளிக்கு நாய் சிவப்பத் தொட்டு' (496) ஆடல் காட்சியில் இது வெளிப்படுகின்றது.

நிறம், மாறும் இயல்புடையது. எல்லா நிறத்திற்கும் ஒருவேளை இந்நிலை பொருந்துவதன்றெனினும் இதனை ஒரு பொது இயல்பாகக் கூறலாம். ஏற்கனவே கண்ட தொல் நிறம் (7046), புதுநிறம் (4192) எனும் ஆட்சிகள் இதனை விளக்குகின்றன.

துள்ளியின் இரத்தம் தோய்ந்து தொல்நிறம்
கரந்து வேறுஆய்
வெள்ளி போன்று இருந்த செம்பும் ஆம் என
வேறுபட்டார் (6775)

நல்நிறம், தொல்தையது ஆக்குவது ஒன்று (8792)

என்பன நிறம் வேறுபடுவதையும் மீண்டும் பழைய நிறம் பெற வெளிப்பட வாய்ப்பு அமைவதையும் காட்டுகின்றன.

இவ்வாறன்றி, ஒரு பொருளின் மீது, பிறிதொரு நிறமுடைப் பொருள் சார்தலால் வேறு நிறம் அடைதலையும் கவிஞர் காட்டுகின்றார். இந்நிற வேற்றுமை வியப்புக்குரியதாகவும் அமைகின்றது.

கண் உறு கடும்புகை கதுவ கார் நிறத்து
அண்ணல் வாள் அரககர் தம் அரத்தப் பங்கிகள்
வெண் நிறம் கோடலின் உருவின் வேற்றுமை
நண்ணினர் நோக்கவும் அயிர்ப்பு நல்கவே (7119)

போர்க்களத்தின் செழுங்குருதிப் புனல் தோய்தலால். 'மீன் அனைய நறும்போதும் விரை அரும்பும் சிறை வண்டும் நிறம் வேறு எய்தி' (9602) அமைகின்றன. இருண்ட கல்லைத் தன் நிறம் ஆக்குகின்றது பொன் சக்கரமுடைய தேர் (820).

இவ்வாறு நிறம் மாறுதல் நிறம் பெறுதல் ஆகியன அன்றி, நிறம் நீங்குதல் அல்லது நிறம் இழத்தல் எனும் நிலையும் அமையலாம்.

பல் நிறத்த பதாகைப் பரப்பு எலாம்
செந் நிறத்தவனாய் நிறம் தீர்ந்தவே (7046)

என்பதில் பிறிதொரு நிறம் பெற்றமையால் தம் இயல்பான நிறம் இழக்கப்பட்டது தரப்படுகின்றது. தூசிப் படலத்தில், 'யானை தன் கார் நிறம் தவிர்ந்தது' (9313) என்பதும் இத் தகையதே.

நிறம் குறைதல் நிறம் மிகுதல் எனும் இயல்பு நிலைகளும் காணப்படலாம். வெயில் நிறம் குறைய...(841) எனவும், பானல் உண் கண்ணும் வண்ணம் படிமுறை மாற...(5017) எனவும் வரும் பகுதிகள் இதனை ஓரளவு உணர்த்தலாம். மாவின் இளநிறம் முதிரும் (4511).

மஞ்சு அன மேனியான் தன் மணிநிறம் மாதரார்தம்
அஞ்சன நோக்கம் போர்க்க இருண்டதோ (1072)

என வரும் பாடல் அடிகள், நிறம் முதிர்தல் - ஆழமாதல் என்பதனைக் காட்டுகின்றன எனலாம். இளநிறம், ஆழ்நிறம் எனும் எண்ணம் அமைந்ததும் இதில் உய்த்துணர முடிகின்றது.

இந்தகு நிறம் குறைதல் பாங்கு, தற்காலிகமானதாக அமைதலை, 'உம்பர் ஆடும் மங்கையர் கால் கழல் விளர்த்தன 6610) விளர்த்த செவ்வாய் (8825), பசலைகள் (4264) போன்ற நிலைகள் காட்டுகின்றன எனலாம்.

இவையொழிய, நிறம் ஊட்டுதல் எனும் இயல்பும் அமைவது வெளிப்படுகின்றது. 'அரத்தம் உண்டனைய மேனி அகலிகை' (1066) என்பதால் செந்நிறமும், 'மழையினை நீலம் ஊட்டி... செய்த பெருங்குழல்' (8283) என்பதால் நீலமும் ஊட்டப் பட்டமை தெரிகின்றது. தளிர் நிறம் உண்ட கண் (711), கார் உண் நிற நறும்பொடி (831), நிறம் செய் கோசிக நுண் துாசு (1129), நெருப்புண்ட நிறம் (5761) போன்றனவும் இச்சார்பு காட்டுகின்றன.

நிறத்தின்—நிறங்களின் இத்தகைய பல்நிலைகளைக் காட்டு கின்ற கவிஞர், ஒப்பற்ற நிறம் என்பதனைக் குறிக்கத் 'தனி' என்ற அடையை, கருமைக்கு மட்டுமே கொடுக்கிறார். 'உடைக் கருந்தனி நிறம் ஒளித்துக் கொண்டவன்' (6522) எனக் காப்பியத் தலைவனான இராமனின், கருநிறம் பற்றியே இச் சிறப்படை இந்நிறத்திற்கு அளிக்கப்பட்டிருக்கலாம்.

## நிறங்கள்

கம்பனை முழுமையாக நோக்கும்போது பல நிறங்கள் வெளிப்படுகின்றன. ஆயின் நிறங்கள் இவையிவை, நிறங்கள் இத்தனை, போன்ற வரையறை — எண் நிலை- எல்லை வகுக்கும் வண்ணம் காணப்படவில்லை.

நிறங்கள் ஏழு எனும் எண்ணம் இவருக்கு இருந்தது வெளிப் படவில்லை. ஆனால் வானவில் பற்றிய மிகப் பல குறிப்பு அமைவதால்[17] இது அவருக்குத் தெளிவான ஒன்றாகவே இருந்திருக்க லாம் எனவும் எண்ணத் தோன்றுகிறது.

---

17. 19 393 672 721 937 1217 3942 4551
5022 5112 5449 5464 5485 5563 5564
5688 5754 6728 6743 7504 7865 8091
8436 9026 9159 9742 9781 மி59

பூ நிரைத்தும் மென் தாது பொருந்தியும்
தேன் அளாவியும் செம்பொன் விராவியும்
ஆனை மா மத ஆற்றொடு அளாவியும்
வான வில்லை நிகர்த்தது அவ் வாரியே (19)

என்பதில், செம்மை, பொன், கரு நிறங்கள் தென்படுகின்றன.

சுந்தரப் பொடிகளும் செம் பொற் சுண்ணமும்
சந்தனம் நீரொடு கலந்து தையலார்
பந்தியில் சிவறியால் சிதற பார்மிசை
இந்திரவில் எனக் கிடந்தது எங்குமே (மி. 69)

என்பதிலும் நிறம் தெளியவில்லை. 'வான்நெடு நீலவில்' (9472) எனக் கூறுவதனை, நீல நிறமே ஏனைய வற்றினும் மேம்பட்டுத் தோன்றுதலின் நீல வில் எனப்பட்டது' (கம்பன் கழகம், உரை) என விளக்குவர். இவ் வில்லின் காரணமாக, இராமனின் வில்லும் பன்முறை 'வண்ணவில்' எனக் குறிக்கப்படுகின்றது [18]

பல நிறங்களையும் தெளிவாகத் தரும் வானவில் லன்றி அவற்றை அடக்கி அமைவது மயில். ஆயின் இதனையும் கவிஞர் நிற வெளிப்பாட்டுடன் தராது, 'வண்ணப் புள்' (மி. 1.20) எனவே கூறி அமைந்துவிடுகிறார். நவமணிகளைப் பற்றிய குறிப்பு அங்கங்கு அமையினும்.[19]

சார்ந்த நுண் பளிங்கு எனத் தெளிந்த ஈர்ம புனல்
பேர்ந்து ஒளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைத் சேர்தலால் (3710)

என அதன் நிறநிலை பற்றிய எண்ணம் அமையினும் அவை இவை எனவும் இத்துணை எனவும் தரப்படவில்லை.

நிறங்கள் பல எனும் எண்ணம் இருந்ததை அடைகளும் சூழலும் இவருக்கு காட்டுகின்றன.

---

18. 1362 4167 4370 10245 10257
19. 1229 3710 381 4174 10355

வண்ணங்கள் பலவுப் தோன்ற மணி ஒளிர்மலை...(866)

பல் நிறந் துகில்...(1765)

பல் நிறத்த பதாகைப் பரப்பு...(7046)

சித்திரக் குலக் பல்நிற மணிகளும் சேந்த...(8355)

நிறங்களின் எண்ணிக்கையைப் பற்றி நினைக்கும்போது, கம்பன் ஐந்து நான்கு எனும் எண் நிலைகளையே தருகின்றார். இலங்காதேவியை 'அஞ்சு வண்ணத்தின் ஆடை உடுத்தாள்' (4913) எனக் காட்டுகின்றார் 'வெண்மை, கருமை, செம்மை, பொன்மை பசுமை ஆகிய ஐந்து நிறங்கள்' என்ற உரைக் கொள்கை கவிஞருக்கு ஏற்புடையதா எனத் தெரியவில்லை.

நால் நிற நளிர் வல்லிக்கொடி (2016)

நால்நிறச் சுரும்பும் வண்டும் நவமணி அணியின் சார (4174)

என ''நால் வண்ணம்'' குறிக்கப்படினும், அவை பல' எனும் பொது நிலை உணர்த்துவதாகக் கருதுவர். ஆயின், பிறிதொரு சூழலில், கவிஞர், 'செங்குடை வெண்மை நீலம் பச்சையோடு இனைய எல்லாம்...'' (5733 எனத் தருவதில் நான்கு நிறம் வெளிப்படுவது குறிப்பிடத் தக்கது.

## நிறப் பெயர்கள்

கம்பன் காவியத்தில், செம்மை, கருமை, வெண்மை, பசுமை, நீலம், பொன் ஆகிய நிறப்பெயர்கள் காணப்படுகின்றன ஏற்கனவே கண்டவிதம் நிறப் பெயரின்றியும், நிறப் பொருட் பெயரைத் தொடர்ந்து நிறம், வண்ணம்... எனும் சொல் அமைந்து அவ்வாறும் நிறம் உணர்த்துகின்றது. அதன்றி, நிறம் என்ற சொல இன்றியும் நிறப்பொருள் அல்லது நிறநிலை வந்து நிறம் உணர்த்துகின்றது. இதனால் ஒவ்வொரு நிறமும் பல் வகை கொள்வதும, இள—முதிர் நிலை காட்டுவதும் வாய்ப் பாகலாம்.

இவ்வாறு ஆறு நிறப் பெயர்கள் சுட்டப்பட்டபோதும், கவிஞர் இவற்றைத் தனி நிறமாகக் கொண்டாரா என்பது ஐயமே, பசுமை, நீலம் ஆகியன, ஒவ்வொரு கால் கருமையுடன் மயங்கின்றமை இவ்ஐயத்தை ஏற்படுத்துகின்றது.

இந்நிறங்களில், கருமையே மிகுதியாகப் பயில்கின்றது. இதற்குக் காரணம் அமையலாம் காப்பியத் தலைவனான இராமனின் கருமேனி நிலையும், அது ன்முறை குறிக்கப்பட்டலும் ஒரு காரணமாகலாம். காப்பிய எதிர்த் தலைவனும் சுற்றமும் கூட கருநிறத்தராக அமைவதும் பிறிதொரு காரணமாகலாம். 'அறநிறம் கரிதோ' (6498) எனக் கூறப்படலாம், மறுநிலையில் மறநிறம் கரிது எனக் கொண்டு இறுதியில் அறமே வெல்லினும் காப்பியக் களனில் மிகுதியாக அமையும் மறம் பற்றி, அதனைக் குறிப்பாகச் சுட்டக் கருமைப் பயிற்சி அமைந்ததோ எனவும் கருதலாம். போர்க்களக் காட்சியின் 'கரி' களும்' கார்காலத்தின் 'கரு' மேகங்களும், செயல்பட முடியாத பல இரவு நேரங்களும், அரக்கரின் மாயை 'இருளும்' கூட இக்கருமைப் பயிற்சிக்குக் காரணம் போலும் இராவணன் இராவணி[20], இராமன் போன்ற கருமை அடிப்படைப் பெயர் நிலைகளும் கூட இங்குக் கருதத்தக்கன.

## கருமை : நிறம்

கருமை, நிறம் எனும் சொல் தொடர்ந்து வரும் ஆட்சிகள் சில காணப்படுகின்றன.[21]

> அரியவட்கு அனல் தரும் அந்தி மாலையாம்
> கருநிறச் செம்மயிர்க் காலன் தோன்றினான் (541)

கருகை எனும் சொல்லின் முழுமை வடிவம் ஓரளவு அமைகின்றது.[22] கறுப்பு என்ற இதன் மற்றொரு வடிவம், சினப்

---

20 இராவணன் — 9..., மி8 26 303
306 376 384 397

இராவணி (இந்திரசித்து) — 8014 8035 8162 8163
8171 8511 8601

21. 541 2936 3888 5131 5301 6522 6750 7141

22, 1072 3202 5535 6495 6847 மி188

23. 47 586 1078 3870 8071

பொருளுடன் நிறமும் சுட்டியும் வருகின்றது.[23] கறுத்து என்பதும் அவ்வாறே அமைகின்றது.[24]

வெள்ளை எயிற்றர் கறுத்து உயர் மெய்யர் (5661)

கருமை எனும் நிறப்பெயர், கருநிறமுடைப் பொருளுக்கு அடையாகிக் கரு என்பது மிக மிகுதியாக அமைகின்றது.[25] 'கருநிறம்' என்பது அருகி ஆளப்படுகின்றது (7743). 'கருந்தகைய' (4225) என்பதும் உண்டு. 'இருள்' என்பதனைப் போன்று 'கருள்' (1168) என்பதும் கருமை குறித்து ஆளப்பட்டது போலும்.

---

24. 328 1662 1687 2038 3045 3177 3180
3207 3860 4666 4873 5587 5661 5803
5834 6520 7208 9435 மி192 464 552
733 1003

25. 42 61 138 189 191 216 219 464
473 517 555 651 681 704 763 765
776 778 834 837 859 860 873 893
972 974 1027 1028 1037 1067 1076
1079 1111 1154 1163 1164 1167 1168
1210 1213 1221 1239 1918 2313 2330
2614 2692 2703 2850 2960 3101 3110
3186 3234 3237 3622 3637 3639 3744
3923 4133 4218 4225 4232 4472 4589
4641 4750 4907 4935 4941 4997 5036
5050 5155 5161 5230 5324 5496 5572
5846 5859 5976 6023 6070 6085 6518
6534 6519 6593 6610 6615 6626 6638
6653 6677 6678 6688 6731 6742 6751
6767 6774 6881 7423 7246 7357 7434
7519 7520 7543 7544 7606 7608 7919
7628 7629 7655 7754 7836 7857 8049
8206 8407 8420 8425 8889 8896 8949
8953 9086 9187 9215 9227 9229 9252
9253 9261 9605 9697 9637 9996 9999
10006 10122 10246 10310 10333 10336
10362 மி12 438 493 521 752 807
822 1104 1106 1186

ஆழ்நிறமுடைய வண்ண நிலை காட்டக் 'கரு' என்பது (dark) இணைந்ததைக் கருங்குவளை (974, 3186) கருவினை (9996) போன்றன காட்டுகின்றன. இவ்வாறே கரிய பொருள் பிறிதொரு அடையாகி வரும் இடமும் ஆழ்நிறம் காட்டுவதாகலாம் — மைக் கருங்கூந்தல் (1076), கார்க் கருங்கடல் (9252) போன்றன சான்றாகின்றன. மிகவும் கரியது எனப்பொருள் படும்படி வழக்கில் ஆளப்படும் 'கன்னங்கரேல்' என்பதுடன் ஒத்துவைத்து நினைக்கும்படி,

கனக் கரியான் (419)

கனக்கரு மேகம் ஒன்று கார்முகம் தாங்கி (7655)

என்பன அமைகின்றன. கருமை இல்லாத பொருளுக்கும் கருநிற அடைவரல், இருளின் மதி உதயத்தை,

கருநெருப்பின் இடையே எழுந்த
வெண் நெருப்பே (555)

என்பதிலும், இராமனைக் கருஞாயிறு என்பதிலும் அமைகின்றது. (1163, 2610, 6839, 9406)

கருமைப் பொருள் உணர்த்தக், கருமையோடு தொடர்புடைய சொற்களான, கரிது, கரிய, கரிந்த(ன), கரிந்து, கரித்த, கருகி என்பனவும், கருமையடிப்படையில் அமைந்த கரியவன், கரியவள் என்ற பெயர் நிலைகளும் ஆளப்படுகின்றன.[26] நிறப்

---

26. கரிது 119 7952 கரியது 590 கரியன் 1435
கரியக்கரிய 560 கரிய 324 476 709 1292
1413 1461 1580 2063 2078 2754 4461
500 4871 4991 5164 6900 7128 8603
9958 மி 319 755 959 கரிந்த 350 909 2068
3181 5046 5775 5959 5961 6614 6625
7207 7373 8104 8736 9042 9409
கரித்த 4878 கருகி 224 590 4158 10136
மி688 கரியவள் 1948 2029 2431 கரிய(வ)ன் 430
620 665 1055 1890 2156 2270 3620
4936 5949 7183 7220 9063 10315

பொதுச் சார்புடனும் இவை அமைதலை, நிறம் கருகிய அண்ணல் (2397), நிறம் கருகு கங்குல் (4221), நிறம் கரிந்திட (7625) போன்றன காட்டுகின்றன. யானை, கரி எனக் கரிய தன்மை பற்றியே பெயர் பெறுவதாகக் கொள்ளலாம். கரி யானை (717), களபமால் கரி (2074), இருட்கரி (8357), மதகரி இரவினது இனம் (7864), கரிகள் யாவும் மழை என இருண்டு தோன்ற (மி. 449) போன்றன சான்றாகின்றன.

நெருப்புண்ட பொருளினைக் 'கரி' எனலும் நிறம் பற்றியே எனல் பொருந்தும் (5313, 8876). ஆயின், 'சான்று' எனப் பொருள்படுமாறு ஆளப்படும் கரி எனும் சொல் (5546, 9441) நிறப் பொருத்தமுடையதா என்பது இன்னும் ஆயத் தக்கது.

மழையையும், மழை மேகத்தையும். மழைக் காலத்தையும் குறிக்கும் 'கார்' எனும் சொல்லும் நிறத் தொடர்புடைய தாகவே புலப்படுகின்றது. நிறம், வண்ணம், போன்ற நிறப் பொதுச் சொற்கள் தொடர இது ஓரளவு மிகுதியாக வருகின்றது.[27] பிறிதும் ஒரு கருநிற அடைபெற்று,

> கருப்புக்கார் மழை வண்ண (9823)

என வருவதும் குறிப்பிடத் தக்கது.

மேகத்தோடு தொடர்புடைய நிலையில் 'கார்' என்பது பயில்வதுடன், கருநிறப் பொருட்கள் சிலவற்றிற்கு உவமையாக வும், இயல்பு காட்டும் அல்லது வகை வேறுபடுத்தும் அடையாக வும் இது பயில்கின்றது.[28]

---

27. 831 1969 2814 2828 4029 4724 4796 4815 5157 6057 7119 7426 8376 8519 8790 9305 9313 9421 9823 மி 816 1167

28. 56 76 77 134 308 346 347 348 758 814 826 907 966 1091 1194 118 1212 1443 1555 1589 1678 1745 1748 1835 1895 1920 1999 2138 2275 2290 2341 2424 2803 2899 2907 2955 3005 3006 3088 3131 3325 3536 3563 3718 3741 3954 3973 3986 4000 4161 4163 4174 4184 4196 4197 4199 4212 4256

சூல் தடங் கருங்கார் புரை தோற்றத்தான் (2138)
இந் தனம் எனைய என்ன கார் அகில் (3536)

யானை, கரிய — கார் நிறம் உடையதாதலின், அதனைக் குறிக்கச் செங்கண்கார் (8170, 7166), செம்முகக் கார் (2275, 20078 133, மி, 927), கார் மிருகம் (1678), கடைக்கார் (9591), வெங்கார் (8560) போன்ற பெயர் நிலைகளுடன் 'கார்' என்பது தனித்தும் யானையைக் குறிக்க அமைகின்றது (7751, 5500).

வில்லினைக் குறிக்கும் 'கார்முகம்' என்ற சொற்பயிற்சியும்,[29] இயைபு பற்றி இங்கே நினைக்கத் தக்கது. கரிய மேகத்திற்கு 'முகம்' போன்று அமையும் ஒளியுடை மின்னல் நிலையும், வில்லுக்கு மின்னல் பன்முறை ஒப்புமையாக ஆளப்படலும், இராமனது வில்தாங்கிய உருவை மேகமும் மின்னலும் இணைந்து வருவதாகக் காட்டுவதும் எல்லாம் இங்கு நினைக்கத் தக்கன. நிறம், அன்றியும், ஓசையும் ஒளியும் காரணமாக இவ் இயைபு பொருந்தலாம் எனத்தோன்றுகின்றது.

## பிற சொற்கள் : காளம்

காளம் என்பதும் கருமை நிறப் பெயராக அமைவது இங்கு நினைக்கத்தக்கது. அரக்கரைச் சுட்டும்போது, 'நிறம்' எனும் சொல் தொடரும் வண்ணம் இது பயில்கின்றது.

---

4308 4837 5424 5438 5506 5508 5539
5742 5747 5754 5962 5964 5996 6020
6489 6493 6545 6578 6717 6723 6913
6972 7029 7081 7089 7114 7166 7250
7254 7385 7473 7548 7751 7781 7834
7848 7869 7871 7872 7883 7903 7959
8070 8133 8157 8170 8294 8326 8345
8338 8371 8395 8424 8500 8566 8590
8728 8795 8862 8929 8951 8971 9001
9035 9147 9249 9317 9396 9444 9500
9510 9591 9900 9901 9989 மி 7, 15
230 440 553 701 721 797 847 887
888 913 927 948 1123 1128 1129
1116 1175 1233

29. 580 667 677 680 790 1288 1729 3051
3424 7168 7212 8954 9052 10142
மி810 944 954.

காள நிறத்தோடு ஒப்பவர் மாய, கடல்தாவுற்று
ஆளும் நலத்தீர் ஆளுமின் எம்ஆர் உயிர் அம்மா (4713)

ஏற்கெனவே கண்ட விதம், ஆழ்கருமை காட்ட ஈரடை வருவது, இங்கும் விராதன் உருவை வருணிக்குமிடத்து ஆளப்படு கின்றன.

தங்கு தீன் கரிய காளிமை தழைந்து தவழ
பொங்கு வெங் கொடுமை என்பது புழுங்கி எழ மா
மங்கு பாதகம் விடம் கனல் வயங்கு திமிரச்
கங்குல் பூசி வருகின்ற கலிகாலம் எனவே (2529)

இராமனுக்கும், அரக்கனுக்கும், கரிய பொருளுக்கும் இக் காளம் சுட்டுப் பொருளாகின்றன.[30]

'காளம்' எனும் சொல்லாக்கமும்[31] ஒப்புமை பற்றி இங்குக் கருதற்குரியது. நிறப்பெயர் பற்றி எக்காளத்திற்கு இப்பெயர் அமைந்திருக்கலாம் — புரை மணிக்காளம் ஆர்ப்ப... (10320); அல்லது காளமாமேகத்தின் இடிக்குரல் போன்ற இதன் ஒலி பற்றியும் — 'அசனி ஈன்ற காளமும்...' (9534) — பெயர் சார்பு காணலாம்.

நிறப் பெயருடன் இகர விகுதி சேர்ந்து, பெயர் நிலை ஆக்கும் நிலை இராவணி நீலி, பொன்னி, காரி... போன்ற வற்றில் அமைவது போல, 'காளம்' என்பதும் 'காளி' என ஆனதாகக் கருதலாம். கருமை நிறம் பற்றியே சிவபிரான் தேவிக்கும் இப்பெயர் அமைந்தது போலும்.

காளியே அனைய காலன் . . . (8102)

(காளி போன்ற கருநிறமுடைய எமன், உரை, கம்பன் கழகம்).

காளியைப் பண்டு கண்ணுதல் காட்டியமாலை... (9269)
நள் இருள் அடைந்த
காளி போன்றனன் இராவணன்... (9547)

---

30. 2047 6839 6353 8119 9033
31. 7051 7485 9534 10320

போன்றன கம்பராமாயணக் குறிப்புக்கள்.

யமுனையின், கரிய நிறம்பற்றி, அது காளிந்தி (2032) எனப்படுதலும்; கரிய நி முடைமை பற்றி, 'காக்கையில் கரிது உட்கறுப்பு களங்கம் (1920) எனப்படுதலும் எல்லாம் இயைபு பற்றி இங்கு நினைக்கத் தக்கன.

இக் காளம் — களம் என்பதன் அடிப்படையில் தான் போலும் கரிய நிற தோனான இராமன் கண்ணன் எனப்படு கின்றான். களங்கனி அனைய அக்கண்ணன் (மி. 1273) என இராமனும், கண்ணன் தன் நிறம் (1120) எனச் சீதையின் கூந்தலும் குறிக்கப்பட்டல் இங்கு நினைக்கத் தக்கன. 'யாவர்க்கும் கண்ணன் என்றே ஓதிய பெயர்க்குத் தானே உறு பொருள் உணர்த்திவிட்டான்' (1063) என்ற கம்பர் வாக்கு, இருப்பினும், கருமை அல்லது நீல வண்ணம் குறிக்கும் கிருஷ்ண எனும் சொல்லிம்[33] இருண்மை எனப் பொருள்படும் கண்ஹ எனும் வடிவமும்[34] இங்குக் கருதத்தக்கன.

## கறை

இச் சொல்லும் கருமைப் பொருளில் வருவதாகத் தோன்று கின்றது. கருமை எனும் நிறஅடை பெற்று, 'கருமைக் கறை நெஞ்சினில் நஞ்சு கலந்த பாம்பின்' (3202) என அமைகின்றது. அத்துடன், கறை எனும் சொல்லின் பல்சூழற் பயிற்சியும் இதனை இங்குக் கொள்ள உதவுகின்றது. சிவபிரானின் கழுத்து நிறம் கறை எனக் குறிக்கப்படுதலும்[35] — கறைமிடற்று இறை

---

32. களங்கனி அனையவன் (மி 645)
    களங்கனி அனைய அக் கண்ணன் (கி 1273)

33. Krishna — black, dark, darl blne...
    black (the colour) or dark blue (which is often confounded with by the Hindus) p.306,
    — A Sanskrit English Dictionary

34. Kanha... — (Vedic Krsna) dark, black
    p. 180. Pali English dictionary, Rhys Davis, Oriental Reprint, New Delhi, 1975

35. 192 597 3889 4817 9348 9528 9650
    மி 48 538

(192), நெய்பூசிய அல்லது இரத்தம் தோய்ந்தவாள் கறைவாள் (1959இ 3389) எனக் குறிக்கப்படுதலும். மையுண்ட கண்கள் 'கறைக் கண்' எனக் கூறப்படுதலும், (793, 7830), கரிய நிற முடைய யானை கறையடி (4084) எனச் சுட்டப்படுதலும், அரக்கரின் கரிய தோல் கறைத்தோல் (6579) எனப்படுதலும், பிறையின் கருமையும்[36] பிறவும்[37] இச் சொல்லால் குறிக்கப்படு தலும் இங்கு நினைக்கத்தக்கன.

மை

கரிய நிறம் தொடர்புற்று அமையும் இச்சொல்லும் பன் முறை நிறம் காட்ட ஆளப்படுகின்றது. நிறம், வண்ணம் என்ற சொல் தொடரும்படி 'மை ஆர் களபம்' (1085), மைக்கரி (888 எனக் குறிக்கப்படுதலும் இங்கு நினைக்கத் தக்கது. மிகுதியான எருமை, அதாவது ஆழ்கருமை குறிக்கும்போது, 'மைக்கரு' என்பது வருகின்றது.[39]

கருமைச் சார்பு பற்றிப் போலும், கண்மை, வேல் முதலியன வற்றில் பூசப்படும் குருதி அல்லது நெய், இருள், மேகத்தின் கருமை கரிய பொருள்கள், மாசு போன்றன 'மை' எனக் குறிக் கப்படுகின்றன.[40]

---

36. 646 2067 3577 5002 6683 9176 9906 (9987) மறு

37. கறை உள்ளம் 7201
    கறை படுதல் 7587, மி 1122
    இறை கறை 7192.

38. 475 545 6907 7686 8415 8576 மி 3223.

39. 1728 2801 2998 மி 765.

40. 306 367 407 495 706 838 879 904
    909 931 945 969 1085 1260 1685
    1760 1886 1887 2087 2197 2310 2363
    3107 3214 3541 3809 4149 4745 4749
    4931 5441 5498 5806 6008 6154 6492
    6689 7152 7353 7624 9162 10126
    10215 மி229 231 670 1050 1114

## நிறப் பொருட்கள்

கரிய நிறமுடைப் பொருட்கள் பலவும் நிறம் உணர்த்த வருகின்றன. நிறம் அல்லது வண்ணம் என்ற நிறப் பொதுச் சொல் பெற்றும் பெறாதும் இவை அமைகின்றன. நிறச்சொல் பெறுவதாலேயே இவை இங்கு நிற எண்ணத்துடன் அணுகப்படு கின்றன இவ்வாறு பெறும் சொற்கள் நிறச்சொல் பெறாது வரும்போதும் சார்புடைமை பற்றிக் கொள்ளத்தக்கன. நிறச் சொல் இன்றியும் இவற்றின் பயிற்சியால் கவிஞர் நிறம் குறிப்பது, அவரது உத்தியாகவும் கருதத்தக்கது.

### மேகம்

கருநிறமுடைய நீர்நிறைந்த மேகம் நிறப் பொதுச் சொல் லுடன் வந்து கருமை சுட்டுகின்றது.[41]

முகிலின் வண்ணத் துகில் (2360)

கருமை எனும் நிறப் பெயருடனும் இணைதலை,

கருந்தனி முகில் (5246)

எனும் குழல் காட்டுகின்றது.

இந்திரசித்து மேகநாதன் (188, 5783, 10116) எனப்பெயர் பெறுதலும் இங்கு இயைபுடன் கருதத்தக்கது. உவமையாகவும் உருவகமாகியும் காப்பியப் பாத்திரங்களுக்கு இக்கருநிற மேகம் ஆளப்படுவதுடன், இயற்கைப் பொருட்களுக்கும் ஒப்புடையதாக

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 41 | கொண்டல் | — | 418 | 1401 | 3053 |
| | முகில் | — | 2360 | மி202 | 1132 |
| | எழிலி | — | 6920 | | |
| | மேகம் | — | 2539 | 2689 | மி1187 |
| | புயல் | — | 3528 | | |
| | கனம் | — | 8677 | | |
| | மழை | — | 4629 | 7495 | 9855 |

கைக்கொள்ளப்படுகின்றது.[42] மஞ்சினும் காரிய மெய்யன் (8477) போன்ற சூழல்கள் கருமையின் ஆழ்நிறநிலை தருகின்றன எனலாம்.

**அஞ்சனம்**

மைப் பொருண்மையுடன் ஒப்புடைய இதுவும், பொருட்பெயராதல் பற்றி இங்குக் கருதத்தக்கது. வண்ணம், நிறம் போன்ற நிறப் பொதுச்சொற்களுடனும் இது பயில்கின்றது.[43]

அஞ்சன வண்ணனே இராமன் (3457)

கருநிறமுடைப் பொருட்களுக்கு அடை உவமை முதலிய நிலையில் இது வருகின்றது.[44] இதுவும், ஏற்கனவே நினைந்தவண்ணம் கருமை அடையும் பெற்று ஆழ் கருமை காட்டுகின்றது.

---

42. மேகம் — 745 1105 2308 2597 2800 2971 3599 5270 7399 8286 8701

கொண்டல் — 727 1363 1792 2271 2512 3464 5312 6747 8109 8416 10098.

முகில் — 310 1367 1695 6876 7084 7745 7935 மி 51

மஞ்சு — 3136 3765 6000 6682 8477 மி 905

எழிலி — 8002

புயல் — 707 4345 5709 மி 1111

மழை — 513 1005 1631 3903 3516 5160 5729 6867 7546 8523

43. 442 478 1131 2316 3457 4379 4838 6046 6532 7240 8861 மி 316

44. 282 756 850 853 1180 1558 1564 1762 1789 1799 1890 1977 2540 2815 2817 3215 3292 3576 3728 3754 4260 4943 5687 5888 6505 6592 8370 9645 10201 மி 397.

அஞ்சனக் கருமுகில் கொழுந்து
எழில் காட்டும் சோதி (282)

'கருஞாயிறு' என்பது போன்று 'அஞ்சன ஞாயிறும்' (1977) சுட்டப்படுகின்றது. அனுமன் தாய்ப் பெயர் அஞ்சனை என (3813, 3874, 8370, 8475) அமைதல் ஒருவேளை கருநிறம் பற்றியாகலாம்.

கடல்

நிறப்பொதுச்சொல் பெற்று வருவது ஓரளவு மிகுதியாயும், கரிய மேனி நிறம் காட்ட கடல் நிறப் பொருள் அடையாதல் அருகியும் அமைகின்றன.[45]

காத்த மன்னனின் இளையவள் அன்றோ
கடல் வண்ணன் (1475

மால் கடல் வண்ணன்' (7133)

எனத் தன்நிறமே அடையாதலும் உண்டு.

அல்

ஒப்புமை நிலையில் கருநிறத்தை உணர்த்தி வந்து நிறப் பொதுச்சொல் இணைவுடனும்,[46] அன்றியும்[47] பயில்கின்றது.

அல் ஒக்கும் நிறத்தினாள் (388)

---

45. (1) 1146 1475 2495 7833 9369 9594 மி 1240
(2) 3319 7346

46. அல் : 387 388 648 1954 5865 6847
7038 7507 மி 469
கங்குல் 6486
நிசா சரண் : 6112

47. அல் — 688 768 1957 2328 2344 2726
4524 4646 5070 5847 7263 8225
8247 8258 8573 8757 8762
எல்லி – 547 6484 6519 7362
கங்குல் – 3064 7045
இரா - 3794

## இருள்

அல்-கங்குல் என்ற நிற நிலைகளுடன் தொடர்ந்து வைத்து எண்ணத் தக்கது இது. அருகிப் பயிலும், இருள்நிற வஞ்சகர் (8311), இருள் நிறத்தவர் (9266) போன்ற தொடர்களே இதனைக் கரு நிறத்துடன் இணைத்து வைத்து கருதச் செய்கின்றன. மிக்க கருமை காட்டி, கன்னக் கனியும் இருள் (3203) என்பது வருவதாகத் தோன்றுகின்றன.

இருளின் கரிய நிறநிலை, கார் இருள் எனும் அடையாட்சி மூலம் புலப்படுகின்றது. (2820, 3607). இருண்ட இருண்டு என வரும் சொல் நிலையும், கருமை காட்டி வருகின்றது.

## இரும்

கருமை என்பது போலவே இருமையும் கரிய நிறம் சுட்டலாம் என்பது எண்ணம், 'இருள் என்பதன் சார்பும் இங்கு அமையலாம். 'இரு' என்பது எண்ணுப் பொருளுடன், அளவுப் பொருளையே பெரும்பாலும் சுட்டினும், கருநிறப் பொருட்களுக்கும் அடையாகி வருப்போது[49], 'கருமை' எனும் நிறப் பண்பைச் சுட்டின போலும் எனும் எண்ணம் எழுகின்றது.

'கண்ணுள் ஆடும் இரும்பாவை' (10270) எனும் ஆட்சி, கரியினை 'இருந்தில்' (2849) எனக் குறித்தல், ஆகியனவும் இவ் எண்ணத்தைத் தருகின்றன. 'இரும்பு அன மேனியர்' (2326) எனும் குறிப்பில் கரிய உலோக நிற நிலையும் குறிப்புண்டிருக்கலாம், 'மாஇரு' 'மால்இரு' போன்ற அடைநிலைகளில் (466 7111, 7375, 8428) முன் அடை அளவுப் பெருமையையும் பின்னது கருமையையும் குறிக்க வாய்ப்பு அமையலாம்.

---

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 48. | 217 | 327 | 1209 | 1844 | 1965 | 2639 | 2777 |
| | 2822 | 3939 | 4200 | 6864 | 8180 | 9164 | |
| | மி 109 | 734 | 790 | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 49. | 225 | 694 | 749 | 851 | 1297 | 1334 | 1632 |
| | 1891 | 2399 | 2694 | 2823 | 3742 | 4171 | 4732 |
| | 5238 | 5365 | 5575 | 5679 | 6016 | 6183 | 6600 |
| | 6652 | 6693 | 6757 | 7010 | 7295 | 7371 | 9531 |
| | 10119 | 10144 | 10287 | | | | |

## மணி

கரிய நிறமுடையது பற்றி இம்மணி அந்நிறம் குறிக்க, நிறப்பெயர் அடைபெற்றும், அன்றி நிறச்சொல் தொடர்ந்தும் வரலைக் கம்பன் காவியம் காட்டுகின்றது.[50]

*கருமணி கண்டத்தான் தன் சென்னியில் கறைவெண் திங்கள்*
*பருமணிவண்ணன் மார்பின் செம்மணி பறித்திட்டாலும்*
(6940)

மணி என்பது, கருமணி மட்டுமன்றி செம்மணி போன்றும் வரலாம் என்பதால் செந்நிறம் குறித்தும் வருகின்றது. ஆயின், சூழல் சார்பால், 'இராமன் மழைத்த முகில் அன்ன மணிமேனி' (6755) போன்றவற்றால், கருநிறம் கொள்ள வாய்ப்புத் தருமிடம் உள.[51]

மேற்கொண்ட பொருட்சொற்கள் தவிர, சிகை நிறச் சூலி (6115); அன்னமும் காக்கையின் உருவ (5974), அந்தியின் மேனிய ஆனை (5740), ஆலகாலம் திரண்டன்ன யாக்கையர் (2885)[52] போன்ற கரிய பொருட்களும் கருநிற ஒப்புமை சுட்ட வருவது கருதத்தக்கது.

இன்னும், மரபு பற்றி, மா (1722), மாந்தளிர் மேனி (1073) மாமை (523) என்பனவும் கருமை சுட்ட வாய்ப்பமைவது கருதலாம். மாயன் (1406), மால் (386) என்ற இறைவன் பெயர் நிலைகளும் கருமைச்சார்புடன் நினைக்கப்படலாம்.

கருமையின் நிற வேறுபாடுகளாகவே நீலம் பசுமை முதலியன வற்றைக் கவிஞர் கருதினார் எனும் எண்ணம், 'மையோ மரகதமோ மறி கடலோ மழை முகிலோ' (1926) எனக்கூறுவதில் அமைகின்றது.

---

50. 1072 1302 2328 3347 3761 6940 8101
51. 506 2033 2572 2632 3731 3786 6755 932.
52. பிற : 2920 3660 5491 5690

இராமனை, அவனது கரியமேனி நிறத்தை வைத்தே சுட்டல், பெயரிடல், வருணித்தல், உவமித்தல், உருவகித்தல் போன்றது கவிஞரின் உத்தியாகக் கருதத்தக்கன.

கருமையை, இன்னும் ஆழமாகக் கருமை செய்தல் எனும் நிற நிலை, 'காரினை கழீத்துக்கட்டி...பேர் இருட் பிழம்பு தோய்த்து (4505) என்பதில் அமைகின்றது. 'கருமை மயமா'கப் பாடல் அமைக்கும் உத்தியும் இவரிடம் உண்டு (4115, 5075).

## நீலம், நிறம்

நிறம் எனும் சொல்பெற்று பெரும்பாலும் நீல்நிறம் அல்லது நீலநிறம் என்ற பெயர் நிலையுடன் இந்நிறம் ஓரளவு மிகுதியாகப் பயில்கின்றது.[53] 'நீல வண்ணம்' ஓரிடத்தில் மட்டும் வருகின்றது. (8118)

நீல் நிறத்து விண்நெடு முகட்டவும்
வேலை புக்கவும் பெரிய வெற்பு எலாம் (3845)

நிறம் என்ற பொதுச் சொல்லை அடையாகப் பெறாது நீலம் எனத்தனித்து நின்றும் இந்நிறம் சுட்டப்படுகின்றது[54] நீலநிறமும் நீலமணியும், நீலமலரும் இச்சொல்லால் தரப்படுகின்றன. கடைக் குறையாகி, நீல் எனவும் நிற்பதனை 'நீல் உறு திசைக் கரி'(5405) என்பது காட்டுகின்றது.

நீல நிறமுடைமையால், இந்திர நீலம் எனப் பெயர் பெறும் மணிவகையின் குறிப்பிலும் நீலம் எனும் சொல்லாட்சி அமைகின்றது[55]

---

53. 413 546 1438 2693 2738 3567 3845 4090 4153 4786 5150 5047 5622 5827 5942 5960 8222 8306 9580 9780

54. 497 1222 1439 1757 2010 3162 4494 4503 4579 4989 5284 5734 7023 7433 8283 9203 9827 10307 மி 2

55. 122 536 5281 மீ 289

நீலன் எனும் குரக்கு வீரன் பெயர்[56] நிற அடிப்படையில் பொருந்தியதாகலாம். எரியின் மைந்தன் என்ற குறிப்பால், விளக்கின் நெருப்பில் காணப்படும் நீலப் பகுதியை இங்கு நினைக்கத்தக்கது.

நீல நிறமுடைய பொருட்கள் பல இந்நிறப்பெயரை அடையாகக்கொண்டு இயல்கின்றன.[57] ஆயின் மிக அருகியே இவை நீல நிறத்தினவாகக் கொள்ளும் வாய்ப்புத் தெளிகின்றது.

> நீல வான் துகிலினை நீக்கி, பூநிறக்
> கோல வான்களி நெடுங் கூரை சுற்றினாள் (6643)

நீலமணியை 'நீலக்காசு' (6856), நீலக்குலமணி (850) எனக் குறித்தல், நீல வானம் (4151) போன்ற சில நீல நிறத்தினவாகக் கொள்ள வாய்ப்புத்தருகின்றன. இன்னும் நீர், கடல், மலை போன்றனவும் இவ் அடைபெறுதலும் சிவபிரான் நீலகண்டன் (4006, 6178, மி. 326) எனக் குறிக்கப்படலும் மரபு நிலையில் ஏற்புடையனவாகலாம். ஆயின் இவையே கருநிறத்தினவாகக் கம்பனில் பிறவிடத்து ஆளப்படலால், கவிஞரால் சில சூழலில் நிறப்பெயர்கள் வேறுபாடின்றியே பயன்படுத்தப்பட்டன என்றே கொள்ள முடிகின்றது. நீலக் கார் முகில் (4017) எனவும், நீலமேனி அரக்கர் (4212) எனவும் வரும் சான்றுகளை இவண் கருதலாம்.

---

56. 205 4415 4449 4712 5343 6439 6711 6759 6821 6885 6951 7076 7086 7090 7093 7094 7103 7104 7115 7432 7455 7457 7945 7948 7949 7952 7965 8031 8055 8083 8085 8177 8229 8350 8380 8383 8460 8561 8615 10102 10115 10222 10284 மி 313 503 525 704 705 767 852 987 1074 1104 1205 1288

57. 113 455 493 793 850 920 949 1585 2061 2392 2746 2782 3970 3198 3209 3395 3477 3600 3752 3945 4006 4017 4140 4151 4212 4096 4749 5406 5875 6178 6643 6856 6901 6954 7636 7648 7974 8084 8728 8761 9664 9742 9992 10145 மி 106 326 420 921

இராமனின் உடல் வண்ணத்தை 'நீலம்' எனவும் கவிஞர் கூறும் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது, பல்வகை நீலநிற நிலைகள் பற்றிய உணர்வு கவிஞருக்கு இருந்தது புலப் படுகின்றது. நிறத்தையே உத்தியாகப் பயன் கொண்டு கவிஞர் பல்விதமாக ஆண்டு இராமனின் உடல் நிறத்தைப் புலப்படுத்த விழையும் இத்தகு சூழல்களில், நீலமும் கருமையும் நிறநிலையில் ஒன்றையொன்று அடுத்தும், நெருங்கியும், ஒருவேளை மயங்கியும் கூட அமையும் நிலை புலப்படுகின்றது. இத்தகு எண்ணம் கவிஞருக்கு முன் திவ்வியப் பிரபந்தத்தில் ஓரளவு அமைந்த போதும் அதன் உச்சத்தை இங்கே காண்கின்றோம் எனலாம்.

> கடலோ மழையோ முழுநீலக் கல்லோ காயா
> நறும் போதோ
> படர் பூங் குவளை நாள் மலரோ நீலோற்பலமோ
> பானலோ...
> மடல் சேர் தாரான் நிறம் போலும் அந்தி மாலை
> வந்ததுவே (544)

> எள் இல் பூவையும் இந்திர நீலமும்
> அள்ளல் வேலையும் அம்புத சாலமும்

விள்ளும் வீயுடைப் பானலும் மேவும் செய், வள்ளல்... (பிறபாடல்—050 1979 4198) (569)

நீலம் என்ற நிறச்சொல்லியிருந்து நீங்கிய நீல நிறப் பொருட்கள் ஒரு சில மட்டுமே இந்நிறம் குறித்து கையாளப் படுகின்றன. கருமையோடு மிக அடுத்ததாக வைக்கப் படும் 'பூவை' இவற்றுள் ஒன்று. இக்காயாம்பலின் கருநீலநிற அடிப்படையில், கவிஞர் தனிநிறநிலை நினைத்தாரோ எனவும் எண்ணலாம்.

> பூவைப்பூ வண்ணத்தான் . . . (2793)
> பூவை போல் நிறத்தினான் (396, 10230)

என்ற அடிப்படை ஒப்புமை நிலை பின்பு பூவை வண்ணத்தான் (9301), பூவை நிறவு (9463) எனும் ஆட்சிகளையும் தருவதால் இவ் எண்ணம் எழுகின்றது. ''மால்நிறம்'' என வருவதையும் (2693, 4153, 5150) உரையில் நீலநிறமாகக் குறிக்கின்றனர்.

விண், கடல், மணி என்பன இவ் அடைபெற்று நிறச் சார்பு கொள்கின்றன. திருமாலின் நிறம் என்ற நிலையில் இப்பெயர் ஆக்கப்பட்டிருக்கலாம்.

காவி எனும் சொல் பன்முறை குறிக்கப்படினும்[58] இது காவி நிறத்தையன்றி, (நீல்நிறமுடைய) குவளையின் பெயராகியே வருகின்றது.

## பசுமை நிறம்

மிக அருகியே, நிறம் வண்ணம் எனும் சொல் தொடர நிறப்பெயர் வருகின்றது.

படர்ந்து எழுந்த புல் பசுநிறக் கம்பளம் பரப்பி (2041)
பஞ்சரத் தொடு பசுநிறக் கிளிவெந்து பதைப்ப (5969)
பச்சிலை வண்ணமும் பவள வாயும் ஆய . . . (10008)

பசுமை (4173) எனும் சொல்லாட்சி அருகிவர, பச்சை இன்னும் மிகுந்த இடங்களில் அமைகின்றது.[59] இப்பெயர் அடையாகி வரும் சொல்நிலையே மிகுந்து காணப்படுகின்றது.

பண்புப்பெயர் விகாரப்பாட்டிற்கேற்ப, பல சொல்நிலைகள் அமைகின்றன.

(அ) பச்[60]—பச்சிலை (24)
(ஆ) பசு(ம்)[61]—கழல் இளம் பசுங்காய் அன்ன (8201)

---

58. 301 459 1050 1849 3158 4299 4560 5047 10272
59. 44 337 1152 3197 5903 9152 மி 1280
60. 24 4482 5275 5781 6098
61. (பொன்) 39 116 127 1581 3475 4849 4933 5479 6200 6632 8605 8822 9669 10332
(பிற) 38 66 494 630 782 850 951 967 1048 1804 1811 1936 2048 2063 2927 3165 3228 3294 4011 4829 4864 4890 4970 5042 5044 5159 5793 6277 6690 6764 7077 7629 7659 7814 7959 7961 8165 8201 8362 9319 9408 9660 9669 9809 9997 மி168 388

(இ) பைம்[62] — ஒளி விரி செவ்வாய் பைங்கிளி (2003)

(ஈ) பாச[63]—பாசிலை துன்றுவனம் பல...(3573)

## நிற அடிப்படைப் பெயர்கள்

இப்பசுமை நிறம் பற்றியும், இந்நிறப் பெயரின் பிற பல பொருள்கள் தொடர்பாகவும் போலும், சில பொருட்கள் பசுமைத் தொடர்புடைய பெயர்கள் பெறுகின்றன. பாசி (4787, 7936, 858[illegible]) எனும் பொருட்பெயர் இந்நிலையில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிற்கின்றது. பாசறை (7017), மி 684), பசலை (1075, 1845, 4264), பசு (9566) போன்றன இன்னும் எண்ணற்குரியன. (பசலையைப் பிறவிடத்துக் கவிஞர் பொன் நிறத்ததாகக் கருதுவதும், 'ஆநிறக் கண்ணன்' என்ற பெயரும் இங்கு இணைவுடன் நினைக்கத்தக்கன).

## நிறப்பொருள்

மரகதம் எனும் பசுமை நிறமுடைய மணி வருணனையாகவும், உவமையாகவும், பிறநிலையிலும் பயில்வது, இயைபு பற்றி இங்குக் கருதத்தக்கது.[64]

---

62. (பொன்) 240 319 392 917 1223 3071 2927 3228 7445 6698 6849 7912 8416 8566 10104 10296 மி 1247

(பிற) 500 518 614 626 635 1051 1052 1055 1237 1582 1758 1778 1848 2003 2127 4052 4091 4249 4495 4691 4752 5216 5520 5554 5726 5816 5964 6004 6473 6937 7024 7[illegible]81 7689 7963 8066 8067 8392 9267 9306 9997 10069 10119 10291 10340 10351 10356 மி 157 226 507 1102

63. 218 710 729 895 1090 3573 3716 4219 4257 5967 9604 10302

64. 190 488 532 800 1186 2018 2065 2194 2390 2845 3105 3802 4626 4848 5273 5845 6765 6840 6845 7255 10142 10325 10334 மி 280

மாசு அடை பரந்த மான மரகதத் தலத்து வைத்த
காசு அடை சமைந்த மாடம் கதிர் நிறக் கற்றை சுற்ற
ஆசு அறக் குயின்ற வெள்ளி அகல் மனை அன்னம் ஆக
பாசடைப் பொய்கை பூத்த பங்கயம் நிகர்ப்ப
பாராய் (6845)

எனவும், இராமனைக் குறிக்க 'மரகத மேனிச் செங்கண்
வள்ளல் (10142)

எனவும் வரும் தொடர்ச் சூழல்கள் இதனைக்
தெற்றென விளக்கும்

இங்கு அமையும், 'கதிர்நிறம்' என்ற அடைநிலையும் பசுமை நிறச் சார்பு புலப்படுத்தலாம், 'சாலி வண் கதிர் நிகர் புரவித் தானை' (8336) என்று குறிப்பும் இங்கு நினைக்கத்தக்கன.

## பிற பொருண்

பசுமை எனும் சொல் அதன் பல்வகை வடிவங்களில் வரும் போது, பச்சை நிறம் தவிரப் பிற பொருண்மை குறித்து வருவதே மிகுதியாகக் காணப்படுகின்றது எனலாம்.

| | | |
|---|---|---|
| (அ) | குளிர்ந்த தன்மை | பகலவன் பசுமை கூர (4173) |
| (ஆ) | ஈரம் | பச்சிரத்தம் (5781) |
| (இ) | சிறப்பு | பசுந்தேறல் (66) |
| (ஈ) | இனிமை | சிந்துரப் பவளச் செவ்வாய்த்<br>தேம்பசும்பாகு தீற்றி (9997) |
| (உ) | புதியது | மாதர்,<br>பஞ்சி அம் கமலம் பூத்த<br>பசுஞ்சுவடு உடைத்து மன்றோ<br>(850) |
| (ஊ) | இளமை | பசுங்குழவி (1811) |
| (எ) | செழுமை | பசும் புகைப்படலம் (2053) |
| (ஏ) | மென்மை | அழிபடு பசுங்காற்று (5042) |
| (ஐ) | செவ்வி | பசும் புலால் படிப்பு (5793) |
| (ஒ) | அழகு | பைந்தொடி (513) |
| (ஓ) | உயர்வு | பைங்குரிசில் (1052) |

(ஔ) நுண்மை பைந்துணர் (1773)

(ஃ) நன்மை (நல்ல) பாகிழை மடைந்தையர் (218)

இத்தகு பல்பொருள், அதாவது நிறமன்றி வரும் பல்பொருள் நிலை, பிற எந்த நிறப்பெயருக்கும் அமைவதாகப் புலப்படவில்லை. இப் பிறபொருள் நிலை பற்றியே, பிற சில நிறப் பெயர் அடைகளைச் சார்ந்து பிறிதொரு அடையாக இது பொருந்துகின்றது. பசுமை என்பது நிறப்பொருள் தொடர்பு இன்றியும், மற்ற நிற அடை, நிறப்பொருள் சார்ந்தும் இவற்றில் அமைகின்றன.

பசு வெண் திங்கள் (6764)

சிந்துரச் செம் பசுங் குருதி (7629)

போன்றன சான்றாகின்றன. கருமை, வெண்மை எனும் பெயர்களும் இவ்வாறு ஈரடையாகி இணைந்து, ஒன்று நிறத்தையும் பிறிதொன்று இனத்தையும் சுட்டி வருவதும் ஒப்புமை பற்றி இங்கு நினைக்கத்தக்கது.

கொம்பு பல்லொடு கரிய வெள்ளாட்டு இளங்குருதி (8603)

## புகை நிறம்

இதனைத் தனி நிறமாகக் கருதும் வாய்ப்பு கம்பனில் அமைகின்றது. இதனைக் கருமையோடு தொடர்புடையதாகவும் கருதலாம். அன்றி, கருமைக்கும் வெண்மைக்கும் இடைப்பட்டதாகவும் கொள்ளலாம். அன்றி மிக இளநீலம் சார்ந்த வெண்மை நிலையுடனும் கருதத்தக்கது.

அரக்கர் தலைவருள் ஒருவன் பெயர் நிலையிலும் பிறவிடத்தும் இது நிறப் பொதுச் சொல் ஆட்சியுடன் அமைகின்றது.[65]

சிகை நிறக் கனல் பொழி தெறுகண் செக்கரான்
பகை நிறத்தவர் உயிர் பருகும் பண்பினான்

---

65. 6115 8332 9642

நகை நிறப் பெருங்கடை வாயை நக்குவான்

புகைநிறக் கண்ணன் பொலம் பொன் தேரினான் (8332)

நிறம் எனும் சொல்லின்றியும், புகை, தூமம் எனும் சொல் கண்ணுக்கு அடையாகி வருவது இந் நிறப்பற்றி எனலாம்.[66] தூமமேனி அசுணம் (4460), என்பது புகை போன்ற உடல்நிறம் என உரையில் விளக்கப்படுதலும், தூமகேது (1427)வைப் புகைக் கொடி என விளக்குவதும் இங்கே நினைக்கப்படலாம்.

## செம்மை

கருமைக்கு அடுத்ததாக மிக்குப் பயிலும் நிறமாக அமைவது செம்மை. பசுமைக்கு அடுத்ததாக, நிறம் தவிரப் பிற பல பொருண்மையில் ஆளப்படுவதும் இச்செம்மையே

நிறம் : நிறப்பொதுச் சொற்களுள் நிறம், கேழ்நிறம் கேழ் என்பன, இந்நிறப் பெயருடன் வருகின்றன.[67]

பவளமும் கிடையும் கொவ்வைப் பழனும் பைங்குமுதப்
போதும்

துவளவு இல இலவம் கோபம் முருக்கு என்று இத்
தொடக்கம் சாலத்

தவளம் என்று உரைக்கும் வண்ணம் சிவந்து தேன்
ததும்பும் ஆயின்

குவளை உண் கண்ணி வண்ண வாய் அது குறியும்
அஃதே (4495)

எனச் செம்மையின் பல இள — முதிர் நிறங்கள் உணர்த்தும் வண்ணம் செந்நிறமுடைப் பொருட்கள் பலவும் ஆளப்படு கின்றன,

(அ) இந்நிறப்பெயர், " செம்மை " எனும் அடிப்படை வடிவவிலும் பயில்கின்றது[68]

---

66. 5166 6559 8026 8303 8350 8369
67. செந்நிறம் — 7046 8979 469
செங்கேழ் நிறப் —961
செங்கேழ் —693 842 1126 1253 3163 4566 4947 5014 5019 5279 7926 7926 9169 9168
68. 223 984 1056 1125 1321 1336 1397 1866 2219 2421 2484 2509 4013 4326 5298 5323 5392 64 3 6633 7726 7730 9028 9108 9483 9907 மி622

மொய் கொள் சீரடியைச் சேர்ந்த முளரிக்கும்
செம்மை ஈந்த...(1125)

(ஆ) சிவப்பு எனும் பெயர்நிலை ஆட்சியும் காணப் படுகின்றது.[69]

சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்...(1342)

இதன் பிற வடிவ நிலைகளான, (இ) சிவந்து (ஈ) சேந்து, (உ) சேப்பு என்பனவும் காணப்படுகின்றன.[70]

(ஊ) செய்ய[71] எனும் நிலை அமைவதுடன், திருமகள் செம்மை நிறம் பற்றிச் செய்யவள்[72] எனப்படுதலும் கதிரவன் செய்யோன் (9095) எனப்படுதலும் அமைகின்றன.

செம்மை எனும் பண்புப் பெயர், பெறும் மாற்றங்களுடைய வடிவங்கள் கம்பனிலும் காணபபடுகின்றன.

---

69. 141 496 938 947 982 993 1342 1469 1699 4096 5028 5761 மி 325

70. (1) எழுகதிரவனும் நாணச் சிவந்தனன் இருகண் (605)
265 630 747 911 951 995 1125 1535 1811 2409 2961 3104 3594 3853 4496 4945 5183 6487 6591 6595 6897 6935 7546 8641 8825 9006 மி 382 333 561 723 774 777

(2) கடிகமழ் கமலத்தின் சேந்து ஒளி விரியும்

26 499 2464 2452 2458 3091 3104 5426

(3) நெடுங்குவளை வாட்கள் சேப்புற (8833)
8628 10226

71. 123 213 472 483 931 1130 1675 1575 1673 1950 1977 2956 3136 3314 3524 3544 3765 3853 4071 4115 4365 4479 5178 6486 7230 7286 8883 9398 9432 9448 10103 10276 10321 10367 மி 4 115 140 190 529

72. 37 480 1669 5720 மி 1082

(ஏ) செம்[73] — பஞ்சிவான்மதியை ஊட்டியது அனைய
படர் உகிர் பங்கயச் செங்கால்.. (102)

---

73. 33 53 57 65 89 98 102 105 161 163 168 197
225 236 240 243 342 375 384 408 456 466 492
503 509 515 558 615 629 670 687 739 784 791
796 797 804 845 846 851 878 888 894 908 921
922 941 957 976 980 1029 1041 1057 1092 1094
1117 1127 1131 1180 1195 1236 1238 1270 1425
1449 1559 1595 1595 1598 1602 1608 1710 1715
1766 1797 1337 1841 1850 1889 1915 1933 1941
1956 1972 2020 2029 2032 2048 2055 2070 2071
2152 2217 2230 2335 2340 2360 2361 2384 2389
2440 2469 2504 2514 2522 2531 2558 2588 2595
2596 2612 2671 2688 2702 2740 2762 2771 2807
2824 2846 2974 2999 3027 3044 3056 3072 3083
3087 3109 3130 3134 3141 3175 3176 3178 3232
3248 3286 3394 3516 3518 3526 3535 3538 3570
3641 3709 3737 3762 3764 3770 3777 3780 3843
3859 3902 3909 3987 3999 3997 4071 4086 4087
4095 4177 4244 4289 4345 4367 4387 4406 4466
4489 4493 4498 4520 4534 4536 4537 4539 4575

---

4604 4611 4619 4624 4639 4543 4686 4687 4701
4720 4780 4784 4802 4814 4837 4349 4852 4853
4865 4870 4884 4895 4904 4921 4924 4926 5009
5052 5088 5089 5093 5110 5171 5194 5308 5310
5316 5376 5378 5461 5463 5553 5560 5563 5639
5648 5675 5680 5696 5710 5732 5755 5762 5844
5871 5878 5885 5890 5945 5998 6075 6230 6321
6322 6326 6352 6491 6499 6508 6509 6527 6529
6550 6563 6655 6657 6687 6702 6708 6843 6859
6862 6865 6886 6898 6912 6914 6915 6944 6971
7036 7043 7066 7067 7091 7095 7131 7139 7151
7171 7187 7226 7259 7277 7282 7285 7296 7331
7336 7346 7370 7488 7514 7414 7527 7629 7598
7632 7654 7684 7695 7717 7742 7767 7763 7865
8011 8036 8067 8107 8116 8118 8166 8173 8175
8199 8203 8297 8217 8248 8264 8317 8359 8374

(ஏ, சே[74] — சில்லரக்குணட் சேவடிப்போது (1826) இது சேய எனவும் வரலாம் எனும் எண்ணம், சேயவள், சேயவன் போன்ற ஆட்சிகளில் புலப்படுகின்றது.[75]

மிகச்சிவந்த நிறம், வழக்கில் செக்கச் சிவந்த என ஆளப்படல் கம்பனில் 'செஞ்செவ் வேலவர்' (4192) என்பதில் அமைகின்றது. செம்மை அடை இரட்டி வந்தநிலையாக இது காணப்படுகின்றது 'செய்ய செங்கை' (4071).

## நிறப் பொருட்கள்

சில செந்நிறப் பொருட்கள், நிறம் எனும் சொல்லுக்கு அடையாகிச் செந்நிறம் உணர்த்தி அமைகின்றன. இந் நிறப் பொதுச் சொல் இன்றியும், செந்நிறப் பொருட்கள் உவமை போன்றவற்றில் அமைவதும் கருதப்படல் ஏற்புடையது. செம்மை நிற அடிப்படையில் தோன்றிய சில சொற்கள், செந்நிறப் பொருட்களுக்குப் பெயராய் அமைவதும் கருதத்தக்கது.

---

8431 8439 8452 8456 8479 8494 8498 8506 8555 8624 8712 8727 8804 8805 8965 8969 8975 8980 9045 9071 9076 9110 9116 9141 9149 9213 9242 9243 9258 9379 9410 9494 9515 9527 9586 9587 9589 9596 9598 9634 9706 9755 9835 9943 10005 10112 10121 10162 10217 10238 10276 10293 10309 10331 10367 மி 12 20 21 27 59 86 216 224 241 307 354 410 443 450 471 476 531 581 585 618 667 674 699 716 747 782 794 921 865 905 925 962 976 1112 1176 1215 1129 1255 1257 1278 1279.

74. 175 692 1310 1553 1702 1826 2336 2614 2658 3034 3183 3303 3370 3527 3638 3669 3733 3737 4124 4304 4365 4394 4590 4700 4803 5190 5249 5250 5266 5480 5629 5824 5858 6271 6319 6514 7121 7126 8356 862 10033 10266 10278 10300 மி 219

75. சேயோய் - 2769; சேயவள் - 6823 மி 77; சேயவன் - 6316 சேயோன் - 9825 10152

## நிறச்சொல் தொடர்வன

(அ) நெருப்பு[76] — தீ நிறந்து அந்தி வந்து இறுத்தது (6517)

(ஆ) அந்தி[77] — அந்தி வண்ணனும் அம்பின் அகற்றினான் (இலக்குவன்) (8136)

(இ) செக்கு[78] — செக்கர் நிறந்து எரி குஞ்சி (663)

(ஈ) (செவ்) ஒளி — உலகு ஏழும் தொட்டுப் பேரும் சோதி நிறந்தாள் (4910)

(உ) (செங்) கை — உன் கை வணத்த வாய்க் கிள்ளை (2079)

(ஊ) (செங்)கண் — குவளை நாட்டம் கொழுநர் கண்வண்ணம் கொள்ள (4942)

(எ) (செம்)மணி[79] — வயின்வயின்தொறும் மணிநிறக் கோபங்கள் மலர்ந்த (2043)

(ஏ) துவர் — கடித்தவராயினர், துவர்நிறப் பங்கியர் (439)

(ஐ) பூ[80] — பூவும் பூநிற அயினியும் தீபமும் (5796)

(ஒ) தசை[81] — சூட்டுடைத் துணை தூநிற வாரணம் (58)

## பொருட்கள்

இவை தனித்து வரும் பெரும்பான்மை அமையினும், சில சூழலில் செந்நிறப்பெயர் அடுத்தும் வருவது உண்டு. மேற் சுட்டிய பட்டியலின் சில பொருட்களும், இவற்றுள் அடங்காத செந்நிறப் பொருட்களும் இங்கு அமைகின்றன. ஏற்கனவே

---

76. 2915 3432 3495 6172 6517 7134 மி 144 730
77. 8136 8160
78. 663 3312
79. 979 2043 2072 3285 5965
80. 5796 6211 10297
81. 58 4959 6380

நினைந்த வண்ணம், ஒன்றனைப் (செம்மை) பல்வேறு விதமாகக் கூறும் கவிஞனின் ஆற்றல் நிலையும் நிறத்தின் ஆழ் இள நிறைகளை உணர்ந்த நிறப் பெயரை அன்றிப் பொருளை ஆளும் கவிஞனின் உத்தி நிலையும் இவற்றில் வெளிப்படுகின்றன.

(அ) நெருப்பு:[82] தீ நிகர் தொழில் ஆடைத் திரை (2016)

(ஆ) செக்கர்:[83] பம்பு செக்கர் எரி ஒக்கும் மயிர் பக்கம் எரிய (2523). செய்மை எனும் நிறப்பெயர் அடிப்படையில் போலும் செந்நிற அந்திவான் இச் சொல்லால் குறிக்கப்படுகின்றது.

(இ) செம்பு:[84] நெருப்பின் உருக்கு செம்பு என அம்பரந்து ஓடின உதிரம் (9537)

இச் சொல்லாக்கமும் செம்மை நிறப்பெயர் அடிப்படையினது ஆகலாம்.

(ஈ) சிந்துரம்[85]: திசை ஆளும் பதிகரியைச் சிந்துரம்
அப்பிய போல் சிவந்த மாதோ (630)

இதுவும் செம்மைப்பெயர் அடிப்படையினதாகலாம். 'சிந்துரப் பவளச்செவ்வாய்' (3306) என நிறப் பெயருடன் அடையடுக்கலும் காணப்படுகின்றது. குங்குமம் (852, 8811) பற்றிய குறிப்பும் இங்கு எண்ணத்தக்கது.

(ஈ-1) சிந்து: செவ்வரி படர்தல், 'சிந்து ஓடு அரி ஒண்கண்' (3982) எனத் தரப்படுவதுடன், நொச்சி மரம் 'சிந்து வாரத்தரு' (4288) எனவும், செந்நிற ஆடையும் மணியும் சிந்துராகம்(4523, 5847) எனவும் குறிப் படுதலும் இவ் ஆட்சியை நிறச்சார்புடன் கொள்ளச் செய்கின்றன.

---

82. எரி – 854 3117 3128 5708 9193; தழல் 147;
தீ – 2016 7621

83. 391 542 855 879 1141 2084 2524 2528 2802 2875 4096 7559 7617 9180 324

84. 3019 4238 5159 6313 7536 7992 8354 9613 9496 9537 9197

85. 630 2976 3037 3306 3408 4972 5051 6562 6686 6997 7276 8496 10285 மி 13 766

செந்நிறக் காவிக்கற்கள், தாதுராகம் (856, 7567) எனக் குறிக்கப்படலும் இங்குச் சுட்டத்தக்கது.

(உ) அரக்கு[86]: ஊட்டு அரக்கு அனைய செங்கண் நெருப்பு உக...(9627)

(ஊ) அரத்தம்[87]: அண்ணல் அவ் இராவணன் அரத்த ஆடையன் (5108)

இரத்தத்தின் சிவப்பு நிறம் பற்றி, இச் செம்மைப் பெயர் நிலை ஆக்கப்பட்டிருக்கலாம்.

(ஊ1) இரத்தம்—ஏவுண்டு துளக்கம் எய்தா இரத்தகப் பரிதி ஈன்ற...(8422)

(ஊ2) குருதி[88] — குருதியின் கண்ணன். (8441)

சோணிதக் கண்ணன் (8409) எனக் குருநிறக் கண்ணன் குறிக்கப்படுவதும் இங்கு நினைக்கத்தக்கது.

(எ) துவர்[89] : துவர் இதழ்ப் பவள வாய் (863)

(ஏ) துப்பு[90] : துப்பு உறச் சிவந்த வாய் (6388)

(ஐ) பவளம்[91]: பண்நிறை பவளச் செவ்வாய் (7281)

(ஒ) மணி: கற்பினாள் மணிவாய் என்ன...கொடிப்பவளம் (6065)

(ஓ) இலவு: இலவுஇதழ் துவள் விட...(985)

(ஔ) இந்திரகோபம்[92]: இலவும் இந்திரகோபமும் புரை இதழ் (2070)

---

86. 554 3424 5668 6365 9627
87. 768 1067 1366 1782 2896 3230 3833 5108 6869
88. 7824 7825 8441
89. 863 3400 3525 3897 4261 4582 8831
90. 2024 2576 2752 3242 3602 6388 9433 9965 9998 10215
91. 862 1021 1562 2283 3306 3343 4867 6858 7281 7638 7683 8836 10338 மி 449 1102 1166
92. 821 2070

(ஃ) வீழி[93]: வீழியின் கனி இதழ்...(6866)

(க) குமுதம்[94]: சுந்தரக் குமுதச் செவ்வாய்...(7647)

(ங) முருக்கு[95]: முருக்கு இதழ் மடந்தையர்...(220)

(ச) கொவ்வை : கொவ்வை வாய்ந் தீதில் தெய்வ...(2337)

(ஞ) தொண்டை[96]: தொண்டை அம் கனி இதழ்...(3720)

(ட) செம்பஞ்சு[97] : நொந்திலர், அலத்தகச் சீறடி அபர்ந்தார் (8364)

(ண) செந்தாமரை[98]: புண்டரீகக் கண் புரவலன்...(1263)

(த) குன்றி: கண் குன்றி நிகர்ப்பன்...(3589)

பெரும்பாலும் செம்மை, குருதியோடும் சில உடலுறுப்போடும், ஐம்பூதத்துள் ஒன்றான் நெருப்போடும் ஒட்டி வருவது நினைக்கந் தக்கது.

செந்நிற மேனியனான—சிவன் சிவந்தவன் எனப் பொருள் படும் அடிப்படையில் பெயர் நிலையும் கொண்டமைவதாகக் கருதமுடிகிறது (7743, 9272).

பிற பொருண்மை

செம்மை எனும் சொல், சிறப்பு, உயர்வு நேர்மை போன்ற பொருண்மைகளை உடையது. அரசனுக்கும் அவனைச் சார்ந்த வற்றிற்கும் செம்மை அடையாகும்போது, ராஜச குணத்தின் நிறமாகச் செம்மை குறிக்கப்படுவது இணைத்து நினைக்கந் தக்கது.

---

93. 6866 9738 8116
94. ஆம்பல் - 9972; குமுதம் 4615 7647 0339
95. 220 233 787 4371 7493
96. 927 933 1747 3 20 5458 5488 7718
97. 997 1060 1072 1331 1945 2797
98. நளினம் - 2747; கஞ்சம் – 4363 10090; புண்டரீகம் – 1263 3473 3496 3782; முளரி – 7256 10135; தாமரை - 727 1245 1985 2499 2565 2615 2724 2891 3341 4093 4316; கமலம் - 207 2087 2889 3733 4346 10150

(அ) செவ்வை — செஞ்சிலை (499)
(ஆ) சுத்தம் — செந்தயிர்க் கண்டம் (53)
(இ) நேர்மை — செய்ய சிந்தை (6489)
(ஈ) தன்மை — அமுதின் செம்மையாள் (7726)
(உ) ஒழுக்கம் — செம்மை இல் அரக்கர் (6423)
(ஊ) மாறின்மை — செவ்வழி (5327)
(எ) மேன்மை — செம்மை சேர் உள்ளம் (4326)
(ஏ) பெருமை — இராமன் எனும் செம்மைசேர் நாமம் (4013)
(ஐ) அழகு — செங்கயல் அனைய நாட்டம் (851)

இத்தகு சில பொருள் நிலை அடிப்படையில் போலும் சிறந்தவன் எனப் பொருட்பட்டுச் செம்மல் எனும் சொல்லும், செப்பம் எனப் பொருள் தோன்ற செவ்வி எனும் கிளவியும், நேராக—எளிதாக—முழுவதும் எனப்பொருள் தரச் செஞ்செவே எனும் சொல்லும் பிறவும் ஆளப்படுகின்றன.

## வெண்மை

இது எல்லா நிறத்தையும் அடக்கியதாகக் கருதப்படுவதுடன் நிறமற்ற நிலையாகவும் கொள்ளப்படுவதுண்டு. கருமை,செம்மை ஆகியவற்றிற்குப் பயிற்சி நிலையில் அடுத்து அமையினும், பயில்விடம் அந்நிறப் பெயரின் சுமார் ஐம்பது விழுக்காட்டளவு மட்டும் காணப்படுகின்றது.

## நிறம்

நிறப்பொதுச் சொற்கள் சில வெண்மையைத் தொடர்ந்து வந்து, இதனைக் கவிஞர் நிறம் எனக் கருதியதைப் புலப்படுத்து கின்றன. வெண்நிறப் பொருள்களும், இந்நிறத் தன்மைகளும் கூட நிறச்சொல் தொடர்வதில் இந்நிறம் உணர்த்தி அமை கின்றன.

(அ) வெண்மை[99] — தன் நிறப்பவளவாய் இழைத்தாற்பொறி

99. 704 962 1221 1429 1943 1984 2592 3428 4188 4953 6395 6521 6292 8859

வெண்நிற முத்தினால் அதுக்கி
விம்மினான் (6395)

(ஆ) வெள்ளை — வெள்ளநிற நிலாக்கற்றை (973)
வெள்ளைவண்ணனை விடம் (625)

(இ) வெள்ளிவெண் — வெள்ளிவெண்நிறப் பாற்கடல் (1944)

(ஈ) வெள்ளி — வெள்ளி வண்ண நுரைக்கலவை

(உ) வால்[100] — வால் நிற வெள்ளம் (1949)

(ஊ) பால்[101] — பால்நிறப் புரவி அன்னப் புள் என (792)

(எ) தயிர் — தயிர்நிறத்து உறுகள் (5024)

(ஏ) முத்து[102] — வெண்முத்தின் நிறத்த
அரிசி (68)

(ஐ) பிறை — பிறை நிறத்து எயிறு (6906)

(ஒ) தூ — தூநிற முத்து (6085)

(ஓ) ஒண்மை — ஒண்நிறக் கழல் சேவடி (4379)

(ஔ) ஒளி — ஒளிநிறம் விளங்க (6763)

(ஃ) மின்[103] — மின்நிறம் நாணி (4511)

(க) மால் — கவரிமால் நிற... (2050)

நிறப்பெயர் தனித்து வந்து இவ் வெண்நிறத்தைக் குறிக்குமிடத்து, வெண்மை அருகியும் வெள்ளை சிறிது பெருகியும் அமைகின்றது.[104] பொருளுக்கு அடையாகி வரும்போது வெண், வெள் என்பது பயில்கின்றது.[105] வெள்ளை என்பதன், வெள்ள (457, 1501, மி338); வெளுத்த (4252, 5932, 6629) எனும் வடிவமும் காணப்படுகிறது இன்னும் பிற சொற்களும் வெண்நிறப்பொருள் சுட்டி வருகின்றன.

---

100. 1949 2052 4554 6852
101. 799 2306 3163 4485 5148 5622 6852
8608 10292 மி 281
102. 68 239 10174
103. 3781 5105 5152 5295
104. வெண்மை - 84, 4880 வெள்ளை - 801 965 957
6340 9422 மி 1232
105. 18 43 59 129 62 275 288 375 463 507
549 550 553 557 623 702 743 758 796

(அ) வால்[106] — வாள் ஒத்து ஒளிர் வால் எயிறு (4804) வான் என்றும் இதன் வடிவம் காணப்படுகின்றது.

(ஆ) வாள்[107] — தாமரை மலர் முகத் தவள வாள் நகை ..(226)

ஒளியுடைமை பற்றிய அடை நிலை இதற்கு அமையினும், வெள் என்பதுடன் தொடர்புறும் வண்ணம் வாள் என அமைவதாலும் நிலவு, பல் போன்றவற்றிற்கு அடையாததாலும் கொள்ளப் படுகின்றது.

---

108 830 846 884 885 911 928 975 1029 1037 1042 1107 1114 1117 1199 1224 1273 1299 1316 1383 1388 1442 1451 1554 1566 1606 1749 1889 1832 2182 2274 2396 2436 2535 2538 2593 2596 2994 3048 3058 3546 3651 3656 3942 3953 3993 4313 4319 4370 4390 4429 4502 4535 4633 4648 4748 4787 4789 4888 4889 4890 4893 4953 4997 5043 5045 5046 5151 5153 5220 5278 5279 5332 5440 5460 5495 5593 5607 5607 5649 5782 5842 5847 5963 6170 6285 6286 6379 6392 6393 6497 6640 6765 6867 7030 7095 7160 7226 7258 7492 7501 7524 7525 7590 7617 7639 7749 7802 7832 7833 7911 8325 8352 8353 8353 8366 8552 8584 8823 8890 8962 8969 9051 9235 9379 9421 9426 9590 9595 9596 9603 9647 9732 9781 9824 9840 9879 9940 10295 10296 10317 10327 10335 மி 8 122 246 473 598 754 1024 1103 1145 1255 வெண்ணெய் - 11 552 394 3151 6682 8264 8319 10327 மி 17 28 113

106. 89 160 492 698 749 1548 2949 3225 4224 4803 8334

107. 226 622 712 715 1540 2108 2126 2752 2787 2812 2939 3369 3425 3835 4206 5029 5114 5914 7821 9284

(இ) வெள்ளி[108]— வெள்ளிவெண் படாம் (3874)
வெள்ளி வால் வளை வீசிய (4637)

என பிற வெண்பெயரிணைவுடனும் அன்றியும் இது வருகின்றது. ஒளியுடைய வெண்மை இவ்வாறு சிறிது சொல் வேறுபாட்டுடன் குறிக்கப்பட்டிருக்கலாம் (1196). வெள்ளிய[109] எனும் வடிவங்களிலும் இது அமைகின்றது.

(ஈ) தூ — தூ நிலாக் கடித்த வாள் எயிறு (983)

எனவும் இது அமைவது தூய(6002) வெண்மையின் தூய்மை அடிப்படையையும், குறியீட்டையும் நினைக்கத் தூண்டுகிறது.

(உ) தவளம் — திருவின் நீங்கிய தாமரை ஒத்தன
தவள மாடமே (1802)

## நிறப் பொருட்கள்

வெண்மை நிறத்தையும் வெண்மை குறிப்பிடும் பண்பையும் அடிப்படையாக்கி, 'வெள்' எனும் சொல் தொடர்புடன் சில பொருட்கள் அமைகின்றன. அவை இயைபுபற்றி இங்கு நினைக்கத்தக்கன. (அ) வெள்ளடை எனவும் வெள்ளிலை எனவும் குறிக்கப்படல் இவற்றுள் ஒன்று[110] 'நிறமற்ற வெண்மை' யின் 'வெறுமை' நிலையில் இது அமைந்திருக்கலாம். (ஆ) எதுவுமற்றதாகத் தோன்றும் பரப்பிற்கு வெளி எனவும் வெள்ளிடை

---

108. 15 49 112 120 312 417 421 425 658
1229 2085 2347 2532 3082 3175 3401
3431 3816 3874 4287 4499 4637 4673
5046 5481 5602 5842 5884 5941 5974
6094 6095 6568 6630 7155 7201 7225
7503 9260 10328 மி 97 261 384 583
749

109. 490 2795 4493 46 9 4872 5277 9242

110. வெள்ளிலை — 861 மி 1241 2230
வெள்ளடை — 4176 5147

(வெளியிடை) எனவும் பெயர் அமைவதும் இங்கு நினைக்கத் தக்கது[111]. இங்கும், எதுவும் அற்ற நிலை என்பதாலோ அன்றி பிற பூதங்களை நோக்க வெண்ணிறத் தோற்றத்தினதாக அமைதல் என்பதாலோ பெயர் பொருந்தியிருக்கலாம். (இ) வெள்ளம் எனும் சொல்லும் இயைபு பற்றி இங்கு நினைக்கத் தக்கது. நீர் எனும் பொருளிலும் பேரெண் குறியாகவும் இது மிக்குப் பயில்கின்றது. வெண்நிறக் கங்கை (1943), வால் நிற வெள்ளம் (1949), வெண்திரை (1037), வெண்மழை (1442), வெள் அருவி (4789), வெண்புனல் (5460) எனும் ஆட்சிகளின் இயைபும் இவ் எண்ணத்தைத் தருகின்றன. வெள்ளநீர் (5217) போன்ற இணை ஆட்சியும் நினைக்கத்தக்கது.

இவ்வாறு நிற அடிப்படைச் சொல்லாக வன்றியும் சில வெண்நிறப் பொருட்கள் ஆளப்படுகின்றன.[112] இவை, நிறம் சுட்டியும் நிற அடைபெற்றும், நிற உவமையாகவும் வரலாம். பளிங்கு, 'வெண்பளிங்கு' (902) எனக் குறிக்கப்படுகின்றது; இதனை ஒத்து வெண்ணிறமான அல்லது நிறமற்ற நிலையில் படிகம் அமைகின்றது. நரை, நாரை, பாண்டு, சுதை என்பனவும் இந்நிலையின. இன்னும் சில வெண்நிறப்பொருள்களும் சிறிது பயிற்சி காட்டுகின்றன.[113]

---

111. வெளி — 2494 364 3705 4896 4896 4898 4900 5591 மி 1272
வெள்ளிடை — 1080 3634 4542 5040 5508 5927 6617 7167 8067 9320 9840

112. பளிங்கு — 68 710 864 902 966 4368 4606 4787 4941 4988 5015 6706 6851 6955 9502 10321; படிகம் — 860 3727; நரை - 640 1947 2855 4636 மி 189; பாண்டு — 4466 4617; சுதை — 654 828 6898 மி 268

113. பால் - 702 742 1558 2355 8325 9113 10036 மின் - 5339 6284; நுரை - 828 1947 7344 முத்து - 1832 5325 8835 9995; சங்கு - 797 1531 1848 1853; பனி - 2710 8051

(அ) பால் — திரண்டனைய மெய்ய (2355)

(ஆ) மின் — மின்னைக் கொல்லும் வெயில்தின் எயிறு (6284)

(இ) தயிர் — தயிர் உக்கன முழுமுளைகள் (7344)

(ஈ) நுரை — கடல் நுரைத்துகில் (7190)

(உ) முல்லை
(ஊ) முத்து } முல்லையும் கடல் முத்தும் எதிர்ப்பினும் வெல்லும வெண் நகையாய் (1832)

(எ) சங்கு — சங்கு உறை கழித்த அன்னசாமரை (797)

(ஏ) பனி — பனிவென்ற பதாகை (8051)

(ஐ) பாளை — பாளை விரி ஒத்து உலவு சாமரை (829)

(ஒ) நிலவு — முத்தினும் நிலவினும் முறுவல்...(5325)

(ஓ) முருந்து — முல்லையும் முருந்தும் முத்தும் முறுவல...(4497)

## நிற நிலைகள்

வெண்மையிலும் பல நிறநிலைகள் அமையலாம் எனும் எண்ணம் மேற்கண்ட சொல்—பொருள் நிலையால் உணரக் கூடியதே. வெண்மை, எளிய இயல்பான நிறமாகவும், வெள்ளி அதனுடன் பளபளப்பும் இணைந்ததாகவும், பளிங்கு, வெண்மை தோன்றாத நிற மற்ற நிலையாகி அல்லது மிகமென்மையான வெண்ணிலை கொண்டதாகவும் கருதத்தக்கது.

பொன்னின் முத்தின் புனை மென் தூசின்
மின்னின மணியினின் பளிங்கின் வெள்ளியின்
பின்னின, விசும்பினும் பெரிய பெட்புறத்
துன்னின கவிகை வெண் கவிகை சுற்றின (4390)

## பிறபொருண்மை

இதன் பிறபொருண்மைகள், வெறுமை எனும் அடிப்படைச் சார்புடன் அமைவதாகத் தெரிகின்றது.

(அ) அறிவின்மை — வெண்மை இல்லை (84)

வெளிறு என்ற வடிவம், இவ் வெண்மை அடிப்படையின வாகக் கருதத்தக்கது.[114] அது,

(ஆ) குற்றம் — வெளிறு நீங்கிய பாலை (2045)

(இ) திண்மை இன்மை — வெளிறு இலா மரம் (7061) எனப் பொருள்படுகின்றது

கூசுதல் வெட்டுதல் என்ற பொருளில், வெள்ளடிப்படைச் சொல்லாக வெள்குதல் [115] வருவதும் இங்கு நினைக்கத்தக்கது. நிறம் குறைந்து, வெண்ணிறம் அடைதல் 'விளர்த்தல்' (6610) எனக் குறிக்கப்படுவதும் இங்கு நினைக்கத்தக்கது.

குறியீட்டு நிலையில், வெண்மை சிலவற்றைக் குறிக்கின்றது. 'வெண்மை நீங்கிய புகழ் (4880) எனப் 'பழி' குறிக்கப்படலால், புகழினைச் சுட்ட வெண்மை குறியீடாகின்றது. முன்கண்ட விதம், 'அறநிறம் கரிதோ என்ற ஐப நிலை, அறத்தை வெண்மை குறியீடாகக் சுட்டியதை உணர்த்துகின்றது. அரசனின் வெண்குடை அமைதியும், அருளும் உணர்த்தக் குறியீடு ஆகலாம்.

பொன்

மஞ்சள் எனும் நிறப்பெயர் வழங்காத விடத்தும் காலத்தும் பொன் என்பதே ஒத்த நிறம் உணர்த்த வந்ததாகக் தோன்று கின்றது. கம்பனிலும் இச்சொல் ஆளப்படுகின்றது.

நிறம்

பிறசொற்களைப் போன்றே. நிறப்பொதுச்சொல் தொடர்ந்து இது வருவதால், நிறப்பெயராகப் 'பொன்' என்பதைக் கொள்ளல் சாலும். பொன்மை எனும் ஆட்சி காணப்படவில்லை. பொன், கனகம், சுவணம் (சுவர்ணம்) எனும் முச்சொல் நிலையும் நிறப் பொதுச் சொல்லுடன் வருகின்றன[116].

---

114. 2045 7061 7238

115. 3124 4252 4267 4849 4854 6114 6926 7243 9298 மி 410

116. பொன் நிறப் பூவை - 1878 2012 2093 4511 5105 5152 5295 10299

(அ) பொன்: உடல் நிறம், பொருள்நிறம், பொன்னா லாகிய பொருட்கள் போன்றவற்றைச் சுட்டி அடை யாகவும், உவமையாகவும் வருணனையாகவும் வரு கின்றது.[117] இந்நிறப்பெயர் அடிப்படையில், இரணி யாகாடின்' பொன்களுன் (5197, 6309), எனவும் காவிரி, பொன்னி எனவும் (6752, 8760) குறிக்கப் படுவதாகக் கொள்ளலாம்.

(ஆ) பொலம்: எனும் இதன் வடிவம் ஆளப்படுவதுடன்[118] பொலம்பொன்[119] என்பதும் வருவது, மிகுதிப் பொருள் அதாவது மிகுதியான பொன்னிறம்

---

பொன் உரு - 621 2864 3781 8857
பொன் மயம் – 3153
கனகவாள் நிறத்திறானை – 3697
சுவன வண்ணனொடு கண்ணன் - 2553 7614
சுவனக்கோலம் - 9844

117. 64 98 100 194 404 467 476 502
510 681 1054 1074 1286 1300 1607
1642 1725 1750 1763 2001 2189 2225
2347 2391 2420 2436 2454 2601 2731
3070 3275 3279 3285 3290 3300 3305
3362 3398 3403 3467 3610 3611 3672
3736 3801 3936 4040 4074 4085 4090
4141 4162 4178 4221 4282 4283 4316
4344 4348 4356 4367 4486 4488 4565
4568 4751 4795 4812 5311 5347 7096
7466 7795 7929 8021 8106 8263 8726
8732 8794 8843 8880 8892 8900 9012
9014 9091 9151 9161 9181 9184 9208
9239 9360 9562 9593 9617 9648 9694
9721 9859 9877 9946 9936 10033 10249
10259 10277 10377 10360 10365 மி 4
146 241 345 571 744 887 1166 2228

118. 907 2510 2534 3304 3362 3398 3610
3611 4377 8910 8946 9278 9681 9683
மி 1166 2228

119. பொன்னுடைத் தாதை வண்டு குடைந்து உண்ணும் பொலம் பொன் தாரான் (8418)

என்பதைச் சுட்டி ஆகலாம். செம்மைக்குச் செஞ், செவ் என வந்த இரட்டை அடைநிலையை ஒத்த தாக இதனைக் கருதலாம்.

(இ) சுவணம் என்பதும் இதனைக் குறிக்கும் பிறிதொரு சொல்லாக வருகின்றது.[120]

(ஈ) கனகம் எனும், ஆட்சிப் பெருக்குக் கொள்கின்றது.[121] இதன் அடிப்படையில், பொன் நிறத்தோனான இரணியன், கனகன் எனப்படுகின்றான்[122]

(உ) இரணம் என்பதும் அருகிப் 'பொன்பற்றி' வந்து (7867), பொன்னிறத்தவனான இரணியனன் பெயராக்க அடிப்படையையும் புலப்படுத்துகின்றது (6188, 6198).

(ஊ) தமனியம் (890, 9646, மி 57)

(எ) ஆடகம் (8083, மி 670) என்பனவும் பொன் குறிக்கும்

சொல்நிலையில் சுட்டத்தக்கன.

திருமகள்—சீதை, பொன் எனக் குறிக்கப்படுதல் இங்கு நினைக்கத்தக்கது. இதனால் இந்நிறம் மங்கலம், உயர்வுடைமை எனும் குறியீட்டு நிலை கொள்வதாகவும் சொல்லலாம்.

---

பொன்னுடை வனைகழல் பொலம் பொன் தோளினால் (8482)

பொய்வினை மகளிர் கற்பும் போன்றது
அப் பொலம் பொன் தீண் தேர் (9143)

120. 2691 4468 4469 4623 6783

121. 632 671 748 843 294 3288 3296 3625 4533 4622 8557 8712 8742 8834 9459 9635 மி 588

122. 890 6222 6263 6312 6331 6337 மி585 585 587

நிறமுரண்

தொடைகளில் ஒன்றாகவும், அணிகளுள் ஒன்றாகவும் அமையும் முரணைத் தர நிறமும் பயன்படுத்தப்படும் மரபு, கம்பனிலும் தொடர்கின்றது. மிகுதியாகப் பயின்ற செம்மையும் கருமையும் இவ்வாறு முரண்தோன்றும் வண்ணம் அமைக்கப்படுவதில் மிகுதியான இடம் பெறுகின்றன. இதற்குக் காரணமாக அமைவது காப்பியத்தலைவனின் மேனி நிறமாகும். அத்துடன் அரக்கனும் செந்நிறமயிரும் கருநிற உடலும் கொண்டு அமைவதால், அதுவும் இந்நிற முரண் பயிற்சிக்கு வழி வகுக்கின்றது (செங்கண் அஞ்சனமலை—கார்முகில் கமலம் பூத்தது—6498).

நேரடியாக நிறப்பெயரின்றியும் இந்நிற முரண் வருணனைச் சூழலால் உணர்த்தப்படும் உத்தியும் இவரிடம் அமைகின்றது. 'இருண்ட மேகக் குழாத்திடை குருதி கொண்டு உறைந்துளது என்ன நின்ற ஒரு' (9157).

நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறு அணிந்து சென்று ஆர்கலி மேய்ந்து அகில்
சேறு அணிந்த முலைத் திரு மங்கை தன்
வீறு அணிந்த மேனியின் மீண்டதே (13)

செம்மை மட்டுமின்றிப் பிற நிறங்களுடனும் முரண் அமைகின்றது. சொல்லும் பொருளும் முரணலாம்.

(அ) கருமை — பொன் : பொன் திரள்புயக் கருநிறக் களிறு (6750)

(ஆ) கருமை — வெண்மை : காணுதற்கு இனிய நீள வெண்மையில் கருமை காட்டி (6495)

(இ) செம்மை — வெண்மை : பவளக் காடுடைப் பாற்கடல் (8621)

(ஈ) செம்மை — பசுமை : செங்கதிர் பொங்கு உளைப்பச்சை அம்புரவி (3197)

(உ) வெண்மை — பசுமை : உச்சி வெண்குடையர் பச்சைமரு ஒத்த (மி 1280)

(ஊ) பசுமை — செம்மை : பசுஞ்சுடர்ச் சோலைத்து ஆங்கு ஓர் பவள மால் வரை (4829)

(எ) பசுமை — கருமை : புயற்கறைப் பசும்புனல் (6277)

(ஏ) நீலம் — செம்மை : செம்மணித்தூணம் நீல நிறம் வனிதை (1438)

(ஐ) நீலம் — பொன் : பொன் தகடு உறு நீலம் (2010)

(ஒ) நீலம் — கருமை : இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சி (536)

(ஓ) நீலம் — வெண்மை : மலைமுன் கயிலை நின்றது (6901)

இவ்வாறு இரு நிறங்கள் முரணாக அமைக்கப்படுவதன்றி, மூன்று நிறங்கள் ஒரு பாடலில் அமைவதும் கருதுதற்குரியது.

(அ) கருமை—வெண்மை—செம்மை

தவளமேனி மைத்தகு கருங்கண் செவ்வாய் (மி. 12)

(ஆ) வெண்மை—பசுமை—கருமை

வெள்ளிவெண் மாடத்து உம்பர்
வெயில்விரி பசும்பொன் பள்ளி
எள்ளஅருங் கருங்கண் தோகை
இன்துயில் எழுப்பும் அன்றே (39)

நான்கு நிறநிலை, அருகியே வருகின்றது.

செங்குடை வெண்மை நீலம் பச்சையோடு... (5733)
வயிரம் மாணிக்கம் நீலம் மரகதம் (10307)

## சில எண்ணங்கள்

கம்பனின் நிறம் பற்றிய குறிப்புகளைக் காணும் போது சில எண்ணங்கள் எழுகின்றன.

1) நிறம், ஆட்பெயருக்கு அடிப்படையாக அமையலாம்—இராவணன், இரணியன், நீலன்

2) நிறம், நாட்டுப் பெயருக்கும் காரணமாகலாம்—கரு நாடு (1111)

3) பாத்திரங்கள் நிறத்தாலேயே குறிக்கப்படல் உத்தியாக அமைகின்றது.

4) முரண் அணிக்கு நிறக் கோட்பாடு உதவுகின்றது.

5) நிறம், குறியீடாகவும் வருகின்றது.

6) நிறச் சொற்கள் வேறு பொருண்மை தருவதும் உண்டு

7) நிறப்பொருட்களால் நிறம் தரப்படல் பெரும்பான்மை யாகக் காணப்படுகின்றது

8) நிறங்களின் இள-முதிர் நிலைகள் கருதப்படுகின்றன.

9) புதிய நிறச்சொல்லாக்கங்கள் உருவாகியுள்ளன.

10) ஒரே நிறப்பொருட்களை ஒப்பிடல் (4495) அமை கின்றது.

11) நிறத்தின் பல பண்புகள் பேசப்படுகின்றன.

12) கருஞாயிறு, நீல்நிற ஞாயிறு போன்ற ஆக்கங்கள் புதுமையுடையன.

13) நிறப் பொதுமைக்கு 'ஒருபொருள் இருசொல்' வருகின்றது.

14) உடல், இயற்கைப் பொருள்-பூதங்கள் இவற்றின் நிறச் சார்பு தரப்படுகின்றது.

15) முக்குணமுடைய இயற்கைக்கும், மனிதனுக்கும் ஏற்ப அவற்றின் கரு-செம்-வெண் (பொன்) நிறங்கள் பயிற்சி காட்டுகின்றன.

16) இறைவர்கள் இம் முந்நிற இனணவுடன் காட்டப் படுகின்றனர்.

17) கருமையின் பயிற்சி மிகுதிக்குக் காரணம் அமை கின்றது.

18) நீலம், பசுமை, பசை என்பன தனி நிறங்களாகக் கொள்ளத்தக்கன் வெனினும், கருமையோடு மயங்கு வதை ஆட்சிநிலை புலப்படுத்துகின்றது.

# 12. திருவாசகம்

ஆ. சிவலிங்கனார்

காண்பார் கண்ணைத் தன்னிடமாக நிறுத்துவது நிறம் எனப்பட்டது. நிறம் என்ற சொல்லுக்கு வண்ணம் முதலிய பல பொருள்கள் உண்டு. அவையாவும் நிறுத்துவது என்ற பொருளடிப்படையிலேயே அமைந்தன எனலாம்.

1. நிறம்—மார்பு: எதிரியின் படையைத் தன்னிடமாக நிறுத்த வல்ல வலிமையுடையது மார்பாதலின் அது நிறன் எனப் பட்டது.' செற்றார் நிறம் பாய்ந்த கணை'' (கலித் 57).

2. நிறம்—ஒளி: காண்பார் கண்ணைத் தன்னிடமாகத் திருப்பு தலின் ஒளிநிறம் எனப்படும். ''நிறப் பெருப்படைக்கலம் (கம்ப. தைல. 30)

3. நிறம்—தோல்: ''புலிநிறக்கவசம்'' (புறநா. 13:2) என்பதில் ஒரு வீரன் அணிந்திருந்த புலித்தோல் எதிரியின் படையைத் தன்னிடமாக நிறுத்துதற்குப் பயன்பட்ட கவசமாக அமைந் தமையின் அத்தோல் நிறம் எனப்பட்டது.

4. நிறம்—நடுஇடம்: உடம்பில் மார்பு நடுஇடமாகும். அம் மார்பு நிறம் எனப்பட்டமையின் அச்சொல் நடு இடம் என்பதற்கும் ஆளப்பட்டது. ''கடலிற்றிரை நிறம் சேர் மத்தின்'' (திருமந். 2313) என்பதில் கடலின் நிறம் என்பது கடலின் நடுஇடத்தைக் குறிக்கும்.

5. நிறம்—புகழ் : அனைவர் எண்ணத்தையும் தன்கண் நிறுத்துவது புகழ் ஆதலின் புகழ் நிறம் எனப்பட்டது. ''இவளொடு சம்பந்ததிக்கை தரமன்று; நிறக்கேடாம்'' (திருவாய்மொழி ஈடு. 4.9.3).

6. நிறம்—உடம்பு: மார்புக்கு நிறம் என்பது உண்மையின் அம் மார்பமை உடம்பு நிறம் எனப்பட்டது. ''மெல்லியலை மல்லல் தன் நிறம் ஒன்றில் இருத்தி நின்றோன்'' (திருக் கோவை 58).

7. நிறம்—இயல்பு : மகளிர் நுதலில் வில்லின் தன்மையை நிறுத்திக் காணுமாறு கலைஞனை நுதல் நிறுந்துதலின் நிறம் என்பது இயல்பு—தன்மை எனப்பட்டது.

8. நிறம்—விளக்கம் : நிறமானது விளங்கித் தோன்றுதலின் விளக்கம் என்பதும் நிறம் என்பதால் குறிக்கப்பட்டது. ''நிறன் அடி செய்து நிறைந்து நின்றானே'' (திருமந். 78) என்பதில் ''திருவடியை (நிறன்) விளக்கம் செய்து'' எனப் பொருள் அமைந்ததைக் காணலாம்.

9. இப்படியே கேட்பார் உணர்வைத் தன்கண் நிறுத்துதலின் புகழ் நிறம் எனப்படும் (ஈடு. 2.6.11)

இவ்வாறு பலபொருள் ஒரு சொல்லாக விளங்கும் நிறம். தொடக்கத்தில் வண்ணநிறத்திலிருந்தே வளர்ச்சியுற்றதாகலாம்,

இனி, அவ்வண்ணநிறம் திருவாசகத்தில் ஆளப்பட்டவாறு காண்போம்.

## திருவாசகத்தில் நிறம்

மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவாசகத்தில் நூற்றறுபது இடங்களுக்குமேல் நிறங்களை ஆண்டுள்ளார். அவ்விடங்களுள் பெரும்பாலன சிவபிரானைப் பற்றியன. உமையம்மை, பிற மகளிர் தொடர்பாக அடுத்துள்ளன. ஆங்காங்கே திருநீற்றின் வெண்மை கூறப்படுகின்றது. சிவபிரான் ஏறு, பாம்பு, கிளி, குயில், மேகம், கடல் என்பனவும் நிற அடைமொழிகளால் குறிக்கப்படுகின்றன.

மணிவாசகர் ஆண்டுள்ள நிறங்கள் சிவப்பு, கறுப்பு, பச்சை, பொன்மை, வெண்மை, நீலம், மஞ்சள் என்பனவாம். இவற்றுள் நீலத்தையும் கருமையையும் ஒன்றாகக் கருதினார் எனக் கொள்வதற்கு இடம் உண்டு.

''நீலவுருவுற்குயிலே (குயில். 3)
காருடைப் பொன்திகழ் மேனிக்கடிபொழில்
வாழும் குயிலே (குயில். 9)
காருடைப்பொன் — கருநிறமுடைய இரும்பு)

எனக் குயிலுக்கு நீலமும் கருமையும் கூறியமை காணலாம்.

அடுத்து, மஞ்சள் நிறத்தைப் பொன்மையில் அடக்கினார் எனக் கருதலாம். கொன்றை மலர் மஞ்சள் நிறமுடையது. அதனை ''பொன்னின் மின்னு கொன்றை'' (நீத். 29) என்பர். அன்றியும் திருப் பொற்சுண்ணப் பதிகத்தில்,

மஞ்சள் நிறைய அட்டி....பொற்சுண்ணம் இடித்தும் (9) என்பர். பொற்சுண்ணம் இடிப்பதற்குப் பல பொருள்கள் தேவை. அவற்றுள் மஞ்சளே மிகுதியும் இடப்படும். அப்படியிடப் பட்டும் சுண்ணப்பொடி மஞ்சள் சுண்ணம் எனப்படாமல் பொற் சுண்ணம் எனப்படும். இதுவும் மஞ்சள் பொன்மையில் சேர்க்கப் படும் என்பதற்குத் துணைபுரியும்.

எனவே, செம்மை, கருமை, பசுமை, பொன்மை, வெண்மை என்னும் ஐந்து நிறங்களை மாணிக்கவாசகர் யாண்டுள்ளார் எனலாம்.

## சிவபிரான்

இனி, அடிகள் சிவபிரானை நிறத்தொடர்பாகக் குறிப்பிட்ட இடங்களைக் காணலாம்.

தமது முதற்பாடலான சிவபுராணப் பாடலில் 'நிறங்கள் ஓர் ஐந்துடையாய்'' (சிவ பு. 49) என்று சிவனைக் குறிப்பிடுவர். அவ்வைந்து நிறங்கள் யாவை?

'வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே'' (நீத். 31) என்பர் ஓரிடத்தில். செம்மையில் பொன்மையடங்கும். எனவே வெண்மை, கருமை, பசுமை, செம்மை, பொன்மை என்பனவே அவை எனக் கருதலாம்.

நினைப்ப் பிறகுக் கரிய நீரைக் காலை நிலனை விசும்பை (புணர்ச்சிப். 7) என இறைவனைக் குறிப்பிடுவர். ''நிரந்தர ஆகாயம் நீர் நிலம் தீ கால் ஆயவை அல்லையாய் ஆங்கே கரந் தோர் உருவே'' (கோயில். 6) என்றும் குறிப்பிடுவர். எனவே 'பூதங்கள் ஐந்தாகி' (கண்ட. 10) உள்ள இறைவன் அப்பூதங் களின் நிறமாகவே 'விளங்குவன். அப்பூதங்களின் நிறங்களை உண்மை விளக்கம்,

பொன்பார், புனல் வெண்மை, பொங்குமனல் சிவப்பு,
வன்கால் கருமை, வான்தூ மம்—என்பார் (5)

எனக் கூறும். இது கொண்டு சிவபிரான் பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை என்னும் ஐந்து நிறமானவன் என்றும் கூறலாம். எனவே எல்லா நிறங்களாலும் இறைவன் கூறப்படலாம் என்பது போதரும். இனி, சிவபிரானின் சதாசிவ வடிவில் ஐந்து முகம் உண்டென்னும் அம்முகங்களுக்கு நிறம் உண்டென்னும் திருமந்திரம் கூறும். அம்முகங்களின் பார்வைத் திசைகளும் கூறும். அது,

நடுவு, கிழக்கு, தெற்கு, உத்தரம், மேற்கு
நடுவு படிகம், நற் குங்குமம் வர்ணம்,
அடைவுள அஞ்சனம், செவ்வரத் தம் பால்
அடியேற் கருளிய முகமவை அஞ்சே (1705)

என்பது திருமந்திரப் பாடல் (நடுவே—உச்சி).

| | | | | |
|---|---|---|---|---|
| உச்சிநோக்கிய முகம் | | ஈசானம்; | அதன் நிறம் | படிகம் |
| கிழக்கு | ,, | தற்புருடம் | ,, | குங்குமம் (மஞ்சள் கலந்த செம்மை-பொன்மை) |
| தெற்கு | ,, | அகோரம் | ,, | நீலம் (கருமை) |
| வடக்கு | ,, | வாமதேவம் | ,, | செவ்வரத்தம் (செம்மை) |
| மேற்கு | ,, | சத்யோசாதம் | ,, | பால் (வெண்மை) |

இவ்வைந்து முகங்களும் 'சிவாயநம' என்னும் மந்திரமாவன என்பர். மணிவாசகர் தாம் முதன்முதலில் 'நமசிவாய' என்று தொடங்குகின்றார் ஆதலின், அதற்கேற்ப இறைவனின் ஐந்து நிறங்களையும் கொண்ட ஐம்முக உருவத்தைக்கண்ட காட்சியினால் நிறங்கள் ஓர் ஐந்துடையாய் என்றார் என்றும் கொள்ளலாம். அங்ஙனமாயின் இங்குள்ள நிறங்கள் வெண்மை' பொன்மை; கருமை, செம்மை என்னும் நான்கேயாம். வெண்மையில் படிக வெண்மை பால்வெண்மை எனப் பகுப்புக் காணப்பட்டுள்ளது.

புகை நிறம் கருமையில் அடங்குவதால் ஐம்பூத நிறங்களில் ஒன்று குறைவதும் சதாசிவ முகங்களில் ஒரு நிறம் குறைவதும் நோக்கின் ஒரே பார்வையில் ஐந்நிறங்களும் உடைய உருவத்தையே மணிவாசகர் குறிப்பிட்டிருக்க வேண்டும் எனக் கொள்வதாயின் பின் வருமாறு கொள்ளலாம். அமையொரு

பாகனாகக் காணும் காட்சியில் திருநீற்றால் வெண்மையும், உமையம்மைப் பாகத்தால் பசுமையும், நஞ்சயின்ற கண்டத்தால் கருமையும், இறைவன் திருமேனிப் பாகத்தால் செம்மையும், கொன்றை மலரால் பொன்மையும் ஆக ஐந்து நிறங்களையும் அடிகள் கண்டார் எனக் கொள்ளலாம்.

பலநிறங்களைச் சேர்த்துச் சிவபெருமானைக் கூறும்போது முத்து மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதியான் (அதிசய. 7) என்பார் அடிகள்.

இனித் தனித்தனி நிறங்களில் இறைவனைக் குறிப்பிடு மாற்றைக் காணலாம்.

**செம்மை**

செம்மை நிறத்தில் மணி, பவளம், தாமரை, செச்சை மலர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவற்றால் இறைவனைச் சிறப்பிப்பர்.

ஆடகச்சீர் மணிக் குன்றே (திருச்ச. 11)
மாசற்ற மணிக் குன்றே (திருச்ச. 24)
மணி (திருச்ச. 54, நீத், 6, 26. 27, 32)
மாமணிப்பிறக்கும் (திருவண்ட-124)
மாணிக்கத்தொளி (அதிசய. 1)
மாசில்மணி (பண்டாய. 7)

என்றெல்லாம் செம்மணியாக-மாணிகக மணியாக இறைவனைக் குறிப்பவர் 'பொல்லாமணி' (துளையிடப்படாத மணி (ஆசைப். 1) என்றும் குறிப்பிடுவர். (புணர்ச். 1)

செம்பவள வெற்பின் தேசுடையாய் (நீர். 5)
பவளத்தின்...அத்தன் (அதிசய. 7)

எனப் பவள நிறமும்,

செந்தாமரைக் காடனைய மேனி (திருச்ச. 26)
செங்கமல மலர்போல் ஆருருவாய என் ஆரமுதே (எண்ணப். 1)

எனத் தாமரை நிறமும்,

செச்சைமாமலர் புரையும் மேனி (திருச்ச. 29)
செச்சை மலர்புரை மேனியன் (உயிருள். 9)

எனச் செச்சைமலர் நிறமும் கூறப்பட்டுள்ளன.

செம்பொன்

திருவாசகத்தில், சுடர்நிறத்துக்கே பொன்னிறம் பெரிதும் ஆளப்பட்டுள்ளது.

பொன்னே திகழும் திருமேனி (திருச்ச. 59)
பொன்னும் மின்னும் அன்ன தோற்றச் செழுஞ்சுடர் (நீத். 4)
பொன்னையழித்த மேனி (குயில் 10).

என இறைவன் திருமேனியையும்,

செம்பொன் பாதமலர் (திருச்ச. 52)
பொன்னார்கமல் (திருச்ச. 84)
பொற்பாதம் (திருவம். 12)
செங்கமலப் பொற்பாதம் (திருவம். 17)
பொன்னங்கழல் (திருக்கோற். 11)
பொன்னார் திருவடி. (திருப்பூ. 17)
பொன்னடியினரை (அற்புத. 1)
செம்பொன் மாமலர்ச் சேவடி. (சென்னி. 9)

எனத்திருவடியையும் பொன்னிறமாகக் குறிப்பிடினும்,

செந்தழல் போல் திருமேனித் தேவர்பிரான் (குயில். 10)
செந்தழல் புரைதிருமேனி (திருப்பள்ளி. 8)
செழுஞ்சுடர் மூர்த்தி (பிடித்த. 5, 7)
தீமேனியான் (திருக்கோத். 9)
செக்கர் போலும் திருமேனி (புணர்ச். 8)
கடுந்தமிழ் பிழம்பண்ண மேனிச் செய்யனே (அருட். 7)

எனச் சுடர்நிறம் குறித்தலும் காணலாம். சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே (அருட். 1) எனச் சுடர் வகைகள் குறிக்கப் படினும் செம்பொன்னும், சுடரும் நிறந்தால் ஒந்தன என்பதைக் காணலாம். திருவையாறகலாத செம்பொற் சோதி (அப்பர்

தேவாரம் 252 : 1—11) என அப்பரடிகளும் செம்பொன்னையும் சோதியையும் இணைத்துக் கூறுவர்.

## செம்மையும் பொன்மையும்

செம்மை நிறத்தையும் பொன்மை நிறத்தையும் வேறு பிரித்துக் காணுதலோடு ஒன்றாகக் காணும் நிலையும் திருவாசகத்தில் காணப்படும். சிந்துரச் சேவடி (குயில். 5), சேவடி (திருக்கோத். 15), செந்தளிர் (திருவெம். 20) எனத் திருவடிக்குச் செம்மை கூறப்படினும் பொற்பாதம் (திருவெம் 12), பொன்னார் திருவடி (திருப்பூ. 17) எனப் பொன்மை நிறமும் கூறப்படுவதும், செங்கமலப் பொற்பாதம் (திருவெம். 17) மணிமலர்த்தாள் (நீத். 11) எனச் செம்மையும் பொன்மையும் சேர்த்தே கூறப்படுவதும் காணலாம்.

## பிற

அரத்த மேனியாய் (திருச்ச. 93) என அரத்தமும் (செம்பஞ்சு) இறைவன் திருமேனிக்குக் கூறப்பட்டுள்ளது.

செம்பிரான் (திருச்ச. 62)

செய்ய மேனியனே (செந்திலா. 1)

செம்பெருமான் (வாழா. 2)

எனப் பொதுவில் செம்மையடை தரப்பட்டுள்ளது.

இறைவன் வாய் செவ்வாய் (திருவம். 17) எனவும், தழலென விழித்த செங்கண் (அருட். 3) எனக் கண் செங்கண்ணெனவும், பொன்னை வென்றதோர் புரிசடை (அதிசய. 3), செஞ்சடை (அருட். 9) எனச் சடை செஞ்சடை எனவும் கூறப்பட்டுள்ளது.

## கருமை

இறைவன் கருநிறம் உடையவன் என்பதைக் 'காரியாய்' (நீத். 3) என்பதன் மூலம் புலப்படுத்துவார்.

கறை மிடற்றன் (திருக்கோத். 9) எனவும், விடமுண்ட மிடற்று மையவன் (நீத். 7) எனவும் அவன் கழுத்தின் கருமை சுட்டுவர். மணிகண்டன் (செத்திலா. 7) எனக் கழுத்து நீலமாகச் சுட்டப்பட்டதும் உண்டு.

இறைவன் அணியும் கச்சை 'கரும்பணக் கச்சை' (திருவண்ட. 96) எனப்பட்டது.

இறைவன் திருவருள் செய்ய வெளிப்படும் நிலையைக் கருமா முகிலிற்றோன்றுவதாக (திருவண்ட. 67) விளம்புவர்.

**பச்சை**

இறைவனின் பச்சை நிறத்தைப் பச்சையனே (நீத். 31), மரகதக் குவாஅல் (திருவண்ட. 124), மரகதத்தை (கண்ட. 10) என்பனவற்றால் அடிகள் குறிப்பிடுவர்.

**வெண்மை**

வெளியன் (நீத். 37), முத்து...வியர்த்து முழுச் சோதி (அதிசய. 7) எனக் கூறுவதன் மூலம் அவன் வெண்ணிறத்தன் என்பதைப் புலப்படுத்துவர். அவ்வெண்ணிறமும் திருநீறு பூசுவதால் வருதல் உண்டு என்பதை 'திருநீற்றையும் தூளித்து ஒளி மிளிரும் வெண்மையனே' (நீத். 22) என்பதால் குறிப்பிடுவர்.

**உமையம்மை**

மேகமானது கடல் சுருங்கும்படி நீரைக் கொண்டு எழுந்து உமையம்மை போல் நிறம் திகழ்ந்தது எனக் கூறுவதன் மூலம் உமையம்மையின் கருநிறத்தைப் புலப்படுத்துவர்.

> முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
> என்னத் திகழ்ந்து (திருவெம். 16)

என்பது அவர் வாக்கு.

> மை கலந்த கண்ணி (திருச்ச. 73)
>
> மையிலங்கு நற்கண்ணி (திருச்ச. 92)
>
> காவி (நீலம்) சேரும்...கண்ணாள் (பிரார்த். 5)

எனக் கண்ணையும், கனிதரு செவ்வாய் உவை (கீர்த்தி. 142) என வாயையும் குறிப்பிடுவர்.

'செவ்வாய் வெண்ணகைக் கரியவாட்கண் மங்கை' (திருச்ச. 65) என வண்ணச் சினைச் சொற்றொடரிலும் உமையம்மையைக் குறிப்பிடுவர்.

## மகளிர்

மகளிரைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்தம் உறுப்பு நலங்களை நிற அடைமொழிகள் மூலம் குறிப்பிடுவர். திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொன்னூசல், திருப்பொற் சுண்ணம் ஆகிய இடங்களில் வரும் நன் மகளிரைப் பற்றி, அவர் தம் உறுப்புகளைப் பற்றி,

செங்கனிவாய் இதழ் (திருப்பொற். 14)
மைப் பொலியும் கண்ணி (திருவம். 12)
செங்கயற்கண் (திருப்பொற். 10)
பாடல்தடங்கண் (திருப்பொற், 15
முத்தன்ன வெண்ணகையாய் (திருவெம். 3)
ஒள்நித்தில நகையாய் (திருவெம். 4)
கொழுமணியேர் நகையாய் (நீத். 27
கருங்குழலி (திருவெம். 17)
புஞ்சமார் வெள்வளையீர் (திருப்பொன். 4)

என வாயின் செம்மை; கண்ணின் கருமை செம்மை, பல்லின் வெண்மை, கூந்தலின் கருமை, வளையலின் வெண்மை ஆகிய வற்றைக் குறிப்பிடுவர். அப்பகுதிகளில் அம் மகளிரை அழைத்து விளையாடுவம் வருக என்று கூறுவர்.

தம்மால் வெறுக்கப்படும் மகளிரைப் பற்றி அவர்தம் உறுப்பு களைப் பற்றி,

கொவ்வைச் செவ்வாய் (நீத். 2)
முதலைச் செவ்வாய்ச்சியர் (நீத். 41)
செந்துவர்வாய் மடவார் (திருப்படை. 3)
காருறுகண்ணியர் (நீத். 3)
மைப்பாவிய கண்ணியர் (அடைக். 6)
செங்கயல் ஒண்கண் (திருப்படை. 8)
கொழுமணியேர் நகையாய் (நீத். 27)
கருங் குழலினார் (அற்புத. 4)

எனக் குறிப்பிடுவர்.

நன் மகளிரின் கண்களைச் செங்கயற்கண் (திருப்பொற். 10) என்றது போலவே, தீய மகளிர் கண்களையும், செங்கயல் ஒண் கண் (திருப்படை. 8) என்றதும், கருங்குழலி (திருவெம். 17) என்றது போலவே கருங்குழலினார் (அற்புத. 4) என்றதும், முத்தன்ன வெண்ணகையாய் (திருவெம். 3) என்றது போலவே 'கொழு மணியேர் நகையார்' (நீத். 27) என்றதும் காணும்போது அடிகளார் மாதர் உறுப்புகளுக்கு நிறத் தொடர்புபடுத்தினார் என்பதுவேயன்றி அதற்குச் சிறப்பாகக் காரணம் கற்பித்தற் கில்லை எனத் தோன்றுகின்றது.

உமையம்மைக்கோ மகளிர்க்கோ தரப்படும் உறுப்புகளின் நிற அடைமொழிகள் (இலக்கிய நயம் காண்பார் வேண்டு மானால் அவ்வவ்விடத்துக் கேற்பச் சிறப்புகள் கூறிக் கொள்ள லாமே தவிரப் பொதுவில்) தனிச் சிறப்புடையன அல்ல. சான்றாக, 'செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண் மங்கை' (திருச். 65) என உமையம்மைக்குக் கூறுமாறே தம்மால் வெறுக்கப்படும் மகளிர்க்கும் வெண்ணகைச் செவ்வாய்க் கரிய பானலங் கண்ணியர் (திருச்ச. 19) எனக் கூறுவது காணலாம். கூந்தல் முதலிய உறுப்புகளையும் இப்படியே கூறுவர்.

## பிற பொருள்கள்

வெண்மை நிறப் பொருள்களாக

வெள்ளைக் குருநீர்மதி (நீத். 26), வெண்மதி (நீத். 40) என மதியும்,

வெண்மணிப் பணிலம் (நீத். 47), வெண்சங்கு (திருவெம். 8) எனச் சங்கும்,

வெண்ணீறு (திருச்சா. 1), பால்கொள் வெண்ணீறு (அருட். 1) தூய கவண்ணீறு (அருட். 6) தூ வெள்ளை நீறு (திரு வார்த்தை. 9) எனத் திருநீறும்,

வெள்ளை விடையானே (திருப்புல. 2) என இறைவன் ஏறும் கூறுவர்.

செம்மை நிறத் தொடர்பாக,

செ கணவன் (திருவெம். 17), செங்கண் நெடுமால் (திருவம். 1), செங்கண் அரி (திருப்பூ. 15) எனத் திருமாலின் கண்ணும்,

செந்தார் (திருவம். 15) என மாலையும்,

செம்பொற் கோயில் (திருப்பொற். 4, 5) எனத் திருக் கோயிலும் கூறுவர்.

கருமையின் நிறமுடையனவாக,

கருங்குருவி (போற்றி. 209) எனக் கரிக்குருவியும்,

காரார்கடல் (திருப்பூ. 10) எனக் கடலும்,

காருடைப் பொன்திகழ்மேனிக்...குயிலே (குயில். 9)

எனக் குயிலும் கூறுவர்.

பச்சை நிறத் தொடர்பாக,

செவ்வாய்ப் பசுங்கிளி (திருத்தசா. 10)

ஏதமிலா இன்சொல் மரகதமே (திருத்தசா. 2)

எனக் கிளியும், 'பச்சைத் தால் அரவு' (திருவேச. 4) எனும் பாம்பின் நாக்கும் கூறுவர்.

பொன்மை நிறமுடையதாகப் பொன்னின் மின்னு கொன்றை (நீத். 29) எனக் கொன்றை கூறுவர்.

## முரண் தொடை

நிறப் பெயர்களை முரண்தொடையில் அமைத்துப் பல இடங்களில் கூறுவர்.

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்று (திருச்ச. 25)

செய்யா வெண்ணீ றாடி (திருவெம். 11)

செய்யானை வெண்ணீ றணிந்தானை (திருவம். 13)

செம்பெருமான் வெண்மலரான் (திருத்தசா. 1)

செந்துவர்வாய் வெண்ணகையீர் (திருத்தெள். 9)

எனச் செம்மையும் வெண்மையும்,

வெண்ணகைக் கருங்கண்...மடந்தை (நீத். 37)

என வெண்மையும் கருமையும்,

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
(திருவெம். 12)

எனக் கருமையும், செம்மையும்,

பால்வெள்ளைநீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
(திருக்கோத் 18)

என வெண்மையும் பசுமையும் அமைத்துப் பாடுவர்.

செவ்வாய்ப் பைஞ்சிறகிற் செவ்வீ (திருத்த. 4)

எனச் செம்மையும் பசுமையும் பாடுவர். இரண்டுக்கு மேற்பட்ட நிறங்களை வைத்து,

கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
(போற்றி. 30)

வெண்ணகைச் செவ்வாய்க் கரியபானலங் கண்ணியர்
(திருச்ச. 19)

செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண் மங்கை
(திருச்ச. 65)

கண்டங் கரியான் செம்மேனியான் வெண்ணீற்றான்
(திருவம். 9)

செந்துவர்வாய்க் கருங்கண் வெண்ணகைப் பண்ணமர்
மென்மொழியீர் (திருப்பொற். 13)

வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே (நீத். 31)

எனப் பாடுவர்.

## முடிப்புரை

மணிவாசகர் சிவபிரானைத் தாம் அனுபவித்த - அவ்வப்போது கண்ட—காட்சியினுக்கேற்ப நிறங்களைத் தொடர்புபடுத்திக் கூறினார் என்றும், உமையம்மையைப் பொதுவில் மகளிர் நிலையில் வைத்தும் அருளிப்பாட்டைக் கொண்டும் நிறங்களைத் தொடர்புபடுத்திக் கூறினார் என்றும், நன்மகளிரை அவர்தம் உறுப்பு நலங்கருதிப் பொதுவில் நிறங்களைத் தொடர்புபடுத்திக் கூறினார் என்றும், தம்மால் வெறுக்கப்படும் மகளிரை அவர்தம் உறுப்புக்களின் மயக்கும் இயல்பைக் கூற வேண்டி நிறங்களைத் தொடர்புபடுத்திக் கூறினார் என்றும் பிற பொருள்களை இயல்பு கருதியே கூறினார் என்றும் கொள்ளலாம். என்றாலும், நிறங்களால் சிறந்த கருத்துக்களை திருவாசகத்தில் நாம் பெற இயலவில்லை.

சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அச்ச | — | அச்சப்பத்து |
| அடைக் | — | அடைக்கலப் பத்து. |
| அதிசய | — | அதிசயப்பத்து |
| அருட் | — | அருட்பத்து |
| அற்புத | — | அற்புதப்பத்து |
| ஆசை | — | ஆசைப்பத்து |
| உயிருண் | — | உயிருண்ணிப்பத்து |
| எண்ண | — | எண்ணப்பதிகம் |
| கண்ட | — | கண்டப்பத்து |
| கம்ப தைல | — | கம்பராமாயணம், தைலமாட்டுப் படலம் |
| கலித் | — | கலித்தொகை |
| கீர்த்தி | — | கீர்த்தித் திருவகவல் |
| குயில் | — | குயிற்பத்து |
| கோயில் | — | கோயில் மூத்த திருப்பதிகம் |
| கோயிற் | — | கோயிற்றிருப்பதிகம் |
| சிவபு | — | சிவபுராணம் |
| செத்திலா | — | செத்திலாப்பத்து |
| சென்னி | — | சென்னிப்பத்து |
| திருக்கோ | — | திருகோத்தும்பி |
| திருக்கோவை | — | திருக்கோவையார் |
| திருச்ச | — | திருச்சதகம் |
| திருச்சா | — | திருச்சாழல் |
| திருத்த | — | திருத்தசாங்கம் |
| திருத்தெள் | — | திருத்தெள்ளேணம் |
| திருத்தோ | — | திருத்தோனோக்கம் |
| திருப்படை | — | திருப்படையாட்சி |
| திருப்படையெ | — | திருப்படையெழுச்சி |
| திருப்பள் | — | திருப்பள்ளியெழுச்சி |
| திருப்புல | — | திருப்புலம்பல் |
| திருப்பூ | — | திருப்பூவல்லி |
| திருப்பொற் | — | திருப்பொற்சுண்ணம் |

| | | |
|---|---|---|
| திருவண்ட | — | திருவண்டப்பகுதி |
| திருவம் | — | திருவம்மானை |
| திருவெம் | — | திருவெம்பாவை |
| திருவே | — | திருவேசறவு |
| நீத் | — | நீத்தல் விண்ணப்பம் |
| பண்டாய | — | பண்டாய நான்மறை |
| பிடித்த | — | பிடித்தப்பத்து |
| பிரார்த் | — | பிரார்த்தனைப் பத்து |
| புணர் | — | புணர்ச்சிப்பத்து |
| புறநா | — | புறநானூறு |
| போற்றி | — | போற்றித் திருவகவல் |
| வாழா | — | வாழாப்பத்து |

—0—

# 13. பெரியபுராணம்

கே. பகவதி

நம் கண்ணையும் கருத்தையும் கவரும் இயற்கைப் பொருட்கள் பலவற்றுள்ளும் முன்னிற்பன நிறங்களே எனல் மிகையல்ல. இயற்கையின் ஒவ்வொரு துளியிலும் நிறைந்து காணப்படும் இவ்வண்ணக் கோலங்கள் காட்சி அளவில் இன்பம் பயப்பதுடன் நின்றுவிடாது, பற்பல சிந்தனைகளையும் மாந்தர் மனதில் உருவாக்கி நிற்கின்றன. இந்நிலையில் இவ்வண்ணங்கட்கு என்று தனித்துப் பெயரிட்டுச் சுட்டிய மாந்தர், அப்பெயர்களைக் குறியீடாக, பிற கருத்து விளக்கும் நிலையிலும் துணை கொண்டனர். நிறங்கள் உலகமுழுமையும் ஒன்றுபட்டு திகழ்வது போன்று, இவை சுட்டும் பொருள் நிலையிலும் பெரும்பாலும் ஒன்றுபட்டு அமைவது, மனித மனத்தின் ஒன்றுபட்ட சிந்தனைகளை அறியவும் வழி வகுக்கின்றன. பொதுவாக வெண்மை தூய்மையினைக் குறிக்க, கருமை சிறப்பற்ற நிலையில் கருதப்படுவதை இவண் சுட்டலாம்.

மனித சமுதாயத்தைப் பல நிலைகளிலும் உணர்த்தி நிற்கும் இலக்கியங்கள் இந்நிறம் பற்றிய பலவித எண்ணங்களை அறியவும் துணையாகின்றன. நிறம் பற்றிய தமிழரின் எண்ணங்களை, அவை பற்றிய அவர்தம் எண்ண மரபுகளை, தொல்காப்பியம் முதலான இலக்கியங்கள் நவில்கின்றன. பலவித வண்ணங்களிலும், சிலவற்றுக்கும் சில காலங்களில் முக்கியத்துவம் அளித்தல், சில, சில காலங்களில் மதிப்பு பெறாமை, அந்தந்த காலத்தில் வாழ்ந்த மக்கள் மனநிலையையும், சில நிறங்களிடம் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டையும் உணர்த்த வல்லனவாக அமைகின்றன. பக்தி நெறியில் முக்தி அடைந்த சிவனடியார் வரலாறு செப்பும் பெரிய புராணமும் நிறம் பற்றிய சில சிந்தனைகளை நமக்கு அளிக்கின்றன.

சேக்கிழாரின் நோக்கம், செய்யவனின் புகழையும், சிவனடியார் தம் அன்பு நெறியையும் பாடுதலே ஆகும். இதனை மனதில் கொண்டே, தம் இலக்கியத்தில் ஒவ்வொரு இழையையும் பின்னியிருக்கின்றார் இப்புலவர் என்பதனை, நிறம் பற்றிய அவரது கருத்துகள் வலியுறுத்துகின்றன.

நிறத்தைச் சேக்கிழார் பயன்படுத்தியிருக்கும் முறை அவற்றின் மிகுந்த செல்வாக்கு, அவை மூலம் சைவ சமயத்தின் மேன்மையுரைத்தல் போன்றவற்றை நோக்க, 'வரலாற்றை இலக்கியமாக்கத் தேவையானது இலக்கியச் சுவைபடக் கூறுதலும், சிறந்த வருணனை முறைகளுமாகும். எனினும் இலக்கிய நோக்கம் அடிப்படையானது. எனவே ஒன்றிலிருந்து ஒன்று தனிப்படாவண்ணம் பாடப்படவேண்டும்' என்ற புலவரின் எண்ணமும் புலனாகின்றது.

பொதுவாக இலக்கியங்களில், பொருட்களை விளக்க நிறங்கள் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன. முன்னோர் வழியில் நின்று, சேக்கிழாரும் அம்மரபினைப் பின்பற்றுகின்றார். வெள்ளை, கருங்குவளை, செங்கரும்பு, பைங்கமுகு என்று அடையாக நிறம் பேசப்படுகின்றது. எரிதுள்ளினால் அன்ன என்றும், செம்பவளவாய் என்றும், காவிரிநதி மன்மகளுக்கு நித்திலத்தாமம் (3 : 2) போன்று உவமையாகவும், அடிதாமரைப் போது போன்று உருவகமாகவும் பொருள் சிறப்பிக்கப்படு கின்றது.

இவ்வாறு அணிபெற பொருட்களைச் சுட்டும் சேக்கிழாரின் இலக்கியத்தில், பொருள் விளக்கத்துடன், இலக்கியச்சுவைபயக்க இணைத்து வருணிக்கும் அணிகள்இடங்கள் மிகப்பலவாக அமை கின்றன. சில இலக்கிய நோக்கத்தையும் விளக்குவன. இவற்றை இரு நிலையாக வகைப்படுத்தலாம்.

ஒன்று ஒரே நிறத்தைப் பல இடங்களில் காட்டி வருணித்தல்.

மலர் நீலம் வயல்காட்டும் மைநீலம் மதி காட்டும்
புலர் நீலம் இருள் காட்டும்' (27.14)

என்றும்போது 'நீலம்' என்ற நிறச்சொல் திருப்ப, திரும்ப பயிற்சி பெறும் தன்மையில் இயற்கைவருணனை அமைகின்றது.

செந்தீ மேல் எழும் பொழுது செம்மலர்மேல் வந்து எழுந்த
அந்தணன் போலத் தோன்றினார் (24 : 33)

இவண் திருநாளைப்போவாரின் செந்தீயில் எழுந்த தோற்றத்தை, செம்மலர் போல் அயனுடன் ஒப்பிடும் தன்மையில் செம்மை நிறம் இரண்டு முறை வந்து, இலக்கியச் சுவையுடன், புராணக் கருத்தினையும் (செம்மலர் மேல் அந்தணன்) சுட்டு கின்ற தன்மையைக் காண்கின்றோம்.

மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார் (16.14) என்று கண்ணப்பரின் தன்மை இயம்பும் (16.141), நிலையில், மை, கருமை இரண்டுமே ஒரே நிறத்தைக் குறித்து அடுத்தடுத்து வருகின்றன. எனினும் இவை அடர்த்தியில் சிறிது வேறுபட்டன என்பதனை, மை வண்ணத்தையுடைய கருங்குஞ்சி என்னும் தொடரில் காண்கின்றோம். கருமையை விடவும் 'மை' மிகுந்த அடர்ந்த கறுப்பு நிறமுடையது என்பது இதனால் தெளிவு பெறுகின்றது. மையிருள் (10.15) போன்ற வேறுசில இடங்களிலும் இதனை உணர்த்துகின்றார் சேக்கிழார். இன்று மையிருட்டு என்று நாம் சொல்வதும் இத்துடன் இணைத்து நோக்கத் தக்கது.

> மாமறையோர் குழாத்தினுடன் மல்கு திருத்தொண்டர்
> குழாம் மருங்கு சூழ்ந்து
>
> தாம் அறுவை உத்தரியம் தனி விசும்பில் எறிஞ்தார்க்குத்
> தன்மையாலே
>
> மறுகு சிவானந்தப் பெருக்காறு போத அதன்மீது பொங்கும்
>
> கமர் நுரைக் குமிழி ஒழிந்திழிவன போல் விளங்கு
> பெருங்காட்சித்தாக (34-95)

என்னும் பாடலிலும் மேற்குறிப்பிட்ட உத்தியைக் கையாண்டுள்ளார். சிவனடியாரின் வெண்ணீற்றொளி காரணமாக சிவானந்தப் பெருக்காறு போவது போலவும், அவர்கள் தங்கள் உத்தரியத்தை எறிந்து ஆர்க்கும் நிலையில் அவை நுரைக் குமிழிகள் போன்று காணப்பட்டன என்னும் கருத்தமைந்த இப்பாடலில், யாண்டும் நிறச் சொல்லைப் பயன்படுத்தாது பொருட்களாலேயே வெண்மையைப் பாடல் முழுவதும் நிறைத்து விடுகின்றமை சிறப்புடன் அமைகின்றது.

இரண்டாவது, பல நிறங்களையும் ஒரே இடத்தில் காட்சிப் படுத்துதலாகும். இரண்டு நிறங்கள் முதலாகப் பல நிறங்கள் இவண் காட்சிப்படுத்தப் படுகின்றன.

> ''செங்குவளைப் பறித்தணிலார் கருங்குழலில்
>
> ''கருங்குழலின் பாரமாற்றாக் கையளாகி
>
> இதழ்ச் செந்துவர் வாய் நெகிழ்ந்து (174)
>
> கண்ணீலக் கடைசியர்கள் மலர்க் கண் சிலக்கும் (18:2)

மகளிரின் செயற்பாடுகள் இவண் வருணிக்கப்படுகின்றன.

கயல்பாய் பைந்தடம் நந்தூன் கழிந்த பெரும் கருங்குழிசி
வியல்வாய் வெள்வளைத் தரவி மலர் வேரி உலைப்பெய்தங்
அயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்புதும்
வியன் மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம் (3:16)

நாட்டுச் சிறப்புச் சொல்லப் புகுந்த புலவர், (3:16) மகளிரின் விளையாட்டை இவ்வாறு வருணிக்கின்றார்.

பகலில் வெண்மையாக இருக்கும் மதி இரவில் செவ்வொளி யினைத் தருவதைப் புலவர்.

வேலை அழற்கதிர் படிந்த வியன்கங்குல் வெண்மதியம்
சோலை தோறும் நுழைந்து புறப்படும்பொழுது
துதைந்த மலர்ப்
பாலனைந்து மது தோய்ந்து தாதழைத்து பயின்று அந்தி
மாலை எழும் செவ்வொளியை மதியம்போல் மதியுமால் (34.8)

என வெண்மை நிறம் பிற மலர் தாது மது போன்றவற்றுள் பயின்றுவரும் நிலையில் இரவில் செவ்வொளியினைக் கொண்டு திகழ்கின்றது என இயற்கை நிகழ்ச்சியைத் தற்குறிப் பேற்ற மாக்கிக் கூறுகின்றார்.

இதேபோன்று இயற்கை காட்சியாகிய நெற்பரப்பின் இடை இடையே கமலங்களின் தோற்றந்தைக்கண்ட புலவருக்கு, சிவனடியார்கள் வெண்பரப்பில் வேள்வித் தீ வளர்க்கும் தன்மை நினைவுக்கு வருகின்றது. இந்நிலையை,

பணையில் விளைந்த வெண் நெல்லின் பரப்பின் மீது
படச்செய்ய
துணர்மென் கமலம் இடைஇடையே சுடர்விட்டு எழுந்து
தோன்றுவது
புணர் வெண் புரி நூல் அவர் வேள்விக் கணத்தில் புனைந்த
வேதிகை மேல்
மணல்வென் பரப்பில் இடைஇடையே வளர்ந்த செந்தீ
மானுமால்

என நிறத்தை உவமையாக் நாயன்மார்களின் இயல்பையும் சொல்லிச் செல்கின்றார்.

மேல்சுட்டிய நிலையில் சேக்கிழார் நிறங்களை பலப்பட பாடல்களில் வருணனையாகவும் பொருள் விளக்கத்திற்க்கும் பயன்படுத்தும் நிலையிலும் காண்கிறோம்.

நிறம் வண்ணம் என்ற இரண்டு சொற்களால் நிறத்தைக் குறிப்பிடும் புலவர் நிறச்சொற்களைப் பயன்படுத்துவதை விடவும் நிறச்சொற்களின் குறுகியவடிவங்களையும் ஒத்த நிற முடைய பொருட்களைச் கட்டி நிறம் உணர்த்துவதிலுமே மிகுந்த ஈடுபாடு காட்டி உள்ளார். சிவப்புக்கு முதன்மை நிலையை அளித்த சேக்கிழார் மஞ்சளைப் பொன் என்ற சொல்லாலேயே மரபுப்படி கூறிச்செல்கின்றார். கருமை வெண்மைக்கு அடுத்த நிலையிலேயே பச்சை நீலங்களின் பயிற்சி அமைகின்றது.

## சிவப்பு

செம், செய்ய, சே, செக்கர், எரி, அழல், அந்தி, பவழம், குன்றிமணி, அரக்கு, செந்தாமரை போன்றன சிவப்பினைச் சுட்டி அமைகின்றன.

செந்நெல், செந்தினை, செங்கரும்பு, செந்தாமரை என இயற்கைப் பொருட்களில் சிறப்பானவை பற்றி பல இடங்களில் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இவை உண்மையே அன்றி உயர்வு நவிற்சி இல்லை. அடுத்து உடல், அழகு என்ற நிலையிலும் உடலின் பல பகுதிகள் சிவப்பாக இருத்தல் உயர் வானது என்ற எண்ணம் அன்று முதல் இன்றுவரை தமிழரிடம் காணப்படும் எண்ணமாகும். சேவடி, செங்கை, செங்கண், செம்பருளவாய், என உயர்ந்தோர் சிறப்பைச் சுட்டும் இடத்து இதனையும் சேக்கிழார் சுட்டுகின்றார். எனவே ஈண்டும் இயற்கையிலேயே சிவப்பு நிறம் சுட்டும் உயர்வு தெரிகின்றது.

எனவே. படைப்பிலேயே சிவப்பு நிறம் சிறப்பானவற்றைப் புலப்படுத்தும் நிலையில் அமைவதைக் கண்ட தமிழன் தான் உருவாக்கிய எண்ணங்களிலும் சிவப்புக்கு மேன்மைப் பொருள் அளித்தான் எனலாம். எனவே செம்மைப் பொருள் கொண்டு செந்நிலை, செங்கோல், செந்நெறி என மேலும் பிற சொற்களை அமைத்துக்கொள்கின்றான். தான் படைத்த அல்லது தன்னைப் படைத்த கடவுளின் நிறத்தையும் செம்மையென சிவனை செய்யவன் ஆக்கிவிட்ட நிலையையும் நாம் காண்கின்றோம் சிவனை சடையும் வெண்ணெல், நீலநெல் எனவும் இவர் குறிப்

செஞ்சடை, செய்யசடை என சேக்கிழாரால் குறிப்பிடப் படுகின்றது. பொதுவாக கருங்கூந்தலே தமிழரால் விரும்பப் படுவது. ஆயின் செய்யவனாகிய சிவனின் சடையும் செஞ் சடையாக அமைகின்றது. சடை பொதுவாக அழகற்றது ஆயினும் சிவன் தலையில் காணப்பட்டமையால் சிறப்பானது என்று சுட்ட சிவப்பினைச் சுட்டி இருக்கலாம் என்று தோன்று கிறது.

நிறங்களைச் சிவப்பு,பச்சை,நீலமென்று ஒரு சில சொற்களில் பொதுவாக அடக்குகின்றோம். ஆயின் எந்தவொரு நிறமும் அக்குறிப்பிட்ட சொல்லில் மட்டும் அடங்காது என்பது நிறங்களைப் பார்க்க தெளிவாகின்ற ஓர் உண்மையாகும். இலைகள் அனைத்தும் பச்சை நிறங்களே. ஆயின் ஒவ்வொரு இலையும் சிறிது வேறுபட்ட நிறபச்சையைத் தவிர ஒரே பச்சை நிறமன்று. இதனையும் தமிழர் அன்றே உணர்ந்தனர். இவ் வேறுபாட்டை ஒத்த நிறமுடைய பொருட்களைக் கூறி விளக்கினர். அரக்கு நிறம், ரத்த நிறம், ரோசா நிறம், என இன்று நாம் சிவப்பினை வித்தியாசப்படுத்துவது போன்று ஒவ்வொரு நிறத்தினையும் அன்றே வேறுபடுத்தினர். சேக்கிழாரின் புராணத்தில் ஒரே ஒரு சான்றை இவண் சுட்டலாம்.

பாதம், கைகள், போன்ற உருப்புகளில் சிவப்பின் பெருமை மேலே சுட்டப்பட்டது. பெரியவர்களை விடவும் குழந்தைகளின் இப்பகுதிகள் அதிக சிவப்பு நிறம் பொருந்தியதாகும். இதனை ஞானசம்பந்தரின் குழந்தைப் பருவ வருணைனயின் போது சேக்கிழார்,

*தாதவிழ் செந்தாமரையின் அக இதழ் போல் சீறடிகள்*
(34.111)

என்கின்றார். செந்தாமரையின் வெளிப்பக்க இதழ்களைவிட அக இதழ்கள் மிகுந்த செம்மை நிறத்துடன் காணப்படும் நிலையே இவரின் இவ்வுவமைக்கு அடிப்படை ஆகின்றது.

செந்தாமரைக் கண், அழகினைக் காட்ட செங்கண் கோபத்தைக் காட்டும் தன்மையில் சுட்டப்படுவது (குன்றிய நிகர் முன் செற எரிகொடு விழி. 16–90) நிறத்தில் மட்டும் வேறுபாடு

நிறத்தில் மட்டும் வேறுபாடு. வ்வாறு உணர்வினை வெளிப் படுத்தும் நிலையிலும் நிறத்தின் பங்கினைக் காட்ட வல்லதாக அமைகின்றது.

இவ்வாறு பல நிலையிலும் பேசப்படும் சிவப்புக்குரிய இவ் விலக்கிய முதன்மை, செய்யனவாகிய சிவன் புகழ் பாடுதல், மனச் செம்மை யுடைய அடியார்தம் திறம் பேசுதல், செந் நெறியில் அவர்தம் வாழ்வு அமைதல், சிறந்தோர் இலக்கணப்படி அங்க அழகுகள் அமைதல் போன்றவற்றால் அமைந்தது எனல் பொருந்தும்.

**கருமை**

கருமையைக் குறிக்க கரு, என்ற பகுதியுடன் கறுப்பு, கரி, கரிய, கருகி, இருள், இரும், மை, மஞ்சு, கரை, காள, முகில், அல் சாம போன்ற மாற்று வடிவங்களும் நிறப் பொருட்களும் அமை கின்றன. வருணனையாக அமையும் கருமை, கருங்கூந்தலைச் சிறப்பித்தும், கரு முகில் (3.27) கருங்குவளை (3.17) என நாட்டு வளம் உணர்த்தியும் அமைவதை ஆசிரியர் காட்டுகிறார். கருவரை, காளமேகம் ஏந்தியதென்ன (16.15), கருங்கதிர் விரிக்கும் காமரு குளவி (16.16) போன்ற நிலங்களில் கருமை மேனியினை சிறப்பிக்கும் சேக்கிழார் பான்மதி உவரி ஈன்றால் என (16.13) கண்ணப்பரின் நிறத்தினை கடலுக்கு உவமிக்கும் நிலை, மேலும் சிறப்புகின்றது.

சிவனின் கழுத்து நஞ்சுண்ட காரணத்தால் கருநிறம் பெற்று இருப்பதைப் பல இடங்களில் சுட்டுகின்றார். தனக்கென்று சிறந்ததைக் கொள்ளாதவன் தன்னைச் சார்ந்தவர்களை அளிப்பவன் என்ற நிலையில் தம் இறையின் பெருமையகைற்போர் உணரவேண்டும் என்ற அவர் பல இடங்களில் மைமிடற்றனாகச் சிவனைக் காட்ட இப்புலவரைத் தூண்டி இருக்கக் கூடுமென தோன்றுகிறது. கருமையுடன் நீலகண்டர் என்றும் மணிமிடற்நர் என்றும் வேறு நிறங்களையும் குறிப்பிடுதல் ஆய்வுக்குரியது. இருண்ட கண்டம் விஷத்தால் செம்மை நிற மாறுதலால் ஏற்பட்டது. இதனை உணர்த்துதலே புலவர் நோக்கம். எனவே அவர்கள் கருமை, நீலம், மணியின் நிறம், போன்ற வற்றின் வேறுபாட்டை உணர்த்தாது பொருளை உணர்த்து தற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர் என்பதை நிறங்களின் பயன்பாடு நமக்குக் காட்டுகின்றது. நிறங்கள் வேறு

பட்டன எனினும் கருமையின் கூறுகள் கருநீலம், கரும் பச்சை இவற்றில் இருப்பதாக நமக்கு தெரிகின்ற நிலையே இவற்றை ஒன்று என்று தவறாக எண்ணும் மன உணர்வை நமக்குத் தருகின்றன என்று அமைதி காணலாம்.

வெண்மை

வெண், வெள்ளி, வெள், ஒண், வாள், வாம், வாலிது, நரை, பால் போன்றன வெண்மையைக் குறிப்பன. வெண்குடை வெள்ளிப் பொருப்பு, பால்மதி, என வெண்ணிறப் பொருள்களை விளக்குவர் புலவர், தமிழர் ஆதி முதலே வெண்மையைத் தூய்மை என்ற குறியீடாகக் கருதிவந்தனர் என்பதை நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும். இம்மரபு உண்மையைச் சேக்கிழாரும் உறுதிப்படுத்துகின்றார்.

வெண்ணீர் போல் உள்ளும் புனிதர்கள் (5.6)

அடியவர் மேனிமேல் நிரந்த நீற்றொளியால் நிறை
தூய்மையாய் (5:3)

தூய நீறுபுனை, (6.96)

போன்ற சில விளக்கங்கள் இதனை வாளியசுவை, வாலிய நேசம், வாலிதாம் நிலைமை உமை என்ற சொற்பயிற்சிகளை நோக்க வெண்மையினை, 'உண்மை, 'சிறப்பு, என்ற பொருள்கள் குறித்தும் சேக்கிழார் பயன்படுத்துகின்றார் எனப் புரிகிறது. சிவனோடு தொடர்புடைமை காரணமாக வெண்ணிறமும், அதிக மாக இடலக்கியத்தில் பயிற்சி பெறக் காணலாம்.

வெண்ணீற்றின் பெருமை, அதற்குச் சிவனடியார் கொடுத்த சிறப்பு, போன்றவற்றைப் பல நாயன்மார் வரலாற்றிலும் எடுத்தியம்புகின்றார் சேக்கிழார். வெண்ணீறு சிவபெருமானுடன் இணைத்துப் பேசுவதற்குரிய காரணம் சேக்கிழாரில் புலப்படுத்தப் படவில்லை. ஆயினும், நிறம் பற்றிய ஆய்வு, இதற்கு அடிப் படை ஏதாவது இருக்கலாம் என்ற எண்ணத்தைத் தருகின்றது.

பொடிமூடு தழலன்ன (18.25) காணப்படும் சிவன் மேனியை மறைந்திருப்பது வெண்ணீறு எனச் சேக்கிழாரால் குறிப்பிடப் பட்டாலும், புராணக் கதைப்படி சுடுகாட்டு நீறே ஆகும். சாம்பல் நிறம் என்று எடுத்துக் காணின் அது வெண்மையன்று.

வெண்மையும் கருமையும் கலந்ததொரு நிறமேயாகும். எனவே திருநீறு என்பதும் இவ்விரண்டு நிறங்களின் கலவை என்றே ஆகின்றது.

உலகத்தை எடுத்துக் கொண்டால் இருவித நிறங்களையே யாவற்றுக்கும் அடிப்படை எனலாம். ஒளியில் அல்லது வெளிச்சத்தில் நாம் வண்ணங்கள் எல்லாவற்றையும் காண்கின்றோம். ஆயின் இருள்வர அனைத்தும் மறைந்துவிடக் காண்கின்றோம். இதனையே வெண்ணிறத்தில் எல்லா நிறங்களும் அடக்கம் என்ற விஞ்ஞான உண்மையும் காட்டுகிறது. எனவே உலகமே இவ்விரு நிறமாக ஆகின்றது. இந்நிலையில் உலகப் பொருள்களின் இறுதியாகிய சாம்பலில், வெள்ளை நிறமும் கருமையும் கலந்த சாம்பலில், வெண்ணிறமாகவும், கருமையாகவும் காட்சியளிக்கும் உலகமே அடங்கி விடுகின்றது. என்பதனையும், அவ்வுலகம் தன்னுள் அடக்கும் அல்லது அவ்வுலகமாகவேதான் இருக்கின்றவன் என்பதை உகலோர் உணரும் படியாகச் சிவனைக் காட்டுதலே இதனைத் தொடர்புபடுத்தக் காரணமாகும் எனத் தோன்றுகிறது.

பச்சை

செம்மை, கருமை, வெண்மை மூன்றும் அதிக செல்வாக்குடன் திகழ, பச்சை நீலம் போன்றவை அடுத்த நிலையிலேயே அமைகின்றன. பச்சை சாதாரண வருணனை அல்லது பொருள் விளக்கம் என்ற நிலையில்தான், இங்கு பயிலப்படுகிறது. பைந்தழை என பசிய தழையினையும் பாசனத்தடம் என குளிர்ச்சியையும் விளக்கி நிற்கும் இந்நிறம் தந்திரத்தைக் குறியீடாக உணர்த்திற்று என்பதனை 'பைங்கண் குறுநரி, (5.10.,) (15 10) என்ற சொற்றொடர் மூலம் உணரச் செய்கின்றார் புலவர்.

## நீலம்

சிறிது இடங்களிலே பயிற்சிபெறும் இந்நிறம், நிறமாகவும், நீலமலரைக் குறித்தும் அமைகின்றதைக் காண்கின்றோம். செந்நெல் அரிசியை இறைவனுக்குப் படைத்து நீல நெல்லரிசியைத் தான் உண்ணுவதைக் காட்டுமிடத்து, செந்நெல்லை விடத் தாழ்ந்தது என்ற பொருளில் சேக்கிழார் நீலத்தைக் கையாள்கின்றார் போல் தோன்றுகின்றது. அவன்

இயற்கைப் பொருள் என்ற நிலையில் இதனைக் கொள்ளலாம். எனினும் பிற இடங்களிலும் நீலத்துக்கு அவ்வளவு சிறப்பு அளித்ததாகத் தெரியவில்லை.

பொன்

பொன் நிறமாகச் சில இடங்களில் குறிக்கும்போது மஞ்சளைக் குறித்தமைதலைக் காண்கின்றோம். மஞ்சள் நிறத்தை இன்று மங்கலமாகக் கருதுகின்றோம். அன்றும் மஞ்சள் பூசுதல் அழகுடையது என்னும் கருத்து இருந்துள்ளது. (நாலடியார் மஞ்சள் அழகும்) எனினும், அதிகமாக கவரப்படாத அல்லது இலக்கியச் சிறப்பு பெறாத ஒரு நிற மாகவே மஞ்சள் என்ற சொல் நிலையில் இதனை நாம் காண கின்றோம். 'பொன்' என்பதனையே அன்று முதல் இடைக்கால இலக்கியங்களின் (திருவாசகத்தில் நிறம்) வரையிலும், இதன் இத்தகைய இலக்கிய மரபினைக் காண இதற்குக் காரணம் என்னவென்று அறியக் கூடவில்லை. கொன்றை பொன் சொரிவு (25-3) என கொன்றையின் மஞ்சள் நிறப்பூ சேக்கிழாரால் சுட்டப் படுகின்றது.

பொன்னவிழிப்பன மலர்ப்புன்னை (25.36) என்ற புன்னை மலரையும் பொன்னுக்கு இணையாக்குவார். மேலும், பொன்னார் மேனி என்றும், பொன்மலைவல்லி என்றும் சுட்டப்படுகின்றன.

ஒரே நிறம் சிறு சிறு வித்தியாசங்களைத் தன்னுள் அடக்கி நிற்றலை நோக்க பொன் என்று சுட்டப்படும் இவை அனைத்து இடங்களிலும் ஒன்றுபட்ட மஞ்சள் நிறமாக இருத்தல் முடியாதது. எனினும் பொன் என்ற ஒரே சொல்லால் குறிப் பிடுகின்றனர். பெரியவர், சிறியவர் என்று முதிர்வு இளமை வைத்தே உவமைகளை மாற்றி அமைத்து, நுணுக்கமாக நிற வேறுபாடு காட்டிய சேக்கிழார், ஏன் மஞ்சள் அனைத்தையும் ஒரே நிறமாகக் குறித்தனர் என்பது மீண்டும் ஆராயப்பட வேண்டிய ஒரு எண்ணமாக அமைகிறது.

இவ்வாறு நிறப்பெயர்களை வேறுசில நிலைகளிலும் சேக்கிழார் புராணம் சுட்டுகின்றது. ஊர்ப்பெயர்கள் நிறப் பெயரால் அமைந்திருக்கக் காணலாம். இவண் செங்காட்டாங்குடி (27.240), செங்குன்றூர் (12.2) திருவெண்காடு, (34.124) பைஞ் ஞலி (27.310) போன்ற சிலவற்றைச் சுட்டலாம்.

செங்குன்று—செம்மண் பொருந்திய ஊர் காரணமாக இருக்கலாம். திருவெண்காடு, வெண்ணீறு நிறைந்த சுடு காட்டைக் குறித்த நிலையில் பின்னர் சிறப்புப்பெயர் பெற்றிருக்கலாம்.

## முடிவுரை

பெரிய புராணத்தில் நிறம் பற்றிய கோட்பாடு வெறுமனே விளக்க நிலை அல்லது வருணனை என்ற நிலையிலிருந்தும் சிறிது உயர்ந்து நிற்கின்றது என்பது நிறத்தின் பயன்பாடுகள் உணர்த்தும் ஒரு உண்மையாக அமைகின்றது.

தன்னுடைய இலக்கிய நோக்கான சிவபெருமானின் புகழ் பாடுதல் என்ற நோக்கத்திற்குப் பல நிலைகளிலும் துணை செய்யுமாறு நிறங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றார் சேக்கிழார்.

இலக்கியச் சிறப்புக்கும் நிறத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றார். பல நிறங்களையும் ஒரே இடத்தில் பார்க்கும் நிலை இலக்கியச்சுவையுடன், நாட்டுவளம் பற்றிய அறிவையும் தருகின்றது.

வெண்சங்கு மணத்தில் ஒலித்தல், இறைவர்க்குச் சிறந்த பொருட்களைப் படைத்தல் (செந்நெல் படைத்தல்) போன்ற சில பழக்க வழக்கங்களை அறியும் வாய்ப்பினையும் தருகிறது

உடல் அழகுகள் பற்றிய தமிழர் எண்ணங்களை நாம் அறிய வழி வகுக்கின்றது.

சேக்கிழார் காலத்தில் சிறந்த நிலையில் சிகப்பு நிறத்தையும் தூய்மை என்ற எண்ணத்தில் வெண்மையையும் மதித்த தமிழர் பிற எல்லா நிறங்களுக்கும் இதற்கு அடுத்த நிலையையே அளித்தனர் என்பதும் இவ்வெண்ணங்கள் வழி தெளிவாகின்றது.

இவ்வாறு அந்தந்த காலத்தில் மக்கள் மனநிலையையும், புலவரின் நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டே நிறங்கள், இலக்கியத்தில் தங்கள் மரபினை வெளிக்காட்டின என்பது தெளிவாகும்.

# 14. திருவிளையாடற் புராணம்

ப. கோபாலன்

கண்ணுக்குப் புலமாகிய வண்ணச் சிறப்பியல்புகள் எவ்வாறு முதற்கண் மனதில் நுழைந்தன? ஓர் உருவத்தை வெள்ளை யென்றும் பிறிதொன்றைக் கருப்பென்றும் எக்குறிப்பு கொண்டு நாம் வேறுபடுத்திக் கூறுகின்றோம்? கருப்பும் சிவப்பும் ஒன்றல்ல என உணரப்படுவதற்குரிய அடிப்படை நியதி யாது? என்ற வினாவிற்கும் அறிவியல் அடிப்படையில் (இக்கட்டுரை யாளனால்) விளக்கம் தர இயலவில்லை.

ஒருபொருள், நிறமிகளின் காரணமாகத் தனக்கென ஒரு நிறத்தைப் பெற்றுத் தோன்றுதற்குரிய காரணங்கள் மூன்றே. ஒன்று பொருளின் குணம், இரண்டு பார்க்கின்ற கண்ணின் குணம், மூன்று கண்ணிற்கும் பார்க்கப்படுகின்ற பொருளுக்கும் இடையேயுள்ள பொருளின் குணம். இக்காரணங்களில் ஏதேனும் ஒன்றால் ஒரு பொருளின் நிறவண்ணம் கண்ணுக்குப் புலமாகின்றது.

தமிழில் உள்ள நிறச் சொற்கள் சொல்லாராய்ச்சிக்குரியன. சொல்லுணர்த்தும் பொருளைத் துருவியறிந்த தொல்காப்பிய னார் வண்ணத்தினைக் குறிக்கும் சொற்களை இடுகுறிப் பெயர்ச் சொற்களாகக் கூறியிருக்கமாட்டார். காரணப் பெயர்களாகக் கருதியிருப்பார் எனக் கொள்வதே பொருத்தமுடைத்து. நிறமுணர்த்தும் சொற்களை எல்லா இலக்கிய ஆசிரியர்களும் தத்தம் நுண்மாண் நுழைபுலத்திற்கு ஏற்பவும் பாடுபொருளுக்கு ஏற்பவும் தத்தம் இலக்கியங்களில் கதை நிகழ்ச்சிகளிலும், குறிப்புப் பொருள்களிலும் வருணனைகளிலும் பயன்படுத்தி யுள்ளனர்.

## திருவிளையாடலில் நிறம்

சிவபெருமானின் திருவிளையாடல் நிகழ்ச்சிகளைக் கூறும் பரஞ்சோதியார், திருவிளையாடலில் ஆங்காங்கு நிறம் தொடர் பான சொற்களையும்,

சொற்றொடர்களையும், அவை சம்பந்தப்பட்ட செய்திகளையும் கூறியுள்ளார். அவற்றைத் தொகுத்து அளிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஐந்து நிற முகங்களைப் பெற்றவன் சிவபெருமான் என்பது புராணக் கருத்து. இதனை 'நிறங்கள் ஓரைந்துடையாய்'[1] என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமானின் ஈசான முகம் (ந) பொன்னிறமாகவும், தத்புருட முகம் (ம) வெண்ணிறமாகவும், அகோரமுகம் (சி) செந்நிறமாகவும், வாம முகம் (வா) கருப்பு நிறமாகவும், சத்யோசாத முகம் (ய) புகை நிறமாகவும் உள்ளன என்பதையே இவ்வடியால் கூறியுள்ளார். இந்நிறங்கள் முறையே ஐந்தெழுந்து மந்திரமாகிய 'நமசிவாய' என்பதன் குறீடாகவும் விளங்குகின்றன.

## நிறத்தால் கடவுளைச் சுட்டல்

பரஞ்சோதியார் மழைக்கேதுவான மேகங்களைக் கூறும்பொழுது, ஒலிக்கின்ற மேகங்கள் சிவபெருமானது திருவெண்ணீற்றினையணிந்த திருமேனி போலச்சென்று, கடல் நீரைப் பருகி உமா தேவியாரது திருமேனி போலப் பசிய நிறம் அடைந்து நிலவுலகெங்கனும் உண்டாகிய கதிரவனின் வெப்பத்தைக் குறைத்து ஒழிக்க முழக்கமுடைய நீர்சுமந்து மேலெழுந்தன என்பர். இதனை,

தெய்வ நாயக நீறணி மேனிபோற் சென்று
பௌவ மேய்ந்துமை மேனிபோற் பசந்து பல்லுயிர்க்கு
மெவ்வ மாற்றுவான் சுரந்திடு மின்னருளென்னக்
கெள்வை நீர்சுரஞ் தெழுந்தன கனைகுரன் மேகம்

எனக்குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் சிவபெருமான், உமா தேவியாரின் மேனியின் நிறத்தைச் சுட்டியதோடன்றித் தத்துவக் கருத்தினையும் குறிப்பிட்டுள்ளார். மேகம் வெண்ணிறமாகச் சென்று கடல் நீரைப்பருகி பசுமை நிறமாய் ஆன்மாக்களைக் காக்கும் பொருட்டு ஆரவாரித்து வானில் கிளம்பியது என்பது சிந்தனைக்குரியது.

---

1. திருவாசகம், சிவபுராணம், வரி. 49

தேவர்களை நிறத்தைக் குறிப்பிடும் சொற்றொடர் களாலேயே குறிப்பிடுகின்ற தன்மையினைப் பல பாடல்களில் காணமுடிகின்றது. கீழ்வரும் சொற்றொடர்கள் அவற்றை உறுதிப்படுத்துகின்றன.

காவிதிகழ் மணிகண்டர் [3]

கரியவன் [4]

வெள்ளைக் கிழத்தி வெண்மலராள் [5]

செம்மலராள் [6]

வெண்களிற்றவன் [7]

கரிய வெண்திரைநீர்ச் செல்வன் [8]

காழ்கெழு கண்டத்து [9]

செந்திரு மார்பினாற்கு [10]

வெண்கதிர்ச் செல்வன் [11]

இவை முறையே நீலோற்பல மலர்போலும் விளங்கும் திருக் கழுத்தையுடைய சிவபெருமான், கருநிறம் பொருந்திய திருமால், வெண்டாமரையிலுள்ள கலைமகள், வெண்ணிறம் பொருந்திய ஐராவதம் என்னும் யானையை வாகனமாக உடைய தேவர் தலைவன் — இந்திரன், பெரிய வெண்ணிறமான அலைகளை யுடைய கடற்செல்வனாகிய வருணன், கருமை மிக்க திருமிடற் றினையுடைய சோமசுந்தரன், இலக்குமி, சந்திரன், முதலா னோரைக் குறிக்கின்றன.

---

2. திருவிளையாடல் — திருநாட்டுச் சிறப்பு, பா. 2.
3. எழுகடல் அழைத்த படலம். பா. 12.
4. உக்கிர குமாரபாண்டியன் திருவவதாரப் படலம், பா.3.
5. மேற்படி, பா. 12. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம், பா. 24.
6. திருமணப் படலம், பா. 17.
7. வேல்வளை செண்டு கொடுத்த படலம், பா. 26.
8. உக்கிரகுமாரபாண்டியன் திருவவதாரப் படலம், பா. 26.
9. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம், பா. 1.
10. மாணிக்கம் விற்ற படலம், பா. 90.
11. வேல்வளை செண்டு கொடுத்த படலம், பா. 45

## பொன்னிறம்

பெரும்பாலும் பரஞ்சோதியார் பொன்னிறத்தினைப் பற்றிக் குறிப்பிடுங்கால் உவமையாகவும் அடையாகவும் கூறுகின்றார்.

பொற்கவின் குலைத் தெங்கு கார்ப்பந்தரைப் பொறுத்து[12]

பொன்சொரி வேங்கை[13]

பொன் அவிர் சுணங்குண் கொங்கை[14]

பொற் கமலம்[15]

பொன்தாமரை[16]

பொற்பூண்[17]

பொன்னவிர் மலர்க் கொம்பன்னாள்[18]

## வெண்மை

தூய்மையின் விளக்கமாகவும் சமாதானத்தின் சின்னமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறம் வெண்மையாகும். இந்நூலாசிரியர், புனிதமாகக் கருதுகின்ற வெள்ளை மனம் படைத்த விருப்பு வெறுப்பு அற்ற முனிவர்கள் ஆகியோரைக் கூறுங்கால் வெண்மை நிறத்தினைப் பாங்குறப் பயன்படுத்தியுள்ளார்.

ஒப்பற்ற சிறப்பினை உடைய திருக்கயிலாய மலையில் முனிவர்கள் திருவெண்ணீறு பூசி சிவபெருமானைத் தம் அகத்தே பெற்று அசைவின்றி இருந்து அருவிபோல் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டிருத்தலால் கயிலாய மலைபோல் விளங்குவர். கயிலைமலை வெள்ளிய ஆடைகளை விரித்தாற் போன்று

12. திருநகரச் சிறப்பு, பா. 6.
13. திருநாட்டுச் சிறப்பு, பா. 36.
14. இந்திரன் பழிதீர்த்த படலம், பா. 2.
15. மூர்த்தி விசேடப் படலம், பா. 81.
16. இந்திரன் பழிதீர்த்த படலம், பா. 81
17. மேற்படி, பா. 2.
18. திருமணப்படலம், பா. 5.

ஆரவாரித்து விழும் அருவிரத்திரளின் வெள்ளத்தைச் சொரிதலே அன்றி, நான்கு வேதங்களின் முடியினுள் விளங்கும் ஒளிப்பிழம்பினை அகத்திற்கொண்டு பேரின்பத்தில் அழுந்திக் கிடக்கின்ற பெரிய முனிவர்களின் கண்களும் ஆனந்த அருவியாகிய வெள்ளத்தைச் சொரிவனவாம். இதனைப் பரஞ்சோதியார்,

ஆங்கு வெண்டுகில் உரித்தெனக் கல்லென ஆர்த்து
வீங்கு காலரு வித்திரன் வெள்ளமே அன்றி
ஓங்கு நான்மறைச் சிடுமியின் உள்ளொளி நோக்கித்
தூங்கு மாதவர் கண்களுஞ் சொரிவன வெள்ளம்[19]

மதுரை மாநகரத்தின் கண்ணிருந்த வானுயர்ந்து நின்ற வெள்ளிய ஒளிவீசும் மாடங்கள் கலைமகளின் இருப்பிடம் என்பதையேனும் அல்லது புகழ் மாதின் வீட்டையேனும் ஒக்கும் எனக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

திக்கும் வானமும் புதையிருள் தின்றுவெண் சோதி
கக்கு மாளிகை நிவப்புறு காட்சியந் நகருண்
மிக்க வாளிதழ்த் தாமரை வெண்மக ளிருக்கை
யொக்கு மல்லலு புகழ்மக ளிருக்கையு மொக்கும்.[20]

இறைவனை அருச்சிப்பதற்குரிய வெண்ணி மலர்கள் எவை என்பதை,

வெள்ளை மந்தாரம், முல்லை, மல்லிகை, வெடிவாய்ச் சாதி,
கள்ளவிழ் மயிலை யாதி வெண்மலர்[21]

எனக் குறிக்கின்றார். வெண்மை என்பதை ஈறுகெடுத்து வெண் எனக் கொண்டு ஆளும் இடங்கள் மிகுதியும் உண்டு.சில வருமாறு:

வெண்துகில் விரித்து என்ன[22]
வெண் கவிகை[23]

---

19. திருக்கயிலாயச் சிறப்பு, பா. 5
20. திருநகரச் சிறப்பு, பா. 5.
21. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம், பா. 12.
22. திருக்கயிலாயச் சிறப்பு, பா. 5.
23. இந்திரன் பழிதீர்த்த படலம், பா. 82.

வெண்பட்டால் நீவி [24]

வெண்பட்டு ஆடை [25]

## சிவப்பு

மாந்தளிர்கள் தளிர்த்து வானளாவி நிற்கின்ற காட்சியினைக் கண்ட ஆசிரியர் தளிர்களின் நிறங்காரணமாக அது வானுலகில் உள்ள கற்பக மரங்களின் மீது சீறிச் சிவந்து எழுந்தது போன்று உள்ளது எனத் தற்குறிப்பு ஏற்றமாகக் கற்பனை செய்துள்ளார்; செருந்தி மரங்கள் செந்நிற மலர்களால் பூத்துக் குலுங்குகின்றன. அம்மலர்களில் கருநிற வண்டுகள் தங்கித் தேனை அருந்துகின்றன. சிவந்த செருந்தி மலர்களில் கரிய வண்டுகள் அமர்ந்திருப்பது நீலமணிகளை இடையிடையே பதித்துச் செய்த மகளிரின் காதணிபோல இருந்தது என்பார்.

அண்டவான் றருமேற் சீறிச் சிவந்தெழுந் தாங்குத் தேமாத்
தண்டளி ரீன்று வானந் தைவர நிவந்த காசு
கொண்டிடை யழுத்திச் செய்த குழையணி மகளிர்போல
வண்டிறை கொள்ளப் பூத்து மலர்ந்தன செருந்தி
யெல்லாம் [26].

செந்நிறச் செருந்தி மலரில் வண்டு மொய்ப்பது சிவந்த மணிகளிடையே நீலமணிகளைப் பதித்த காதணியினை வண்டு மொய்க்கும் செருந்தி மலருக்கு ஒப்புமையாகக் கூறுவதிலிருந்து செருந்தி மலர்களின் நிறமும் அவற்றில் தங்கித் தேனைக் குடிக்கும் கருநீல வண்டுகளின் நிறமும் நம் மனத்திரையில் நிழலாடக் காணலாம். இவ்வுவமை, மற்றும் கற்பனையிலிருந்து இவ்வாசிரியர் காலத்தில் செந்நிற மணிகளிடையே நீலமணிகள் பதித்த காதணி இருந்ததும் அதனை மகளிர் அணிந்ததும் புலனாகின்றது.

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள
(சொல்.) உரி. 74

---

24. திருமணப்படலம், பா. 149.
25. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம், பா. 14.
26. தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம், பா. 11.

என்பது தொல்காப்பியர் நூற்பா. இவ்விரு நிறங்களும் வெகுளியாகிய குறிப்பினை உணர்த்துவனவாம். இதற்கு இலக்கியமாகவும் பரிநரியாக்கிய படலத்தில்,

வந்திவரைச் சிவந்தவிழிப் பொறி சிதறக்
கடுகடுத்து மறவோ னோக்கி''
என்று கூறியிருப்பதில்
'சிவந்த விழி' என்பது கோபித்ததால் சிவந்த விழி என்னும் பொருளது ஆகும்.

மனித உடலின் 32 உறுப்பிலக்கணங்களைப் பற்றிக் கூறும் ஆசிரியர் பரஞ்சோதியார், உள்ளங்கால், உள்ளங்கை, கடைக்கண், உதடு, மேல் வாய், நா, நகம் ஆகிய ஏழு உறுப்புக்களும் சிவந்திருந்தால் நன்மையுடன் சிறந்த இன்பமடைவர் என்பதை

அகவடி யங்கை நாட்டக் கடையித ழன்ன நாக்கு
நகமிவை யேழுஞ் சேர்ந்த நன்மையாற் பெறுமா
வின்பம்[28]

என்னும் வரிகளால் தெரிவிக்கிறார்.

பரஞ்சோதியார் விடை, மால், அரக்கர், வேழம், அரிமான் முதலியவற்றின் கண்களுக்கு அடையாக, செம்மைப்பண்பினைக் குறிக்கும் 'செம்' என்ற பெயரடையினைப் பயன்படுத்துகின்றார்.

செங்கண் விடையின்மேல்[29]
செங்கனே றிழிந்து நேர்த்து[30]
செங்கண் மால் விடை[31]
செங்கண்மால்[32]

---

27. திருநகரச் சிறப்பு, பா. 7.
28. உக்கிரகுமார பாண்டியன் திருவவதாரப் படலம், பா. 41.
29. திருமணப்படலம், பா. 138.
30. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம், பா. 13.
31. நரகமெய்த படலம், பா. 1.
32 திருமணப்படலம், பா. 102.

செங்க ணரக்க வஞ்சன்;[33] செங்கண் சினச் செந்தீ[33]
செங்கண் வேழம்[3]; செங்க ணரிமான்[35]

இவற்றில் சீற்ற மிகுதியைக் குறிப்பதற்குச் 'செம்' என்ற பெயரடையினைச் சேர்த்துள்ளார். சீற்றம் மிகுங்கால் கண் சிவந்து காணப்படும்—ஆனால் கண்ணின் பண்பாகவே 'செம்' என்ற பண்புப் பெயர் சேர்ந்திருப்பதால் விடையும், வேழமும், அரக்கரும் சீற்றம் மிக்க இயல்புடையன என்பதைப் புலப்படுத்துகிறது. ஆயின் மால், அரிமான் கண்ணின் பெயரடையாகி அமைந்த 'செம்' என்பது சீற்றக் குறிப்பினைக் குறிக்காது செந்நிறத்தையே குறிக்கும்.

செந்நிறத்தினை செவ், மற்றும் செம் என்ற பெயரடைகளின் மூலமாகவும் ஆசிரியர் குறித்துச் செல்கின்றார். இதனைச் செவ்வண்ணக்கனி,[37] செம்பொன்[38], செம்பொன் பங்கயம்,[39] செம்மலர் மணிபீடம்[40], செய்யவாய் வெளிறாது, செய்ய தாமரை என்றவற்றில் உள்ள 'செய்ய' என்னும் பெயரெச்சச் சொல் நிறத்தினைக் குறிப்பதாக அமைகின்றது.

### கருமை

கருமையினைக் குறிக்கும் ஆசிரியர், 'கறங்குதிரைக் கருங் கடலும் கார் அவுணப் பெருங்கடலும்,[41] கருங்கதிர்;[42] கார் இருள்[43] கறுத்தவாள் அவுணன்[44] கருங்கால் மன்னர்;[45] காழ்கெழு கண்டம்[46] என்ற சொற்றொடர்களால் கூறுகின்றார்

---

33. நாகமெய்த படலம், பா. 7; இந்திரன் பழிதீர்த்த பட பா. 16.
34. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம், பா. 42.
35. உலவாக் கிழியருளிய படலம், பா. 41.
36. இசைவாது வென்ற படலம், பா. 41.
37. மூர்த்தி விசேடப் படலம், பா. 24.
38. திருநாட்டுப் படலம், பா. 32.
39. தீர்த்த விசேடப் படலம், பா. 24.
40. திருமணப் படலம், பா. 85.
41. பாயிரம், பா. 16.
42. இந்திரன் பழிதீர்த்த படலம், பா. 13.
43. திருமணப்படலம், பா. 132.
44. இந்திரன் பழிதீர்த்த படலம், பா. 37.
45. திருநாட்டுச் சிறப்பு, பா. 25.
46. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம், பா. 1.

பெண்களின் கண்கள் மைதீட்டப்பட்டுக் கருநிறத்தோடு விளங்குகின்றன. கருநிறத்தையுடைய மையுண்ட கண்கள் என்பதைப் பின்வருமாறு அமைத்துள்ளார் :

மைக்கருங் கயற் கணங்கை;[47] மைதிகழ்ந்த விழியார்;[48] மைதவழ் கண்ணாள்;[49] மைக்கணா ளொருத்தி;[50] மைவேலை யனைய விழி;[51] மைமிக்க நெடுங்கண்;[52] மையுண் கண்ணியர்[53]

## பச்சை

பாண்டித் திருநாட்டில் மக்களின் உழுதொழில் முயற்சியால் நன்செய் புன்செய்-பயிர்கள் பசுமையாக விளைந்ததையும், மதுரைத் திருநகரில் வணிகர் வீதியில் பலவகை நிறங்களைக் கொண்ட மாலைகள் ஒளிபரப்பிக் கொண்டிருந்ததையும் சிறந்த உவமை ஒன்றினால் வெளிப்படுத்தியுள்ளார்.

கரிய கம்பலக் கிடுகின்மேற் கதிர்விடு பவளத்
தெரியல் பொன்னரி மாலிகை தெண்ணிலாச் சொரியும்
ப்ரிய நித்திலம் மணிவட மரகதப் பசுந்தார்
விரிய விட்டன விந்திர வின்னிரை யனைய[54]

மேலும் பல வர்ணங்களையுடைய பல பொருட்களும், மணிகளும் ஆடைகளும் வணிகர் வீதியில் காட்சியளித்தலால் வணிகரது கடை வீதி குபேரனது அழகாபுரி போன்றது[55] என்பர்.

## நவமணிகளின் நிறங்கள்

வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம், பவளம் ஆகியன நவமணிகள் எனப் படும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தைப் பெற்றுத்

47. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம், பா. 21.
48. இசைவாது வென்ற படலம், பா. 28.
49. பழியஞ்சிய படலம், பா. 28.
50. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம், பா. 34.
51. வலை வீசின படலம், பா. 64.
52. திருமணப்படலம், பா. 125.
53. தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம், பா. 45.
54. திருநகரச் சிறப்பு, பா. 61.
55. மேற்படி, 65—68.

திகழும். இறைவன் வணிகராக எழுந்தருளி வீரபாண்டியனின் திருக்குமரன் அபிடேக பாண்டியனுடைய திருமுடிக்குரிய மாணிக் கங்களை விற்றார். அப்போது மாணிக்க வணிகர் மணிகளின் இலக்கங்களையும், நிறங்களையும், குணத்தினையும், குற்றங் களையும், பயன்களையும், மாணிக்கம் விற்ற திருவிளையாடலில் கூறியுள்ளார். இங்கு நவமணிகளின் நிறங்கள் பற்றிய கருத்தினை மட்டும் காண்போம்.

## மாணிக்கம்

இலக்கியங்களில் மணி என்று வந்தால் அதுபெரும்பாலும் மாணிக்கத்தையே குறிக்கும். செந்நிறம் உள்ள மணியினை மாணிக்கம் என்பர். இது தாமரை மலர், மாதுளம்பூ, மாதுளை விதை, நெருப்பு, செங்கழுநீர்ப்பூ, மின்மினிப்பூச்சி, நாரத்தம் பழம், தீபம், இந்திரகோபம் என்றும் ஒன்பது வகை வண்ணங் களில் ஒன்றைப் பொதுவாகக் கொண்டு திகழும்[56] இம்மாணிக்கம் சாதரங்கம், குருவிந்தம், சௌகந்தி, கோவரங்கம் என்ற பெயர் களால் நாற்சாதியாக விளங்கும்[57]. இவற்றின் நிறங்களாக ஆசிரியர் பின்வரும் இயற்கைப் பொருள்களின் நிறத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

### மாணிக்கம்

| சாதரங்கம் | குருவிந்தம் | சௌகந்தி | கோவரங்கம் |
|---|---|---|---|
| தாமரைமலர் | குன்றிமணி | இலவமலர் | குராமலர் |
| கருநெய்தல்மலர் | முயலிரத்தம் | குயிலின் கண் | குசும்பை |
| கதிரொளி | வெள்ளலோத்த | அசோகந் | மலர் |
| | மலர் | தளிர் | செங்கல் |
| நெருப்பு | பலாசமலர் | செம்பஞ்சு | கொவ்வைக் |
| மின்னி | மஞ்சாடிமலர் | பொன்* | கனி என்னும் |
| மாதுளம்பூ | செவ்வரத்த | பருதோன்றி | நால்வகை |
| மாதுளைவித்து | மலர் | என்னும் அறு | நிறங்களில் |
| மேகம் | முள்ளிலவமலர் | வகை நிறங்- | ஒன்றைக் |
| தீபம் | பொன்* | களில் ஒன்றைக் | கொண்டது |
| இந்திரகோபம் | என்னும் | கொண்டது. | *கூறியது |
| *என்னும் பத்து | எண்வகை | | கூறல். |
| வகை நிறங்களில் | நிறங்களில் | | |
| ஒன்றைக் | ஒன்றைக் | | |
| கொண்டது. | கொண்டது. | | |

56. மாணிக்கம் விற்ற படலம், பா. 39, 40.
57. மேற்படி, பா. 38.

## முத்தின் நிறம்

கடலில் உள்ள சிப்பியினிடத்தும், சங்கினிடத்தும் தோன்றும் முத்துக்கள் மாடப்புறாவின் வெள்ளிய முட்டையின் வடிவினை ஒத்து திரட்சியுடையனவாய் வெள்ளை நிறங்கொண்டு விளங்கும் என்கிறார் ஆசிரியர். முத்துக்கள் பதின்மூன்று பொருள்களிலிருந்து தோன்றுகின்றன என்றும், அவற்றிற்குரிய நிறங்கள் குறித்தும் கூறியுள்ளதைக் கீழ்வரும் பட்டியலில் காணலாம்.[58]

| தாய்மைப் பொருள் | | முத்தின் நிறம் |
| --- | --- | --- |
| சிப்பி, சங்கு | ... | வெள்ளை |
| முகில் | ... | செந்நிறம் கொண்ட சூரியனைப் போன்ற நிறம். |
| மூங்கில் | ... | மழையோடு கலந்துவிழும் ஆலங்கட்டியின் நிறம். |
| பாம்பு | ... | நீலம் |
| பன்றிக்கொம்பு | ... | இரத்த நிறம் |
| வெண்ணெய் | ... | பசிய நிறம் |
| மீன்தலை | ... | பாதிரிமலர் போன்ற நிறம் |
| யானைக்கொம்பு, கரும்பு | ... | பொன்னிறம் |
| சிங்கத்தின் கை, பெண்களின் கழுத்து, கொக்கின் கண்டம் | ... | இம்மூன்றனிடங்களில் தோன்றும் முத்துக்கள் கிடைத்தற்கரியன; ஆதலால் இங்கு அவற்றின் நிறங்கள் கூறப்படவில்லை. |

## முத்திற்குரிய தெய்வங்கள்

பால்போன்று வெண்மையாய் விளங்கும் முத்துக்களுக்குத் தெய்வம் வருணன்; சூரியனைப் போன்ற செந்நிறவொளி வீசும் முத்துக்களுக்கு சூரியன்; இரத்தம்போல் விளங்கும் முத்துக்களுக்கு வாயுதேவன்; பசுமை நிறமுடைய முத்துக்களுக்குக் கூற்றுவன், பொன்னொளி வீசும் முத்துக்களுக்கு இந்திரன் தெய்வமாம்.[59]

58. மாணிக்கம் விற்ற படலம் பா. 53.
59. பா. 57.

## மரகதம்

மரகதம் என்பது நல்ல பச்சைநிறம் உள்ள விலை உயர்ந்த ஒருவகைக் கல் ஆகும். 'கருடப்பச்சை' எனப்படும் மரகதம் காடம், சுப்பிரம், காளம் என்ற மூன்று குலங்களில் ஒன்றையுடையது.[60] இக்காடம் அறுகம்புல்லின் இதழ்போலும் நிறங் கொண்டது. காடம் சகுணம், சதோடம் என இரு வகைப்படும். இவற்றின் வகைகளும் நிறங்களுமாவன.

மரகதம்
↓
காடம்'

↓ சகுணம் — குணங்கள் — சதோடம் ↓

## சகுணம் குணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | காடம் | — | புல்லின் பசிய நிறம் |
| 2. | உல்லசிதம் | — | மென்மைத் தன்மையினைக் கொண்டது. |
| 3. | பேசலம் | — | குளநீரால் விளையும் செந்நெற்பயிரில் தோன்றி தோன்றிய பசிய முத்துப் போன்ற நிறத்தினைக் கொண்டது. |
| 4. | பித்தகம் | — | பசுங்கிளியின் சிறகின் நிறத்தினைப் போன்றது. |
| 5. | முத்தகம் | — | துளசியின் நிறத்தினைக் கொண்டது |
| 6. | பிதுகம் | — | தாமரை இலையின் நிறத்தினை உடையது.[61] |

## சேதாடம் குணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தோடலே சாஞ்சிதம் | — | எலுமிச்சை நிறத்தை உடையது. |
| 2. | துட்டம் | — | அலரியிலையின் நிறத்தையும் கருங்குவளை இதழின் நிறத்தினையும் உடையது. |

---

60. மேற்படி பா. 66.
61. ,, பா. 67.

3. தோடமூர்ச்சிதம் — புல்லின் பசுமை நீங்கிய நிறத்தை உடையது.
4. தோடலேசம் — பனிவிழுந்த தாமரையிலையின் நிறத்தை உடையது.
5. மந்ததோடம் — மயிலிறகின் நிறத்தை உடையது.[62]

சகுணத்தில் கூறியுள்ள குணங்களை—நிறங்களைக் கொண்ட மரகத மணிகளை அரசன் அணிந்து கொண்டால் நால்வகைப் படையுடன் கூடியனவாய், போரில் வெற்றி கொள்வான் என நம்பினர்.[63]

## நீலம்

நீலமணிகள் இந்திர நீலம், மாநீலம் என இருவகைப்படும். மாநீலம் எனப்படும் நீலமணிகள் வெண்மை, செம்மை, பொன்மை, கருமை ஆகிய நான்கு நிறங்களைப் பெற்றிருக்கும். மாநீலத்தினும் பதினாயிரம் மடங்கு பெருவிலையினை உடையது இந்திர நீலம். இதனைப் பசுவின் பால் நிறைந்த குடத்தில் இட்டால் அப்பாலின் நிறத்தினை முற்றிலும் ஒழித்து தன் நீலநிறம் மேம்பட ஒளிவிளங்கச் செய்யும் நிற ஆற்றல் உடையது.[64] பரஞ்சோதியார், வெண்மை மிகுந்த நீலமணி அந்தணர் சாதியைச் சார்ந்தது எனவும் செம்மை மிகுந்த நீலமணி அரசர் சாதியைச் சார்ந்தது எனவும் பொன்மை மிகுந்த நீலமணி வணிகர் சாதியைச் சார்ந்தது என்றும் கருமைமிக்க நீலமணி வேளாளர் சாதியைச் சார்ந்தது[65] என்றும் கூறியிருப்பதிலிருந்து நால்வருணப் பாகுபாட்டின் மரபுத் தொடர்ச்சியினைப் பின்பற்றியுள்ளதைக் காணமுடிகின்றது.

மேலும், கோமேதகம், புருடராகம், வைடூரியம், பவளம் ஆகியவற்றிற்குறிய நிறங்களையும் மாணிக்க வணிகரின் மூலம் தெரிவித்துள்ளார்.[66]

62. மேற்படி பா. 68.
63. ,, பா. 69.
64. ,, பா. 69.
65. ,, பா. 72.
66. ,, பா. 74.

அவையாவன :

| மணியின் பெயர் | | நிறம் |
|---|---|---|
| கோமேதகம் | ... | நெய்த்துளி, தேன்துளி, கோசலம் ஆகிய இவற்றை ஒத்துச் சிவந்து பசும் பொன்னின் நிறத்தையும் பெற்றுத் திகழும்[67] |
| புருடராகம் | ... | பொன் போலவும், தீப்போலவும் சுற்றிலும் ஒளிவீசும்.[68] |
| வைடூரியம் | ... | மூங்கிலின் இலை, மயிலின் கழுத்து, பூனையின் கண் ஆகிய இவற்றில் ஒன்றன் நிறத்தினைச் கொண்டு விளங்கும்.[69] |
| பவளம் | ... | முருக்கமலர், பச்சைக் கிளியின் மூக்கு, செவ்வரத்த மலர், கொவ்வைக்கனி ஆகியவற்றில் ஒன்றன் நிறத்தினை உடையதாய் இருக்கும்.[70] |

நவமணிகளில் வைரம் நீங்கலாக மற்றவற்றின் தோற்றம், இலக்கணம், நிறம், பயன் முதலியவற்றைக் கூறிய ஆசிரியர் வைரத்தின் நிறத்தைப் பற்றி குறிப்பிடாதது எதனால் எனத் தெரிந்திலது. வண்மையும் மென்மையும் வைரத்தின் சிறப்பியல்புகள் வேற்று ஒளி தன்மீது படும்போது வைரம் மிகச் சிறந்த வகையில் எதிரொளி விட்டுப் பிரகாசிக்கும் வயிரத்தின் சிறப்பு யாதெனில் பிறமணிகளைத் துளையிடும் கருவியாக அமைதலோடு வைரத்தையும் துளையிடும் கருவியாக அமைவதே.

மாமணி மரபுக் கெல்லாம் வயிரமே முதன்மைச் சாதி
ஆமென வரைப்ப நூலோர் அதிகம் யாதென்னி
னேனைக்

67. மேற்படி பா. 74.
68. ,, பா. 76.
69. ,, பா. 79.
70. ,, பா. 81.

காமரு மணிகட் டெல்லாந் திமிரிடு கருவியாமத்
தூமணி தனக்குத் தானே துளையிடுங் கருவியாகும்[71]

'வயிரத்தை வயிரத்தால்தான் அறுக்க வேண்டும்' என்னும் உலக வழக்கும் இங்கு நோக்கத் தக்கது.

திருவாதவூரடிகளின் அன்பு கலந்த பக்திக்கு இரங்கிய கூடலில் அமர்ந்த கொன்றை வேணியன்' நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டியன் திருநகரில் பரிமேல் அழகராய்த் தோன்றிக் குதிரைகளின் இலக்கணங்களையும் அவற்றிற்குரிய வடிவ வண்ணங்களையும் கூறினார். நிறங்களின் அடிப்படையில் பரிகளின் பகுப்பும், நிறங்கள் உணர்த்தும் சிறப்பியல்புகளும் கூறப்படுகின்றன.

குதிரைகள் பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை பரி, கந்துகம் எனப்பலவகையின. பாடலம் என்பது மாந்தளிர் போன்ற நிறமுடைய நாவினையும், உயர்ந்த குளம்புகளையும் தம்முள் ஒத்த நீண்ட பற்களையும், பாம்பின் படம் போன்ற மார்பினையும், கழுத்தினையும் கொண்டது. கோடகம் என்பது அகன்ற நெற்றியினையும் குடுமிபோல் ஒரே நிறமுடைய பிடரி மயிரினையும், முக்கோணமான அழகிய நிறத்தினையும் கொண்டு நிகழ்வது[73] வன்னி என்பது பொருந்திய உயர நீளங்களையும்சங்கு வெள்ளைச்சருக்கரையும் போன்ற வெள்ளிய வாய் நுரையினையும் பொன்மைகலந்த செந்நிறம், கருநிறம் ஆகிய இவற்றுள் ஒன்றன் நிறத்தினைப் பெற்றுவிளங்கும்[74]. குதிரை என்பது கழுத்தில் வலப்புறமாகச் சுழிந்திருக்கும் சுழியாகிய தெய்வமணியினையும் முகம், மார்பு உச்சிவால் நான்குகால்கள்என்னும் இவ்வெட்டுறுப்புக்களில் வெண்மை கலந்துள்ள அட்டமங்கலம் முகம், நான்கு கால்கள் இவ்வைந்து உறுப்புகளில் வெண்மை கலந்துள்ள பஞ்சகல்யாணி ஆகிய இவற்றுள் ஒன்றைப் பெற்றதாகும்.[75]

---

71. மேற்படி பா. 61
72. நரி பரியாக்கிய படலம், பா. 88
73. மேற்படி, பா. 89.
74. ,, பா. 91.
75. ,, பா. 92, 110.

இவுளி, பரி, கற்பகம் என்ற குதிரைகளில் நிறம் சுட்டப்பெற வில்லையாயினும் அவற்றின் வெஞ்சமர் ஆற்றல்கள் எத்தகையன என்பதுபற்றிய குறிப்புக்கள் உள்ளன.

அருமறைப் பரிமேலழகராய்ப் போந்த ஆலவாய் அண்ணலார் பாண்டியனை நோக்கி "அரசே இக்குதிரைகளிலே வெள்ளி முத்து, பால், சந்திரன், சங்கு, வெண்பனி, ஆகிய இவற்றில் ஒன்றைப் போன்றது வெள்ளைக் குதிரை. மாதுளைமலர் செம்பஞ்சுக் குழம்பு ஆகிய இவற்றில் ஒன்றைப்போன்றது சிவப்புக் குதிரை. கரியமை, குயில், கருவண்டு, கருமுகில் ஆகிய இவற்றில் ஒன்றைப் போன்றது கருங்குதிரை. எரிகின்ற நெருப்பு, கோரோசனை ஆகிய இவற்றில் ஒன்றைப்போன்றது பொன்மைக் குதிரை. வெண்மை, செம்மை, கருமை, பொன்மை முதலிய நான்கு நிறங்களும் கலந்த குதிரை மிச்சிரம் என்றழைக்கப் பெறும்"[76] எனக் குதிரைகளின் பெயர்கள் நிறப் பெயரடை களால் விளக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட வர்ணங்களைக் கொண்ட குதிரைகளில் எந்த நிறத்தின் வகை மிகுந்திருந்தாலும் வெள்ளை நிறம் கலந் திருந்தால் அக்குதிரைச் சிறந்தது; கருநிறமுடைய குதிரைக்கு வயிற்றிலேனும் மார்பிலேனும் செந்நிறமிருந்தால் அப்புரவி வெற்றியை உடையது; அவ்விடங்களில் வெண்மைநிறம் இருந்தால் அக்கரிய குதிரை வாகுணம் எனப்பெயர் பெறும். பிடரி, மார்பு, கழுத்து, முகம், முகத்தின் பின்பக்கம், ஆகியவற்றில் வெண்மையுள்ள குதிரைகள் முறையே மகப்பேறு மகிழ்ச்சி, செல்வம், வெற்றி. இன்பம், ஆகியவற்றை நல்கும். நாபியிலிருந்து முன்புறமெல்லாம் சூரியனைப்போல் செந்நிறமும் பின்புற முழுமும் சந்திரனைப்போல் வெண்நிறமும் பெற்றகுதிரை பகற் போரிலே வெற்றியைத் தரும். முன்புறம் வெளுத்தும் பின்புறம் சிவந்த குதிரை இராப்போரிலே வெற்றியைத் தரும்[77] என்றெல்லாம் நிறத்தின் கோட்பாட்டினையும் நம்பிக்கை யினையும் வெளிப்படுத்தியுள்ளார் திருவிளையாடலின் ஆசிரியர் பரஞ்சோதியார்.

### வருணனையில் நிறம்

புனை கதைப் பாங்கும் புலமைத் திறனால் பலபட வருணிக் கும் வருணனை ஆற்றலும் மிக்க கவிவாணர்கள் பாடு

---

76. மேற்படி பா. 109, 110.
77. ,, பா. 115-117.

பொருளுக்கு ஏற்பத் தாம் கண்ட, காணும் காட்சிகளைக் கூற விரும்பும் செய்திகளோடு தொடர்புபடுத்திச் சிறப்பாக வருணிப்பர். இந்நெறியிற் சென்ற திருவிளையாடலின் ஆசிரியர் வேனிற்காலத்தில் மரங்கள் செந்நிற, கருநிற, நீலநிற மலர் களுடன் மலர்ந்து நிற்கும் காட்சியினைப் பின்வருமாறு உவமைப் படுத்தி வருணித்துள்ளார்.

செங்கதிர் மேனி யான்போ லவிழ்ந்தன செழும்ப வாசம்;
மங்குனூர் செல்வன்போல மலர்ந்தன காஞ்சி; திங்கட்
புங்கவன் போலப் பூந்த பூஞ்சினை; மரவஞ்; செங்கை
அங்கதி ராழி யான்போ லலர்ந்தன விரிந்த காயா[78]

வையையாகிய பெண்ணின் கரையில் உள்ள மணல்மேடாகிய இடையில் மேகலையை அணிந்தாற்போல மலர்கள் மலர்ந்து அரவ அமைப்பில் மகரந்தத்தைச் சிந்தின. இடையுள்ள மரங்கள் எல்லாம் மரகதம்போலப் பசிய இலைகள் தழைத்து முத்துக்கள் போல மொகைகள் அரும்பி, பொன்போல மலர்கள் மலர்ந்து மணம்பரப்பி கடலில் உள்ள பவளக்காடுபோல மகரந் தந்தைச் சிந்தின என்று கற்பனை செய்கிறார் ஆசிரியர்.

"தரைகிழித் தெழுநீர் வையைத் தடங்கிரை யக்க ரல்குல்
அரவமே கலை சூழ்ந் தென்ன வளர்ந்துதா துகுப்ப ஞாழல்
மரகதந் தழைத்து வெண்முத் தரும்பிப் பொன் மலர்ந்து வாங்குந்
திரைகடற் பவளக்காடு செய்வன கன்னிப் புன்னை"[79]

சோமசுந்தரர் எழுகடல் அழைத்தபோது மதுரையில் வந்து தோன்றிய எழுகடலும் பொற்றாமரைத் தீர்த்தத்தின் இயற்கை நிறமாகிய வெண்மை நிறத்துடன் கலந்து சிவபெருமான் அட்ட மூர்த்தியாய் நிற்கும்பொழுது பிருதிவிற்குரிய பொன்னிறமும், அப்புவிற்குரிய வெண்ணிறமும், தேயுவிற்குரிய செந்நிறமும் வாயுவிற்குரிய கருமை நிறமும், ஆகாயத்திற்குரிய புகை நிறமும், சந்திரனுக்குரிய சுக்கில நிறமும், சூரியனுக்குரிய இரத்த நிறமும்,

---

78. தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம், பா. 12.
79. மேற்படி, பா. 13.

ஆத்மாவிற்குரிய படிக நிறமும் ஆகிய இவ்வெண் வகைப்பட்ட நிறங்களோடு கலந்து காட்சியளித்தன என்பதை

தன்வண்ண மெழுகடலின் னறிவண்ண மொடுகலந்து
பொன்வண்ண நறும்பொருட்டுப் பூம்பொய்கை பொலிவெய்தி
மின்வண்ணச் சடைதாழ வெள்ளிமணி மன்றாடும்
மன்வண்ண மெனவெட்டு வண்ணமொடும் வயங்கியதால்[80]

எனக் கூறுகிறார். ஆசிரியர்,

திருவாசகத்தில் ஐவண்ணச் சிவனெனக் குறிப்பிடப்பட்ட ஐந்தொழில் ஆற்றும் முக்கட் பெருமான், ''வண்ண மோரெட்டுடையான்'' என இங்குக் குறிக்கப்படுவதில் வண்ண வளர்ச்சியையும் வடிவ வளர்ச்சியையும் காண முடிகின்றது. பக்தர்களின் அன்பகத்தில் அருள்வடிவினனான இறைவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த மனநிலைகளுக்கு இடைக்காலக் கவிஞர்களின் இத்தகைய இறைவண்ணக் கவிதைகளே காரணிகளாகும் எனலாம்.

## தொகுப்புரை

நிறங்கள், கட்புலனால் வண்ணத்தினை அறிதல் — வண்ண வார்ப்பில் குறிப்புணர்த்தல் — இறைவனை வண்ணத்தால் குறித்து வழங்கினமை — பரஞ்சோதியார் திருவிளையாடலில் கையாண்ட பொன்னிறம், வெண்ணிறம், செந்நிறம், கருநிறம், பசுமை நிறம், இவற்றை வெளிப்படுத்தும் முறைகள் — நிறங்களையே தம் உள்ளொளிகளாகக் கொண்டிலங்கும் நவமணிகள், அவற்றின் வகை — தாய்மைப் பொருள் — அவ்வவற்றின் நிற ஒப்புமைப் பொருள்கள், அவற்றிற்குரிய விருப்ப தெய்வங்கள் — நிற அடிப்படையில் அமைத்த நால் வருணப் பாகுபாடு-பரிவணிகர் அறிந்திருந்த பரியின் இலக்கணங்களுள் ஒன்று நிறம் என்பதும் அந்நிற அடிப்படையில் அமைந்த பரிகளின் பகுப்புமுறை — பெயர்கள் — பரிகளின் இயற்கை நிறத்தியல்புகளின் சிறப்புக்களும் அதனால் ஏற்படும் பயன்களும், பயன்வழிப் பிறந்த நம்பிக்கைகள் — பாகுபொருளைக் சிறப்பிக்கப் பரஞ்சோதியார் மேற்கொண்ட நிற வருணனைச் சிறப்புக்கள் ஆகியன இக்கட்டுரையில் குறிக்கப்பட்டன.

---

80. எழுகடல் அழைத்த படலம், பா. 15.

## முடிவுரை

திருவிளையாடலைக் கூறும் புராண நூற்கள் நான்கு. அவை, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவனபுராணம், சுந்தரபாண்டியம், திருவிளையாடற் புராணம், முன்மொழிந்த முந்நூல்களின் புகழை எல்லாம் தன் புகழாக்கிக் கொண்ட பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்தின் வெற்றிச் சிறப்பிற்கும் காலத்தை வென்று நிலைத் திருப்பதற்கும் உரிய பல சிறப்புக் கூறுகளுள் வண்ணக் கோட்பாட்டினைப் புலப்படுத்தி அதன் வழிப்பல அரிய நுட்பமான செய்திளைப் பரக்கக் கூறியுள்ளமையும் ஒன்று எனலாம்.

---

## பயன்பட்ட நூற்கள்


1. சங்க நூல்களில் மணிகள், பி. எல். சாமி, சேகர் பதிப்பகம், சென்னை-78, 1980.

2. சிவபுராணச் சிற்பம், (பதி). பி. எஸ். வரதராத ஐயர் கல்கத்தா-29, 1962.

3. திருவிளையாடற் புராணம், (பதி.) வீ. இராஜு முதலியார், வித்யாரத்நகர அச்சுக்கூடம், சென்னை, 1912.

4. நவமணிகள், டி. எஸ். வைத்தியநாதன், திருவாவடுதுறை ஆதீனம். 1959.

# 15. திருவாய்மொழி

ஆர். ஆளவந்தார்

நிறங்களின் கவர்ச்சி மனிதமனத்தில் இடம் பெறுவதைப் போலவே உயிரினம் எல்லாவற்றின் மனத்திலும் இடம் பெறுகிறது. வெளிச்சத்தின் வண்ணக் கவர்ச்சி விட்டில் பறவையை ஈர்க்கிறது. குடையின் கறுப்பு நிறம் மாட்டிற்கு மருட்சியை ஏற்படுத்துகின்றது. ஆன்றவிந்தடங்கிய துறவி முதல் சராசரி மனிதன் வரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் நிறக் கோலத்துடன், நிறக்குறியீட்டுடன் தொடர்புடையவர்களாகவே அமைகின்றனர். துறவிகளில் சிலர் காவியுடை அணிகின்றனர். இராமலிங்க அடிகளார் வெள்ளாடையே அணிந்து வாழ்ந்தார். மங்கலமான மணவாழ்வின் முடிவிலும், தெய்வத்திருவிழாக் களின் ஈற்றிலும் மஞ்சள் நீர் விளையாட்டு இடம் பெறுகிறது. இங்கே முக்கியமாக மஞ்சள் மங்கலத்தின் குறியீடாக அமைவ தாகவே கருத வேண்டியுள்ளது மஞ்சள் நீராட்டு போன்ற சடங்குகள் வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் பருவப் பெண்களுக்கு ஒரு மங்கலகரமான வரவேற்பாக அமைவதாகவே தோன்றுகிறது. இயற்கையுடன் ஒன்றியுள்ள இந்த நிறங்கள் அறிவியல் வளர்ச்சியடைந்துள்ள தற்கால அன்றாட வாழ்விலும் கூட இடம் பெற்றிருப்பதை நாம் உணரமுடிகிறது. பச்சைக் கொடி அல்லது பச்சை விளக்கு மூலம் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும் ஊர்திகள் சிவப்புக்கொடி அல்லது சிவப்பு விளக்கு மூலம் தடுத்து நிறுத்தப்படுகின்றன. நகரங்களின் முக்கியசாலைகளில் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை நிறங்கள் புரியும் பணி மகத்தானது. சாலைகளைக் கடப்போர், ஊர்திகளில் செல்லுவோர் ஆகியோருக்கு நில், கவனி, புறப்படு என்ற உயிர்காக்கும் ஆணைகளை அந்தச் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை நிறங்கள் பிறப்பிக்கின்றன. நிறங்கள் ஐந்தாயினும் அவை ஒன்றோடொன்று கலப்பதால் எற்படும் பேதங்கள் நாலாயிரத் துக்கும் மேற்பட்டன என்று கண்டிருக்கிறார்கள். (காண்க: முருகன் சிரிக்கிறான்—லக்ஷ்மி—ராணிமுத்து மாத இதழ்) சில நிறங்களைப் பிற நிறங்களினின்றும் பிரித்தறிய இயலாமையும், சில நிறங்களைக் காண இயலாமையும் நிறக்குருடு (Colour Blindness) எனப்படுகிறது. இக்குருட்டுத் தன்மையுடையவர் களுக்கு இரயில், பேருந்து போன்ற ஊர்திகளை ஓட்டுவதற்கு உரிமம் வழங்கப்படலாகாது என்பது விதி.

இவ்வாறெல்லாம் இயற்கையின் எல்லாத் துறையிலும் பின்னிப்பிணைந்து நிறைந்து வாழ்க்கை முழுவதற்குமே உரியன வாக அமைந்துள்ள நிறங்கள் நம் இலக்கியங்களில் ஆட்சிபெற்ற நிலையைத் தொடர்ந்து ஆய்ந்து வரும் நாம் இங்கு பக்தி இலக்கியமாகிய திருவாய்மொழியில் அந்த நிறங்களின் ஆதிக் கத்தைப் பற்றிக் காண்போம்.

இறைவனோடு பிரிப்பின்றி வாழும் ஞான அனுபவத்தைத் தம் முயற்சியின்றியே இறையருளின் வாய்ப்பாலே பெற்றவர் நம்மாழ்வார். பகவானால் ''நம்ஆழ்வார்' என்று விசேசமாக அபிமானிக்கப் பெற்றதால் நம்மாழ்வார் என்ற பெயர் பெற்றவர். அவர் அருளிச் செய்ததே திருவாய்மொழி என்னும் திவ்வியப்பிரபந்தம். இத் திருவாய்மொழியைச் செந்தமிழ் வேதம் என்றும், வைணவ சித்தாந்தத்திற்குரிய பிரமாண நூல் என்றும் ஆச்சாரியர்கள் போற்றுவர். 'பாலேய்தமிழர், இசை காரர், பக்தர் பரவும் ஆயிரம்' என்று நம்மாழ்வாரே அப்பாடல் களைப் பற்றிக் கூறுகிறார். இந்நூல் ஆயிரத்து இருநூற்றிரண்டு பாடல்களைக் கொண்டது.

பொருள்களின் தோற்றத்தை விளக்குவதற்குக குறியீடாக நின்று பாத்திரம் அல்லது பண்பினைப் புலப்படுத்தும் தன்மை யுடைய நிறம் பற்றிய செய்திகள் காப்பிய அமைப்பு, தலை மக்கள் பெருமை ஆகியவற்றிற்கு இலக்கியங்களில் கையாளப் பட்டதைப் போலவே பக்தி இலக்கியங்களிலும் நிறங்கள் ஆதிக்கம் பெற்றுள்ளன என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழியில் நிறம் பற்றிய செய்திகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை இயன்றவரைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நிறத்தை உணர்த்தும் சொற்களாக வண்ணம் என்ற சொல்லும், நிறம் என்ற சொல்லும் திருவாய்மொழியில் இடம் பெறுகின்றன. இவற்றுள் வண்ணம் என்ற சொல்லே மிகுதி யாகவே இடம் பெற்றுள்ளது; நிறம் என்ற சொல் அருகியே காணப்படுகின்றது.

வண்ணம் என்ற சொல் (நிறம் என்ற பொருளில்) சுமார் எழுபத்திரண்டு இடங்களில் வருகின்றது.

கருநீல நன்மேனி வண்ணன் (1-9-2:2)

கார்முகில் போல் வண்ணன் (2-8-10:4)

கருங்கடல் வண்ணன் (6-5-4:3)

நிறம் என்ற சொல் (நிறப்பொருளில்) சுமார் பதினொரு இடங்களில் வருகின்றது.

புயல்கரு நிறத்தினன் (1-3-10:3)

காயாவின் கொழுமலர்த்திரு நிறத்த வெந்தாய் (3-2-5:3)

நீலக்கருநிற மேக நியாயற்கு (6-6-1:2)

வண்ணம், நிறம் என்ற சொற்கள் நிறத்தைக் குறிக்காமல் வேறு பொருள் குறித்தும் வருகின்றன.

வண்ணம்— வேறு பொருளில்;

மண்தான் சோர்ந்ததுண்டேலும் மனிசர்க்காரும் பீர்சிறிதும்
அண்டாவண்ணம் மண்கரைய நெய்யூண் மருந்தோ
மாயோனே (1-5-8:3)

நிறம்—வேறு பொருளில்;

நிறம் கிளர்ந்த அந்தாதி ஆயிரத்திப்பத்தால் (5-4-11:3)

‘கேழ்’—என்ற நிறச் சொல்லும்—திருவாய்மொழியில் ஆளப் படுகிறது. ஆனால் நிறம் என்ற பொருளில் அல்ல. ஒப்பு என்ற வேறு பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கேழில் ஒண் கண்ண நீர் கொண்டாள் (2-4-10:2)

‘காவி’—என்ற நிறச் சொல்லும் நீலோற்பலம் என்ற பொருளில் மட்டுமே ஆளப்படுகிறது.

காவி நன்மேனி (1-9-8:4)

காவி சேர் வண்ணன் (5-4-2:3)

திருமால் பக்தியில் ஆழ்ந்து ஈடுபட்ட நம்மாழ்வார் உரு, அவயவங்கள், உடை, துழாய் முதலியவற்றின்

அழகில் மனதைப் பறிகொடுத்து அவற்றை வருணிக்கும் நிலையிலேயே நிறச்சொற்களை மிகுதியும் பயன்படுத்தியுள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

உரு — என் நீல முகில் வண்ணர்க்கு (1-4-4:2)

முடி — செஞ்சுடர் நீண்முடி (7-8-3:1)

குஞ்சி — சுரியும்பல் கருங்குஞ்சி (3-6-5:4)

கண் — என் செய்ய தாமரைக் கண்பெருமானார் (1-4-2:1)

வாய் — செம்பவளத் திரள்வாயன் (3-5-4:2)

பல் — வெண்பலிலகு சுடரிலகு இலகு மகர குண்டலத்தன் (8-8-1:2)

மார்பு — செய்யமெல் மார்பும் (8-4-7:3)

உந்தி — செய்யகமலவுந்தி (8-4-7:3)

கை — கையொடு கால் செய்ய கண்ணபிரானுக்கு (6—6—7:3)

அடி — செந்தாமரையடி (2-5-1:4)

உடை — செய்யவுடையும் (8-4-7:3)

துழாய் — பாதங்கள் மேலணி பைம்பொன் துழாயான் (4 2-6:3)

தன்னைத் தலைவியின் நிலையில் நிறுத்தி தலைவன் பிரிவால் தன் அழகழிந்தது போன்ற செய்திகளைக் கூறுமிடந்தெல்லாம் அக இலக்கியங்களைப் போன்றே மாமை, பசலை, பொன்-போன்ற சொற்களையும் பயன்படுத்துகிறார்.

மாமை — சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் (1.4-8:3)

பசலை — நோயும் பயலமையும் மீதூர (2-1-1:3)

பொன் — தடமுலைப் பொன்நிற மாய்த் தளந்தேன் (8-2-1:3)

திருமாலின் அழகை வருணிக்கும் பொழுது ‘சாமம்’ என்ற நிறச்சொல் அருகி இரண்டே இடத்தில் (8–5–1, 9–5:6) வந்திருந்

தாலும் திருமாலின் நிறத்தில்-அழகில் ஈடுபட்டு, தன்னை இழப்பதற்குக் காரணமாக இருந்ததே சாமநிறந்தான் என்று குறிப்பிடுகிறார்.

நிறம் குறிக்கும் சொற்களாகச் செம்மை, கருமை, வெண்மை, நீலம், பசுமை, பொன், மாமை, பசலை, சாமம் ஆகியவற்றை நம்மாழ்வார் திருவாய் மொழியில் பயன்படுத்துகிறார்.

## செம்மை

திருவாய் மொழியில் நூற்று இருபத்திரண்டு இடங்களில் செம்மை நிறம் குறிக்கப்படுகின்றது. அவற்றுள் பெரும்பாலான இடங்களில் திருமாலின் உடம்பு, கண், வாய், கை, உந்தி, கால் ஆகியவற்றின் தோற்றங்களை விளக்கியே இச்சொல் ஆளப்படுகிறது.

செம்பொன் திருவுடம்பு (2-5-1:4), செம்மாகண்ணன் (1-8-2:4)
செங்கனிவாய் (2-5.1:3), செய்யகை (6-1-7:3)
செய்யவாயுந்தியானே (8–7–6:3), செய்யபாதம் (5-10-3:2)

தோற்றங்களின் இயற்கை நிலையை விளக்கி நிறச்சொற்களைப் பயன்படுத்தியதைப் போலவே நிறம் பெறுவதைக் குறிக்கவும் அச்சொற்களைப் பயன்படுத்துகிறார் நம்மாழ்வார்.

கண்கள் சிவந்து (8-8-1:1)

வாயுஞ்சிவந்து (8-8-1:1)

கனிவாய் சிவப்பு (9-2-4:4)

'இயற்கையான ஐஸ்வர்யத்தாலும் சிவந்திருக்கும் – தனக்குரிய பொருள்கள் பக்கலுள்ள அன்பினாலும் சிவந்திருக்கும்-கட்குடியர்களைப் போன்று இவளோடு கலந்த கலவியாலும் சிவந்திருக்கும்' (அரையாறுபட்டுச் சிவந்திருத்தல் - பாதிச்சிவந்திருத்தல்) என்று திருக்கண்கள் சிவக்கக்காரணம் கூறப்பட்டுள்ளது திருவாய்மொழி ஈட்டில் (திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம்-முதற்பகுதி முதற்பத்து) பக்,189

இதுபோன்று குறிப்புப் பொருளை உணர்த்தவும் செம்மை நிறத்தை நம்மாழ்வார் கையாண்டுள்ளார் என்று கூற இடமளிக்கிறது.

கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும் களனிழைத்
தென்பயன் (4-6-4:2)

செஞ்சோறு – இராஜச அன்னம் - இராஜச
தேவதைக்குட்பட்டது.

'புன்சிறு தெய்வங்கள் வந்து தங்கி இருக்கும் நாற்சந்தி தொடக்கமானவற்றிலே அவற்றுக்குச் சொல்லுகிற நியமங்களோடே படைத்தலைக் குறித்தபடி.

கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும்-தாமச அன்னமும் அதனோடு
தான் தீண்டியான இராஜச அன்னமும்;
களன் இழைத்து என்ன பயன்-இராஜச, தாமச தேவதை களுக்கு

அவ்வத்தெய்வங்கள் வந்துதங்கி இருக்கும் இடங்களிலே இராஜசமாயும் தாமசமாயும் உள்ள சோற்றினைக்கொண்டு இடச்சொல்லுகிற முறையிலே இட்டால்என்னபயன்.பிரயோஜன மில்லாமை மாத்திரமேயன்று அழிவோடே முடியும்' (திருவாய் மொழியீட்டின் தமிழாக்கம் - நான்காம் பகுதி-நான்காம் பத்து).

''வெறியாட்டு விலக்கல்'' - போன்ற அகத்துறைப் பகுதியோடு ஒத்துள்ளது இப்பகுதி. செஞ்சோறு - செம்மை நிறம் கலக்கப்பட்ட சோறு.இங்கே செம்மைநிறம் இராஜசகுணத்தைக் குறிக்கக் குறியீடாக ஆளப்பட்டுள்ளது போல் அமைந்துள்ளது.

(இவ்வாறு கறுஞ்சோறு-கருமை நிறம் கலக்கப்பட்ட சோறு-கருமை நிறம் தாமசகுணத்தைக் குறிக்கக் குறியீடாக ஆளப் பட்டதுபோல் தோன்றுகிறது)

தாமரை (2-7-8:17) கமலம் (10-4-1:2)

பவளம் (8-10-4:2) ஆகியவை செம்மை நிறமுள்ள பொருட்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

**கருமை**

அறுபத்தேழு இடங்களில் கருமை நிறத்தைக் குறிக்கின்றார் நம்மாழ்வார். செம்மை நிறச் சொல்லைப் பயன்படுத்தியதைப் போலவே கருமை நிறச்சொல்லையும் திருமாலின் உடம்பு, கண், குஞ்சி ஆகியவற்றின் தோற்றங்களை விளக்கவே பயன்படுத்தியுள்ளார்.

புயல் கருநிறத்தினன் (1-3-10:3), கருங்கண்ணும் (5-3.2:4) சுரியும் பல்கருஞ்குஞ்சி (3-6-5:4)

நானக் கருங்குழல் தோழிமீர்காண் (7-3-2:1) என்று கூறுமிடத்தில் பெண்களின் கூந்தலின் நிறமும் கருமை நிறச் சொல்லால் குறிக்கப்படுகிறது.

கருஞாயிறு (8.5-2:3) என்று இல்பொருளுவமையாக வரும் ஞாயிற்றுக்கு அடைமொழியாகக் கருமை என்ற சொல் அமைகிறது. கருஞ்சோறு, குறியீடாக ஆளப்பட்டமை மேலே கூறப்பட்டது.

மையார் கருங்கண்ணி (9-4-1:1) என்ற தொடரால் ஆழ்வார் இயல்பாகவே கருமையாக இருக்கும் திருக்கண்களுக்கு மங்களத்தின் பொருட்டு 'மை' தரிக்கும் நிலையை உரைப்பதின் மூலம், மங்களத்திற்காக அஞ்சனமிடுதல் மரபு என்ற முறையைக் குறித்துக் கூறுவதாகத் தோன்றுகிறது.

கருமை—மங்கலத்தைக் குறியீட்டால் உணர்த்துவதாகக் கொள்ளவும் அமைந்துள்ள முறை நோக்கி ஆய்ந்து இன்புறத் தக்கது.

## வெண்மை

வெண்மை என்ற நிறச்சொல் பதினாறு இடங்களில் திருவாய் மொழியில் இடம் பெற்றுள்ளது

தவளவண்ணர் (2-4-5:4) என்று திருமாலின் உருவையும், வெண்பல் (8-7-7:1) என்று அவருடைய பல்லையும் குறிக்க வெண்மை நிறச்சொல் பயன்பட்டுள்ளதைக் காணலாம்.

தூப்பால வெண் சங்கு சக்கரத்தன் (5-4-7:3) என்று திருமாலின் சங்கு குறிக்கப்படுகிறது. குருகு (6-8-8:2), மலை (8.5-4:3), முல்லை (9-9-10:3) ஆகியவற்றைக் குறிக்கவும் வெண்மை நிறச் சொல் பயன்பட்டுள்ளது.

தவளப் பொடிக்கொண்டு (4-6-5:4) என்று கூறும்பொழுது தவளம் என்ற வெண்மை நிறச்சொல் தூய்மை என்ற பொருளைக் குறிப்பதாகக் குறியிடுகிறது. அடியார்களுடைய தூய்மையான பாததூளியை இவளுக்கு நீங்கள் இடுங்கோள் திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம்—நான்காம் பகுதி—நான்காம் பத்து).

## நீலம்

பதின்மூன்று இடங்களில் நீலநிறம் கையாளப்பட்டுள்ளது. திருமாலின் திவ்விய மங்கள வடிவத்தைப் பார்த்து உயிரும் உடம்பும் ஒருங்கே பூரித்துப் போகின்றவர் நம்மாழ்வார். உயர்வற உயர்நலம் உடையவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவராதலின் நீலநிறம் என்றாலே திருமாலின் திருவுருவம் தவிர வேறு ஒன்றும் அவர் கண்ணில் படவில்லை போலும். அப்படியே கண்ணிற்குத் தோன்றிய மகன்றில், மேகம் போன்ற நீலநிறமுடைய மற்றப் பொருட்களெல்லாம் ஆகங்கள் நோவ வருத்தும் தவம் செய்தே திருமால் திருமேனி ஒக்கும் அருள் பெற்றதாகக் கருதும் மனப்பாங்கினைக் கொண்டவராகி விட்டார்.

நீலமேனியும் நான்கு தோளும் என் நெஞ்சம்
நிறைந்தனவே (5-5-6:4)

## பசுமை

பசுமை என்ற சொல் ஆறு இடங்களில் அருகியே வந்துள்ளது. தாமரை, குழாய், பொன், அடை, சாமநிறம் ஆகியவற்றின் தோற்றத்தை விளக்கிச் சிறப்பிக்கும் வகையிலேயே பசுமை என்ற சொல்லை ஆளுகிறார்.

பைந்தாமரை (2-6-1:1), பைந்துழாய் (2-8-6:3),
பைம்பொன் (3-1-1:3), பாசடை (8-5-1:3),
பசுஞ்சாம நிறத்தன் (9-6-6:3)

## பொன்

ஏழு இடங்களில் பொன் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. இதுவும் தோற்றத்தை விளக்கவே வருகிறது.

பொன்மலை (2-6-3:2) நற்பொற் சோதித்தாள் (3-2-6:4);
பொன் திருமாலின் திருமேனி ஒளி ஒவ்வாது (3-1-2:2)

என்பது போன்று எதிர்மறை முகத்தால் தோற்றத்தைச் சிறப்பிக்கும் உத்தியையும் நம்மாழ்வார் கையாண்டுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது.

மாமை-பசலை

மாமை-பசலை என்ற சொற்ள் மிக அருகியே ஆட்சி பெறுகின்றன. சாயலொடு மணி மாமைதளர்ந்தேன் நான் (1-4-8:3 என்றும், மாமை இழந்து 5-3-2-3) என்றும் தான் மாமையை இழந்ததாகக் கூறும் ஆழ்வார்.

கோலவளையொடு மாமை கொள்வான் (8-2-3:4)

எம்மாமை கொண்டான் (8-2-6:2)

என்றும் கூறும் பொழுதுதன் மாமையைத் திருமால் கவர்ந்து கொண்டதாகவும் கூறி அமைகிறார்.

இவ்வாறே பசலையும் (பயலைமை-பயப்பு) கூட, நோயும் பயலைமையும் மீதூர (2-1-1:3), பயப்பூர்ந்தவே (5-3-2:4) மீதூர்ந்து தான் அழகிழந்ததாகக் கூறுகிறார்.

காமத்தால் உண்டாகும் இந்தப் பசப்பு மனித உடலின் மேல் தோன்றும் நிலையில் வெளிறிய பழுப்பு நிறம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மாமை என்ற சொல்லுக்கு அழகு என்று பொருள் கூறி இதன் நிறம் மாந்தளிர் (குறுந்:331) அசோக்ந்தளிர் (கலித்.15) ஆம்பலின் நார் உரித்த மெல்லியதண்டு (நற்.6) இவற்றின் நிறத்தைப் போன்றது என்றும் கூறுவர். (திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம்—முதற்பகுதி—முதற்பத்து. பக். 212)

சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான் — என்ற தொடருக்கு 'சமுதாய சோபையோடு நிறத்தில் நிரைவையும் இழந்தேன்'—எனப்பொருள் கூறி,

'இனி அவன் வந்தாலும் போன நிறத்தை மீட்கப் போகாது என்றும் இருக்கிறார்' என்றும் கூறப்பட்டுள்ளது (திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம்—முதற்பகுதி முதற்பத்து. பக். 214)

பிரிவினால் சாயலையும் மாமையையும் இழந்ததாகவும், இனிப் பிரிந்தவர் வந்து கூடினாலும் இழந்த மாமையை மீட்க

முடியாது என்றும் கூறி மாமை நிறத்தின் இயல்பும், மென்மையும் பெருமையும் விளக்கப்பட்டுள்ளன என்று கொள்ள இடமளிக்கிறது.

இந்த மாமையும் பசலையும் உள்ள உணர்வினால் உடலில் நிகழும் மாறுபாட்டைக் குறிப்பன தனிப்பட்ட நிறத்தினைச் சுட்டாது அழகையும், இயல்பான நிறம் திரிதலால் ஏற்படும் மாறுதலையும் உணர்த்தி நின்றன.

'The Physician is often aided in his diagnosis and treatment of diseases by following the visible signs of various metabolic processes as reflected by the colours of tissues and body fluids' — (Encyclopaedia Britannica vol.6 p93)

நோய்நாடி நோய் தணிக்கும் வாய்நாடும் மருத்துவர்களின் கொள்கையின் அடிப்படைத் தத்துவமும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாய் அமைந்துள்ளது.

சாமம்

சாமத்திருமேனி (8-5-1.8)

சாமநிறத்தினன் (9-5-6:3)

என்று இரண்டே இடங்களில் ஆட்சி வசமிழப்பதற்குக் காரணமாயிருந்த அந்நிறக் கவர்ச்சியை குறிப்பது ஆய்வுக்குரியதாக அமைகிறது.

சாமம் என்ற சொல் பச்சை என்றும், கருமை என்றும், கருநீலம் என்றும் பொருள் கொள்ளத்தக்கதாக அமைந்த ஒரு சொல்லாகக் கருதப்படுகிறது.

சாமம் என்ற சொல்லுக்கு கரிய நிறம் என்றே பொருள் கூறுகிறது ஈடு (எட்டாம்பத்து பக்.133).

## இணை நிறங்களைப் பயன்படுத்தியமை

மையார் கருங்கண்ணி மேல மலர்மேல்
செய்யாள் திருமார்பினில் சேர்திரு மாலே (9-4-1)

என்பது போன்று நிறங்களை இணைத்துப் பயன்படுத்திய முறையிலும் திருவாய்மொழி வண்ணக் கவர்ச்சியுடையதாகத் தோன்றுவது மகிழ்ந்து இன்புறத்தக்கது.

## ஒரே தொடரில் இணைநிறங்கள் அமைந்தமை

கருகிய நீல நன் மேனி வண்ணன் செந்தாமரைக் கண்ணன் (1-9-3.2)

கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதே யிடும் (4–5–6:1)

கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும் களனிழைத் தென்பவன் (4-6-4:2)

தளிர்நிறத்தால் குறை வில்லாத் தனிச்சிறையில் விளப்புற்ற (9-8-5:1)

மணிவண்ணன் (1-10-6.4)

அஞ்சன வண்ணன் (3-4-3.2) என்பது போன்று நிறமுள்ள பொருட்களை மட்டுமே கூறி அவற்றின்மூலம் தான் விளக்கக் கருதிய பொருள்களின் தோற்றத்தை விளக்கும் உத்தியும் திருவாய் மொழியில் காணக்கிடக்கிறது.

அஞ்சனம் (7-2-8 2) ஆழிநீர் (7–3-11 2) இருள் (2-1-8:1)
கடல் (3-6-10:1) கமலம் (2-5-2:1) காயா (9-7-8:4)
கார் (5-1-10:4) குவளை (4-6–5:2) கொண்டல் (3-8–1:3)
கோமளம் (5-6-8:4) தளிர் (4-8–5:1) தாமரை(2-7-8:1)
தொண்டை (7.7.3:3) நீர் (1-8-11:1) பங்கயம் (3-4-3:1)
பவளம்(5–8-7:2) பான்மதி 8—2—10:3) புண்டரீகம்(6-8-7:1)
புயல்மழை (2-10-3:2) பூவை (4-3-1:4) மணி (6-5-9:2)
மரகதம் (2–5-4:1) மாணிக்கம் (3-4-4:1) முகில் (7-2-2:3)
மேகம் (8-10-2:2) வயிரம் (3-4–4:2) வேலை (6-1-7:2)

ஆகிய பொருட்கள் இடம்பெற்றுள்ளன.

பொதுவாக நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் திருமாலின் உரு, அவயவங்கள், உடை, துழாய் முதலியவற்றின் அழகில் மனதைப் பறிகொடுத்து அவற்றை வருணிக்கும் நிலையிலேயே நிறச் சொற்களை மிகுதியும் பயன்படுத்தியுள்ளார்.

தன்னைத் தலைவியின் நிலையில் நிறுத்தி தலைவன் பிரிவால் தன் அழகழிந்தது போன்ற செய்திகளைக் கூறுமிடத்தெல்லாம் அக இலக்கியங்களைப் போன்றே மாமை, பசலை, பொன் போன்ற சொற்களையே பயன்படுத்தியுள்ளார்.

செம்மை, கருமை, வெண்மை, பசுமை, பொன், மாமை, பசலை, சாமம் ஆகிய சொற்களைப் பொருள்களின் தோற்றங்களை விளக்கவும் பொருள்கள் நிறம் பெறுவதைக் குறிக்கவும், குறிப்புப் பொருளை உணர்த்தவும் பயன்படுத்தியுள்ளார்.

நிறமுள்ள பொருட்களை மட்டுமே கூறி விளக்கவேண்டிய பொருட்களின் தோற்றத்தை விளக்கும் உத்தியையும் கையாண்டுள்ளார்.

## துணை புரிந்த நூல்கள்

1. திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் - ஒன்றுமுதல் பத்துதொகுதிகள் —பு ரா. புருஷோத்தமநாயுடு

2. Encyclopaedia Britannica-Vol. 6.

## பின்னிணைப்பு

## திருவாய்மொழியில் நிறம் பற்றிய குறிப்பு

### செம்மை

| | | | | |
|---|---|---|---|---|
| 1-4-2:1 | 1-8-2:4 | 1-9-3:2 | 1-10-10:2 | 2-1-9:3 |
| 2-5-1:3 | 2-5-1:4 | 2-5-2:1 | 2-5-3:1 | 2-5-5:3 |
| 2-7-1:3 | 2–7-3:3 | 2-7-5:1 | 2-7-7:1 | 2-7-7:2 |
| 2-7-9:1 | 2-8-11:1 | 2-9-1:2 | 3-3-3:1 | 3-3-3:2 |
| 3-4-3:1 | 3-4.3:3 | 3-5-4:2 | 3-5-10:2 | 3-6-1:1 |
| 3-6-1:3 | 3-6-4:4 | 3-6-5:3 | 3-6-6:2 | 3-10-2:1 |
| 4 3-11:2 | 4-4-3:1 | 4-5-2:1 | 4-6-4:2 | 4-6-5:2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4-7-4:2 | 5-1.6:2 | 5-3-1:1 | 5-3-2:2 | 5-3-2:3 |
| 5-3-2:4 | 5-4-4:3 | 5-4-9:3 | 5-5-1:1 | 5-5-8:3 |
| 5-6-4:3 | 5-6-4:4 | 5-8-2:3 | 5-8-2 3 | 5-8-7:1 |
| 5-10-3:2 | 5-10-8:2 | 6-1-7:3 | 6-2-2:1 | 6-2-3:1 |
| 6-5-5:2 | 6-6-2;2 | 6-6-9:2 | 6-7-6:3 | 6-8-5:3 |
| 6-10-2-3 | 6-10-8:2 | 6-1-7:3 | 6-2-2:1 | 7-3-2:4 |
| 6-5-5:2 | 6-6-2:2 | 6-6-9-2 | 6-7-6:3 | 8-4-2:3 |
| 6-10-2:3 | 6-10-9:2 | 7-2-1:4 | 7-2-6:2 | 8-5-7:3 |
| 7-3-3:1 | 7-6-6:2 | 7-7-5:1 | 8-3-9:1 | 8-8-11:1 |
| 8-4-7:2 | 8-4-7:3 | 8-4-7:4 | 8-5-1:2 | 9-2-7:2 |
| 8 7-6:3 | 8-7-7:1 | 8-7-7:3 | 8-8-1:1 | 9-7-3:3 |
| 8-9-1:2 | 8-10-3:2 | 8-10-4:2 | 9-2-4:4 | 10-3-10:4 |
| 6-4-1:2 | 9-5-6:3 | 9-5-7:1 | 9-7-1:2 | |
| 9-9-3:3 | 10-1-9:1 | 10-3-4:4 | 10-3-7:3 | |
| 10-3-11:1 | 10-4-2:9 | 10-4-7:4 | 10-10-6:3 | |

கருமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1-3-10:3 | 1-9-3:2 | 1-10-1:4 | 2-3-2:1 | 2-3-7:3 |
| 2-5-5:2 | 2-5-9:2 | 2-7-1:3 | 2-7-5:1 | 2-7-11:3 |
| 2-8-10:4 | 2-8-11:1 | 3-3-2:4 | 3-3-3.2 | 3-5-1;2 |
| 3-6-5.3 | 3-6-5:4 | 4-1-1:2 | 4-4-9.2 | 4-5-6:1 |
| 4-6-4:2 | 5-1-1:1 | 5-1-5 1 | 5-1-6:3 | 5-2-8:3 |
| 5-3-2.4 | 5-3:11:1 | 5-7-3.1 | 5-7-5 2 | 5-7-9 2 |
| 5-8-7·1 | 1-10-7:3 | 6-1-2.1 | 6-1-7.3 | 6 1.8:4 |
| 6-2-10:3 | 6-5-4:3 | 6-5-8:3 | 6-5 1:2 | 6-6-3:1 |
| 6-8-5:3 | 6-8-6:1 | 6-8-9:3 | 7 1-2:3 | 7-2.8:2 |
| 7-3-2:1 | 7-3-8:1 | 7-3-9 3 | 7-6-5:1 | 8-3-9:4 |
| 8-5-2:3 | 8-5-4:3 | 8 5-7:3 | 8-7-6:3 | 8-9-1:1 |
| 9 3-1:3 | 9-4-1:1 | 9-4-5:4 | 9-5-7 2 | 9-6-3.4 |
| 9-6-9 3 | 6-9-10.3 | 10-4 1:2 | 10-10-3:1 | 10.10-3:1 |

வெண்மை

| | | | | |
|---|---|---|---|---|
| 2-4-5 4 | 2-7-7.2 | 4-5-6:1 | 4-6-5:4 | 5-4-7:3 |
| 5-8-2:1 | 6-5-1:3 | 6-8-8:2 | 6-9-1:3 | 7-2-1.1 |
| 7-7-5.1 | 7-7-7:2 | 8-5-4:3 | 8-7-7:1 | 8-8-1:2 |
| 9-9-10 3 | | | | |

நீலம்

1-4-4;2 1-4-4:4 1-9-3:2 4-8-7:3 5-5-6:4
6-6-1:2 6-8-8:3 7-3-6:2 7-7-3:3 7-7-4:1
7-7-9:2 8-2-3:3 8-2-10:3

பசுமை

2-6-1:1 2-8-6:3 3-1-1:3 4-2-6:3 8-6-1:3
9-5-6:3

பொன்

2-6-3:2 3-1-2:2 3-2-6:4 3-4-4:1 5-8-7:1
5-9-2:1 8-2-1:3

மாமை

1-4-8:3 4-8-1:4 5-3-2:3 7-3-4:1 8-2-3:4
8-2-6:2 8-2-8:2

பசலை (பயலைமை; பயப்பு)

2-1-1:3 5-3-2:4

சாமம்

8-5-1:3 9-5-6:3

# 16. கோதை தமிழ்

ஆர். ஆளவந்தார்

தாம் கூறும் கருத்தைப் பிறர்உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதியும்படி உணர்த்த இலக்கியங்களில் உவமையைக் கையாண்டார்கள். அன்றாடம் பேச்சுவழக்கிலும் நாம் உவமையை ஓரளவு பயன்படுத்தி வருகிறோம். ஒருபொருளை வேறு ஒரு பொருளோடு ஒப்புமை கூறும் முகமாக அப்பொருளி னது வடிவு, வண்ணம், தொழில் முதலிய இயல்புகளை நன்கு புலப்படுத்தும்படி செய்வது பொருள் புலப்பாட்டு நெறியாகும் தொல்காப்பியர் உவமையைப் பொருட் புலப்பாட்டினைச் செய்யும் கருவி எனக் கூறுகிறார். வினை, பயன், மெய், உரு என நான்காகப் பிரிக்கின்றார். ஈண்டு உரு என்பது நிறம் என்ற பொருளில் வந்துள்ளது.

வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம் (உவமை. 1)

என்பது தொல்காப்பிய நூற்பா.

ஆகவே, இலக்கியங்களில் நிறச் சொற்களின் ஆட்சி அவற்றிற்குச் சிறப்பைத் தரும் வகையில் பெறும் பங்கு பெறு கிறது. விளக்க இயலாது பெருந்தத்துவங்களையும், உணர்ச்சியின் ஆழத்தையும், பொருளின் சிறப்பையும் விளக்குவதற்கு உவமை கள் அவற்றிலும் நிற உவமைகள் பெரிதும் பயன்படுகின்றன.

கோதையின் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் மக்களின் உள்ளத்தை மகிழ்வித்து விளங்கிவருகின்றன முப்பது பாக்களைக்கொண்ட திருப்பாவையும், நூற்று நாற்பத்து மூன்று பாக்களைக்கொண்ட நாச்சியார் திருமொழியும் ஆண்டாளின் படைப்புக்கள். அரங்கநாதனை அடைய நோன்பு நோற்று, கனவில் அவனை மணந்து, பின் அவனுடன் கலந்த கோதை, தனக்கு மணவாளனாகப் போகும் அழகிய மணவாளனிடம் மனதைப் பறிகொடுத்து அவனுடைய அழகை, அவனுடைய ஆடையின் அழகை, அவனுடைய பாஞ்சசன்னியத்தை விளக்கி விவரிக்கின்றார். மற்றும், அகில் குயில் குருவி போன்ற பிற

பொருள்களையும் விளக்கி விவரிக்கின்றார். இவற்றை விளக்கி விவரித்து வருணிக்கும் நிலையில் நிறச்சொற்களை ஆண்டாள் மிகுதியும் பயன்படுத்தியுள்ளார்.

நிறத்தைக் குறிக்க வண்ணம் என்ற சொல்லையே மிகுதியும் பயன்படுத்துகிறார்.

கருவுடை முகில் வண்ணம் காயாவண்ணன்
கருவிளை போல் வண்ணன் கமலவண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
திருந்தவே நோக்கெனக் கருளுகண்டாய் (509)

நிறம் என்ற சொல்,

பைம்பொழில் வாழிகுயில்காள்!
மயில் காள் ஒன் கருவிளைகாள்!
வம்பக் கனக்களிகாள்!
வண்ணப் பூவை நறுமலர் காள்!
ஐம்பெரும் பாதகர்காள்!
அணி மாவிருஞ் சோலை நின்ற
எம்பெருமானுடைய
நிறம் உங்களுக் கென்னசெய்வதே? (509)

என்ற இடத்திலும்,

மாமுத்த நிதிசொரியும்
மாமுகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட
தாடாளன் வார்த்தையென்னே. (578)

என்ற இடத்திலும் ஆக இரண்டே இடங்களில் மட்டுமே வந்துள்ளது.

கருமை, செம்மை, வெண்மை, நீலம், பொன்மை, சாமம் ஆகிய நிறங்கள் கோதை தமிழில் இடம் பெறுகின்றன.

எம்பெருமானின் அடி, ஆடை, உரு, கண், முகம், வாய் ஆகியவற்றை விவரிக்க நிறச்சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. கண்ணால் காணக்கூடிய இவற்றைப்போலவே, கண்ணால் காணமுடியாவிட்டாலும் உணர்ந்து அறியவேண்டிய உள்ளத்தை விவரிக்கவும் நிறச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் ஆண்டாள் தன் பல், வாய் ஆகியவற்றையும் நிறச்சொல்லைக் கொண்டு விளக்கியுள்ளார். மேலும், நப்பின்னையின் கண், கை, வாய் ஆகியவற்றையும், தவத்தவரின் பல்லையும், அகில், இருள், இளை, இழை, கச்சு, கமலம், கமல மலர், குயில், குருவி, கூறை, சங்கு, சிந்தூரப்பொடி, தளிர், தாமரை, நெல், பாஞ்சசன்னியம், மணல், மேகம் ஆகிய பிற பொருள்களை விளக்கவும் நிறச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

நிறச் சொல்லைக் கொண்டு உரு முதலியவற்றை "செங்கட் கரு மேனி வாசுதேவ னுடைய" (573) என்று விளக்குவதைப் போலவே "கார்க்கடல் வண்ணம்என் பானொருவன் கைகண்ட யோகம் தடவத்தீரும்" (621) என்று நிறப் பொருளைக் கூறி விளக்கும் உத்தியையும் கையாளுகிறார்.

எம்பெருமானின், அடி ஆடை, உரு, கண், முகம், வாய் உள்ளம் ஆகியவற்றை வருணிக்க நிறச்சொற்கள் பயன்படும் தன்மை.

அடி — ...... சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம் (583)

ஆடை — பீதகவாடை யுடைதாழப்பெருங்கார் மேகக் கன்றேபோல் (641)

உரு — ஊழி முதல்வன்உருவம்போல் மெய்கருத்து (477)

கண் — செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் (503)

முகம் — ...... முகம்செய்தாய் உதயப்பருப்ப தத்தின் மேல் (642)

வாய் — திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ (567)

உள்ளம்— பொருத்த முடைய நம்பியைப் புறம்போ லுள்ளும் கரியானை (643)

ஆண்டாள் தன் பல், வாய் ஆகியவற்றை விளக்க நிறச் சொற்கள் பயன்படும் தன்மை :-

முத்தன்ன வெண்முறு வல்செய்ய வாயும்முலையும் அழகழிந் தேன்நான் (550)

நப்பின்னையின் கண், கை, வாய், ஆகியவற்றை விளக்க நிறச்சொற்கள் பயன்படும்தன்மை:-

கண் — மைத்தடங்கண்ணினாய் நீயுன் மணாளனை (492)

கை — செந்தா மரைக்கையால் சீரார்வளையொலிப்ப (491)

வாய் — செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச்சிறு மருங்குல் (493)

பிற பெண்டிரின் அணி, முகம் ஆகியவற்றை விளக்க நிறச் சொற்கள் பயன்படும் தன்மை:—

திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி (503)

தவத்தவரின் பல்லை விளக்க நிறச்சொல் பயன்படும் தன்மை

வெண்பல் தவத்தவர் (487)

அகில், இருள், இலை, இழை, கச்சு கமலம் குயில், குருவி, கூறை, சங்கு, பாஞ்சசன்னியம், சிந்துரப்பொடி தளிர், தாமரை, நெல், மணல், மேகம் ஆகிய பிற பொருள்களை விளக்க நிறச் சொற்கள் பயன்படு தன்மை:—

அகில் — ''சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள்பொருது'' (596)

இருள் — ''அஞ்சன் வலைவைத்த வன்று காரிருளெல்லிற் பிழைத்து'' (532)

இலை — ''பாசிலை நாணற் படுத்துப் பரிதி வைத்து'' (562)

இழை — ''......சேயிழையார் சென்றிறைஞ்சி'' (503)

கச்சு — ''செங்கச்சுக் கொண்டுகண் ணுடையார்த்து'' (620)

கமலம் — ''பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதைசொன்ன'' (503)

குயில் — ''கண்ணுற வெண்கடல் வண்ணனைக் கூவு கருங்குயி லேஎன்ற மாற்றம்''— (555)

குருவி — ''காலை யெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள்'' (594).

கூறை — ''செங்கற் பொடிக்கூறை'' (487)

சங்கு — 'வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ'' (479)

சிந்துரப்பொடி — ''சிந்துரச் செம்பொடிப்போல் திருமாலிருஞ் சோலையெங்கும் இந்திர கோபங்களே எழுந் தும்பரத் திட்டனவால்'' (587)

தளிர் — 'தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும் சிறுகுயி லேதிரு மாலை'' (552)

தாமரை — ''தொங்கிய வண்டினங்காள் தொகு பூஞ்சுனை காள்சுனையில் தங்குசெந் தாமரைகாள் எனக் கோர்சரண் சாற்றுமினே (591)

நெல் — ''ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள' —(476)

பாஞ்சசன்னியம் — ''பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே (499)
'விருப்புற்றுக் கேட்கிறேன் சொல் ஆழி வெண்சங்கே'' (567)

மணல் — ''வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில் விசித்திரப்பட வீதிவாய்த் தெள்ளிநாங்க ளிழைத்தகோலம்'' (518)

மேகம் — ''விண்ணில மேலாப்பு விரித்தாற் போல் மேகங்காள்'' (577)

நிறச்சொல் நிறத்தையுணர்த்தாமல் பிறபொருள் உணர்த்தியும் வரும் தன்மை:—

''செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்'' (609)

''இன்னிசை யால்சென்ன செஞ்சொல்மாலை
ஏத்தவல் லார்க்கிடம் வைகுந்தமே'' (626)

வெண்மணல் கொண்டு வீதியில் கோலம் இழைக்கும் கோதை தன் பாக்களில் ஒரே தொடரில் ஒன்றற்கு மேற்பட்ட நிறச் சொற்களைப் பயன்படுத்தி வண்ணக் கோலம் இழைத்துள்ளமையும் அறியத்தக்கது.

''கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்'' (474)

''செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்'' (487)

''பீதக வாடை யுடைதாழப் பெருங்கார் மேகக்
கன்றேபோல்'' (641)

''உருவு கரிதாய் முகம்செய்தாய் உதய பருப்ப தத்தின்மேல்
விரியும் கதிரே போல்வானை விருந்தா வனத்தே
கண்டோமே'' (64[illegible])

ஒரு வண்ணம் மற்றொரு வண்ணமாகத் திரியும் என்ற கொள்கையும் கோதைக்கு உடன்பாடே.

'வண்ணம் திரிவும் மனங்குழையும் மான மிலாமையும்
வாய்வெளுப்பும்

''உண்ண லுருமையும் உள்மெலியும் ஓதநீர் வண்ணனென்
பானொருவன்
தண்ணந் துழாயென்னும் மாலைகொண்டு சூட்டந்
தணியும் பிலம்பல்தன்னைப்
பண்ணழி யழிப்பல தேவனவென்ற பாண்டி
வடத்தென்னையுய்த்திடுமின்'' (623)

**கருமை**

''கண்ணனென்றும் கருந்தெய்வம் காட்சி பழகிக்
கிடப்பேனை'' (627)

என்று கரிய நிறத்தைக் கண்டாலே கோதை மனம் மகிழ்வதோடு, அதே நிறம் தம் தலைவனை நினைவுபடுத்தும் பொழுது மனம் தரிக்காமலும் வருந்துகிறாள்.

'கார்கொள் பிடாக்கள் நின்று கழறிச்சிரிக் கத்தரியேன்'' (588)

கடல் வண்ணனைக் கூவுமாறு அதே நிறமுள்ள கருங் குயிலையே வேண்டுவதும் கோதை கரிய நிறத்தில் ஈடுபட்டுள்ளமைக்கு ஒரு சான்று.

''கண்ணுற வென்கடல் வண்ணனைக் கூவு கருங்குயி
லேஎன்று மாற்றம்'' (555)

கரியவனின் வரவை கரிய குருவிகளே சொல்லுவதாகவும் கூறுகிறார்.

''காலை யெழுந்திருந்த கரிய குரு விக்கணங்கள்
மாலின் வரவுசொல்லி மருள் பாடுதல்
மெய்ம்மைகொலோ'' (594)

அகில், ஏறு, கடல், கருவிளை, களங்கனி, காயா, குயில், குருவி, கோடற்பூக்கள், மாமணி, மேகம் ஆகிய பொருள்களின் கருமை நிறம் அரங்கநாதனின் கோலத்தோடு ஒத்திருத்தலால் கோதையைக் கவருகின்றன.

## செம்மை

செம்மை நிறத்தைக் கண்டதும் அந்நிறமுடைய எம்பெருமானின் கண், முகம், வாய் முதலியவற்றின் அழகு ஆண்டாளின் நினைவிற்கு வந்து மனதைக் கவருகின்றன.

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ'' (567)

என்று தன் தலைவனின் வாயில் பட்டு அதன் சுவை யறிந்த பாஞ்சசன்னியத்தை நோக்கி, செம்மை, நிறமுடைய அவன் வாய் தித்தித்திருக்குமோ என்று வினவி தன் ஆற்றாமையைப் புலப்படுத்திக் கொள்ளும் ஆண்டாளை எம்பெருமான் வாயின் செம்மை நிறம் கவர்ந்துள்ள நிலையை நம்மால் உணர்ந்து உணரமுடிகிறது.

சிந்துரப்பொடி, செங்கற்பொடி தளிர், தாமரைப்பூ, பவளம் ஆகிய இவற்றின் செம்மை நிறமும் ஆண்டாளக் கவருகின்றன.

வெண்மை

வெண்மை நிறத்தை மிகுதியும் சங்கின் நிறத்தைக் குறிக்கவே பயன்படுத்துகிறார் ஆண்டாள்.

''வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ'' (479)

''பாலன்ன வண்ணத்தில் பாஞ்ச சன்னியமே'' (499)

'வெளிய சங்கொன் றுடையானை...'' (641)

பாவை நோன்பு நோற்கச் செல்லுங்காலை பொழுது விடிந்ததை அறிவிக்க வானம் வெளுத்ததைக் குறிக்கும் பொழுது வெள்ளை நிறம் இடம் பெறுகிறது.

''கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்'' (481)

தான் கோலமிடும் மணல் வெண்மை நிறம் வாய்ந்தது என்பதையும் குறிக்கிறார்.

''வெள்ளைநுண் மணற்கொண்டு தெருவணிந்து'' (503)

''வெள்ளைநுண்மணல் கொண்டுசிற்றில் விசித்திரப்பட வீதிவாய்த்
தெள்ளிநாங்க ளிழைத்த கோலம்'' (518)

முல்லை மலர்களின் வெண்மை நிறம் இவளை வருத்துகின்றது.

'தாரிக்கொடி முல்லைகளும் தவள நகை காட்டுகின்ற'' (588)

பிரிவுத் துயரால் வாய் வெளுக்கின்றது.

''மாசுடை யுடம்பொடு தலையுலறி வாய்ப்புறம்
வெளுத்தொரு போதுமுண்டு'' (511)

## பொன்நிறம்

கருடனின்-உரு பொன் நிறமானது.

"பொன்புடை மேனிக் கருளக் கொடியுடைப் புண்ணியனை
வரக் கூவாய்" (548)

பெண்ணின் நிறம் பொன் நிறமே.

"குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே"
(484)

திருமாலின் ஆடை பொன்னாடை. ஆகவே அதன் நிறமும் பொன் நிறம்.

"பெண்ணின் வருத்த மறியாத பெருமா னரையில் பீதக
வண்ண ஆடைகொண்டு என்னை வாட்டம் தணிய
வீசீரே" (627)

"பீதக வாடை யுடைதாழப் பெருங்கார் மேகக்
கன்றேபோல்" (641)

"பீதக வாடை யுடையானை" (644)

திருமாலின் திருவடி பொற்றாமரை போன்றது.

"பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்"
(502)

திருமாலின் கழல் பொற்கழல்.

' செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா" (490)

## பசுமை

கமலம் பசுமைநிறம் கொண்டது.

"பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான்
கோதைசொன்ன" (503)

இலை பசுமை நிறம் கொண்டது.

"பாசிலை நாணற் படுத்துப் பரிதிவைத்து" (562)

கிளியின் வண்ணம் பசுமை.

"பைங்கிளி வண்ணன் சிரீதர னென்பதோர்" (553)

பொழில் பசுமை நிறம் வாய்ந்தது.

"பைம்பொழில் வாழ்குயில்காள்..." (590)

**நீலம்**

மேகங்களின் நிறம் நீலம்.

"விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்" (577)

பூவைப் பூ நீல நிறம் வாய்ந்தது.

"போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாஉன்" (496)

**சாமம்**

எம்பெருமான் சாமத்தின் நிறம் கொண்டவன்.

"சாமத்தின் நிறங்கொண்ட தாடாளன்
வார்த்தையென்னே" (578)

நிறச்சொற்களைக் கொண்டு கோதை திருமாலின் உரு, மற்ற உறுப்புக்கள், நப்பின்னை போன்ற மற்றவரின் அங்கங்கள், அகில் போன்ற பிற பொருள்கள் இவற்றையெல்லாம் விளக்கி விவரித்து வருணித்ததன் மூலம் வளமான பக்தி இலக்கியத்தைப் படைத்து, மக்களின் உள்ளத்தையும் மகிழ்வித்தார் என்றே கொள்ள வேண்டியுள்ளது. மேலும், நிற உவமைகள் மூலம் உணர்ச்சியின் ஆழத்தையும், பொருளின் சிறப்பையும் விளக்கியுள்ளார்.

---

**பயன்படுத்திய நூல்**

1. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம்,
சென்னை, இரண்டாம் பதிப்பு, 1981. (பாடல்களின், அடைப்புக் குறியில் உள்ள எண்கள் இந்நூலில் உள்ள எண்களைக் குறிக்கும்.

பின்னிணைப்பு.

கோதை தமிழில் நிறச்சொற்கள் ஆட்சிபெற்ற இடங்கள்:-

கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகந்தான் (474)
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம் (475)
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள் (476)
ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல் (477)
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து (477)
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ (479)
கீழ்வான் வெள்ளென் றெருமை சிறுவீடு (481)
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே (484)
முற்றம் புகுந்து முகில்வண்ணம் பேர்பாட (484)
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினாண் (487)
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் (487)
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய் (487)
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான் (489)
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவர் (490)
செந்தா மரைக்கையில் சீரார் வளையொலிப்ப (491)
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை (492)
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல் (493)
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழிபாவோ (495)
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாஉன் (496)
மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான் (499)
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே (499)
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய் (502)
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்னிறைஞ்சி (503)
பைங்கமலத் தண்தெரியல்பட்டர்பிரான் கோதைசொன்ன (503)
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் (503)
வெள்ளைநுண் மணற்கொண்டு தெருவணிந்து (505)
கடல்வண்ண னென்பதோர் பேரெழுதி (505)

கருவுடை முகில்வண்ணன் காயாவண்ணன்
  கருவிளை போல் வண்ணன் கமலவண்ணத் (505)
மாசுடை யுடம்பொடு தலையுலறி
  வாய்ப்புறம் வெளுத்தொரு போதுமுண்டு (511)
பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே (512)
மருப்பினை யொசித்துப்பின் வாய்பிளந்த
  மணிவண்ணற் கென்னை வகுத்திடென்று (573)

பெய்யுமாமுகில் போல் வண்ணா (517)
செய்ய தாமரைக் கண்ணினாய்எங்கள்சிற்றில்வந்து
சிதையேலே (517)
வெள்ளைநுண்மணல் கொண்டு சிற்றில் (518)
ஓதமாகடல் வண்ணா (520)
கட்டியும்கைத் தால்இன்னாமை அறிதியே
கடல் வண்ணனே (521)
கோலம் கரிய பிரானே குருந்திடைக் கூறை பணிவாய் (528)
கஞ்சன் வலைவைத்த வன்று காரிரு ளெல்லிற் பிழைந்து (532)
கன்னிய ரோடெங்கள் நம்பி கரியபிரான் விளையாட்டை (533)
மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி வண்ணன் மணிமுடி
மைந்தன் (545)
பன்னி எப்போதும் இருந்து விரைந்தேன் பவளவா யன்வரக்
கூவாய் (545)
வெள்ளை விளிசங் கிடக்கையிற் கொண்ட விமலன் (546)
காதலி யோடுடன் வாழ்குயி லேஎன் கருமாணிக் கம்வரக்கூவாய்
(547)
பொன்புடை மேனிக் கருளக் கொடியுடைப் புண்ணியன் (548)
மூத்தன்ன வெண்முறு வல்செய்ய வாயும் (550)
தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும் சிறுகுயிலே (552)
பைங்கிளி வண்ணன் சிரீதரன் (553)
கண்ணுற வென்கடல் வண்ணனைக் கூவு கருங் குயிலே (555)
பாசிலை நாணற் படுத்துப் பரிதிவைத்து (562)
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ (567)
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்ஆழி வெண்சங்கே (567)
சேய்த்தீர்ந்த மாய்நின்ற செங்கண்மால் தன்னுடைய (572)
செங்கமல நாண்மலர்மேல் தேனுகரும் அன்னம்போல் (573)
செங்கட் கருமேனி வாசுதேவன் (573)
கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே (574)
விண்ணில மேலாப்பு விரித்தாற்போல் மேகங்கள் (577)
சாமத்தின் நிறங்கொண்ட (578)
ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோ டிவையெல்லாம் (579)
செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம் (583)
கார்காலத் தெழுகின்ற கார் முகில்காள் (584)
சிந்துரச் செம்பொடிபோல் (584)
தார்கொடி முல்லைகளும் தவ ளநகை காட்டுகின்ற (588)
கார்கொள் பிடாக்கள் நின்று கழ றிச்சிரிக் கத்தரியேன் (588)
கருவிளை யொண்மலர்காள் காயாமலர் காண் (589)
எம்பெரு மானுடைய நிறம் உங்களுக் கென்செய்வதே (590)

செங்கட் கருமுகிலின் திரு வுருப்போல் (591)
தங்கு செந் தாமரைகான் எனக்கோர் சரண்சாற்றுமினே (591)
காலை யெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் (594)
சாந்தொடு காரகிலும் சுமந்து (596)
கார்க் கோடற் பூக்காள் கார்க்கடல் வண்ணன் (597)
செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் (609)
பச்சைப் பசுந்தேவர் தாம்பண்டு நீரேற்ற (610)
செங்கச்சுக் கொண்டு (620
கார்க்கடல் வண்ணன்என் பானொருவன் (621)
கார்த்தண் முகிலும் கருவிளையும் காயா மலரும்
கமலப்பூவும் (622)

வண்ணம் திரியும் மனங்குழைவும் மான மிலாமையும்
வாய் வெளுப்பும்

உண்ண லுருமையும் உன்மெலிவும் ஓதநீர் வண்ணனென்
பானொருவன்( 623)
இன்னிசை யால் சொன்ன செஞ்சொல் மாலை (626)
கண்ண னென்னும் கருந்தெய்வம் (627)
பெண்ணின் வருத்த மறியாத பெருமா னரையில் பீதக
வண்ண ஆடை கொண்டு (627)
காரே வுழக்க வழக்குண்டு (630)
செம்மை யுடைய திருமார்வில் (635)
பட்டி மேய்ந்தோர் காரேறு (637)
கார்த்தண் கமலக் கண் (6.0)
பீதக வாடை யுடைதாழப் பெரும்கார் மேகக்
கன்றே போல் (641)
உருவு கரிதாய் முகம்செய்தாய் (642)
புறம்போ லுள்ளும் கரியானை (643)
கருத்தைப் பிழைத்து கின்றஅக் கருமா முகிலை (643)
வெளிய சங்கொன் றுடையானைப் பீதக
வாடை யுடையானை (644)

# 17. திருமங்கையாழ்வார் பாசுரங்கள்

ந. கடிகாசலம்

தமிழ் இலக்கியங்களில் நிறப்பெயர்கள் குறிக்கப்பட்டுள்ள பாங்கு இலக்கியத்திற்கு இலக்கியம் காலத்திற்கு காலம் வேறுபட்டு அமைந்துள்ள நிலையைக் காண்கிறோம். அவ்வகையில் குறிக்கப்பெறும் நிறம் பற்றிய செய்திகள் இலக்கியப் படைப்பாளியின் கோட்பாட்டை உணர்த்துவதாகவும், அவ்விலக்கியம் எழுந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள்' நம்பிக்கைகளைக் காட்டுவதாகவும் அமையக்கூடும். இவை மட்டுமின்றி, அக்கால மக்களின் மனநிலை, புலவரின் ஆளுமைப் பண்பு ஆகியவற்றுக் கேற்பவும் நிறங்கள் இடம் பெற்றிருப் பதனைக் காண்கிறோம்.

அவ்வகையில், திருமங்கையாழ்வார் பாடியருளிய பாசுரங்களில் காணப்பெறும் நிறம் பற்றிய செய்திகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

எம்பெருமானின் திருமேனியில் ஆழங்கால்பட்டுப் பக்திப் பரவசத்தால் பாசுரங்களைப் பாடியவர்கள் ஆழ்வார்கள். அவர்கள் பாடிய பாசுரங்களின் தொகுதியே 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்று வழங்கப்படுகிறது. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கையாழ்வார் கள்வர் குலத்தில் பிறந்தவர். பிறகு, எம்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டதால் வைணவ பக்தராக மாறிப் பக்திச் சுவை சொட்டும் பிரபந்தங்களைத் தந்தருளியவர்.

திருமங்கையாழ்வார் அருளியவை :

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரிய திருமொழி | ... | 1084 பாசுரங்கள் |
| 2. | திருக்குறுந் தாண்டகம் | ... | 20 |
| 3. | திருநெடுந்தாண்டகம் | ... | 30 |
| 4. | திருவெழுகூற்றிருக்கை | ... | 1 |
| 5. | சிறிய திருமடல் | ... | 40 |
| 6. | பெரிய திருமடல் | ... | 78 |

இவர் கி.பி. 9—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

## பக்தி இலக்கியங்களில் நிறம்

பக்தி இலக்கியங்கள் இறைவனைப் பாடுவதைத் தலைமைப் பொருளாகக் கொண்டிலங்குவதால் அவ்விறைவனின் தோற்றம், பெருமை போன்றவற்றை விளக்கி நிற்கும் நிலையிலும், அவ்விறைவனின் ஆடை, அவன் அணியும் மாலை, அவனுடைய ஆயுதங்கள் ஆகியவற்றை விவரிக்கும் போக்கிலும் நிறப் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

## நிறம்-வண்ணம்

ஆழ்வார் பெருமக்கள் திருமாலைப் பாடியதோடு அவனுடைய நிறத்தினையும் பெருமையாகப் பாடி மகிழ்ந்தார்கள். திருமாலின் நிறத்தைப் பற்றிய குறிப்புகள் அவர்கள் இயற்றியருளிய பாசுரங்களில் பலவிடங்களில் காணப்படுகின்றன.

நிறத்தைக் குறிக்க வண்ணம் என்ற சொல்லையே திருமங்கையாழ்வார் மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

முன்னை வண்ணம் பாலின் வண்ணம்
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்
(பெரிய. திரு. 4.3:8)

மைவண்ணம் கருமுகில்போல்
திகழ்வண்ண மரகதத்தின்
அவ்வண்ண வண்ணன் (பெரிய. திரு. 5.6:9)
கார் வண்ணம் திருமேனி
கண்ணும் வாயும் கைத்தலமும்
அடியிணையும் கமலவண்ணம் (திருநெடுந்தாண்டகம்: 18)
வண்ணமும் பொன்னிறமாவது ஒழியுமே
(பெரிய. திரு. 8.2:5)
மைவண்ண நறுங்குஞ்சி (திருநெடுந்தாண்டகம்: 21)

திருமாலை,

நறும்பூத் திகழ்வண்ணன் (பெரிய. திருமடல் — 56)
கருநீல வண்ணன் (திருநெடுந் தாண்டகம் — 3)
கருவரை வண்ணன் (பெரிய திருமொழி) 5.9:3)
காயாமலர் வண்ணன் (பெரிய திருமொழி. 1.5:6)
காரில்திகழ் காயா வண்ணன் ( ,, 8.4:6)
முகில் வண்ணன் ( ,, 11.3:9)
நீர் வண்ணன் (திருநெடுந். 13)

எனப் பலவிடங்களில் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார்.

நிறம் என்ற பொருள் தவிர்த்துப் பிறபொருளிலும் வண்ணம் என்ற சொல் இவர் பரசுரங்களில் பயின்று வந்துள்ளது.

இவ்வுலகின் வண்ணம் (திருக்குறுந்தாண்டகம், 16)
இந்த வண்ணம் என்று (பெரிய திருமொழி. 4.9:9)

நிறம் பற்றிய சொல்லாட்சி அருகியே காணப்படுகின்றது.

மணிநிறம் (பெரிய திருமொழி. 10 9:7)
கருநிறத்தென் துணையே (திருநெடுந். 16)
கருமா முகில்போல் நிறத்தன் (பெரிய. 10.10:27)
கருமுகில் திருநிறத்தன் (பெரிய திருமொழி. 5.9:1)

என்பன இங்குக் குறிப்பிடத்தக்கன.

தாம் பாடிய பாசுரங்களில் கருமை, செம்மை, வெண்மை பொன்மை, நீலம், பச்சை ஆகிய நிறங்களைச் சுட்டுகிறார் திருமங்கையாழ்வார் இவற்றில், கருமை, செம்மை ஆகிய நிறப்பயிற்சியே பெரும்பான்மையாகக் காணக்கிடக்கின்றது.

## கருமை

அரங்கநகர் அப்பனைக் கரிய மேனி நிறத்தனாகக் காண்பதில் ஆழ்வாருக்குப் பெருவிருப்பம்.

கருமேனி யுடையம்மான் (பெரிய. திருமொழி. 3.10:7)
கருமுகில்போல் திருமேனியம்மன் (திருமொழி. 3.9:1)
கானுலாவிய கருமுகில் திருநிறத்தவனிடம் (3.1:6)
கருமுகில் திருநிறத்தன் (5.9:1)
கரியான் (1.8:2)
கரியான் ஒரு காளை (3.7:1)

என பலபடப் பேசுகிறார் திருமங்கையாழ்வார். எம்பெருமானின் திருமேனி நிறத்தில் ஈடுபாடுகொண்ட ஆழ்வார் கடல்வண்ணனாகவும் அவனைக் காண்கிறார்.

கார்க்கடல் வண்ணர் (பெ. திருமொழி. 8.2:4)
கடல் போல் திருமேனி கரியாய் (4.7:1)
கருங்கடல் வண்ணா (பெ.திருமொழி. 10.9:8)

ஆகியவற்றில் கடலின் நிறம் கருமை எனக் குறிப்பிடுவது சுட்டத்தக்கது.

கருமை நிறத்தைக் குறிக்க—

கரு — கருமென் குழல் (பெ. திருமொழி. 3.8:8)
கருமுகில் (2.5:2; 4.4:4)
கருமாமுகில் (3.8:1; 8.6:10)
கருங்களிறு (2.5:4; 2.5:10; 2.10:6)
கருங்குவளை (3.6:10)
கருங்குழல் (3.1:8)

கரி — கரியான் (1 8:2)

கார் — கார்க்கடல் வண்ணன் (8.2:4)
கார்முகில் வண்ணன் (11.2:9)

எனப் பல சொற்கள் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழிப் பாசுரங்களில் பயின்று வந்துள்ளதை உணர முடிகிறது. இவை மட்டுமின்றி, 'காயா மலர் வண்ணன்' (1.5:6); 'காயா வண்ணன்' (8.4:6), 'குவளை வண்ணன்' (10.4:9), காவியொப்பார் (2.8:8) என்பதனாலும் உவமை நிலையில் எம்பொருனின் கரிய திருமேனி குறிக்கப்பட்டுள்ளது.

## செம்மை

இனி, திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் செம்மை, பயின்று வந்துள்ள பாங்கினைக் காண்போம்.

கரிய திருமேனி கொண்ட திருமாலின் கண், வாய், திருவடி போன்ற அங்கங்களைச் செம்மையாகக் காட்டுகின்றன ஆழ்வார் பாசுரங்கள்.

செங்கண்மால் அம்மான் (பெ. திருமொழி 8.3 3)
செங்கண்மால் (3.2: 0; 5.9.9; 6.6:10; திருக். 20)
செங்கமலக் கண்ணான் (6.8.3)
பவளச் செவ்வாய் (3.4;8)
செங்கணம்பி (2 2 6)

என்றெல்லாம் எம்பெருமானின் கண். வாய் ஆகியவற்றைச் செந்நிறமாகப் பாடுகிறார் ஆழ்வார். இறைவன் திருவடியினைச் செம்பொன் திருவடியிணை (7.8:1) எனக் குறிப்பிடுகிறார்.

இவர்தம் பாசுரங்களில் மஞ்சள் நிறம் குறிக்கப்பெறவில்லை. ஆனால், செம்பொன் நிறம் பலவிடங்களில் பேசப்பெறுகின்றது. செம்மையும் பொன்மையும் கலந்த நிறமாக இதைக் கொள்ளலாம்.

செம்பொன் (2,8,; 2:10: 2.10:3,9; 6.4:4)
செம்பொன் மதில் (4.1:9; 7:5:3)
செம்பொன்செய் கோயில் (4.3.1-10)

எனப் பயின்று வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

செங்கமலம் (3.4:10), செந்தாமரை (4.7:2; 6:7:8; 7:9:5; 10.5:10), செம்மலர் (5.4.9) ஆகிய செம்மை நிறமுடைய மலர்களும், செங்கால் நரை (5.1:5); செங்காலண்ணம் (3.8:9), செங்கயல் (1.8:10; 4.5:8) செஞ்சரம் (2 2:2) என்பனவும் குறிக்கப் பெற்றுள்ளன.

செம்மை என்பதற்குச் செவ்வை என்ற ஒரு பொருளுண்டு. அதனடிப்படையில் செங்கோல் (2.9;6), செந்நெல் (3.9:3, 7, 9; 3.10:6; 7:8:2; 9.15:5) ஆகியவை கூறப்பெற்றுள்ளன.

விண் சிவக்கும் (1.7:8), கண்சிவந்த வாடை (2.10:9) என்ற குறிப்பினாலும் செம்மை நிறம் உணர்த்தப் பெற்றுள்ளது.

இவ்வாறு 54 இடங்களில் செம்மை பயின்று வந்துள்ளது.

## கருமையும் செம்மையும்

எம்பெருமானின் மேனி கருமை நிறம் வாயந்தது; கண், வாய் போன்றவை செம்மை நிறத்தன. இவ்விரண்டு நிறங்களையும் இணைத்துப் பேசும் போக்கு இவர் பாசுரங்களில் கீழ்க் குறித்தவாறு காணப்படுகிறது.

செங்கண் நெடிய கருமேனி (9.5:8)

கருவடிவில் செங்கண்ண வண்ணன் (திருநெடுந். 3)

இவை மட்டுமின்றி, கருநெடுங்கண் செவ்வாய்ப் பிணை (பெரிய திருமடல். வரி 53) என்பதில் இவ்விரண்டு நிறங்களை இணைத்துப் பேசுவதைக் காண்கிறோம்.

## வெண்மை

இந்நிறம் 16 இடங்களில் பயின்று வந்துள்ளது. பெரும்பாலும் நேரிடையாக நிறத்தை உணர்த்தும் நிலையில் இவ் வண்ணம் பற்றிய சொல் பெரிய திருமொழியில் பயின்று வந்துள்ளது

வெண் தரளங்கள் (1.10:8)

வெண் முத்தம் (2.7:1)

வெண் மதி (2.7:1)

வெண் குடை (1.4:10)

வெண் தாமரை (3.8:3)

வெண் சங்கம் (10.9:6)

வெண் முட்டை (10.9:7)

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## நீலம்

நீல நிறமும் திருமங்கையாழ்வார் பாசுரங்களில் பலவிடங்களில் குறிக்கப் பெற்றுள்ளது. வெண்மையைப் போலவே நீலமும் பெரும்பாலும் நேரிடையாக நிறத்தைக் குறித்துப் பேசப் பட்டுள்ளது.

> நறு நீலமலர் (3.6:2)
>
> நீலக் கண்கள் (7.5:7)
>
> மலர் நீலம் (4.4:2)
>
> நீல முகில் வண்ணன் (2.4:5)

என்பனவற்றைக் காட்டாகக் காட்டலாம். மேலும்,

> மணி நிற வண்ணன் (1.8:2)
>
> மாமணி வண்ணன் (9.5:3)

எனக் குறிக்கப்படும்போது மணிநிறம் நீலநிறத்தைக் குறித்து அமைவதைக் காணமுடிகிறது.

> கொண்டல் மணிநிறவண்ணர் (9 5:5)

என்றும் திருமால் குறிக்கப்பெற்றுள்ளது சுட்டத்தக்கது.

## பொன்மை

இந்நிறம் மிக அருகியே பயின்று வந்துள்ளது.

> வண்ணமும் பொன்னிறமாவது ஒழியுமே (8.2:5)
>
> பொன்னிறம் கொண்டு
> புலர்ந்தெழுந்த காமத்தால் (பெரிய திருமடல். 145)

என்று பொன்னிறம் பேசப்பட்டுள்ளது.

## பசுமை

இந்நிறம் ஓர் இடத்தில்தான் திருமங்கையாழ்வார் பாசுரங்களில் பயின்று வந்துள்ளது.

பச்சிலை (10.7:12)

பச்சை நிறத்தை உணர்த்தாமல் பச்சை எனும் சொல்,

பச்சைத் தேன் (திருக்குறுந். 6)
பைந்தாள் (3.8:6)

எனப்பயின்று வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நிறம் இடம்பெற்ற நிலை

திருமங்கையாழ்வாரின் திருப்பாசுரங்களில் நிறம் இருநிலைகளில் இடம்பெற்றது எனக் கூறலாம். ஒரு பொருளில் தோற்றத்தை விளக்கும் நிலையில் அமைந்தது ஒன்று; அப்பொருளின் பண்பினைப் புலப்படுத்தி அமையும் நிலை மற்றொன்று.

திருமாலின் தோற்றப் பொலிவினைக் கூறும் பாசுரங்களில்

கரு நீலவண்ணன் (திருநெடுந். 3)
கார் வண்ணன் 10. 5: 4)
செங்கணம்பி (2. 2: 6)
செங்கண்மால் (4. 4: 1-10)

எனவும்,

கருங்குழல் (3. 1. 8)
கருந்தண் மாகடல் (3. 1: 1)
கருமுகில் (2. 5: 3)

எனப்பொருள் வருணனைகளிலும் நிறப் பெயர்கள் அமைந்து கிடக்கின்ற பான்மை தெளிவாகப் புலப்படுகின்றது.

உவமை நிலைகளில் நிறப்பெயர்கள் அமைந்து கிடக்கும் நிலையும் மிகத்தெளிவாகக் காணக்கிடக்கின்றது-

கருமா முகில்போல் நிறத்தன் (10.10:2)
கடல்போல் திருமேனி கரியாய் (4.7:1)

ஆகியவற்றைக் காட்டாகக் கூறலாம்.

## தொகுப்பு

'நாடி கண்டு கொண்ட நாராயணனின் நாமத்தைப்' பலபடப் பாடிப் போற்றும் திருமங்கையாழ்வார் எம்பெருமானின் திருமேனியைக் கரிய நிறமாகவே பேசுகிறார். காயா மலர் வண்ணன் (1.5:6) எனப் போற்றப்படும் திருமால் ஆழ்வாருக்கு அஞ்சன மாமலை (3,3:7, யாகத் தோன்றுகிறார்.

கருமேனி கொண்ட திருமாலைக் கண்ணன் (6.8:3) எனவும், செங்கணம்பி (2.2:6) எனவும் பெரிய திருமொழியில் அவன்தன் அவயச் செம்மையப் போற்றுகிறார் திருமங்கையாழ்வார்.

இருநிறப் பெயர்கள் இணைந்து வரும் நிலையும் திருமங்கை யாழ்வார் பாசுரங்களில் உண்டு. கமலச் செவ்வாய் வெளுப்ப (10.7:6), நெடிய கருமேனி (9.5:8) என்பனவற்றால் இந்நிலை அறியக் கிடக்கிறது.

நிறப்பெயர், வேறு பொருள் உணர்த்தும் நிலையும் இவர் பாசுரங்களில் உண்டு. பைந்தாள் (3.8 6), பச்சைத்தேன் (திருக்குறுந்.6) ஆகியவற்றைக் கொண்டு இதை உணரமுடிகிறது

எம்பெருமானின் மேனி கருமை நிறம் வாய்ந்ததாக இருப்பினும் அது ஒளிவிட்டு மிளிர்வதாகப் பாடுவதையும் இவர் பாசுரங்களில் காணமுடிகிறது. கருமணி (5. 6: 1; 9.5):, ஒளிமணிவண்ணன் (10. 5:1), கொண்டல் மணிநிற வண்ணன் (9. 5:5) என்பனவற்றால் இதைத் தெளியலாம்.

எம்பெருமானின் மீது கொண்ட பக்தியால் அவ்விறைவனின் தோற்றப்பொலிவினை நினைந்து பாடும் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களில் அப்பொலிவு முற்றும் தெளிவாக விளங்கும் வகையில் கருமை, செம்மை, வெண்மை, நீலம், பொன்மை, பசுமை ஆகிய நிறங்கள் பயின்று வந்துள்ளன.

## பின்னிணைப்பு

திருமங்கையாழ்வார் பாசுரங்களில் நிறம் பயின்று வந்துள்ள இடங்கள்

### வண்ணம் - நிறம்:

இந்த வண்ணம் என்று (4. 9:9 ; இவ்வுலகின் வண்ணம் (திருக்குறுந் தாண்டகம். 17); எய் வண்ண வெஞ்சிலை (வரி.3); கைவண்ணம் தாமரைவாய் (வரி, 5, திருநெடுந். 21); ஒளிமணி வண்ணனே (10. 5:1); நீர்வண்ணன் (திருநெடுந். 18); முன்னை வண்ணம் பாலின் வண்ணம் பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம், பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் 4. 9; 8); மாமணிவண்ணன் (9. 5. 3) வண்ணன் எம்பெருமான் (1. 4 6); மணிநிறம் (10. 0:7); மணிநிற வண்ணன் (1. 8:2)

### கருமை

அஞ்சன மாமலை (3. 3:7); அலைகடல் வண்ணர் (திருக்.17); ஆழி வண்ண! (58:1); கடல்போல் திருமேனி காரியாய் (4.7;1); கடல் வண்ணன் (7. 3; 6; 7. 10: 2) கரியான் (1. 8: 2); கரியான் ஒரு காளை (3. 7: 1); கருங்கடல் (1. 4: 10,; கருங்கடல் வண்ணா! (10. 9, 8); கருங்களிறு (2. 5:4 2. 10: 6; 2. 5:10;) கருங்குவளை (3. 6: 10); கருங்குழல் (3. 1: 8); கருந்தண்கடல் (5. 2: 6); கருந்தண் மாகடல் (3. 1: 1); கருநிலத்தென் துணை திருநெடுந், 16;)

கருநீர் முகில் வண்ணன் கண்ணபுரத்தான் (8.9:10); கருநீல மிருந்தில் காட்ட (2.10:3); கருநீல வண்ணன் (திருநெடுந்3); கருநெடுங்கண் (பெரியதிருமடல் வரி 53); கருமணி (5.6:1; 9.5:4); கருமாமுகில் (3.8:1; 8.6:10); கருமாமுகில் போல் (10.10.2); கருமாமுகிலுருவா (7.9;9); கருமுகில் (2.5:2,3; 3.3:9; 4.4:4); கருமுகில் திருநிறத்தன் (5.9:1); கருமுகில் போல் திருமேனி யம்மான் (3.9:1); கருமென்குழல் (3.8:8); கருமேனியுடையம்மான் (3.10:7); கருவடிவில் செங்கண்ண வண்ணன் (திருநெடிந்.3); கருவரை வண்ணன் (5.9:3); காயா மலர் வண்ணன் (1.5:6); கார்க்கடல் வண்ணர் (8.2:4); கார் மயில்கள் (5.10:7); கார்முகில் வண்ணர் (10.9:3); கார்முகில் வண்ணர் (11.2;9); கார்வண்ணம் திருமேனி (திருநெடுந் 18); கார்வண்ணன் (1.9:10; 2.6:2); கார் வண்ணனே (10.5:4); கார்வண்ணா (7.7:7); காரார் திருமேனி (சிறிய திருமடல். வரி8); காரார் வரைக் கொங்கை கண்ணார்

(சிறிய திருமடல். வரி. 1); காரில் திகழ் காயா வண்ணன் (8.4:6); காவியொப்பார்(2.8:8);கானுலாவிய கருமுகில்திருநிறத்தவனிடம் (3.1:6); குவளை வண்ணன் (10.4:9); குழல் நிறவண்ண (6.1:3); கொண்டல் மணி நிற வண்ணர் (9 5:5); செங்கண் நெடிய கரு மேனி (9.5:8); நறுப்பூத் திகழ் வண்ணன் வண்ணம் போல் அன்ன கடல் (பெரிய திருமடல். 56); நெடுங் கடல் வண்ணா! (1:6:8); பார்வண்ண மடமங்கை (வரி 3); ஏர்வண்ண என்பேதை என்சொல் கேளாள் (வரி. 5, திருநெடுந் 18); பூவை வண்ணனார் (11.1:7); மணிவண்ணா! (சிறிய. திருமடல் வரி. 22); மழை தவழும் மேக வண்ணா! (திருநெடுந். 30); மா கடல் வண்ணன் (9.9:1); மாநீர் வண்ணன் (9.6:6); முகில் வண்ணன் (11.3:9); முந்நீர் வண்ண (திருவெழு கூற்றிருக்கை-25); மைவண்ணம் கருமுகில்போல் திகழ்வண்ண மரகதத்தின் அவ்வண்ண வண்ணன் (5.6.9); மைவண்ண நறுங்குறிஞ்சி (திருநெடுந்.21)

## செம்மை

கண்சிவந்த வாடை (2.10:9); கதிர்ச் செந்நெல் செங்கமலத் திடை (6.9:7); கமலச் செவ்வாய் வெளுப்ப (10.7:6); செங்கண் (1 7:10; 11 3:2); செங்கண் குன்றம் (7.8:4), செங்கணாள்(1.7.1); செங்கண் அரக்கர் (7.3:1); செங்கண்மால் (3 2:10; 4.4:1-10; 4.10:5, 5.9:9; 6 6:10; திருக்குறுந். 20); செங்கண்மால் அம்மான் (8.3 3; செங்கணம்பி (2,2:6); செங்கமலக் கண்ணான் (6.8:3); செங்கனிவாய் (3.7:2): செங்கமல நாபன், செங்கமல முகம் (3.3:8); செங்கமலம் (3.4:10); செங்கயல் (1.8:1) 1.8:10; 4.5:8); செங்கால் நாரை (5.1:5); செங்காலன்னம் (3.8.9); செங்கை (9.1:1); செங்கோல் (2.9:6); செஞ்சரம் (2.2 2); செந்தாமரை (4.7:2;6.7,8;7.9:5); செந்தாமரைக்கண்ணா (10.5:10); செந்நெல் (3.9:3, 7.9; 3.10:6;7.8:2, 9.1:5;செந்நெலார் (3.1:7)செம்பொன் (2.8;3; 2 10:3; 2 10:4; 6.4:4) செம்பொன் செய்கோயில் (4.3: 1–10); செம்பொன் திருவடியிணை (7.8:1); செம்பொன் மதிள் (4.1.9; 7.5:3); செம்மலர் (5.4:9); செம்முகம் (3.4:6); செவ்வாய் முறுவல் (7.5:6);செழுங்கயல் கண்ணி (1.4:6); செழுந்தண்கானல் மண நாறும் (8.8:7) தேமாஞ் செந்தளிர் (6.5:2); பவளச் செவ்வாய் (3.4:8); விண் சிவக்கும் (1.7:8).

## வெண்மை

வெண்குடை (1.4·10, 1.7:10, 2.9:6 3.8:10 4.3:10), வெண்சங்கம் (10.9.6); வெண்சாமரை (3.8.3); வெண்தரளங்கள்

(1.10:8); வெண்திங்கள் (2 7:3); வெண்ணாகணை (9.5:4); வெண்மதி (2.7:1); வெண்முட்டை (10.9:7);வெண்முத்தம் (2.1:8, 3.10:3 4.4:1); வெண்முத்து (2.10:7).

நீலம்

அணிநீலம் மடை நின்றலரும் (11.8:6); நறுநீல மலர் (3.6:2); நீலக்கண்கள் (7 5:7);நீலமலர்கள் (8.4:8); நீலமார் வண்டு (2.2:5); நீல மரகதம் (2 10:10); நீல முகில் வண்ணன் (2.4:5); நீலமேனி வண்ணன் (2.2:9); மலர்நீலம் (4.4:2); மடையார் நீலம் மல்கும் வயல்சூழ் கண்ணபுரம் (8.9:3); மையார் வரி நீலம் (7.9:8); வண்டார் நீலம் (7.4:8).

பொன்மை

பொன்னிறம் கொண்டு புலர்ந்தெழுந்த காமத்தால் (பெரிய திருமடல் 145); வண்ணமும் பொன்னிறமாவது ஒழியுமே (8.2.5).

பசுமை

பச்சிலை (10.7:12); பச்சைத் தேன் (திருக்குறுந்தண்டகம்,6); பைந்தாள் (3.8:6).

———

# 18. அஷ்ட பிரபந்தம்

ந. கடிகாசலம்

நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திற்குப் பின்னர் வைணவர் போற்றும் இலக்கியமாக விளங்குவது அஷ்ட பிரபந்தம். பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் இயற்றிய எட்டு பிரபந்தங்களின் தொகுதியே அஷ்டபிரபந்தம் என வழங்கப்படுகிறது. கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற இவ் அஷ்டபிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள நிறம் பற்றிய செய்திகளைக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

## நிறம், வண்ணம்.

நிறம் என்பதைக் குறிக்க நிறம், வண்ணம் ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டிலும், நிறம் என்னும் சொற்பயிற்சியே பெரிதும் காணப்படுகிறது.

கரு நிறங் கொள்பானலே (தி. க. 31)

பொன் நிறப் புண்டரிகத்தாள் (அ. அ. 69)

ஆணி நிறப் பீதாம்பரனார் (தி. வே. மாலை (5)

பால் நிறங் கொள் தெங்கின் இளம்பாளை ( ,, 27)

அணி நிறமும் (சீ. ஊ. 9)

நிறக்கும் கெழுஞ்சுடர் (தி. மாலை. 28)

நிருதர் அங்கத்து நிறம் போல் வரும்
அந்தி நேரம் (தி. வே. அ. 9)

வண்ணம் கலிகடல் போல்வான் (தி. மாலை. 85)

முதல் வண்ணமாமே முலை வண்ணம் (நூ. தி. அ. 63)

## நிறங்கள்

அஷ்ட பிரபந்தத்தில் குறிக்கப்பெற்றுள்ள நிறங்கள் வருமாறு:

கருமை : கருமுகில் போல் கண் வளரும் (தி. க. 100)

செம்மை

செங்கை அரங்கேசர் (தி. க. 82)

வெண்மை

வெண் சங்கு (தி. க. 77)

பசுமை

பச்செந்தமிழாய் (தி. மாலை. 34)

நீலம்

நீலத் திகிரி (தி. மாலை. 84)

பொன்னிறம்

பொற்கோயில் (தி. க. 50)

இனி இங்குக் குறிக்கப்பெற்ற இந்த நிறங்கள் பயின்று வந்துள்ள பாங்கினைக் காண்போம்.

கருமை: இந் நிறத்தைக் குறிக்கப் பல சொற்கள் அஷ்ட பிரபந்தத்தில் பயன்பட்டுள்ளன.

கரு — கருமாலை (தி. க. 70), கருங்கடல் (தி. க. 88)
கருமாலை (தி. வே. அ. 100), கருமுகில் (சீ. ஊ. 3)
கரு மாதவன் (தி. வே. அ. 10), கரு நிருதன் (அ. அ. 29)
கருங்கண் கயலே (தி. க. 72)

கரி — கரிய குழல் (சீ. ஊ. 6)
கரிய பாழிக் களத்தர் (நூ. தி. அ. 62)
கரிய அரங்கர் (தி. அ. 38)
கரியான் (அ. அ. 26.)

கார் — கார் நிறத்தாரை (அ. அ. 32), கார்க்கடல் (நூ. தி. அ. 33)
கார் வண்ணா (நூ. தி. இ. 86).

கார் ஓதம் சுட்ட கருவில் (தி. வே. மாலை. 84)
கார் ஆழி (தி. மாலை. 17), கார் அரங்கன் (தி. அ42)

காரேற்ற மேனி (தி. மாலை 33)
கார் அங்கம் (சீ. ஊ. 14)

இவ்வாறு நேரடியாக நிறத்தை உணர்த்துவதோடு மட்டுமின்றி, உவமை மூலமாகவும் நிறத்தை உணர்த்தும் பாங்கு காணத்தக்கது.

களாவின் கனி அனையார் (அ. அ. 14) என்பதில் திருமேனியின் கரு நிறத்தால் களாப்பழத்தை ஒத்திருக்கிறார் என்று பேசப்படுவதும் உணரத்தக்கது.

காவிகொண்ட மேனி (தி. க. 31) என்பதில் காவி என்பது கருங்குவளை மலரைக் குறித்து நிற்கிறது.

கருமை நிறத்தைச் சுட்டுவதற்கு 'மை' (தி. மாலை 108) எனும் சொல்லும் பயன்பட்டுள்ளது.

திருமாலைக் கிருஷ்ணாவதாரமாகக் காணும்போது, கரிய நிறத்தை உடையவனாகக் காட்டுவது பழங்காலந்தொட்டே மரபாகி இருந்து வருகிறது.

மாயோன் மேய காடுறை உலகமும் (பொருள். அக. 5) எனும் தொல்காப்பிய நூற்பாவில் குறிக்கப்பெற்றுள்ள மாயோனைத் திருமாலாகக் கொள்கிறோம்.

மாயோன் என்பது 'மா' என்பதன் அடியாகப் பெறப்பட்டது. 'மா' என்பதற்குக் கருமை என்பது பொருளாகும். எனவே மாயோன் என்பவன் கருமை நிறத்தவன் ஆகிறான் (மதுரைக். 591. நச்). மால்வரை (நற். 32. 1, அக. 59. 6) எனக் குறிப்பிட்டிருப்பதும் இதற்குச் சான்றாக அமைகின்றது.

கண்ணன் எனப் பெயர் பெற்று விளங்குவதும் கருதத்தக்கது 'கன்ஹ' என்ற பிராகிருதச் சொல்லினடியாகப் பெறப்பெற்ற பெயரிது. 'கன்ஹ' என்பதற்கும் கருமை என்றே பொருள். கண்ணனைக் கருநிறத்தவனாகவும், பலராமனை வெள்ளை நிறத்தனனாகவும் (நற். 32. 1-2; பரி. 15: 14) சுட்டியுள்ளதும் கருதத்தக்கது.

எனவே மரபு நின்று நெறி நின்று, திருமாலைப் பலபட பாராட்டிப் பாடும் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் கருமை

நிறத்தைப் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். ஏனைய நிறங்களைக் காட்டிலும் கருமை தனி நிலையில் அதிகமாகப் பயின்று வந்துள்ளது.

செம்மை

இந் நிறப் பொருண்மையைக் குறிக்க -

செம் — செவ்வாய் அரங்கேசர் தி. க. 74)

செப்பவளந்து எப்பிரான் (தி. க. 64)

செவ்வாய் முகுந்தன் (தி. அ. 2)

சே — சேவடி பார் அளவிட்டன (தி. மாலை. 69)

சேவடி வாய்ப்பச் சென்றான் (தி. வே. மாலை. 14)

மூவுலகளந்த நின் சேவடி (தி க. 1)

சேவடிக்கு ஆளானவர் (தி. வே. மாலை. 22)

ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. இவை மட்டு மல்லாது, 'துவரை பட்ட வாய்' (தி. அ. 13) என்பதில் துவர் எனும் சொல் செம்மை நிறத்தைக் குறிக்கும் ஆட்சியைக் காண முடிகிறது.

செம்மைக்கு 'செவ்வை' எனும் ஒரு பொருள் உண்டு. அதனடிப்படையில் செங்கோல் (சீ. ஊ. 19; தி. அ. 28) சுட்டப்படுகிறது.

கதிரவனைச் செந்தரணி தி. மாலை. 8), செஞ்சுடர் (தி. மாலை, 35) செங்கதிர் (தி. வே. மாலை. 38), செந்தீ அ. அ. 36 தி. அ. 94)

என்னும் சொற்களால் குறித்துள்ளார் ஆசிரியர்.

செந்தாமரை தி. அ. 79), செங்கமலம் (அ. அ. 28) ஆகிய சிவந்த மலர்களைப் பற்றியக் குறிப்பும் காணமுடிகிறது.

கருமேனியை உடையவன் திருமால். ஆனால் அவ்விறைவனுடைய உதடுகள், உள்ளங்கை, பாதம் ஆகியவற்றைச் சிவப்பு நிறம். உடையவனாகக் குறிப்பது மரபாக இருந்து வந்திருக்கிறது. கரியமேனியில் சிவப்பு காணும் போது - கருப்பும் சிவப்பும் நம்மை ஈர்ப்பதில் வியப்பேதுமில்லை.

இவ்விரு நிறங்களும் இணையாகப் பயின்று வந்துள்ளமைக்கு பரி 13: 50–51; சிலம்பு 17:36 ஆகியவற்றைச் சான்றாக்கலாம்.

மஞ்சள் நிறம் அஷ்ட பிரபந்தத்தில் பயின்று வரவில்லை ஆனால் செம்மை நிறமும் பொன்னிறமும் கலந்து உண்டாகும் பிறிதொரு நிறமாகச் செம்பொன் நிறத்தைக் குறித்துள்ள நிலை காணப்படுகிறது. திருமாலின் ஆடை, அவனுடைய கோயில் கோயிலின் மதில் ஆகியவற்றை விளக்கும்நிலையில் செம்பொன் நிறம் அமைந்துள்ளது.

செம்பொன் மதில் (தி. க. 1)
செம்பொன் அரங்கம் (தி. க. 48)
செம்பொன் கோயில் (தி. மாலை. 2)
செம்பொன் மாளிகை (சீ. ஊ. 30)
செம்பொன் ஆடை நாயகன் (தி. க. 86)

செம்மையும் பொன்னும் கலப்பில் உயர்ந்தும் தாழ்ந்தும் கூடியும் குறைந்துமிருக்கலாம். நம்மால் மிகச் சரியாக உரைக்க இயலாத நிலை. செம்மைக்கும் மஞ்சளுக்கும் இடைப்பட்ட நிறமாக இதை எடுத்துக்கொள்ளலாம்.

## பொன்னிறம்

பொன்னிறம் என்பதை ஒரு நிறமாகக் கருதும் நிலை அஷ்ட பிரபந்தத்தில் ஏற்படுகிறது.

எம்பெருமானையும் அவனுடைய திருப்பதியையும் வருணிக்கும்போதெல்லாம் பெரும்பாலும் இந்நிறம் சுட்டப் படுகிறது.

பொன் அரங்கம் (தி. க. 1, 15)
பொன் அரங்கத்தான் (தி. க. 8)
பொன் முடி (தி. மாலை .69, தி. வே. அ. 29)
பொன் அடி(தி. வே. அ. 31; அ அ. 99)
பொன் மேனி (சீ. ஊ. 9. தி. வே. மாலை. 63)
பொன் மேரு (அ. அ. 85)
பொன் மாலை (தி. வே. மாலை 12)
பொற்றாள் (தி. அ. 33)

பசும்பொன் சிறை (நா. தி. அ 14)

ஆழ்வார் பெருமக்களைத் தொடர்ந்து வரும் கால நிலையில் திருமாலைக் கருநிறந்தவனாக ஏற்றுக்கொண்டது போல திருவரங்கத்தைப் பொன்மயமான திருப்பதியாகக் கருதும் நிலையும் ஏற்பட்டுவிட்டது எனலாம்.

வெண்மை

இந்நிறம் பலவிடங்களில் அஷ்டபிரபந்தத்தில் பயின்று வந்துள்ளது.

| | |
|---|---|
| வெண் சங்கு (தி. க. 77, | வெண்குடை (தி. மாலை. 33) |
| வெண்மதி (தி.வே. அ. 19) | வெண் நிற்றான் (தி.வே.அ.74) |
| வெண் பளிங்கு வட்டம் | வெண்கோடு (அ. அ. 71) |
| (தி. வே. மாலை 50) | வெண் போதகத்தான்(அ.அ.60 |
| வெண் கவரி(தி.வே மாலை37) | வெண் முத்து (தி. மாலை 107) |
| வெண்சீதத் தரங்கம் | வெண் தயிர் (தி. அ. 12) |
| (தி.மாலை 36) | வெள்ளை மண்(தி.மாலை.103 |
| வெள்ளைக் குடை (தி. மாலை. 108) | |

இவற்றில் நேரடியாகவே வெண்மை பயின்று வந்துள்ளது. வெண்மையுடன் வெள்ளியைத் தொடர்புபடுத்துவதை வெள்ளி மால்வரை (தி. மாலை. 38), வெள்ளி மலை (தி. வே. மாலை. 12) வெள்ளிய கல் (தி. வே. மாலை 43) என வந்துள்ள சொற்பயிற்சியால் உணரலாம்.

வெண்மை அடையாக அமைந்த வெண்ணெய் எனும் சொல் முற்றிலும் மாறான பொருளைக் குறித்து நிற்பதைக் காண்கின்றோம். (தி.க. 92; தி. அ. 36, 82, 98; தி. வே. மாலை 16,57; நூ.தி அ.69)

பசுமை

கருமை, செம்மை, பொன்னிறம், வெண்மை ஆகிய நிறங்கள் அஷ்டபிரபந்தத்தில் பயின்று வந்தமையைக் கண்டோம் அடுத்து, பசுமை பயின்று வந்துள்ளதைக் காண்போம்.

பசும் — பசுஞ் சூற்கொண்டல் (சீ. ஊ. 27)
பசுந் தண் குழாய் (தி. மாலை. 14)

பச் — பச்சிலை (தி மாலை. 2), பச்சைத் துழாய்
(தி. மாலை 34. அ. அ. 3; நா தி. அ. 3),
பச்சைத் தாழைக் குடில் (தி. வே மாலை. 100)
பச்சை மாமுகில் (அ அ. 9)

பாச — பாசடை கள் (சி. ஊ 10)

ஆகியவற்றில் இந்நிறம் சுட்டப்பட்டுள்ளது.

பசுமை என்பது கடுமையைக் குறிந்து நிற்பதற்கு 'பசுஞ் சூற் கொண்டல்' (சி.ஊ.27) பச்சை மாமுகில் (அ.அ.9) ஆகியவை சான்று பகர்கின்றன.

பசுமை என்பது நீலத்தைக் குறித்துள்ளது நீரிற்காணும் சிறந்த பச்சைக் காரின் (தி. மாலை. 60) எனும் பகுதியில், பச்சை என்பது நீல நிறத்தைக் குறிப்பிட்டு அமைகிறது.

## நீலம்

இந் நிறம் பயிற்சி குன்றி அமைந்துள்ளது வெளிப்படை.

நீல — நீலத் திகிரி தி. மாலை. 84),
நீலக் கடல் (தி. மாலை. 97)

நீலம் — கண்மணி நீலம் (தி. வே. அ. 92)

## இணை நிறங்கள்

நிறப்பெயர்கள் ஒன்றையடுத்து ஒன்று ஆளப்பட்டுள்ள பான்மையை அஷ்ட பிரபந்தத்தில் காணமுடிகிறது.

மூன்று நிறங்கள் இவ்வாறு அமைந்துள்ள நிலை வருமாறு

தார்ஏற்ற வெண்குடை மாவலி வார்க்கவும் தாமரைமேல்
சீர்ஏற்ற தொல்நான் முகத்தோன் விளக்கமும் செம்பொன்
முடிக்கார்ஏற்ற மேனிஅரங்கேசர் (தி. மாலை. 33)

நிறப் பெயர்கள் வெளிப்பட்டு, கருத்துச் செறிவுக்கு வழி வகுக்கின்றன. இரண்டு நிறங்கள் இணைந்து வரும் நிலை: நிறுத்திய பொற் றேரில் தொழும் பின்னை நீரிற் காணும் சிறந்த பச்சைக் காரின் (தி. மாலை. 60)

பைம்பொன்னார் ஆடையும்
செம்பொன் மாமேனியும் (தி. க. 77)

தம் அடியாரிடும் பச்சிலைக்கு முத்தி
கொடுப்பவரை செம்பொற் கோயிலுள்ளே (தி. மாலை. 2)

சீருற்ற செங்கட் கரும்பன்றி ஆகி. (தி. மாலை. 26)

செங்கனிவாய்க் கரியமேனி (சீ. ஊ. 20)

வெள்ளருவி செம்பொன் (தி. வே. அ. 49)

ஆகம்கரியான் சிவந்த கழலினை (அ .அ. 26)

பசுமை-செம்மை, செம்மை-கருமை, செம்மை-கருமை,

வெள்ளி-செம்மை, கருமை-செம்மை

என நிறங்கள் இணைந்து வந்துள்ள பான்மை புலப்படுகிறது. இதில் கருமையும் செம்மையும் இணைந்து பரவலாகப் பயின்று வந்துள்ளன. இதற்குக் காரணம்—திருமாலின் மேனியின் கரிய நிறமும், உதடுகள் பாதங்கள் உள்ளங்கைகளின் செம்மை நிறமும் ஆசிரியரின் உள்ளத்தை ஈர்த்திருத்தலேயாகும்.

## நிறம் படம் பெறும் வகைகள்

இலக்கியத்தில் நிறம் இருவகையில் இடம் பெற்று வந்துள்ளது. முதல்வகை ஒரு பொருளின் தோற்றம் விளக்கும் பெறும் நிலையில் அமைவது; அப்பொருளின் பண்பை வெளிப் படுத்தி அமைவது இரண்டாவது வகை.

இவ்விரண்டு நிலைகளுக்கும் மேலும் ஒரிரு எடுத்துக்காட்டுகள் தரலாம்.

திருவரங்கத்தில் பள்ளி கொள்ளும் எம்பெருமானின் தோற்றப் பொலிவினைக் கூறும் தொடர்களில் நிறப்பெயர் வெளிப்பட்டு நிற்பதைக் காண முடிகிறது.

கரிய அரங்கர் (தி.அ. 38)
கரு மாதவர் (தி.வே. அ. 10)
செவ்வாய் அரங்கேசர் (தி. க. 2)
செவ்வாய் முகுந்தன் (தி. அ. 2)
செங்கண் மால் (நூ. தி. அ. 10, 21) அ. அ. 58

மேலும்,

கரும் பன்றி (தி. மாலை. 26)
கருங் கடல் (தி. க. 88)
கார்க் கடல் (தி. வே. மாலை. 96)

ஆகிய பொருள் வருணைகளில் நிறங்கள் அமைந்துள்ள நிலை தெளிவு.

கருமுகில்போல் கண்வளரும்
கருணை வள்ளல் (தி. க. 100)
நிருதர் அங்கத்து நிறம்போல்
வரும் அந்தி நேரம் (தி. வே. அ. 9)

என்பன போன்றவற்றில் உவமை நிலையில் அமைந்து பொருளின் விளக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளதும் சுட்டத் தக்கது. இவ்வாறு வெளிப்படையாக அமையாது—குறிப்பாக உணர்த்துவதும் உண்டு.

## தொகுப்பு

திருமாலின் அவதாரங்களைப் பற்றிப் பேசும் அஷ்ட பிரபந் தத்தில் எம்பெருமானின் திருவுருவம் கரிய நிறமாகவே பேசப் படுகிறது. அவனைக் காயாம்பூ வண்ணனாகவும் (தி. க. 20), கருங்கடல் வண்ணனாகவும் (தி. க. 38) பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் பாடி மகிழ்கிறார்.

கரிய திருமேனி கொண்ட திருமாலைச் செங்கண் நெடியோன் (தி. அ. 94), செங்கண் மால் (அ. அ. 58), செவ்வாயோன் (நூ. தி. அ. 20), செவ்வாய் அரங்கேசர் (தி. க. 74), சிவந்த கழலிணை (அ. அ. 26) உடையவன் எனப் பாடுவதன் மூலம் அவன்தன் அவயவங்களின் செம்மையை வெளிப்படுத்துகிறார். விண் பூத்த கஞ்சம் போல் ஆயிரம் கண் வளரும் பிரான் தி. க. 3) என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

இரண்டு நிறப்பெயர்கள் இணைந்து வந்து வருணனைக்கு துணைபுரிவதுடன் பொருளின் பண்பு நலனைச் சுட்டுவதற்கும் பயன்பட்ட பாங்கினை அஷ்ட பிரபந்தத்தில் காண முடிகிறது. கருமை–செம்மை என்ற இணை பயின்று வரக்காரணம் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'ஆங்கு கரியான் சிவந்த கழலிணை'

(அ, அ. 26) என்பது போன்ற இணை நிறப்பயிற்சி எம்பெருமானின் தோற்றத்தையும் அவனுடைய கருணைத் தன்மையையும் விளக்கப் பயன்பட்டுள்ளன. உவமை நிலைகளிலும் இதுவே அமைகின்றது.

நிறப்பெயர் வேறு பொருளை - தன்மையை உணர்த்தும் நிலையையும் காணமுடிகிறது. 'பச்சைக் காரின்' (தி. மாலை. 60) என்பதற்கான விளக்கத்தைக் கண்டோம். 'பசுஞ் சூற்கொண்டல்' (சீ. ஊ. 27) என்பதும் 'பசுங்கோலாக குழவி' கருவிழி நீலம் வே. அ. 92) என்பதும் எண்ணத்தக்கது.

திருமாலின் கரிய மேனி ஒளிவிட்டு மிளிர்வதாகப் பாடும் பரபைக் காண முடிகிறது. கருமாணிக்கமே (அ. அ. 2) என விளித்துப் பாடுவதும் இங்கு சிந்திக்கத்தக்கது.

கரிய மேனி கொண்ட இறைவனைப் பெருமையாகப் பேசிய நிலையிலும் அவனை 'நீலக்கடல்' (தி. மாலை. 97) என உருவகித்துப் பாடும் நிலையும், நீலமலையை ஒத்தவர் அரங்கர் 'நீலத்திகிரி யனையார் அரங்கர்' தி. மாலை. 84) என்று பாடும் நிலையும் காணக்கிடக்கின்றது. நீலநிறத்தை இறைவனோடு இணைத்துப் பேசும் நிலை அஷ்ட பிரபந்தத்தில் மிக அருகியே பயின்று வந்துள்ளது.

திருமாலின் மையலில் ஈடுபட்டு நாயகி பாவணையில் அய்யங்கார் பாடியுள்ள பாடல்களில் அகப்பொருளுகேற்ற கருப்பொருளும் உரிப் பொருளும் கூறப் பெற்றிருக்கின்றன; உள்ளுறையாக அமையப் பெற்ற பாடல்களாகக் காணக்கிடக்கின்றன. மாலையைப் பற்றிக் குறிக்கும் போதெல்லாம் பசுந் துளவத் தொடை (சீ. ஊ. 13), பச்சைத் துழாய் (தி. மாலை. 36, அ. அ. 3, நு. தி. ஆ. 53' பசுந்தண் துழாய் (தி. மாலை. 14) என்று பாடியிருப்பினும், இராம துளசி, சிருஷ்ண துளசி என்ற இருவகை இருப்பதும் அவற்றின் நிறத்தில் சிறிது வேறுபாடு இருப்பதும் உணரத்தக்கது.

சுருங்கக்கூறின், எம்பெருமானின் தோற்றம், அவனுடைய அவயவங்களின் தன்மை, அவன்தன் ஆடையின் வண்ணம், அவதாரம், அது தொடர்பான விளக்கம், திருமாலின் மீது மையல் கொண்ட நிலையில் ஆசிரியர் அய்யங்காரின் உள்ளத்தின்

உணர்ச்சி ஆகியவற்றைத் தெள்ளத் தெளிவாக விளக்கி நிற்கப் பயன்படும் வகையில் கருமை, செம்மை, பொன்மை, வெண்மை, பசுமை, நீலம் ஆகிய நிறங்கள் அஷ்ட பிரபந்தத்தில் பயின்று வந்துள்ளன.

## சுருக்க விளக்கம்

1. தி. க. — திருவரங்கக் கலம்பகம்
2. தி. அ. — திருவரங்கத்து அந்தாதி
3. தி. மாலை — திருவரங்கத்து மாலை
4. சீ. ஊ. — சீரங்கநாயகர் ஊசல்
5. தி. வே. அ. — திருவேங்கடத்து அந்தாதி
6. தி. வே. மாலை — திருவேங்கட மாலை
7. அ. அ. — அழகர் அந்தாதி
8. நூ. தி. அ. — நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

---

## பின்னிணைப்பு

### நிறம்

திருவரங்கக் கலம்பகம், 31; திருவரங்கத்து மாலை, 28; சீரங்கநாயகர் ஊசல், 9; திருவேங்கடத்து அந்தாதி 9 திருவேங்கட மாலை, 5, 27; அழகர் அந்தாதி, 69.

### வண்ணம்

திருவரங்கக் கலம்பகம், 20; திருவரங்கத்து அந்தாதி, 58; திருவரங்கத்து மாலை, 85; திருவேங்கட மாலை, 56 நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, 63.

# பின்னிணைப்பு. 2

| | நூல் | கருமை | செம்மை | பொன்மை | வெண்மை | பச்சை | நீலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | திருவரங்கக் கலம்பகம் | 1, 31, 44, 70, 72, 73, 88, 97' 100, | 1. 48' 64' 82, 86, 74 | 1, 3, 5, 7, 15, 19. 50, 77, 100 | 77, 92 | — | — |
| 2. | திருவரங்கத்து அந்தாதி | 27, 38, 42' 73, 98' | 2,13, 28, 58, 79' 94, | 33 | 12. 36, 82, 98 | — | — |
| 3. | திருவரங்கத்து மாலை | 17, 26, 27. 33, 44, 57, 60, 108, | 2, 3, 8, 23, 12, 17, 26, 69, 96, 98, 105 | 24, 69 | 33, 36, 38, 103, 107, 108 | 2, 14. 34, 60 | 84, 97 |
| 4. | சீரங்கநாயகர் ஊசல் | 3. 6, 14, 20, 26, | 19, 20, 30 | 9 | 2, 24 | — | — |
| 5. | திருவேங்கடத்து அந்தாதி | 4, 10, 54' 82, 100 | 30, 49. 51, 53, 61 | 24, 29, 37 | 19, 49, 72, 74 | — | 92 |
| 6. | திருவேங்கட மாலை | 12' 84, 96 | 9, 14, 16, 22, 38, 48, 56, 87 | 5, 12. 17, 63, | 12, 16, 37, 43, 50, 57, | 100 | — |
| 7. | அழகர் அந்தாதி | 2, 8, 26, 29, 32, 34, 73 | 20, 26, 28, 36, 58, 81, 93 | 69, 85, 94, 99 | 60, 7— | 3, 9 | — |
| 8. | நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி | 33, 62, 86 | 10,20, 21, 33, 78 | 18, 54, 64 | 69 | 53 | — |

# 19. சமண ஆசீவக மதங்கள்

ர. விஜயலட்சுமி

உலகில் எல்லாப் பொருட்களும் ஏதோ ஒரு நிறத்தைத் தம்முள்ளடக்கியுள்ளன. இலக்கியப் படைப்பாளரும், ஓவியரும், தத்துவ ஞானிகளும் நிறங்களின் கருந்தன்மை (darkness) அல்லது வெளிர்த்தன்மை (lightness) கொண்டு உலகியல் உண்மைகளையும் அவை பற்றிய தமது கருத்துக்களையும் விளக்க முயன்றிருக்கின்றனர். எல்லாத் துறைகளுமே கருமை, கருநீலம், கருப்பச்சை முதலியவற்றைத் தீய சக்திகளுடனும், வெண்மை, மஞ்சள், பொன்னிறம் போன்றவற்றை நற்சக்திகளுடனும் பொதுவாகத் தொடர்புபடுத்துகின்றன. 'இருளிடை நின்று ஒளிநிலை எய்தும்போது வெளிர் நிறங்கள் தோன்றுகின்றன. (எடுத்துக்காட்டு: சூரியன் தோற்றம்) மாறாக, ஒளியினின்று இருளினை நோக்கும்போது கரிய நிறங்கள் உண்டாகின்றன, என்னும் அடிப்படையில் ஜெர்மானியச் சிந்தனையாளரான கயித்தே (Goethe) வண்ணங்ளின் சேர்க்கையைத் தீய நற்சக்திகளிடையே நிகழும் போராட்டத்தின் விளைவாக எடுத்துக் காட்டுகிறார். சாங்கிய தத்துவமும் சத்துவ, ரஜஸ், தமஸ் என்னும் முப்பண்புகளை வெண்மை, செம்மை, கருமை நிறங்களுடன் தொடர்புபடுத்தி விளக்குவதை நாம் காண்கிறோம்.

பழந்தமிழிலக்கியத்திலுள்ள சில பகுதிகள் நிறங்கள் பற்றிய தத்துவக் கொள்கைகளை உள்ளடக்கியுள்ளன. குறிப்பாக, ஆசீவக மதமும் சமண சமயமும் இதுபற்றிக் கொண்ட கருத்துக்கள் மணிமேகலை, நீலகேசி சீவகசிந்தாமணி, சிவஞானசித்தியார் போன்ற நூல்களிற் காணக் கிடைக்கின்றன இவற்றில் காணப் படும் இக்கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சமணமும் ஆசீவகமும் ஒன்றெனக் கொள்வர் சிலர்.[1] அவற்றிடையே ஒற்றுமைகள் பல உண்டெனினும் அவற்றின் தத்துவக் கொள்கைகளில் உள்ள சில அடிப்படை வேறுபாடுகள்

---

1. லஷ்மண் கி. இந்திய தத்துவஞானம், இரண்டாம் பதிப்பு (சென்னை, 1970) ப 89.

அவை தனிப்பண்புடைய இருமதங்கள் என்பதனை வலியுறுத்துகின்றன. ஆசீவக மதம் இன்று வழக்கற்று விட்டமையால் பலர் அதைச் சமணத்தின் ஓர் கிளையாகவே கருதுகின்றனர். ஆயின், ஆசீவக மதத்தின் தலைவரான மக்கலி கோசலர் சமணரின் தலைவராக விளங்கிய மகாவீரரினின்றும் வேறுபட்டவர்; மேலும் அவருடன் கருத்து வேறுபாடு பூண்டுள்ளவர் எனவும் அறிகிறோம் தமிழ் இலக்கியத்தில் இவரை மற்கலி என்பர்.[2]

இவ்விரு தத்துவங்களும் நிறங்களைக் கையாண்டுள்ள தன்மையைப் புரிந்து கொள்வதற்கு, அவை கூறும் தலையாய தத்துவக் கருத்துக்களை முதலில் உணர்தல் இன்றியமையாததாகின்றது. சமண தத்துவ ஆய்வின் நடு நாடியாக உயிருக்கும் (Soul) உலகிற்கும்(Universe) உள்ள தொடர்பு அமைகிறது. இக் கொள்கைப்படி உலகு தொடக்கமோ முடிவோ அற்றது. மேலும் அது கடவுளாலோ அன்றி வேறு எவராலோ படைக்கப்படாதது. அதன் பகுதிகளில் மாற்றங்கள் ஏற்படினும் அதன் அடிப்படைப் பண்புகள் என்றுமே மாறாதவை. உலகினை உயிர் (சீவன்), சடப்பொருள்(அசீவன்) என இரண்டாகப் பகுப்பர். உயிர்கள் எண்ணிலடங்காதவை, அவை தோற்றமும் அழிவுமற்றவை. சடத் தொடர்பு இல்லாதபோது உயிர் தன் சுய உருவுடன் விளங்கும். ஆயின் அதே உயிர் தான் மேற்கொள்ளும் செயல்களினால் உலகெங்கும் பரந்திருக்கும் வினை (கர்ம)அணுக்களைத் தன்னுள் சேர்த்துக் கொள்கின்றது. இதன் விளைவாகப் பல்வேறு பிறப்புகளையும், தோற்றங்களையும் கொள்கிறது. இந்நிலை எய்திய உயிர் அவ்வினைகளினின்றும் விடுபட்டாலொழிய அதன்பிறப்புக்கள் முடிவுடையமாட்டா. இங்குதான் சமண தத்துவம், உயிரானது வினை அணுக்கள் மேன்மேலும் சேர்வதைத் தடுப்பதையும், சேர்ந்த வினைகளின் தொடர்பினை முற்றிலும் அறுப்பதிலும் முயலவேண்டும் என்ற கொள்கையினை வலியுறுத்துகிறது. உயிர் மேற்கொள்ளும் இம்முயற்சியினைப் பதினான்கு நிலைகளாகப் (குணஸ்தானங்கள்) பகுத்துள்ளனர். ஒவ்வொரு நிலையிலும் உயிரின் தன்மை வேறுபடுகிறது. உயிரைப் பிடிக்கும் வினைகளைச் சமணர் எண்வகையினதாகப் பகுப்பர். அவற்றுள் நான்கு அழிவுந்தும் வினைகள்[3] (காதிகருமம்,

---

2. சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை, சமயக் கணக்கர் தந்திறங்கேட்டகாதை,ஆறாம்பதிப்பு(சென்னை 1965)வரி165

destructive karmas) ஏனைய நான்கும் அழிவுந்தா (Non-destructive karmas) அகாதி கருமங்கள் வினைகள்[4].

இவற்றை எண்வினைகள் என்னும் பெயரில் நாம் தமிழிலக்கிய நூல்களிற் காண்கிறோம். எண்வினைகளினின்றும் விடுபட்ட நிலையில் உயிர், முடிவற்ற காட்சி, முடிவிலா இன்பம், முடிவிலா ஆற்றல், முடிவற்ற அறிவு ஆகிய நான்கு பண்புகளைப் பெற்று விளங்குகிறது. இப்பெருநிலையெய்திய உயிர்கள் யாவுமே வீடு பேறெய்திக் கடவுளராகிவிடுகின்றன. எனவே சமணர் கொள்கைப்படி ஒன்றிற்கு மேற்பட்ட கடவுளர் உலகிலுளர். ஆயின் இக்கடவுளர் வினையாற் பிணிக்கப்பட்ட ஏனைய உயிர்களை உய்விப்பதில் எவ்விதத் துணையும் புரிவதில்லை. அவர்கள் வழிகாட்டிகளாக மட்டுமே அமைகின்றனர்.

அடுத்து, ஆசீவகர் கொள்கைகளை நோக்கின், உயிர்களின் பாவ புண்ணிய வினைகள் எக்காரணம் குறித்தும் நிகழ்வன அல்ல. ஊழே இவற்றின் ஏதுவர்கும் உயிரின் எச்செயலும் அதன் பிறப்பை முடிவிட வல்லதன்று. பிறப்புகள் எண்ணிலடங்காதவை இவற்றுள் மனிதப் பிறப்பில் ஆறு பகுப்புக்கள் உண்டு[5]. எல்லா உயிர்களுமே இவ்ஆறு நிலைகளையும் கடந்து செல்ல வேண்டும், இந்த மானிடப் பகுப்பை ஆசீவகர்கள் 'அபிஜாதி' (abhijati) எனக் கூறுவர்[6]. ஆறு மானிடப் பகுப்புக்களையும் அவற்றின் தன்மை கருதிப் பல்வேறு நிறங்களாற் சுட்டிக் காட்டுவதை ஆசீவகந் தத்துவத்தில் காண்கிறோம். பாலி நூல்களில் கருமை (black, kanha), நீலம் (blue, nila) செம்மை (red, lohita), பச்சை (green, halidda), வெண்மை (white, sukka), அதிவெண்மை (supreme'y white, parama sukka) என்ற ஆறு வண்ணங்ளும் கூறப்படுகின்றன.

---

3. (காதி) அழிவுந்தும் வினைகள், ஞானாவரணீயம் தர்சனாவந்ணீயம், மோகனீயம், அந்தராயம் எனப்படும்.

4. அழிவுந்தா (அகாதி) வினைகள், ஆயுட்கர்மம் நாமகர்மம்கோத்திரகர்மம், வேதனீய கர்மம் எனப்படும்.

5. Basham A. L., History and Deotrines of the Ajibikas A Vanished Indian Religion, (London, 1951). P. 243 ff.

6. Ibid P. 243.

இப்பாகுபாட்டினையே மணிமேகலையில் ஆசீவக மதத்தினன் கூறும்,

'கரும்பிறப்பும் கருநீலப் பிறப்பும்
பசும் பிறப்பும் செம்ப் பிறப்பும்
பொன் பிறப்பும் வெண்பிறப்பும்
என்றிவ்வாறு பிறப்பினு மேவிப்
பண்புறு வரிசையிற் பாற்பட்டுப் பிறந்தோர்
கழிவெண் பிறப்பிற் கலந்து வீட்டணைகுவர்'

என்ற பகுதி வலியுறுத்துகிறது. இங்கு பாலி நூல்களிற் கூறப்படாத பொன் நிறம் ஒருவகைப் பிறப்பினைச் சுட்டுகின்றது. எல்லாவற்றிலும் மேலான பிறப்பாகக் கழிவெண் பிறப்பைக் (Supremely white, Param sukka) கொள்கின்றனர்.

சிவஞானசித்தியார் பரபக்கத்தில் ஆசீவமகதம் பற்றிக்கூறும் பகுதியில் வரும்[8]

வெண்மை நன்பொன்மை செம்மை நீல் கழிவெண்மை பச்சை
உண்மையிவ் வாறினுள்ளும் கழிவெண்மை யோங்கு வீட்டின்
வண்மையதாகச் சேரு மற்றிவை உருவம் பற்றி

என்னுமடிகளும் இக்கருத்தையே உணர்த்துகின்றன. இங்கும் கழிவெண்பிறப்பே உயர்ந்ததாகக்கொள்ளப்படுகின்றது.ஆசீவகர்களின் மானிடப்பகுப்பு நிலைகளை உணர்த்தும் நிறங்கள் அவ்வுயிர்களின் ஆன்மீகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை. கரும் உயிர்கள், உயிர்க்கொலை செய்வோர், திருடர், வலைஞர், வேடர் முதலியோராவார். கருநீலப் பிறப் பிறப்பினரைப் பற்றிக்கூறும் 'கண்டக உத்திகா' (Kandaka-Vuttika)- என்பது திருட்டுத் தொழிலை மேற்கொண்ட துறவி

7. மணிமேகலை. சமயக்கணக்கர் தந்திறங்கேட்ட கதை வரிகள் 150-155.

8. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார் பரபக்கம், சென்னை. (1935), ஆசீவகர் வாதம் பாடல் 8.

களைச் சுட்டும். செம்பிறப்பு துறவிகளையும், பசும்பிறப்பு ஆசீவக இல்லத்தாரையும், வெண்பிறப்பு ஆசீவகத் துறவிகளையும், கழிவெண்பிறப்பு ஆப்தர்கள், வீடுபெற்ற உயிர்களையும் குறிக்கும்.[9]

ஆசீவகர் கூறும் abhijatis எனும் பிறப்புக் கொள்கை, சமணரது 'லேசியம்' (lesya) எனும் கருத்துடன் பெருமளவு ஒத்துள்ளது. இக்கொள்கை வினைகள் பற்றிய கருத்துக்களில் இன்றியமையாததோர் இடம் பெறுகிறது. உயிரின் ஒவ்வொரு செயலும் அதன் உட்பொருளை (substance) மாற்றமுற வைக்கின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றங்களினின்றும் அப்பாற்பட்ட உயிர், வினை அணுக்களால் அணுகப் படும்போது அவற்றை 'லேசியம்' என்பர் சமணர். உயிரின் லேஸ்யா இருவகைப்பட்டது. அது உயிரையும் அதன் விளைவாக அதுகொண்ட உருறையும்பாதிக்கும். முன்னையது 'பாவலேசியம்' (Bhava Lesya) என்றும் பின்னையது 'திரவிய லேசியம்' (Dravya lesya) என்றும் கூறப்படும்.[10]

இதே கருத்து முற்கூறிய ஆசீவக மதத்தில் மட்டுமன்றி பௌத்த, பிராமணீய தத்துவங்களிலும் விளக்கப்பட்டிருப்பதை அவை கூறும் தத்துவ நூல்களிலிருந்து தெரியவருகின்றது.

உயிர் எத்தகைய வினைகளால் அணுகப்பட்டுள்ளது, அணுகப்பட்ட வினைகள் உயிர் மேற்கொண்ட தாக்கத்தின் தரம், அவற்றின் நிலைபேறு, என்பனவற்றைக் கொண்டு உயிர்களை ஆறு நிலையினவாகப் பகுப்பர் சமணர். கருமை (Blaek-krsna), நீலம் (Nila-dark). கபோதம் (Grey-kapota) அழற் செம்மை (fiery red, tejas), பதுமம் (lotus pink, Padma), சுக்கிலம் (White, Sukla) என்ற ஆறுநிறங்களும் பல்வேறு மனநிலைகளையும் அவற்றைத் துய்க்கும் உயிர்களின் தன்மையினையும் உணர்த்துகின்றன.

---

9. Basham, A. L., Op. Cit. P. 243 ff

10. Glasenapp, H. V. The Doctrine of Karmam in Jain Philosophy, English Translation (Bombay, 1942) P. 47 ff.
'lesya' என்ற பாகத மொழிப்பதம் இங்கு தமிழில் 'லேசியம்' எனக் கையாளப்பட்டுள்ளது.

பகைமையுணர்வு, இரக்கமின்மை, கொடூரம், காட்டு மிராண்டித்தனம், நற்சிந்தையின்மை, தீச்செயல் உரைத்தல், பிற உயிரை மாய்த்தல் என்ற தன்மைகளுடைய உயிர் கருமை நிறத்ததாகக் கூறப்படுகிறது. பொய்ம்மை, ஊழல், நிலையின்மை, புறங்கூறல் ஆகிய தன்மைகள் கொண்ட உயிர் நீலவண்ணத்ததா தாகும். தெளிவின்மை, வெகுளி, ஏனைய தீய விளைவுகளைக் கொண்டது சாம்பர் (கீபோதம்) நிறத்தது. ஆழ்ந்த உணர் வுடமை, வினை அணுக்கள் மேன்மேலும் சேராது தடுக்குந் தன்மை, தாராளப் போக்கு இவற்றினை உடைய உயிர் செம்மை நிறந்ததாகவும், இரக்கம், வள்ளன்மை, ஆழ்ந்த நோக்கு, மதி நுட்பம் போன்ற உயர்பண்புகள் படைத்த உயிர் தாமரையொத்த (பதுமம், வெண்சிவப்பு, மஞ்சள்) நிறத்ததாகவும், நற்சிந்தை, நற்செயல், அவாவின்மை, ஒருதலைச் சாராமை எனும்விழுமிய பண்புகள் பூண்ட உயிர் வெண்மை நிறத்ததாகவும் எடுத்துக் கூறப்படுகின்றன. [11]

உயிர்களைப் பிணிக்கும் மேற்குறித்த ஆறுவகைத் திரவிய லேசியங்களும் வண்ணந்தவிர, சுவை, நாற்றம் போன்ற மற்றத் தன்மைகளும் உடையனவாயினும் அவற்றின் நிறஞ்சுட்டிப் பெயரிடப்பட்டிருத்தலால் வண்ணமே அவற்றின் தலையாய தன்மையெனக் கொள்ளப்பட்டது வெளிப்படை. வினை அறுகாலத்தில் இந்த லேசியங்கள் ஒவ்வொன்றாக நீக்கப்படும். இவை முற்றும் நீங்கிய நிலையை முத்திநிலை அருக நிலை எனப்படும். தனக்கென்று வண்ணமேதுமற்ற தூய்மையான தோர் மணியினை இந்நிலை ஒத்திருத்தலால் முத்தி பெற்ற உயிர் மணி உயிர் எனப்பட்டது. இந்நிலைகளைச் சீவகசிந்தா மணியில் முத்தியிலம்பகத்திலுள்ள பின்வரும் பாடலில் நாம் காணமுடிகிறது.

மணியுயிர் பொன்னுயிர் மாண்ட வெள்ளியின்
அணியுயிர் செம்புயிர் இரும்பு போலவாம்
பிணியுயிரி றுய்யாப் பேசினேனினித்
துணிமினீமமெனத் தொழுதிறைஞ்சி வாழ்த்தினார். [12]

---

11. Ibid, bl. 48·

12 திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி. பதிப்பித்தவர் உ. வே. சாமிநாதையர், ஏழாம் பதிப்பு, சென்னை 1969, பாடல். 3111.

வீடுபெற விழையும் உயிரினது பதினான்கு குணத்தான நிலைகளில் முதல் ஆறு நிலைகளிலும் லேசியங்கள் யாவும் அவ்வுயிரினைப் பிணித்திருக்கும். ஏழாவது படியில் தொடங்கி கீழ்மையுற்ற முதல் மூன்று லேசியங்களும் களையப்பட்டு, செம்மை, பதுமம், வெண்மை என்ற மூன்று வண்ணங்களுமே எஞ்சி நிற்கும். நல்வினையுடைய இவ்வுயிர் எட்டாவது பண்பு நிலை (குணத்தானம்) முதல் பதிமூன்றாவது பண்பு நிலையீறாக உள்ள அளவில் வெண்மை நிறம் பூண்டொழுகும். உயர் நிலையான பதினான்காம் பண்பு நிலையில் வண்ணங்கள் யாவுமற்று வீடு பேறடைந்துவிடும்

மேற்குறிந்த பாடலில் மணி, பொன், வெள்ளி செம்பு, இரும்பு எனும் பொருட்கள் அவை மேற்கொண்ட நிறங்களைச் சுட்டி அதன்மூலம் அவ்வுயிர்களின் தன்மைகளை நமக்குணர்த்து கின்றன. இது சமணதத்துவ மூல நூல்களில் எடுத்தாளப் பட்டுள்ள சான்றுகளிலிருந்து தெளிவாகிறது எடுத்துக் காட்டாக, செம்பும் செம்பாலியன்ற பொருட்களும் சபோதம் எனப்படும் சாம்பர் நிறத்தின் பாற்பட்டதென்பதனை

tambe i Vá tambakarode i Vā
(támra Vá tamra Karotake Vā)

என்ற பன்னவணா சூத்திர அடி தெளிவுபடுத்துகிறது. [13] இந் நூல் Suhsranniyâ kusume i Vä எனப்பொன்னைப் பதுமலேசியம் எனும் தாமரை நிறத்தின்பாற் பகுக்கிறது [14]; வெள்ளியும் வெள்ளியாலியன்ற மாலையும் சுக்கில லேசியம் எனும் வெண்ணிற உயிரினுக்கு உவமையாக ஆவதை rayayaharasam kasa Sukkalesa u Vannath [15] எனும் உத்திராத்தியான சூத்திர அடி உணர்த்துகிறது.

மேலே எடுத்துக் காட்டப்பெற்ற சிந்தாமணிப் பாடலில் நீல நிற உயிர்களும், செம்மை நிற உயிர்களும் குறிப்பிடப்பட

---

13. Bhanthia, Mohanlal, Lesyakosa, (Calcutta, 1966) p. 20.

14. Ibid, p. 23.

15. Ibid p. 24.

வில்லை எனினும் இதற்கு முன்னுள்ள பாடலில் 'நெருப்புயிர்க் காக்கி' எனவரும் தொடர் செம்மை நிறத்தனவாகிய உயிர் களையே குறிக்கும்.

புலனுணர்வுகளாலியன்ற இன்பத்தினைப் பொருளாகக் கொண்ட காவியங்களிலும் கவிதைகளிலும் வண்ணக் களஞ்சிய மாகத் திகழும் இயற்கை இடம்பெறுவது இயல்பேயாகும். தத்துவ பொருட்களை விளக்கும் சமயச் சார்புடைய இலக்கியங்களுள் நிறங்களை முன் நிறுத்தித் தம் சமயக் கொள்கைகளை வலி யுறுத்துகின்றன என்பது மேலே எடுத்துக்காட்டப்பட்ட தமிழிலக்கியச் சான்றுகள் வாயிலாகத் தெளிவாகின்றது.

15. சீவக சிந்தாமணி, பாடல். 3108.

# 20. தூது இலக்கியங்கள்

பூ. பிரமணியம்

## தூது இலக்கியம்

தமிழில் உள்ள சிற்றிலக்கியங்கள் பல. ஆனால் தமிழரிடை உலவும் பேறு பெற்றவை மிகச் சிலவே. அவற்றுள் சிறந்து விளங்குவன தூது இலக்கியங்களே. காரணம்-

1. பிற சிற்றிலக்கியங்களுள் ஒவ்வொரு வகையும் நூல் அமைப்பில் பெரிதும் மாறுபடாதவை. பாட்டுடைத் தலைவன் மாறுபடுகிறான்; அவன் சிறப்புக்கள் மாறு படுகின்றன. தூது இலக்கியங்களிலோ தலைவன் மாறுபடுகிறான்; அப்பொருளுக்கேற்பச் செய்திகளும் மாறுபடுகின்றன; பொருள் அமைப்புக்களும் மாறு படுகின்றன.

2. பிற தமிழ் இலக்கியங்களிலும் தூதுச் செய்திகள் மிகுதியாகக் காணப்பெறுகின்றன.

3. உலக வழக்கிலும் தூது அனுப்பும்முறை இருந்து வருகிறது.

4. பிறமொழிப் புலவர்களும் இவ் இலக்கியத்தை விரும்பி இயற்றியுள்ளனர். எனவே தூது இலக்கியங்கள் சிறந்து விளங்குகின்றன.

அச்சாகி நம்மிடையே உலவும் தூது இலக்கியங்கள் பலஆயினும் நிறக்கொள்கை காண எடுத்துக் கொள்ளப் பெற்றவை பத்து தூது நூல்களே.

## நிறம்

1. தமிழ் செந்தமிழ் என்று பெயர்பெறுகிறது. அப்பெயர் நிறம் தோய்க்கப்பெற்றதால் வந்ததன்று. (தமிழ்-18)

2. நீலமணி எல்லா நிறத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும்இயல்புடையது என்பர் [2]. எனவே திருமால் ''மணி நிறமும் ஆனோன்'' என்று கூறப்பெறுகிறான் (கிள்ளை-93)

3. திருமால் ''நீர்கொண்ட பாயல் நிறம் கொண்டு'' விளங்குகிறது கிள்ளை. (கிள்ளை-1)

4. பணமே! நீவந்து நின் நிறம் காட்டுமளவில் விழுந்து இறைஞ்சிக்கும்பிடுவர்-(பணம-210)

5. நீ நழுவிவிட்டால் - கழுவிவிட்டாற்போல் நிறமும் (காணார் பணம்-214)

6. "நீர் தந்த பச்சை நிறங்கொண்டது " புகையிலை (புகை-1)

7. பச்சை நிறம் அச்சுதற்கும் ''-(கிள்ளை-29) என்பன போன்ற சில இடங்களில் மட்டுமே நிறம் என்ற சொல் எடுத்தாளப்படுகிறது.

வண்ணம்

1. இறைவனால் ஆக்கப்பெற்ற வண்ணங்கள் ஐந்துக்குமேல் இல்லை- (தமிழ். 144)

2. " எப்பறவை ஆயினும் உன் ஐவண்ணத்துள்ளே அடங்குமே ''(கிள்ளை-7)

3. கிளியின் மழலைமொழி
''மைவண்ணன் செங்கைக்குழலின் இசையே ''
(கிள்ளை-60)

4. திருமால் ''பசந்த வண்ணந் தருந்துளப மாலையான்'' (கிள்ளை 112)

5. வையம் " கார்வண்ணனையே வாழ்த்துகிறது "
(கிள்ளை-222)

6. அவனே மையல் கொடுத்த மணிவண்ணன் (வண்டு. 182)

7. மேகவணமால் (விறலி - 34)

8. முகில்வண்ணன் -(மான்--260)

9. ஞாலம்புரக்கும் மணிவண்ணன் - (மு. வீ. மான்-1) என்றெல்லாம் சிறப்பிக்கப்பெறுகிறான் திருமால்.

10. தென்பாண்டிநாடு - வச்ரவண்ணன் உலகு வறியதாகப் வண்ணிச் சிறந்த படிவமாகும் - (மான்-85)

11. ''மின் வண்ணப் பின்னலால்'' எனப்படுவன் சிவபெருமான் (மான்-20)

12. பஞ்சவண்ணக்கிளி (விறலி-127)

இவைபோலும் பல இடங்களில் வண்ணம் என்னும் சொல் நிறப்பொருளில் எடுத்தாளப்பெறுகிறது. மேலும்,

1. வண்ணம் எலாம் மாறுதிருக்கும் ஒன்றையுள்ள வண்ணம் (கேள்தென்றல்-72)

2. வண்ணமிகும் பைங்கிளியே (விறலி-104)

3. வண்ணம் புனைந்த வனநகிலார் (பணம்--287)

4. வண்ணக்கொடி - (வண்டு. 110)

5. நோக்கிய வண்ணங்கள் நூறு - (தமிழ்-74)

என்பன போன்ற பல இடங்களில் அழகு, விதம் என்னும் பொருளில் வண்ணம் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

பிறநிறங்கள், நூல் தொடக்கம்

1. கார்கொண்ட மேனிக் கடவுள்பெயர் கொண்டது கிள்ளை -(கிள்ளை-1)

2. பச்சைப் பசுந் துளபத்தார் பூத்தவன் - (துகில்-1)

3. மரமேவு பைந்துளப மாதவன் - (மான் - 1)

4. கார் பூத்தமேனிக் கருணைப் பெருங்கடல் (தென்றல்.1)

5. செம்பதுமச் செல்வி மணவாளன்
   கார்கொண்ட மேனிக்கருணைமால் (விறலி-)

6. காமேவும் வெள்ளானைக் காவலன் (மூ. வீ. மான்-1)

7. நீர்தந்த பச்சை நிறம்கொண்டு (புகை-1)

இவ்வாறு பெரும்பாலான தூது நூல்கள், தம் தொடக்கச் சொல்லில் அல்லது தொடக்க அடியில் மங்கலச்சொல்லாக நிறப் பெயரைத் தாங்கி நிற்கின்றன. இப்பண்புடைமையால் தூது நூல்கள் நிறக் கொள்கைக்குத் துணை நிற்கும் மூதன்மை இலக்கியங்களாகும்.

செம்மை

1. காமன்பால் முன் சேந்த கண் போல – மூர்த்தியார்
   சேர்ந்த சந்தனம்–(தமிழ்.144)

2. வெம்பனியால் வாடிய செந்தாமரை ஒத்த தலைவியின்
   நிலை உவமிக்கப் படுகின்றன.

3. செந்தாமரைபோல் திருத்தாள் (219)

4. செந்தாமரை போல் திருமுகந்தாள் (வண்டு 19)

5. செங்கமலப் போதினின்று தேன் வழிந்தாற்போல-
   (வண்டு 20)

என்னும் தொடர்களில் உவமைப் பொருளினின் பண்பை விளக்கும் அடைமொழியாகச் செம்மை நிறம் கையாளப் பெறுகிறது.

6. பாண்டியன் 'செங்கண் நெடுமால்' போன்றவன் என்று
   புரவலரால் போற்றப் பெறுகிறான். (வண்டு 70)

இத்தொடருள் அமைந்தது வண்ணச் சினைச் சொல். செம்மை நிறம் வண்ணச் சொல்லாய் அமைந்துள்ளது.

7. அந்த செவ்வந்திப் போதால் அழித்திரே
   இந்தச் செவ் அந்திப்போது இல்லையோ (தென்றல் 103)

8. திருத்தாமரை முகமும் செப்பவள வாயும் (வண்டு 191)

9. செங்குவளைக் கண்ணான் - (வண்டு 20)

10. செந்தாமரைத் தடங்கண் (வண்டு-68)

11. தேனொழுகும் செம்பவளவாய் (விறலி-221)

ஆகிய தொடர்களிலும் செம்மை வண்ணச் சொல்லாய் அமைந்துள்ளது.

12. முழுக்கப் பச்சை நிறமாயிருந்தால் தன்னைப் பார்வதி என்று கூறி விடுவார்களாம் எனவே கிளிமூக்குச் சிவந்து தோன்றுகிறதாம்.

இதில் தற்குறிப்பேற்றப் பொருளில்செம்மை நிறம் பயன் படுத்தப்படுகிறது. (கிள்ளை-8)

13. மகளிரின் ''செவ் இதழ் உன்மூக்கால் சிவந்ததா''

இங்கு நிறத்தின் இயல்புஐயப் பொருளில் கூறப்படுகிறது.

14. ''பாதம் எனும் செந்தாமரை மலரில்'' (கிள்ளை-88)

உருவகத்தின் அடைமொழியாக செம்மை வந்துள்ளது.

15. உம்முடைய 'செவ் இதழ்' மயக்கம் என்றால் தீர்ப்பாய்த் தென்றல் (101)

இவ் அன்மொழித் தொகையுள் உமையம்மையின் இதழுக்கு அடைமொழியாகச் செம்மை கூறப்படுகிறது,

16. செங்கரத்தில்...சங்கிருக்க (கிள்ளை-172)

17. சிவந்த கடுகு இலேசம் (கிள்ளை 208)

18. செங்கைக் குழலின் இசைத்தானோ (கிள்ளை 60)

இவற்றுள் பண்பு அடைகளாகச் செம்மை ஆளப்படுகிறது.

இவை தவிர,

19. செந்நெல் (விறலி-4), செம்பரத்தை (விறலி 186)
செம்முள்ளி (விறலி 183), செந்தேன் பணம்-262)
செங்கரும்பு (தமிழ்156, பணம்255) செங்கல் (தமிழ்192)
செந்நீர் (மான் 116) செங்குவளை (மான்214)

செஞ்சாலி (பணம் 225),
செந்தேறல் (பணம் 309),
123, வி லி 166)'.
செவ்வேழம் (மான் 284)
செப்பவளம் (வண்டு 106)
செங்கமலம் (வண்டு-325)

போன்ற பலவகைப் பொருள்களுக்கும் செம்மை அடைமொழி யாகப் பயின்று வந்துள்ளது.

20. செந்தீபம் -(தமிழ் 147)' செந்தீ (தமிழ்-159)
செங்கதிர் (பணம் 243)

என்று ஒளிப்பொருள்களும்,

21. செங்கமலை-(மான்-14) செங்கமல நங்கை (வண்டு-58
செந்திருமால் (மான்-54, வண்டு-175)
சிவந்த மலர்த்தாள் (வண்டு. 24)
என்று உயர்திணைப்பெயர், பிற பெயர்களும் செம்மை நிற அடையுடன்பயின்று வருகின்றன.

கருமை

1. வேள் கருநிறம் அடைகிறான்; நாணாகிய வண்டு கரு நிறம் பெறுகிறது: குயில் கருநிறமாகிறது. ஆனால் கிளியோ அவை போல மறுப்படாது பச்சை நிறத்தோடு வருகிறது. இவ்வாறுகருமைநிறத்தால் மறு கற்பிக்கப்படுகிறது (கிள்ளை-40)

2. கடலுக்கு நதிபதி என்ற பெயருண்டு. திருமால் 'பரசமயவாத நதி வந்து அடங்கக் கருங்கடலும் ஆனோன்'' என்று சிறப்பிக்கப் படுகிறான் (கிள்ளை-92)

3. "பலங்கொண்ட கார்தான் ... விலங்கு என்றால் ஓடி விடுமே" (தென்றல்-116)

கார் எனும் நிறப் பெயர் ஆகு பெயராகி மேகத்தை உணர்த்து கிறது.

4. பாவையர்க்கு இரண்டு கண்போல வந்தது என்று 'கருங்கலை' உவமிக்கப் படுகிறது. (மான்-48)

5. கார் ஆர் இரவில் கண்ணம்புல்லார் தம்முடிமேல் ஏத்திய செந்தீபமும்'' (தமிழ்-147,)

கருமை நிறத்தால் இருள் சுட்டப்பெறுகிறது

6. திருமால்- 'கார் அங்கம் பெற்றோன்' எனப்பெறுகிறான் (மான்-8)

7. சொற்கத்து இயலும் கரியும் (கிள்ளை-145)

8. 'குன்றில் அரியும் கரியும் நின்றெதிர (கிள்ளை-122)

9. ஓதும் கரி ஒன்றுடைய மால் (கிள்ளை-85)

10. ''கங்குல் எனும் ஆனை-கசேந்திரன்'' (கிள்ளை-179)
இத் தொடர்களுள் கரியநிறத்தோடு கூடிய யானை கரி என்ற சொல்லால் சுட்டப்பெறுகிறது.

11. அல் இலங்கு மெய்யான் (கிள்ளை-59)
என இராவணனின் கரிய நிறம் உணர்த்தப்பெறுகிறது.

12. கொடையால் மேகத்தை ஒத்தவன் என்பது
''கார் அணியும் செங்கை '' (கிள்ளை-136)
என்னும் தொடரால் உணர்த்தப் பெறுகிறது.

13. மைக்குவளைக் கண்ணி (தமிழ்-258)

14. மைக்கடல் தமிழ்-161)

15. மைவாய்க்கும் வாரிதி: (தென்றல்-17)

16 மை தோய்ந்த வன்பேய்' (பணம்-216)

17. மைக்களிறு (மான்-265)

18. மைக்குவளை மாலை (மான்-182)

19. மைக் கண்(தமிழ், 250, 256)

20. மை பிடித்த வேற்கண் (வண்டு-88, (கிள்ளை-28)

இத்தொடர்களுள் 'மை' கரிய நிறமுணர்த்தி உவமைக்கு அடைமொழியாகவும், நிறப்பண்பை விளக்கும் சொல்லாகவும் ஆளப்படுகிறது. இவை தவிர,

21. கரிக்கட்டை (பணம்-171), கரிக்குருவி (தமிழ்-226) கரிய பொருள் (பணப்-33) கருங்குயில் (தென்றல்-64). கருங்கடல் (பணம்-266), கருங்குன்று (விறலி-38) கரும்புறா (கிள்ளை-36), கருஞ்சாரை (விறலி-190) கருவெருமை (பணம்-80), கருங்கூந்தல் (வண்டு-187) கார்வண்ணர் பத்திரம் (புகை-22), கார்வந்த கூந்தல் (விறலி-257) காரடிசில்–(மான்-74)

என்னும் தொடர்களில் 'கருமை' பண்புணர்த்தும் அடைமொழியாகவும் பிறவாறும் அமைந்துள்ளது.

வெண்மை

1. தலைவன் வெண்ணீறு அலங்கரித்து வருவது வெண்கமலமானது வெளிவந்தது எனத்தோன்றுகிறது (மான்-210)

2. இருபுறமும் வீசப்பெறும் வெண்சாமரை, சந்திர கிரண சமூகம் இருபாலும் வந்ததெனக் காட்சியளிக்கிறது, (மான்-244)

இத்தொடர்களுள் வெண்ணிறம் நிறப்பண்பாகவும் தனித் உவமையாகவும் அமைந்துள்ளது.

3. சிவபெருமானை-வெள்ளானை மேற்கொண்ட வேந்தர்

(தமிழ்-175) தெய்வவெள்ளிப்பூதரவானவர் (தமிழ்-170) என்றும் கூறும் அடிகளுள் வெண்மை ஆணுக்கும் மலைக்கும் உரிய நிறப்பண்பாக அமைகிறது.

4. வேந்தன் உலகு வெளிறிடவே வேண்டுமென்று முல்லைநகர் செம்பொனால் வகுக்கப்பெறுகிறது (மான்–84)

5. மான் சந்திரன் மெய்க்குள் வளர் வெண்கலை என்று கூறப்படுகிறது. (மு. வீ. மான்–3)

6, பணம் வெண்கடலாக உருவகிக்கப்பெறுகிறது. (பணம்-266)

7. கலைமகள் "வெண்கமலை மான்" என உருவகிக்கப் பெறுகிறாள்(மான்-11).

8. செங்கதிரும் வெண்கதிரும் என்னத் திருவிழியும் சங்கமும் சக்கரமும் தாங்கினோன் (கிள்ளை-125)
(செங்கதிர்-திங்கள்; இடக்கண்–சங்கு
வெண்கதிர்-சூரியன்; வலக்கண்–சக்கரம்)

என்னும் இடங்களில் வெண்மை தொழிற்பெயர், உருவகம், போன்ற பொருள்களில் பயன்படுகிறது.

9. பாலத்து வெண்ணீறு பாவித்தே (புகை-5)

10. மின்னார்கள்...வெண்கவரி...அசைக்க (வண்டு.140)

11. மின்னவார்...வெண்சாமரையிரட்ட (வண்டு. 34)

என்பனவற்றிலும் வெண்மைப்பண்பு அடையாகவே வருகிற

12. வால்வளைகளோ சிதற-(வண்டு. 241)

13. வெற்றிலை-வெள்ளிலை (விறலி-269) எனவும்

14. விளாங்கனி-வெள்ளிற்கனி (கிள்ளை-188)
எனவும் கூறப்பெறுகின்றன.

15 வெள்ளை எகினம் (கிள்ளை–199)
வெள்ளி வெற்பு (பணம்–5)
வெள்ளை மதயானை (மான்-259)
வெள்ளை வெள்ளாளன் (பணம்-86)
வெள்ளை-(வண்டு-118)
வெண்கோடு (வண்டு. 118)
வெண்சேவற்கொடி-(வண்டு. 110)
குடைவெண் சோதிவிட (தமிழ்-240)

இத்தொடர்களில் "வெண்மை" நிற அடையாகவே பயன்படுவதை அறியலாம்.

பசுமை

1. பாசடையும் கொண்டு பசுங்கொழுந்து பால் உகந்து (புகை-6)

இத்தொடருள் பசுமை இலைக்கு அடையாகக் கூறப் பெறுகிறது; பசுங்கொழுந்து என்னும் அன்மொழித் தொகையால் உமை சுட்டப்பெறுகிறாள். இரட்டுற மொழியாதலால் புகையிலையின் தன்மை விளக்கப் பெறுகிறது.

2. காமநோய் தீர்ப்பதற்கோ பச்சிலை ரூபம் படைத்திருந்தாய் (கிள்ளை-49)

3. கொண்டசிறகு - வேணுகானத்தினிலே பண்டுதழைத்த பசுந்தழை (கிள்ளை-58)

4. பச்சை நிறம் அச்சுதற்கும் பார்பதிக்கும் உந்தனுக்கும் இச்சைபெற வந்தவிதம் எந்தவிதம் (கிள்ளை-29)

இவற்றுள் கிளியின் பச்சை நிறம் வடிவம் கற்பிக்கப் பெறுவதோடு, அதன் சிறகு பசுந்தழையாக உருவகிக்கவும் பெறுகிறது.

5. பச்சையை வெட்டுப்படுத்திடாமல்-(பணம்-131) பச்சை சூதாடு கருவியை உணர்த்தி நின்றது.

6. பன்றி மலைப் பச்சை (விறலி-190)

7. பச்சிலையைக்கூட்டி....பிழிந்து (பணம்-204) இவற்றுள் மூலிகையை உணர்த்துகிறது.

8. பச்சைக்குதிரையே (கிள்ளை-5)

கிள்ளையின் வேறுபெயருக்கு நிறம் அடைமொழியாகியுள்ளது.

9. பச்சை வயிரம் வைத்த பதக்கம் (மான்-212)
பச்சை வயிரம்-(வண்டு-129)
பைந்தரு (மான், 142, 147),

ஆகியவற்றுள் பச்சை பண்பு அடைகளே.

10. பச்சைப்பிள்ளையாய் (கிள்ளை-18)
அன்னமின்றிப் பால் குடிக்கும் பச்சைக் குழந்தை நீ (கிள்ளை-48)

இவற்றுள் நிறப் பெயர் இளமை குறித்து வந்தது.

11. பைந்தமிழ்-(கிள்ளை-87), பசுந்தங்கம் (பணம்-56)
பசும்பொன் (பணம்-296), வண்டு (92)
பசும்புரவி-(பணம்-263) பைங்கழல், (தமிழ். 208)
பசுந்தமிழ் (விறலி-18), பைங்கிளி (விறலி-104)

இவற்றுள் செழுமை இளமைக்குரிய அடையாகவே பசுமை பயன்படுத்தப் பெறுகிறது.

12. பச்சைமுத்து மாணிக்கம் (விறலி-199)
இதில் நிறப்பெயர் பச்சை நிற மணிக்கு ஆகுபெயர்.

நீலம்

1. வண்டுசெறி நீல மாலிகையான் (மான்-89)

2. நீலமணிமால்-(மான்-189)

3. நீலப்புயன் (மான்-245,282)

4. அணைக்க மணிநிறமும் ஆனோன் (கிள்-93)

இவற்றுள் குவளைத் தாரணிந்த திருமால் கூறப்பெறுகிறான் நீல நிறம் பண்பு உணர்த்துவனவே.

5. நீலமணி (பணம்-258) பொருளே சுட்டப் பெறுகிறது.

6. 'காவிப்புதுமலர் (மான் 80)
பூங்காவிக்கணை (வண்டு-216)
இவற்றுள் காவிநிறம் நீலநிற மலரைச்சுட்டி நிற்கிறது.

7 நீதான் பசுமை என்றே...சுத்தீகரிக்கலாம்.
இதில் கிளிப்பச்சை என்னும் (கிளிச்சிறை) இரத்தினம் சுட்டப் பெறுகிறது.

மஞ்சள்

1. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு (தமிழ்-25)
சுவடிகளுக்கு மஞ்சள், கருமை நிறங்களைப் பூசித் தெளிவுபடச் செய்தல் இங்கு சுட்டப்பெறுகிறது.

2. மஞ்சள் குறித்த வளமைக்கோ (விறலி-275)

3. மஞ்சள் மினுக்கு வனைக்கை (விறலி-128)

4. பாயில் உதிர்ந்த பசுமஞ்சள் (விறலி-189)

என்பவற்றுள்ளும் மஞ்சள் நிறமே சுட்டப் பெறுகிறது.

5. கிளியரசே என் கூடு பொன்கூடுமிந்த நிறத்தினால்
உன்கூடும் என் கூடும் ஒன்றுகாண் (கிள்ளை-192)

பசலை வாய்க்கப்பெற்ற தன் உடலைக் கிளியின் உடலோடு ஒன்று படுத்திக்கூறுகிறாள் தலைவி.

6. ஈன்ற பச்சை நிறம் இன்னம் தணியாமே (தென்றல்-8

இயல்பான பசலைநிறம் உலகம் ஈன்றமையால் உண்டானது என்று கூறுவது தற்குறிப்பேற்றமாய் அமைந்தது.

முடிவுரை

1. நிறக்கொள்கைக்கு பெரிதும் துணை புரிபவை தூது இலக்கியங்கள்.

2. இவ் இலக்கியங்களுள் வெண்மை, கருமை, செம்மை, பசுமை, பொன்மை, ஆகிய ஐந்து நிறங்களுடன் நீல நிறமும் சுட்டப்பெறுகிறது.

3. நிறம், வண்ணம் ஆகிய சொற்களே பொதுச் சொற்களாகப் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

4. பெரும்பாலான நூல்களுள் நிறப்பெயரே தொடக்கமாக அமைந்துள்ளது

5 தூதுப்பொருள்களுக்கேற்ப நிறங்கள் மிகுதியாக எடுத்தாளப்பெறுகின்றன.

6. பெரும்பாலும் நிறம் பண்பு அடையாகவே பயின்று வருகிறது.

7 உவமை, உருவகம், ஆகுபெயர் போன்ற நிலையிலும் சிலவிடத்துப் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

## பின்னிணைப்பு

எடுத்துக்கொள்ளப்பட்ட தூது நூல்கள்

1. அழகர் கிள்ளைவிடு தூது, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு (6), சென்னை, 1957
2. தமிழ்விடுதூது டாக்டர் உ. வே சாமிநாதையர் பதிப்பு (5) சென்னை-1966
3. திருவேங்கடநாதன் வண்டுவிடுதூது, (பதிப்பாசிரியர்) மு. சண்முகம் பிள்ளை தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை-1982
4. தென்றல் விடுதூது, டாக்டர் உ. வே சாமிநாதையர் பதிப்பு (4) சென்னை 952
5. பணவிடுதூது. (பதிப்பாசிரியர்) இரா. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1980
6. புகையிலை விடுதூது, டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு (2) சென்னை-1956
7. மான்விடுதூது, டாக்டர் உ வே. சாமிநாதையர் பதிப்பு (2 சென்னை-1956
8. விறலி விடுதூது (பதிப்பாசிரியர்) கோவிந்தராசனார். தஞ்சை சரசுவதி மகால் தஞ்சாவூர் 1969
9. முத்து வீரப்பப்பிள்ளை பேரில் மான் விடுதூது தூதுதிரட்டு-அரசினர் சுவடி நூலகம், சென்னை-1957
10. துகில் விடுதூது-தூதுந் திரட்டு, சென்னை-1957

## சுருக்கக் குறிப்பு

1. கிள்ளை-அழகர்கிள்ளை விடு தூது
2. தமிழ்-தமிழ் விடுதூது
3. வண்டு-திருவேங்கடநாதன் வண்டு விடு தூது
4. தென்றல்-தென்றல் விடு தூது
5. பணம்-பணவிடு தூது
6. புகை-புகைவிடு தூது
7. மான்-மான்விடு தூது
8. விறலி-விறலிவிடு தூது
9. மு. வீ. மான்-முத்து வீரப்பிள்ளை பேரில் மான்விடுதூது
10. துகில்-துகில்விடுதூது

# 21. நந்திக் கலம்பகம்

த. அழகப்பராசு

நூற்றுக்கு மேற்பட்டு வளர்ந்துவிட்ட சிற்றிலக்கியங்களுள் கலம்பகமும் ஒன்று. அதில் காலத்தால் முந்தியதும், சிறப்புவாய்ந்ததும் நந்திக்கலம்பகமாகும். தொல்காப்பியம் தொட்டுப் பக்தி இலக்கியம்வரை காணப்பட்ட பல்வேறு இலக்கிய உறுப்புகளில் ஒரு சிலவற்றை மட்டும் விரித்துரைப்பது கலம்பகம். இதையாத்த ஆசிரியரின் பெயர் அறிய இயலவில்லை.

சிற்றிலக்கிய காலச் சூழலில் தோற்றம் பெற்றாலும், சங்க இலக்கியத்தின் போக்கோடு ஒத்துச் செல்கின்ற நிலையினை நாம் நந்திக்கலம்பகத்தில் காணமுடிகின்றது. இதன் தாக்கமாக நிறப் பண்புகள் சிலவும் சங்க இலக்கியத்தோடு ஒத்துப் போவதையும் காண்கிறோம். சங்க இலக்கியம் போன்று இதில் மஞ்சள் நிறப் பயன்பாட்டைக் காண இயலவில்லை. நந்திக்கலம்பகத்தில் செம்மை, வெண்மை, மாமை, கருமை, பொன்மை, பசுமை ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் பயன்பட்டுள்ள நிறத் தன்மைகளை வருணனைத் தன்மைகள், இயற்கைப் பொருட்களின் தன்மைகள் என்பனவற்றுள் அடக்கலாம். இலக்கியம் மனித அரங்கு, இயற்கை அரங்கு என்ற இரண்டு களங்களைக் கொண்டியங்கும் என்ற அறிஞர்தம் கருத்துப்படியே இக்கலம்பகமும் செல்கிறது.[1] இங்கு நிறத்தை உணர்த்தும் நிறம், வண்ணம் போன்ற சொற்கள் குறிக்கப்படாமலேயே நிறம் உணர்த்தப் பட்டுள்ளது. நந்திவர்ம பல்லவனின் கொடை, வீரம், பண்புகள், உருவ அழகு போன்றனவற்றைப் புகழ்ந்து பாடுதலே நந்திக் கலம்பகத்தின் கோட்பாடாகத் தெரிகின்றது. ஆனாலும், உருவ அழகினைப் புனையும் திறத்திலும் இயற்கை நுகர்ச்சியிலும் தான் நாம் நிறத்தன்மைகளைக் காணமுடிகின்றது மற்ற பண்புகளுக்குப் பயன்படுத்தப்படுவது மிகச் சிலவே.

---

1. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, மு. வரதராசன், (மொ. ப) ம. ரா. போ. குருசாமி. சுப அண்ணாமலை, கதிர் மகாதேவன், பாரி நிலையம், சென்னை-1 (1975).

## வருணனைத் தன்மைகள்

எந்தக்கால இலக்கியமானாலும் ஆடவர் வருணனையைக் காட்டிலும் பெண்கள் வருணனையே அதிகம் இடம் பெறுகின்ற தன்மை தமிழிலக்கிய வரலாற்றில் நிலைத்து நிற்கின்றது. அதற் கேற்பவே நந்திக்கலம்பக ஆசிரியரும் அரசனைப் புகழ்வதிலும் அவன் குடைக் கீழ் வாழும் குடிமக்களுள் பெண்களையே மிகுதி யும் பாராட்டுகின்றார். இங்கு வருணனைத் தன்மையை நந்தி பற்றிய வருணனை, பெண்களை பற்றிய வருணனை, இறைவன் பற்றிய வருணனை என்று பகுத்துக் காணலாம். நந்தி பற்றிய வருணனை இரண்டு : ஒன்று தாள் குறித்தது மற்றொன்று கரம் பற்றியது. அவனிடம் குறை வேண்டி நிறை இரக்கும் அந்தணரும் மற்றோரும் அணிந்த தாளிப்புட்கள் அவன் சிவந்த அடியின்கீழே கிடந்தன[2], அவனது நல்ல பொன் போன்ற கழலினைத் தொழுத பெண்கள் அவனை மீண்டும் கண்டதால் தன் மாமை இழந்தனர் என்றும் அவன்தன் சேவடி சிறப்பிக்கப்படுகிறது.[3] காலத்தைப் பற்றி வருணிக்குங்கால் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கையைச் 'செங்கை' [4] என்கிறார்.

அவன் நாட்டுப் பெண்ணின் கண் (தலைவி) மிகக் கருமை யுடையதாய் குவளை மலர் போன்று அமைந்துள்ளது. அவளது கூந்தல் செழித்துக் காப்படுகின்றது. அவளது வாய் கொவ்வைப் பழம் போன்று சிவந்து பவள நிறத்ததாய் இருக்கின்றது. அவள் நகைப்பது வெண்மைத் தன்மையதாய் மணிபோன்று மிளிர் கின்றது. இத்தனையையும் இணைத்து,

அறம்பெருகும் தனிச்செங்கோல் மாயன்தொண்டை
அம்கனிபோல் சிவந்து திருமுகத்துப் பூத்து
மறிந்துளதே பவளவாய் மகிழும் மருங்கிலாடும்
வல்லியிடை மணிமுறுவல் முத்துச்சால
நெறிந்துளதே கருங்குழலங் குவளைக் கண்கள்''

என்ற பாடல் வழி விளக்குகின்றார் ஆசிரியர் [5].

---

2. நந்திக்கலம்பகம் 19
3. ,, 45
4. ,, 104
5. ,, 64

மாமை-பசலை நிலையில், ஆகிடுக மாமை [6] அணிகெடுக மேனி என்பதையும், அந்த மாமை அழிந்து உடல் மாறுபாடு அடைதலையும் [7] அவன் காதல் கண்டு பசலை நோய் பெறுத லையும் [8] சுட்டி நிற்கின்றார். இவை அடுத்தடுத்த பாடல்களில் (45, 46, 47) அமைக்கப்பட்டுள்ளன. மற்றொரு இடத்தில் தலைவி யின் கொங்கைகள் நிறமாற்றமடைவதை, அழகாக

''கொங்கைகளும்.............பொன்சொரியும் காலம்''என்று காட்டி நிற்கும் திறம் கருதற்பாலது [9].

கூத்தபிரானைக் காணும்போது அவர் வடிவம் யாதென்று சரியாகக் கவிஞருக்குப் புலப்படவில்லை. எனவேதான், வளை வடிவோ, செவ்வடிவோ, மரகதத்தின் திகழ்வடிவோ என்று வேண்டுகின்றார். [10] அதோடு நில்லாது அவளது செம்மையான மூளரிபோன்ற மலர்த்தாளும் [11] செஞ்சடையும் இங்கு பேசப் படுகின்றன [12].

## இயற்கைப்பொருட்களின் தன்மைகள்

இவ்வகையில் மதி, நெல், பொன், சங்கு, முத்து, அருவி, திரை வண்டு, ஆதிசேடன், தழல், மருப்பு ஆகிய இயற்பொருள்களின் நிறங்கள் பேசப்படுகின்றன. வெண்மதியை வெண்கொற்றக் குடைக்குச் சான்றாக மற்ற இலக்கியம் போன்றே இதிலும் காண முடிகின்றது [13]. அத்துடன் வெண்மையில் மருப்பு, சங்கு முத்தம், திரை, அருவி போன்றனவும் வெண்மையைக் குறிக்கும் அடைகளைக் கொடுத்துச் சிறப்பிக்கப்படுகின்றன [14]. பொன் செம்பொன் என்று சுட்டப்படுகின்றது [15]. மலர்களின் நிலையில் கொன்றை மலர், வெள்ளெருக்க மலர், செங்கழுநீர் மலர் என்ற மூன்றும் பயன்பட்டுள்ளது [16]. கருமை வண்டை 'கதிர்செய் அணி வண்டு' எனவும், ஆதிசேடனைக்குறிக்க 'கருங்கச்சை' என்னும் [17] தொடர்கள் ஆளுமை பெற்றுள்ளன.

---

6. நந்திக்கலம்பகம் 55
7. ,, 46, 47
8. ,, 45
9. ,, 104
10. ,, 5
11. ,, 1, 2
12. ,, 70
13. ,, 5, 26, 43, 58
14. ,, 17, 30, 43, 75, 70 97
15. ,, 82, 104
16. ,, 49, 5
17. ,, 6, 46, 64

இவை நமக்கு இயற்கைப் பொருட்களுடன் கவிஞன் ஒன்றின் விட்ட தன்மையைக் காட்டுகின்றன அந்தப் பொருள்களைக் கவிஞன் எப்படிக் கூர்ந்தநோக்குடன் கண்டுள்ளான் என்பதையும் அதன் தன்மைகளை அவன் நன்குணர்திறன் பெற்றமையினையும் உணர முடிகின்றது. இவற்றை நிறம் சுட்டி அமைதலை எண்ணி அவன் பாடவில்லை. அவன் படைப்பில் அவை தானே வந்து கலந்து கொள்ளுகின்றன. இது, நாம் இயற்கைப் பொருள்களை காணுகின்ற தன்மைக்கும் கவிஞன் காணுகின்ற தன்மைக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டும்.

## நிறப்பயன்பாட்டுக் கூறுகள்

நிறப்பயன்பாட்டுக் கூறுகள் இலக்கியத்தின் தன்மை நோக்கு போன்றவற்றிற்கும் படைப்பாளனுக்கும் ஏற்ப மாற்றமடையும். நந்திக்கலம்பகத்தில் நிறப்பயன்பாட்டுக் கூறுகளுள் செங்கோன்மை முதன்மை பெறுகிறது.

## செங்கோன்மை

அரசோச்சும் ஒருவனுக்கு அவனது வீரத்தை-கொடையைக் காட்டிலும், செங்கோன்மையே பெரிதும் தேவை. அவன் செங்கோல் கோடாது அரசாட்சி நடத்தல் வேண்டும். கோல் விவளையின் கோல்நடத்தும் அரசு கெட்டு, குடிகெட்டு நாடழியும் அவன் செங்கோல்தவறாது ஆட்சி நடத்தினால்தான் சான்றோர் நாட்டில் வாழ்வர். மழை பெய்யும்போது பெய்து பொய்க்கும் போது பொய்த்து மக்களைக் காக்கும்' நாட்டில் நல்லறம் நிலைக்கும். அவன் பிழைப்பு நாட்டை அல்லலுக்குள்ளாக்கும்; அரசு கோடும்; பழிவந்தடையும். செங்கோண்மை தவறாததற்கு மனுநீதியும், நெடுஞ்செழியனும் சான்றாக தமிழக அரசியல் வரலாற்றில் நிற்கின்றன.

இங்கு, பல்லவ வேந்தனின் செங்கோல் திறத்தினைச் சாதாரணமாகச் செங்கோல் சிறப்புடன் ஆண்டான் என்றும் சுட்டுகின்ற இடங்கள் பல [18].

---

18. நந்திக் கலம்பகம் 53

செருவென்ற செங்கோல் நந்தி [19]
செம்தனிக்கோல் நந்தி [20].
செந்தண்க்கோல் பைந்தார் நந்தி [21]
அறப்பெருகும் தனிச்செங்கோல் [22]
தனிச்செங்கோல் நந்தி [23]

என்றெல்லாம் சிறப்பித்து விளக்கங்களுடனும் அடைகளுடனும் காட்டுகின்ற இடங்கள் பல. பெண்கள் அவன் செங்கோல் இகழ்வதாகக் கூறிப் புகழும் திறம் இங்குக் காணப்படுகின்றது. நந்தி மன்னன்பால் காதல் கொண்ட மங்கையர் பலர். அவர்கள் யாவரும் நந்தி மன்னனை மணக்க விரும்பினர். அவன் தன் ஆதொண்டை மாலைக்கு ஏக்கற்று நின்றனர். அதைக்கண்ட தோழி இவன் செங்கோல் நிலை திரியா கொற்ற வேந்தன், தெள்ளாற்றிலே பகைவரை வென்றவன் என்றெல்லாம் பேசுகின்றாள். ஆனால் இரந்திரந்து ஆதொண்டை மாலை வேண்டும் என்று அல்லலுறும் அழகு மகளிர்க்கு அதை அளித்தானில்லை. அத்துடன் இவனது அழகை, செங்கோலைக் கேலி செய்கின்றாள். [24]

## நிறச்சொல் நிறப்பொருளுணர்த்தாமை

நிறத்தைக் குறிக்கின்ற சொற்கள் கூட சில இடங்களில் நிறப்பொருளை உணர்த்தாது வேறு பொருளையும் உணர்த்துகின்றன.

கருப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள [25].

நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப [26].

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் கருப்பு, சிவப்பு இரண்டு சொற்களுக்கும் நிறத்தைப் பின் பொருளாக்கி முன்பொருளாக வெகுளியைக் காட்டி நிற்கிறது. நந்திக்கலம்பகத்தில் 'செம்மை' பல இடங்களில் நிறப் பொருள் உணர்த்தா நிலையில் ஆட்சி பெற்றுள்ளது. தொல்காப்பியக் கூற்றுப்படி சிவத்தல் என்பது

---

19. நந்திக்கலம்பகம் 53
20. ,, 6
21. ,, 39
22. ,, 74
23. ,, 76
24. ,, 23, 46
25. ,, 28
26. தொல்காப்பியம், உரி. 29

'சினத்தல்' என்ற பொருளில் பயன்பட்டுள்ளது.[27] அது செழுமை, சிறப்பு என்ற பொருள்களையும் பெறுகிறது.[28] நாம் மேற்கண்ட செங்கோலும்[29] செந்நெல்[30] என்பதும் நிறம் குறிக்கவில்லை.

**உவமை**

உவமை வழியும் நிறம் உணர்த்தப்படுகிறது.

வளைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனேனின் திருமேனி[31]

என்ற ஐயப்பாட்டு வினாவில் நிற அடிப்படை உவமைகள் நிற்கின்றன.

அம்கனிபோல் சிவந்து திருமுகத்துப் பூத்து
மறித்துளதே பவளவாய்

என்பதில் வாய்க்கு பவளவாய்க்குக் கொவ்வைப் பழம் உவமையாக்கப்பட்டுள்ளது. இதில் வாய்க்குப் பவளமும் பவளத்திற்கும் இதழிற்கும் கொவ்வைப் பழமும் இணைக்கப்பட்டு நிற உவமை கூறப்பட்டுள்ளது.

**அடைவளம்**

அடைநிலையினை நாம் இரண்டாகப் பகுத்துக் காணலாம்

1. நிற அடை
2. நிறத்துக்கு அடை

நிற அடை என்பது நிறம் மற்ற சொற்களுக்கு அடையாக அமைதல். செம்மையில் சே, செங், செழு, செவ், செம் செஞ், செந்(தழல்)செந் (நெல்). செய்ய என்ற சொற்கள் மற்ற பொருட்களுக்கு அடையாக நின்று நிறப்பொருட்களை உணர்த்துகின்றன.

---

27. தொல். உரி. 20, 42, 46, 65, 105, 65.
28. நந்திக்கலம்பகம்
29. ,, 33
30. ,, 5
31. ,, 64
32. ,, 32

வெண்மை நிறத்தில், வெண், வெள், ஒள் என்பன மேற்பணியைச் செய்கின்றன. கருமையில் கருங், கரிய. என்பனவும், பச்சையில் பைங், பைஞ் என்பனவும் நிற அடைகளாய் மற்றவற்றிற்கு அமைந்து நிற்கின்றன. நிறத்துக்கு அடை என்பது மற்ற சொற்கள் நிறத்துக்கு அடையாக அமைந்து நிற்றலைக் குறிக்கும். செம்மையைக் குறிக்க கவரிச் செந்நெல் [33] செழுமலர் சேவடி [34] என்றசொற்தொடர்கள் பயன்படுகின்றன. முறுவலைக் குறிக்கவந்த ஆசிரியர் வெண்மையைக் குறிக்கும் சொல் நிலையில் மணிமுறுவல் [35] எனவும் திரையைக்குறிக்க 'நுரை வெண்திரைக் எனவும், [36] அடையைக் கையாண்டுள்ளார். கண்ணைக் குறிக்க வந்தவர் கரிய கண் என்பதுடன் அமையாமல் மிக என்பதையும் இணைத்து மிகக் கரிய கண் [37] என்கிறார். வண்டைக் குறிக்க 'கதிர்செய்' அணிவண்டு' [38] என அடையாக அமைகின்றார் மாமையை உரைக்க வந்தவர் 'செறிமாமை' [39] எனப் புகழ்கின்றார்.

## நிறம் குறிக்கும் பொருள்கள்

நிறத்தினைக் குறிக்க வந்த கவிஞர் நிறத்தை அச்சொற்களால் மட்டுமின்றி வேறு சில சொற்களாலும் குறிக்கின்றார் அவ்வாறு குறிக்கப்படுகின்ற சொற்கள் பெரும்பான்மையும் அந்த நிறத்தைச் சார்ந்தே அமைகிறது. செம்மையைக் குறிக்க கொவ்வைக் கனியும், பவளமும், நெருப்பும் மாமையைக் குறிக்க மதி, சங்கு, முத்து, மருப்பு, வளை, முகை மணி ஆகிய பொருள்களும் கருமையைக்குறிக்க குவளை, வண்டு, கதிர் போன்றனவும் பச்சையைக் குறிக்க மரகதமும் பயன்பட்டுள்ளன.

## இணை நிறச் சொற்கள்

இரண்டு நிறச்சொற்கள் ஒன்றாக இணைந்து அமைதலும் உண்டு. இங்கு வெவ்வேறு நிறத்தைக் குறிக்கின்ற இரண்டு

33. நந்திக் கலம்பகம் 2
34. ,, 64
35. ,, 30
36. ,, 51
37. ,, 49
38. ,, 4
39. ,, 41

சொற்கள் சொல்லளவிலேயே இணைகின்றன. பொற்பவளவாய் திறந்து '[40] என்பது சொற்பவளம் சொற்கூட்டு நிலையில் அமைந்ததைக்காட்டும். பொன் என்பது நிறம் குறிக்காமல் அழகு என்ற பொருளில் அமைக்கப்பட்டுள்ளது.

## நிறமாற்றம்

நெருப்புருவம் வெளியாக நீறணிந்த வரை மார்ப' [41]

இதில், நெருப்புருவமானது வெண்மையாக மாறும்படி நீறணிந்துள்ள சிவபெருமானைக் காட்டுவதாகும். இங்குச் சிவந்த சிவபெருமான் மேனி வெண்மையாக மாற்றம் பெறவில்லை. வெண்மையாகத் தோற்றுகிறது. அத்துணை அளவுக்கு இயல்பான செந்நிறத்தில் வெண்ணீரணிந்துள்ளமையை விளக்கிக்காட்ட இவ்வாறு நவின்றுள்ளார் ஆசிரியர்.

மாமை நிறம் காதல் தாகத்தால் மாறுபாடு அடையும் என்று சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறிகின்றோம். இங்கும் மாமை, பசலை நிறங்களின் மாறுபாடு சுட்டப்படுகின்றது. செறிமாமை வாட [42], கொங்கைகளும்பொன்சொரியும் காலம்[43] மேனி வெளுத்துற [44], ஆகிடுக மாமை என்பன அவற்றைத் தெளிவுறுத்தும் சான்றுகள்.

## முடிவுரை

1. கலம்பகத்தில் சிறப்பிடமும் இலக்கியத்தில் செல்வாக்கும் பெற்ற நந்திக்கலம்பகத்தில் செம்மை, வெண்மை, கருமை, பொன்மை, பசுமை என்ற ஐந்து நிறங்களே பேசப்படுகின்றன.

2. நிறத்தைக் குறிக்கும் நிறம், வண்ணம் போன்ற நிறச்சொற்கள் இன்றியே நிறம் உணர்த்தப்படுகின்றது.

---

40. நந்திக்கலம்பகம் 2
41. ,, 46
42. ,, 104
43. ,, 47
44. ,, 55

3. முருகியல் உணர்வின் அடிப்படையில் வருணனைகள். இயற்கை அழகுகள் போன்றவை மிகுதியும் இடம் பெற்றுள்ளன குறியீட்டு நிலையில் எந்த நிறமும் பயன்படுத்தப்படவில்லை. சங்க கால இலக்கியப் போக்கை ஒட்டியே மாமை' பசலை ஆகியவை பேசப்படுகின்றன.

4. நிறச் சொல் நிறப்பொருளை உணர்த்தாத தன்மையும் சிறுபான்மை காணப்படுகின்றது.

5. நிறம் குறிக்கும் பொருள்களிலும் நிற அடைகள் மிகுதியும் பயன்பட்டுள்ளன.

# 21. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

க. காந்தி

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான பிள்ளைத்தமிழ் கடவுளைளையோ அல்லது மக்களுள் மாண்புற்றோர்களையோ பிள்ளைப் பருவத்தினராக நினைந்து இளம்பருவ நிலைகளைச் சுவைபடக் கூறும் இலக்கிய வகையாகும். இது ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். இவ்விருவகை பிள்ளைத் தமிழும் பத்துப் பருவங்களைக் கொண்டனவாக அமையும். அவற்றுள் காப்பு முதல் அம்புலிப் பருவம் ஈறாக உள்ள ஏழுபருவங்கள் இரண்டிற்கும் பொதுவானதாகும். மற்ற மூன்று பருவங்கள் பாலுக்குத்தக நிலையும் வேறுபட்டு அமையும். ஆண்பாற் பிள்ளைத் தமிழாயின் சிற்றில் சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்களும் பெண்பாற்பிள்ளைத் தமிழாயின் கழங்கு அம்மானை, ஊசல் ஆசிய பருவங்களும் அமையப்பாடுவது மரபாகும். இவற்றில் ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப்பாடல் வீதம் நூறுபாடல்களைக் கொண்டு அமைவதே சிறப்பான தெனினும் அவற்றில் மிக்கும் குறைந்தும் அமைந்தவையும் காணக்கிடக்கின்றன. சான்றாகத் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழில் பகழிக்கூத்தர் முத்துப்பருவம், வாரானைப் பருவம், அம்புலிப்பருவம் ஆகிய மூன்று பருவங்களுக்கும் முறையே பதினோரு பாடல்களை அமைத்து விரிவு காட்டியுள்ளார். அவரது பிள்ளைத் தமிழ்ப்பாடல்களில் நிறங்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## நிறங்கள்

கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் நிறங்கள் இலக்கியத்தில் பெரும்பாலும் பண்புணர்த்தும் போக்கிலும் குறியீட்டு அடிப்படையிலும் பயின்று வருவதனைக் காண்கிறோம் இந்நிறங்களை அதன் சிறப்புக்கருதி முதன்மை நிறங்களாகச் சிவப்பு, பச்சை, நீலம் ஆகியவை கருதப்படுகின்றன இவை தவிர ஏனைய நிறங்கள் அனைத்தும் துணைமை நிறங்களாகும். நிறத்தினைக்குறிக்கும் பொதுச்சொற்களாக இங்கு நிறம், வடிவம் உரு, புகர் ஆகிய சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன அவற்றுள் நிறம் என்ற சொல்லே மிகுதியாக ஆறு இடங்களில் பயின்று வந்துள்ளது.

நிறம்

பொதுவற விடுசுடர் முழுமணி யொளிவிடு
    பெழிவேறு பவளம தித்த நிறத்தினர் (4)
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
    செங்கீரை யாடி யருளே (14, 15, 16)
மாறாட முதுபகட் டுயர்பிடர்க் கரிய நிற
    மன்றாட (15)
கொந்த விழ் சாரல் மலயமால் வரைநெடுங்
    குடுப்பில் வாய்த்த தெய்வக்
கொழுந்தெ கன்றும் ஆடகப் பசுநிறங்
    கொண்டு விளையும் பருவரை (96)

வடிவம்

மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்
    வாகாய் வாடாதோ (26)

குரு

குழுமணி யலையெறி திருநக ரதியதி
    கொட்டுக சப்பாணி (36)

புகர்

வீறாட வேங்கதிர்ப் புகர்முகக் கூரிலை
    மிகுத்தவே லுறை கழித்து (15)

நிறம் தவிர ஏனைய வடிவம், குரு, புகர் ஆகிய சொற்கள் ஒவ்வோரிடங்களில் மட்டுமே பயின்றுவரக் காண்கிறோம். பகழிக் கூத்தர் தம் பிள்ளைத்தமிழில் செம்மை கருமை, வெண்மை, பொன்மை, பசுமை ஆகிய நிறங்களைக் குறித்துள்ளார். இவற்றில் செம்மையும் கருமையுமே மிகுதியாகப் பயின்றுவரும் நிலை சுட்டத்தக்கதாக அமைகின்றது.

செம்மை

சிவப்பு முதன்மை நிறங்களில் ஒன்றாகவும், காட்சிக்குப் புலப்படும் தன்மையிடு சிறப்பாகவும், உலகெங்கிலும் எச்சரிக்கை குறியீடாகவும் பயன்பட்டு வருவதனைக் காண்கிறோம். செம்மையினைக் குறிக்கச் சிவப்பு, செய்ய, சேய், செச்சை, அரத்தகம் துவர் 'காவி, பவளம், குங்குமம் ஆகிய சொற்களைப் பகழிக்

கூத்தர் கையாண்டுள்ளார். இவற்றுள் சிவப்பு, செம்மை போன்ற பொருட்களைக் கொடுக்கக்கூடிய நிலையில் பயின்று வந்துள்ள இடங்களே அதிகமாகத் தென்படுகின்றன, அவற்றுள் இயற்கைப் பொருட்களைச் சுட்டும் நிலை மிகுதியாகத் தென்படக் காண்கிறோம்.

செங்குநிர் 94
செந்நெல் 42, 53, 73
செங்கயல் 45, 48, 76
செந்தாமரை 1, 34
செஞ்சடை 2, 3
செங்கரம் 3
செங்களம் 3
செங்கனி 30

செந்நிறத்தினைக் குறிக்கச் சிவப்பு என்ற சொல் மூன்று இடங்களில் (31, 50, 87) பயிற்சி பெற்று வந்துள்ளது.

இவை தவிர செய்ய (85), செச்சை (4), பவளம் (4), அரத்தம் (50), துவர் (56) குங்குமம் (2,100), காளி (92), ஆகியசொற்களும் செந்நிறத்தினைக் குறிக்கப் பயன்பட்டிருக்கின்ற தன்மையினைக் காண முடிகின்றது. இந்நிலை கொண்டு செந்நிறத்தோடு தொடர்புடையதனித்த நிறங்களையும் மிகுதியாக வேறுபடுத்திப் பார்க்கவில்லை என்பது புலனாகிறது. இணை நிறங்களாக இணைத்துப் பேசும் நிலையில் செம்மைக்கும் கருமைக்கும், செம்மைக்கும் வெண்மைக்கும், (14, 15, 16) செம்மைக்கும் பசுமைக்கும், சிறப்பளித்துள்ள நிலையினைக் காணமுடிகிறது.

**கருமை**

கருமை பெரும்பாலும் பல்வேறு நாடுகளிலும் துக்கத்தின் அறிகுறியாகப் பயன்பட்டு வருகின்றது. கருமை நிறத்தினைக் குறிக்க ஆசிரியர் கரு, கருப்பு, கருமை, இருள், கரிய, கார், மை ஆகிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

**கரு**

கரும்பகடு (97), கருவராகம் (78), கருநாகம் (73) கருவாளை (59).

**கருப்பு**

கருப்புவில் (6)

**கருமை**

கள்ளங்கருங்கண் (9), கருங்குவளை (24), கருங்குழல் (75), கருங்கடல் (42).

**இருள்**

இருட்படலம் (9).

**கரிய**

கரிய குறமகளிர் (11), கரியநிற மறலி(15), கரியமுதுபனை (19 கரிய பசுங்கோலச்சிறிய-குடக்காய் (22) கரியமுகில் (75) கரியமாமுகில் (72).

**கார்**

கொடுங்கார் சொரி மழை (24), கார்கொண்ட (35).

**மை**

மைக்குவளை (38).

இவற்றுள் இயற்கைப் பொருட்களே சிறப்பாகப் பேசப் பட்டிருக்கின்ற நிலையினைக் காண்கிறோம். அவற்றுள் இயற்கைப் பொருட்களான கடல், முகில், தாவரங்கள், விலங்கினங்கள், உறுப்புகள் ஆகியவை சிறப்பிடம் பெறக்காண்கிறோம் கரிய என்ற சொல் வலிமை என்ற பொருளில் ஓரிடத்தில் மட்டுமே பயின்று வருகிறது.

சேகரிக் கருங்கை மள்ளர் (52).

இணை நிறங்களாகப் பேசுமிடங்களில் கருமைக்கும் செம்மைக்கும் கருமைக்கும் பசுமைக்கும் இணைவு காட்டியுள்ளமை புலனாகின்றது.

**வெண்மை**

வெண்மை புனிதத்தின் அறிகுறியாகித் தூய்மை, மகிழ்ச் சிறப்பு ஆகியவற்றை விளக்கும் குறியீடாக நிற்பதை வழக்

காறுகள் உணர்த்துகின்றன. வெண்மை நிறத்தினைக் குறிக்க வெள்ளை, வெண்மை, வால், தவளம் ஆகிய சொற்களை ஆண்டுள்ளார். அவற்றுள் வெண்மை என்ற சொல்லே மிகுதியாகப் பயின்றுள்ளது.

வெண்மை

வெள்ளை (32, 85), வெண்நித்திலவடம் (79),
வெண்திரை (8, 74), வெண்நிலம் (2).
வெண்டாமரை (7), வெண்பிறை (32),
வெண்தயிர் (95), வெண்தரளம் (51),
வெண்பணிலம் (14, 78) வெண்சங்கு (52, 70)

வெள்ளை

வெள்ளைப்பணிலம் (14), வெள்ளோதியம் (52).

வால்

வால்வளை (76), வாலுகம் (41).

தவளம்

தவளமுளரி மணி, வடிவு (4). தவளப்பிறை (85).

இவற்றுள்ளும் இயற்கைப் பொருட்களான நிலவு, கடல் பொருட்கள், அன்னம், தயிர், மணல் ஆகியவை பற்றிய அடையாக வந்திருப்பதே பெரும்பான்மையினதாக அமைகின்றமை தெரியவருகின்றது. வெண்மையின் இணை நிறங்களாகப் பாடலுள் கருமை (53), செம்மை (95), ஆகியவை பேசப்படுகின்றன.

பசுமை

இயற்கையின் குறியீடாகி நிற்கும் பசுமை, நம்பிக்கையினையும் அழியாத வாழ்க்கையினை நினைவுபடுத்தும் பாங்கிலும் பொருளுணர்த்தி நிற்பதனை வழக்காறுகள் தெரிவிக்கின்றன. இந்நிறம் முகமதியர்களுக்குப் புனித நிறமாகும். எனவேதான் அவர்களது சமயக்கொடி பச்சை வண்ணத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பச்சை நிறத்தினைக் குறிக்கப் பசுமை

பச்சை, பை, பாசு, மரகதம் ஆகிய சொல்லாட்சிகள் இப்பிள்ளைத் தமிழில் ஆளப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பசுமை என்ற சொல் மிகுதியாகப் பயின்று வந்துள்ளது.

பசுமை

பசுநிறம் (95) பசுங்கலபம் (1) பசுங்கொழுகுருதி (15) பசுந்தேறல் (76) பசுங்காய் (51) பசுங்கழை (49) பசும் பொகுட்டு (44) பசுஞ்சாலி (41)

பசுமை

பச்சைமால் மருக (95)

பை

பைங்கருங்கிளி (3). பைங்கடம்பணி (3). பைந்தாள் (34).

பாசு

பாசடைக்கமலம் (14)

மரகதம்

மரகத வடிவம் (26)

மரகத வடிவம் (26)

இயற்கைப் பொருட்களின் தன்மையினை உணர்த்தும் பாங்கில் பசுமை நிறம் பயின்று வந்துள்ளதெனினும் 'பச்சை மால் மருக' என்பதில் குறிக்கப்படும் கார் வண்ணன் நீலநிறத்தவனாகக் கருதப்படுதலும் உண்டு. நீலநிறம் பற்றிய குறிப்பு இந்நூலில் எங்குமே பயின்று வராததால் பகழிக்கூத்தர் பச்சையினையும் நீலநிறத்தினையும் வேறுபாடு கருதாது பயன்படுத்தியுள்ளார் என்பது புலனாகின்றது.

பொன்மை

மஞ்சள் பற்றிய குறிப்பு இந்நூலில் சுட்டப்படாதது கொண்டு பொன்மையை இந்நிறத்தால் குறித்திருப்பர்களோ என எண்ணத்தூண்டுகின்றது. பொன்னிறத்தைப் பொன், கனகம், தமனியம், தங்கம் போன்ற சொற்களால் சுட்டியுள்ளார்

பொன்னிறம் பழங்காலத்தில் எகிப்து, இந்தியா மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் புனித நிறமாகக் கருதப்படுவதாகக் குறிப்பர். பொன்னிறத்தைக் குறிக்கும் சொற்களில் பொன் என்ற சொல் பதினொரு இடங்களிலும், கனகம் என்ற சொல் ஆறிடங்களிலும், தமனியம் என்ற சொல் இரண்டிடங்களிலும், தங்கம் என்ற சொல் ஓரிடத்திலும் பயின்று வந்துள்ளதனைக் காணமுடிகிறது. இந்நிறம் பெரும்பாலும் அணிகலன்கள், மாலை, உறுப்புகள் என்ற நிலையில் அடையாக அமைக்கப் பெற்றுள்ளது.

## முடிவுரை

திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழில் பயன்பட்டுள்ள நிறங்களாகச் செம்மை, கருமை, வெண்மை, பசுமை, பொன்மை ஆகிய நிறங்கள் தென்படுகின்றன. அவை பெரும்பாலும் பொருட்களின் பண்புணர்த்தும் பாங்கில் அடைகளாகப் பயின்றுவந்துள்ளன. மேலும், ஒவ்வொரு நிறத்தினையும் குறிக்கப் பல்வேறு சொற்கள் பயன்படுத்தியமை குறிப்பிடத் தக்கதாக அமைகின்றது.

# 23. முக்கூடற் பள்ளு

ஏ. என். பெருமாள்

ஓர் இலக்கியம் தோன்றிய காலத்தில் வாழும் மக்கள் நிறம் பற்றி என்ன கருத்துக்களைக் கொண்டிருப்பரோ அதனையே அவ்விலக்கியம் பெரும்பாலும் தன் நிறக்கொள்கையாகக் கொண்டு விளங்கும் என்று கருதலாம். எத்தகைய சூழ்நிலையை இலக்கியம் விளக்குகிறதோ அத்தகைய சூழ்நிலைக்குப் பொருந்தும் நிறங்களை இடத்துக்குத் தக்கவாறு குறிப்பிட்டுக் காட்டுவதைச் சிறப்பாகக் காணலாம் அறிவும் அனுபவமும் கூடக்கூட மனிதன் நிறங்களை நுட்பமாக வேறுபடுத்திக் காணும் திறம் பெறுகின்றான். சிறிதளவு வண்ண வேறுபாடு இருப்பினும் அதை நன்றாகத் தெரிந்து அதற்கு ஒரு தனிப்பெயரைக் கொடுத்துச் சுட்டும் வழக்கமும் ஏற்பட்டது வண்ணத்தையும் மன எண்ணத்தையும் பொருத்திக்காணும் நுண்ணறிவு மனிதனுக்கு இருந்தது. அதையும் இலக்கியத்தில் காணலாம்.

உழவர்களின் வாழ்வைக் காட்டும் பள்ளு இலக்கியம் அவர்களுடைய வாழ்க்கை, தொழில் ஆகியவற்றுடன் தொடர்புடைய நிறங்களை விளக்கிக்காட்டும் என்று கருதலாம். பயிர்த் தொழிலுடன் நெருங்கிய தொடர்புடைய வண்ணமாகப் பச்சை நிறத்தைக் கருதுவதே முறையாகும் .பயிர் நிலத்தைப் பாசவல் என்று கூறுவதை இவ்விடத்தில் பொருத்திச் சிந்திக்கலாம். பச்சை படர்ந்த பசுமையான நிலமே பாசவல். முக்கூடற் பள்ளில் மிகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிறம் கருமையாகும். பச்சை பற்றிய குறிப்பு ஆறு இடங்களில் மாத்திரம் வர கருமையைச் சுட்டும் இடங்கள் இரண்டாகப் பெருகியுள்ளது. அவற்றில் ஆறு இடங்கள் பாட்டுடைத் தெய்வமான திருமாலின் அழகை மேம்படச் சுட்டுகின்றன. இறையுணர்வு மிகுந்த பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய முக்கூடற்பள்ளு பாடுபொருளை விட போற்றப்பெறும் இறைவனை மிகுதியாகப் பாராட்டி அவனுக்குரிய கருமை நிறத்துக்கு மதிப்பும் பெருமையும் கொடுத்துள்ளதாகக் கருதலாம். நூலின் முதற்பாடலான காப்புச்செய்யுளில் 'நீலவெற்பு' என்ற நிறம் பயில் தொடர்

முதல்வரியில் இடம்பெறுகிறது. அது திருமாலுக்கு உவமையாக வந்துள்ள தொடர் என்பதை மனதில் கொண்டு சிந்திப்பதாயின் அக்கருத்து இன்னும் வலிமையடையலாம்.

திருமாலாகிய அழகரைக் கறுப்பழகர் (பா. 14), மைப்புயலே போலும் வடிவழகர் (பா. 76), கார்பூத்த வண்ணனார் (பா. 28) கறுநெடும் புயலழகர் (பா. 30), காரினுருவச் சுருதிக்காரணர் (பா 135), முகில் வண்ணன் (பா. 169) என்று கருவண்ணக் குறிப்புடன் முக்கூடற் பள்ளு சிறப்பித்துக் கூறுகிறது. கருப்பு வண்ணத்தின் உவமைச் சொற்களான மை, கார், முகில் ஆகிய சொற்களைக் கருப்பு வண்ணத்தைச் உவமைச் சுட்டுந்தரமாகப் பயன்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கருமையுடன் இணைத்துக் குறிப்பிடும் இதே கடவுள் 'நெடுநீலன்' (பா. 166) என்ற இந்த நூலில் அழைக்கப் படுவது நம்மைச் சிந்திக்கத்தூண்டுகிறது. இந்த இடத்தில் கருமையே நீலம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுவது தெளிவு. இதேபோன்று நீலவெற்பு (காப்புச்செய்யுள்) 'நீலக் கொண்டை' (பா. 10) என்று வரும் இடங்களில் நீலம் கருப்பு என்ற பொருளில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு கொண்டையின் நிறம் கருப்பு என்பதை நன்குணரும் ஆசிரியர் முன்பே ஓரிடத்தில் 'கருங்கொண்டை' (பா. 6) என்று குறிப்பிட்டுள்ளதை காணலாம். அவ்வாறாயின் நீலமும் கருப்பும் வேறுபாடு இல்லாத நிறங்களா என்றால் அவ்வாறில்லை. 'நீலவடக்கல்' (பா. 8) என்று கூறுவதில் இரு நிறங்களுக்கும் வேறுபாடு உண்டு என்பதைக் காட்டிவிடுகிறார் அவ்வாறாயின் கறுப்பழகரை ஏன் நெடுநீலன் என்று பள்ளு ஆசிரியர் அழைத்துள்ளார் என்பது சிந்தனைக்கு உரியதாகிவிடுகிறது.

சோதிட நூலார் கருமை நிறத்துக்கு அதிபதியான சனியை அன்றிலிருந்து இன்று வரை காரி என்றும் நீலன் என்றும் அழைத்து வருவதை மரபுமுறையாகக் கொண்டுள்ளனர். பாடல்களிலும் சனி இவ்விரு வண்ணப் பெயர்களாலும் சுட்டப்படுகிறான். மேகத்தை 'நீலமேகம்' என்று கூறும் வழக்கமும் உள்ளது. திருமாலை 'நீல மேகவண்ணன்' என்று குறிப்பிடுவர். சிறிதே வேறுபாடுடைய இருநிறங்களையும் இரண்டு சொற்களாலும் அழைத்திருக்கலாம் என்று கொள்வதாயின் கறுப்பை' நீலம் என்று குறிப்பிடுவது போன்று நீலத்தைக் கறுப்பு என்று கூறுவதைக் காண முடியவில்லை. முதன் முதலில் கறுப்பு

வண்ணத்தை நன்றாக உணர்ந்த மனிதன் பின்னர் அதிலிருந்து நீலத்தைப் பிரித்து அறிந்திருக்கிறான் என்று கருதலாம். ஆகை யினால் கறுப்பை நீலம் என்று கூறும் வழக்கம் இருக்க நீலத்தைக் கருப்பு என்று அழைக்கும் பழக்கம் இல்லை.

'கறுக்குங் கடாய்' (பா. 10) என்ற தொடரிலுள்ள கறுப்பு என்ற நிறச்சொல்லில் கோபம் என்ற உணர்ச்சிக் குறிப்பு காட்டப்படுகிறது. இதே போன்று 'கசையா லடிப்ப லென்று 'கண்சிவந்து கூறினனே' (பா. 61) என்ற பாடலடியில் சிவப்பு வண்ணச் சொல்மூலம் வெகுளிச்சுவை விளக்கப்படுகிறது. இன்னொருஇடத்தில் கோபத்தால்கண் சிவந்துபண்ணைக்காரன் (பா. 93) நிற்பது காட்டப்படுகிறது. இவற்றை நோக்கினால் கறுப்பு சிவப்பு ஆகிய இரண்டு வண்ணங்களும் கோபக் குறிப்பைக் காட்டும் தன்மையுடையன என்பதை அறியலாம். இத்தகைய பயன்பாடு கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள், என்று கூறப்படும் இலக்கண விதிக்கு ஒத்ததாகவே உள்ளது. மேனாட்டு மொழி மரபிலும் இத்தகைய வழக்கு இருப்பதை அறியலாம்.

கருமையான ஒரு மீனைக் கருங்கண்ணி (பா. 50) என்று இப்பள்ளு பெயர் சொல்லி அழைக்கிறது கருங்கண்ணி என்ற தொடருக்குரிய சொற்பொருளை நோக்கின் அது கருமையான கண்ணையுடைய பெண்ணையோ அல்லது கரு மணிகளால் கோர்க்கப்பட்ட ஒரு மாலையையோ குறித்திருக்க வேண்டும். ஆனால் இங்கே அது காரண இடுகுறிப்பெயராய் ஒரு மீனைக் குறிப்பிடுகிறது. அதுபோன்று கருமை நிறமுடைய மாட்டில் வெள்ளை படர்ந்து காணப்படுமாயின் அதனைக் கருமறையன் (பா. 109) என்றும், முழு நிலையாகக் கருப்பாய் இருந்தால் கருப்பன் (பா. 109) என்றும், கருப்புடன் போர் நிறம் கலப்ப தாயின் கரும்போரன் (10. 109) என்றும் காரண இடுகுறியாய் அழைக்கப்படுவதை இப்பள்ளின் வாயிலாக அறியலாம். கருமை நிறமுடைய நெல் வகைகளைக் கருஞ்சூரை (பா. 108.) கருங்குறுவை (பா. 108) என்று காரண இடுகுறியாய்ப் பெயரிட்டுள்ளனர்.

கருமை வண்ணம் கருதி இரும்பைக் 'கரும்பொன்' (பா. 6) என்று கூறும் வழக்கமுள்ளது. அதுபோன்று செம்பு 'செம்பொன்' (பா. 6, 10, 50) என்று அழைக்கப்படுவதையும் காணலாம்: வெள்ளியை 'வெண்பொன்' என்று கூறுவதுண்டு. (இந்தப் பள்ளில்

இந்தத் தொடர் வரவில்லை.) இவற்றை ஒப்புநோக்கின் 'பொன்' என்பது இத்தகைய தாதுக்களின் பொதுப் பெயராகவே வருகின்றது. நிறத்தைக் கொண்டே அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து அறிய வேண்டியதாகிறது. இதன்மூலம் நிறவுணர்வின் சிறப்புந் தன்மையையும் பயன்பாட்டு முறைமையினையும் ஓரளவு காணலாம்.

'கார்' என்ற சொல் மேகம் என்ற பொருளைக் குறிப்பிட்டு அதற்குரிய கருமை நிறத்துக்கு ஆகி வந்துள்ளது. இதைப் பயன்படுத்தி முக்கூடற்பள்ளு ஆசிரியரான என்னயனா பிள்ளை 'கார் வரைக்கு முழுவடம் ஒன்றே' (பா. 74) என்ற அழகான தொடரைச் சிலேடையாக அமைத்து இலக்கியச் சுவை பெருக்க முயல்கிறார். 'கார்வரை' என்பது கரிய மலை என்றும் கார்காலம் வரையிலும் என்றும் இரு பொருள்களைத் தருவதைக் காணலாம்

கருத்தமுண்டன் (பா. 114), கருமறத்தியர் (பா. 42), கறுப்பீ (பா 133), கருமந்தி (பா. 150), ஆகிய தொடர்களில் கருமை நிறம் அடையாளம் சுட்டும் தரமாக வந்துள்ளதைக் காணலாம். ஆனால் 'காரிபிரான்' (பா. 31) என்ற சொல்லானது நிறத்தைக் குறிப்பிடாது நம்மாழ்வாரின் பெயராக வருகிறது 'காரி' குறிப்பிடும் கருமை நிறத்துக்கும் இந்தப் பெயருக்கும். எந்தவிதமான தொடர்பும் இருப்பதாகக் கூறமுடியாது. இதே போன்று மூத்த பள்ளியின் அண்ணன் பெயராகிய 'செங்கான்' (பா. 96) என்பதும் ஒரு ஊரின் பெயராகிய 'வெள்ளூர்' (பா. 131) என்பதும் நிறக் காரணமின்றி இடுகுறியாக வந்தவை.

உடலில் சிவந்த நிறத்துணுக்குள் படரப்பெற்ற காளையைச் செம்மறையன் (பா. 106) என்றும் ஒருவகை மழுகலான புல்லை நிறமுள்ள காளையை மடப்புல்லை (பா. 109) என்றும் கருமையில் வெள்ளை படர்ந்திருப்பதை மயிலை (பா. 109) என்றும் அழைப்பதைக் காரண இடுகுறியாகக் கருதலாம். இவை அனைத்தும் கலப்புநிறப் பெயர்களாம்.

மருதநிலத்தைச் சேர்ந்த செம்மை நிறப்பொருள்கள் பல பண்படையுடன் குறிக்கப் பெற்றுள்ளன. செந்நெல் (பா. 26, 139) செங்கரும்பு (பா. 26), செங்கடாய் (பா. 32), செஞ்சேவல் (பா. 33), செம்பருந்து (பா. 27), செந்தாழை (பா. 143), செங்கலம் (பா. 175) போன்றவை அவற்றுள் சிலவாகும். சிவப்புக் குழம்பு பூசிய பாதத்தைச் செஞ்சரணம் (பா. 8) என்றும், சிவக்குங்

கண்ணைச் செங்கண் (பா. 37) என்று கூறுவது முறையே அவற்றின் செயற்கையும் இயற்கையுமான தன்மைகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. செம்மையானது சிவப்பு வண்ணத்தைக் குறிப்ப தாகும். அச்சொல்லின் அடிப்படையில் 'செங்கோல்' (பா. 14) உருவாகியுள்ளது. இந்த இடத்தில் செம்மையானது சிறப்பு, சீர்மை, அறத்தன்மை ஆகிய அரிய பொருள்களைப் பெற்றுச் சிறந்துள்ளதை அறியலாம்.

வெண்மை நிறத்தைக் குறிக்க இச்சொல்லைத் தவிர நரை, வெளிறல் ஆகிய இரு சொற்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. வெள்ளைக்காளை (பா. 109) என்று குறிப்பிடப்பெறுவதிலுள்ள வெண்மை நிறத்தை 'நரைத்தலை மோழை' (பா. 86) என்பதிலுள்ள நரையில் காண முடியாது. 'வெளிறுகின்றது வானம்' (பா. 38) என்பதில் வானம் தூய வெள்ளை நிறத்துடன் விளங்கியது என்று கூற முடியாது. அனைத்தும் வெண்மை நிறத்தில் அடங்கினாலும் அதில் தோன்றும் சிறிதளவு மாற்றத்தை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே நரை, வெளிறல் போன்ற சொற்களைப் பயன்படுத்துகின்றனர் என்று கருதலாம். பெருவெள்ளை (பா 69), வெள்ளை (பா. 108), முத்துவெள்ளை (பா. 145) ஆகிய அனைத்தும் வெண்மையான நெல்லைக் குறிப்பதாயினும் ஒவ்வொன்றும் வேறுபாடுடையன என்பதைக் காட்டவே இவ்வாறு சிறிது பெயர்மாற்றம் கொடுக்கப் பட்டுள்ளது.

வெண்குதிரை (பா. 82), வெண்ணீறு (பா. 8), வெண்கலைத் திங்கள் (பா. 21), வெண்டயிர்க் கண்டம் (பா. 22), ஆகியவற்றில் வெண்மை பண்புத் தொகையாக வந்து வண்ணத்தைக் குறிப்பிடுவது போன்று 'வெண்ணெய்' (பா. 44) என்பதிலுள்ள வெண்மைக் குறிப்பு நிறப்பொருளை விளக்குவதாகக் கூற முடியாது. வெண்மையை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொருளுக்குப் பெயர் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம் இந்த பெயராக்கத்துக்கு நிறம் காரணமாக அமைந்துள்ளது உண்மை இந்த வெண்ணெய் என்ற சொல்லிலிருந்து வெண்ணெய் உண்ட கண்ணனுக்கு வெண்ணெயார் (பா. 55) என்ற பெயரைப் பள்ளு ஆசிரியர் சூட்டியுள்ளார். இத்தகைய பெயர் புனைவுகளுக்கு நிறம் அடிப்படையாக அமைவதைச் சிறப்பித்துக் கூறலாம்.

பயிர் பச்சைகளைச் சிறப்பிக்க வேண்டிய பள்ளில் பச்சை வண்ணம் சிறிதளவு இடம் பெற்றாலும் சிந்திக்க வேண்டிய தகுதியில் கையாளப்பட்டுள்ளது. 'மஞ்சளும் பூம்பச்சையும்

மணக்க' (பா. 8) என்று கூறும் இடத்தில் மஞ்சள் ஒரு செடிக்குரிய பெயராக வந்துள்ளது. பச்சையானது நிறத்தைக் குறிப்பிட்டு ஆகுபெயராக ஒரு பச்சை நிறச் செடியைச் சுட்டுகிறது. இன்னொரு இடத்தில் 'பச்சை இஞ்சியின் பாசடை' (பா. 26) என்ற தொடர் சிந்தனைக்கு உரியதாக வந்துள்ளது. பாசிலை (பச்சை இலை), பாசடம் (பச்சை நிறமுடைய வெற்றிலை), பாசவல் (பச்சைப் பயிர் நிறைந்த நிலம்) என்பன போல் பாசடை என்பது பச்சை நிற இலையைக் குறிப்பிடுகிறது. ஆனால் 'பச்சை இஞ்சி' என்ற தொடரிலுள்ள பச்சை நிறத்தைச் சுட்டுகிறதா என்பதைச் சிந்திக்கவேண்டியதாக உள்ளது. உலராத பொருளைப் 'பச்சை' என்று சொல்வது நாட்டு வழக்கு. இங்கு அத்தகைய வழக்கைப் பின்பற்றி காயாதிருக்கும் இஞ்சிக் கிழங்கைப் பச்சை இஞ்சி என்று சொல்லியிருப்பதாக நினைப்பதே இந்த இடத்தில் பொருத்தமாகப் படுகிறது. பின்னர் ஓர் இடத்தில் பச்சை (பா. 146) என்று ஒரு நெல்வகையினை ஆசிரியர்குறிப்பிடுகிறார். உறுதியாக இது நிறம் பற்றி சூட்டிய பெயராக இருக்கவே முடியாது. எங்கும் பச்சை நிற அரிசி இருப்பதில்லை. அவ்வாறாயின் இப்பெயர் இடுகுறியாகத்தான் இருக்குமோ என்ற ஐயம் எழுகிறது.

பசுமை என்பது பச்சை நிறத்தைக் குறிப்பிடக்கூடியது. அதன் அடிப்படையில் 'பைங்கிளி' (பா. 20) என்ற தொடர் கையாளப் பட்டுள்ளது இன்னும் 'பசத்தல்' என்பது பச்சையைக் குறிப்பிடுவதாக இந்தப் பள்ளின் மூலம் அறிய முடிகிறது. பச்சை வண்ணத்துடன் வளரும் பயிரைப் பற்றிக் கூறும்போது 'நடவு தேறிப் பசப்பு மேறி' (பா. 136), என்றும் 'பசந்து குருத்து மேன் மேற்பரந்தும்' (பா. 136) என்றும் விளக்கப்பட்டுள்ளது. பொது வாகப் 'பசத்தல்' என்பது அழகுத் தேமல் படர்ந்து உடம்பு நிறம் மாறி பொன்னிறம் பெறுதல் என்பதாகும். ஆனால் பள்ளு ஆசிரியர் 'பசப்பு' என்பதைப் பச்சை என்ற பொருளில் மிகத் தெளிவாகப் பயன்படுத்தியுள்ளார்.

மஞ்சள் என்பது செடியைக் குறிக்கும் பெயராகவே முதலில் வந்துள்ளது (பா. 8). அந்த நிறம் 'பொன்' என்ற சொல்லால் குறிக்கப் பட்டிருப்பதை நான்கு பாடல்களில் காணலாம் (காப்பு, பா. 19, 20, 164). காபபுச் செய்யுள் 'பொன்னிறம்' என்று தெளிவுபடக் கூறுகிறது. இரண்டு பாடல் களில் பொன்னெயில் (பா. 19), பொன்னரங்கு (பா. 2) என உவமைப் பொருளாக வருகிறது.

இறுதிப் பகுதியில் ஓரிடத்தில் 'பொன்னின் மயமாம் பனிமலையேறி' (பா. 164) என்று கூறப்படுகிறது. இதற்கு உரை எழுதுவோர் 'பொன் வண்ணமான பனிமலையில் ஏறி' என்று விளக்கியுள்ளனர். இந்த உரை சிந்திக்க வேண்டிய இடமாகக் காணப்படுகிறது. 'மயம்' என்ற சொல்லுக்கு நிறைவு, தன்மை, அழகு, மகிழ்ச்சி ஆகிய பொருள்கள் இருப்பதாக அறியலாம். ஆனால் நிறத்தைச் சுட்டும் பொருள் இருப்பதாகத் தோன்ற வில்லை பொன் போன்ற அழகு அல்லது சிறப்புடைய 'பனிவரை' என்று கொள்வதே பொருத்தமாக அமைகிறது. பனிவரையானது பொன்னின் நிறத்தில் இருந்தது என்று கூறுவதே முரண்பாடாகத் தோன்றும். பொன்னின் நிறம் மஞ்சள், பனியின் நிறம் வெள்ளை 'இரண்டும் ஒன்றிலிருக்க இயலாது. ஆகையினால் இந்த இடத்தில் பொன்' என்பது நிறத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை என்று கருதலாம்.

'அவள் மஞ்சள் மேனி' (பா. 87) என்று வரும் இடத்தில் 'மஞ்சள்' என்ற சொல் மிகத் தெளிவாக நிறத்தைக் குறிப் பிடுவதைக் காணலாம். முந்திய இலக்கியங்கள் பலவற்றில் இந்நிறம் 'பொன்' என்றே குறிக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போன்றவற்றில் 'மஞ்சள்' என்பது செடியையும் அதன் கிழங்கையும் குறிப்பிடுவதைக் காணலாம். முதன்முதலில் 'பொன் போன்ற நிறம்' என்று உவமையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. பின்னர் அவ்வாறே மஞ்சளும் உவமைப் பொருளில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கால ஓட்டத்தில் 'பொன்' சிறப்பிழந்து 'மஞ்சள்' சிறப்படைந்திருக்க வேண்டும். ஆகையினால் அந்த நிறம் இன்றைய வழக்கில் 'மஞ்சள்' என்றே அழைக்கப்படுகிறது. வெண்ணெய், கரி போன்றவை நிறத்தைக் கொண்டு அமைந்த பெயர்கள் இதற்கு மாறாக மஞ்சள் என்ற நிறப் பெயர் பொருளைக் கொண்டு அமைந்தது எனக் கருத இடமுள்ளது.

'மஞ்சள் வாலன்' (பா. 109) என்று ஒருவகைக் காளை பெயர் பெறுகிறது. அதன் வால் மஞ்சள் நிறமாக இருக்கும் என்று கருதமுடியாது. அத்தகைய நிறம் மாட்டுக்கு அமைவதை இயற்கையாகக் காணமுடியவில்லை ஆகையினால் இப்பெயரைக் காரண இடுகுறியாகக் கருத இடமில்லை. பொதுவாக மீன் நெல் மாடு ஆகியவற்றின் வகைகளைக் குறிப்பிடும் பெயர்களில் வரும் நிறக்குறிப்புகள் அந்தந்த நிறங்கள் இருப்பதைக் கொண்டே

வருகின்றன. ஆகையினால் அவை காரண இடுகுறியாகி விடுகின்றன. ஆனால் 'மஞ்சள் வாலன்' ஐயத்துக்கு இடம் தரும் பெயராகத் தோன்றுகிறது.

ஒருவகை மாட்டைப் பள்ளு ஆசிரியர் 'பூநிறத்தான்' என்று கூறுகிறார். பூ பல நிறங்களையுடையதாக இருக்கிறது. அவற்றுள் இந்த மாட்டின் நிறம் என்ன என்பது தெளிவாக அறிய முடியவில்லை. காப்புச் செய்யுளின் தொடக்கமே 'பூமேவும்' என்று உள்ளது. இதில் 'செந்தாமரை மலரையே' பூ என்று ஆசிரியர் குறிப்பிடுவதைத் தெளிவாக அறியமுடிகிறது. ஆகையினால் 'பூ நிறம்' என்பது செந்தாமரையின் நிறமாக இருக்கலாமோ என்ற ஐயமும் தோன்றுகிறது. 'பூநிறம்' என்பது மேலும் சிந்திப்பதற்கு உரியதாகவே அமைகிறது.

ஐந்து நிறங்கள் இணைந்திருப்பதைப் 'பஞ்சவர்ணம்' என்று கூறுவது வழக்கம். ஒருவகையான கிளிக்கு இயற்கையாக இருக்கக் கூடிய ஐந்து வண்ணங்களைக் கொண்டு இந்தச் சொல் வழக்கு ஏற்பட்டிருக்கலாம். முக்கூடற்பள்ளில் ஒருவகைப் பட்டைக் குறிப்பிடும்போது 'பஞ்சவண்ணத்தழகு' (பா 8) என்று கூறப்படுகிறது. அந்தப் பட்டில் ஐந்து நிறங்கள் இருந்திருக்க வேண்டும்.

முக்கூடற்பள்ளில் வண்ணம், நிறம் ஆகிய இரு சொற்களாலும் நிறம் குறிப்பிடப்படுகிறது. 'சுந்திரிமையீட்ட வண்ணக் கன்னப் பரிசும்' (பா. 10) என்று வரும் இடத்தில் 'வண்ணம்' என்பது 'அழகு' என்ற பொருளில் வருவது குறிப்பிடத்தக்கது. திருமாலை 'காரினுரு வச்சுருதிக் காரணம்' (பா. 135) என்று கூறும்இடத்தில் 'உருவம்' என்ற சொல் நிறத்தைச் சுட்டும் பொருளில் வருவதைக் கண்டு அறியலாம்.

பள்ளிலக்கிய மரபைக் காத்து எழுதப்பெற்ற முக்கூடற்பள்ளு மிகுதியும் முன்னெழுந்த இலக்கியங்களைப் பின்பற்றியே நிறக் குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளது. அவற்றைச் சிலவற்றைச் சிறப்பு கருதிக் குறிப்பிடலாம்.

(1) நீலம், கறுப்பு ஆகியவை வேறுபாடின்றி ஒன்றிரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. முன்பு அவற்றை மக்கள் தெளிவாகப் பிரித்தரியாது இருந்திருக்கலாம் என்பதை நினைவூட்டுவது போன்று இக்குறிப்பு வந்துள்ளது.

(2) மஞ்சள் என்ற சொல் நிறத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு இந்த நூலில் இடம்பெறுகிறது.

(3) மாடு நெல், மீன் ஆகியவற்றின் வகைகளைப் பிரித்துக் காட்டுவதற்கு நிறங்கள் மிகுதியாகப் பயன்பட்டுள்ளன.

(4) மக்களை அடையாளங் காட்டிக் குறிப்பிடுவதற்கும் பெயர் வைப்பதற்கும் நிறங்கள் உதவியுள்ளன.

(5) கருமறை, செம்மறை, மடப்புல்லை, கரும்போர் வெள்ளமயிலை கருமயிலை போன்ற கலப்பு நிறங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(6) பொன், மஞ்சள், மை, கார், புபல், பூ முதலியவை உவமை காரணமாக நிறங்களைக் குறிக்கும் பெயராகி வந்துள்ளதை அறியமுடிகிறது.

(7) வண்ணத்துக்கு நிறம், அழகு ஆகிய அணுக்கத் தொடர்புகொண்ட பொருள்கள் உள்ளன. அதில் எது முன்னதாக இருந்திருக்கும் என்பதைக் கண்டால் சில மங்கிய கருத்துக்கள் துலங்க ஏதுவாகலாம்.

(8) நிறச் சொற்களை வைத்து பண்புப் பெயர், பண்புத் தொகை, உவமைத் தொகை, அன்மொழித் தொகை, ஆகுபெயர், பெயரெச்சம், வினையெச்சம், வினைச் சொல் போன்ற இலக்கண வகைச் சொல்லாக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது மொழி வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

(9) நிறக் குறிப்பால் உள்ளத்து உணர்ச்சிகள் சுட்டிக் காட்டப்படுகின்றது.

(10) ஒரே நிறத்தின் சிறு சிறு வேறுபாட்டைக் காட்ட வேறு வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு

முக்கூடற்பள்ளில் நிறக் குறிப்புகள்

1. பூ மேவு நீலவெற்பிற் பொன்னிறமு முண்டெனப்பூ
மாமேவு முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே (காப்பு).

2. நெகிழ்ந்த கருங்கொண்டையும் (பா. 6).
3. பற்றிய கரும்பொற் காப்பும் (பா. 6).
4. வெற்றிவிழிக் கெதிர் கொண்டிரு கோடுற்ற கருப்பின்னு மெதிர்ந்தால் (பா. 6).
5. செம்பொனிடைக்கிடை (பா. 6).
6. செஞ்சரணப் படம் (பா. 8).
7. மஞ்சளும்பூம் பச்சையும் மணக்க (பா. 8).
8. வெண்ணீற்றுக் குறி (பா. 8).
9. நீலவடக்கல் (பா. 8).
10. பஞ்சவணத் தழகும் (பா. 8).
11. செம்பொற் கோலப் புள்ளி யுருமாலும் (பா. 10).
12. நீலக் கொண்டையும் (பா. 10).
13. கறுக்குங் கடாய் (பா. 10).
14. மஞ்சிற் கறுப்பழகர் (பா. 14).
15. பொன்னெயில் (பா. 19).
16. பொன்னரங்கு (பா. 20).
17. பைங்கிளி (பா. 20).
18. வெண்கலைத் திங்கள் (பா. .21)
19. வெண்தயிர்க் கண்டம் (பா. 22).
20. காய்குலை செந்நெல் (பா. 22)
21. பச்சை இஞ்சின் பாசடை (பா. 25).
22. காய் கதிர் செந்நெல் (பா. 26).
23. அச்செந்நெலும் (பா. 26).
24. செங்கரும்பு (பா 26).
25. கார்பூத்த வண்ணனார் கண்ணனார் (பா. 28).
26. கருநெடும் புயலழகர் (பா. 30).
27. கங்கணங் கட்டியே எழுசெங் கடாயும் (பா. 32).
28. பூந்தலைச் செஞ்சேவல் (பா. 33).
29. செங்கண் மால் (பா. 37).
30. மாவிற் கறுத்துப் பொழிந்தபின் (பா. 38).

31. வெளிறு கின்றது வானமே (பா. 38).
32. கருமறத்தியர் (பா. 42).
33. வெண்ணெயும் (பா. 44).
34. வெண்சங்கம் (பா. 49)
35. செங்கை (பா. 49).
36. செம்பொன் (பா. 50).
37 கருங்கண்ணி (பா. 50) ஒருவகை மீன்.
38. நீறுபோல் வெளுந்த வூளை (பா. 53).
39. வெண்ணெயார் வாயினிசை (பா. 55).
40. கசையாலடிப்ப னென்று கண்சிவந்து கூறினனே (பா. 61
41. பெருவெள்ளை (பா. 69) ஒருவகை நெல்.
42. நீலப் புயலூன்றி (பா. 69) ஒருவகை நெல்.
43. செம்பருந்து (பா. 72).
44. கார் வரைக்கு முழுவடம் ஒன்றே (பா. 74).
45. மைப்புயலே போலும் வடிவழகர் (பா. 76).
46. வெண்குதிரை (பா. 82).
47. நரைத்தலை மோழை (பா. 86).
48. அவள் மஞ்சள் மேனி (பா. 87).
49. சாரல் கறுக்கும் (பா. 92).
50. கண்சிவந்து பண்ணைக்காரன் (பா. 93).
51. செஞ்சம்பா (பா. 108)–ஒருவகை நெல்.
52. கருஞ்சூரை (பா. 108) ,,
53. வெள்ளை (பா. 108) ,,
54. கருங்குறுவை (பா. 108). ,,
55. செம்மறையன் (பா. 109) மாட்டுவகை.
56. கரும்போரன் (பா. 109) ,,
57. மயிலை (பா. 109) ,,
58. கருப்பன் (பா.109) ,,
59. மஞ்சள்வாலன் (பா. 109) ,,
60. கருமறையன் (பா. 109) ,,

61. மடப்புல்லை (பா. 109) மாட்டு வகை
62. பூநிறத்தன் (பா. 109) ,,
63. வெள்ளைக் காளை (பா.1 09) ,,
64. கருத்த முண்டன் (பா. 114).
65. புல்லைக்காளை (பா 115)
66. செங்கைநீட்டி (பா 130).
67. வெள்ளானைக்கிறை (பா. 131).
68. கறுப்பி (பா. 133).
69. காரினுரு வச்சுருதிக் காரணர் (பா. 136).
70. நடவு தேறிப் பசப்பு மேறி (பா. 136).
71. பசந்து குருத்து மேன்மேற் பரந்து (பா. 136).
72. செந்நெல் வாரிக் குவிப்பார் (பா. 139).
73. செந்தாழை நெல் (பா. 143).
74. பெருவெள்ளை நெல் (பா. 144).
75. முத்து வெள்ளை நெல் (பா. 145).
76. பச்சை (பா. 146) ஒரு வகை நெல்.
77. கருமந்தி (பா. 150).
78. பொன்னின் மயமாம் பனிமலை யேறி (பா. 164).
79. நெடுநீலன் (பா. 166) திருமால்.
80. முகில்வண்ணன் (பா. 169). ,,
81. செங்கமலம் மேவுமனை வாழி (பா. 175).

நிறக் குறிப்புடைய பெயர்கள்

1. செங்கோல் வடமலேந்திரன் (பா.14).
2. மஞ்சள் (பா. 26)-செடியைக் குறிப்பிடுவது.
3. காரி பிரான் (பா. 31)—நம்மாழ்வாரின் தந்தை பெயர்.
4. செங்கான் (பா.96) மூத்த பள்ளியின் அண்ணன் பெயர்.
5. வெள்ளூர் (பா. 131)-ஓர் ஊரின் பெயர்.

வண்ணம் அழகு என்ற பொருளில் வருமிடம்

1. கத்திரிகை யிட்ட வண்ணக் கன்னம் (பா. 10).

# 24. மனோன்மணீயம்

ஏ. என். பெருமாள்

வண்ணங்கள் பலவகையாகவும் மனித மனத்தைக் கவரும் தன்மையுடையனவாகவும் உள்ளன. படைப்பாசிரியர்கள் வண்ணங்கள் வாயிலாகத் தாங்கள் எடுத்துக் கொண்ட பொருட்களை விளக்கியும் வேறுபடுத்தியும் காட்டியுள்ளனர். நாடக ஆசிரியர்கள் எவ்வாறு வண்ணங்களைத் தங்கள் படைப்புக்களில் கலந்து இலக்கியச் சுவையினைப் பெருக்கியுள்ளனர் என்பதனை அறிய மனோன்மணீயம் நாடகத்தை எடுத்து ஆராய முயலலாம்.

இந்த நாடகத்தில் வெண்மை, செம்மை, கருமை ஆகிய மூன்று வண்ணங்களும் முறையே 9, 15, 12 ஆகிய இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. மஞ்சள் வண்ணக் குறிப்பு நான்கு இடங்களிலும்; பஞ்சவனக்கிளி, பன்னிறக் கதிர்கள், பன்னிறச் சிறகர் என மூன்று இடங்களில் கூட்டு வண்ணக் குறிப்புகளும் இடம் பெறுவதைக்காணலாம். இவ்வாறு மனோன்மணீயத்தில் 43 இடங்களில் வரும் வண்ணக் குறிப்புகள் எவ்வாறு நாடகப் பொருள் சிறக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதைக் காண முயலலாம்.

முதன் முதலாகப் பாயிரத்தில் 'இந் நாடகம் வெள்ளிய தெனினும்' என்று கூறி அதில் வரும் வெண்மை வண்ணக் குறிப்பால் அவையடக்கம் காண ஆசிரியர் விரும்புகிறார். 'வெள்ளைக் கவி' என்பதற்குச் 'சிறப்பற்ற' என்ற பொருள் இருப்பதனால் இது அவையடக்கத்துக்கு உதவுகிறது. பொதுவாக 'வெள்ளை' என்பது சிறப்பான பொருளில் வருவதைக் காணலாம். தூய அமைப்புடைய பாவை 'வெண்பா' என்று கூறுகின்றனர். குறிப்பிட்ட அமைப்புக்கு அடங்காத தொடைக் கலப்புடையவற்றைச் 'செந்தொடை' என்றும் இசையுடன் கலந்த நாடகப் பாடல்களை 'வெண்செந்துறை' என்றும் கூறுவதை இங்கு நினைக்கலாம். இவ்வாறு வண்ணத்துக்கும் கவிகளின் தன்மைக்கும் இணைப்பு கற்பிக்கும் போக்கு சிந்தனைக்கு உரியது.

நேரடியாகக் குறிப்பிட்ட ஒரு நிறத்தைக் குறிப்பிடும் முறையாகவே பல இடங்களில் வண்ணங்களின் பெயர்களை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். வெண்முத்தம் (2, 1, 88), செந்தாமரை (1, 2, 11) கருமுகில் (3, 2, 114) என்பன அவற்றுள் சில. வெண்மைக்கும் விளர் நிறத்துக்கும் சிறிது வேறுபாடு கற்பிப்பது உண்டு. ஆனால் மனோன்மணீயத்தில் அந்தியில் அலரும் மலர் விளர்நிறம் உடையதென்றும் (3, 4, 180), நிசியலர் மலர் வெண்மையானதென்றும் (3, 4, 185) ஒரே பொருளில் கூறப்பெற்றுள்ளதைக் காணலாம்.

பல நிறங்களை இணைத்துக் கூறும்போது ஒரு வேறுபாடு அறிய இடமுள்ளது. 'சூரியன் பன்னிறக் கதிர்கள்' (2, 2, 7) என்று சொல்லும் இடத்தில் கண்ணுக்குத் தோன்றாவிடினும் கதிரில் அடங்கிய நிறங்கள் பல என்பதை உணர்த்த ஆசிரியர் முயல்கின்றார். 'பன்னிறச் சிறகர்ப் பறவைத் தொழுதி' (11, 2, 22) என்று கூறும்போது 'புறத்தில் தோன்றும் பல வண்ணங்களைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். 'பஞ்சவனக் கிளி' (1, 4, 12) என்பதும் இவ்வாறு இருக்கும் ஐந்து வண்ணங்களைக் கூறுவதேயாகும்.

வண்ணங்களுக்கும் சில பண்புகளுக்கும் தொடர்பு கண்டு அதற்குத் தக்கவாறு வண்ணப் பெயர்கள் பயன்படுத்தப் பெற்றிருப்பதையும் காண முடிகிறது. செம்மை அல்லது சிவப்புக்கு நேர்மை, பெருமை, செப்பம், செவ்வை ஆகிய பொருள்கள் உள்ளன. அவற்றின் அடிப்படையில் செஞ்சொல் (1, 4, 12), செந்நெல் (11, 1, 136), செந்தமிழ் (1, 1, 76) செங்கோல் (11, 3, 129) ஆகியவை அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

செந்தழல் (4, 1, 136) செந்தீ (4, 2, 125) ஆகிய இரண்டு தொடர்களும் நமது சிந்தனைக்கு வேலை கொடுப்பனவாக உள்ளன. கனன்று எரிவதைச் 'செந்தழல்' என்றும், கொழுந்து விட்டெரிவதைச் 'செந்தீ' என்றும் சிறிது வேறுபடுத்தலாம். மேலும், 'செந்தழல்' என்பது கேட்டை என்ற வான்கோள் ஒன்றினைக் குறிப்பது. நாட்டுப் பற்றால் மனித மனத்தில் எழும் சினத்துக்குக் கனன்று எரியும் 'செந்தழலைப்' பொருத்திக் கூறியது சிறப்பாகவே அமைந்துள்ளது. சிவப்பு வண்ணம் கோபத்தைக் குறிப்பிடுவதாகும் ஆகையினால்,

'அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ'

(4, 1, 136-137)

என்று கூறுவது பொருட் சிறப்புக்கும், நாடக வேகத்துக்கும் பொருத்தமாக அமைந்திருப்பதை அறியலாம். இதே பொருளில் 'கண்சிவக்கும் பார்த்திபனே' (1, 3, வெண்பா) என்று வருவதையும் காணலாம்.

சிவப்பு வண்ணம் 'மையலுற்று நாணுதலின்' அறிகுறி என்பதனை இரண்டு இடங்களில் நாடக ஆசிரியர் காட்டி விளக்குகிறார்.

'திங்கள் கண்டு பொங்கிய கடலெனச்
செம்புனல் பரக்கச் செந்தா மரைபோற்
சிவந்தவன் கபோலம் நுவன்று நின்மனக்
கனவெல்லாம் வெளியாக் கக்கிய பின்னர்'

(1,2,10-13)

என்றும்,

.........செக்கர்போற் கன்னம்
நாணேடு சிவக்க... ... ... ... ...(2,3,31-32)

என்றும் கூறும் இடங்களைக் கண்டு நாணத்துக்கும் சிவப்புக்கும் உள்ள உறவை உணரலாம்.

குறிப்பிட்ட வண்ணத்துக்கு அல்லது அவ்வண்ணத்தை உடைய பொருளுக்குக் குறிப்பிட்ட சிறப்பு இருப்பதை மரபு வழியாக அறியலாம். மஞ்சள் மங்கலத்தையும், கரி அல்லது கருமை அமங்கலத்தையும் குறிப்பனவாகும். இதனை மனதிற் கொண்டு நாடகத்தில் இடம்பெறும்

'மணமொழி பிணமொழி யானது, குடிலன்
கைதொடின் மஞ்சளும் கரியா கும்மே' (3 2,130-131)

என்ற வரிகளைச் சிந்திக்கலாம். மணமொழிக்கு மஞ்சளும் பிணமொழிக்குக் கரியும் நிரல்நிறையாக இடம் பெற்றுப் பொருந்துவதைக் காணலாம் 'கரி' என்ற சொல் கருமைக்கு ஆகி பின்னர் குறையுடையோரைக் குறிப்பிடுவதும் உண்டு. மூக்கிற் கரிய ருளரென' (2 1, 268) என்ற இடத்தில் வரும் 'கரியர்' குற்றமுடையவர் எனப் பொருள்படுவதைக் காணலாம்.

'காரா' என்ற சொல் கருமை நிறத்தின் காரணமாக எருமைக்கு வந்திருக்கலாம் என்பதை உயத்து உணரும் தரமாக 'போர்மிசைக் காரா காரெனப் பொலிய' 2 1, 137) என்று கருமை வண்ணத்துக்குச் சிறப்பு கொடுத்துக் கூறியிருப்பதைப் பார்க்கலாம்.

நெடுங்கால வழக்கத்தின் பயனாகச் சில சொற்கள் குறிப்பிட்ட வண்ணங்களுக்கு உவமையாகிப் பின் அவ்வண்ணத்தையே குறிக்கும் அளவுக்குப் பழக்கத்திற்கு வந்துவிடுகின்றன. வெண்மையான நிலா என்று கூறப் 'பால் நிலா' (1, 3, 59) என்றும் கருமையான முகில் என்பதை 'மை முகில்' (3, 2, 120) என்றும் சொல்வது இதனை விளக்கும். சில இடங்களில் உவமை உருபுகள் வருவதும் உண்டு.

'இராநிகர் குழல்' (1, 2, 152)
'பொன்னிகர் சுணங்கு' (1, 2, 139)

இவற்றில் குறிப்பிடப்பெறும் உவமைப் பொருள்கள் அவற்றின் நிறத்தையே சுட்டிப் பயன்படுத்தப் பெற்றிருப்பதைக் கண்டு உணரலாம்.

நாடகச் சூழலுக்குத் தக்கவாறு சில நிறங்கள் குறிப்பிடப் படுவதையும் பார்க்கலாம். போர் தொடுக்கப் புருடோத்தமன் வருகிறான். அதை அறியாத நடராசன் படைவரும் திசையில் தூள்படலம் எழுந்து பரவியிருப்பதை வியப்புடன் பார்க்கிறான். அது 'செந்நிறப் படாமெனத்' (3, 2, 94) தோன்றியதாக நாடக ஆசிரியர் கூறுகின்றார். சிவப்பு நிறம் ஆபத்தின் அறிகுறி; குருதி கொட்டுவதின் குறியீடு தீமை வருவதின் அறிவிப்பு. அத்தகைய நிறமுடைய துணியை உவமையாகக் கூறி நாடகச் செயலோட்டத்திற்கு உணர்ச்சி மிக்க களத்தை அமைக்க ஆசிரியர் முயல்கிறார்.

நாடகத்தின் இறுதிக் காட்சியானது, நல்ல பாத்திரங்கள் அனைவரும் மனம்வருந்திக் கூடுவதாகத் தொடங்கப் படுவது. மனோன்மணி பலதேவனை மணக்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை உருவாக்கப் பட்டுள்ளது. ஆனால் நடக்க போவதோ யாரும் எதிர்பாராத திருமணம். புருடோத்தமன் மனோன்மணியை மணக்கப்போகிறான். அதோடு பாண்டிய நாட்டை அல்லல் படுத்திய போரும் முடியப்போகிறது அதன் பயனாக அனைவருக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படப்போகிறது.

இதை முற்படக் குறிப்பிட்டுக் காட்டுவது போன்று மனோன்மணி வெண்பட்டுடுத்தித் (4, 2, 71) தனது திருமணத்திற்கு வருகிறாள். வெண்மையானது அமைதி, மகிழ்வு ஆகியவற்றைக் குறிப்பிடும். பெண்கள் வெள்ளாடை புனைவது அமங்கலமாகக் கருதப் பட்டாலும், இந்த நாடகத்தலைவி 'வெண்பட்டு' கட்டி யிருப்பதால் அவ்வாறு எண்ணுவதற்கு இடமில்லாமல் மாறுகிறது. குற்றமற்ற வெள்ளைத் தன்மையுடை மனோன் மணியின் திருமணத்தால் பாண்டிய நாட்டுக்கு வந்த பேராபத்து நீங்கி அமைதியும் மகிழ்வும் நிலவப் போவதை அறிவிக்கும் குறிப்பாக வெண்பட்டைக் கருதலாம்.

நிறம் பற்றிய கொள்கையில் மனோன்மணீய நாடகத்தில் மரபுக்கு மாறுபட்டதாக எந்த இடமும் இல்லை. முன்னோர் கொள்கையை நன்கு உணர்ந்து அதற்குத் தக்கவாறு அமைத்து நாடகத் தேவைக்குப் பொருந்தும் தன்மையாக நிறங்களை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

**பின்னிணைப்பு**

## மனோன்மணீயத்தில் நிறம் பயின்று வந்துள்ள இடங்கள்

1. இந்நாடகம் வெள்ளியீ தெனினும் (பாயிரம், சுரிதகம்)
2. பொன்வரை (1, 1, 57)
3. வேழவெண் மருப்பும் (1, 1, 64)
4. உதயனு முடல் சிவந் தனனே' (1, 1, 78)
5. தம்முடல், கரிந்தது பாதியென்றாய்ச் சுழல் (1, 2, 4 தா..

6. திங்கள் கண்டு பொங்கிய கடலெனச்
செம்புனர் பரக்கச் செந்தா மரைபோற்
சிவந்தவுன் கபோல நுவன்று நின்மனக்
கன மெலாம் வெளியாக் கக்கிய பின்ன
ரதுநீ யொளிக்குதல் (1, 2, 10—14)

7. அணங்குறல் பொன்னிகர் சுணங்கா ரணங்கே (1, 2, 139

8. துன்றிரா நிகர்குழற் றோகாய் (1, 2, 152)

9. கண்சிவக்கும் பார்த்திபனே (1, 3, வெண்பா 1)

10. நரைத்த தென்சிரம் (1, 3, 84)

11. பஞ்ச வனக்கிளி செஞ்சொல் மிழற்றி (1, 4, 12)

12. செந்தமிழ் வழங்குந் தேயம் (2, 1, 76)

13. புன்னை நுன் தாதாற் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருந் திருஞ்சிறை புலர்ந்தும்
அலைகடற் காக்கை (2, 1, 8—84)

14. வெண்முத்தம் (2, 1, 88)

15. செங்கட் போத்து (2, 1, 119)

16. செந்நெல் (2, 1, 136)

17. போர்மிசைக் காரா காரெனப் பொலிய (2, 1, 137)

18. மூக்கிற் கரியருள ரென நாயகர்
தூக்கிய குறளின் சொற்படி எல்லாம்
உள்ளநின் னருகல ரில்லா ராவரோ? (2, 1, 268–270)

19. வெளுத்த தெல்லாம் பாலெனும் மெய்ம்மை
யுளத்தன் (2, 1, 286-287)

20. சூரியன் பன்னிறக் கதிர்கள் (2, 2 ,7)

21. கருகிருள் மயங்கிய காட்சி (2,2,9)

22. பன்னிறச் சிறகர்ப் பறவைத் தொழுதி (2, 2,22)

23. கரிய கூந்தல் (2, 3, 24)

24. செவ்வரி படர்ந்த மைவழி நெடுவிழி (2, 3, 27)

25. செக்கர் போற் கன்னம்
நாணோடு சிவக்க (2, 3, 31-32)

26. செங்கோல் அடியிறை வைத்து. (2, 3, 129)

27. என்கொல் அத்தோற்றம்? புகையோ? மங்குறுக்கு
இந்நிறமில்லை. செந்நிறப் படாமென (3, 2, 98, 94)

28. கருமுகில் (3, 2, 114)

29. மைம்முகில் (3 2 120)

30. மணமொழி பிணமொழி யானது குடிலன்
ஐ ,தொடின் மஞ்சளும் கரியாகும்மே! (3, 2, 130-131)

31. பழுதிலாப் பால்நிலா (3, 3, 59)

32. பாரிசா தாதிப் பனிமலர் அந்தியின்
அலர்தலே அன்னவை விளர்நிறம் கிளர
நறுமனம் கமழ்தற்குறுகா ரணமென (3, 4, 179-181)

33. நிசியலர் மலர்க்கு
வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்
(3, 4, 184-185)

34. நெடுந்தேர் இருஞ்சிறை விரித்து (4, 1, 71)

35. அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ (4, 1, 136–137)

36. கருமுகில் (4, 1, குறளடி வஞ்சிப்பா (இறுதி)

37. கருநிறம் (4,] 5, 226) வெண்பட்டு (5, 2, 71)

# 25. Treatment of Colour Images In Bharati's Poems

G. JOHN SAMUEL

As a part of the super-structure of its social milieu literature reflectes the many facets of the culture of humanity' its beliefs and practicele, convictions and convention, doctrines and dogmas, faiths and disbeliefs and in short its collective unconscious. Like language and ritual, colour also plays an indomitable role in the collective life of mankind from its very primeval stage and it is endued with rich significance and functions both denotative and connotative as well as decorative and symbolic. Many primitive people intuitively sense that close inks exist between colours and all the different aspects of the real world. The correspondence of the colours to the respective functions varies with different cultures and groups and even among individuals.

Since the super-structure derives everything from its social structure or material structure, whatever is present in the latter are revealed in literature with the required embellishments and artistic fervour. Consequently, the function of colour in a particular liturature reveals its function and significance in its social reality as well as in the tradition of the dead generations, which weighs like a nightmare on the brain of the living and runs continuously in the sub-conscious impulses of mankind. The understanding of the social conditions that control the emotiona intellectual and artistic expressions of humanity is highly indispensable for a better knowledge about even the very minutes aspects of the literary conventions of a particular social group.

The major functions of colour image in any literary work can be viewed from three angles such as :

1. Colour as a decorative element,
2. Colour as a functional unit, and
3. Colour as a smybolic representation.

In both lyrical and narrative poems colour images are profusely handled so as to perform the above mentioned three functions. Yet, the second function is discernible mostly in the narrative poems than in lyrical poetry. Among the various types of symbolisms colour symbolism is one of the most universal of all types of symbolism and it has been consciously used in religion and literature with various purposes.

## BHARATI AND COLOUR IMAGES

Bharati is a poet of the new era, an era of poetry which absrobs and assimilates into its own the new and the old and makes a synthesis of all that is best in the literary traditions of the East and the West. Consequently, in his poems we are able to discern new trends both in the application of literary techniques and imnges as well as in giving new meanings and functions to the concept of colour image. Even though the above mentioned three functions of colour images can be seen in the poetical canon of Bharati, colour and light are mostly used to embellish the perceptual images which he depicts in them. In some places, they are handled as functional images which form an integral part of his thematic content.

As a romantic poet, endowed with a deep devotion and reverence for nature, Bharati is highly enthralled by the various arttactive hues of the natural objects. To him, whatever is colourful i s an object of beauty; hence he has used the words Niram and Vannam,[1] the Tamil generic words for colour, as

1. நீலவண்ணம் மஹாகாளியின் புகழ், பா-1, வ. 4.
வன்னப்புதுச்சேலை - கண்ணன்என் விளையாட்டுப் பிள்ளை பா. 4, வ. 2
அழகிய கிளிவயிற்றின் வண்ணம் — பாஞ்சாலி சபதம் ,, பா. 32. வ. 7.
முகில் வண்ணன் ,, பா. 79. வ. 7:
வண்ணமுயர் மணி நகரின் ,, பா. 115 வ. 5.
என்னடி! இந்த வண்ணத்தியல்புகள் ,, பா. 152.
வண்ண முள்ள பரிகள் ,, பா.-194, வ. 2.
வான்முகிலைப் போன்றதொரு வண்ணத் திருமால் ,, பா. 48, வ. 10.
வண்ணப் பொற் சேலைகள் ,, பா. 96, வ. 5.
வண்ணக் குயில், குயிற்பாட்டு, குயிலும் மாடும், வ. 105

synonyms of beatuy. Being a lyrical poet with fervid romantic imagination, Bharati expresses his emotional astonishment for the various ransparent hues of natural objects, which are the most beautiful and celestial things for him. According to him, like poetry and arts, the variegated luminous hues of nature are the ecstatic and aesthetic revelation of the inner joy of the mother Goddess Parásakti. Consequently, he sings in one of his poems as

கணந்தோறும் ஒரு புதிய வண்ணங் காட்டி
காளி பராசக்தி அவள் களிக்குங் கோலம்[2]

Among the various colours, Bharati was highly fascinated to red, blue, green, black, yellow and white.

Red is the colour of the pulsing blood and of fire and to is used generally to represent the surging and tearing emotions. It is also a symbol of action, masculinity and sacrifice. Gods are represented as red in colour because they are associated with the principle of creation. It is the colour of activity and of blood and for this reason pre-historic man would strain with blood any object which he wished to bring to life.

The colour red is used quite frequently in Bharati's poems in its traditional symbolic meaning namely desirability, right eousness, perfection, right path etc. Since it was a desirable colour it had become the abstract noun denoting the above qualities. Bharati has used this colour in many places with these symbolical meanings which the colour red derived in the historical development of Tamil culture[3]. The word Cemmai is

2. பாஞ்சாலி சபதம், அழைப்புச் சருக்கம், பா. 149 வ.5-9

3. செந்தமிழ்நாடு, தாயின் மணிக் கொடி, பா. 6, வ. 1.
செந்தமிழ்நாடு, செந்தமிழ்நாடு, பா. 1, வ. 1.
செந்தமிழ், வாழிய செந்தமிழ், வ. 1.
செம்மை அறிவுண்டோர், சுதந்திரதேவியின் துதி. பா. 3, வ. 1

used both as an abstract noun as well as the name of the colour red[4]. It is also suffixed with a negative marker to indicate acts of unrighteousness[5]. Wherever the colour red is used as decorative image, Bharati simply refers to it by its adjective forms-செவ் and செம். It is also ascribed to the celestial beings such as

---

செவ்விய நெறி, விநாயகர் நான்மணிமாலை,
பா. 28, வ. 4
செம்மையுற்றிட, சிவசக்தி. பா 7, வ. 2-3
செம்மை தோன்றும், காளிஸ்தோத்திரம், பா. 2, வ. 4.
செம்மையேறி வாழ்வேன், திருவேட்கை பா. 5, வ. 2.
செம்மை நாடி, வெள்ளைத் தாமரை, பா. 4, வ. 6.
செந்தமிழ்மணிநாடு, வெள்ளைத்தாமரை, பா. 5. வ.2,
செவ்விது......அந்தப்பொழுது, பா. 3, வ.7-8.
செம்மைத் தமிழ், சொல், பா. 1, வ. 2.
செந்தமிழ்ச் செய்யுள், சரிதை, பா. 20, வ. 3.
செம்மை செய்திட, கண்ணன் என்சீடன், பா. 135, வ.1.
செந்தமிழ்த் தென்புதுவை, குயிற்பாட்டு, வ. 6.
செம்மை மாதர், புதுமைப்பெண், பா. 7, வ. 4.

4. எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! பாஞ்சாலி சபதம், பா. 152.

5. செம்மையின்றிழி தொண்டினை-சுதந்திரதேவியின் துதி
பா. 4, வ. 6.

செம்மைதீர் மிலேச்சர், சத்திரபதி சிவாஜி வ 185.
செம்மைதீர் அரசியல், மாஜினியின் பிரதிக்கிணை,
பா. 3, வ. 2.

6. செங்குருதி, குருகோவிந்தர், வ. 90.
செஞ்சுடர்த்தேவன், விநாயகர், நான்மணிமாலை,
பா, 24, வ. 20

சேவடி, சிவசக்தி, பா. 7, வ. 4.
செந்நிறத்து, கோவிந்தங் பாட்டு, பா. 1, வ. 1.
செய்ய தாமரை, புதுமைப்பெண், பா. 22, வ. 3.
செந்தாமரைப்பூ. கண்ணம்மாவின் எழில், பல்லவி.

Siva, Mnruga, Sun and Lakshmi[7] The verb form derived from this colour is used in many a place to indicate the face of the damsel blushing out of shy and the reddening of the heroes face owing to anger[8].

---

செம்மலர், ஆரியதரிசனம். பா. 22, வ. 3.
செவ்வொளி. அந்திப்பொழுது, பா. 1, வ. 7.
செவ்வொளி, அந்திப்பொழுது, பா. 3, வ. 1.
செம்மலர், சுப்பராமதீட்சிதர், பா. 15, வ. 3.
செம்பரிதி, மகாமகோபாத்யாயர், பா. 1, வ. 1.
செந்தீ. பாரதி அறுபத்தாறு, பா. 2, வ. 11.
செந்நிறத்தோல், பாஞ்சாலி சபதம், பா. 29, வ. 1
செந்தழல், பாஞ்சாலி சபதம், பா. 8, வ. 3.
செந்நிறத்தன, ,, பா. 32, வ. 3.
செம்பொன் ,, பா. 190, வ. 1.
செங்கதிர் ,, பா. 153, வ. 1.
செம்பவிர்குழல் ,, பா. 48. வ. 13.
செவ்வியமேனி ,, பா. 97, வ. 4.
செந்நீர் ,, பா. 103, வ. 3.
செஞ்ஞாயிறு, ,, குயிற்பாட்டு, வ. 21.
செந்நீர், ஞாயிறு, கவிதை 8, வ. 14.
செம்மலர், ஞாயிறு, கவிதை 13, வ. 12.

7. செய்யாள், விநாயகர் நான்மணிமாலை, பா. 31. வ. 1
செங்கமலத்தாள். கண்ணன் பிறப்பு, பா. 3, வ. 10.
செந்தோலசுரன், கற்பனையூர், பா. 7, வ. 1.
செய்யமேனியள், திருமகளைச் சரண்புகுதல், பா. 3, வ. 7.
செந்திரு, லக்ஷ்மி காதல், பா. 5, வ. 6.
செங்கதிர் வானவனை, தீர் வளர்த்திடுவோம் பா. 1, வ.
செந்திரு, பாஞ்சாலி சபதம், பா. 38, வ. 5.

கண்கள் சிவந்து கண்ணன் என் [illegible]டன், பா. 125, வ.
முகஞ் சிவந்தால, கண்ணம்மா என் குழந்தை. பா. 6, வ. 11
கன்னம் கன்றிச் சிவக்க, கண்ணம்மா என் காதலி, பா. 2, வ.
கன்னஞ் செக்கச் சிவக்க, குயிற்பாட்டு, வ. 94.

Red is placed in contrast with some other colours and among them Bharati is keenly interested in placing it in juxtaposition to black which is frequently seen in the classical portrayal of red sky in the twilight and ocean, sun and ocean and in the image of Lord Siva with his consort Uma. In Bharati's poems red is a symbol of mirth and black that of woe. Consequently, Pāñcāli's face moving from merry to mental agony on hearing the news about the failure met by the Pandavas in the gambling is described as

ஶ்ரீதேவி தன்வதனம் செம்மை போய் காரடைய[9]

In the popular tradition demons are painted in black Bharati, in his poem Karpaniyur, introduces us the rude skinned Asura.

In the western tradition black is normally related to the state of putrefaction and occultation and tt is used as a symbol of hell, death, woe, ignorance and sin. Quite contrary to this Bharati has used black as an auspicious symbol which has got deep religious significance. Consequently, it is associated with his famous mother Goddess Sakti as well as Krishna. As a Sakta, Bharati is deeply attracted by the blank colour, the colour of his mother Goddess Kāḷi Consequently, his Kuyil. which is a symbolic representation of Kāḷi is portrayed in black colour. Black and blue are almost identical colurs and hence in Bharati's poems, they are mutually interchangeable. Consequenty Krishna is portrayed as a possessing both black and green.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா!—நின்றன்
கரிய நிறந் தோன்றுதையே, நந்தலாலா!
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சை நிறந் தோன்றுவதையே நந்தலாலா"[10]

---

9. பாஞ்சாலி சபதம், பா. 48

10. நந்தலாலா, பா. 1-2.

(I see ytur ccmp'exitn, Krishna,
in the crw's dark f athers.
I see the divine green, O Krishna,
in the leaves tf all the trees.)[11]

Yet, in most tf the place Krishna is depicted in his his famous black ctlour. In some instances, black, green and red are placed side by side as paradoxes so as to present effective color images such as

வேற்கரு விழியுடையாள்—செய்ய
மேனியன் பசுமையை விரும்பிடுவான்[12]

The dark-beauty of Kāḷi is described as

கரும்பெண்மை யழகொன்று[13]

It is intersting to note that black is used to refer to the precise and conscise commetary of Vedas as

வேதத் திரு விழியாள்—அதில்
மிக்க பல் லுரையெனுங் கருமையிட்டாள்[14]

---

11. கறுத்தமணியின் பேர் – சொன்னால்
காலனும் அஞ்சுமடா - வண்டிக்காரன் பாட்டு,
பா. 2, வ. 3-4,
கருநிறங் கொண்டு பாற்கடல் மிசைக் கிடப்போன்
புதிய ஆத்திச்சூடி, வ. 2.
கருமாமேனிப் பெருமான், கண்ணன் திருவடி, பா. 2, வ. 2

12. திருமகளைச் சரண்புகுதல், பா. 3, வ. 7-8.

13. காளி காதல், பா. 8, வ. 182.

14. பாஞ்சாலி சபதம் பா 4, வ. 1-2.

The black cuckoo which flies in a distant land against the the background of the luminous ocean is compared to a black dot[15]. This colour is linked in many a place with ocean, crow, peacock, sky or the sharp eyes of Kannamma[16]. For presenting the image of dark black or excessive black materials, he uses the double adjectived form கன்னங்கரிய· Consequently, throughout the poetical canon of Bharati, we are able to come across frequently phrases like கன்னங்கரிய இருள் நேரம்[17] கன்னங் கருங் காக்கை etc. In some instances, the word கார் also is used to indicate black colour[19]. Apart from portraying auspicious Gods in black colour, the God of Death and his buffalo are also portrayed in the same colour[20].

---

15. மேற்றிசையில் அவ்வுருவம்
சோதிக்கடலிலே தோன்றும் கரும் புள்ளியெனக்
காணுதலும் - குயிற்பாட்டு, வ. 15-17.

16. இரும் சிரைக்கடல், சத்ரபதி சிவாஜி வ. 28.
கரியமேகத் திரரெளனச் செல்லுவை,
மஹாசக்தி வாழ்த்து, பா.3, வ 3.
கரு நிறக் காக்கை, அந்திப்பொழுது, பா. 1, வ 2.
வட்டக் கரிய விழி - கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ? - கண்ணம்மா என் காதலி
பா 1, வ. 2-3
கள்ளக்கரிய விழியினாள் - பாஞ்சாலி சபதம்
பா. 49; வ. 5
கரிய நன்னிறமுடையாய் - ,, பா. 89, வ. 5
கரும்பறனை, குயிற்பாட்டு, வ. 29.
சின்னக் கருங்குயிலி, குயிற்பாட்டு வ.29.

17. மறவன் பாட்டு, பா. 3, வ. 1.

18. காலைப் பொழுது. பா. 6, வ. 1.

19. கார்ச்சடைக் கரு மேகங்கள் - ஒளியும் இருளும்,
பா. 4, வ. 3.
கார்கொள்வான், சுயசரிதை, பா. 23, வ. 2.

20. கடாவெருமை குருங் கருநிறத்துக் காலனார்,
பாஞ்சாலி சபதம். பா. 48, வ. 23

Green is considered to be the colour of earthly growing things which are tangible and immediately perceptiable. As a symbol it normally represents eternity, novelty, fertility, life any sweet reminiscences. Bharati has used பசும், பச்சை, பைம் etc. as the alternant forms of the word denoting green colour. Yet, in some instances, the above lexical forms are used as adjectives to convey the symbolical meanings such as tender, young, fresh as well as raw (materials)[21]. In the secular level green is normally linked with parrot, or paddy field or gardens filled with trees[22].

---

21. பசும் பொற்சுடர் - பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி பா. 1. வ. 3.
பைந்திரு - தாயின் மணிக்கொடி; பா. 5, வ. 4.
பச்சை - அச்சமில்லை, பா. 2, வ. 5.
பச்சைக் குழந்தையடி - சந்திரமதி, பா. 1, வ. 1.
பசும்பொன் - பாஞ்சாலி சபதம், பா. 78, வ. 4.

22. பச்சைமணிக் கிளியே - பாரத தேவியின் திருத்தசாங்கம் பா. 1, வ. 1.
பைங்கிளி ,, பா. 3. வ. 1.
பசுங்கிளியே ,, பா. 5, வ 1.
பச்சைக்கிளி - காலைப்பொழுது, பா. 11, வ. 2.
பசுங்கிளி ,, பா. 14, வ. 2.
பசுங்கிளி - அந்திப்பொழுது, பா. 2, வ. 2.
பைந்நிறப் பழனம் - ஜாதீய கீதம்-1, பா. 1, வ. 3.
பொழிற் பசுமை, ஜாதிய கீதம்-2, பா. 1, வ. 2.
பைந்நிறம் - ஜாதீயகீதம் -2 பா. 6, வ. 4.
பைந்நிறப் பழனம் - சத்ரபதி சிவாஜி, வ. 33.
பைந்நிறம் விரித்த பழனம் - குருகோவிந்தர், வ. 17.
தென்னைப் பசுங்கீற்று-காலைப்பொழுது, பா. 5, வ.1.
பச்சை முந்திரித் தேம்பழம் - மது, பா. 2, வ. 1.
பச்சை முந்திரியன்ன மது. பா. 2, வ. 1.
பைம்பொழில் - பாஞ்சாலி சபதம், பா. 132, வ. 5.
பச்சை மரம் - பாஞ்சாலி சபதம், பா. 10, வ. 7.
பச்சை மரமெல்லாம் பளபளென-குயிற்பாட்டு, வ. 22
பச்சை இலை, ஞாயிறு, கவிதை 13, வ. 12.

At the religious level, it is linked with Krishna[23]. In Pancali Capatam, earth, the green globe is portrayed in this colour[24].

Bharati sees close kinship between blue, black and green. This is obvious from a number of passages in the poetical of Bharati, where these three colours are given to Krishna and Kāḷi and the first two colours are associated with ocean. Since the cosmic phenomenons such as ocean and sky and the celestial beings like Krishna and Kāḷi are endued with blue colour, Bharati as a worshipper of Krishna, Kāḷi and nature is highly enthralled by this colour. His poems abound in very beautiful lines which paint red against the background of blue and draw harmony between ocean and Kāḷi or sky and Krishna. Bharati sings with ecstasy the beauty of the luminous stars and moon shining in the illuminating blue sky. Many a passage of Bharati draw parallelism between nature, the macrocosm and man, the microcosm. Consequently, the blue ocean[25] reminds him of the dark long hair of Cantiramati[26]. The blue sky shows him the tender face of Kannamma.[27] The agitated mind

---

23 பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா - நின்றன்
பச்சை நிறந் தோன்றுதையே நந்தலாலா, பா. 2.

24. சமையுமொரு பச்சைநிற வட்டம்
- பாஞ்சாலி சபதம்; பா. 151, வ. 3

25. நீலக்கடல் - பாரதமாதா நவரத்தின்மாலை;
பா. 2, வ. 3.
நீலத்திரைக்கடல், செந்தமிழ்நாடு, பா. 5, வ. 1.
நீலக்கடல் குயிற்பாட்டு, வ. 1-3.
நீலப்பெருங்கடல் - குயிற்பாட்டு, வ. 31.

26. நீலக் கடலிலே - நின்றன்
நீண்ட குழல் தோன்றுதடி - சந்திரமதி, பா. 3, வ. 1-2.

27. நீல விசும்பினிடை நின்முகற்கண்டேன்
- கண்ணம்மா என் காதலி பா. 4, வ. 1

of the lady love and her emotional outpouring caused by the pangs of separation of her lover are compared to the ripples of the blue ocean[28].

At the religious level the blue ocean is related to the colous of Kāḷi[29]. Bharati has related this colour with his famour symbolic bird cuckoo too[30]. The eye of Kāḷi[31] is described as having flaming blue colour[32]. The colour is also given to the God of Love[33]. Since natural phenomenon such as sky and ocean are endowed with blue colour,[34] Bharati, an ardent lovee of nature, lost himself in many occasions in beautiful reverier caused by the beauty of the blue sky[35].

Yellow is the colour of the far-seeing sun, which appear bringing light out of an inscrutatable darkness Consequently, in Bharati's poems, it is associated with insight intuition or inspiration. Eventhough Bharati is highly fascinated to this colour, nowhere in his poems, the word **Mañcaḷ** is use-

---

28. நீலக் கடலலையே - உனது
    நெஞ்சிலலைகளடி - கண்ணம்மா என் காதலி
    பா. 2, வ. 3-4.
29. நீலகடலொத்த கோலத்தினால் - பாரதமாதா
    நவரத்தினமாலை, பா. 2, வ. 3
30. நீலக் குயில் - குயிற்பாட்டு, வ, 62.
    நீலக்குயில் - ,, வ. 6.
31. தேசுறு நீல நிறத்தினாள் - மஹாசக்தி பஞ்சகம்,
    பா. 3, வ. 6.
    கன்னிய நீல நிறந்தாள் பராசக்தி - வெண்ணிலாவே.
    பா. 3. வ. 9.
32. தழல் காலும் விழி நீலம் - மஹாகாளியின் புகழ்,
    பா. 1. வ. 4.
33. நீலக் காமன் - ஆரிய தரிசனம், பா. 11, வ. ?.
    நீலக் கண்ணன் - ஆரிய தரிசனம், பா. 15, வ. 2.
34. மைந்நிற முகில்கள் - சத்ரபதி சிவாஜி, வ. 35.
35. நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி - கண்ணம்மா
    என் காதலி, பா. 1, வ. 5.

to denote this colour. Instead he refers to this colour either by the phrase பொன்நிறம் or தங்கநிறம் and relates it to the rays of the setting sun. To him, gold and golden colour correspond to the mystic aspect of the sun whereas silver and the white colour correspond to that of moon. Apart from using the words pon or tankam as colour name, he has used them with a symbolic undertone to refer to rarity or good quality[36]. As a colour image, yellow is used in many places as an embellishing or a decorative image to give more concrete form to his perceptual images[37].

White, which embraces a number of symbolic meanings such as perfection, patience, divinity, virginity, peace, compassion, etc., is treated in Bharati's poems both as decorative and

---

36. தங்க மதலைகள் – நாட்டு வணக்கம், பா. 2, வ. 3
பொன் மயில் - பாரத நாடு, பா. 2, வ. 3.
பொன்னாடு – எங்கள் நாடு பா. 1. வ. 7.
பொன்னாடு - பாரதமாதா நவரத்தின மாலை
பா. 8, வ. 2.
பொன்னாடு - பாரததேவியின் திருத்தசாங்கம்
பா. 2, வ. 2.
பொன்போற்குரள் - குயிற்பாட்டு வ. 14.
பொன்னை நிகர்த்த குரல் - குயிற்பாட்டு, வ. 74.

37. பொன்னுடல் - நாட்டு வணக்கம் பா 2. வ. 7.
பொன்னொளிர் பாரதநாடு - எங்கள் நாடு
பா. 1. வ. 7.
பொன்னனையாய்-பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி
பா. 4 வ. 3.
பொன்னவிர்மேனி - கண்ணன் என் தோழன்,
பா. 1, வ. 1.
பொன்னிறப் பெண்கள் - கண்ணன் என் தந்தை,
பா. 4, வ. 6.
பொன்னிறப் பாஞ்சாலி - பாஞ்சாலி சபதம்,
பா. 29, வ. 7.
பொன்னங்க மணி மடவார் ,, பா 117, வ 5.
பொற் படந்தோள் - ,, பா. 159 வ 5.
செம்பொன் எழிலிணைந்த வடிவம் பா. 190, வ. 1.
வண்ணப் பொற்சேலை பா 96, வ 5.

functional images. We are also able to draw some deep symbolical undertone in the presentation of the blue coloured Krishna wearing white dress, which is a symbol of solemnity, purity, divinity and sovereignty[38]. The whole collection of Bharati's poems abounds with a number of word paintings of Saraswathy, the goddess[39] herself is a symbolic representation of the divine utterances of the Vedas[40]. White is used to denote symbolically the child like purity and innocence[41] as well as the Whites, especially the Britishers[42].

Bharäti uses Veṅmai and Veḷḷai, which means silver, as the synonyms of the white colour[43]. Veḷu, the verb base or Veḷuttal, the verbal noun, is used in the sense making clean or

---

38. வெள்ளாடை தரித்த விட்டுணு - விநாயகர் நான்மணி மாலை, பா. 16, வ. 18.

39. வெள்ளை பாரதி - சக்தி விளக்கம். பா. 5
வெண்மலர்த் தேவி - ஜாதீய கீதம் 1. பா. 6. வ. 3.
வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள் - வெள்ளைத் தாமரை. பா. 1, வ. 1.
வெள்ளை மலரணை மேல் - மூன்று காதல், பா. 1, வ. 5.
வெள்ளைப் பண்மகள் - ,, பா. 4, வ. 8.
வெள்ளைக் கமலத்திலே-பாஞ்சாலி சபதம், பா. 3, வ. 1.

40. வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொருளாக விளங்கிடுவாய் - ஓம் சக்தி பா. 5.

41. வெள்ளை மனது - மூன்று காதல், பா. 1. வ. 8.
வெள்ளை மனம் - பாஞ்சாலி சபதம், பா. 13, வ. 2

42. வெள்ளைப் பரங்கி - சுதந்திரப்பள்ளு, பா. 1, வ. 1.
வெள்ளை நிறத்தைக் கண்டால்
பதறி வெருவலை ஒழித்தாயோ - தொண்டு செய்யும் அடிமை பா. 7, வ. 1-2,
வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம் - நம்ம ஜாதிக் கடுக்குமோ, பா 3, வ. 1.
வ. 1.
வெள்ளிய சங்கம் - பாரதமாதா, திருப்பள்ளி எழுச்சி, பா. 2, வ. 3.

pure[44]. In Bharati's poem white is used as an embellishing image and it is associated with the noun forms such as snow[45], conch[46] the Himalayas[47], moon[48], pearl[49], cat[50], the sovereign Umbrella[51], the elephant of Indra [52] and island[53].

Apart from these six major colours, Bharati speake about ash colour which is related to cat[54], and Kávi, the colour of the dress of the ascetics[55]. He has compared rose flower to the smile of Kaṇṇamma without mentioning its colours[56].

---

44. துணி வெளுக்க தோல்வெளுக்க, மணி வெளுக்க மனம் வெளுக்க...... முத்துமாரி, பா. 2,

45. வெண்பனி - பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி பா. 4, வ. 3.

46. வெண்சங்கு – பாரதமாதா நவரத்தின மாலை, பா. 4, வ. 1. 28.

47. வெள்ளைப் பொருப்பு – பாரத தேவியின் திருந் தசாங்கம், பா. 5, வ. 4.

48. வெண்ணிலா - ஜாதிய கீதம் 1. பா. 2 வ 1.
வெள்ளை நிலா - வள்ளிப்பாட்டு பா. 2 வ 18.
வெண்ணிலவே - வெண்ணிலவே, பா. 4, வ. 6.

49. வெண்முத்து—வேலன்பாட்டு பா. 1, வ. 7.

50. வெள்ளை நிறத்தொரு பூனை—முரசு. பா. 14, வ. 1.

51. வெள்ளை கவிகை—மது, பா. 3, வ. 4–4.
ஒற்றை வெள்ளைக் கவிகை—மது, பா. 4, வ. 3.

52. வெளிய யானை-ஓவியர் மணி இரவிவர்மா, பா. 1, வ. 4.

53. வெள்ளைத் தீவில் விளையும் கடலே—நிலவுப்பாட்டு, பா. 1, வ. ʼ .

54. சாம்பல் நிறமொரு குட்டி—முரசு, பா. 15.

55. காவித் துணி வேண்டா—பரமசிவ வெள்ளம் வ. 41.

56. எங்கள் கண்ணம்மா நகை புது ரோஜாப்பூ—
கண்ணம்மாவின் எழில்-பல்லவி.

## COLOUR CONTRAST

Bharati is more interested in portraying the natural tapestries with various hues than presenting them in single colour. His inclination for presenting colours in variety as well as his taste for painting scenes with contrasting colours are obvious from many a passage of his poems. In one of his poems he praises the Mighty Force for creating this cosmos as a rich treasure house of multifarious colours.

அத்தனை யுலகும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபலநல் வழக்குகள் சமைத்தாய்[57]

(These myriad multi-coloured words
You have structured in terms of beauty)

A classical expression of his fascination to the various hues of the cosmos, especially to its ethereal colourful beauty, finds place in Pāncāli Capatam, where he describes the transparent sky as :

பார்; சுடர்ப்பருதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன? ஓகோ!
என்னடி! இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்!—செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்!—வெம்மை தோன்றாமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்!—பாரடி!
நீலப் பொய்கைகள்! அடடா, நீல
வன்ன மொன்றில் எத்தனை வகைபடி!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்,
எத்தனை!—கரிய பொருட்பெரும் பூதம்!
நீலப் பொய்கையில் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற்கரையிட்ட
கருஞ் சிகரங்கள்!—காணடி, ஆங்கு
தங்கத் திமிங்கலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்!—ஆஹா!—எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வண்ணக் களஞ்சியம்[58].

---

57. இறைவனை வேண்டுதல், பா. 1.

58. பாஞ்சாலி சபதம்—அழைப்புச் சருக்கம் பா. 152.

While presenting multiplex colour images in one scene, with an artistic bent of mind, Bharati places them in contrast so as to produce effective colour combination. For emphasizing the need for national integration in India, which is a land of diverse linguistic, cultural and ethnic groups, he brings in a word picture kittens of one white cat, which are of diverse colours. He brings in this scene one ashy kitten, another black one, another snaky-sheened and another of milky-white colour[59]. He is of the opinion that even though the kittens are of a pack of different colours, as a species, they are all one. In a similar way, he presents red, blue, white and green in contrast in the depiction the horses of various hues in Pāñcāli Capatam[60]. In the very introductory passage of Kuyirpāṭṭu the colour red as placed against the background of blue as:

காலையிளம் பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல
மோகனமாஞ் சோதி பொருந்தி[61]

(Reflecting the rays of the Rising Sun
the blue ocean glistens like a jewel
near a flame; a transfiguring brightness)

He wonders the beauty of the luminous, gorgeous, burning red sun shining against the background of the blue sky as :

தங்க முருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?—வானவெளியைச்
சோதி கவர்ந்து கடர்மயமாம் விந்தையினை[62]

---

59. முரசு, பா. 15, 16.

60. நிழல்நிறப் பரிபலவும்—செந்
நிறத்தன பலவும் வெண்ணிறம் பலவும்
தழல்நிறம் மேகநிறம்—விண்ணில்
சாரும் இந்திர வில்லை நேரும் நிறம்
அழகிய கிளிவயிற்றின்—வண்ணம்.
—பாஞ்சாலி சபதம்-அழைப்புச் சருக்கம், பா. 31.

61. குயிற்பாட்டு, வ. 1-3.

62. குயிற்பாட்டு, இருளும் ஒளியும், வ. 31-33.

Red is also placed in Juxtaposition with white, green, black and blue[63]. Consequently, in Bharati's poems, red forms aesthetic combination with almost all the colours.

Black is placed side by side with white and ash colour[64]. It is also placed in juxtaposition with red, green, blue and yellow[65]. In Pāñcāli Capatam it is contrasted with red[66]. The conception of black and white as diametrically opposed symbols of the positive and the negative is a very common trend seen in almost all the cultures of mankind. In Bharati's poems too these two colours are contrasted even though the symbolical undertone is not clear[67]. Like the black and white contrast, colour contrast can be seen in the lumioeus white moon which is placed against the transparent blue sky[68]. Blue is also contrasted

---

63. கருங்கல்லிலே, வெண்மணலிலே, பச்சை இலையிலே
செம்மலரிலே, நீல மேகத்திலே
காற்றிலே, வரையிலே எங்கும் மின்சக்தி
உறங்கிக் கிடக்கின்றது
—வசன கவிதை, ஞாயிறு, கவிதை 13, வ. 12-14.

64. முரசு, பா. 15-16.

65. பாஞ்சாலி சபதம், அழைப்புச் சருக்கம், பா. 152.

66. செந்நிறத்தோல், கருந்தோம்—பாஞ்சாலி சபதம்,
பா. 29, வ. 1.

67. கருங்கல்லிலே, வெண்மணலிலே பச்சை இலையிலே
—ஞாயிறு, கவிதை 13, வ. 12

கருமையிற் படர்ந்த வானமாங் கடலிடை
ஒருமையிற் றிகழு மொண்மதித் தீவின்—சந்திரிகை,
வ. 7-8.

68. நீல விசும்பினிடை இரவில்—சுடர்
நேமியனைத்துமவள் ஆட்சி—சக்தி விளக்கம், பா. 3.

with red, green and black[69]. The dark blue sari studded with diamonds is compared to the dark blue sky filled with a heap of illuminating stars[70].

Green forms its colour contrast with red and black[71] While yellow is placed juxtaposition with red, blue, green and black[72]. Traditionally white and blue are placed in juxtaposition in the depiction of Balaraman and Krishna. But, in Bharat's poem, white is spoken of as the colour of Lord Siva and it is contrasted with the black colour of Vishnu, who sleeps in the ocean of milk[73]. In another place, white is contrasted with blue

---

69. பாஞ்சாலி சபதம், அழைப்புச் சருக்கம், பா. 152.
குயிற்பாட்டு, வ. 1-3.
வசன கவிதை, ஞாயிறு, கவிதை 13, வ. 12-14.

70. பட்டுக் கருநீலப்--புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடுநிசியில்—தெரியும்
நக்ஷத்திரங்களடி—கண்ணம்மா என் காதலி,
பா. 1, வ. 4-7.

71. வேற்கரு விழியுடையாள்—செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள்
—திருமகளைச் சரண்புகுதல், பா. 3. வ. 7-8.

எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
—பாஞ்சாலி சபதம், அழைப்புச் சருக்கம். பா. 152

72. பாஞ்சாலி சபதம், அழைப்புச் சருக்கம், பா. 152.

73. மோனத் திருக்கும் முழுவெண் மேனியன்
கருநிறங் கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன்
—புதிய ஆத்திச்சூடி, காப்பு, வ. 2-3.

in the depiction of full moon against the background of the blue sky[74].

In the earlier poems of Bharati, colour and light are used mostly as decorative imageries whereas in his later works they mainly form an integral part of his thematic content. Consequently, they are handled mostly in his later works either functionally, or with a deep symbolical undertone. This symbolical significance culminates in the depiction of the blue or black Kuyil both as a symbol of the Mother Goddess Kāḷi and beauty, which ultimately takes the poet on an astonishing journey into his soul and enables him to see it as the damsel of beauty.

---

74. சதமணி நெடுவானக் குளத்திடை
வெண்ணிலாவே!—நீ
தேசுமிகுந்த வெண்தாமரை போன்றனை
—வெண்ணிலவே. பா. 4, வ. 5-7

# 26. கவிமணியின் பாடல்கள்

க. காந்தி

இலக்கியம் அது தோன்றிய காலத்தின் கொள்கைகளை விளக்கவல்லதாக அமையும் நிலையினதாகையால் இலக்கியக் கொள்கைகளைக் காண்போர் மொழி இலக்கிய மரபுகளை உற்று நோக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். இலக்கியப் பண்பாட்டு மரபினை இனங்காண்பதற்கு நிறக் கொள்கையும் ஒரு துணைக் காரணியாக அமைகின்றது. அந்நிலையில் இங்குத் தமிழரின் நிறக் கோட்பாட்டு மரபுகள் மரபு வழிப் பட்டனவா சூழலில் சுழற்சிக்கு ஆட்பட்டனவா என்பதனைக் காணும் போக்கில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்களில் நிறங்கள் எவ்வாறு பயன்பட்டுள்ளன என்பதனைக் காண்போம்.

குழந்தைக் கவிஞராகக் கருதப்படும் கவிமணியின் படைப்புகளில் 'மருமக்கள் வழி மான்மியம்' ஒரு சமுதாய வழக்கப் புரட்சிக்கு வழிகாட்டிய பெருமை படைத்தது. அவரது நிறக் கோட்பாடு மரபு வழிப்பட்ட ஒன்றாகவே காட்சியளிக்கின்றது. நிறத்தினைக் குறிப்பதற்குக் கவிஞர் நிறம், வண்ணம், வர்ணம், சாயம் ஆகிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் நிறம், வண்ணம் ஆகிய சொற்கள் மிகுதியான பயிற்சியும் வர்ணம், சாயம் ஆகிய சொற்கள் ஓரிரு இடங்களிலும் பயின்று வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கவிஞர் கையாண்ட நிறங்களாகச் சிவப்பு, வெண்மை, கறுப்பு, நீலம், மஞ்சள், பொன், சாம்பல் ஆகியவை தென்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் கவிஞரால் எவ்வெவ்வாறு, எவ்வெந்நிலைகளில் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதனைக் காண்போம்.

## சிவப்பு

இலக்கியத்தில் நிறங்கள் பொருளின் பண்புணர்த்தவும் குறியீட்டு நிலையிலும் பயன்பட்டு வருகின்றன. இந்நிறங்களை ஒவ்வொரு மரபினரும் கையாளும் விதத்தில் சிற்சில மாறுபாடுகள் தென்படுகின்றன. அம்மாறுபாடுகள் அவர்களின் பண்பாட்டு மரபினை உணர்த்தும் பாங்கில் அமைந்து நிற்கக் காண்கிறோம். பொது நிலையில் சிவப்பு, குருதி மற்றும் நெருப்பு ஆகியவற்றின்

குறியீடாக நிற்பினும் மேலை நாட்டுக் கிறித்தவர்களிடையே அது தெய்வீக் காதல், சக்தி, அரசமேலாண்மை, போர், சோதனை ஆகியவற்றின் புலப்பாடாகவும் கருதப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் சிவப்பு நிறம் புனிதத் தன்மையின் குறியீடாகவும், சீனாவில் அது மகிழ்ச்சியின் புலப்பாடாகவும் கருதியிருப்பதாகக் கலைக் களஞ்சியம் சுட்டுகின்றது. தமிழர் சிவப்பு நிறத்தினைச் செயல்வேகம், ஆண்மை, குருதி, போர், தியாகம், எழுச்சி, தாகம் ஆகியவற்றைக் குறிப்பதற்காகக் கையாண்டுள்ளதாகக் குறிப்பர்.

சிவப்பு நிறத்தின் தன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கவிஞர் இரத்தத்தைக்கூறிச் செல்வதும், பவளத்தை ஒப்புமையாக்குவதும் செக்கர் வானத்தைக் காட்டிச் செல்வதும், கோபக் கண்களைக் கூறுவதும், செப்பஞ்சுக்குழம்பு செந்தாமரைமலர் ஆகியவற்றோடு சார்த்திப் பேசுவதும் மற்றும் செம்மறி, செங்குதிரை ஆகியவற்றோடு இணைத்துப் பேசியிருக்கும் நிலையும் சிவப்பு அதனோடு தொடர்புடைய நிறங்களுக்கும் பயன்பட்டுள்ள நிலையினை எடுத்துக்காட்டும். மேலும், சிவந்தவன் எனப் பொருள்படும் சிவனின் நிறமும் சிவப்பு என்று பேச்சு வழக்கில் கருதும் நிறத்தின் தன்மையினை உணர்த்தும் பாங்கில் அமைந்திருக்கக் காண்கிறோம். இந்நிலைகள் கொண்டு சிந்திக்கும் பொழுது கவிஞர் சிவப்போடு ஒட்டுறவுடைய நிறங்கள் அனைத்தையும் செம்மை நிறமாகக் கருதியிருக்கிறார் என்பது தெளிவாகின்றது. செம்மை என்ற அடை பயன்படுத்தப்பட்டிருக்கும் இடங்களைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது அங்கு உயர்வு அல்லது சிறப்புக் கருதிய குறியீடாகப் பயன்பட்டிருக்கின்ற நிலையினைக் காணமுடிகின்றது. இதற்குச் சான்றாக நாம் செந்தமிழ், செஞ்சொல், செங்கோல், செம்மல், செவ்வை, சேவடி, செங்கை, செம்பொன் ஆகிய கவிஞரின் சொல்லாட்சிகளைச் சான்றாக்கலாம்.

## பச்சை

பச்சை செழுமையின் அறிகுறியாக நிற்பினும் அது மேலும் பல பொருண்மைகளில் பயின்று வந்திருக்கக் காண்கிறோம். பொதுநிலையில் பசுமை நம்பிக்கையினையும் அமைதியினையும் குறிக்கும் குறியீடாகப் பயன்படுவதாகக் காட்டுவர். மேலும் அது நிலைபேறு, நினைவு, புதுமை, வளம், வாழ்வு ஆகிய பொருண்மையின் குறியீடாகஇலக்கியத்துள் பயன்பட்டிருப்பதாக

எடுத்துரைப்பர். அதைக் கருத்தில் கொண்டு கவிமணியின் பயன் பாட்டினை நோக்கும்பொழுது பாடல்களில் அவர் இளமை, வளம், பசுமை, ஆகிய பொருண்மைகளில் பயன் கொண்டுள்ளார் என்பதனை அறியமுடிகின்றது. இவற்றில் பசுமை, இளமை, வளம் ஆகியவை பயன் பாட்டடிப்படையில் முறையே அமையக் காண்கிறோம். இளங் குழவியைக் குறிக்கப் பச்சைப் பசலை என்ற சொல்லாட்சியைக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பசுமை கண்ணுக்கினிமை சேர்க்கும் நிலையினதாகையால் தமிழைத் தண்டமிழ் எனவும் வருணித்திருக்கக் காண்கிறோம்.

## வெள்ளை

வெள்ளை கற்புக்கும் தூய்மைக்கும் அறிகுறியாகி நிற்கும் அடையாளமாகும். அது தூய்மை, கற்பு, பொறுமை, கன்னிமை, தெய்வீகம், அமைதி, அருள் ஆகிய பண்புகளை விளக்கும் குறியீடாக வாழ்க்கையிலும் இலக்கியத்திலும் பயின்று வருவதாகக் குறிப்பர். வெள்ளை என்னும் சொல் வெளிச்சம் (விளக்கம்) என்னும் சொல்லினின்று பிறப்பதாகக் காட்டுவர். வெளிச்சம் புலப்பட்டுத் தோன்றுதலால் நட்சத்திரம் வெள்ளி எனவும், நிலா வெண்ணிலா எனவும் பெயர் பெறுகின்றன. வெள்ளை நிறத்தின் வெளிப்பாடாகக் கவிஞர் பால்நிறம், பிச்சிப்பூவின் வெண்ணிறம், வெண்ணெய், வெண்சங்கு, வெள்ளைப்பசு ஆகியவற்றைக் காட்டுவார். ஆங்கிலேயரைக் குறிக்க வெள்ளையர் எனவும், சீமை வெள்ளையர் எனவும் இனஞ்சுட்டிப் பேசுவார். கதிரவன் தோன்றி ஒளிதருவதைக் 'கிழக்கு வெளுக்குது' எனச் சுட்டுவார். இங்கு, இருள்நீங்கி ஒளி விளக்கம் பெறுவதையே வெளுக்கிறது எனக் குறித்துள்ள நிலைமையினைக் காண்கிறோம். வெள்ளி ஆகிய உலோகம் வெள்ளை நிறமாகக் கருதப்பட்டதற்கு அதனுடைய ஒளித்தன்மை காரணமாகி இருக்கலாம். வெண்மையினைக் கற்புக்கோ அல்லது தூய்மைக்கோ அறிகுறியாகப் பயன்படுத்தவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. கவிமணியின் பாடல்களில் வெள்ளை நிறம் நிறப்பண்பாலும் ஒளிப்பண்பாலும் பயின்று வந்திருக்கின்ற நிலையினையே காண முடிகின்றது.

## கறுப்பு

கறுப்பு பொதுநிலையில் துக்கத்தைக் குறிக்கும் குறியீடாகப் பயன்படுத்தப்படக் காண்கிறோம். ஒளியை உட்புகவிடாத அடர்த்தியான பொருள்களே கறுப்பான தோற்றம் காட்டுகின்றன. கறுப்பு நிறமல்ல, அது ஒளியின் ஊமையால் தோன்றும்

காட்சியளவினதே என்ற கொள்கையும் நிலவுகின்றது. குறியீடாகக் கறுப்பு நிறம் நரகம், சாவு, துக்கம், இரவு, அறியாமை, பாவம், சாத்தான், மூடநம்பிக்கை ஆகியவற்றை உணர்த்தும் பாங்கினதாகப் பயின்று வருவதாகக் கூறுவர். இங்கு அந்நிறத்தைக் குறிக்கக் கார், இருள், கறுப்பு, கரி கருமை ஆகிய சொல்லாட்சிகள் பயின்று வருகின்றன. பசுமையான அடர்ந்த சோலையைக் கவிஞர் இருட்சோலை எனக் குறிப்பது காட்சியளவில் மிகைப்படுத்திய கூற்றாகத் தென்படுகிறது. அடர்த்தி மிகுந்த நிறங்களைக் கறுப்பு நிறமாகக் காட்டும் பாங்கு கவிமணி பாடல்களில் கருங்கொப்பு, கருந்தாளி ஆகிய பயிற்சி நிலைகளால் அறியலாம். தவறான வழியை இருள்வழி என உருவகப்படுத்தியுள்ள நிலை அதன் தன்மையினைக் கருத்துப் புலத்தில் உருவாக்கத் துணை செய்கின்றது. கவிமணி பாடல்களில் கறுப்பு நிறம், கருமைப் பண்பு, அறியாமை, மூடநம்பிக்கை ஆகிய நிலைகளில் பயின்று வந்துள்ளதனைக் காணமுடிகின்றது.

## நீலம்

நீலநிறம் குளிர்மையை விளக்கும் நிலையினதாக மேன்மையினையும் தெய்வீக வெளிப்பாட்டினையும் புலப்படுத்தும் குறியீடாகப் பயின்று வருவதாகக் குறிப்பர். கிறித்தவர்களின் சமயக் குறியீட்டு நிலையில் அது உண்மை, கடவுள் தன்மை இரக்கம், தெய்வீக உறவு ஆகியவற்றைக் குறிக்கும் நிலையினதாக அமைவதாகச் சுட்டுவர். கவிமணியின் பாடல்களில் நீலநிறம் வான், மணி, நீலமலர், கடற்பரப்பு ஆகிய பொருண்மையில் பயின்று வரக் காண்கிறோம் முட்டையின் மேல் தோல் நிறத்தினைச் 'சோதி வெண்நீல நிறத்தோடு' என வெண்மையில் நீலநிறத் தோற்றத்தினைக் காட்சிப்படுத்துகிறார். கவிமணியின் பாடல்களில் நீல நிறம் காட்சியளவினதாக வருணனை நிலையிலேயே காட்டப்பட்டிருக்கின்றது. அது குறியீட்டு அடிப்படையில் பயன்படவில்லை என்பது சுட்டத்தக்கதாக அமைகின்றது.

## மஞ்சள்

மேலைநாடுகளில் மஞ்சளும் நீலமும் பாதகமான நிறங்களாகக் கருதப்படுகின்றன. நாம் மஞ்சள் நிறத்தினை மங்களமான நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தி வருகின்றோம். மஞ்சள் நிறம் பற்றிய குறிப்பு கவிமணி பாடல்களில் அருகியே

பயன்பட்டுள்ள நிலையினைக் காணமுடிகின்றது. இவ்வாறு அருகிய பயிற்சி பெற்றமைக்கு மஞ்சளைப் பொன்னிறமாகவும், தங்க நிறமாகவும் உருவகித்த நிலை காரணமாகலாம். மஞ்சள் நிறம் மங்கள நிறமாகக் கருதப்பட்டதனை 'அன்பின் வெற்றி' என்ற பாட்டில்,

'மங்கள மாக மஞ்சள் மிகப்பூசி
அங்குநீ ராட்டக் கனாக்கண்டேன்'

எனக் கவிஞர் காட்டியிருப்பது தமிழர் மஞ்சளை மங்களப் பொருளாகக் கருதியமையினைத் தெளிவுபடுத்தும். மஞ்சள் நிறத்தைவிட மஞ்சளைப் பற்றிய குறிப்பே கவிமணியின் பாடல் களில் மிகுதியாகப் பயின்று வந்திருக்கிறது. பெண்டிர், சிறுவர் ஆகியோரை மஞ்சள் நீரால் குளிப்பாட்டும் வழக்கம் சில பாடல் களில் சுட்டப்பட்டிருக்கக் காண்கிறோம். இச் செய்திகளிலிருந்து மஞ்சள் நிறத்தினைக் கவிமணி அருகியே பயன்படுத்தியுள்ளார் என்பதும், அதனைக் குறிக்கப் பொன்னிறம், தங்கநிறம் போன்ற சொல்லாட்சிகளைப் பயன்கொண்டுள்ளார் என்பதும் அது மங்கள நிறமாகக் கருதப்பட்டதென்பதும் புலனாகின்றன.

இவை தவிரச் சாம்பல் நிறம் பற்றிய குறிப்பும் ஓரிடத்தில் பயின்று வந்துள்ளது. சாம்பல் நிறம் வெண்மையும் கருமையும் இணையும் தோற்றத்தால் தென்படுவது. நரைபற்றிய குறிப்பும் ஓரிடத்தில் சுட்டப்படுகின்றது. கருமையான மயிர் வெண்மையாக மாற்றம் பெறும்போது அது நரை என அழைக்கப்படுகின்றது. இதனை நாம் வெண்மைக்குள் அடக்கிக்கூறலாம். வானவில்லின் நிறத்தைக் கவிஞர் எண்ணிக்கை கூட்டிக் கூறாது நிறங்கள் எனப் பன்மையில் கூறியிருப்பதுவானவில் நிறங்கள் பற்றிய கொள்கை யினைக் கவிஞர் தெளிவாக்கவில்லை.

கவிமணி நிறக்கோட்பாட்டில் நிறங்களின் தன்மை இயற்கைப் பொருட்களில் புலப்படும் நிலையினைக் காட்டியுள்ளாரே தவிரக் குறியீட்டு நிலையில் அதிகம் பயன் கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது. மேலும், பண்டைய தமிழ்மரபு காக்கும் போக்கில் மரபு வழியான அடைகளையும் உருவகங்களையும் பயன்கொண்ட நிலையில் முறையே சிவப்பு, பச்சை, வெள்ளை ஆகியவை மிகுந்தும் கறுப்பு, நீலம், மஞ்சள் ஆகிய நிறங்கள் அருகியும் பயன்பட்டுள்ள நிலையினைக் காணமுடிகின்றது.

# 27. பாரதிதாசன் கவிதைகள்

சே. நமசிவாயம்

சுற்றிவளைக்காமல் நினைத்த கருத்தை நேராய்ச் சொல்பவை பாரதிதாசனின் கவிதைகள். எனவேதான் குறிக்கோளுக்காகவே வாழ்ந்த அவரது கவிதைகளை நெருப்புக் கவிதைகள் என அழைக்கிறார்கள். பாரதிதாசனின் பாடல்கள், காவியங்கள் எல்லாவற்றுள்ளும் அவரது உள்ளமும் உணர்ச்சியும் வெளியாகிறது. அச்சமில்லை என்று ஆர்த்த பாரதிக்கு வாரிசான பாரதிதாசனாரின் கவிதைகள் தேனூறும் நற்கனிகளாக விளங்குகின்றன.

செவ்விய மதுரஞ் சேர்ந்த பொருளில்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர்

என கவிஞருக்கு இலக்கணம் வகுக்கின்றார் கம்பர். அவ்விலக்கணத்தின் மறுபதிப்பாக பாரதிதாசன் விளங்குகின்றார்.

**வண்ணக் கவிஞர்**

ஒரு செயலைத் தொடங்குகையில் கடவுளை நினைத்துத் தொடங்குவது நம் நாட்டில் பண்டு தொட்டு நலவிவரும் ஒரு பழக்கமாகும் மகாகவி பாரதியாரின் விருப்பப்படி புரட்சிக் கவிஞர் பாடிய முதற் பாட்டே சக்தியைப் பாராட்டி பாடப் பட்டதாகும்.

எங்கெங்கு காணினும் சக்தியடா! தம்பி
எழுகடல் அவள் வண்ணமடா![1]

என எங்கெங்கும் காணும் சக்தியின் நிறமாக எழுகடலின் நிறத்தைக் குறிப்பிடுகின்றார். மற்றோர் இலக்கியத்துள்ளும் சக்தி நீலமேனி வாயிழையாக நினைக்கப் படுவது போலவே சக்தியை மங்கையாக உருவகிக்கும் இவர் எழுகடல் அவள்

---

1. பாரதியார் ஊக்குவிக்க பாரதிதாசன் பாடிய முதற் பாடலிது. இந்தப் பாட்டின் மூலம் புரட்சிக்கவிஞர் தமிழ் நாட்டிற்கு அறிமுகமானார்.

வண்ணம் என்கிறார். பல நிற உடைகள் பூண்டு பரவசம் ஊட்டுமோர் பருவ மங்கையர் என்பது போல இச் சக்தி மங்கையின் சாயலும் எழுகலால் எடுப்பாகின்றது எனலாம். மேலும் பொன் ததும்பும் அந்தி வானத்தின் குன்றின் மீதேறிக் கண்ட கவிஞர் அது தனக்குப் போதத்தைத் தந்ததாகக் கூறு-கின்றார். கடலையும், வானையும் வண்ணமயில் வேலோன் என உவமைக்கும் கவிஞர் அவற்றை ஒதுக்கி, என்ன எண்ண இனிக்கும் அக்காட்சிகளுக்கு கோயில் ஏது? என வினவி

வண்ணம் வேண்டில் எங்கும் உண்டாம்

என நிறங்கள் எங்கும் பரவியிருக்கும் தன்மையைச் சிறப்புற எடுத்துக் காட்டுகின்றார்.[2] பல நிறங்களைச் சுட்டுவதற்குரிய பொதுவான சொல்லாக வண்ணத்தைக் கவிஞர் பல இடங்களில் பயன்படுத்துகின்றார். வானத்தை வருணிக்கும்போது,

...............இரு
கண்ணைக் கவர்ந்திடும் ஆயிரம் வண்ணங்கள்
கூடிச் சுடர்தரும் வான்[3]

என வானத்தை ஆயிரம் வண்ணங்களை உடையது எனப் பாராட்டுகின்றார். வண்ண மலர்ச் சோலையில் தனது எண்ணம் வேறான திறத்தைக் கூறுவதையும் கவிஞர் பாடலில் காணலாம்[4]. பூசணிக்காய் மகத்துவத்தைக் கூற வந்த கவிஞர்

---

2. குன்றின் மீது நின்று கண்டேன்
கோலம் என்ன கோலமோ!
பொன் ததும்பும் 'அந்திவானம்'
போதந் தந்த தேடி தோழி
வண்ணம் வேண்டில் எங்கும் உண்டாம்
மயில் வெற்பும் நன்றே தோழி
—பாரதிதாசன் கவிதைகள் ப. 64. காட்சி இன்பம்

3. பக். 62. மக்கள் நிலை, பாரதிதாசன் கவிதைகள்

4. வண்ணமலர்ச் சோலையிலே
எண்ணம் வேறாகி இருக்கின்றேன் நான்.
பாரதிதாசன் கவிதைகள் பக். 2.

'வண்ணம்' என்ற சொல்லினால் ஒரு கவி விளையாட்டே நடத்தி காட்டுகின்றார்.

மெய் வண்ண வீடுகட்ட உனைத்தொங்க விடுகின்றார்கள்
செய் வண்ணவேலை செய்து திருமாடம் முடிக்கின்றாய் நீ.
பொய் வண்ணப் பூசனிக்காய்! கறியுனைச் செய்துண்டேன்-உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் கறி வண்ணம்
இங்குக் கண்டேன்[5]

என வரும் பாடல் வண்ணக் கவிஞரின் எண்ணத்தில் எழுந்த கவி வண்ண விளையாட்டைக் காட்டி நிற்கும் சிறந்ததொரு சான்றாகும். இங்கு அழகு, நிறம், வடிவு, சிறப்பு, விதம் என்ற பொருள்களின் வண்ணம் என்ற சொல் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். பொதுவாக நிறங்களைக் குறிக்க கவிஞர் 'வண்ணம்' என்ற சொல்லாட்சியைப் பல இடங்களில் பயன்படுத்துகின்றார்.

மரகத உருக்கின் வண்ணத் தடாகம்[6]

வண்ண இயற்கை - தன்னை
அங்கு விரித்தே - தன்
சென்னியை உள்ளுக்கும் வாங்கி அச்சேவலும்
செப்பும் மணிவாயால்[7]

சிவப்புடைய மணிபொறுக்கிச் செவ்வானின்
வண்ணத்துச் செம்பில் இட்டுச்
சுவைப்பார்கள் எடுத்துண்டால் சுறுக்கென்று
தித்திக்கச் செய்த தன்றோ[8]

கண்ணுக்கொரு வண்ணப்புறா
காதுக்கவள் கானக்குயில்'[9]

வண்ண கலாப மயில்[10]

---

5. பக் 188. பூசணிக்காய் மகத்துவம், பாரதிதாசன் கவிதைகள்.
6. பக். 53. மயில். பாரதிதாசன் கவிதைகள்.
7. பக். 91. மக்கள் நிலை, பாரதிதாசன் கவிதைகள்.
8. பக். 82. விருந்தோம்பல், குடும்ப விளக்கு
9. பக். 39. வந்தால் வரச்சொல், தந்தால் தரச் சொல் காதல் பாடல்கள்.
10. பக். 62. மக்கள் நிலை, பாரதிதாசன் கவிதைகள்.

## வண்ணம் என்ற சொல் விதம் என்ற பொருளில் வந்தமை

இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானோ![11]

அம்மைமயீர் சொன்ன வண்ணம்
அனைத்துக்கும் கல்வி வேண்டும்[12]

வளம்பெற நிறைந்த இளம்பயிர்ப் பசுமை
மரகதம் குவிந்த வண்ணம் ஆயிற்று[13]

## நிறம்

வண்ணம் என்ற சொல்லைப் பல்வேறு நிலைகளில் பயன் படுத்திய கவிஞர் நிறம் என்ற தலைப்பிலும் நீலம், வெண்மை, கறுப்பு சிவப்பு, பச்சை மஞ்சள் ஆகிய நிறங்களைத் தொகுத்து கவிதையொன்றை வடித்துத் தருகிறார்.

வானம் நீலம்
மல்லிகை வெண்மை
ஆனைகறுப்பே
அலரி சிவப்பே
ஏன் இதில் ஐயம்?
இல்லைதான் பச்சை
தேன்மா அரைக்கும்
தினைதான் மஞ்சள்[14]

எனவரும் வரிகள் இதனை விளக்கும். 'சாமந்தி வெள்ளை நிறத் திலும், வரகு நிறத்திலும், சிவப்பு நிறத்திலும் பணத்தை அள்ளி வீசுவதையும், கருநீலச் சாமந்தி மலர்ந்து அழகு தருவதையும் கண்டு கவிஞர் வியக்கிறார்[15]. 'சிவப்பு, பச்சை, நீலம் மஞ்சள், ஊதா எனப் பலநிறங்களும் உள்ளடக்கிய வான வில்லைக் கண்டும் கவிஞர் பல கவிதைகளில் பரவசப்படு

---

11. பக். 20 புரட்சிக்கவி பாரதிதாசன் கவிதைகள்.
12. பக். 75. விருந்தோம்பல், குடும்ப விளக்கு
13. பக். 153. விபர்வைக்கடல். பாரதிதாசன் கவிதைகள்.
14. பக். 60. நிறம், இளைஞர் இலக்கியம்.
15. பக். 40 பூச்செடி, இளைஞர் இலக்கியம்.

கின்றார்.[16] இவ்வாறு நிறம் என்ற தனித் தலைப்பின்கீழ் அவர் தரும் கவிதைகளின் மூலம் நிறங்களின் மேல் கவிஞருக்குள்ள ஈடுபாட்டை அறிந்து கொள்ளலாம்.

வண்ணத் தமிழ்ப்பதம் பண்ணிற் கலந்தென்றன்
நெஞ்சையும் வானத்தையும்—குளிர்
நீரையும் நிலவையும் தமிழர் குலத்தையும்
ஒன்றெனச் செய்ததுவே[17]

எனப்பாடி தனது வண்ண ஈடுபாட்டைக் காட்டிய கவிஞர் திறம் போற்றுதற்குரியது.

வெண்மை, கருமை, செம்மை, பச்சை, நீலம் முதலிய நிறங்கள் பெரும்பான்மை நிலையிலும், மஞ்சள் மிக அருகிய நிலையிலும் பாரதிதாசன் பாடல்களில் பயன்படுத்தப் படுகின்றன. மற்றக் கவிஞர்களுக்கும், பாரதிதாசனாருக்கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடு நிறங்களை அவர்கள் தமது கவிதைகளில் பயன்படுத்தும்போது வெளியாகிறது. தமது கொள்கைகளையும், நீதிகளையும் தெரிவிக்கப் பாரதிதாசனார் நிறங்களைப் பயன்படுத்திக்கொண்டார் என்பது தெளிவு.

---

16. செம்மை வண்ணம் செங்கொடி போல்
சிரித்து விழுந்தது
அம்மையின்கை பச்சை-வளையல்
அங்குத் தெரிந்தது
மீன் கொத்திகள் பறப்பது போல்
நீலம் வளந்தது
மான் குட்டிகள் விரைவது போல்
மஞ்சள் விளைந்தது
ஓவியனின் தூரிகைபோல்
ஊதா ஒளிர்ந்தது
தூவி மலர் மாலை போல் கரு
நீலம் மிளிர்ந்தது.

ப. 96. ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது

17. ப. 92. தமிழ் உணவு, பாரதிதாசன் கவிதைகள்.

## வெண்மை

நிறம் குறியீடாக கருத்தினைச் சுட்டுதலைப் பாரதிதாசனின் பாடல்கள் பலவற்றில் காணலாம். கவின் நிலையைக் கண்டு இன்பம் பெறுதலை, காத்திருந்து வெண்சோறு கண்ட இன்பத்திற்கு ஈடாகக் கூறும்போது எளியவருக்காக இரங்கும் கவிஞரின் உள்ளம் வெளிப்படுகிறது.[18] உடை வெண்மையாயிருந்தாலும் உள்ளத்தால கறை படிந்த மடாதிபதி ஒருவனைப் பற்றிக் கூறும் போதும் வெண்மை குறியீடாக வருது நிற்றலைக் காணலாம்.[19] தாய்மையின் சிறப்பே குழந்தை பேணுதலில்தான் அடங்கியிருக்கிறது. தாயின் உள்ளத்தைப் போலவே குழந்தைகளுக்கு அணிவிக்கும் உடைகளும் வெள்ளையாக இருக்க வேண்டும் என்ற கருத்து குடும்ப விளக்கில் வலியுறுத்தப்படுகிறது. இது ஒன்றி படுக்குப்பாயும், மெத்தையும், தலையணிகளும் கூட வெண்மையாயிருந்தால் அந்நிறத்தின் குணமே மாந்தரின் மனத்தையும் தழுவும் என்பதைக் குறியீடாகக் காட்டுகின்றார்.

வெண் தாழையினால்
வாய்ந்திருக்கும் பாய் விரித்து.
வெள்ளை யுறை யிட்டிருக்கும்
மெத்தை தலையணைகள்[20]

என வரும் கவிதை வரிகள் இதனை வலியுறுத்தும்.

வானத்தை வெண்ணிலா வந்து தழுவுவதும்[21]

---

18. காத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக்காணும் இன்பந்தானோ!
பக். 20. புரட்சிக்கவி-பாரதிதாசன் கவிதைகள்.

19. 'எங்கள் மடாதிபதி
வெண்ணிறப் பட்டுடுத்திச்-சந்தனம்
மேனியெலாம் பூசி'.
ப. 176 சைவப்பற்று, பாரதிதாசன் கவிதைகள்.

20. பக். 39. விருந்தோம்பல், குடும்ப விளக்கு.

21. பக் 23. புரட்சிக்கவி, பாரதிதாசன் கவிதைகள்.

வெண்பூத்து மல்லிகை கண்டு சிரித்தனள்
என்னென்பேன் அதோபூரிக் கின்றது
வெண்ணிலவும்[22]

மெல்ல நடக்கும் வெள்ளை
மாட்டினால்—தொல்லை[23]

எனப் பல கவிதைகளில் வெண்ணிறத்தைப் பற்றி கவிஞர் சொல்லிச் செல்கின்றார்.

கருமை

பொதுவாகக் கறுப்பு நிறம் துயரத்தைக் குறிக்கும் குறியீடாக வருகிறது. இருளை உவமிக்கும் போதெல்லாம் கருமை, என்னும் அடையைச் சேர்த்து கவிஞர் வருணிக்கின்றார். கருமையான இருளால் சூரியன் மறைக்கப்படுவதில்லை; கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போவதில்லை. அதுபோலவே பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிக்க இயலாது என்ற கருத்தில் வரும் பாடல் வரிகள் மிக்க இன்பம் பயப்பவை.[24]

மேற்றிசையில் சூரியன் போய்விழுந்து மறைந்திட்டன்
மெல்ல இருட்கருங் கடலில் விழுந்ததிந்த உலகம்[25]

என்று சொல்லும்போது ஆதவன் மறைந்ததும் இருட்கருங் கடலில் இந்த உலகம் விழுந்ததாகப் பாடி நிற்கின்றார் விரிந்த வானத்தின் ஒளி வெள்ளத்தை விரைந்து வந்து கருமேகம் விழுங்கக்கூடும் என்று சொல்வதின் மூலமும்

கறுப்புத்
தோலுக்குள் காயிதத்தில்
தாங்கும் மூக்குக் கண்ணாடி[26]

---

22. பக். 74. எழுதாக்கவிதை, பாரதிதாசன் கவிதைகள்.
23. பக். 49. விருந்தோம்பல், குடும்ப விளக்கு.
24. பக். 23. புரட்சிக்கவி. பாரதிதாசன் கவிதைகள்.
25. பக். 74. எழுதாக்கவிதை, பாரதிதாசன் கவிதைகள்.
2 பக். 13. குடும்ப விளக்கு.

என மூக்குக் கண்ணாடி இருக்கும் மிடத்தைக் குறிப்பிடும்போதும் கறுப்பு நிறத்தைப் பாரதிதாசனார் சுட்டி நிற்கின்றார். குழந்தை மனத்தின் கொடுமையைக் குறிக்க வந்த கவிஞர்,

ஏழுவயதே எழிற்கருங் கண்மலர்[27]

எனக் குறிப்பிடும்போது 'கருங் கண்மலர்' எனச் சொல்லி இது துயரத்தால் வாடப் போகிறது என்பதை வருணிப்பது போலக் காட்டாமல் காட்டிவிடுகின்றார். காரிருள் மிக்க அகத்தில் நல்ல கதிரொளி நீதான் எனப் பத்திரிகையைப் பாராட்டுகின்றார் கன்னங் கருத்த இருட்டின் கறையே என இருளை உவமிப்பதன் மூலம் அது எவ்வளவு கறுப்பானது என்பதைச் சுட்டுகின்றார்.

## சிவப்பு

சிவப்பு நிறம் அழகைக் குறிக்கும் குறியீடாகவும், ஆபத்தைக் குறிக்கும் குறியீடாகவும் பயின்று வருகிறது. காலையில் உதிக்கும் கதிரோனைச் சிவப்பு எனும் அடையைச் சேர்த்து 'செங்கதிரோன் எனப் பல இடங்களில் பாரதிதாசனாரின் கவிதைகளில் கூறப் படுகிறது.

'செங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ் எனப் பாடும்போது செங்குருதி எனவும்,

சேந்துநீர் செங்கை ஏந்தித், தெருக்கதவு
சார்ந்த தாழ் திறந்து[28].

எனப் பாடும்போது செங்கை எனக்கூறும் போதும் 'சிக்காய்த் தூள் செங்கையில் அள்ளி' எனும் போதும்[29] சிவப்பு நிறம் சுட்டப்படுகிறது. தணல் நிறமாகும் சிவப்பு நிறமாம் பழ நிறத்தில் தமிழ் நிகர் சுவையைக் கண்டவிதமும் குடும்பவிளக்கில் காட்டப்படுகிறது. இதழைப் பற்றிய வருணனை வரும் போதெல்லாம் செவ்விதழ் என்ற தொடர் கவிஞரால் பயன் படுத்தப்படுகிறது.

---

27. பக். 100. சங்கநாதம், பாரதிதாசன் கவிதைகள்.
28. பக். 6. குடும்ப விளக்கு.
29. பக். 6. குடும்ப விளக்கு.

அடைகாய் சிவக்கவே மூத்தார்
மென்றிருந்தார்[30]

கட்டுடல், செந்தனலில்- கட்டிக்
கந்தகமாய் எரியும்'[31]

திங்கள் நிகர் உணவைத் தின்றாலும்
அதுவும் நீ! தீ! தீ! செந்தீ -[32]

'சிவப்புடைய மணிபொக்கிச் செவ்வானின்
வண்ணத்துச் செம்பில் இட்டு![33]

என வரும் வரிகளோடு மேலும்பல கவிதைகளும் சிவப்பு நிறத்தைச் சுட்டி நிற்கின்றன.

பச்சை எனும் சொல் நிறத்தை மட்டும் குறிப்பதற்குப் பயன் படுத்தப்படாமல் வேறு பொருளிலும் பயன்படுத்தப் படுவதை கவிஞரின் கவிதைகளில் காணலாம்.

பாரதத் திருத் தாயெனும் பேச்சிலே
பச்சை யன்பு மொழிந்திடுகின்றவர்[34]

பச்சை ரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடைய தாகத் தந்தவெவர்

என வரும் கவிதை வரிகளில் சொல்லப்படும் பச்சை நிறம் பொருளைச் சுட்டாமல் மாறி வருகின்றமையை விளக்கும்.

---

30. பக். 78. விருந்தோம்பல்–குடும்ப விளக்கு.

31. பக். 59. கானல், பாரதிதாசன் கவிதைகள்.

32. பக். 71. காதற்கடிதங்கள்

33. பக்: 82. விருந்தோம்பல், குடும்ப விளக்கு

34. பக். 20. புரட்சிக்கவி, பாரதிதாசன் கவிதைகள்

நீலம்

பெரும்பாலும் வானத்தைப் பற்றி வருணிக்கும்போதெல்லாம் கவிஞர் நீல நிறத்தைச் சுட்டுகின்றார். 'நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலவென்று காட்டுகின்றயோ ஒளிமுகத்தை'[36] என வரும் கவிதை வரிகள் நீல நிறத்தைச் சுட்டும் வரிகளாக அமைந்துவிடாமல் கவிஞரின் கற்பனை வளத்தைக் காட்டும் சான்றாகவும் அமைந்துள்ளது. மேற்றிசைக் கதிர்ப்பழத்தை விருந்துண்டு நீல ஆடை மாற்றுடையாய் உடுத்து மரகத அணிகள் பூண்டு இரவுப் பொழுது வருகிறது எனச் சுட்டப்படும்போதும் நீலநிறம் குறிப்பிடப்படுகின்றது.

எழில்நீல வான் எங்க ணும் வயிரக் குப்பை[35]

விண்ணீலம் கார்முலோ[36]

நீலச் சுடர் மணிவானம் - ஆங்கே
நிறையக் குளிர் வெண்ணிலவாம்[37]

வெண்முகத்தில் நீலம் விளையாடிக்
கொண்டிருக்கும்[38]

தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது[39]

என இப்பாடல்களும் நீலநிறம் வந்து பயில்கின்றமையை விளக்கி நிற்கின்றன.

மஞ்சள்

குடும்ப விளக்கில் மாமன் மாமி வாங்கி வந்தவையாகத் தலைவி குறிப்பிடும்போது 'மஞ்சள்' என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது.

மஞ்சள் குங்குமம் கண்ணாடி
மை வைத்த தகரப் பெட்டி[40]

35. பக். 74. எழுதாக்கவிதை
36. பக். 75. ஷை
37. பக். 88. தமிழின் இனிமை
38. பக். 127. பெண்குழந்தை தாலாட்டு
39. பக். 5. குடும்ப விளக்கு
40. பக். 121 ஷை

மஞ்சள் மிக அருகிய வழக்காகப் பாரதிதாசனின் பாடல்களில் பயன்படுத்தப்படுகிறது.

## முடிவுரை

நிறங்களை வெறும் வருணனைகளுக்கு மட்டும் பயன் படுத்தாமல் குறியீடாக அமைத்து வாழ்க்கைப் பாடல்களையும் அறியுமாறு உணரச் செய்தவர் பாரதிதாசனார். பொது வுடைமைத் தத்துவத்தை உலகுக்குப் போதிக்க, சிவப்பு நிறத்தை கருவியாக்கிக் கொண்டுள்ளார் கவிஞர். சித்திரச் சோலைகளின் வாழ்வு முன்னம் எத்தனையோ பேர் இரத்தம் சொரிந்ததால் வந்தது என்ற கருத்துடன் வரும் பாடல் இதனை விளக்கி நிற்கும்.

## பின்னிணைப்பு

பயன்பட்ட நூல்

பாரதிதாசன் கவிதைகள்
செந்தமிழ் நிலையம்
இராமச்சந்திரபுரம், திருச்சி மாவட்டம்
பத்தொன்பதாம் பதிப்பு-1974.

# 28. வானம்பாடிக் கவிஞர்கள்

**வீ. அரசு**

பாரதி தொடங்கி தமிழ்க் கவிதைப் போக்கில் குறிப்பிடத் தக்க மாற்றங்கள் வடிவம் பெற்றன. அவர் கவிதையில் விடுதலை இயக்கம் புதிய வடிவம் பெற்றது. இடைக் காலத்தில் பக்தி இயக்கம் மத அடிப்படையிலும், பாரதி இயக்கம் நாட்டு விடுதலை அடிப்படையிலும் அமைந்திருந்தன. பாரதியைத் தொடர்ந்து தமிழ்க் கவிதையின் வடிவமும், உள்ளடக்கமும் மாற்றங்களைப் பெற்றன.

பாரதிபால் மாற்றம் பெற்ற தமிழ்க் கவிதைப் போக்கு எழுபதுகளில் வானம்பாடிக் கவிஞர்கள் வடிவம் பெறும் வரை ஒரே போக்கில் வளர்ந்து வந்தது. மேலும் மொழி, இனம் இவற்றின் மீது ஈடுபாடும் வேகமும் கொண்ட போக்குத் தெரிகிறது. இதனால் பாரதிதாசன் தொடங்கித் திராவிட மேலை இயக்கக் கவிஞர்கள் பரம்பரை தொடர்ந்தது. இதே காலத்தில் உலகச் சிந்தனைப் பாதிப்பால், தனி மனிதனை முதன்மைப் படுத்தும் கவிதைகளும் வெளிவந்தன. இவை மணிக்கொடி, எழுத்து போன்ற இதழ்களில் வெளிவந்தன.

இவ்விதம் 1930 முதல் 1970 முடிய உள்ள நாற்பது ஆண்டுகளில் திராவிட இயக்கப் போக்குக் கவிதைகள் பெரும்பகுதியும், தனி மனிதப் போக்கு முதன்மையாக்கும் 'புதுக்குரல்கள்' ஓரளவும் வளர்ந்து வந்த கவிதைப் போக்கில், 1971இல் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அதில் முதல் அணியில் நின்றவர்கள் வானம்பாடிக் கவிஞர்கள்.

தமிழக அரசியல் வரலாற்றில் கி.பி. 1967 இல் ஏற்பட்ட மாற்றத்தால் திராவிட இயக்கத்தவர்கள் கலை இலக்கியத்தின் மீது கொண்டிருந்த போக்கின் தன்மை வெளிப்பட வாய்ப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், திராவிட இயக்கத்தவருக்கு இருந்த வேக உணர்வும், தனி மனித நிலையைப் பாடியோருக்கு இருந்த கலை ஆக்கமும், ஒருங்கிணைந்து வானம்பாடிகள் ஆயினர். இந்த இளைஞர்கள் திராவிட இயக்கப் போக்கின் கோட்பாட்டிற்கு

மாற்று நிலையில்-மானுடத்தை முதன்மைப் படுத்தினர். எனவே மொழி இனம் இவற்றைக் கடந்து, 'மானுடம் பாடும் வானம் பாடி'களாய் வடிவம் பெறத் தொடங்கினர்.

'மனித சமுதாயத் துக்கங்கள்-துயரங்கள்-இங்கேயானாலும் எங்கேயானாலும் உறவும் சொந்தமும் கொண்டாடி அவைகளில் பங்குகொண்டு அவைகளை வேரோடு சாய்க்க எழும் வெண்கல நாதங்கள் நாங்கள். மனிதாபிமானம், முற்போக்கு, உழைப்பின் பெருமிதம், விஞ்ஞானம் இவற்றைக் கவிதைக் கலையில் உயிர் வனப்போடு அள்ளிப் பொழியும் வித்தக விரல்கள் எங்களுடையவை மொழி, இனம், சாதி சமய நிறக் கொடுமைகள் பிளவுகள், பேதங்களைத் தரைப் புழுவாய் மிதித்து நசுக்கும் ஆவேசம் எங்கள் மூலதனம் நவ நவமான உத்திகளில் புதுப் புதிதான உருவ வார்ப்புகளில் சமூகத்தில் நசுக்கப்பட்டவர்களின் நியாயங்களை உள்ளடக்கமாகப் புனையும் இலக்கியவாதிகள் நாங்கள்'' [1]

"என்ற வானம்பாடிகளின் தன் விளக்கம் - அவர்கள் பற்றிய வரலாற்று அறிவையும், அவர்கள் எடுத்துக்கொண்ட பாடு பொருளின் தன்மையையும் குறிப்பாக நிறவெறிக்கு எதிராக அவர்கள் குரல் எழுப்பியதும் ஆகிய இவர்களது கவிதை வடிவத்தை, இவர்கள் பாட எடுத்துக்கொண்ட உள்ளடக்கமே தீர்மானிக்கின்றது. இதனைத் தெளிவுபடுத்தப் பல்வேறு கவிதை உத்திகளையும் இவர்கள் பயன்படுத்தினர் நிறங்களையும் அந்த நோக்கத்தில் பயன்படுத்தியுள்ளனர் என்பதை வானம்பாடிக் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

வானம்பாடிக் கவிஞர்கள், எடுத்துக்கொண்ட நோக்கத்திற்கு வலிமை கூட்டவே நிறப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டனர். இந்த அடிப்படையில் அவர்கள் நிறத்தையும், அதன்பண்பையும் கையாண்டுள்ள முறைகளைத்தெளிவுபடுத்தப் பின்கண்ட பாகுபாடு பயன்படும்.

1. வரலாற்றை முதன்மையாகக்கொண்டு, அதன் பல்வேறு படிநிலைகள் பற்றிய சிந்தனையின்போது நிறத்தைப் பயன் படுத்தியுள்ள நிலை.

2 வாழ்க்கையை முதன்மைப்படுத்தி, அதன் பல்வேறு கூறுகளில் நிறப் பண்பை பயன்படுத்தியுள்ள நிலை.

வரலாறு என்பதே மனித வாழ்க்கையின் பல்வேறு கட்ட போராட்டங்கள். இதனை,

1. சமகால நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தல்
2. வரலாற்று வளர்ச்சி பற்றிய நன்னம்பிக்கை கொள்ளுதல்
3. அனைத்துலகப் பார்வையுடன் அணுகல்

ஆகிய பல்வேறு பண்புகளுடன் அணுகும்போது வரலாற்றின் முழுமையை உணரமுடியும்.

## 1. சமகால நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தல்

1971 தொடங்கி வந்து கொண்டிருக்கும் வானம்பாடிக் கவிதை இதழில் தொடக்க கால இதழ்களில் நடைமுறை நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கும் பண்பு மிகுதியாக இருந்ததைக் காண முடிந்தது அந்த நிகழ்வுகள், அன்றைய வரலாற்றுச் செய்திகளே அவற்றின் பல்வேறு போக்குகளை நிறங்களாகச்சுட்டுவதை நாம் பார்க்க முடியும் சான்றாக,

யந்திர யுகத்தின் மையிருளில்
மனித மனச் சூனியத்தில்
சிவப்புப் பறவையின் அலறல்...
வெள்ளை அட்டைகளின் வெறிப்பயணம்
வியத்நாமின் ஆத்மாவில் துளைகள்
அட்டைகளின் தணியாத குருதிச் சுசிப்பு[2]

என்ற பாடலில் ரவீந்திரன் எழுதியுள்ளார். அமெரிக்க-வியத்நாம் போர் நடந்ததை உலகு அறியும். வியத்நாம் மக்கள் மீது உழைப்பாளர் உலகம் பரிவு காட்டியது. வியத்நாம் மக்களைப் பார்க்கும் கவிஞரும், 'சிவப்புப் பறவைகள்' என்று கூறிய குரலிலேயே அமெரிக்கர்களை 'வெள்ளை அட்டை' என்கிறார். சமகால நிகழ்வாகிய வியத்நாம், போரின் இருதரப்பினரைக் காட்டச் 'சிவப்பு' வெள்ளை என்ற வண்ணங்கள் அவருக்குக் கை கொடுத்திருக்கின்றன. கொடுமையைக் காட்ட, அட்டை

---

1. வானம்பாடி – 10 வது இதழ், 'முத்திரைகளும்' முகத்திரைகளும் ப. 3.

உறிஞ்சுவதையும், இரக்க மனப்பாங்கைத் தெளிவுபடுத்தச் சிவப்புப் பறவையின் அலறலையும் கூறுகிறார். இதனை நிற உவமியல்' போக்கில் இங்கு எண்ணுவது சிறப்பு.

வாஷிங்டனில் சிரிக்கும்
வெள்ளை மாளிகையே!
உன்மீது களங்கத்தைப் பூசிக்
கறுப்பு மாளிகையாக்கினர்
இனி நீ துக்கத்தின் சின்னம்[3]

என்ற பாடலையும் இத்துடன் தொடர்ந்து நோக்கின் கறுப்பு என்பதற்குத் துக்கம் என்ற பொருளைச் சமகால வரலாற்று நிகழ்ச்சியான அமெரிக்க, வியத்நாம் போருக்குப் பயன்படுத்தியுள்ள பாங்கு வெளிப்படும். வெள்ளை களங்கமற்ற பண்பாகும். அக் குறியீட்டையும்; அதற்குக் களங்கம் கற்பித்து சோகமாக்கியதைக் கறுப்பாக்கிக் காட்டுவதில் கவிஞர் உள்ளம் வெளிப்படும். இதனால் இவரும் இவரை எத்த வானம்பாடிகளும் சமகால நிகழ்வுகள்மீது கொண்டுள்ள ஈடுபாடு புலப்படும்.

## 2. வரலாற்று வளர்ச்சி பற்றிய நம்பிக்கை கொள்ளுதல்

உலக மாற்றங்களை வரலாற்றின் மூலம் தெரிந்து கொள்ள இயலுகிறது. அவ்வகை மாற்றங்களே எதிர்கால வரலாற்றை உருவாக்கும் அடிப்படையிலும் அவை பற்றிய நன்னம்பிக்கை (Historic Optimism) கொள்ளும் வானம்பாடிக் கவிஞர்கள் அந்நம்பிக்கையை நிறத்தின் வழி வெளிப்படுத்தி உள்ளனர் என்பதை அவர்களின் படைப்பு வெளிப்படுத்துகிறது வானம்பாடியின் குரலில்,

இப்போது எம் கவிதை
வானமே! கிழக்கு வானமே!
'கொஞ்சம் சிவப்பாய் மாறேன்' என
நிலாப் பிள்ளையைப் போலாகி...
எவரிடத்தும் கெஞ்சித் தவித்து ஒப்பாரி பாடாமல்
அந்தரத்துச் சூரியனை

---

2. ரவீந்திரன், வானம்பாடி இரண்டாவது இதழ்.
3. அக்னிபுத்திரன், வானம்பாடி இதழ் ஐந்து.

எட்டிப் பிடித்து, ஒரு கட்டில் அடக்கி
உண்மை மனிதன் ஒவ்வொருவன் முற்றத்திலும்
கொண்டுவந்து நிறுத்தும்...[4]

இக்கவிதையில் வரலாற்று மாற்றத்தின் மீது நம்பிக்கை கொள்வது முதலில் தெரிகிறது. தம் கவிதை, இந்த மானுடத்தின் விளிக் குரலாய் நின்று முழங்குவதைச் 'சிவப்பு' என்ற நிறத்தைப் பெய்து புதுப்பொருள் வெளிப்படப் பாடும் முயற்சி தெரிகிறது. தம் கவிதை அயமாற்றத்தை உலகுக்கு உணர்த்தும் முயற்சியில் வெற்றி பெறும் என்ற உறுதி எதிரொலிக்கிறது.

திசைகளுக் கெல்லாம்
சிவப்பு முலாம் பூசும
சித்திரத்தின் திறமை
எங்களின்
உத்திரவாதம் பெற்றது தான்...[5]

இந்தப் பாடலில் வரும் 'சிவப்பு முலாம்' என்பதும் உலகமாற்றம் என்ற நம்பிக்கையை முன்வைக்கிறது. இவ்விதம் வானம்பாடிக் கவிஞர்கள், வரலாற்று நம்பிக்கையை முன்வைத்து, அதனைத் தெளிவுபடுத்தும் நிலைக்கு 'சிவப்பு' நிறத்தைப் பேரளவு பயன்படுத்தும் பாங்கைக் காண முடிகிறது.

## 3. அனைத்துலகப் பார்வையுடன் அணுகல்

வானம்பாடிக் கவிஞர்கள், வரலாற்றுக் கூறுகளை நிறங்களின் உதவியுடன் தெளிவுபடுத்த முயன்றுள்ளனர். அனைத்துலகப் பார்வையை முதன்மைப்படுத்த விரும்பும் கவிஞர் கறுப்பு, சிவப்பு என்ற நிறங்களைப் பயன்படுத்தி, தம் கருத்தை முன் வைக்கிறார்.

... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
கறுப்பு குயில்களின்
சிவப்பு ரத்தத்திற்கு
வல்லூறுப் பேய்கள்
வாய் பிளக்கின்றன ...
... ... ...

---

4. சேலம் தமிழ்நாடன், வானம்பாடி மூன்றாவது இதழ்.
5. தேனரசன், வானம்பாடி ஐந்தாவது இதழ்.

... ... ...
இந்த
உருண்டைக் காட்டின்
இருண்ட
உட்புறங்களில் . . . [6]

இந்த உலகத்தை உருண்டைக் காடாகக் காண்கிறார் கவிஞர் இதன் உட்பகுதி இருண்டிருப்பதாகவும் பேசுகிறார். உலகத்தில் வாழும் சுமார் 480 கோடி மக்களில் 80 விழுக்காட்டிற்குமேல் வறுமை கோட்டிற்குக் கீழே வாழு கோர நிலை. இந்தியாவின் மக்கள் தொகையில் 75 விழுக்காட்டிற்குமேல் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளனர். இந்த மக்கள் வாழ்க்கை இருண்டு போயிருப்பதாகக் காண்கிறார். இங்கு வாழும் மக்களைக் 'கருப்புக் குயில்கள்' என்கிறார். அவர்களது உழைப்பு 'சிவப்பு ரத்தம்' என்றும் தெளிபடுத்துகின்றார். வல்லூறு என்பதை உலகின் வல்லரசுகளாம். வளரும் மூன்றாம் உலக நாடுகளில், வல்லரசுகள் மூலதனமிட்டு அந்த நாடுகளின் வளத்திற்கு ஊறு விளைவிக்கும் பண்பை இப்படி உருவகப்படுத்துகின்றார் கவிஞர். இவ்வகையில் அனைத்துலக வரலாற்றுப் பார்வையை முதன்மைப்படுத்தச் சிகப்பு, கறுப்பு என்ற நிறப் பயன்பாடு எண்ணத்தக்கது. உழைப்பவர் உடல் கறுத்திருப்பது இயல்பு. அதனால் தான் 'கறுப்பு குயில்கள்' என்று உழைப்பாளிகளைக் கவிஞர் காட்டுகின்றார்.

... ... ... ... ... ...
சிறுமைக்கும் மரண நாள்
குறித்துவிடு! அதனையும்
சிவப்பு மையால் எழுதிவிடு! [7]

இங்குச் சிவப்பு என்பதைச் செயல்வேகமாகக் காணும் கவிஞர், உலகம் தழுவிய சிறுமையைப் போராட்டத்தால் வென்றெடுக்கும் சக்தி சிவப்புக்கு உண்டு என்கிறார். இலக்கியங்கள் மாற்றத்தை உண்டாக்கவல்ல தன்மை பெற்றிருக்கவேண்டும். அந்த மாற்றம் என்பதைச் சிவப்பு மை எழுத்து என்கிறார்.

வாழ்க்கை என்பது இச்சமூகத்தில் உள்ள தனிமனிதனையும் அவனை உள்ளடக்கிய சமூகத்தையும் — மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே எழும் சிக்கல்களையும் உள்ளடக்கியது ஆகும். இவ்வமைப்பில் சிக்கல்களை மட்டும் முதன்மைப்படுத்தாது,

6 கங்கைகொண்டான், ப. வானம்பாடி முதல் இதழ்.

மனித வாழ்க்கையின் முழுமையையே முதன்மைப்படுத்துகின்றனர். அம்முயற்சியில் அதன் பல்வேறு கூறுகளை வெளிப்படுத்து உத்தியில் நிறப் பண்பின் வழியாகவும் வானம்பாடிக் கவிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வகையில் நுழையின் மனிதாபிமானக் கண்ணோட்டம், பொதுமை வேட்கை, வாழ்க்கை முரண்பாடுகள், எதிரிகளின் மீது இரக்கவுணர்வு ஆகியவற்றைக் காண இயலும். அக்காட்சி பெறுதற்கு நிறங்கள் பயன்பட்டுள்ளமையை அழகியல் வெளிப்பாடாகவும் அறிய முடிகிறது.

ஓ! என் தோழரே!
ஒப்பற்ற
அந்த மனிதாபிமானக் கவிதையை
உங்களில் யார் பாடப் போகிறீர்கள்?
நம் கரங்களின் உழைப்பைக்
காலம் அலட்சியப் படுத்தும்போது,
நிறங்களில் சிவப்பையே
நாம் நிச்சயிக்க முடியும்
இருட்டு வானத்தில்
நாம்
சிவப்புப் பறவைகள்!
பூமி இருண்டிருந்த நேரத்தில்
நாம் புறப்பட்டோம்,
நமக்கு
வெளிச்சம் வேண்டியிருந்ததால்
சிவப்புச் சிறகுகளைச்
சேகரித்துக் கொண்டோம்.!
... ... ...[8]

என்பது மேத்தாவின் பாடல். இப்பாடலில் மனிதாபிமானத்தைப் பாட அழைக்கும் கவிஞர், மனித நல்வாழ்வுக்கு முரண்பட்டு எதிராக நிற்கும் சக்திகளைக்காட்டி அவற்றை எதிர்த்துப் போரிடும் சக்தியாகச் 'சிவப்பு' நிறத்தை உருவகம் செய்கிறார்.

மனித இனத்தின் உழைப்பு, பிறரால் கவரப்பெறின் அத்தீமைக்கு எதிராக அணிவகுத்து நிற்கும் ஆற்றலைச் சிவப்பு நிறம் என்கிறார், அந்த ஆற்றல், சிவப்புப் பறவைகள் என்றும்

---

7. செயப்பிரகாசம், பா. வானம்பாடி ஆறாவது இதழ்.

வானம்பாடிகள் என்று தம்மை அழைத்துக்கொண்ட கவிஞரால் வண்ணப் பறவை ஒன்று உருவாகிறது, அது எதிரிகளை எதிர்க்கச் சிவப்புச் சிறகுகளை அணிந்துள்ளது என்றும் உருவகிக்கின்றார் மேத்தா. இப்புதிய சொல்லாட்சியின் வேகத்தால் இனிமேல் 'சிவப்பு' எனில் கொடுமைகளை எதிர்த்துப்போராடும் ஆற்றல் என்ற புதிய பொருளைக் கவிஞர் மேத்தா பாடல் வழியே கவிதை உலகம் பெற்றுள்ளது. முற்போக்கு இலக்கியங்களைச் 'சிவப்பிலக்கியங்கள்' என்று அழைக்கும் தொடரும் திறனாய்வுலகில் பயன்பட்டு வருவது ஈண்டு எண்ணத்தக்கது. இதனால் அழகியல் உணர்வில் சமுதாய உணர்வு கலந்து மேலும் வளர்ந்து வாழ்க்கைப் போரின் எழுச்சிக்குரிய உருவகமாகச் சிவப்பு நிறம் இடம் பெற்றிருக்கிறது.

எம் தாயகத்தின் கோடானகோடி
தரித்திர நாராயணர்களின் ரத்தவியர்வையில்
தொட்டு எழுதிய என் சிவப்புக் கவிதைகளை
அந்த ஊமைப் பிறவிகளின் செவிகள் நிறைய
எரிமலைக் குழம்பாய் நான் ஊற்றிக்
[கொண்டிருக்கையில் ...[9]

மரணத்தைப் பற்றிச் சிந்திக்கும் கவிஞர் புவியரசு, தமது கவிதைகளைச் 'சிவப்புக் கவிதைகள்' என்கிறார். அவர் சொல்லும், இப்பாடலின் பிற வரிகள், மக்கள் நல்வாழ்க்கைக்காகப் போராடும் நோக்கத்தை முன்வைக்கின்றன, அவைகளே 'சிவப்புக் கவிதைகள்'. எனவே சிவப்பு என்பதே மக்கள் நல்வாழ்க்கைக்காகப் போராடும் சக்தி என்று தெளிவு படுத்துகின்றார்.

இரக்கத் திற்குரியவர்களே!
எங்களைக் கண்டு
ஏன் இப்படி அலறுகிறீர்கள்?
நாங்கள் அணிந்திருப்பவை
சிவப்பு சட்டைகளல்ல
நாங்கள் உடுத்தியிருப்பவை
சிவப்பு வேட்டிகளல்ல...
ஐயோ பாவம்!
உமக்குச் சிவப்புக் காமாலை. [10]

---

8. மேத்தா, மூ. வானம்பாடி முதல் இதழ்
9. புவியரசு, வானம்பாடி நான்காவது இதழ்.

சிவப்பு என்ற வண்ணத்திற்கு, மக்கள் மத்தியில் தவறான கருத்தோட்டம் உள்ளது. நடைமுறை வாழ்க்கையில் தீங்கை அறிவிக்கும் முன்னறிவிப்பாக இருக்கும் சிவப்பைத் தீங்கு அல்லது அபாயம் என்றே கருதுகிற பழைய பொருட்பாடு சுகும் உண்டு. சிவப்புக் கொடியைக் காட்டியவுடன் நிற்கும் தொடர் வண்டி. அது சென்றால் ஏதோ தீங்கு உண்டு என்பதைக் காட்டி பாதுகாக்கப் பயன்படுகிறது சிவப்புச் சின்னம். இந்தக் கருத்தை விமரிசனம் செய்யும் போக்கில், கவிஞர் இப்பாடலைப் பாடியுள்ளார். மஞ்சள் காமாலை நோயாளிக்கு உண்மையில் புறத்தே இல்லாத மஞ்சள் இருப்பதுபோல் நினைக்கச் செய்யும். அதுபோல் சிவப்பு நிறம் செயல்வேகக் குறியீடு ஆகிச் சிவப்புக் காமாலை என்ற சமுதாய விரோதிகளுக்குரிய புதிய நோயைக் காட்டுகிறார் புவியரசு. இச்சொல்லாக்கம் சிவப்பு நிறத்தின் பண்பை தெளிவுபடுத்தவுடன் சிவப்பின்மேல் வெறுப்பைக் கொள்பவர் நிலைக்காகவும் இரக்கம் ஏற்படுத்துவதும் கவிஞர் முயற்சியாகத் தெரிகிறது.

வானம்பாடிக் கவிஞர்களின் பாடல்களின் வடிவம் குறிப்பாகச் சொற்களைப் பயன்படுத்தும் போக்கு உள்ளடக்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளதைச் சிவப்பு என்ற சொல்லின் பல்வேறு பட்ட ஆட்சியால் அறியமுடிகிறது. இவ்வாறு பல நிறங்களிலும் சிறப்பாகச் சிவப்பு என்ற நிறத்தை படிமம் குறியீடு என்ற கலை ஆக்க உத்திகளில் வானம்பாடிக் கவிஞர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

முதலில் இங்கே ஒரு
ரத்தக்களரி நடக்கப் போகிறது...
அப்புறம்
அமைதியும் சமதர்மமும்
இறுதியில்தான்
பசுமையான நல்வாழ்வு...
அதைத்தான் நீ
அர்த்தப்படுத்துகிறாயா...?
என்று கேட்டபோது
வெள்ளிவிழா வெளிச்சத்தில்
பதில்சொல்ல முடியாமல்
தேசியக்கொடி
படபடத்தது![11]

---

10. புவியரசு வானம்பாடி ஆறாவது இதழ்.

நமது தேசியக் கொடியின் வண்ணங்களுக்கு — ஒரு குறியீடு உண்டு. அந்தக் குறியீட்டிற்கு மாறாக வேறுபொருளை தேசியக் கொடியின் வண்ணங்கள் குறிப்பதாகக் கருதும் இப் பாடலில்-முழுமையாக குறியீட்டுப் பாங்கைக் காணமுடிகிறது நேரடியாகச் சொல்லாமல் இந்த நாட்டில் ஒரு மாற்றம் நடக்கப் போகிறது என்பதைக் குறியீடாகப் பேசுகிறார். இங்கே வண்ணங்கள் அதற்குப் பெரிதும் பயன்படுவதைக் காணமுடி கின்றது.

ரோஜாக் கன்றுகள்
இரத்த தானம்செய்து
சிவப்பேற்றிய
வைகறைப் பொழுதில்
கறுப்புக் கனகாம்பரங்கள்
கண் சிலிர்க்கின்றன...[12]

எனும் பாடலில் படிம உத்தியை கவிஞர் வண்ணங்கள் வழி நமக்குக் காட்டுகின்றார். இந்தப் பாடலைப் படித்தவுடன், சிவப்பு ரோஜாவும், கறுப்புக் கனகாம்பரமும் ஏதோ ஒன்றை, நம் உள்ளத்தில் படிமமாம் எண்ணச் செய்கிறது 'வாலிபக்கனவு' என்பது நிலையற்றது என்பதை இதன்மூலம் சக்திக்கனல் சொல் கிறார்.

இவ்வகையில் வானம்பாடிக் கவிஞர்கள் கவிதைக் கலை ஆக்கத்தில் உவமை, உருவகம், குறியீடு, படிமம் ஆகிய பல்வேறு பண்புகளுக்கும் நிறப் பண்பைப் பயன்படுத்தியுள்ளனர்.[13] இதன்வழி நிறத்தை' இலக்கிய கலை ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

வானம்பாடிக் கவிஞர்கள் சிவப்பு நிறத்தைப் பயன்படுத்தி யுள்ள பல்வேறு நிலைகளை ஒப்புநோக்கும்போது, அவர்கள் கொண்ட நிறக்கோட்பாட்டை வரையறை செய்ய முயலலாம்.

நிறத்தை அழகியல் நோக்கத்திற்குப் பயன்படுத்தும்போது தொன்மை அழகியல் கோட்பாடுகளை மட்டும் மனத்தில் கொள்ளாமல் இன்றைய நிலையில் மாறிவரும் சமுதாயத்தை ஒட்டிச் சிந்தித்து சமுதாய அழகியல் உணர்வுடன் நிறத்தைப்

11. லதா பாரதி, வானம்பாடி, இதழ் ஏழு.
12. சக்திக்கனல், வானம்பாடி எட்டாவது இதழ்.

பயன்படுத்துகின்றனர். புதிய சொல் ஆக்க நெறியை நிறத்தை வடித்துக் காட்டுகின்ற இலக்கிய வழியே உருவாக்கியுள்ளனர்[14]. வரலாற்றுப் பின்புலம், மெய்ம்மை நோக்கு ஆகியவற்றைத் தெளிவுபடுத்தும் முயற்சியில் நிறம் பயன்பட்டுள்ளது பண்டைய மரபுத் தமிழ் கவிதைகளில் நிறத்தைப் பயன்படுத்திய முறையில் இருந்து இது வேறுபட்டு, வானம்பாடிக்குரிய புதுநெறியாக இது துலங்கிறது. வானம்பாடிகளின் பார்வையில் சிகப்பு என்ற நிறம் 'செயல் வேகம்' 'மாற்றம்' என்னும் பொருள்களில் பெரிதும் பயன்பட்டு சமுதாயச் செம்மைக்கு வழிகாட்டும் நிலையில் பண்பு தொட்டு இன்றுவரை பயன்பட்டுவரும் செங் கோல் என்ற தொடர்புப் பொருளின் தொடர்ச்சியாக அமைந்து கோலாட்சி நீங்கவும் குடியாட்சி மலரவும் பயன்படும் ஆக்க நெறியாகவும் அமைகிறது.

குறிப்பு :

'வானம்பாடி'யின் ஒன்று முதல் பத்து முடிய உள்ள இதழ்க் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

---

14. பார்க்க, வானம்பாடி பத்தாவது இதழ்.

## பின்னிணைப்பு

### வானம்பாடிக் கவிஞர்கள்

1. அக்னிப் புத்திரன்.
2. அப்துல் ரகுமான்.
3. அறிவன்.
4. இளமுருகு.
5. இன்குலாப்.
6. கங்கைகொண்டான்.
7. கல்யாண்ஜி
8. கேசவன், கோ.
9. சக்திக்கனல்.
10. சிற்பி.
11. செயப்பிரகாசம், பா.
12. ஞானி.
13. தமிழ்நாடன்.
14. தமிழவன்.
15. தமிழன்பன்.
16. தேனரசன்.
17. பரணன்.
18. பரிணாமன்.
19. புவியரசு.
20. மீரா.
21. மேத்தா.
22. ரவீந்திரன்.
23. லதா பாரதி,
24. வேலுச்சாமி, ப.
25. ஜீவஒளி.

## துணை நூல்கள்


1. 'வானம்பாடி' இதழ் ஒன்று முதல் பத்து முடிய, கோவை.
2. கைலாசபதி, க., முருகையன், இ. 'கவிதை நயம்' பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1976.
3. பிச்சமுத்து, நா. இலக்கிய இலக்கங்கள், சக்தி வெளியீடு, சென்னை, 1980.
4. வானமாமலை, நா. புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், மக்கள் வெளியீடு, சென்னை, 1975.
5. வல்லிக்கண்ணன், புதுக்கவிதை தோற்றமும், வளர்ச்சியும், எழுத்துப் பிரசுரம், சென்னை, 1977.

# 29. நாட்டுப்புறப் பாடல்கள்

ஜே. நிர்மலாபாய்

## முன்னுரை

நிறம் குறியீடாகக் கருத்தினைச் சுட்டுவதாகவும் அமைதலைக் காணலாம். கறுப்பு, சிவப்பு, பச்சை, வெள்ளை ஆகிய நிறமுள்ள கொடிகள் முறையே துயரம், ஆபத்து, துன்பமின்மை, அமைதி ஆகியவற்றைச் சுட்டுவதாக அமைகின்றன. ஓரின மக்களைப் பிரித்தறியவும் நிறம் பயன்படுகிறது. காவி உடுத்த பெண்டிர் பார்ப்பன விதவையெனவும் வெள்ளையுடுத்த பெண்டிர் பிறசாதி விதவை எனவும் அறியும் வாய்ப்பு முன்னர் இருந்தது. தற்காலத்தில் சீருடைகளின் நிறங்களும் நமக்குச் செய்தியறிவிக்கும் குறியீடாக அமைகின்றன.

## நாட்டுப்புறப் பாடலும் நிறமும்

பொதுவாகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந்தாலும் இக் கட்டுரையில் சிறப்பாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது குமரி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களே யாகும். குமரி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் நிறத்தைக் குறிக்கும் பிற சொற்களாக வண்ணம், வர்ணம், நிறம், சாயம், கலர் என்பவை ஆளப்படுகின்றன. இவற்றில் வர்ணம் எனும் சொல்லாட்சியே மிகுதி. ஏட்டிலக்கியச் சொல்லான வண்ணம் முதல் தற்கால வழக்குச் சொல்லான கலர் வரை நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படுவது அவை அவ்வக்கால வளர்ச்சியினை ஏற்றுக்கொண்டதைத் தெளிவுறுத்தும்.

கோல வர்ணம், அழகுவர்ணம், சீமவர்ணம் என்றெல்லாம் அதையெடுத்து வருகின்ற நிலை நாட்டுப்புற மக்களிடையே நிறம் பெற்ற செல்வாக்கினைச் சுட்டுவதாகக் கருதலாம். கறுப்பு, கருநீலம், நீலம், ஊதா, பச்சை, சிவப்பு, காவி, மஞ்சள், தங்கம், பொன், வெள்ளை ஆகிய நிறங்கள் குமரி நாட்டுப்புறப் பாடல்களில் இடம் பெறுகின்றன.

## கறுப்பு

கறுப்பு துயரத்தைக் குறிக்கும் குறியீடு. மஞ்சள் கறுப்புறமாதல் எனும் உருவகக் குறியீடு துன்பத்தைக் குறிப்பதாக

மனோன்மணீயத்தில்[1] வருதல்போல் ஒப்பாரிப் பாடலில்

" குளிக்கும் மஞ்சள்
கோரைக் கிழங்காச்சே "

என வருகின்றது. இங்கு கிழங்கின் நிறமே மஞ்சள் எனப்படுகிறது. மேலும் பயனுடையதாக (குளிக்கும் மஞ்சள்போல்) இருந்த வாழ்க்கை பயனற்றதாகிவிட்டதாக (கோரைக் கிழங்கினைப் போல்) எண்ணுவதாகவும் மேற்கூறிய உருவகக் குறியீட்டு விளக்கத்தைக் கொள்ள இடமுண்டு. கறுப்பு ஆடை, விதவைக்குரிய ஆடையாக வருதல் ஆங்கிலேயர் தாக்கத்தாலமைந்ததாக இருக்கலாம். கறுப்படுப்பு, கருங்கல், கறுப்பு போன்ற சொற்கள் ஒப்பாரிப் பாடலில் பல இடங்களில் துன்பத்தைக் குறிக்க வருகின்றன.

கறுத்த நிறமுடையோர் கேலி செய்யப்படினும் வெறுக்கப் படவில்லை. திருமண ஏசற் பாடல்களில் கறுப்பு நிறம் எள்ளற் பொருளாகிறது.

" கறுப்பு கறுப்புன்னு
கண்டதுண்டு வையகத்தில்
இந்தக் கறுப்புப்போல்
எவ்வுலகும் கண்டதில்லை "

கறுப்பாக இருப்பினும் சிறந்த இதயமுடையோர் சிறப்பாகவே எண்ணப்படுகின்றனர் இதனை,

" ஆள்ள கறுப்பு அழகிய நெஞ்சம் "

எனும் தொடர்வழி அறியலாம். ஆழ்ந்த கறுப்பு நிறமான பனிதனும் பெருமையாக

" எண்ணைக் கறுப்பல்லோ நானுனக்கு
ஏற்ற சிலப்பல்லோ நீ யெனக்கு "

எனக் கூறிக்கொள்வதைக் காணமுடிகிறது.

---

1. டாக்டர் ஏ. என். பெருமாள், 'மனோன்மணீயத்தில் நிறங்களின் பயன்பாடு' ப. 2.

மேலும், கருநண்டு. கறுப்பு இறால் மீன், கறுத்த கண்ணாடி மயில் காளை. கண்ணும் கறுத்த கோழி, கரு நெத்திலி மீன் போன்ற அஃறிணைப் பொருட்களும் சிறப்பாகவே கருதப் படுகின்றன.

"நிறநிறமா தண்ணியிருக்கி
நிறத்துக்காக மீனிருக்கி
கறுப்புறாளிக்கி
கறுப்புறாளி சேர்ந்திருக்கி"

எனும் அடிகள் கறுத்த இறால் மீன் மிகுதியாகக் கிடைக்கும் கடலின் நிறத்தையும் சுட்டுகின்றன மீன் பிடிக்கச் செல்லும் போது கடலின் நிறத்தையும் கடலின் மேலே பறக்கும் பறவை களையும் கண்டு அங்கு மிகுதியாகக் கிடைக்கும் மீனை அவர்கள் அறிந்து கொள்வர்.

நீலமும் கறுப்பும் இணைத்துப் பேசப்படுவதைப் பல பாடல் களில் காணலாம்.

"கரு நீலம் பொன் கழலிக்கு"[2]

எனும் அடியில் உள்ள கரு நீலம் கறுப்பினையே சுட்டுகிறது. "நீலக் கருங்குயிலே" "நீல நெடுங்குயில்" "நீல நல்ல நெடு மயிலி" என்றெல்லாம் வருணிக்கப்படுவதும் கறுத்த பெண்ணே ஆவாள்.

"கருப்பு நிறத் தழகியை
காயாப்பூ மேனியாளை"

எனும் அடிகளும் கறுத்த பெண்ணையே சிறப்பாகக் கூறுகின்றது ஆகவே கறுப்பினைக் கருநீலமாகவும் எண்ணியதனை உணரலாம்.

## நீலம்

நீல நிறம் நாட்டுப்புறப் பாடல்களில் மிகக் குறைவாகவே சுட்டப்படுகின்றது. நீலப்பாசி, நீலக் கண்ணாடி, நீலக்கடுதாசி,

---

2. ஜே. விமலா பென்சிலி செல்லம், நாட்டுப் புற இலக்கிய இயல் அமைப்பு முறை ஆய்வு (பாறசாலை வட்டாரம்) - கேரளப் பல்கலைக்கழக முதுகலை பொருளாய்வுக் கட்டுரை (வெளிவராதது, 1797) கொண்டாட்டப் பாடல்-3.

நீலப் பளிங்கு[3], நீலக்கெண்டி, நீல வண்ணப் பொட்டு[4] போன்ற தொடர்கள் நீல நிறத்தினைச் சுட்டுகின்றன. பெரும்பாலும் நீலம் கறுப்போடுஇணைத்தே பேசப்படுவதால் நீல நிறத்தினைக் கறுப்பின் இணை நிறமாகவே கொண்டனர் எனலாம்.

ஊதா

ஊதா நிறம் பழங்கால இலக்கியங்களில் பேசப்படவில்லை நாட்டுப்புறப் பாடலிலும் ஊதா நிறம் பற்றிய ஒரு குறிப்பே காணப்படுகிறது. அதுவும் கறுப்போடு இணைத்தே குறிப்பிடப் படுகின்றது.

" சாயச் சருகச் சேல - பலம்ப
சாத்தனூரு கம்பிச் சேல
ஊதாக் கறுப்புச் சேல "

என்று புடவை சுட்டப்படுகின்றது.

பச்சை

நாட்டுப்புறப் பாடல்களில் பச்சை எனும் சொல் நிறத்தைக் குறிப்பதோடு நில்லாமல் வேறு பல பொருளிலும் வருவதைக் காணலாம். இளமை, பசுமை, புதுமைப் பொலிவு, சமைக்கப் படாத நிலையிலுள்ள பொருட்கள் ஆகிய பொருள்களிலும் வருவதைக் கீழே காணலாம்.

---

3\. 1. Encyclopaedia Americana, Volume 18, Newyork, Americana corporation, International Head quarters, First 1829, copyright 1969) p. 265.

Source of Marbles

United states production includes a variety of colours, the greatest diversity being in the marble quarred from an area 80 miles long in western vermont, where white, black, and all manner of coloured marbles are optained.

2\. Everyman's Encyclepaedia. Volume 8, London (J. M. Dent & sons Ltd., Fifth edition 1967) p. 224.

Marble-The colour is usually white, but markings of many hues and patterns are produced by the presence of impurities.

பாடலில் பச்சை, நீலம் பளிங்கு பற்றிய குறிப்பு உள்ளது. இந்தியாவில் அந்நிறங்களில் பளிங்கு இல்லை என்றே தோன்றுகிறது. சிறப்பு கருதி நிறத் தினைப் பயன்படுத்தியிருக்கலாமோ எனும் எண்ணமும் எழுகின்றது.

இளமை : சப்பனை, பச்ச இலுப்பை வெட்டி பச்சை மரம்.

புதுமைப் பொலிவு : பச்சக் கருப்பட்டி (பனை வெல்லம் பச்சமடி (காயாத வலை)

சமைக்கப்படாத நிலையிலுள்ள பொருட்கள் | பச்சமாவு, பச்சத்தண்ணி, பச்சைநெல்[6] | பச்சரி, பச்சரிசி[6].

நிறம் குறிப்பன : பச்ச நிறம் வள்ளி, பச்ச குத்துதல், பச்சக் கிளி[7]

பச்சை குத்துதலில் உள்ள பச்சை கருப்பச்சை நிறத்தினையும் பச்சைக் கிளியில் உள்ள பச்சை இளம் பச்சை நிறத்தினையும் சுட்டும் எனலாம்.[7] பச்சை மலை எனக் குறத்தி பாடுமிடத்து பச்சை என்பது நிறத்தைக் குறிக்க வந்ததாகவும் கொள்ளலாம். ஆயின் பச்சைமலை. பவளமலை எனக் குறத்திபாடுவது இலக்கிய மரபாகவும் உளள்து. "பச்சைப் பளிங்கு" எனத் தாய் சுட்டப் படுவது இளமை கருதியோ என எண்ணத் தோன்றுகிறது.

## சிவப்பு

சிவப்பு ஆபத்துக் குறிக்கும் குறியீடாதலின் ஒப்பாரியில் சிவப்பு குறுணி, சிவப்புக் கடுதாசி, செங்கல். செவப்பு, செவப் படுப்பு போன்ற குறிப்புக்கள் ஆபத்து நேர்ந்ததைக் குறிப்பதற் காகவே வருகின்றன.

சிவப்புநிறமுடைய மனிதர் சிறப்பாகவே பேசப்படுகின்றனர். சிவந்த ஆண்மகன் சிவப்பன் எனச் சிறப்பாகச் சுட்டப்படுகிறான்.

---

4. சு. சண்முக சுந்தரம், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புற பாடல்களில் சமுதாய அமைப்பு, (பி. எச். டி. பட்டந்திற் காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, 1977, (வெளியிடப்படாதது-) ப. 377.
5. செ. அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள்" சென்னை, (கழக வெளியீடு, 1966) ப 224.
6. மு. வை. அரவிந்தன். தமிழக நாட்டுப் பாடல்கள், சென்னை, (லட்சுமி பதிப்பகம், 1978) ப. 208.
7. குமரியிற் சிலவிடங்களிலும் கேரளாவிலும் பல சிறிய பறவைகள் கிளி என்று சுட்டப்படுகின்றன. ஆகவே பச்சை நிறமுடைய பறவையை வேறுபடுத்தப் பச்சை எனும் அடையும் ஐந்து நிறமுடைய பறவையை வேறு படுத்த பஞ்சவர்ணம் எனும் அடையையும் பயன்படுத்தி யிருக்கலாம். தமிழில் கிளி எனக் கூறின் அது பச்சைக் கிளியை மட்டுமே சுட்டுகின்றது

செவத்த பிள்ள, சிவத்த பெண்ணே[8], ஏற்ற சிவப்பு, சிவப்புக் காரி செவந்த மேனி, பகளநிறம் என்றெல்லாம் சிவப்பு நிற முடைய பெண்டிர் வருணிக்கப்படுகின்றனர். மேலும்,

"கோவைப்பழம் போல
காவிக் கல்லுபோல
குண்டுமணிபோல
எங்கள் பெண்ணழகு"

எனும் அடிகளும் சிவப்பு நிறம் அழகுமிக்கது என்பதைச் சுட்டு கின்றன.

"சேலை நல்ல சேலை
செங்கழனிச் சாயம்
கூறை நல்ல கூறை
குண்டுமணிச்சாயம்"[9]

எனச் சிவப்பு நிறமுடைய புடவையும் நல்ல புடவையாகவே சுட்டப்படுகின்றது. செங்கழு நீர்ப்பூ இங்கு செங்கழனி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"செங்களனி பூத்ததென்ன" எனும் தொடரிலும் நிறம் பண்புப் பெயராக வருவதைக் காணலாம்.

காவி

காவி நிறம் சிவப்பு நிறத்திற்கு இணையாக உள்ளதால் அதனைச் சிவப்பாகவே எண்ணியதனை "காவிக் கல்லுபோல" எனப் பெண் வருணிக்கப்பட்டது சுட்டும். வெற்றிலை போடு வதால் பல்லில் காவி நிறம் பற்காவி எனச் சுட்டப்பட்டுள்ளது. அதற்கடுத்து சொற்காவி என வருதல் இயைபு கருதியேயாகும் எனக் கொள்ளலாம்.

"பல்லும் பணம் பெறுமே
பற்காவி விலை பெறுமே
சொல்லும் பணம் பெறுமே
சொற்காவிவிலை பெறுமே"

சகோதரன் மீதுள்ள அன்பினை இவ்வடிகள் சுட்டுகின்றன.

---

8. மா. வரதராஜன், தமிழக நாட்டுப் பாடல்கள், சென்னை, (வானதி பதிப்பகம், 1978), ப 24.
9. மூ. வை. அரவிந்தன், ப. 172.

## மஞ்சள்

மஞ்சள் மங்கலத்தைக் குறிப்பதாலேயே பூப்படைதல் நாட்டுப்புறப் பாடல்களில் மஞ்சள் நீராடுதல் எனக் குறிப்பிடப் படுகிறது. மஞ்சரைக்கிற ராசாத்தி, மஞ்ச குளிக்கிற பெண்ணரசே எனும் தொடர்களும் குளிக்கும் மஞ்சள்.

"மஞ்சள் அழிந்து விடும் - உன்னுடைய
மஞ்ச முகம் சோர்ந்துவிடும்"

எனும் ஒப்பாரித் தொடர்களும் மஞ்சளின் சிறப்பினைச் சுட்டும். இதில் மஞ்சமுகம் என்பது முகத்தில் பூசும் மஞ்சளால் வந்த நிறமாகும். மஞ்சள் புடவை, மஞ்சபொட்டு, மஞ்சக்கார மீன், மஞ்சத் தீப்பெட்டி, மஞ்சக் காதணி, மஞ்சப் பெட்டி, மஞ்ச வடை [10], மஞ்ச தோப்பு, மஞ்ச ஜெம்பர் போன்றனவும் சிறப்பாகவே பேசப்படுகின்றன. ஒப்பாரியில் மஞ்சக் கடுதாசி துன்பத்தின் அடையாளமாகச் சுட்டப்படுகிறது. தற்காலத்தில் சொத்து திவாலாதலை, மஞ்சள் கடிதம் அனுப்புதல் என்பர். பொதுவாக மஞ்சள் கடிதம் இழப்பின் காரணமாக ஏற்படும் வறுமையைச் சுட்டுவதாக அமையும் எனலாம். மஞ்சள் பொன்னிறமாக இருப்பதாக "மஞ்சமெல்லாம் பொன்னிறமாம்" எனும் அடி குறிப்பிடுகின்றது. இவ்வடி மஞ்சள் நிறத்தினை முன்னர் பொன்னிறமாகவே கொண்டனரோ எனும் ஐயத்தினை எழுப்பு கிறது.

## பொன்

தாயின் முகம் பொன்னுருக்கி வார்த்த முகம் எனவும் பாடல் குறிப்பிடுகின்றது. கோவிலில் பொன், வெண்கலம் ஆகிய இறை உருவங்களைப் பார்க்கும் நாட்டுப்புற மக்களுக்கு இறந்து இறை நிலை எய்திய தாயும் அவ்வாறே தோற்றமளிக்கிறாள். இறந்த தாய் பொன்னரளிந் தோப்பாகவும் உவமிக்கப்படுகிறாள். பொன்போன்ற நிறமுடைய பெண்ணின் கதை பொன்னிறத்தாள் கதை எனக் கதைப் பாடலாக வழங்குகிறது.

---

10. ஆறு. இராமநாதன், நாட்டுப் புற இயல் ஆய்வுகள் சென்னை (அணியகம், முதற்பதிப்பு 1979) ப. 26.

"பொன்னு மனலயருகே
பூப்பொறுக்கப் போனாலும்
பொன்னு மலை வேடன்கண்டு"

எனும் தொடர் பொன்னிறப் பூக்கள் பொதிர்த—உதிர்ந்த மலையினைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். சோதி நிறம் வேலவரும் எனும் தொடர் ஒளியோடு கூடிய பொன்னிறத்தைச் சுட்டும்.

## தங்கம்

தங்கம், பொன் போன்ற நிறத்தினை மட்டுமல்லாது சிறப்பினையும் உணர்த்த வந்தவை எனலாம். கணவனது மேனியானது தங்கதுரை மேனி எனவும் தாய் தங்கக்குடம், தங்கப்பாதம் எனவும், குழந்தை தங்கக்குடம் எனவும் சுட்டப்படுதல் சிறப்பு மட்டும் கருதிச் சுட்டப்படுவதோடு நிறமும் குறிக்கும் எனலாம். தாழம்பூப்பட்டும் தாழம்பூ மலையும் தங்கநிறமுடையதாகச் சுட்டப்படுகின்றன.

## வெள்ளை

மேலை நாட்டினர் வெள்ளைக்காரன் எனப் பலவிடங்களிற் சுட்டப்படுகின்றனர். அரிசன மக்கள் "வெள்ளைப் பிராமணமாக்கோ நாங்கோ" என வெள்ளை மீதுள்ள விருப்பத்தால் பாடுகின்றனர். வெள்ளை நிறம் சிவப்பு நிறத்தினைப் போல மானிடருக்கு அழகினைத்தரும் நிறமாகச் சுட்டப்படவில்லை. வெள்ளாடு வெள்ளை இட்டிலி போன்றன சிறப்பாக எண்ணப்படுகின்றன. வெள்ளை நிறத்தினைச் சுட்டமொக்கினை உருவமாகப் பயன்படுத்திய நிலையையும் காணலாம். 'பால் போல் நிலவு' என்று நிலவின் வெண்மை சுட்டப்படுகிறது. வெள்ளை புடுத்தல் அமங்கலமாக — விதவைக்கே உரியதாக - ஒப்பாரியில் சுட்டப்படுகிறது. வெள்ளி குறிப்பிடப்பட்டிருப்பினும் அது நிறத்தைச் சுட்டாது அவ்வுலோகத்தாலான பொருளை மட்டுமே சுட்டியதால் இங்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## நிற இயைபு

சங்க இலக்கியங்களில் கறுப்பு பிற நிறங்களோடு மிகுதியாக இயைந்து வருகின்றது. கீழ்க்கணக்கு நூல்களில் சிவப்பு பிற

11. இர. தமிழரசி. 'சங்க இலக்கியத்தில் நிறங்கள்' ப. 7.
12. டாக்டர் அன்னி தாமசு, 'கீழ்க்கணக்கும் நிறமும்' ப. 11 - 12.

நிறங்களோடு மிக்க இயைகின்றதனைக் காணலாம்.[12] நாட்டுப் புறப்பாடல்களில் சிவப்பு கறுப்பு இயையே மிகுதி. சிவப்பு நிறம் தான் அதிக நிறங்களோடு இயைந்து வருகின்றது.

சிவப்பு - கறுப்பு

"எண்ணைக் கறுப்பல்லோ நானுனக்கு
ஏற்ற சிவப்பல்லோ நீயெனக்கு
எண்ணைக் கறுப்புக்கும் ஏற்ற சிவப்புக்கும்"

எனும் அடிகள் கறுத்த ஆணிற்கு சிவப்புப் பெண் இணை என்பதனைச் சுட்டும். மேலும்,

"கருமேகம் செம்மேகம் போல் வருகுதே"[13] "கறுத்த துலுக்க, செவத்த துலுக்கப் பையன்"[14] எனும் அடிகளிலும், கறுப்பனடி—சிவப்பனடி, செங்கல்—கருங்கல், சிகப்பு—கறுப்பு, சிகப்படுப்பு — கறுப்படுப்பு, கருங்கடல்—செங்கடல், கறுப்பு கடுதாசி சிவப்புகடுதாசி எனவும் சிவப்பு—கறுப்பு இயைபு அமையக்காணலாம்.

சிவப்புகள்

"செவப்பு தலவாணி
கலறடச்ச பஞ்சுமெத்த
சீட்டி தலவாணி
சிகப்படச்ச பஞ்சு மெத்த"

எனும் அடிகளில் கலர் எனும் சொல் கறுப்பு வெள்ளையல்லாத பிறநிறமாக இருக்கலாம்.

சிவப்பு - பல நிறம்

"பச்சை நிறம் வள்ளி
பவளநிறம் தெய்வானை
சோதி நிறம் வேலவரும்"

எனச் சிவப்பு நிறம் பச்சை பொன் ஆகிய நிறங்களோடு

---

13. ஜே. ஜி. என். தாசன், இலக்கிய எண்ணங்கள், 'மீனவர் இலக்கியம்', நாகர்கோவில் (1975) பக். 81.

14. வை. அரவிந்தன், பக். 47.

"சிவப்பு கடுதாசி
தேசத்துக்கோமைக் கூடு
நீலக் கடுதாசி
சீரங்கந்து மைச்கூடு
மஞ்சள் கடுதாசி
மாதக்கா மைக்கூடு
கறுப்புக் கடுதாசி
வடமதுரைப் போராக்குச்சி"

எனச் சிவப்பு நிறம் நீலம், மஞ்சள், கறுப்பு ஆகிய மூன்று நிறங்களோடு வருகின்றது.

## சிவப்பு – பச்சை

"பச்சமல பவளமல நாடு
எங்க பல நாடு"

பச்சைமலை பவளமலை என மலை சுட்டப்படுவது மரபுகருதியாகும். "பச்சைகிளியோடி சின்னி பவளக் கொடியோடு" எனவும் வருகின்றது.

## பச்சை – வெள்ளை

"பச்ச பறங்கிக்காயாம்
பாதையோரம் காச்சிருக்க
வெள்ளைப் பறங்கிக்காயாம்
வீதியோரம் காய்ச்சிருக்க" [15]

"வெள்ளை துகில் உடுத்தி
வீதியோரம் போனாலும்
பச்சைத் துகில் உடுத்தி
பாதையிலே போனாலும்" [16]

இப் பச்சை – வெள்ளை இயைபு குமரி மாவட்டப் பாடல்களில் இல்லை.

---

15. ஆறு. இராமநாதன் சேகரித்த தென்னார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்.
16. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள் சென்னை, (நியூ–செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், இரண்டாம் பதிப்பு 1977) ப. 574.

கறுப்பு - மஞ்சள் : " அம்மியெல்லாம் அவள் நிறமாம்
மஞ்சளெல்லாம் பொன்னிறமாம் "

பச்சை - நீலம் : " பச்சைப் பளிங்கியல்லா
நீலப்பளிங்கியல்லா "

தங்கம் - பொன் : ' தங்கமலையருகே | பொன்னுமல
தாளறுக்கப் | யருகே
போனாலும் | பூப்பொறுக்கப்
தங்கலவேடங்கண்டு | போனாலும்
| பொன்னுமல
| வேடங்கண்டு

## நிறம் திரிதல்

நிறம் திரிதலில் ஒரு வரையறை காணமுடிகின்றது. இளம் நிறம் இருண்ட நிறமாகின்றது எளிதேயன்றி இருண்ட நிறம் இளம் நிறமாதல் எளிதல்ல.

## நரை கறுப்பு

" நரைத்த நல் கூந்தலுக்கு
கறுக்க நல் மருந்தும் உண்டு " [17]

இங்கு கறுப்பு — வெள்ளை — கறுப்பு எனக் கொள்ளவும் இடம் உண்டு.

## மஞ்சள் - கறுப்பு

' குளிக்கும் மஞ்சள்
கோரக் கிழங்காச்சே "

என உள்ளுறைப் பொருளோடு நிறம் திரிதல் சுட்டப்படுகின்றது. இருண்ட நிறம் இளநிறமாதல் எளிதல்ல என்பதனை,

" கறுத்த காக்கன் வந்து நதிமுங்கிக்குளிச்சால்
கொக்காய் பறக்குந்த கூட்டரே "

எனும் அடிகள் சுட்டும். காக்கை நதியில் குளித்தவுடன் கொக்காகி விட்டதென எண்ணிப் பறப்பதை ஒக்கும் மனிதன் இங்கு சுட்டம்

17. மா. வரதராஜன், ப. 290
18. டாக்டர் அன்னிதாமசு, ப. 8.
'காக்கை குளித்தால் கொக்காகுமா?' எனும் பழமொழியும் உண்டு.

படுகின்றான். ஆசாரக் கோவையில் "காக்கை வெள்ளென்னும்"[18] என வருவதும் இக்கருத்தினை யொட்டியேயாகும்.

## நிறம் உணர்த்தப் பயன்படுத்தும் உத்திகள்

ஏட்டிலக்கியத்திலும் நாட்டுப்புற இலக்கியத்திலும் நிறம் உணர்த்தப் பல்வேறு வகையான உத்திகளைப் பயன்படுத்துகின்றனர். நாட்டுப்புறப்பாடல்களில் நால்வகை உத்திகளைக் காணமுடிகின்றது. அவையாவன :

வெளிப்படையாக அமைத்தல், உவமையாகக் கூறல், உருவகத்தின் வாயிலாக உணர்த்தல், ஒப்புமையான் உய்த்தறிவித்தல்

இவை ஒவ்வொன்றிலும் நிறம் தனித்து வருதலும் அடுக்கி வருதலும் உண்டு. அடுக்கி வரும்போது தொடர்ந்து வருவதும் பத்திகளில் வருவதும் உண்டு. நிறம் பத்திகளில் அடுக்கிவரும் உத்திமுறை பாடலை நீண்ட நேரம் பாடத் துணைபுரியும்[19].

### வெளிப்படையாக அமைத்தல்

அ. நிறம் தனித்து வரல்.

நீலப்பெட்டு[20], மஞ்சப் பொட்டு, பச்சை மிளகாய்[21], வெள்ளை இட்டிலி.

ஆ. ஒரே நிறம் மீண்டும் வரல்

"கருவாழை நானட்டேன்
கருவாழைக் காயெல்லாம்"[22]

இ. அடுக்கி வரல்.

1. தொடர்ந்து வரல். கறுப்பனடி சிகப்பனடி
2. பத்திகளில் வரல்.

---

19. இதே போன்று நகை, எண், பூ, மரம், உறவுப் பெயர் போன்ற பெயர்ச் சொற்கள் அடுக்கி வருதலால் பாடல் நீடிக்கப்படுவதனை நாட்டுப் புறப் பாடல்களில் காணலாம்.

20. மு. வை. I தன், ப. 43.

21. ,, ,, ப. 52.

ஒரே நிறம் மீண்டும் வரல்.

" எல்லோரும் சோப்பு தேச்சு
என்டேமோளும் சோப்பு தேச்சு
என்டேமோள்ளே சோப்பு
மஞ்ச சோப்பு

எல்லாரும் ஜெம்பரிட்டு
என்டே மோளும் ஜெம்பரிட்டு
என்டே மோண்டே ஜெம்பர்
மஞ்ச ஜெம்பர்"

I பல நிறங்களோடும் இயந்து வரல்.

" கருங்கடலு ஒரத்திலே
கருவாடு விற்கப் போனேன்
கறுத்த துலுக் கப்பையன்
கண்ணுமேலே மையைப் போட்டான்
செங்கடலு ஒரத்திலே
சென்னாகுஞ்சி விற்கப்போனேன்
செவத்த துலுக்கப் பையன்
சேலமேலே மையைப் போட்டான் " [23]

II உவமையாகக் கூறல்

அ. நிறம் தனித்து வரல்

பால்போல் நிலவுதிக்க, கோவைப்பழம் போல, [24]
பொன்னிறக் கொண்டைக்கு தாழம் பூ

ஆ. ஒரே நிறம் மீண்டும் வரல்.

" கரும்பு நிறத் தழகியை
காயாம்பூ பேனியாளை "

---

22. செ. அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள், சென்னை (கழக வெளியீடு, மூன்றாம் பதிப்பு ஆகஸ்டு 1966) ப. 234.

23. மு. வை. அரவிந்தன், ப. 47.

இ. அடுக்கி வரல்.

1. தொடர்ந்து வரல்

| | | | | |
|---|---|---|---|---|
| கொக்கு | நிறம் | வெச்சு | ; பெண்ணின | காணிக் கேணம் |
| குருவி | ,, | ,, | ,, | காணிக்கயோ |
| மானு | ,, | ,, | ,, | பெண்ணு ,, |
| மயிலு | ,, | ,, | ,, | ,, ,, |
| புள்ளு | ,, | ,, | ,, | ,, புறாவு நிறம் வெச்சு '' |

" அம்மியெல்லாம் அவள் நிறமாம்
மஞ்சளெல்லாம் பொன்னிறமாம் ''

2. பந்திகளில் வரல்.

" தங்க மலயருகே — நான்
தாளறுக்கப் போனாலும் ; தங்கமல வேங்கண்டு
தனிச் சடிச்சால் கேடுமில்ல
பொன்னு மலயருகே — நான்
பூப்பொறுக்கப் போனாலும்
பொன்னு மல வேடங்கண்டு
புடிச்சடிச்சால் கேடுமில்லா ''

III உருவகத்தின் வாயிலாக உணர்த்தல்.

அ. நிறம் தனித்து வரல். செங்களனி பூத்ததென்ன?
பஞ்சவர்ணக்கிளியே [25]

ஆ. நிறம் அடுக்கி வரல்.

1. தொடர்ந்து வரல்.

பச்சைக்கிளியோடி சின்னி [26] பவழக்கொடியோடி'

24. மு. வை. அரவிந்தன், ப. 173.
25. மா. வரதராஜன், ப. 80.
26. ,, ப. 124.

2. பத்தியில் வரல் :

"பச்சப் பளிங்கியல்லா
பாலடக்கும் சீசாவல்லா
பாலடக்கும் சீசாவே
பறிச்சடக்கக் காத்திருந்தா(ன்)
நிலப் பளிங்கியல்லா
நெய்யடக்கும் சீசாவல்லா
நெய்யடக்கும் சீசாவே
நெறிச்சடக்கக் காத்திருந்தா(ன்)"

IV. ஒப்புமையான் உய்த்தறிவித்தல்

அ. நிறம் தனித்து வரல்

'கட்டி உறுத்தலையோ' என ஒப்பாரியில் குறிப்பிடப்படுவது செங்கல் கட்டியாகும். வேறு பாடலில் 'செங்கட்டி' என வந்துள்ளமையான் இதுவும் அதுவே எனச் சூழலைவைத்து உய்த்தறியப்பட்டது.

ஆ. நிறம் அடுக்கி வரல்

'எல்லாரும் பிடிக்கும் கொட கம்பிக்கொட
கறுத்தகொட
எங்கண்ணன் பிடிக்கும் கொட சரியான
பட்டுக்கொட"

முதலில் கறுப்புக் கொடை வருதலால் பட்டுக்கொடை கறுப்பல்லாத பிற நிறத்தில் உள்ளது என்பதை ஒப்புமையான் அறியலாம்.

2. ஒரே பத்தியில் வரல்

"பட்டுப் புடவையாகப்
பகிர்ந்துடுக்கும் நாளையிலே
வெள்ளைப் புடவையது
விரித்துடுக்க நாளாச்சே"

இங்கு பட்டுப் புடவை வெள்ளையல்லாத பிற நிறமுடையது என்பதைத் தொடர்ந்து வந்துள்ள வெள்ளைப் புடவை எனும் குறிப்பினின்று உணரலாம்.

3. பத்திகளில் வரல்

"செங்கலடுக்கி
சிகப்படிக்கோர் தீமூட்டி
செங்கல் பிரிக்கு தெப்போ—உங்களுடைய
சிகப்படுப்பு பார்ப்பதெப்போ?
கல்ல அடுக்கி
கற்படிக்கோர் தீமூட்டி—உங்களுடைய
கல்ல பிரிப்ப தெப்போ?
கறுப்படுப்பு பார்ப்பதெப்போ?

இதில், 'கல்ல' எனக் குறிப்பிடுவது கருங்கலையே என்பதைக் 'கறுப்படுப்பு' என இறுதியில் வருவதனின்றும் அறியலாம்.

முடிவுரை

1. நிறம் பண்புப் பெயராக வருதல் நாட்டுப்புறப் பாடல்களில் அருகியே காணப்படுகிறது (செம்மை).

2. நாட்டுப் புறப் பாடல் நாகரிக மாற்றத்தினை ஏற்று வருதலால் பல்வேறு காலங்களில் தோன்றிய நிறம் எனும் பொருள் தரும் பல்வேறு சொற்களை ஏற்று வந்துள்ளது.

3. ஒப்பாரிப் பாடலில் கறுப்பு நிறம் அதிகமாக வருவது அது அவலத்தின் குறியீடாக எண்ணப்படுவதாலேயே எனக் கொள்ளலாம். மேலும் கறுப்பு இயைபு ஒப்பாரியில்தான் மிகுதியாகப் பேசப்படுகிறது.

4. நீல நிறம் கறுப்பிற்கு இணையாகவே முன்னர் எண்ணப் பட்டு வந்தது.

5. மஞ்சள் நிறத்தினைப் பொன், தங்கம், வெண்கலம் என நுணுகிப் பார்த்திருப்பது சிறப்பே.

6. ஏட்டு இலக்கியங்களைப் போல் நாட்டுப் புறப் பாடல்களிலும் பச்சை எனும் சொல் நிறத்தை மட்டும் குறிக்காது பல்வேறு பொருளையும் சுட்டுகிறது.

7. மக்கள் நாட்டுப்புறப் பாடல்களில் கறுப்பு, கருநீலம், நீலம், பச்சை, சிவப்பு, காவி, மஞ்சள், பொன், தங்கம், வெண்கலம், வெள்ளை ஆகிய நிறமுடையோராகச் சுட்டப்படுகின்றனர்.

8. நிறத்தினை அடுக்கிக் கூறும் உத்தியைப் பாடலின் நீட்சியை அதிகப்படுத்தப் பயன்படுத்திக் கொண்டனர்.

---

* கா. சரோஜினி அம்மாள், தாலாட்டுப் பாடல்கள்-நாஞ்சில் நாடு (திறனாய்வு), கேரளப் பல்கலைக் கழக முதுகலை வகுப்பு தமிழ்த் தேர்வின் ஒரு பகுதியாகத் தமிழ்த் துறை வழியாகக் கொடுக்கப்பட்ட பொருட் கட்டுரை. அடிக்குறிப்பு இல்லாத பாடல்கள் கட்டுரையாளரால் குமரி மாவட்டத்தில் தொகுக்கப் பட்டவை.

# 30. விடுகதைகள்

ச. சிவகாமி

இயற்கையோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிறம் மக்களின் அன்றாட வாழ்விலும் சிறப்பிடம் பெறுகிறது. இலக்கியத்துள்ளும் முக்கியத்துவமடைந்து இன்பம் நல்குகிறது. சிந்தனையைத் தூண்டுவதாகவும், பொழுதுபோக்காகவும் அமையும் விடுகதைகள் எனப்படும் புதிர்களிலும் தன் இன்றியமையாமையை நிலைநாட்டியுள்ளது. நிறுவன வெளியீடான, 'தமிழில் விடுகதைகள்' எனும் நூலை ஆய்வுக் களமாகக் கொண்டு, விடுகதைகளில் — நிறங்கள் பற்றிய உணர்வுகள் இங்குத் தரப்படுகின்றன.

நிறம், வர்ணம், வருணம், வண்ணம், சாயம், மேனி முதலான சொற்களில் நிறம் வழங்கப்படுகிறது[1]. மேனி நிறத்தினைக் குறிக்க வழங்கப்படுதலை நிகண்டுகளும் சுட்டுகின்றன[2].

வெண்மை, கருமை, செம்மை, பச்சை முதலான நிறங்கள் அதிக அளவில் காட்டப்பட்டுள்ளன. மஞ்சளும் நீலமும் அடுத்து அமைகின்றன. அருகிய நிலையில் ஊதாவும் (3), படிக நிறம் இருவிடங்களிலும், காக்கி, காவி, பழுத்த நிறம் ஆகியவை ஓரோர் இடத்தையும் பெற்றுள்ளன[3].

---

1. பளபள வென்றிருப்பாள் பல நிறம் காட்டிடுவாள் (1870), பட்சியில் சிறந்த பட்சி பல வர்ணமுள்ள பட்சி (1799), வருணத்தால் வெளுப்பென்றே சொல்லலுற்றோம் (2290) வரி வரி வண்ணக் கொம்பு (2323). சாயமும் பூசுவார் சாது என்னையே (2429), பார்த்தாலும் அவள் மேனி பச்சை மேனி (1206)

*2 ஆசிரிய நிகண்டு, பதிப்பு வீ. சொக்கலிங்கம், தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு, 1975, ரூ. 14 பக். 562-564

3. கையால் விண்டால் ஊதா நிறம் (931), படிக நிறப் பட்டுடுத்தி (1821), காக்கிச் சட்டைக்காரன் (930), காவி உடை அனியாத கள்ளத் தவசி (1054), பழுத்த நிற மேனி உண்டு கிழவனன்று (2333),

காக்கி, காவல்காரனின் சீருடை நிறத்தையும், காவி துறவியின் ஆடை நிறத்தையும், படிகநிறம் வெங்காயத்தின் மேல் தோல் நிறத்தினையும், பழுத்த நிறம் பூசணியின் நிறத்தினையும் உணர்த்துகின்றன. நிறத்தினைக் குறிக்கும் சொற்கள் அவற்றை அறிவிக்கும் அடிப்படைச் சொற்களாலும் அவற்றினின்று தோன்றுபவற்றாலும், பிறவற்றாலும் குறிக்கப்பட்டுள்ளன.

வெண்மை:

(1) மூன்றெழுத்து உண்டானால் அமைந்ததொரு வெண் பொருள் (2234); (2) வெண்மையான காடு (243), (3) வெள்ளோடு கீழ்மேய (2476), (4) வெள்ளிக் கட்டி மண்ணுக்கு குள்ளே (2438), (5) மண்ணுக்குளே வெள்ளை மீன் (2053- வெள்ளக் குதிரைக்கு வெலாவுல பொத்தல் (2435), (6) பகட்டானது பார்வைக்கு வெளுப்பு (1745), (7) தரைதனிலே அதுபோல வெளிமையில்லை (1231), இவற்றுடன் ஒளி பளபளப்பு என்பனவும், (8) ஒளியும் இருளும் ஒத்து வாழ்வன (732 — நரையும் கருமுடியும்), (9) பக்கத்தில் போய்/பார்ப்ப தாயிருந்தது (1553 — தேன் கூடு) — வெண்மை நிறத்தை குறிக்க அமைந்துள்ளது. இவற்றுடன் வெண் நிறப் பொருள் களைச் சுட்டுவதன் மூலம் நிறத்தை உணர்த்துவதாக, (10) சாந்து பூசின கோவிலுக்குள் (1261 - முட்டை) (11), பளிங்கு மண்டபம் கட்டி (1871-முட்டை), (12) பாலாற்றில் கருப்பு மீன் (1916 — கண், கருவிழி), (13) முத்தும் முத்தும் கொதித்து (2151 — சோறு, நுரை), (14) பச்சைச் செடியிலே தயிர்ச் சாதம் (1763 — மல்லிகைப்பூ), (15) நீல நிலத்தில் நித்தில முளைகள் (1702 — விண்மீன்) (16) தவள நிறம் பெற்றிருக்கும் சங்குமல்ல (1454 — முள்ளங்கிக் கிழங்கு), (17) நரைத்த கிழவி ஊரெல்லாம் ஆடுகிறாள் (1600 — புகை), (18) வேலிக்குள்ள வெண்கலக் குண்டான் (2489 — காளான்) ஆகியனவும் தரப்பட்டுள்ளன. நிறங் கெடுதலை உணர்த்தற்கு வெளுத்தல் என்பது பயன்பட்டுள்ளது. வேதனையாலே மேனி வெளுத்தவன் (232 பனை ஓலைச்சுவடி).

கருமை

(1) பாய்வது கருநீர் (1898), (2) அடர்ந்த கரும் காட்டில் (34), (3) கருமை நிறத் தழகி (871), (4) கரி வளையல் அணிந்

திருக்கும் (1291), (5) கோயிலைச் சுற்றிக் கறுப்பு (1204), (6) காரிக் காளை பிடிக்கப் போனான் (1007), (7) கன்னங் கரேல் என்று இருக்கும் (922) என்பனவற்றுடன், கார், இரும், இருள் என்பனவும் கருமையைக் குறிப்பதனை, (8) கத்துவானேன் கார் மேகா (85-காளான், இடி, மழை), (9) என்னிடத்துள்ள இரும் கடல் என்றும் (627-பூகோளப் படம்), (10) இரவில் தோன்றும் இருளை வெட்டும் ( 345 - மின்னல் ) போன்ற சான்றுகளில் காணலாம். இங்கும் பொருள்கள்மூலம் நிறம் குறிக்கப்படுவதை, (11) இங்கிருந்து பார்த்தால் இரும்பாய் இருக்கும் (1553-தேன் கூடு), (12) ஈடற்ற மையிட்டு மேனி மினுக்குகின்றாள் (30-பனை ஓலைச் சுவடி), (13) கார்நிறம் உடையவள் (933-நாவற் பழம்) (14) ஒரு வெள்ளைக் கிண்ணம் அதற்குள்ளே நாவற் பழம (2199-கண்) என வரும் எடுத்துக் காட்டுகளில் காணலாம். மரபு நிலை போன்று இதனுள்ளும் நீலம் கருமையைக் குறிப்பதை ( 5) 'நீல இலை பாதி வெண்மையிலை பாதி ஆக இலை ஒன்றாக' (161-பகல் - இரவு ) என்பது போன்று அமைந்திருப்பவற்றின் மூலம் காட்டலாம்.

செம்மை:

(1) பூப்பாதோ செம்பூ (1889), (2) கூரத்துச் செம்மைப்புறா (1140), (3) பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் (179), (4) செவ்வாழை போலிருப்பான் (1373), (5) செக்கச் செவேர் என்றிருக்கும் (1375), (6) செவலை எருது பிடிக்கப்போனால் (1399), (7) செக்கர் நிறத்தவளம் இதன் கோட்டில் (348) முதலானவற்றுடன் குறிப்பாகச் சிவப்பு நிறத்தைச் சுட்ட, (8) அரக்குப் பட்டு அழகான பட்டு (130—பட்டுப்பூச்சி), (9) பவழம் போல நாட்டுப்பெண் (1852—இலந்தைப்பழம்), (10) செப்பு நிறைய மாணிக்கம் (1361—மாதுளம்பழம்), (11) செம்பு நிறைய கெம்பு (1393—மாதுளம்பழம்), (12) இரத்தினம் பதிக்க பெட்டி திறக்க (1339—மாதுளம்பழம்), (13) அத்துவானக் காட்டிலே ஒரு துளி இரத்தம் (83—தம்பலப்பூச்சி), (14) தங்கச்சி முத்தத்திலே தங்கப்பழம் (1435—மிளகாய்) போன்றவும் பயன் கொள்ளப் பட்டுள்ளன.

(1) பச்சிலைத் தோப்புக்குள்ளே பார்த்தால் (940), (2) பச்சை நிறப் பார்ப்பாள் (1768), பச்செ பச்செ டாக்டர் (1753), (3) பசுந்தளிர் தின்றிடுவான் (1754), (4) பச்சைப் பசேல் என்றி-

ருக்கும் (1773), (5) பார்த்தால் பசப்புக் காரி, (1906), (6) பைங்கொடியாள் வந்த பின்பு பந்தல் போட்டு (1991) என்பனவற்றுடன், (7) ஓலைப்பூ நிறத்தாள் ஒரு அடி வளர்ந்தாள் (781—நெற்பயிர்), (8) கற்றாழை மடல் நிறத்தாள் (904—கிளி), (9) மரகத மணியாய்ப் பிறந்து (2056—நெல்), (10) மேகநிறம், கொண்டிருக்கும் மழைபெய்யாது (2241—முந்திரிக் கொட்டை) முதலானவும் பச்சை நிறத்தைக் குறிக்கின்றன. பச்சை என்பது நிறத்தை மட்டுமின்றி ஒன்றன் இயல்பினையும் உணர்த்துதற்குப் பயன்கொள்ளப்பட்டுள்ளது. சான்றாக,

> ‘ முதுகு நரம்பை உரியுங்கள்
> பச்சை வெண்ணெயைத் தடவுங்கள்’ (2143-தாம்பூலம்)

என்பதனைக் கூறலாம். கருப்பு நிறம் பச்சை நிறத்தை உணர்த்தியிருப்பதனைப் பார்க்க முடிகிறது.

> ‘ காடேறி மேயாத கருப்புப் பசு
> கன்று கத்தாமல் குடிக்காமல்
> கட்டாமல் கறக்காமல்
> ஒருபானை பால் தருகிறது — அது என்ன? ’
> (977 — தென்னைமரம்)

எனும் புதிர் விடையாகத் தென்னை மரத்தைக் கொண்டுள்ளது. இங்குக் கருப்பு என்பது தென்னையின் நிறமான பச்சையையே சுட்டுகிறது.

மஞ்சள்:

(1) மழையோடு வருகின்ற மஞ்சள் புறா (2095), (2) பூ மஞ்சக பிஞ்சக (933) எனக் குறிக்கப்படும் மஞ்சள் நிறமானது பிறவற்றைப் போன்று பொருள்களின் மூலம் உணர்த்தப் படுவதை, (3) செங்கல் அறுக்கச் செவந்தி பூக்க (1738—சூரியன்) (4) பூமியிலே பொன் மரப்பாச்சி புதைத்து (1994—மஞ்சள்), (5) உள்ளே தங்கக் கட்டி (2478 — முட்டை), (6) சுளையை எடுத்து மாலையிடும் சொர்ணக் கதை (840 — பலாச்சுளை), (7) வெள்ளி மடலுக்குள்ளே வெண்கலக் கட்டி (2176 — பலாப் பழம்) என வரும் குறிப்புகளாலும் அறியலாம்.

(1) நீலச் சுளி கொண்டான் (1701), (2) மூகத்தின்மீது முழு நீலம் பூத்ததுண்டு (2130), (3) வேலியைச் சுற்றி நீலியப்

பாம்பு (2493) என்பனவற்றால் வழங்கப்படும் நீலநிறம், தன் நிறத்தினை உணர்த்துவதுடன், கறுப்பு நிறத்தினையும் சுட்டப்பயன்பட்டுள்ளது. பொருளைக் குறிக்கப் பயன்படுவதனை, 'நீலங்கள் தரிப்பேன் நான்' (1894) என்பதாற் பெறலாம்.

மஞ்சள், சிவப்பு ஆகியவற்றைத் தனித்த நிலையில் உணர்த்திய தங்கம். அவ்வித நிறங்களும் இணைந்த நிறத்தினைச் சுட்டி நிற்பதையும் பார்க்க முடிகிறது செங்கல் கட்டடம், அதற்குள்ளே பொன் கட்டடம் (1378) எனும்பொழுது செங்கல் இளநீரைச் சுட்டப் பொன் தேங்காயைக் காட்டிச் செம்மையும் மஞ்சளும் கலந்த ஒருவித நிறத்தைத் தருகிறது.

நிறம் குறிக்க இயலாப் பொருட்களை, 'உருவம் இல்லான் நிறம் இல்லான்....' (472) என்பது போன்று வெளிப்படையாகவும். 'காற்று இல்லாத கண்ணாடிக் குண்டில் மஞ்சக் கோழி மயங்கிக் கிடக்குது' (1060 — முட்டை) என்பது போன்று ஒப்புமை வாயிலாகவும் விளக்கக் காணலாம்.

## நிற வெளியீடு:

பொது நிறையில் என்ன நிறம் என்பதனைச் சுட்டாமல். ஒருமையாக, 'பட்சி ரெண்டும் ஒரு நிறம் பறக்கிறது' (1800 — கண்) என்பது போன்றும், பன்மை நிலையில் 'வாயில் பற்களுண்டு வர்ணங்கள் பல உண்டு' (1976 — சீப்பு) என்பது போன்றும் அமைவதுண்டு.

'உச்சியில் பச்சைத் தோகை'. (409—கரும்பு) எனும்படி நிறத் தனித்தும், 'பச்சை வண்ணப் பட்டுடுத்து' (1364—பலாப்பழம்) என நிறத்தை உணர்த்தும் சொல்லுடன் இணைந்தும் வருகிறது. பெரும்பான்மை தனித்தே இடம் பெறுகின்றது.

நிறம் அதன் சிறப்பினை விளக்கும் அடையுடன் வருவதனை 'பழக்கடைக்குப் போனேன் பார்த்தேன் ஒரு அதிசயம், பச்சை, சிவப்பு, பகட்டுமஞ்சள் மெச்சும் நிறத்தில் மேல் தோல் இருக்கும்' (1861 — வாழைப்பழம்) என அடையும் பகிர்களில் காணலாம்.

நிறத்திற்கு உவமை அளித்துச் சிறப்பிப்பதனை, 'அண்டர் தம் கோன் ஊர்தி நிகர் கருப்பின் மிக்க அழகுடையாள்' (60 —குயில்); சுண்ணாம்பு தோற்கும் வெண்மை (1360—தேங்காய்); முதலான சான்றுகளால் அறியலாம். புதிரின் விடையை அறி தற்கு இத்தகு அமைப்புகள் பெரிதும் உதவுகின்றன.

ஒரே விடுகதையில் ஒரே நிறம் ஒன்றுக்கு மேற்பட்ட இடங் களில் இடம் பெறுவதை,

கன்னங் கருத்த பழம் கருநாவற்பழம் அல்ல (920—கருவிழி). செம்மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன் (1395—சீனிக் கிழங்கு) பச்சைப் பசுத்திருக்கும் பாகற்காயுமல்ல, பச்சை முள்ளும் படர் ந்திருக்கும் பலக்காயுமல்ல உள்ளே வெளுத்திருக்குந் தேங்கா யுமல்ல உருக்கினால் நெய்காணும் வெண்ணையுமல்ல, (1782—கொட்டை முத்து என வரும் காட்டுகளால் பெறலாம்.

ஒரே விடுகதையில் ஒன்றுக்கு மேற்பட்ட நிறங்கள் குறிக்கப் படுவது பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. 'பூத்தபோது மஞ்சள், பூத்ததும் சிவப்பு காய்த்தபோது சிவப்பு காய்ந்ததும் கருப்பு (1957 — ஈச்சம் பழம்) —வெள்ளை வேர் ஓடி கருந் தண்ணீர் பாய்ந்து செம்பூப் பூக்கும் (2475 — தீபம்) எனச் சான்றுகள் அமையும்.

ஒரே பொருள் இருவேறு நிறங்களிலும் அமையக் கூடுமாயின் அது, 'செக்கச் சிவந்திருக்கும் மஞ்சளாயுமிருக்கும்' (1369— முந்தரிப்பழம்) என்பது போன்று சுட்டப்படுகிறது. இவ்வகை அமைப்பு மிக அருகியே உள்ளது.

நிறத்தினையும், பொருளையும் உணர்த்தி இருபொருள்பட நிற்றலையும் ஆங்காங்கே காணலாம். ஆரால் ஓடிய குளத்திலே அழகுச் சதுர வயிலிலே எருவும் இல்லாமல் கலப்பையும் இல்லாமல் எட்டு நாளைக்கொரு வெள்ளாண்மை - அது என்ன?' (248-உப்புப் பாத்தி) என்பதில் வெள்ளாமை, வெண்மை நிறத்தினையும், விளைந்த பொருளையும் குறிப்பிட்டு நிற்கிறது.

நிறமானது வெளிப்படையாகக் குறிக்கப் பெறாது அவ்வந் நிறத்தினை உணர்த்தக்கூடிய பொருள்களால் சுட்டி அதன்மூலம்

விடுகதையை விடுவிக்கச் செய்வதும் அதிகமாகக் காணப்படுகிறது. மரகதம் சிவப்பினையும், பொன் மஞ்சளினையும், முத்தும், பாலும், வெண்மையையும் குறித்து அமைவதனை,

மரகத மணியாய்ப் பிறந்து
பொன் மணியாய் வளர்ந்து
முத்து மணியாய் வெடித்துப்
பால் மணியாய்ப் பக்குவமாய்த்
தரணி காக்கும் தாயானேன்—நான் யார்? (2067)

எனும் புதிரில் பார்க்கலாம் இதற்கு நெல் - அரிசி - சாதம் என்பது விடையாகும்

நிறத்தினை ஏதேனும் ஒரு பொருளின்மேல் ஏற்றி உரைக்கும் பாங்கும் காணப்படுகிறது.

முப்பத்திரண்டு வெள்ளைச்சிப்பாய்களுக்கு நடுவில்
ஒரு சிவப்பு ராசா—அது என்ன? (2167-நாக்கு)
வயல் வெள்ளை வயல்
விதை கருப்பு விதை
கையால் விதைத்து வாயால் பெருக்க வேண்டும் (2311)

(காகிதத்தில் மைகொண்டெழுதி வாயால் படிப்பது எனச் சான்றுகள் காட்டலாம்.

நிறத்தினை நேரிடையாகக் காட்டாது ஒப்புடைய ஒரு பொருள்மேல் ஏற்றித் தருவதும் சிறப்புடைய உத்தியாக இங்குக் காணலாம்.

கற்றாழை மடல் நிறத்தாள்
காமனுடன் பிறந்தாள் வெற்றிலைத் தின்றறியாள்
உதடோ சிவந்திருக்கும்—அது என்ன (904—கிளி)

என்பது போன்று அவை அமைகின்றன. புதிரை விடுவிப்பவர் சிரமப்பட வேண்டும் என்பதற்காக இதுபோன்ற அமைப்புகள் எழுகின்றன எனலாம்.

சொல்லும் நிறத்தின் தூய்மையை நிலை நிறுத்த தூய, சுத்த, முழு எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிற நிறங்கள் விரவாமையை இவை உணர்த்துகின்றன[4].

செக்கச் சிவப்பு, கன்னங் கருப்பு, பச்சைப் பசேல் என்பது போன்றும் இவற்றுடன் தொடர்புடையனவாகவும் அமையும் கூறுகளும், அட்டைக்கரி, பெரிய கருப்பு முதலானவையும் இதன்பாற் படுவனவாகக் கொள்வதுடன் நிறத்தின் மிகுதியைக் (அடர்த்தி) காட்டவும் பயன்படுகிறது என நவிலலாம்[5].

கருப்பட்டியோ கருப்பு கருப்பு (272), பச்சைப் பச்சை நிறத் தாள் (1780) என்றடுக்கிவரும் பொழுதும் நிறத்தின் அடர்த்தி வலியுறுத்தம்படுகிறது.

ஒவ்வொரு நிறத்தின் சிறுசிறு வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டல் இங்குச் சிறப்பாக அமைந்துள்ளது. இளம், பிஞ்சு எனும் சொற்கள் நிறத்தின் அடர்த்திக் குறைவினைக் காட்டவும் 'கரு' அடர்த்தி மிகுதியை உணர்த்தவும் வழங்கப்படுகிறது.

நிறமது பிஞ்சுப் பச்சை (1083—காப்பிக்கொட்டை)
இளஞ் சிவப்பு ராணிக்கு (385—நர்க்கு)
காயோ காய்! கருநிறப்பச்சைக் காய் (1002)
கருநீலப் புடவைக்காரி (864—வானம்)

---

4. துட்டர் திருடும் பாய் தூய வெள்ளிப்பாய்(2299 — ரூபாய்)
சுத்த பச்சையாடை பல சூழ்ந்திருக்கும் (2142—
மக்காச்சோளம்)
முகத்தின்மீதும் முழுநீலம் பூத்ததுண்டு (2130 — கண்)

5. செக்கச் சிவப்பு நாங்கள் (1374)
செக்கச் சிவந்திருப்பாள்
செவ்வாழை போலிருப்பாள் (373)
செக்கச் செவேர் என்றிருக்கும் (1375)
பச்சை பச் சென்றிருக்கும் பாவக்காயுமல்ல (1776)
பச்சைப் பசேல் என்றிருக்கும் (1783)
பச்சைப் பசுத்திருக்கும் பகாற்காயுமல்ல (1782)
கன்னங்கரேல் என்று இருக்கும் காரிருளும் அல்ல (922)
கன்னங் கருத்த பழம் (920)
கன்னங் கருப்பழகி நான் (921)
பிடித்துவாடா பெரிய கருப்பா (2039)
அட்டைக்கரி பெண்ணுக்கு (31)

நிறங்களின் இணைவுகளும் சிறிதளவு, 'துடி சிவப்பு மஞ்ச தோகையன்று' (1413—கருப்பு), பச்சை நிறம் பெற்றபின் பசியமஞ்சள் போல் நிறத்தாள்' (1769 — மூங்கில்) என்பன போன்று வரக் காணலாம்.

நிறத்தை உணர்த்தும்பொழுது, அப்பொருளின் நிறம் இயற்கைக்கு மாறாக 'பச்சைக் கோழிக்குப் பச்சை முட்டை. (1791 — பருத்தி) என்பது போன்று அமைதலும் உண்டு' பொருளைவிட நிறம் முக்கியத்துவம் கொள்ளும் இடங்கள் இவ்வாறு அமைகின்றன.

நிறப் பெயர்கள் வினையாகி நிற்றலை,

ஏரிக்கரை உயர்ந்திருக்கும்
எட்டிப்பழம் சிவந்திருக்கும்
காகம் கறுத்திருக்கும்
காக்கைக் குஞ்சு வெளுத்திருக்கும் (638 — அடுப்பு—நெருப்பு—கரி—சாம்பல்)

என்பது போன்று உருவனவற்றால் பெறலாம். பெயராகி அமைதலை,

சூடுபட்டுச் சிவந்தவன் (1359—செங்கல்)
காட்டில் கறுப்பன் கயிறு போடுகிறான் (945—சுட்டெறும்பு)
முரட்டுப் பிள்ளை பெற்றாளே நீலி (1853—பனைமரம்)
கறுப்பான மெத்தையில் வெள்ளையப்பன் காய்கிறான் (915—தோசை)

என்பனவற்றால் உணர்த்தலாம். நிறம் பெயர் தோற்றத்திற்குக் காரணமாதலை நன்னூலாரும் சுட்டுவர் (276).

## நிறத்தின் பண்பாடு

விடுகதையின் விடை யாது என அறிவதில் நிறங்கள் பெறும் இடமும் அது எவ்வகையில் அமைகிறது என்பதும் இவண் நோக்கப்படுகிறது.

முழுமையான நிலையில் நிறங்களின் மூலமே விடை உணர்த்தப்படுதல் பரவலாகத் தென்படுகிறது.

காக்கையைப் போல் கறுப்பு
கையால் தொட்டால் ஊதா
வாயால் மென்றால் நீலம் — அது என்ன (932)

என்பதில், நாகப்பழம் எனும் விடையறிய நிறங்களே இன்றி யமையாதனவாய் உள்ளன. 'நீலக் கடலிலே வெண் பஞ்சு மிதக்குது — அது என்ன? (1699 — வெண்மேகம்) எனப் பல சான்றுகளை இதற்குக் காட்டலாம்.

பல கூறுகள் இணைந்து விடையைக் காண்பதற்கு உதவும் பொழுது அவற்றுள் ஒரு கூறாக நிறங்கள் அமைவதும் உண்டு.

கருமை நிறத்தழகி
காடெல்லாம் சுற்றி வருவாள்
கண்டவுடன் ஓடுகிறாள்
கான மழை பொழிகின்றாள் — அவள் யார்? (871)

எனும்புதிரில் கானமழை பொழிதலாகிய குறிப்பிட்ட பொருளின் இயல்பும், கருத்த நிறமும் இணைந்து 'குயில்' என்று விடை வருகிறது. இவற்றால் விடுகதைகளில் நிறங்களின் இன்றியமை யாமை புலப்படும்.

ஒரு பொருள் தன்னுள் அடையும் நிற மாற்றமும் சிறப்பு நிலையில் அமைவதனை.

வட்ட வட்டப் பாதையிலே
வந்து நிற்கும் வெள்ளைக் கொக்கு
சற்று நேரம் சூடான பின்
சிவப்பாக மாறிவிடும் — அது என்ன (2298)

என்று வினவுங்கால், குறிப்பிட்ட பொருள் தன்னுள் அமையும் நிறமாற்றத்தால் உய்த்துணர வேண்டியுள்ளது. இங்குத் தோசை என்பது விடுகதையாக அமைகிறது. இத்தகையனவும் பலவாக வுள.

விடுகதைகளில் சிலவற்றுள் அவற்றின் விடையை அவற்றுள் அமையும் குறிப்பிட்ட ஒரு சொல்லே உணர்த்தி நிற்றல் உண்டு. இப்பண்பிற்கு நிறமும் பயன்படு மாற்றை.

கோட்டையிலே மணலைக் கொட்டி
குடம்பால் தனியே கறந்தால்
மிஞ்சுவது கருப்பாத்தான் — அது என்ன? (1191)

ஆயான் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் குருவி ஊசலாடுகிறது — அது என்ன?
(236)

போன்றவற்றில் காணலாம். இங்குப் பிண்ணாக்கு எலுமிச்சம் பழம் என வரும் விடைகள், முறையே கருப்பு, மஞ்சள் என நிறங்களில் அமைகிறது. விடைக்கும் விடுகதையுள் அமையும் பொருளுக்கும் உள்ள நிற ஒப்புமையே இதற்குக் காரணமாம்.

என்ன நிறம் என்பது குறிக்கப்படாமல், ஆயின் புதிரை விடுவிப்பதற்கு நிறங்களே முக்கியத்துவமாய் அமைவதாகவும் சில உண்டு. சான்றாக,

மூன்று நிறக் கிளிகளாம்
கூண்டில் போனால் ஒரு நிறம் அது என்ன? (2227)

என்பதனைச் சுட்டலாம் (விடை — தாம்பூலம்).

நிறத்தினை உணர்த்தும் குறியீட்டுப் பொருள்களின் வாயிலாக விடைப் பொருளை விளக்கும் தன்மையும் உண்டு.

தவள முத்தினைப் பவள மாது ஈன்று
தன்னகம் வைத்துக் கண்ணிமை போலக்
காக்கக் கண்டேன் கழறாய் இது என்? (1419)

என்பதில் தவளம் — வெண்மையினையும், பவளம் — செம்மையினையும் காட்டி விடையாக பற்களையும் உதடுகளையும் புலப்படுத்துகின்றன.

ஒன்றேபோல் அமையும் விடுகதைகளில் அவற்றுள் குறிக்கப்படும் நிறமாற்றம் மட்டுமே அவற்றை வேறுபடுத்திக் காட்டுவதாக அமைவதனையும் பார்க்கலாம்.

காக்கிச் சட்டைக்காரன்
வாயலில் கெட்டிக்காரன் — அவன் யார்? (930- போலீஸ் காரன்

கறுப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன் — அவன் யார்? (917–பூட்டு)

நிறத்திற்குச் சிறப்பளித்து அமையும் விடுகதைகளில், அவற்றிற்கு இருவேறு விடைகள் வருதலுக்கும் வாய்ப்புண்டு.

பச்சைச் சன்னல் வெள்ளை தோப்ரா
கருப்புப் பாதிரி உள்ளே தூங்குகிறாள் - அவன் யார்? (1762)

எனும் பொழுது விடையாக சீத்தாப்பழம் குறிக்கப்படுகிறது. இதுவே சற்று மாற்றத்துடன் கொடுக்காப்புளிக்கு வருவதனை.

பச்சைப் பங்களாவிலே
வெண்பட்டு மெத்தையிலே
கருப்புத் துரை தூங்கிறார் அவர் யார்? (1774)

என்பதில் காணலாம். இத்தகு அமைப்புகள் விடுகதைகளின் பெருக்கத்திற்குப் பெரிதும் துணை நிற்கின்றன.

இங்கு மற்றொன்றும் குறிப்பிடற்பாலது நிறத்தின் அடிப்படையில் அமையும் விடுகதைகளுள் சில, மாற்று வடிவங்கள் கொள்வதற்கும் வாய்ப்பேற்படுகிறது. குன்றிமணியை விடைப் பொருளாகக் கொண்ட சில விடுகதைகளை இதற்குச் சான்றாக் கலாம்[6].

மற்றும் 'வைகுண்ட ராஜனுக்குக் கழுத்திலே வெள்ளை' (782 - கருடன்) என்பது போன்று விடைப் பொருளின் இயல்பினை இயம்பவும், 'பூவிலே வெள்ளைப் பூ' (1973 - எள்ளுப்பூ) என அதன் சிறப்பினைச் சுட்டவும் நிறம் தேவைப்படுகிறது.

மேற்கண்டவாறு விடுகதையுள் சிறப்பிடம் பெறும் நிறங்கள் பொதுநிலையில் இலக்கிய இன்பமும் நல்குகின்றன. 'மாயனுக்குச் செங்கையிலே மான் மழுவாம்', (234) என — வருணனை நிலையிலும்,

தின்றால் செவக்கும்
செவத்தால் புண்படும் (1542) - திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு).

---

6. மேல் நிறம் கருப்பு
அடிப்புறம் சிவப்பு
உடைத்தால் பருப்பு
தின்றால் கசப்பு அது என்ன? (2245)
மதுரைச் சிவப்பு மானாமதுரைக் கருப்பு
உடைத்தால் பருப்பு தின்றால் கசப்பு - அது என்ன?
(2064)
சென்ன பட்டணம் சிவப்பு
சீரங்கப் பட்டணம் கறுப்பு
உடைந்து பார்த்தால் பருப்பு
தின்று பார்ந்தால் கசம்பு அது என்ன? (1401)

என அந்தாதி கொண்டும்; எங்கள் அப்பன் செந்தலை செந்தலை (553 கோழிக்குஞ்சு என அடுக்குத் தொடராகவும் கறுத்த பாறைக்கு வெளுந்த வேர் (909 - யானைத் தந்தம்) என முரணின்பம் தருவதாகவும்;-தாறுமாறு, கோணல்மாணல் என அமைவது போன்று, 'பூமஞ்சக பிஞ்சக' (893 - பாகற்காய் எனவும் அமைவனவற்றை இங்குச் சுட்டலாம்.

முடிவுரை :

இங்ஙனம் பலவகைகளிலும் தம் சிறப்பை வெளிகாட்டும் நிறங்கள் தம்மை விடுதலையின் ஆக்கக் கூறுகளுள் ஒன்றாக உணர்த்துகின்றன. நிறங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பெற்றுள்ள முக்கியத்துவமே, விடுகதைகளில் அவை உயர்வு பெற்றுள்ளமைக்குக் காரணம் எனலாம்.

பயன்படுத்திய நூல் :

தமிழில் விடுகதைகள், டாக்டர் ச. வே. சுப்ரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மூ. ப, 1980.

பின்னிணைப்பு :

விடுகதைகளில் நிறம் பற்றிய குறிப்புகள் :

வெண்மை :

7, 40, 157, 161, 187, 231, 248, 266, 269, 317, 351, 385, 392, 410, 432, 439, 465, 468, 488, 495, 514, 538, 618, 638, 685, 712, 732, 782, 843, 862, 866, 869, 881, 908, 909, 914, 915, 918, 919, 920, 964, 972, 976. 984, 1073, 1123, 1136, 1146, 1193, 1204, 1022, 1231, 1261, 1284, 1304, 1318, 1354, 1356, 1360, 1378, 1404, 1427, 1454, 1464, 1498, 1529, 1553, 1589, 1595, 1600, 1601, 1699, 1702, 1708, 1745, 1755, 1756, 1761, 1762, 1763, 1767, 1768, 1773, 1774, 1776, 1779, 1782, 1784, 1788, 1792, 1794, 1797, 1813, 1846, 1861, 1871, 1889, 1916, 1952, 1973, 2012, 2053, 2067, 2119, 2144, 2145, 2149, 2151, 2167, 2176; 2199, 2221, 2234, 2264, 2290, 2298, 2299, 2305, 2311, 2405, 2430- 60, 2462, 2476, 2478, 2481, 2431, 2494, 2495, 2498,

கருமை :

31, 34, 60, 85, 187, 221, 230, 231, 232, 272
299, 300, 317, 345, 348, 355' 357—364, 407, 417,
439, 445, 510, 618, 619, 858, 859, 860, 861, 862,
865, 872, 906—922, 925, 931, 933, 945, 952, 953,
957, 974 976, 9, 1005, 106—109, 1014—1016, 1083,
1115, 1136, 1191, 1204, 1227, 1287, 1291, 1300,
135., 1368, 1401, 1405, 1487, 1553, 1657, 1679,
1755, 1762, 1774, 1794, 1889, 1898, 1916, 1923,
1933, 1957, 2013, 2023, 2031, 2039, 2062, 2064,
2099, 2150, 2199, 2242, 2245, 2311, 2432, 2437,
2448, 2451, 2457, 2463, 2465, 2468. 2473.24—2475,
2480, 2481, 2493.

செம்மை :

40, 234, 254, 300, 348, 385, 424, 553, 576,
619, 638, 755, 783, 870, 904, 957, 972, 1014,
1449, 1049, 1083, 1146, 1167, 1168, 1201, 1213,
1222, 1230, 1269, 1286, 1290, 1299, 1311, 1313,
1328, 1359, 1366, 1365, 1370, 1372—1378, 1380,
1381, 1387, 1392,—1395, 1398, 1399, 1401, 1404,—
1404—1406, 1431, 1465, 1524 1542, 1653, 1594,
1612, 1708, 1721, 1738, 1745, 1756, 1767, 1772,
1780, 1786, 1793, 1809, 1851, 1852, 1861, 1889,
1900, 1923, 1933, 1957, 2020, 2023, 2038, 2045,
2064, 2068, 2089, 2142, 2145, 2150, 2167, 2192,
221, 2245, 2292, 2298, 2334, 2353, 2468, 2475,
2490.

பச்சை :

40, 62, 101, 232, 235, 288, 290, 300, 409,
533. 536 619, 755, 781, 805, 904, 940, 957, 997,
1002, 1050, 1083, 1146, 1206, 1404, 1465, 1526,
1544, 1602, 1708, 1752—1794, 1809, 1836, 1861,
1830, 1900, 1906, 1991, 2023, 2057, 1094, 2119,
2142, 2143, 2155, 2148, 2221, 2241, 2384, 2446,

மஞ்சள் :

31, 230, 231, 236, 254, 299, 445, 552, 840, 993, 1060, 1133, 1281, 1368, 1369, 1378, 1379, 1413, 1429, 1434, 1436, 1593, 1704, 1769, 1836, 1861, 1871, 1957, 1967, 1964, 2022—2031, 2067, 2095, 2100, 2176, 2478,

நீலம் :

161, 864, 931, 932, 1650, 1665, 1699—1707, 1785, 1853, 1894, 1959, 2130, 2199, 2501.

# 32. பழமொழிகள்

இரா. பாலசுப்பிரமணியம்

சமுதாயத்தின் அல்லது நாட்டின் பண்பாட்டினை மதிப்பிடுவதற்குப் பயன்படும் பலகூறுகளுள் பழமொழியும் ஒன்றெனலாம் இப்பழமொழி நாட்டுப்புறத்தாரிடம் பலகாலமாகப் பழக்கத்தில் இருந்து வருபவையாகும். சமுதாயத்தில் பல்வேறு நிலையில் வாழ்ந்து வரும் மக்களும் எளிதில் உணர்ந்துகொள்ளும் வண்ணம் இவை எளிமையாக அமைந்திருக்கும் இயல்புகுறிப்பிடத்தகுந்தது

பழமொழியில் நிறம் எவ்வகையில் அமைந்திருக்கிறது[1] என்பதனையும்அதனை மூலமாகக்கொண்டு நிறத்தினைப்பற்றி மக்கள் கொண்ட கருத்துக்கள் என்ன என்பதனையும் உணரும்போக்கு இவ்வாய்வில் மேற்கொள்ளப்படுகிறது.

நிறம் பற்றிய சொற்கள் :

ஏறக்குறைய 160 பழமொழிகளில்[2] நிறம் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவற்றுள்ளும் நிறம், வண்ணம், வர்ணம், சாயம் போன்ற சொற்கள் நிறத்தினைக் குறிப்பதற்காகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

நிறம் :

எ. டு. நெருப்பைச்சார்ந்த யாவும் அதன் நிறமாகும்.

வண்ணம் :

எ. டு. வண்ணத்துக்குக் கிண்ணம் போடுகிறான்.

வர்ணம் :

எ. டு. கையாலாகாத சிறுக்கி வர்ணப்புடவைக்கு ஆசைப் பட்டாளாம்.

---

1. தொகுக்கப்பட்ட பழமொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. பழமொழி நூலுக்கான துணைநூற்பட்டியல் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.
2. நிறம் பற்றிய பழமொழிகள் அகர நிகரல் படுத்திப் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

சாயம் :

எ. டு. அவன் சாயம் வெளுத்துப் போய்விட்டது.

இவற்றில் 'நிறம்'[3] என்ற சொல்லாட்சிமிகுந்த பயிற்சிபெற்று வருகிறது வண்ணம் என்றசொல் நிறத்தைக் குறிக்கப் பயன் பட்டபோதும்வேறுபல பொருளைத்தருவதாகவும்அமைகின்றன.

எ. டு

வண்ணப்பேச்சு வண்ண — கவர்ச்சி

நாளொரு மேனியும்
பொழுதொரு
வண்ணமுமாக — சிறப்பு

வண்ணக்குதிரை — அழகு

'வர்ணம்' என்ற சொல்லின் பயிற்சி மிகக்குறைந்த நிலையில் அதுவும் மெளிர் ஆடைகளுடன் தொடர்புபடுத்தி வருகிறது.

பயின்று வரும் நிறங்கள் :

கறுப்பு, வெள்ளை, பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம், பழுப்பு, நரை, பொன்னிறம் போன்றவை பழமொழியில் பயின்றுவரக் காணலாம். இவற்றை இரண்டு வகையாகப் பகுக்கலாம்.

1 இயல்பான நிறங்கள். 2. திரிந்த நிறங்கள்.

இயல்பான நிறங்கள் :

கறுப்பு, வெள்ளை, பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் போன்றவைகள் இவ்வகையில் அடங்கும்.

கறுப்பு :

பழமொழிகளில் மிகுந்த பயிற்சியுடையதாய் விளங்குவது இந்நிறமேயாகும்.[4] இந்நிறப் பொருண்மைக் குறித்து வரும் சொறகளாவன.

கறுப்பு :

கண்ணிழந்தவனுக்குக் கண்டதெல்லாங் கறுப்பு

---

3. நிறம் ... ... 15
வெள்ளை ... ... 9
பச்சை ... ... 2

4. பயின்று வருமிடங்கள் 37 (27%)

கரு :

உலகம் முழுவதும் காகம் கருமைதான்.

கரி :

கரிவிற்ற பணம் கரியாய் இருக்குமோ ?

இவற்றில் 'கரு...'[5] தொடர்பாய் அமையும் சொற்கள் மிகுந்து வருகின்றன.

வெள்ளை :

கருப்பிற்கடுத்த நிலையில் மிகுந்த பயிற்சியுடையதாய் அமைவது "வெள்ளையெனலாம்" வெள்ளை, வெண்மை, வெளுத்தல் போன்றவை வெள்ளையைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், இவற்றில் வெள்ளையின் பயிற்சி பெருவழக்காயுள்ளது.[7]

வெள்ளை :

காகத்திலே வெள்ளையுண்டா?

வெண்மை :

வெளுத்தது எல்லாம் பால் இல்லை.

'வெளுப்பு' என்பது வெள்ளையென்ற பொருளைத் தருவது போல வேறு பொருளையும் தருகிறது.

அவன் சாயம் வெளுத்துப் போய்விட்டது.

அஃதாவது உண்மை வெளிப்பட்டுவிட்டது என்ற பொருளில் வருகிறது. மேலும், நீங்குகின்ற தன்மையையும் குறிக்க நிறம் பயன்படலாம்.

---

5. கறுப்பு : 21, 25, 28, 41, 42, 47, 49, 52, 53, 54, 55, 57.
கரி : 27, 29, 30, 38, 39, 50, 51, 56,
கரு : 22, 23, 24, 26, 31, 32, 33, 36, 37, 40, 43, 44, 45, 46.

6. பயின்று வருமிடங்கள் 28 (17. 5%)

7. வெள் : 58, 61, 62, 63, 66, 67, 68, 69 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 82. வெண். 59, 65, 81, வெளுத்து.

பச்சை :

கருப்பிற்கும், வெள்ளைக்கும் அடுத்த நிலையில் இந்நிறம் பெருவழக்காயமைகிறது.[8] இந்நிறத்தின் பொருண்மைக் கீழ்க் கண்ட சொற்கள் குறிக்கின்றன.

பச்சை :

கொல்லைப் பச்சிலை மருந்திற்குதவுமா?

பசும் :

பசும்புல் தேய நடவாத பாக்கியவான்
இவற்றில் பச்சை[9] என்ற சொல்லின் பயற்சிமிக்கு அமைகிறது

சிவப்பு :

இந்நிறத்தின் பொருண்மையைச் சுட்டப் பல சொற்கள் பயன்படுத்தப்படுந்தகின்றன. பழமொழியில் இந்நிறத்தின் பயிற்சி பெரும்பாண்மையாக அமையவில்லை [10] என்பது குறிப்பிடத்தக்கது.

சிவப்பு:

பட்டிக்காட்டானுக்குச் சிவப்புத் துப்பட்டி பீதாம்பரம்.

செவ் :

அஸ்த செவ்வானம் அடைமழைக்கு லஷனம்.

காவி

காவியுடுத்தவரெல்லாம் விவேகானந்தரா?

உசம் :

சிறியார் கைச்செம்பொன்போல.

---

8. பயின்று வருமிடங்கள் 26 (16%)/ 83, 84, 85.
9. பச்சை : 91, 92, 93, 94, 96, 97, 98, 99, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109.
   பசும் : 95, 110, 111, 112, 113.
10. பயின்று வருமிடங்கள் — 17 (11%)

செவக்க :

> செவக்க முற்றின வாழைக்காய்
> புளியில்லாமல் இனிக்கிறது.

செவலை :

> செவல்பட்டிக்கு வழியெதுவென்றால்
> செவலக்காளை ஐம்பது ரூபா என்கிறான்.

மஞ்சள் :

'மஞ்சள்' என்ற சொல்லே இந்நிறத்தினைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.

நீலம் :

நீலம் இந்நிறத்தினைக்குறிக்க நீலம் என்ற சொல் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

எ.டு. நீலத்துக்குக் கருப்பு ஊட்டவேண்டுமா?

பொன்னிறம் :

இதனைத் தனியொரு நிறமாகக் கொள்வதைக் காட்டிலும் மஞ்சள் நிறத்துடன் இணைத்துப் பார்ப்பது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. மஞ்சள் நிறத்தை மிகைப்படுத்திக்கூறும் போக்கு பொன்னிறம் என்பதாகும்.

எ. டு. கலப்பானாலும் பூசப்பூசப் பொன்னிறம்.

பொதுவாக சிவப்பு நிறத்தினைக் குறிக்கும் பல சொற்கள் பயன்படுவதையும், மஞ்சள், நீலம், போன்றவை ஓரே சொல்லில் வழங்கப்பெறுவதையும் காணலாம்.

திரிந்த நிறங்கள் :

இயல்பான நிறமொன்று மறைந்து வேறு தோன்றுவதையே திரிந்தநிறம் என்று கூறப்படுகிறது. நரை, பழுப்பு போன்றவைகளை இவ்வகையில் அடக்கலாம்.

நரை :

கருமைநிறம் திரிந்து வெண்மையாகும் இயல்பைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.

எ. டு. கிழவன்தான் நரை. கிழவன் கொடுத்த பணமுமா நரை?

பழுப்பு ;

பச்சை நிறம் தன் இயல்பிலிருந்து திரிவது 'பழுப்பு' என்று கூறப்படுகிறது.

எ. டு. எல்லாத்துக்கும் உண்டு இலையும் பழுப்பும்

இப்பழுப்பு என்ற சொல் நிறத்தைக் குறிப்பதைப்போலக் குற்றம்' என்ற பொருளினைத் தருவதாக உள்ளது.

எ. டு இலைப் பழுப்பு ஆனாலும் குலப்பழுப்பு ஆகாது.

## பழமொழியில் நிறம் அமையும் விதம்

பழமொழியில் நிறம் அமையும்பாங்கினை மூன்றுவகையாகப் பிரிக்கலாம்.

1. நிறம் மட்டும் கூறுதல்.
2. நிறத்தினையும்அந்நிறமுடையப் பொருளையும் கூறுதல்.
3. நிறமுடையப் பொருளை மட்டும் குறிப்பிடல்.

மேற்கண்டவற்றில் முதல்வகை பழமொழியில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.[11] அடுத்த நிலையில் இரண்டாவது வகை அமைகிறது.[12] நிறமுடையவற்றைக் குறிப்பாகச் காட்டிப் பொருள் உணரவைக்கும் மூன்றாவது முறை குறைந்த நிலையில் அமைகிறது.[13]

நிறம் மட்டும் கூறுதல் :

நாட்டுப்புறத்தார் கல்வியறிவு பெறாத நிலையிலுள்ளவராதலால் எளிதில் புரியும் வண்ணம் அமைந்திருக்கவேண்டியது இயல்பாகிறது. குறிப்பாய்ச் சுட்டிக்காட்டிப் புரியவைத்தலைவிட

---

11. நிறம் மட்டும் கூறும் முறை 61 இடங்கள்.
12. நிறமும் அந்நிறமுடைய பொருளும் 55 இடங்கள்.
13. நிறமுடைய பொருள் மட்டும் 18 இடங்கள்.

நிறத்தினை வெளிப்படையாய்ச் சுட்டும் போக்கு காணப்படுகிறது. இப்பழமொழி வாய்மொழியாக பரவும் இயல்புடையதால் இத்தகு எளிமையும் தேவையான ஒன்றாக அமைகிறது.

எ டு கண்ணிழந்தவனுக்குக் கண்டதெல்லாங் கறுப்பு

நிறத்னையும் அந்நிறமுடையவற்றையுங் கூறல் :

இவ்வகையினை மூன்றுவகைகளில் பகுத்துப் பார்க்கலாம்.

1. விலங்கினம் தொடர்பானவை
2. தாவரவினம் தொடர்பானவை
3. பிற

விலங்கினம் தொடர்பானவை :

நிறத்தின் பெயரையும் அந்நிறத்தையுடைய விலங்கினத்தின் பெயரையும் சேர்ந்துச் சொல்லுதல்.[14]

கறுப்பு :

கறுப்பு மாடு கால்மாடு.

வெள்ளை :

பார்ப்பான் சேவகமும் வெள்ளைக்குதிரைச் சேவகமும் ஆகாது.

சிவப்பு :

பண்ணையை விட்டுப் போனபிறகு செவலைமாடு பத்திரம் என்றது போல.

நிறத்தினை விலங்குகளுடன் தொடர்பு படுத்திக் கூறும் முறை கருப்பு நிறத்தில் மிகுந்து காணப்படுகிறது. வெள்ளை கருப்பு நிறத்திற்கு இணையாகக் கருதப்பட்டபோதும் இத்தகு பயிற்சி அமையவில்லை சிவப்புநிறம் குறைந்த பயிற்சியில் வர, பச்சை, மஞ்சள் போன்றவை அமையவில்லையென்பது இயற்கையை வெளிப்படுத்துகிறது எனலாம்.[15]

---

14. விலங்கினம் தொடர்பானவை.
கருப்பு: 34 கருப்பு மாடு 35. கருப்புநிறப்பறவை, 42. கருப்புக்கோழி, 47. கருப்புப் பசு, 56 கரிக்குருவி.

15. கருப்பு : 5: வெள்ளை : 1 ; பச்சை. 1 ; சிவப்பு 2 ; மஞ்சள் 0. நீலம் 0.

தாவரவினம் தொடர்பானவை:

நிறத்தின் பெயரும் அந்நிறத்தையுடைய தாவரத்தினையும் இணைத்து கூறும் முறையாகும்.[16].

பச்சை :

பச்சோலைக்கு இல்லை ஒலி.
பசும்புல் தேய நடவாத பாக்கியவான்.

சிவப்பு

செத்தவன் கண் செந்தாமரைக் கண்
• இருந்தவன் கண் நொள்ளைக்கண்

தாவரவினம் தொடர்பாக வருபவை பெரும்பாலும் பச்சை நிறத்தினையும், அடுத்து சிவப்பினையும் சார்ந்தமைக் காணலாம்.[17]. பச்சை பெரும்பாலும் தாவரத்தின் இலைப்பகுதியினையும், சிவப்பு மலரினையும் சுட்டி வருகிறது. எனவே, பச்சை தாவர இனத்தைப்பற்றிப் பேசுவது என்பது உறுதிப்படுவதுடன் பச்சை சார்ந்த வேறு பொருள்கள் எதாவது ஒருவகையில் தாவர இனத்துடன் பொருள் தொடர்பாய் அமையக்கூடும் என்பதும் புலனாகிறது

பிற :

இப்பகுப்பின் கீழ் வருபவை ஆடை, உலோகம், இயற்கை, ஆபரணம் போன்றவைகளைச் சுட்டுவதாய் அமைகிறது.[18].

---

16. தாவரவினம் தொடர்பானவை :
கருப்பு : 41 .குன்றிமணி.
வெள்ளைப் பூண்டு
பச்சை : 97. பச்சிலை; 105. பச்சைமரம், 106 பச்சை மரம், 107. பச்சை மட்டை, 108. பச்சைநெல் 109. பச்சோலை; 110. பசும்புல்; 111. பசும்புல்; 112. பசுபரம்; 114. பசுமரம்.
சிவப்பு : 120. செவ்வரக்கு; 123. செந்தாமரை; 124. செந்தாமரை; 127. செந்தாமரை; 130. செந்தாமரை.

17. கருப்பு—1; வெள்ளை—1; பச்சை—10; சிவப்பு—5.

18. கருப்பு: 46. கருப்புமயிர்; 51. கரியமணி. வெள்ளை: 59. வெண்சோறு; 69. வெள்ளைத்தாள்; 71. வெள்ளெலும்பு

ஆடை :

வெள்ளை வேட்டியில் பட்டகறை
வெளிச்சம் போடாமல் தெரியும்

லோகம் :

சிறியார் கைச் செம்பொன்போல.

இயற்கை :

அஸ்த செவ்வானம்
அடை மழைக்கு லச்சனம்.

இப்பகுப்பில் வெள்ளை மிகுந்து வருகிறது மேலும் வெள்ளை ஆடையிடன் தொடர்பு கொண்டும் சிவப்பு உலோகத்துடன் தொடர்பு கொண்டும் அமைவதை காணமுடிகிறது.

## நிறமுடைய பொருளை மட்டும் குறிப்பிடல் ;

இவ்வகை மஞ்சள் நிறத்திலும். இணை நிறத்திலும் மிகுந்து காணப்படுகிறது.[19] மஞ்சள் நிறத்தில் குறிப்பாகப் பூவை மஞ்சள் கிழங்கினைச் சுட்டிவருவது பெரும்பான்மையாக அமைகிறது.

பொதுவாக, இணைநிறங்களில் கருப்பும். வெள்ளையும் இணைந்து பேசப்படுவதைக் காணலாம். இந்நிலையில் கருப்பு நிறத்திற்குக் காக்கையும் வெள்ளை நிறத்திற்குக் கருடன், அன்னம், கொக்கு போன்றவைகளும் சுட்டப்படுகின்றன.

காகம் - கருடன்

கழுத்து வெளுத்தாலும் காகம் கருடன் ஆகாது.

காகம் - அன்னப

கங்கையில் முழுகினாலும் காக்கை அன்னம் ஆகுமா ?

---

74. வெள்ளைப் பாவாடை: 78. வெள்ளை வேட்டி; 80. வெள்ளை அவல்; 81; வெண்காசு; 82. வெள்ளெலும்பு: பச்சை: 95, பசும்பொன்.
சிவப்பு : 118. செவ்வானம்; 125. செம்பொன்: 126. செம்பொன்.

19. மஞ்சள்......... 5
இணைநிறம் 12

காகம் - கொக்கு

முக்காலம் காகம் முழுகிக்குளித்தாலும் கொக்கு ஆகுமா?

கருமைநிறம் சுட்டப்படும் போதெல்லாம் காகம் சுட்டப் படுகிறது. பெரும்பாலும் காகத்தின் கருமை நிறம் சுட்டுவதாயினும் மற்றைய இழி குணங்களையும் தொடர்புப்படுத்திப் பேசக்கூடும். கருமை நிறம் சுட்டுவதற்குக் கரி, நீர், களாம்பழம் போன்றவைகளும் வெள்ளை நிறம் சுட்டுவதற்குப்பால், மோர் போன்றவைகளும் பயன்படுத்தபடுகின்றன.

கரி :

காக்கைக் கரிச்சட்டியைப் பழித்ததாம்.

நீர் :

கருத்ததெல்லாம் தண்ணீர்
வெளுத்ததெல்லாம் பால்.

களாம்பழம் :

காக்கையைவிடக் கரியது களாம்பழம்.

எனவே, நிறமுள்ளவற்றைக் குறிப்பிடும் போக்கில் இணை நிறங்கள் மிகுந்து காணப்படுகின்றன. குறிப்பாக, விளங்கினங்களை (பறவையினம்) தொடர்புப்படுத்திப் பேசுவதை உணர முடிகிறது, பெரும்பாலும் இம்முறையில் ஒப்பிட்டுத் தன்மை இடம்பெறுவதைக் காணலாம்.[20]

## நிறம் பொருளுணர்த்தும் முறை :

நிறங்கள் பெரும்பாலும் தன் பொருள் உணர்த்திவருகின்றன.[21] இருப்பினும் சிற்சில இடங்களில் வேறு வகைப் பொருள் தருவதாகவும் அமைகின்றன[22]. அவை அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

---

20. இணை நிறங்கள்: விலங்கினம் (பறவையினம்) ...10
    தாவரவினம் ...0
    பிற ...2
21. நிறம் தன்பொருள் உணர்த்தி வருதல் ...86
22. நிறம் வேறுபொருள் உணர்த்தி வருதல் ...54

| நிறம் | வருமிடம் | பொருள் |
|---|---|---|
| கறுப்பு | | |
| 23 | அமாவாசைக் கருக்கல் | இருள் |
| 25 | ஆனை கறுத்தால் | இறப்பு |
| 27 | கரி தடவரதே | அவமானப்படுத்துதல் |
| 29 | கந்தைத் துணியும் கரி வேடமும் | அழுக்குக் கோலம் |
| 32 | கருப்புக்கழுத பிள்ளை | பேய் |
| 40 | காற்றிலே கருப்பிலே | (பொருளின்றியும் இணைந்ததாகக் கொள்ளலாம்.) |
| 44 | சோற்றுக்கும் கறுப்புண்டு | பழுதுள்ள அரிசி |
| 45 | கருப்புக்குப் பயப்பட்டான் | பேய்க்குப் பயந்தான் |
| 50 | கரிஸ்ய வழித்து முகத்தில் தேய்த்தாளாம் | அவமானப்படுத்துதல் |
| 52 | பொன் க்றுத்தால் | நிறம் மங்குதல் |
| 54 | யானை கறுத்தால் | யானை இறத்தல் |
| வெள்ளை | | |
| 58 | வெள்ளெழுத்து | கண்தெரியாத நிலை |
| 60 | ஒருவன்மீது காதல் தோன்றி விட்டால் குளிக்காமல் இருக்கும்போதே வெண்மை யாகத் தோன்றுவான் | விருப்பமாக |
| 61 | ஒரு வெள்ளையைக் கட்டி வெளியே வந்தால் | ஆடை |
| 63 | வெள்ளெழுத்து | கண்தெரியாத நிலை |
| 64 | கோடிக்கு ஒரு வெள்ளை | ஆடை |
| 66 | வெள்ளெழுத்து | கண்தெரியாத நிலை |
| 70 | வெள்ளைகொடுக்க | ஆடை |
| 72 | வெள்ளைக்கு இல்லை | கள்ளமில்லாச் சிந்தை |
| 77 | வெள்ளையாய்ச் சொல்லிவிட்டான் | கள்ளமில்லாச் சிந்தை |
| 78 | வெள்ளையுஞ் சொள்ளையுமாய் | ஆடை |

| | | |
|---|---|---|
| 79 | வெள்ளையுடுத்தி | ஆடை |
| 83 | வெளுத்துப்போய்விட்டது | அம்பலமாதல் |
| 84 | வெளுத்துவிட்டா ரலுஞ்சரி | அம்பலமாகுதல் |

பச்சை

| | | |
|---|---|---|
| 91 | அக்கரைக்கு இக்கரை பச்சை | குளிர்ச்சி |
| 94 | பச்சைமண் | ஈரமண் |
| 96 | தூரத்து பச்சை | குளிர்ச்சி |
| 98 | பச்சை கண்டால் | பணம் கண்டால் |
| 100 | பச்சைக்கூட்டோட | உடலும்-உயிரும் சேர்ந்த நிலை |
| 101 | பச்சைச் சிரிப்பு | ஆஹதத நியையுள்ள புண் |
| 102 | பச்சைப் புண் | புதிதான பாண்டம் |
| 103 | பச்சைப் பாண்டம் | புதிதான பாண்டம் |
| 104 | பச்சை பண் | ஈரமண் |
| 105 | பச்சை மரம் | இளமையானது |
| 106 | ,, | ,, |
| 108 | பச்சை நெல் | காயப்போடாத அவிக்காத நெல் |
| 112 | பசுமரம் | இளமையான மரம் |
| 113 | பச்சரிசி | அவிக்காத அரிசி |
| 115 | பச்சைபோட | பயிர் விளைவிக்க |
| 116 | பச்சை குத்தினான் | பச்சை குத்துதல் |
| 117 | பச்சைமண் | ஈரமான மண் |

சிவப்பு

| | | |
|---|---|---|
| 122 | காவியுடுத்தியவரெல்லாம் | சிவப்பு நிற ஆடை |
| 128 | செவக்க முற்றின | பழுத்தல் |
| 134 | வேப்பம்பழம் சிவந்தாடும் | படுத்தாலும் |

மஞ்சள்

| | | |
|---|---|---|
| 135 | மஞ்சள் குளித்தாய் | பூசும் மஞ்சள் |
| 137 | மஞ்சளும் மலரும் | ,, |
| 138 | மஞ்சளுக்குத் தரித்திரமா | ,, |
| 139 | மஞ்சள் குளிப்பு | ,, |
| 140 | வேசிக்கு மஞ்சள் | ,, |
| | | ,, |

**இறை நிறங்கள்**

| | | |
|---|---|---|
| 148 | கருப்பும் வெள்ளையும் | தீமையும் நன்மையும் |
| 158 | பச்சை கொடுத்தால் பாவந்தீரும் வெள்ளை கொடுத்தால் வினை | தானியம், ஆடை |

நிறங்களில் பச்சை பெரும்பாலும் வேறு பொருள்களை உணர்த்தி வருகின்றது. மஞ்சள் நிறமும் அவ்வாறே அமைகிறது. கறுப்பு, வெள்ளை, சிவப்பு போன்றவை பெரும்பான்மை தன் பொருள் உணர்த்தியும் சிறுபாண்மை வேறுபொருள் உணர்த்தியும் வருகின்றன. நீல நிறத்தின் பயிற்சியும் குறைவு. வருகின்றவைகளும் தன்பொருள் உணர்த்தி வருகின்றன.[23]

கருமை நிறம் தரக்கூடிய பொருள்களை ஆராந்தால் அவை முழு அளவிலோ அல்லது சார்நிலையிலோ தீமையினைச் சார்ந்தமைவதைக் காணலாம்.

தூய்மை, விருப்பம், கள்ளமில்லாச்சிந்தை போன்ற பொருள்களைக் குறிக்கும் இயல்பு வெள்ளையில் வெளிப்படுகிறது.

பச்சை நிறம் மட்டும் வேறு வேறு பொருள்களை வெவ்வேறு சூழ்நிலையில் தருகிறது. பொதுவாக தாவரங்களை (Vegetation) ஏதாவது ஒருவகையில் தொடர்புபடுத்தி அமைகிறது.

பழமொழியைப் பொறுத்த மட்டிலும் இம்மூன்று நிறங்கள் மிகுதியாகப் பயின்று வருகின்றன. அதற்கான காரணங்கள் வருமாறு.

கறுப்பு – வெள்ளை – பச்சை குறியீடு :

1. கறுப்பு இருளுடன் தொடர்புடையது. இருள் பேய் பிசாசுகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

2. பயம் உணர்வாய்த் தோன்றிய நம்பிக்கை வயப்பட்ட நிலையில் கருமைநிறம் மக்கள் மனதில் ஆழப்பதிந்திருக்கிறது.

---

23. நிறங்கள் வேறுபொருள் உணர்த்தி வருதல்:

| | | |
|---|---|---|
| பச்சை | ... | 18 |
| மஞ்சள் | ... | 5 |
| கருப்பு | ... | 11 |
| வெள்ளை | ... | 13 |
| சிவப்பு | ... | 3 |

3. தீமை, அமங்கலம், இறப்பு என்று பல பொருள்களைக் குறிப்பிடுவதற்குக் கருமை பயன்படுகிறது.

4 வெள்ளை ஒளியுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. நன்மையின் சின்னமாய்க் கருதப்படுகிறது.

5. பயம் உணர்வாய்த் தோன்றிய நம்பிக்கை வயப்பட்ட நிலையில் கருமைநிறம் மக்கள் மனதில் ஊறியிருப்பதால் அதனை நீக்கும் வயமாக வெள்ளை கருதப்படுகிறது. அஃதாவது வெள்ளை யும் வெள்ளை சார்ந்த பொருள்களும் நன்மை, தூய்மை என்ற நிலையில் அமைகிறது.

பச்சை நிறம் தாவரங்களைக் குறிப்பதாய் அமைகிறது. தாவரங்கள் செழிப்பாயிருப்பதனைப் பசுமை உணர்த்துகிறது. தாவரத்தின் செழிப்பிற்கு மண் செழிப்பும் தேவையாகிறது. தாவரத்தின் செழிப்பு பணச் செழிப்பிற்கும் காரணமாயுள்ளது. இவ்வாறு முழு அளவிலோ சார்ந்த நிலையிலோ தாவரங்கள் அடிப்படையாக அமைய வாழ்வியலுடன் தொடர்புடையதாய் அமைந்துவிடுகிறது.

கறுப்பு – வெள்ளை - பச்சையின் குறியீட்டைக் கீழ்க்கண்ட வரை படத்தினால் உணரலாம்.




தொகுப்புரை :

1. பழமொழிகளில் நிறம் என்ற சொல்லாட்சி பெரு வழக்கா யுள்ளது.

2. கறுப்பு, வெள்ளை பச்சைபோன்ற நிறங்கள் மிகுதியாகப் பயின்று வந்தாலும் கறுப்பு முதன்மை பெறுகிறது.

3. இணைநிறங்களில் கறுப்பும், வெள்ளையும் மிகுதியாகப் பேசப்படுகின்றன.

4 நிறமுடையவற்றைக் குறிப்பாய்ச் சுட்டி பொருள் உணர வைக்கும் முறை குறைவாக உள்ளது. மேலும் அவை இரண்டு நிறங்களை ஒப்பிட்டுக் கூறும் வகையில் அமைவதால் இணை நிறத்தில் மிகுந்து காணப்படுகிறது.

5. கறுப்பு விலங்குகளுடன் தொடர்பு படுத்தியும்; வெள்ளை ஆடையுடன் தொடர்புபடுத்தியும் பச்சை தாவரத்துடன் தொடர்புபடுத்தியும் பேசப்படுகிறது.

6, பெரும்பாலும் நிறங்கள் தன் பொருள் உணர்த்தி வந்தாலும் சிறுபான்மை வேறுபொருள் உணர்த்தியும் வருகின்றன. இவற்றில் பச்சை மிகுந்த அளவில் வேறுபொருள் உணர்த்தி வருவதைக் காணமுடிகிறது.

7. குறியீட்டு முறையில் கறுப்பினைத் தீமையுடன் தொடர்பு படுத்தியும், வெள்ளையை நன்மையுடன் தொடர்புபடுத்தியும் பச்சையை வாழ்வியலுடன் தொடர்புபடுத்தியும் கூறலாம்.

# 32. மருந்துவச் சுவடிகள்

த. அழகப்பராசு

சுவடிகள்

சென்னையில் மருந்துவம் தொடர்பான சுவடிகள் மற்றச் சுவடிகளைவிட மிகுதியாகக் காணப்படுகின்றன அவற்றுள் அரசினர்க் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள மருத்துவச் சுவடிகளில் பதின்மூன்று மட்டும் [1] இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதில் பேசப்படும் பதின்மூன்று சுவடிகளும் ஒரே காலத்ததாக இல்லாமல் பல்வேறு காலத்தனவாகக் காணப்படுகின்றன. இதில் ஒரு சுவடியில் மட்டும் மலையாள மொழியின் வழக்குகள் காணப் படுகின்றன [2].

தமிழில் விழி என்பது மலையாளத்தில் மிழி என்றாகும். கூர் மிழி, நடுமிழி, கருமிழி என்பன இச்சுவடியில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் கோழி முட்டைத் தோடு (கோழிமுட்டை யோடு) கசுவண்டி (முந்திரி) என்பனவும் காணப்படுகின்றன [3]. இதன் ஒரு பகுதி தமிழிலும் மறுபகுதி (தமிழ் மருத்துவம்) மலையாள வரி வடிவிலும் காணப்படுகின்றன. இதுகொண்டு மலையாள நாட்டுப் பகுதியில் வழங்கிய மருத்துவம் என்றோ, மலையாள மொழியை நன்கு அறிந்தவர் எழுதியது என்றோ கருத இடமிருக்கின்றது.

---

1. அகத்தியர் நோயின்சாரம் (ஆர் 5427), தேரையர் நோயின் சாரம் (ஆர்.3413), திருமூலர் கருவுற்பத்தி (ஆர். 3409) அகத்தியர் பரிபாஷை (ஆர்.4923) வைத்தியசாத்திரம் (ஆர். 4923) வைத்திய நூல் (ஆர்.–923) வைத்திய நூல் (ஆர்.7846) வைத்தியம் (ஆர்.–7110 புலிப்பாணி வைத்தியம் (ஆர். 2448) நயனவைத் தியவிதி (ஆர் 83 8) வைத்திய சிந்தாமணி, கண் மருத் துவம் (ஆர் 8640, கண் வைத்தியம்-2 (ஆர் 2516), நயின விதி (ஆர் 2. 1803).

2. நயனவிதி (ஆர் 1803).

3. ,, 39, 28, 40, 45, 88, 110.

## மருத்துவத்தில் நிறங்களின் இன்றியமையாமை

இலக்கியங்களிலும் மருத்துவத்தில் நிறம் இன்றியமை யாததாய அமைகின்றது மருந்து பொருள்களும் நோய்களும நிறங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

தொழுநோயின் ஆரம்பகால கால்வீக்கம் தாமரை மலரைச் செந்தூரத்துடன் அரைத்துக்கட்ட நீங்கும். ஆனால் அது நாம் இலக்கியங்களில் அதிகமாகக் காணும் செந்தாமரை அன்று வெண்டாமரை:

செம்மையான வைரம் நோய்நீக்கவும், பொன்மையான் வைரம் ரசவாதத்திற்கும், கருமையான வைரம் வாழ்நாள் நீட்டித்தற்கு பயன்படுகின்றன. வெண்மையான வைரம் வேதியியல் சாலையில் மட்டுமே பயன்படும்.

மரகதம் நஞ்சு போக்கும்; ஆனால் அது கரும்பச்சை நிறமான மரகதமன்று. பாசிக்கொத்து அல்லது மயிலிறகு நிறமுள்ள மரகதமாகும்[4].

இச் சான்றுகள் எல்லாம் நமக்கு மருத்துவத்திற்கும் நிறத் திற்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்கும்.

## நிறம் வண்ணம் சொல்லாட்சி

நிறம் வண்ணம் என்ற இரண்டு சொல்லாட்சிகள் மட்டுமே மருத்துவச் சுவடிகளில் நிறத்தைக் குறிப்பனவாக பயின்றுள்ளன.

பொன்னிறம் கருமை வெள்ளை
பொலிந்திடும் சிகப்புப் போலே
பின்னியும் பச்ச போலே
வண்ணங்கள் தோன்று மாகில்[5]

என்ற பாடலில் இரண்டு சொற்களுமே இடம் பெற்றுள்ளன.

---

4. அகத்தியர் பாலவாகடம் பாடல் 28, 63, 79.

5. கண் வைத்தியம் 48.

வண்ணம் என்ற சொல் வர்ணம்[6] வர்ணம்[7] வண்ணம்[8] என்ற நிலைகளில் எழுதப்பட்டுள்ளது.

## நிறம், வண்ணம்-உயர்திணை அஃறிணை

சீவகசிந்தாமணியில், நிறம் என்பது பொதுவாக உயர் திணையில் நிறங் குறிக்கவும் வண்ணம் அஃறிணைப் பொருட்களின் நிறங் குறிக்கவும் பயன்பட்டுள்ளது என்பர்[9].

மருத்துவச் சுவடிகளில் வண்ணம் என்பது பெரும் பான்மையும் அஃறிணைப் பொருட்களின் நிறத்தை உணர்த்தவே வந்துள்ளது[10]. ஆனால் நிறம் என்ற சொல் உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது[11].

## வெண்மை

வெண்மையைக் குறிக்கும் அடிநிலைச் சொற்களாக வெண்[12], வெள்[13], வெள்ளை[14], என்பன பயன்பட்டுள்ளன.

---

6. வைத்திய சாத்திரம் 10, புலிப்பாணி வைத்தியம் பா. 14, 18.
7. மருத்துவ சிந்தாமணி 10,
   வைத்திய நூல் 68, 75
   அகத்தியர் நோயின் சாரம் 78.
8. நயனவிதி 21.
9. சீவகசிந்தாமணியில் நிறம் வே. சீதாலச்சுமி ப. 3
10. வைத்திய சிந்தாமணி 10, 44, 45, 49, 52
11. கண் மருத்துவம் 56
12. நயனவிதி 4, நயனவைத்தியவிதி மூன்றும் உயர்திணை
    அ. கண் வைத்தியம்-2-51
    ஆ. நயன வைத்தியவிதி 29. கண் வைத்தியம் 14. கண் வைத்தியம் 2, 56
13. கண் வைத்தியம் — (2) 40, 42, 118
    வைத்திய சாத்திரம் 12
    புலிப்பாணி வைத்தியம் 28

வெண்மையைக் குறிக்க மன்னல்[15], பால்[16], முருங்கைப்பூ[17] என்ற மூன்று பொருள்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மற்ற எல்லா நிறங்களிலும் வெண்மை நிறமே இந்தச் சுவடிகளில் மிகுதியும் ஆளப்பட்டுள்ளது[18]. அது விழியின் வெள்ளைக்கும் வெள்ளைக் கடுக்காய் போன்ற மருந்துப் பொருள்களுக்கும் வெண்ணகை போன்ற வருணனைகளுக்கும், வெள்ளெழுத்து என்ற நோய்க்கும் காட்டப்படுகின்றது.

## செம்மை

செம்மையை உணர்த்த செம்.[19], செய்ய[20] என்ற சொற்களுடன் சிவப்பு[21], சிகப்பு[22] சுகப்பு[23] என்ற சொல் மாற்றங்களும் காணப்படுகின்றன. இதனைக் குறிக்கும் பொருள்களாக

---

14. கண் வைத்தியம் (2) 173, வைத்திய சிற்தாமணி-29. கண் வைத்தியம் 78.

15. கண் வைத்தியம் 4, 29, நயனவிதி 29, வைத்திய நூல் 11

16. கண் வைத்தியம்—(2) 118.

17. வைத்திய சிந்தாமணி 43.

18. கண் வைத்தியம் 4. நயனவைத்திய விதி 29, 30. நயனவிதி 29, புலிப்பாணி வைத்தியம் 19, 23. கண் வைத்தியம் (2) 8, 40, 41, 56, 64, 98, 105, 178, 153, 183, 173.

19. கண் வைத்தியம் (2) 154, 189

20. கண் வைத்தியம் (2) — 5, 60 புலிப்பாணி வைத்தியம் 28

21. கண் வைத்தியம் 49

22. கண் வைத்தியம் (2) 23

23. கண் வைத்தியம் 23

24 வைத்திய சிந்தாமணி 47

நெருப்பு[24], அனல்[25], அழல்[26], உதிரம்[27], இரத்தம்[28], கதை[29], இந்திரகோபம்[30] போன்றன காணப்படுகின்றன.

கருப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள[31]

என்ற தொல்காப்பிய நிலையில் வெகுளியின்போது கண் சிவந்த தாகக் காட்டுகின்றது நயனவிதி[32]. வாயுக்களின் நிறங்களும் கண் சிவத்தலும் தாமரையின் நிறமும் இதன் கண் எடுத்துரைக்கப் படுகின்றன.

கருமை

கருமை நிறத்தினைக் குறிக்க கரு[33], கரும்[34], கரிய[35] என்ற அடிநிலைச் சொற்களும், கார்[36], இருள்[37], மை[38], முகில்[39], மேகம்[40] போன்ற பொருள்களும் சுட்டப்படுகின்றன.

---

25. நயன வைத்திய விதி 9
26. கண் வைத்தியம் (2) 116
27. ,, ,,
28. வைத்திய நூல் 68
29. நயன விதி 13
30. நயன வைத்திய விதி 51
31. தொல்காப்பியம்-உரியியல் 73
32. நயன வைத்திய விதி 40
33. நயன வைத்திய விதி 41
34. வைத்தியம் 96.
    அகத்தியர் நோயின்சாரம் 10
35. கண் வைத்தியம் 190, கண் வைத்தியம் (2) 68
36. கண் வைத்தியம் 184, நயன வைத்திய விதி 12
37. நயன வைத்திய விதி 20
38. நயன வைத்திய விதி 3, கண் வைத்தியம் (2) 262
39. கண் வைத்தியம் (2) 158, 159
40. கண் வைத்தியம் (2) 49

வாயுக்களின் கருமை நிறமும், கருவேலம் பிசின் போன்ற மருந்துப் பொருட்களும், கருமையான விழிகளும் மேகமும் இதன்கண் காட்டப்படுகின்றன[41]. கருமையான விழிகளே இதில் மிகுதியும் பேசப்படுகின்றன.

## மஞ்சள்

மஞ்சளைக் குறிக்க அடிநிலைச் சொற்களோ அதைக் குறிப்பனவாக அமைந்தப் பொருட்களோ ஏதுமில்லை. மருந்து பொருளாம் மஞ்சளையும் காமாலையினையும், மஞ்சள் நாக் கல்லினையும் சுட்ட மஞ்சள் நிறம் பயன்பட்டுள்ளது[42].

## பசுமை

பசுமையைக் குறிக்க பசு[43], பச்ச[44] என்ற இரு அடி நிலைச் சொற்கள் அமைந்துள்ளன. பசுமை பெரும்பான்மையும் பச்சிலையைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது. மேலும் சுபானவாயு பச்சவாதம் இரண்டுக்கும் பச்சை நிறம் காட்டப்படுகின்றது.[45].

## நீலம்

சொற்களும், பொருள்களும் இதனைக்குறிப்பனவாக சுட்டப் படவில்லை. பிராணவாயு, தனஞ்செயவாயு இவற்றைக் குறிக் கவும், நீலகாயத்தினைக்குறிக்கவும் இந்நிறம் பயன்பட்டுள்ளது[46]

---

41. வைதிய சிந்தாமணி 100
42. வைத்திய சிந்தாமணி 10, நயனவைத்தியவிதி 3, 14, 20, 31
 கண் வைத்தியம் (2) 77, 98, 123, 158, 159
 கண் வைத்தியம் 62, புலிப்பாணி வைத்தியம் 75
 திருமூலர் இருபுற்பத்தி 6
43. நயன வைத்திய விதி 25, கண் வைத்தியம் (2) 137,
 நயன விதி 56, 58
44. கண் வைத்தியம் (2) 54
45. கண் வைத்தியம் 49
46. கண் வைத்தியம் (2) 8, கண் வைத்தியம் 3, 49
 நயன வைத்திய விதி 38

### பொன்

மஞ்சள் நிறத்துடன் பொன்னிறம் தொடர்பு உடையது என்றாலும் பொன்னிறம், பொன் வண்ணம் என்று ஆசிரியரே குறிப்பதால் தனியே உரைக்கப்படுகின்றது.

பொன்னின் வண்ணமாகும்[47] (நாகன்வாயு)
பிருதிவி பொன்னிறமாமே[48]

புகை கருமை, வெண்மை இரண்டையும் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. கருமையைக் குறிக்கையில் புகை திறம் என்றே விளிக்கின்றார்.

கார்மேகப்புகை நிறம்[49]
வெண்புகை யுவென்று வொளியும்[50]

### மேலும் பல நிறங்கள்

மாநிறப் பெண்ணுடம் தொடர்புபடுத்தி
மாதுமாநிறத்தளாகி[51]

என்று ஓரிடத்தில் மட்டும் பேசப்படுகின்றது. நவமணிகளைப் பற்றிய குறிப்பைக் கண்மருத்துவச் சுவடியொன்று காட்டுகின்றது[52] வைரம், முத்து இரண்டும் வெண்மையாயும், பச்சையென்றழைக்கப்படும் மரகதம் பச்சை நிறமாயும் மாணிக்கம் செந்நிறமாகவும் நீலமணி நீலநிறமாகவும், புட்பராகம் பொன்போன்றும்கோமேதகம் (கோமியம்நிறம்) மஞ்சளும் சிகப்பும் கலந்ததாகவும் அமையும். தண்ணீருக்கு நிறமில்லை என்பர்.

---

47. வைத்திய சிந்தாமணி 10, 50, கண் வைத்தியம் (2) 10, 35
48. வைத்திய சிந்தாமணி 46
49. வைத்திய சிந்தாமணி 9
50. ,, ,, 10
51. கண் வைத்தியம் (2) 108
52. கண் வைத்தியம் 14

இந்தவண்ணம் தண்ணீர்தான் 53 (பருவசவாயு) என்பதில் தண்ணீரை மற்றொன்றுக்கும்

'அப்புவது பளிங்கு வண்ணம் 54

என்பதில் தண்ணீருக்கு மற்றொன்றையும் நிறமாகக் காட்டுகின்றார். இவ்விரண்டும் நிறமற்றத்தன்மையைக் குறிப்பதாகவோ அன்றி வெளிர்வெண்மையைக்குறிப்பதாகவோ இருக்கலாம்.

## மாந்தர் நிறம்

இச்சுவடிகள் பதின்மூன்றிலும் மாந்தர் நிறமுழுமையினைக் குறிப்பதாக இரண்டு சான்றுகளே உள்ளன. ஒன்று பெண்ணைப் பற்றியது மற்றது ஆணைப்பற்றியது.

மாதுமாநிறத்தவள் 55

மைநிறத்தவன்போல

## நிறம்-மருத்துவத் தொடர்பு

இம் மருத்துவச் சுவடிகளில் இடம் பெற்றுள்ள நிறம் பற்றிய குறிப்புகளை,

1. மருத்துவத் தொடர்பானது.
2. மருத்துவத் தொடர்பில்லாதது.

என்று பொதுவகையால் இரண்டாகப் பகுக்கலாம். மருத்துவத் தொடர்பானவைகளை,

---

53. கண் வைத்தியம் (2) 21

54. (அ) நவமணிகள் டி. எஸ். வைத்தியநாதன்
எழில்மணி பதிப்பகம், திருச்சி-2
(1969 இரண்டாம் பதிப்பு) பக். 28-169

55. வைத்திய சிந்தாமணி 52

56. ,, ,, 10

1. நோய் தொடர்பானது.
2. மருத்துவத் தொடர்பானது.
3. பிற தொடர்பானது.

என மூன்றாக வகுக்கலாம்.

## நோய் தொடர்பின்

கண்நோய் வரத் தொடங்கினால் தொடக்கத்தில் கண்கள் கருமையாகவும்[57] பின்னர் செம்மையாகவும்[58] காணப்படும் நோய் வந்த பின்னர் மயக்கத்தால் எல்லாப் பொருள்களும் தெளிவாகத் தெரிவதில்லை[59]. அக்கண்ணோயின் முதிர்ச்சி நிலையில்,

சதைபோல் சிவந்து காட்டும்[60]

கண்ணிலெங்கும் இரத்தமே எழுந்து காட்டும்[61]

எழுத்துக்களைக் கண்டால் வெண்மையாகவே தோன்றுகின்ற அல்லது எழுத்துக்கள் சரிவர புலப்படாத நிலை வெள்ளெழுத்து எனப்படுகின்றது.[62] கண்ணோயால் பொன்மை, கருமை, வெண்மை, சிவப்பு, பச்சை எல்லா நிறங்களும் தெரியும் என்று ஒரு பாடல் காட்டுகின்றது.[63] மஞ்சள் காமாலை நோயினையும் அதன் தன்மையினையும் மற்றொரு பாடல் காட்டுகிறது[64].

---

57. வைத்திய சிந்தாமணி 10
58. கண் வைத்தியம் (2) 159
59. நயன வைத்திய விதி 31
60. கண் வைத்தியம் 80
61. கண் வைத்தியம் (2) 62
62. நயன வைத்திய விதி 13
63. கண் வைத்தியம் (2) 48
64. கண் வைத்தியம் (2) 98

## மருத்துவத் தொடர்பின்

நிறங்கள் மருந்துகளைப் பிரித்தறியும் கருவிகளாகத் திகழ்கின்றன பூலாம்செடி கருமை கலந்த நிறத்தில் காணப்படும். எனவே அதன் சாற்றை, கருவேலம் பூலாச்சாறு[65] என்கிறார் அதன் வேரின் நிறத்தினைக் குறிக்க வந்தபோது, வெண்மையாம் பூலாவேர்[66] எனச்சுட்டுகின்றார்.

வேலமரம் வெண்மையும் மஞ்சளும் கலந்த நிலையில் இருக்கும் அதில் கருமைநிற வேலும் உண்டு. அதன் பிசினால் மருந்துச் செய்யப்படுகின்றது. அதனை கருவேல் என்றழைக்கின்றார்.[67]

கடுக்காயை நாம் காணும் கடுக்காயிலிருந்து பிரித்துக்காட்ட, வெள்ளைக் கடுக்காய் என்கிறார்.[68] அது மஞ்சள் கலந்த வெண்மையுடன் காணப்படும்.

## பிற தொடர்பின

நோயும் மருந்தும் தவிர வாயுக்களின் நிறங்களைப்பற்றி வைத்திய சிந்தாமணி என்றும் சுவடியானது பேசுகின்றது. சுயம்பானம் என்னும் வாயு கறுப்பாகவும்[69] அபான வாயுவின் நிறம் பச்சையாகவும்[70] பருவச வாயுவின் நிறம் தண்ணீர் நிறமாகவும்[71] அக்கினி வாயு, கூர்மவாயு இரண்டும் சிகப்பாகவும்[72] வியான

---

65. கண் வைத்தியம் 48
66. கண் வைத்தியம் (2) 98, 58, 98
67. கண் வைத்தியம் (2) 123
68. நயன வைத்திய விதி 30
69. நயன விதி 14
70. நயன வைத்திய விதி 128, புலிப்பாணி வைத்தியம் 23
71. வைத்திய சிந்தாமணி 48
72. ,, ,, 42

வாயுவின் நிறம் பால் நிறமாகவும்.[73] உதாண வாயுவின் நிறம் மின்வண்ணமயாகவும்[74] நாகன் எனும் வாயு பொன்னிறமாக வும்[75] இருப்பதாக இந்நூல் காட்டுகின்றது.

## மருத்துவத் தொடர்புற்றன

மருத்துவத் தொடர்பில்லாமல் நிறம் பயின்றுள்ள இடங்கள் பெரும்பான்மையும் மனிதர்களின் இறுப்புத் தொடர்பானவையே வெண்மையின் இயல்பும்[16] கருங்கண் செங்கண் என கண்ணின் நிலமையும்[17] குழலைக் காருக்கு ஒப்பிடுதலும்[78] இந்த வகையில் அடங்கும்.

## நிறப் பயன்பாட்டு உத்திகள்

நிறம் பயன்பாட்டு உத்திகளாக நாம் நிறங்களின் இணை, யையும் உவமைவழி நிறம் உணர்த்தலையும், அடைமாட்சிமையும் அடுக்கிச் செறல்லுதலையும் கொள்ளலாம்.

## நிற இணைப்பு-எழுநிறம் (வானவில்)

நிற இணைப்பில் அதிகமாக எழுநிறம் கொண்ட வானவில் நிற்கின்றது[79]. இதில் சிகப்பு, பச்சை, ஆரஞ்சு, மஞ்சள், நீலம், கருநீலம். ஊதா என்ற எழுநிறமுள்ளது.

## ஐந்நிறம்

இதற்கடுத்த நிலையில் ஐந்து நிறங்களைக் காண முடிகிறது. பொன்னிறம், கருமை, வெள்ளை, சிகப்பு, பச்சை என்ற

---

73 ,, ,, 52

74 ,, ,, 10, 47

75. ,, ,, 43

76. ,, ,, 44

77. ,, ,, 44

78. கண் வைத்தியம் (2) 153

79. நயன விதி 21

ஐந்தையும் சுட்டி அதற்கடுத்த பாடலில், ஐந்து நிறமுடன் தோன்றும்[80] என்கிறார்.

## இரு நிறம்

கருமையும் வெண்மையுமாக இணைத்து

சாலவே கருமை வெண்மை[81]
வெள்ளையில் கருப்பு தோன்றில்[82]
கருப்பு வெள்ளைச் சிதறியே[83]

என மூன்று இடங்களிலும்

வெள்ளையில் சிகப்பு பற்றி[84]
வெள்ளையில் சுகப்பு தோன்றில்[85]

என்ற ஈரிடங்களில் வெண்மையும் செம்மையும்

கருத்த கண்ணோ செவந்திடுமே[86]
*கருமையும செம்மையும்

என ஓரிடத்திலும் இன நிறங்கள் இடம் பெற்றுள்ளன.

## உவமைகள் வழி உணர்த்தல்

கார்-குழல் ஒப்பீட்டில் இரண்டு உவமைகள் நிறம் விளக்க வந்துள்ளன. அத்துடன் கருமை நிறத்தைக் காட்டுமையது தேய்த்தாப்போல[87] என்னும் மை நிறத்தவன்[88] என்றும் வந்த உவமைகள் புலப்படுத்தும். மேலும் கருமையும் முகிலும் சேர்ந்த நிலையும் உவமையாகப் பயன்பட்டுள்ளது[88].

கண்ணோயால் சிவந்து காட்டுகின்ற நிலையினை

சதைபோல் சிவந்து காட்டும்[89]
இந்திர கோபம்போற் சிவக்கும்[90]

என்று உடல் சதையையும் இந்திர கோபத்தையும் சிவப்பிற்குக் காட்டுகின்றனர். அத்துடன் உதிரத்தைக் குறிக்க வந்தவர் கொழுந்துவிட்டெரிகின்ற தீக்கு உவமை காட்டுகின்றார்[91].

---

80. நயன வைக்திய விதி 20
கண் வைத்தியம் (2) 77
81. கண் வைத்தியம் (2) 51
82. கண் வைத்தியம் 48, 50
83. ,, ,, 50
84. ,, ,, 46
85. வைத்திய சிந்தாமணி 8
86. நயன வைத்திய விதி 3
87. கண் வைத்தியம் 23
88. கண் வைத்தியம் (2) 158
89. ,, ,, 159
90. புலிப்பாணி வைத்தியம்53
91. நயன வைத்திய விதி 13

## அடைவளம்

இதன் கண் பயின்றுள்ள அடைகளை

1) திறமே அடையாக அமைதல்,
2) நிறத்துக்கு அடையாக அமைதல்

என இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

## நிறஅடை

வெண்மையில் வெண்சாறு[92], வெண்பூ[93], வெண்புகை[90], வெண்ணகை[95], வெண்கரு[96], என வெண் அடையாதலும், வெள்ளெழுந்து[97], வெள்ளெலும்பு[98] என வெள் அடையாதலும் வெள்ளைக் கடுக்காய்[99] வெள்ளைச்சீலை[100] என வெள்ளை அடையாதலும் என்ற மூன்று நிலையைக் காணலாம்.

கருவிழி[101], கருமணி[102], கருமிழி[103] என்பதில் கரு என்பதும், கருப்பு வண்ணம்[104], கருத்துக் காணும்[105], கருத்த கண்[106] என்பதில் கருத்தலும், கரியகண்[107], கரியநீலம் என்பதில் கரிய என்பதும், கார்நெறி[109] என்பதில் கார் என்பதும் கருமையைக் குறிக்க அடைகளாக உள்ளன.

செய்யகண்[110], செய்யகயலம்[111] என்பதில் செய்ய என்பதும், செங்குமுதம்[112], செங்கண்[113] போன்றவற்றில் செம் என்பதும் சிவந்திடும் குமுதம்[114] என்பதில் சிவத்தலும் சிகப்பு நிறம் மற்ற பொருள்களுக்கு அடைகளானமையைக் காட்டும்.

---

92. நயன வைத்திய விதி 51
93. கண் வைத்தியம் (2) 116
94. கண் வைத்தியம் 64
95. வைத்திய நூல் 58
96. கண் வைத்தியம் (2) 108
97. ,, ,, 153
98. வைத்திய சாத்திரம் 18
99. கண் வைத்தியம் 60
100. ,, ,, 173
101. வைத்திய சிந்தாமணி 8
102. வைத்திய சாத்திரம் 12
103. நயன விதி 31
104. கண் வைத்தியம் (2) 98
105. கண் வைத்தியம் 90
106. வைத்திய சிந்தாமணி 10
107. நயன விதி 31
108. நயன வைத்திய விதி 23
109. கண் வைத்தியம் (2) 12
110. நயன வைத்திய விதி 27
111. ,, ,, விதி 20
112. கண் வைத்தியம் (2) 189
113. ,, ,, 154
114. ,, ,, 69, 66, 84

## நிறத்துக்கு அடை

வெள்ளைக்கு மருவார்[115], பெரு[116], மின்னாய[117], மருவிய[118], தேறிடும்[119] என்ற சொற்களும் இகப்புக்கு கனக்க[120] திகழவுடன்[121] ஒள்[122], முன்னிய[123], அரைநிற[124], பொலிந்திடும்[125] என்ற சொற்களும், கருமைக்கு மயங்கிடும்[126], நல் (இருள்)[127], தெளிவுறு[128] என்ற சொற்களும் பச்சைக்கு சிதறிடும்[129], பரிந்திடும்[130] என்ற சொற்களும், மஞ்சள் நிறத்திற்கு போற்றும்[131] சேர்ந்திடும்[132] என்ற சொற்களும் அடைகளாக அமைந்துள்ளன.

### ஈரடைகள்

விளங்கு செங்குமுதம்[133], பெருபரணிவெள்ளை[134] என்ற இரண்டும் நிறத்துக்கு அடைகளாக அமைந்தும் செந்திரு உமையாள்[135], கார்நெறிக்குழல்[136], கருங்குழிக்கண்[137] என்ற மூன்றும் நிறம் மற்றவற்றிற்கு அடையாகவும் ஈரடைகளாகத் திகழ்கின்றன.

கார்மேகப்புக நிறம்[138] கருவேலம்புலாச்சாறு[139]

என்ற இரண்டு மட்டுமே மூவடைகள் அமைந்துள்ள இடங்களாகும். மேலிரண்டையும் மேற்கண்ட இரண்டு நிலைகளில் பகுக்க முடியும்.

---

115. கண் வைத்தியம் 5
116. கண் வைத்தியம் 88
117. நயன வைத்திய விதி 29
118. நயன விதி 19
119. கண் வைத்தியம் 2 (118)
120. கண் வைத்தியம் 8
121. நயன வைத்திய விதி 46
122. நயன விதி 40
123. நயன விதி 13
124. கண் வைத்தியம் 2 (116)
125. கண் வைத்தியம் 62
126. கண் வைத்தியம் 23
127. ,, 48
128. நயன விதி 3
129. கண் வைத்தியம் (2) 62
130. கண் வைத்தியம் 74
131. கண் வைத்தியம் 47
132. ,, ,, 49
133. நயன விதி 25
134. கண் வைத்தியம் (2) 137
135. கண் வைத்தியம் 60
136. நயன வைத்திய விதி 19
137. கண் வைத்தியம் 3
138. நயன வைத்திய விதி 20, தேரையர் நோயின் சாரம் 28
139. நயன வைத்திய விதி 28

அடுக்கிச் சொல்லுகின்ற உத்தியையும் மருத்துவச் சுவடி களில் காணமுடிகிறது.

கருளிழி கருத்துக்காணும்[140]

கறுப்பின் மீது முகில்போலும் மயக்கம்[141].

என்பன கருமையிலும்,

செய்ய சண்ணீர் சிவந்த செந்நீர்[142].

என்பது செம்மையிலும் அடுக்கிச் சொல்லும் நிலைபெற்று உள்ளன.[143,144]

## முடிப்புரை:

1. நிறத்தைக் குறிக்க நிறம் வண்ணம் என்ற இரண்டு சொற்கள் மட்டுமே பயின்றுள்ளன.
2. நிறத்தைக் குறிக்கின்ற சொற்களும், பொருள்களும் மற்ற இலக்கியங்களிலும் மிகுதியாக ஆளப்பட்டுள்ளன.
3. மாநிறம், தண்ணீர் நிறம், பளிங்கு நிறம் என்று சில புதிதான நிறங்கள் கூறப்பட்டுள்ளன.
4. பெரும்பாலான நிறங்கள் மருந்துவத் தொடர்பாகவே வந்துள்ளன. மருத்துவத் தொடர்பற்ற நிறங்கள் மிகச் சிலவே.
5. வைத்திய சிந்தாமணியில் மட்டும் பலவகை வாயுக்களின் நிறங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
6. நிறங்களை இணைத்துக் கூறுகின்ற பான்மையும், உவமைவழி நிறம் உணர்த்தலும், அவற்றை அடைகளைக்கொண்டு தெளிவாக்குதலும், திறம்படுத்துதலும், அடுக்கிச் சொல்லுதலும் இம் மருத்துவச் சுவடிகளில் ஆளப்பட்டுள்ள உத்திமுறைகளாகும்.
7. பொதுவாக மருத்துவதில் நிறங்கள் இன்றியமையாத ஓரிடத்தனை வகிக்கின்றன.

---

140. வைத்திய சிந்தாமணி 10
141. கண் வைத்தியம் (2) 123
142. நயன வைத்திய விதி 31
143. கண் வைத்தியம் (2, 49
144.

# சொல்லகராதி


அகத்தியர் 28
அகநானூறு 12, 74, 77
அகாதி கருமம் 3.8
அபிஜாதி 318
அன்மொழித் தொகை 328, 3.3
அஷ்டபிரபந்தம்304,308. 309, 312, 313, 314
இக்கால இலக்கியம் 513
இடைக்கால இலக்கியம் 513
இந்தியா 352
இந்திர விழவூர் எடுத்த காதை 133
இரட்டுற மொழிதல் 333
இராமன் 164, 169, 170, 181, 186, 190, 194, 196
இராமவதாரம் 158
இராவணன் 162, 181
இலக்கிய மரபு 391
இலக்குவன் 175
இலத்தீ . 6
இறைச்சி 75. 76
இன்னிலை 107, 108
உடன் போக்கு 120
உருக்காட்சி 23
உள்ளுறை 75, 76
எகிப்து 352
என்னயனா பிள்ளை 356
எட்டு இலக்கியம் 16
ஏலாதி 101
ஐராவதம் 127
ஒண்ணிறம் .41
ஒப்பிலக்கணம் 574
கண்டத்திரை 143
கண்ணகி 137
கந்தர் கலி வெண்பா 40
கந்தரலங்காரம் 41
கந்துராம 156
கபிலர் 22, 82, 83. 84, 85
கம்பன் காவியம் 171
கலம்பகம் 337
கலிபணம் 49
கலிப்பா 28, 48, 49. 50
கலிவெண் பாட்டு 44
களவழி நாற்பது 10
கன் ஹ 306
காடம் 257
காதிகருமம் 317
காளம் 185 185,
கானல் வரி 139
கடம்பவன புராணம் 264
கிரீக் 6
கிளிச்சிறை 144
கீ போ ம் 3 1
கீழ்க் கணக்கு 96. 114

குணத்தானம் 322
குறிஞ்சிப்பாட்டு 12, 37, 82, 83
கெழுமை 35
கொற்றவை 129, 139,
சகுணம் 134
சங்க இலக்கியம் 59, 61, 67, 67, 327, 337
சந்தம் 8, 21
சாம்பர் 321
சாமம் 268
சித்திரவண்ணம் 53
சிலப்பதிகாரம் 125
சிவஞான சித்தியர் 316, 319
சிவலை 58
சீதை 164, 217
சீவக சிந்தாமணி 14, 316, 322,
சீவகன் 145
சிக்கில லேசியம் 322
சுணங்கு 135
சுந்தரபாண்டியம் 264
சூழல் சார்பு 161
செங்குணக்கு 73
செங்கோணல் 38, 72, 340
செங்கோண்மை 340
செச்சைமலர் 226
செந்தமிழ் 38, 324
செந்தூக்கு 39, 48
செந்தொடை 39, 44, 365
செருமன் 6
செவ்வண்ணம் 2
செவ்வணி 26, 27, 112, 125, 135, 136
செவலை 59
செழுமல் 34
சேக்கிழார் 235, 236, 239, 242, 243, 245
நகை நிறம் 141
தமணியம் 217, 352
தமிழ்ப் பேரகராதி 167, 168, 170, 172
தமிழ்மொழி 1
திணைமொழி ஐம்பது 98
திரவிய லேசியம் 320
திராவிட மொழிகள் 3
திருக்குறள் 96, 116
திருத்தக்கதேவர் 141, 152
திருநாளைப் போவார் 236
திருமங்கையாழ்வார் 292, 295, 296, 298, 299, 300
திருமால் 306, 325, 330
திருமுருகாற்றுப்படை 37, 39, 124
திருவாசகம் 263
திருவாதவூரடிகள் 260
திருவாய்மொழி 266, 269, 271
திருவிருத்தம் 42
திருவெண்காடு 244
திவ்விய பிரபந்தம் 104
தூங்கிசை வண்ணம் 2
தெண்ணிறம் 142
தொல்காப்பியம் 2, 11, 25, 37, 38, 40, 42, 43, 44, 97, 98, 104, 166, 341
தொல்காப்பியர் 1
தொன்னூல் விளக்கம் 47
நச்சினார்க்கினியர் 12
நச்சினார்க்கினியர் 12, 25, 26, 37, 39, 83, 152
நம்மாழ்வார் 266, 270
நற்றிணை 26, 68
நாட்டுப்புற இலக்கியம் 17, 18
நாலடியார் 99, 109
நாலாயிரத் திவ்விய பிரபந்தம் [292, 304
நிற அடை 342

நிறக்காட்சி 22
நிறக்குருடு 265
நிறத்துரு 34
நிறப்பண்பு 160, 165
நிறவண்ணம் 168, 246
நீலகிரி 128, 129
நீலக்குலமணி 195
நீலி 120
பகழிக் கூத்தர் 346, 347
பசலை 36, 41, 42, 62, 67, 68, 69,70, 105,145,268, 339, 345
பசுமை 56, 58, 60, 75, 80, 100, 105, 111, 124, 130, 131, 142, 180, 193, 200, 201, 220, 223, 305, 310, 332, 33, 334, 335, 337, 347, 350, 352, 358
பசுமைப்புரட்சி 23
பஞ்சகல்யாணி 260
பஞ்சமரபு 28
பதிற்றுப்பத்து 21, 37
பரஞ்சோதியார் 247, 249, 252 263
பரிமேலழகர் 26
பன்னிருபாட்டியல் 28, 45, 50
பாசவல் 353
பாவலேசியம் 320
பாவணர் 5
பிங்கல நிகண்டு 25, 27
பிரபந்தத்திரட்டு 47
பிள்ளைத் தமிழ் 346
பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் 304
பிறங்கல் 34
புகைமை 224
புறநானூறு 11, 55, 69
பெரியதிருமொழி 295
பைஞ்சூலி 244
பைந்திரை 150
பகழிக்கூத்தர் 346, 347
மகாவீரர் 317
மங்கலத்துகில் 151
மஞ்சள்வாலன் 360
மணிமேகலை 13, 316, 319
மணிவாசகர் 222, 224, 232
மதுரைக்காஞ்சி 73, 128
மருமக்கள்வழி மான்மியம் 391
மருமத்தானம் 21
மாணிக்கவாசகர் 222, 223
மாமை 34, 41, 62, 63, 64, 65, 67, 339, 343, 344, 345
மாயோன் 64, 66
முத்துவீரியம் 47
முல்லைப்பாட்டு 42
மேகநாதன் 189
யாப்பருங்கலம் 45
யாப்பருங்கல விருத்தி 46
ராணிமுத்து 265
லேகியம் 320
வஞ்சியப்பா 28, 29
வஞ்சுளம் 50
வடமொழி 6
வண்ணக்கலவை 19, 22
வண்ணக்கவர்ச்சி 19, 29 265
வண்ணக்களஞ்சியம் 323
வண்ணக்கோட்பாடு 53
வண்ணம் 1, 23, 79, 10, 11, 13, 14, 15, 17, 18, 20, 21, 22, 23,29, 34, 36, 41,45, 42, 51, 55,56, 82, 113, 158, 163, 164, 169,172, 175, 188, 189, 190, 192,206, 221, 239, 266, 262, 293,294, 304, 326, 344, 355, 357, 360, 397, 398, 399,419
வர்ண 3, 51
வர்ணம் 7, 17, 18, 83, 125, 419
வருணம் 125, 127

வாகுணம் 261
வாலரை 57
வெண்குடை 126, 127
வெண்செந்துறை 365
வெண்டளை 43, 441
வெண்டாழிசை 45
வெண்பா 28,39, 43, 46, 48, 50, 265
வெண்பாப்பாட்டியல் 46, 47
வெள்ளணி 27, 125
வெளிவிருத்தம் 45
வெறியாட்டு விலக்கல் 270
வையை 262
ஸ்ரீதத்தன் 153
Geetha 316
Indigo 101
Literary Convertion 372
Narrative Poems 373
Super Structer 372
Violet 101

# நிறுவன வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | 6 | 00 |
| 2. | ஊஞ்சல் இலக்கியம் | 10 | 00 |
| 3. | எண்பதில் தமிழ் | 45 | 00 |
| 4. | கண் மருத்துவம் | 50 | 00 |
| 5. | கருவூரார் பல திரட்டு | 12 | 00 |
| 6. | கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் | 12 | 00 |
| 7. | கும்மிப் பாடல்கள் | 16 | 00 |
| 8. | சுவடியியல் பயிற்சி கையேடு | 6 | 00 |
| 9. | தந்திவனப் புராணம் | 15 | 00 |
| 10. | தமிழர் அளவைகள் | 8 | 00 |
| 11. | தமிழர் எண்ணங்கள் | 16 | 00 |
| 12. | தமிழும் தமிழரும் | 5 | 00 |
| 13. | தமிழர் தோற்கருவிகள் | 10 | 00 |
| 14. | தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 14 | 00 |
| 15. | தமிழில் விடுகதைகள் | 12 | 00 |
| 16. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி—7 | 15 | 00 |
| 17. | திருமயிலை உலா | 7 | 00 |
| 18. | திவ்வியப் பிரபந்தத்தில் மனம் | 12 | 00 |
| 19. | தொல்காப்பியம்—உரைவளம்— எழுத்ததிகாரம்—புணரியல் | 10 | 00 |
| 20. | தொல்காப்பியம்—உரைவளம்— எழுத்ததிகாரம்—தொகைமரபு | 8 | 00 |
| 21. | தொல்காப்பியம்—உரைவளம்— எழுத்ததிகாரம்—உருபியல் | 8 | 00 |
| 22. | தொல்காப்பியம்—உரைவளம்— எழுத்ததிகாரம்—உயிர்மயங்கியல் | 12 | 00 |
| 23. | தொல்காப்பியம்—உரைவளம் எழுத்ததிகாரம்—புள்ளிமயங்கியல் | 15 | 00 |
| 24. | தொல்காப்பியம்—உரைவளம்— சொல்லதிகாரம்—கிளவியாக்கம் | 20 | 00 |
| 25. | தொல்காப்பியம்—உரைவளம்— பொருளதிகாரம் மரபியல் | 10 | 00 |
| 26. | பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் | 8 | 00 |
| 27. | பிரபந்த தீபிகை | 12 | 00 |
| 28. | மீனாட்சியம்மன் திருப்புகழ் | 10 | 00 |
| 29. | A Study of Perunkathai | 12 | 00 |
| 30. | Art & Architecture (Heritage of the Tamils) | 25 | 00 |
| 31. | Cultural Heritage of the Tamils | 20 | 00 |
| 32. | Dissertations on Tamilology | 10 | 00 |
| 33. | Dr. MU. VA. | 20 | 00 |
| 34. | Epigraphical Evidences for Tamil Studies | 10 | 00 |
| 35. | Folk Arts of the Tamils | 10 | 00 |
| 36. | Language & Grammer (Heritage ofthe Tamils) | 22 | 00 |
| 37. | Literary Heritage of the Tamils | 50 | 00 |
| 38. | Papers on Tamil Studies | 15 | 00 |
| 39. | Philosophical Heritage of the Tamils | 22 | 00 |
| 40. | Tamil Drama | 20 | 00 |
| 41. | Tamil Research through Journals | 7 | 50 |
| 42. | The Tamil Writers Directory | 10 | 00 |
| 43. | Tiru Murugan | 5 | 00 |

இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை—600 113.

Wrapper Printed at PONMANI ART PRINTERS, MADRAS-5.